N61: 31;3
61 3:30

*Issued*—18-7-1960]

2-8.63

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## THURSDAY, 14TH APRIL 1960

## VOLUME XXXI—No. 1

*CONTENTS*

SECRETARIAT LIBRARY
23 SEP 1960
GOVERNMENT OF MADRAS


| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. | 1-21, 73-76 |
| II | Calling attention to the strike notice given by the Unions of workers and staff in the Kundha Hydro-Electric Project | 21-24 |
| III | Announcement—The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 .. .. .. .. .. .. | 24 |
| IV | Government Bill—The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 (L.A. Bill No. 8 of 1960) .. .. .. | 24-71 |
| V | Papers laid on the table of the House .. .. .. .. .. | 72 |


©
GOVERNMENT OF MADRAS
1960

*Legislative Assembly Department*
*Madras*

PRICE, 50 *naye Paise*]

D
V211,31'N60
N61.3133
61330

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Thursday, 14th April 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past ten of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Rebate for Weavers' Co-operative Societies*

* 659 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

(1) ஒரு வருட காலமாக, (2) இரண்டு வருட காலமாக எத்தனை சொசைட்டிகளுக்கு ?

THE HON. SRI R. VENKATARAMAN: A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில் இரண்டு வருடம் மூன்று வருடம் காலமாக ரிபேட் கொடுக்கப்படாத சொஸைட்டிகளின் லிஸ்ட் இருக்கிறது. இதில் ஒரு வருட காலத்திற்கு கொடுக்கப்படாமல் இருப்பது எத்தனை ? அவைகளினுடைய பெயர்கள் என்ன என்பதை சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் போட்டிருக்கக்கூடிய கேள்வியில் இந்த விவரத்தைப் பற்றிக் கேட்கவில்லை. ஒரு வருடம் இரண்டு வருடம் கொடுக்கப்படாமல் இருக்கும் சொஸைட்டிகளுடைய கணக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இரண்டு வருட காலம், மூன்று வருட காலம் இப்படியாக சொஸைட்டிகளில் ஏற்படக்கூடிய ஊழல்களைப் பற்றி பரிசீலனை செய்து முடித்தால், உடனுக்குடன் அவர்களுக்கு ரிபேட் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு வருடம் மூன்று வருடம் என்று கொடுக்கப்படாத சொஸைட்டிகள் என்று சொன்னார்கள். இவ்விதம் மூன்று வருடம் கொடுக்கப்படாமல் இருக்கின்ற சொஸைட்டிகள் ஒன்றும் இதில் கிடையாது. இரண்டு வருட காலமாக தாமதிக்கப்பட்டு இருக்கின்ற சொஸைட்டிகள் எட்டு, இந்த ராஜ்யத்தில் இதன் கீழ் இருக்கக்கூடிய சொஸைடிகள் 1000. இதில் இந்த எட்டு சொஸைட்டிகளும் தவறு செய்த காரணத்தினாலும், தவருக ரிபேட் கோரிய காரணத்தினாலும் பரிசீலனை செய்வதற்கு காலதாமதம் ஆகிறது. இதில் சொஸைடிகள் ஒத்துழைக்காமல் இருப்பதும் காலதாமதம் ஆவதற்கு முக்கியமான காரணம். சில சொஸைட்டிகளில் ஏதாவது கிரிமினல் பிராஸிக்யூஷன் வந்து விடுமோ என்று பயந்து கணக்குகளை ஒழுங்காக காண்பிக்காமல் இருப்பதோடு நம்மோடு ஒத்துழைப்பதில்லை. இதன் காரணமாக காலதாமதம் ஏற்படுகின்றது.

---

[a] Printed as Appendix I on pages 73–74 infra.

SRI A. MARIAPPAN : 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குப் பிறகு ரிபேட் கொடுக்கப்படாமல் இருக்கும் சங்கங்களுக்கு உடனடியாக கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது வேறு பிரச்னை. இதற்கு மத்திய சர்க்காரிலிருந்து ஒரு கோடி ரூபாய் நமக்கு வரவேண்டியிருக்கிறது. அது எப்ரல் மாதத்திற்குள் வந்து விடும் என்று மத்திய சர்க்காரிலிருந்து எழுதியிருக்கிறார்கள். அது கிடைத்ததும் பட்டுவாடா செய்யப்படும்.

MR. SPEAKER : To-day, the Hon. the Minister for Electricity wants postponement of some of his questions. In the list of questions for to-day, six questions for which answers have not been received for over six months have been included. The departments concerned were reminded, but they seem to think that it is not necessary to reply or have ignored my requests. There was, therefore, no other option but to place before the House these six questions. This I have done to-day. I may inform the House that this morning I got replies for all these questions. I once again take this opportunity to request Hon. Ministers to see that the departments concerned expedited the despatch of the answers within the scheduled time or at least they took one extention of time from the Speaker.

### *Rural electrification*

* 661 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959–60 வருடத்தில் அபிவிருத்தித் தொகுதிகளில் மின்சாரத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) அதை எப்படி செலவு செய்யப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது ?

(இ) எத்தனை தொகுதிகளில் இத்தொகை செலவிடப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) A sum of Rs. 40.5 lakhs was set apart for rural electrification in Community Development Blocks in the First and Second Five-Year Plans. The State Electricity Board has also spent some amount for rural electrification in the Community Development Blocks, the details of which are being collected.

(*b*) The field officers of the Madras State Electricity Board have been instructed to evolve as many remunerative proposals as possible under top priority for electrification of villages in Community Development Blocks. Sanctioned schemes are being taken up for execution under top priority. Necessary instructions have also been issued to the field officers to spend the maximum amount possible in the Blocks without leaving room for default and their progress is also being watched periodically. The State Electricity Board has also been permitted to make inter-block diversion of the amounts earmarked for particular blocks, with the permission of the Government of India and the Block Advisory Committees concerned.

(*c*) 40 blocks.

SRI P. G. MANICKAM : ஸார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எந்தெந்த இடங்களிலே மின்சார வசதி செய்யப்படவேண்டுமென்று ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புப் பிரகாரம் அந்தந்த பிளாக்கிலே வேலைகள் செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது பூர்த்தி





செய்யப்படாமல் எவ்வளவு இருக்கிறது என்ற புள்ளி விவரங்களை இனி மேலாவது சேகரித்து அஸெம்ப்ளி முன் சமர்ப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI V. RAMAIAH : இங்கே பிளாக் பற்றி புள்ளி விவரம் கொடுத்திருப்பது—கம்யூனிட்டி டெவலெப்மெண்டு மினிஸ்ட்ரியினால் நீர்ப்பாசனம், மின்சார வசதி இவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து 30 லட்சம் ரூபாய் வரையில் மின்சார போர்டுக்கு உதவியிருப்பது பற்றியது. அதற்கு மாத்திரம் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கம்யூனிட்டி டெவலெப்மெண்ட் மினிஸ்ட்ரியிலிருந்து பணம் வந்தாலும் வராவிட்டாலும் நம்முடைய கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டப்படி ப்ளாக் ஏரியாவிலும் நமது நிதியைக் கொண்டு செய்துகொண்டிருக்கிறோம்.

SRI K. RAMACHANDRAN : In the case of villages in Blocks, even though survey was made a long time ago, electrification is postponed on the plea that materials are not available for executing the schemes. In such cases, will Government think of having a target for each block for each year and try to achieve the target by any means ?

THE HON. SRI V. RAMAIAH : As I have stated already, Block areas get very high priority. When a survey is made and when remunerative schemes are formulated, if materials are not available, we cannot just pump in electricity without the necessary materials. As and when materials are available, priority will be given to Block areas.

SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM : தலைவர் அவர்களே, இத் தொகையில் தனியார் நடத்தும் கம்பெனிக்கு வசதி கொடுக்கப்படுகிறதா ? அப்படியானால் எவ்வளவு தொகை என்று கேட்க விரும்புகிறேன் ?

THE HON. SRI V. RAMAIAH : லைசென்ஸீஸ் பகுதியில் இருக்கக் கூடிய விஸ்தரிப்பு சம்பந்தமாக அவர்களே திட்டம் போட்டு நிறைவேற்ற வேண்டும். ஆனால் சமீப காலத்தில் லைசென்ஸ்காரர்களிடம் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் இந்த வருஷம் 25 லட்சம் ரூபாய் அவர்களுக்குக் கடன் கொடுப்பதென்று முடிவு செய்திருக்கிறோம்.

SRI R. SRINIVASA IYER : May I request Government to consider the feasibility of granting the unspent amounts reserved for each Block to the licensees as loans recoverable in a few years so that the amount reserved for each Block might be spent in that Block itself for electrification of rural areas ?

THE HON. SRI V. RAMAIAH : In the Block budget, there is no specific reservation as such for rural electrification. There is some money available under the head " Irrigation Facilities ". Now, about two years ago, when I went through the provision available in the Block budget, I convened a conference of officials connected with Block Development at the Secretariat level and got them to spend about 30 lakhs of rupees through the Electricity Board. So, there is nothing available for rural electrification as such. Whatever is available under " Irrigation " is taken over and spent for this.

SRI V. K. KRISHNAMURTHI : தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சி ஏற்பட்ட பிறகுகூட அந்தப் பகுதிகள் மின்சார வசதி பெற முடியாமல் இருப்பதால் தனிப்பட்டவர்களுடைய ஆதிக்கத்தில் இருக்கக் கூடிய காரணத்தினால் கிராமங்களில் மின்சாரத்தைக் கொண்டு விவசாயத்தில் முன்னேற்றம் செய்ய முடியாமல் இருப்பதால் இதில் அரசாங்கம் தலையிட்டு

ஆவன செய்ய முயற்சிப்பார்களா ? பணம் ஒதுக்கிக் கொடுத்து விட்டோம், பணம் ஒதுக்கிக் கொடுத்து விட்டோம் என்று சொல்லிக் கொண்டு கால தாமதம் இருப்பதைத் தவிர்த்து விரைவில் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஆவன செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : பணத்தை ஒதுக்கிக் கொடுத்து விட்டோம் என்று இதற்கு முன் சொன்னதில்லை. இந்த வருஷம்தான் 25 லட்சம் ரூபாய் கொடுக்கப்போகிறோம். தனிப்பட்ட லைஸென்ஸீஸ் இருக்கிற பகுதிகளிலெல்லாம் இந்தப் பணத்தைக் கொண்டு விஸ்தரிக்க முடியாது. ஒரு சிறு ஸ்கீமுக்குக்கூட 2 லட்சம், 3 லட்சம், 4 லட்சம் பிடிக்கும். இருந்தாலும் அவர்களுடைய முயற்சியோடு இந்த 25 லட்சம் ரூபாயும் சேர்ந்தால் கொஞ்சம் சுறுசுறுப்பாக நடக்கும் என்று நினைக்கிறேன். எந்தப் பகுதியில் லைஸென்ஸீஸ்களால் விஸ்தரிப்பு செய்ய முடியவில்லையோ அந்தப் பகுதியை அரசாங்கத்திடம் கொடுத்து விட்டால் அரசாங்கம் செய்து கொடுப்பதில் கஷ்டம் இருக்காது.

SRI M. P. SUBRAMANIAM : சமுதாய நலத் திட்டத்தின் கீழ் இருக்கிற கிராமங்களில் விவசாயிகள் விவசாயத்திற்கு மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பம் போடுகிற நேரத்தில் மின்சார மோட்டார் வாங்கி அதனுடைய ரசீதை அனுப்ப வேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தம் இருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் முன்பே செய்யப்பட்டாலும் ஸாங்ஷன் ஆகும் முன்பே மின்சார மோட்டார்களை வாங்கி மனுச் செய்யவேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தம் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இதை நிர்ப்பந்தம் என்று நான் சொல்லத் தயாராயில்லை. கிராம விஸ்தரிப்பு செய்யக்கூடிய முறையைப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் மனுப்போட்டு விட்டால் மின் சாரம் வந்து விடும் என்ற எண்ணம் இருக்கிறது. அதன் காரணமாக இலாகா அதிகாரிகள் நல்ல திட்டம்போட்டு பிறகு அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நினைக்கின்றபோது விவசாயிகளுக்கு முடியாமல் போகிறது. அதனால்தான் கண்டிப்பாக மின்சார சக்தியை எடுத்துக் கொள்வார்கள் என்ற நிலைமையை உண்டாக்க வேண்டியிருக்கிறது. பம்ப் செட்டுகளை வாங்கி வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் கிடையாது. கோவாபரேடிவ் பாங்கில் கடன் கேட்டு மனுச் செய்துகொண்டும், அல்லது கடன் கிடைத்தால் அதை டெபாஸிட் செய்து விட்டு அப்ளை செய்தால் அவர்கள் கட்டாயம் எடுத்துக் கொள்வார்கள் என்ற நிலைமை ஏற்படும். அதனால் மின்சார போர்டின் பணம் விரயம் ஆகாது.

SRI P. G. MANICKAM : வட்டார வளர்ச்சி அட்வைஸரி கமிட்டி கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட மின்சார இலாகா அதிகாரி அநேகமாக வந்து கலந்து கொள்வதில்லை என்று தெரிகிறது. ஒவ்வொரு வட்டார வளர்ச்சி கமிட்டி கூட்டத்திலும் மின்சார இலாகா அதிகாரி வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறார்களா? இல்லாவிட்டால் இனிமேலாவது ஒரு உத்திரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : வட்டார வளர்ச்சி கூட்டங்களுக்கு எல்லா அதிகாரிகளும் போகவேண்டுமென்ற ஒரு நிலைமை இருந்தது. ஆனால் அந்தக் கூட்டங்களுக்கு எல்லா அதிகாரிகளும் போகவேண்டுமா என்று பரிசீலனை செய்து பார்த்து, சில அதிகாரிகள் எல்லா கூட்டங்களுக்கும் போகவேண்டிய அவசியமில்லை, குறிப்பாக மருத்துவ இலாகா என்ஜினீயர்கள் எல்லாம் எப்போது அவர்களுடைய ஆலோசனை தேவையோ, அது போன்ற கூட்டங்களுக்கு, ஜில்லா கலெக்டர் அவர்கள் இவர்கள் வரவேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தால் அவர்கள் போனால் போதும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI V. SUBBIAH : பாபநாசம் ஜில்லாவில் பல கிராமங்களில் டிரான்ஸ் பார்மரில் லோடு இல்லை என்று கனெக்ஷன் கொடுக்க முடியாது என்ற நிலை இருக்கிறதே அதை மாற்றி, கிராமத்திற்குத் தேவையான லோடு



உள்ள டிரான்ஸ்பார்மர்களை வைத்து விவசாயிகளுக்கு பம்ப்செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படி ஏதாவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : கிராம விஸ்தரிப்புத் திட்டத்தை உருவாக்கக்கூடிய நேரத்தில் கிராமத்தில் எத்தனை விவசாயிகள் மின் சாரம் வேண்டுமென்று கேட்கிறார்களோ அதற்குத் தகுந்த முறையில் திட்டம் போடுகிறார்கள். அந்த முறையில் திட்டம் போட்டாலே மினிமம் கேரண்டி கட்டுவதில் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. பிற்காலத்தில் மின் சாரம் எடுத்துக் கொள்வார்கள் என்று திட்டம் போடவில்லை. முதலில் வேண்டுமென்று கேட்பவர்களுக்குத் தகுந்தவாறு திட்டம் போடப்படுகிறது. அந்தக் காலத்தில் வேண்டுமென்று கேட்காமல் மின்சாரம் வந்த பிறகு வேண்டுமென்று கேட்பதால்தான் இந்தக் கஷ்டம் இருக்கிறது.

*Starting of new industries in the State*

* 662 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any applications were recommended recently to the Government of India for starting new industries in the State;

(*b*) if so, the number of applications so recommended and the details thereof; and

(*c*) how many of such applications were accepted by the Government of India ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*c*) The particulars are being collected. Mr. Speaker, I want to make a representation to you in respect of this question. This question relates to the number of applications recommended under the Industries Development and Regulation Act which was enacted in 1950. If all the applications recommended from 1950 to 1960 have to be gathered, I do not know whether the answer would be worthwhile. Well, in any event if they want it I will prepare it and place it on the table of the House.

*Improvement of Madras Beach*

* 663 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the total amount allotted for the improvement of Beach in the Madras City;

(*b*) the total amount spent during 1958–59 for the same; and

(*c*) the expenditure incurred on each item ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The total amount allotted for the improvement of the Marina Beach during 1958–59 is Rs. 2,05,000.

(*b*) The total amount spent during 1958–59 is Rs. 1,82,817.

(*c*) The expenditure incurred on each item, is as follows :—

| *Name of work.* | *Expenditure.* RS. |
|---|---|
| Improvements to Marina from Wallajah Junction to Swimming Pool. | 74,351 |
| Construction of a pedestal for Gandhiji's statue .. | 2,107 |
| Construction of hand-rails flower beds, foot steps, etc., for Gandhiji's statue. | 13,041 |

[14th April 1960

| *Name of work.* | *Expenditure.* |
| --- | --- |
| | RS. |
| Construction of a fountain at the junction of Edward Elliots Road. | 8,346 |
| Opening of the statue of Triumph of Labour .. | 1,219 |
| Conveyance and erection of Statue of Triumph of Labour. | 13,311 |
| Part-payment for the replica in bronze of double size full figure statue of Mahatma Gandhiji. | 25,000 |
| Forming a square at Wallajah Road Junction .. | 45,442 |
| Total .. | 1,82,817 |

SRI N. K. PALANISAMI : அதை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : இத்திட்டத்தில் மெரீனு சம்பந்தப்பட்ட வரையிலும் அதை அபிவிருத்தி செய்வதற்காக, அங்கே பப்ளிக் கன்வீனியன்ஸுக்காக 48,000 ரூபாயும், மீனவர்கள் அவர்களுடைய வலைகளை வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு ஸ்டோர்கள் அமைத்துத் தருவதற்காக 20,000 ரூபாயும் செலவுசெய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : மெரீனு பீச்சை அழகு படுத்துவதைப் பொறுத்தவரையில், சர்க்கார் அங்கே தென் பகுதிக்கு மாத்திரம் அதிகமாகச் செலவு செய்து அப்பகுதியை அழகுபடுத்துகிருர்கள். அவர்கள் ஏன் வட பகுதியை பராமரிக்காமல் விட்டுவிட்டார்கள் ? (சிரிப்பு) அப்பகுதியையும் பராமரிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ? நான் வேடிக்கைக்காக வட பகுதியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே ஆடம்ஸ் ப்ரிட்ஜிலிருந்து கன்னியப்பநகர் வரையிலுள்ள பகுதி அவசியம் அபிவிருத்திசெய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? மேலும் தென்பகுதியில் காந்தியடிகள் சிலை இருக்கிறது. அந்தச் சிலையை அங்கிருந்து எடுத்துவிட வேண்டுமென்று ஒருவர் உண்ணுவிரதம் இருப்பதாகக் கேள்விப்படுகிருேம். எனவே அது சம்பந்தமாக அங்கே ஏதாவது மாறுதல் செய்ய சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் மெரினுவில் வட பகுதியின் நிலையைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் அது சம்பந்தமாக தனிக் கேள்வி போட்டால் முழு விவரமும் சேகரித்து பதில் சொல்கிறேன்.

SRI N. K. PALANISAMI : இவ்வளவு செலவழித்தாலும் பீச்சில் குடி தண்ணீர் வசதி இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அங்கே குடி தண்ணீர் வசதி செய்துதர சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : பீச்சுக்கு வரும் மக்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டியதுதான். அது சம்பந்தமாகவும், பின்னுல்தான் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : மெரீனு பீச்சை அலங்கரிக்கும் முறையில் அங்கே காந்தி சிலையை வைப்பதற்கு சர்க்கார் பல ஆயிரம் ரூபாய்கள் செலவழித்திருகிறது. அந்தச் சிலை சரியாக இல்லை என்ற அபிப்பிராயத்தில் அதை ஆட்சேபிக்கும் முறையில், அதை



14th April 1960]

அங்கிருந்து அகற்ற வேண்டுமென்று கோரி ஒரு காங்கிரஸ் தொண்டர் உண்ணுவிரதம் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, மெரீனுவில் வைக்கப்பட்டிருக்கும் காந்தி சிலையைப்பற்றி இதே மன்றத்தில் பல முறை கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. நானும் அவைகளுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். அங்கே காந்தி சிலையை வைத்ததைப் பொறுத்தவரையில், சீப் ஜஸ்டிஸ் ஸ்ரீ ராஜமன்னுர், கனம் நிதி அமைச்சர், இதர அன்பர்கள் முதலியவர்கள் எல்லோரும் கலந்தாலோசித்துத்தான் அந்த இடத்தில் காந்தி சிலையை வைக்க ஏற்பாடு செய்தார்கள். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இந்த அரசாங்கத்தைப் பற்றி ஒரு கெட்ட எண்ணத்தை மக்களிடம் பரப்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒருசிலர் அச்சிலை சம்பந்தமாக ஆட்சேபனைகள் சொல்கிருர்கள். (ஸ்ரீ எ. கோவிந்தசாமி : காங்கிரஸ் தொண்டர்தான் உண்ணுவிரதம் இருக்கிருர்) காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள்கூட சமயத்திற்குத் தகுந்தாற்போல் மாறுவது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். எனவே, எல்லாவற்றையும் நன்ருகப் பார்த்து, மெரீனுவை நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்காகத் தான் அரசாங்கம் அவ்வளவு பணம் செலவழித்து அங்கே காந்தி சிலையை வைக்க ஏற்பாடு செய்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. A. RASHEED : Sir, what is the improvement made to the Lovers' path on the Marina Beach ? Is the Hon. Minister aware that the beauty of the Beach is marred by the presence of a large number of fishing boats ? Will the Government take steps to clear them from the Marina Beach ?

THE HON. SRI P. KAKKAN : போட்டுகளை அங்கிருந்து "ரிமூவ்" பண்ணுவதைப் பொறுத்தவரையில், என்னிடம் தகவல் இல்லை. இருந்தாலும், அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு இடத்தில் அவைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அரசாங்கம் எண்ணுகிறது. இது சம்பந்தமாகத் தனிக் கேள்வி போட்டால், விவரமாக பதில் சொல்கிறேன்.

SRI M. P. SARATHI : மெரீனு கடற்கரையில் கப்பல் ஓட்டிய தமிழன் வ. வு. சிதம்பரனுரின் உருவச் சிலையை வைக்க வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இருக்கிறதா ? அங்கே அச்சிலையை வைக்க அரசாங்கம் தீர்மானிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : கப்பலோட்டிய தமிழனின், செக்கிழுத்த செம்மலின் பெயரை கனம் அங்கத்தினர் இந்த சபையில் சொன்னதை நான் மிகமிகப் பாராட்டுகிறேன். அவருடைய அடிச்சுவட்டை கனம் அங்கத்தினர் பின்பற்றுவார் என்று நான் நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் இப்போது போட்ட உபகேள்வியை தனிக் கேள்வியாகப் போட்டால் நன்ருக இருக்கும்.

SRI S. RANGANATHA MUDALIAR : Sir, formerly there was an equestrian track on the Marina Beach. Would the Government consider the feasibility of restoring that path now that horse riding has gone out of practice ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது மக்கள் குதிரை சவாரி செய்வதில்லை. இருந்தாலும், அங்கே மக்கள் போவதற்கு நல்ல முறையில்ரோடு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[14th April 1960

*Appointment of women as village munsifs*

* 664 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

பெண்களுக்கு கிராம முன்சீப்பு (V.M.) வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் அமைச்சர் மூலக் கேள்விக்கு அளித்த பதிலில் " இல்லை " என்று கூறிவிட்டார். அப்படியானால், கிராம முன்சீப் வேலை செய்வதற்கு பெண்களிடம் தகுதி இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர்களுக்கு தகுதி இருக்கிறதாதலால் தான் ஒரு அம்மையார் ஒரு ஊரில் கர்ணமாக இருக்கிறார். இப்போது ஸ்திரீகள் யாரும் வில்லேஜ் முன்சீபாக இல்லை. சில பெண்கள்—மைனர்களாக இருப்பதால்—கிராம முன்சீப் உத்தியோகத்திற்கு இசும்பு பாத்தியதையை ரெஜிஸ்டர் செய்துகொண்டிருக்கிறார்கள்.

*Kundah Project*

* 665 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether earthen walls in the inter-tunnel and the main tunnel in the Kundah Project collapsed recently;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the loss sustained by the Government thereby ?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) to (*c*) There is no earthen wall either in the main tunnel or in the inter-connecting tunnel and consequently the question of its collapse and any loss on account of such collapse does not arise. There was however some slipping of earth in the roof of the two tunnels during mining and enlarging which have since been rectified. There was no loss of property to the Electricity Board or loss of life or injury to anyone.

SRI T. S. RAMASWAMI : May I know when this question was received by the Department ? The question is framed like this : " Whether the earthen walls in the inter-tunnel and the main tunnel in the Kundah Project collapsed recently ? " The House may take that it has collapsed recently. But this question was put nearly a year back when this accident happened. But the earthen wall has since been concreted and all that. May I know when the question was exactly received by the Department, and what is the reason for such a long delay in answering it ?

MR. SPEAKER : To-day I have placed before the House all the questions that have been pending for a long time. But I suppose the Hon. Minister will reply whenever questions are asked. How is it going to affect the position ? If the Hon. Minister is prepared to answer the supplementaries, I have no objection.

THE HON. SRI V. RAMAIAH : The answer I have given is an answer to the question put by the hon. Member. I have not given a different answer to a different question.



14th April 1960]

*666 Q.—SRI M.P. SARATHI, SRI A. VEDARATNAM } கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா : (1-00 a.m.)

குந்தா நீர் மின்சாரத்திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : As per the schedule drawn up by the Canadian Consultants, the first unit in Power House No. I in the Kundah Project is due for being commissioned only by the middle of April 1960. However in view of the continually and rapidly increasing demand for power in the State, efforts were made by working round the clock to commission the first unit in October 1959 itself and statements to this effect were made in this House. But due to the occurrence of mud in certain reaches of the main and inter-connecting tunnels and due to the unusually heavy rain and gale that were prevalent in the work sites during the whole of June 1959, the units could not be commissioned in advance in October 1959. The first unit of 20,000 K.W. in Power House No. I has since been commissioned on the 25th March 1960. The second unit of 20,000 K.W. in Power House No. I and the four units of 35,000 K.W. each in Power House No. II are expected to be commissioned during 1960–61 as and when each unit gets ready.

SRI M. P. SARATHI : ஸார், இந்த தாமதம் ஆவதற்குக் காரணம் குந்தா திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுடைய குறைகள் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற காரணமா ?

THE HON. SRI V. RAMAIAH : தாமதத்திற்கு நல்ல காரணம் முதலிலேயே சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த காரணத்தை நன்றாக புரிந்து கொண்டால் அவர்கள் தொழிலாளர்களை கொண்டுபோய் இதிலே புகுத்தி குழப்பம் செய்யமாட்டார்கள். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் குந்தாப் பகுதியில் நடந்த வேலையில் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். பெரும் தேசபக்தியோடு வேலை பார்த்து வந்தார்கள் என்று நாம்மட்டும் கூறுவதோடு மட்டுமல்லாமல் கனடா தேசத்தைச் சேர்ந்தவர்கள்கூட போற்றக்கூடிய முறையில் அவர்கள் வேலை செய்து வந்தார்கள்.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்தக் குந்தாத் திட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நிகரமாக எப்போது வேலை முடியும் ? முற்றிலும் சேர்ந்து எப்போது வேலை பூர்த்தியாகும் ?

THE HON. SRI V. RAMAIAH : அந்த வேலை முழுவதும் 1960-61-ம் ஆண்டு முடிவிற்குள் முடிந்து விடும். இப்போது இந்த வேலை எப்படி நடந்து கொண்டிருக்கிறதென்றால், முதல் யூனிட் ஆரம்பமான தேதியில் இருந்து ஒவ்வொரு மெஷினும் வேலை செய்ய ஆரம்பிக்க குறைந்த பட்சம் இரண்டு மாதங்கள் ஆகும். ஒவ்வொரு யூனிட்டும் பூர்த்தியாக ஆக அந்த யூனிட்டில் மின்சார உற்பத்திக்கு தயாராகிவிடும். அந்த முறையில் இந்த வருஷம் முடிவுக்குள் எல்லா வேலையும் பூர்த்தியாகிவிடும்.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், சென்ற மாதம் 25-ம் தேதி முதல் உற்பத்தி யந்திரம் துவக்கப்பட்டது என்று சொன்னார்கள். இப்போது அங்கே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றதா ? அல்லது துவக்கப்பட்ட நிலையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : துவக்க விழா 25-ம் தேதி மார்ச் மாதம் நடைபெற்றது. போதுமான தண்ணீர் அணைகளில் இல்லாத காரணத்தால் உடனடியாக மின்சாரம் உற்பத்தி செய்ய முடியவில்லை. மழை வந்ததும்

என்ஜின்களை விற்றுவிட்டதன் காரணமாக நீர்ப்பாசனம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இந்த நிலைமையை மாற்றியமைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் மறு உத்தரவு அனுப்பியிருக்கிறோம். யாருக்காவது கஷ்டம் ஏற்பட்டால் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : முதலில் அனுப்பப்பட்ட உத்தரவு "கான்சல்" செய்யப்பட்டு மறு உத்தரவு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம் குடியாத்தம் மின்சார இலாகா அதிகாரிகளிடத்தில் கேட்டதில் அப்படி எந்த உத்தரவும் இது வரையில் வரவில்லையென்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். தயவு செய்து உடனடியாக உத்தரவை அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : நான் பதில் சொன்னதற்குப் பிறகு மின்சார இலாகாவில் இருந்து தக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

## *Bus fares*

* 668 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI T. SAMPATH) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) on what basis the bus fares are charged in the mufassal and town bus services;

(*b*) whether there is any difference between the maximum and minimum fares between mufassal and town services;

(*c*) whether there is unhealthy competition on account of Government not fixing the minimum fare for the mufassal buses;

(*d*) whether the Government have invited suggestions from the operators in the State in regard to the fixing of minimum fare; and

(*e*) if so, the decision taken thereon ?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) A statement is placed on the table of the House.

(*c*) The answer is in the negative.

(*d*) & (*e*) The proposal for the fixation of minimum rate of fares for stage carriages was considered by Government in consultation with the operators and also the State Transport Advisory Committee and on the recommendation of the State Transport Advisory Committee, the proposal was dropped.

SRI K. VINAYAKAM : Was there not a proposal to increase the fares that are obtaining in the Transport system in the City of Madras to a round figure like 7 nP. to 10 nP. ? What happened to that proposal ? Have the Government deferred the ushering-in of that proposal ?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member should put that question to my colleague in charge of State Transport. But even the State Transport cannot fix any rate above the maximum rates which we have fixed.

* Printed as Appendix II on page 75 infra.





SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the rates charged by the express buses are very high, and, if so, will the Government reduce them ?

THE HON. SRI V. RAMAIAH : The rates of express buses are slightly higher than the rates of the ordinary buses. But the hon. Member, I am sure, is not a regular bus traveller as such. If he is one, he will know that even an ordinary passenger prefers an express bus though he may have to pay a little more.

SRI A. GOVINDASAMY : சென்னையில் ஓடக்கூடிய மொபஸல் பஸ் கட்டணத்திற்கும் ஸிட்டி ட்ரான்ஸ்போர்ட்டினுடைய பஸ் கட்டணத்திற்கும் விகிதாசாரத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால், அதை மாற்றியமைப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH: மொபஸல் பஸ் ஸிட்டியிலே ஓடவில்லை.

## *Missing of certain official records*

* 669 *Q.*—SRI M. R. KANDASWAMI MUDALIYAR (on bebalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவில் விவசாய இலாகா மூலம் கடன் கொடுத்து அந்தக் கடனை ரெவின்யூ இலாகா மூலம் வசூல் செய்ய அனுப்பிய பேப்பர்கள் காணாமல் போய்விட்டனவா ?

(ஆ) அந்தக் கடன் தொகையில் எவ்வளவு வசூலாயிருக்கிறது ?

(இ) வசூலான கடன் தொகையை மதுரை ஜில்லா கண்டமநாய்க்கனூர் கிராம முன்சீப் கஜானாவில் கட்டினாரா ? கஜானா அந்தப்பணத்தைப் பெற்றுக் கொண்டதா ? இல்லையென்றால் ஏன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Rs. 16,49,049.27 nP.

(*c*) The village munsif of Vallanadhi (locally called Kandamanaickanur) remitted the loan collections into the treasury then and there excepting the amount collected by him from one Sri Rajapunna Thevar which could not be remitted into the treasury for want of correct particulars of the number and date of the loan order.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகளுக்காகக் கடன் கொடுத்ததைத் திருப்பி வசூல் செய்ய முற்பட்ட போது, ஜப்தி செய்த ரிகார்டுகளை ஆபீசில் இல்லாமல் போய் விட்டதாக, மற்ற ஜில்லாக்களில் அதிகாரிகள் சொல்கிறார்களே, அதுபோன்று சேலம் ஜில்லாவைப் பொறுத்தும் அமைச்சர் அவர்களுக்கு புகார்கள் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்விக்கு உள்ள தகவலிலிருந்து கனம் அங்கத்தினருடைய கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. கடன் கொடுத்த தகவல் எல்லாம் எந்தக் "காலம்" குறிக்கிறது, எப்பொழுது கடன் கொடுத்தது என்ற தகவல் இல்லாததால், டெபாஸிட்டில் வைத்திருக்கலாம்.

## *Training in midwifery*

* 670 *Q.*—SRI A. VEDARATNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் மருத்துவப் பெண்கள் (Midwifery) பயிற்சி எங்கே, எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது ?

[14th April 1960

(ஆ) இம்மாகாணத்தின் ஆண்டுதோறும் மருத்துவப் பெண்களின் தேவை என்ன ?

(இ) தேவைக்குப் போதுமான மருத்துவப் பெண்கள் இப்போது இருக்கிறார்களா ?

(ஈ) இல்லையானால், இத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

(உ) கிராமங்களிலுள்ள தாய், சேய், நல விடுதிகளிலுள்ள மருத்துவப் பெண்களுக்கு கம்பவுண்டிங் பயிற்சியும் அளித்து சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை செய்ய வசதி செய்ய உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) It depends upon the creation of new posts and retirement of Maternity Assistants. Under the Public Health Department the annual requirements is about 200.

(*c*) Yes, Sir.

(*d*) Does not arise.

(*e*) There is no proposal under consideration of Government to give training in compounding to Maternity Assistants.

SRI A. VEDARATHNAM : ஸார், கஸ்தூர்பா நினைவு நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பல மருத்துவ நிலையங்களில் பயிற்சி பெறும் மருத்துவச்சிகளுக்கு "கம்பவுண்டிங்" பயிற்சியும் அளிப்பதன் மூலமாக அவர்கள் கிராமத் தேவைகளில் பெரும் பகுதியைப் பூர்த்திசெய்து கொண்டிருந்தார்கள். கிராம வாசிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தது. அதே முறையில், நம்முடைய அரசாங்கம் நடத்துகிற மருத்துவ விடுதிகளில் உள்ள மருத்துவச்சிகளுக்கும் " கம்பவுண்டிங் " பயிற்சி அளித்தால், இப்பொழுது கிராமத்தில் இருக்கும் பற்றுக்குறையில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யக் கூடும் அல்லவா ? அதை அரசாங்கம் யோசித்து தகுந்த முடிவு செய்ய முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தனியார் நடத்துகிற நிலையங்களிலே அப்படி நடக்கலாம். ஆனால், அரசாங்கம் நடத்துகிற நிலையங்களிலே அப்படி அல்ல. கம்பவுண்டிங் பயிற்சி பெறுவதற்கு ஏற்கனவே வசதி இருக்கிறது. மெடர்னிடி அஸிஸ்டென்டுக்கும் கொஞ்சம் கம்பவுண்டிங் பயிற்சி கொடுத்தால், அதனால் ஒருக்கால் விபரீதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். பயிற்சி கொடுத்தால் சரியாகக் கொடுக்கவேண்டும் ; அறைகுறையாகப் பயிற்சி கொடுப்பது பிரயோஜனம் இல்லை.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN: கிராமத்துத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகத்தான் இப்பொழுது கொடுக்கும் பயிற்சி போதாது என்று கருதி, ஆக்ஸிலியரி நர்ஸ் மிட்வயிபரி ட்ரெயினிங் கோர்ஸ் கவர்ன்மெண்டார் நடத்துகிறார்கள். அதில் " ஸிம்பிள் கம்பவுண்டிங் " என்று சொல்லி, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆனால், அதற்காக 50, 60 ரூபாய் பெறுமான மருந்துகள் கூட கொடுக்கப்படுவதில்லை. இதனால் பாக்வார்டு ஏரியாவிலே ஏற்படும் மருத்துவ நிலையங்களினால் ஜனங்களுக்கு வசதி ஏற்படுவதில்லை. ஐந்து, பத்து மைல்களுக்கு ஒரு டிஸ்பன்ஸரி இருக்கிறது. ஆக்ஸிலியரி நர்ஸ் மிட்வயிபரி பயிற்சி கொடுத்து கிராமங்களுக்கு " போஸ்ட் " பண்ணும்போது, சில்லரை வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அளவுக்காவது சுமார் 300, 400 ரூபாய் பெறுமான மருந்துகளைக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி நிலையங்களிலே மருந்து கொடுப்பதற்கு ஏற்பாடு இருந்தால் தான் அம்மாதிரி செய்யலாம். இப்பொழுது ஆக்ஸிலியரி மிட்வயிபரி நர்ஸ்களுக்கு மருந்து கலந்து கொடுக்

a Printed as Appendix III on page 76 infra.



14th April 1960]

கும் வேலை இருப்பதாகத் தெரியவில்லை. மருந்து கொடுக்கிற ஏற்பாடும் இல்லை. அப்படியிருக்கும்போது இதை எப்படிச் செய்வது என்று தெரியவில்லை. " ஸிம்பிள் கம்பவுண்டிங் " பயிற்சி கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஒருக்கால் அப்படிக் கொடுத்து அதையும் பரீட்சார்த்தமாகப் பார்க்கலாம், என்று நினைக்கிறேன்.

SRI R. SRINIVASA IYER: In the list placed on the table of the House, I do not find any mention about the General Hospital. May I know whether midwives or maternity assistants are trained in the General Hospital, and, if not, will they be trained in future? Also, I would like to know whether preference will be given, while selecting candidates for training in midwifery, to young widows, discarded wives and orphans?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, they are not precluded. They are also selected. But what the hon. Member desires is that preference should be given to them. Yes, as far as possible that could be considered.

* Question Nos. 671 and 672.

MR. SPEAKER: The Hon. Minister for Electricity wants postponement of the questions Nos. 671 and 672. So, question No. 673 will be taken up now.

*Road Transport Reorganisation Committee*

* 673 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Road Transport Reorganization Committee has recommended during 1959 that nationalization of passenger services should be undertaken under a phased programme; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes, Sir.

(*b*) The recommendation has been generally agreed to by this Government and the Government of India have been informed accordingly. Steps are being taken to expand the services provided by the Madras State Transport Department by stages.

SRI N. K. PALANISAMI: " பேஸ்டு ப்ரொக்ராம் " படி எப்பொழுது முடியவேண்டும் என்பதற்கு " டைம் லிமிட் " வைக்கப்பட்டிருக்கிறதா ? எத்தனை வருஷங்களிலே இது முடியவேண்டும் என்று " டைம் லிமிட் " வைக்காததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : கமிட்டியினுடைய சிபார்சிலேயே " டைம் லிமிட் " வைக்கவேண்டுமென்று சிபார்சு செய்யவில்லை. ஆனால், நாம் போடக்கூடிய திட்டம் எந்த அளவுக்கு நாம் தேசியமயமாக்குவதிலே கஷ்டம் இல்லாமல், அதே நேரத்தில் தேவையையும் வசதியையும் உணர்ந்து செய்ய முடியுமோ அதற்குத் தகுந்த முறையிலே தான் நாம் திட்டம் போடுகிறோம்.

SRI N. K. PALANISAMI : கன்யாகுமரி ஜில்லாபூராவிலும் சர்க்காரே பஸ் விடுகிறது. பக்கத்து ஜில்லாவுக்காவது இந்த வருஷத்தில் அது மாதிரி விஸ்தரிக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : கன்யாகுமரி ஜில்லா பூராவும் சர்க்காரே பஸ் விடுவதில்லை. அந்த ஜில்லாவில் தனிப்பட்டவர்களும் பஸ் ஓட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், சமீபத்திலே அரசாங்கம் " ப்ரொக்ரஸிவ் நாஷனலைசேஷன் பாலிஸியை " ஏற்றுக்கொண்டிருக்கும் காரணத்தால், படிப்படியாக வசதிக்குத் தகுந்த முறையிலே தேசியமயமாக்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

*Medical College Hostels*

* 674 *Q.*—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the room rents in Medical College Hostels are exorbitant when compared to other hostels in the City; and

(*b*) if so, whether there is any proposal to reduce the same?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) The Government consider that the rents charged are not exorbitant.

(*b*) Does not arise.

Sri A. A. RASHEED: May I know whether the Government have received any complaint from the students residing in the hostel regarding the high rent charged for the rooms they occupy?

The Hon. Sri M. A. MANICKAVELU: Not at the Government level.

Sri A. A. RASHEED: Is the Hon. Minister aware that compared to the hostels attached to the Arts Colleges and private colleges, the rents charged are very high? So, will the Government reconsider the matter and reduce the rent?

The Hon. Sri M. A. MANICKAVELU: மற்ற காலேஜ் ஹாஸ்டல்களிலே வாடகை எப்படியிருக்கிறது என்று பார்த்தால், லாயலா காலேஜ் ஹாஸ்டலில் எட்டு ரூபாய் வீதமும், ஆர்ட்ஸ் காலேஜ் ஹாஸ்டலில் ஒன்பது ரூபாய் வீதமும், ப்ரெஸிடென்ஸி காலேஜ் ஹாஸ்டலில் 10 ரூபாய் வீதமும் இருக்கிறது. இந்தக் காலேஜ் ஹாஸ்டலுக்கு கனம் அங்கத்தினர் போய்ப் பார்த்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அங்கு இப்போதைய முறையிலே எல்லா வசதிகளும் நிறையப் பணம் செலவு செய்து, அது ரொம்ப நன்றாகக் கட்டப்பட்டிருக்கிறது.

*Health Visitors Training School*

* 675 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருக்கும் ஹெல்த் விசிட்டர்கள் பயிற்சிப் பள்ளிக் கூடத்தில்—

(1) Regular State Scheme,

(2) Integrated Course of Midwifery—on Health Visiting,

(3) Public Health Nurse Short Orientation Course,

ஆகியவைகள் ஒவ்வொன்றிலும் பயிற்சி பெறுவதற்காக 1959-60-ல் ப.த்தனை பேர்கள் விண்ணப்பித்தார்கள்?

(ஆ) எத்தனை பேர்கள் சேர்க்க பட் ார்கள்? இவர்களில் எத்தனை பேர்கள் ஹரிஜனங்கள்?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix IV on page 76 infra.



Sri P. G. MANICKAM: மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிலே "ரெகுலர் ஸ்டேட் ஸ்கீமுக்கு" மாத்திரம் 31 பேர்கள் விண்ணப்பித்திருந்ததில் 26 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அதில் 3 பேர்கள் ஹரிஜனங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. "பப்ளிக் ஹெல்த் நர்ஸிங் ஷார்டு ஓரியென்டேஷன் கோர்ஸுக்கு" மொத்தம் 27 பேர்கள் விண்ணப்பத்திருந்ததில் 15 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதில் ஹரிஜனங்கள் யாரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த கோர்ஸுக்கு ஹரிஜனங்கள் யாரும் விண்ணப்பிக்கவில்லையா, அல்லது அவர்கள் விண்ணப்பித்திருந்தும் யாரும் எடுக்கப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இந்த "பிரேக்-அப்" என்னிடம் இல்லை. இந்த கோர்ஸுக்கு இரண்டு பாட்சுகளிலும் அப்ளிகேஷன் போட்டது மொத்தம் 12, 15 பேர்கள். அவர்களில் 5, 10 பேர்கள் எடுக்கப்பட்டார்கள். அதிலே ஹரிஜனங்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆகையால் ஹரிஜனங்கள் யாரும் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்களா, இல்லையா, அல்லது அவர்கள் விண்ணப்பித்திருந்து தகுந்த யோக்கியதாம்சம் இல்லாததால் எடுக்கப்படவில்லையா என்று இப்பொழுது சொல்ல இயலவில்லை.

*Electricity charges*

* 676 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state the reasons—

(i) for giving concessions to bulk consumers who consume more than 50 units per month; and

(ii) for increasing the rates of electric charges for the domestic consumers?

The Hon. Sri V. RAMAIAH: (i) It is a general practice to adopt a lower rate for higher consumption and this practice is adopted in the case of domestic consumers also. In the old tariffs also such a practice was adopted.

(ii) According to the revised tariff, which has been evolved after considering the recommendations of the Departmental Committee set up for the purpose there has been a slight increase over the previous rates for domestic consumers in the areas covered by the Pykara and Madras Electricity Systems while in the areas covered by the other electricity systems, there has been a slight decrease in rate.

The slight increase is due to the increase in the cost of materials and labour and operation and maintenance expenses.

Sri N. K. PALANISAMI: அதிகமாக மின்சாரம் உபயோகிக்கக் கூடியவர்கள் பங்களாக்களில் வசிக்கிறார்கள். அவர்கள் இன்னும் அதிகமாக கட்டணம் கொடுப்பதற்கு வசதியிருந்தும், அவர்கள் குறைந்த கட்டணம் கொடுக்கலாம், சாதாரணமாக உபயோகிக்கக்கூடியவர்கள் அதிகமாக கொடுக்கவேண்டுமென்று இருப்பது சரியல்ல. ஆகையால் இதை ரிவைஸ் செய்து பழைய ரேட்டை கொண்டுவருவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

The Hon. Sri V. RAMAIAH: பழைய ரேட்டை கொண்டுவரவேண்டுமென்று சொல்லுவதால் இன்னும் கட்டணத்தை குறைக்கச் சொல்லுகிறார்கள் கனம் அங்கத்தினர். அதே நேரத்தில் கூட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதிகமாக மின்சாரம் உபயோகிக்கக்கூடியவர்களுக்கு பொதுவாக நாம் குறிப்பிட்டிருக்கக்கூடிய சலுகைகளை பார்த்தால், பெரிய தொழிற்சாலைகளுக்குத்தான் இந்தச் சலுகை கிடைக்கும். இவைகளை

[Sri M. P. Subramaniam] [14th April 1960

டார்கள். தமிழ் நாட்டில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய நீர்மின் திட்டத்தை நிறைவேற்றிய தொழிலாளர்களின் நிலைமை அங்குள்ள அதிகாரிகளால் சரியாக பாதுகாக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அங்கே தலைமை என்ஜினியராக இருக்கக்கூடியவரும், மற்ற அதிகாரிகளும், தொழில் சங்கங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள்மீது பழிவாங்கும் நோக்கத்துடன் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுகிறார்கள். தங்களுடைய குறைகளை அவர்கள் நேரடியாக தெரிவித்துக்கொள்ளுவதற்கோ அல்லது சங்கங்களின்மூலமாக தெரிவித்துக்கொள்வதற்கோ அவர்கள் ஒத்துழைப்பதில்லை என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். 10,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நீலகிரி மலையில் அவர்களுக்கு ஒத்துக்கொள்ளாத மிகக் கஷ்டமான சீதோஷ்ண நிலைமையில் 5,000 அடிக்கு மேலே மேடு பள்ளத்திலும், பெருமழையிலும் கடும் குளிரிலும் மிகவும் அவதிப்பட்டு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு தனிப்பட்ட
11-30 a.m சம்பளம், ஸ்பெஷல் பே ($12\frac{1}{2}$ சதவிகிதம்) கொடுக்கப்பட வேண்டும் என்ற தத்துவத்தை ஏற்கனவே மின்சார போர்ட் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது ஒன்றும் புதிதில்லை. அந்த ஊழியர்கள் அசௌகரியமான சூழ்நிலையில் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது என்பதற்காகக் கொடுக்கப்படுகிறது இந்த ஸ்பெஷல் பே. இம்மாதிரி விசேஷச் சம்பளம், மச்கண்ட் பிராஜக்ட் சென்னை சர்க்கார் நடத்திய காலத்தில் 25 சதவிகிதம் ஆகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த குந்தா திட்டத்தில் $12\frac{1}{2}$ சதவிகிதம் என்று ஒப்புக்கொண்டு ஒரு சிலருக்கு மட்டும், எக்ஸிக்யூடிவ் பீல்ட் ஸ்டாப்புக்கு மட்டும் கொடுக்கிறார்கள், எஞ்ஜினியர்கள், உதவி என்ஜினியர்கள், சூபர்வைசர்கள் இவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். ஆனால், அங்கே வேலை செய்யும் என்.எம்.ஆர். ஒர்க்கர்கள், ஒர்க் சார்ஜ்ட் தொழிலாளிகள், அலுவலகங்களில் வேலை செய்யும் குமாஸ்தாக்கள் இவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று கோரப்பட்ட கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை. சென்னை லேபர் கமிஷனர், தொழில் ஆணையாளரவர்கள கன்சிலியேஷன் செய்தபிறகும் அந்தச் சலுகை கொடுக்கப் படவில்லை என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

இப்பொழுதுகூட தமிழ் நாட்டில் நடைபெறும், நெய்வேலி திட்டத்தில், 25 சதவிகிதம் ஸ்பெஷல் பே கொடுக்கப்படவேண்டும், குமாஸ்தாக்களுக்கும் மற்றவர்களுக்கும், என்று ஒப்புக்கொண்டு செய்யப்படுகிறது. இம்மாதிரியேதான் முன்பு மச்கண்ட் பிராஜக்டில் செய்யப்பட்டது. அப்படியிருக்கும்போது, இங்கு மட்டும் இம்மாதிரிப் பாகுபாடு ஏன் செய்ய வேண்டும் என்றுதான் தெரியவில்லை. வெளியிலே வேலை செய்யும் எக்சிக்யூடிவ் ஸ்டாப்புகளுக்கு மட்டும் என்பது சரியில்லை. அங்கு வேலை செய்யும் அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும், பாகுபாடு செய்வது கூடாது. அப்படி ஏன் பாகுபாடு செய்கிறார்கள் என்பது புரியவில்லை. அங்கே முதல் பவர் ஹௌஸ் கமிஷன் ஆகிவிட்டது. அங்கே 600-க்கும் மேற்பட்ட ஒர்க் சார்ஜ்ட் தோழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் தொடர்ந்து வேலையில் வைத்துக்கொள்ளப்படவேண்டும். அங்கே வேலைசெய்கிறவர்களில் பலர், பல திட்டங்களிலே வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள் ; அவர்கள் பெரியார் திட்டத்திலும் இன்னும் பல திட்டங்களிலும் வேலைசெய்தும், இங்கேயே 3, 4 வருஷங்களாக வேலைசெய்தும் வந்திருப்பவர்கள். ஆகவே அவர்களுக்கு வேலை உத்திரவாதம் அளிக்கப்படவேண்டும். ஆனால், அவர்கள் வேலையில் நிரந்தரமாக்கப்படவில்லை. மற்ற பகுதிகளில் வேலை ஆரம்பிக்கும்போது, அரசாங்கமோ, மின்சார போர்டாரோ, அவர்களையே எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது நீலகிரியிலேயே அப்பர் பவானித் திட்டம் அமலாக்கப்படவிருக்கிறது. சேலத்திலே, மேட்டூர் விஸ்தரிப்புத் திட்டம் எடுக்கும் நிலையில் இருக்கிறது. அங்கெல்லாம் அனுபவமில்லாத புதிய தொழிலாளிகளை நியமிக்கிறார்கள். அம்மாதிரித் தொழில் அனுபவம் உள்ள தொழிலாளிகளையே முதலில் அமர்த்தவேண்டும்.



14th April 1960]

MR. SPEAKER : The hon. Member should be brief. While speaking under rule 41, he cannot make a long speech.

THE HON. SRI C. SUBRAMANIAM : He is laying down policies for the Government.

MR. SPEAKER : The hon. Member is wandering away from the main subject.

SRI M. P. SUBRAMANIAM : I shall finish in two minutes, Sir.

ஆகவே, அந்தத் தொழிலாளிகளுக்கு வேலை உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு வேறுதொழில்களில் வேலை வாய்ப்புக் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் தங்களுக்கு டைம்-ஸ்கேல் ஆப் பே கொடுக்க வேண்டும் என்று கோரிக்கையையும் விட்டிருந்தார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்கவில்லை. மின்சார போர்டு சில ஆண்டுகளுக்கு முன்பு, 250 பேர்களுக்கு டைம்ஸ்கேல் நியமிப்பதாகச் சொல்லி, 55 பேர்களுக்கு மட்டும் செய்தார்கள். ஆகவே, தாங்கள் ஒப்புக்கொண்டதையே அமலாக்கவில்லை. அப்படிப் பலமுறை கேட்டும், ஒன்றும் அமலாக்கப்படாததால், தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யப் போவதாக தீர்மானித்து, இப்பொழுது அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதே நிலைமையை நீடிக்க விட்டால், திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்த ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் நிலைமை மிக மோசமாகப் போய்விடும் என்பதைத் தெரிவிக்கவே, இந்த சட்டசபையின் 41-வது பிரிவின் கீழ் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தேன் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I am at a handicap in making the statement in relation to the speech made by the hon. Member. The hon. Member's notice under rule 41 relates only to 'the serious situation created by the strike notice given by all the unions of workers and staff in the Kundah Hydro-Electric Project as the Madras State Electricity Board has failed to concede even the reasonable and legitimate demands of the workers'. Therefore, my statement will relate only to the point raised in the notice. Though I can reply to a number of other points, which the hon. Member has raised, I am afraid I would be going outside the scope of the subject-matter if I begin to answer those points.

On 17th July 1959, the National Project Workers' Union, Kundah, gave notice to the Madras State Electricity Board stating that the workers would go on strike from 17th August 1959 if certain demands made by them were not conceded. The Labour Officer, Coonoor, held conciliation in the dispute during July 1959. The Commissioner of Labour also made his recommendations on the conciliation report of the Labour Officer. The workers actually went on strike on 31st August 1959 but returned to work on 2nd September 1959. In the meantime, the Chairman, Madras State Electricity Board, stated that if the Government considered that the matter should be settled by conciliation, the Board would be willing to depute its representative for the purpose. The suggestion was accepted by Government and the Commissioner of Labour was requested to discuss the matter with the representatives of the Madras State Electricity Board as well as the union and bring about a settlement. The Madras State Electricity Board appointed the Chief Engineer (Electricity) and Secretary to the Board as its representatives at the conciliation. The Commissioner of Labour accordingly held conciliation proceedings

with the representatives of the Board and Workers' Union on 6th October 1959 and submitted his report to Government. The report of the Commissioner of Labour is under the consideration of the Government and final orders will be issued shortly. As this is the first dispute on a major scale between the Madras State Electricity Board and its employees working on projects, the Government have to examine these demands in detail and hence there has been some delay which is unavoidable.

On 7th March 1960, the Tamilnad Electricity Board Accounts Subordinates Union gave notice that the workers would go on strike from 21st March 1960 in order to get the demands of the Electricity workers of the Kundah Project conceded. Similarly, the Tamilnad Electricity Board Last Grade Servants Union, Kundah, Emerald and Kundah Hydel Workcharged and Services Union, Kundah, Emerald, Pegambahalla and Upper Bhavani Units also served notices on the Madras State Electricity Board proposing to go on strike from 21st March 1960 and 22nd March 1960, respectively. The threatened strike did not take place on that date.

The President and the General Secretary of the National Project Workers' Union, Kundah, who went on hunger strike from 7th March 1960 as a protest against the delay in passing orders on the demands raised by the union, called it off from 9th March 1960 and the workers who struck work in sympathy with the hunger strikers also resumed work from 10th March 1960. The National Project Workers' Union has again served a strike notice on the Madras State Electricity Board stating that the workers will be going on strike from 13th April 1960 if their demands are not conceded. The matter is under consideration. I may add that the question has been referred to the Commissioner of Labour for taking up statutory conciliation under the Act.

## III.—ANNOUNCEMENT.

### THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration in the Madras Legislative Assembly of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960.

## IV.—GOVERNMENT BILL.

### THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960)

* THE HON. SRI M. A. MANICKAVELU: Mr. Speaker, I beg to move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 45 members (30 members of the Legislative Assembly and 15 members of the Legislative Council) to consider the Madras Land



Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 (L.A. Bill No. 8 of 1960) and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee".

Sir, I shall submit the list of members later.

இருக்கின்றன. கோவில்பட்டி, சங்கரன்கோயில் ஆகிய தாலூகாக்களில் மேய்ச்சல் பூமியே இல்லை. மேச்சல் பூமிக்கு இடம் கொடுத்துவிட்டோம், மாடுகளுக்கு நல்ல விதமான மேய்ச்சலுக்கு வகை செய்துவிட்டோம் என்று நாம் நினைத்துக்கொண்டு ஒரு வரம்பை நாம் நிர்ணயித்திருக்கிறோம். உண்மையில் பல இடங்களில் மேய்ச்சல் பூமியே இல்லை என்பதை கவனியாமல் நாம் இவ்வாறு நிர்ணயித்திருக்கிறோம். எனவே அவர்களுக்கு அவர்கள் கோருவதுபோல "காட்டில் ஃபாடருக்கு" (cattle fodder) $\frac{1}{3}$ பங்கு நிலம் ஒதுக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால், பாக்கியுள்ள பகுதியை வைத்துக்கொண்டு, நாம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்று நினைக்கும் சராசரி வருமானத்தை சரிக்கட்ட முடியுமா என்பதையும் ஜாயின்ட் ஸெலக்ட் கமிட்டி கவனிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இதையெல்லாம் நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். மேய்ச்சல் நிலம் இல்லாத பிரதேசங்களில் "காட்டில் ஃபாடருக்காக" விவசாய பூமியில் $\frac{1}{3}$ பகுதியை ஒதுக்க வேண்டிய நிலைமையையும் கவனித்து, எஞ்சியுள்ள பகுதியில் விவசாயிகளுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தைக் கொடுக்கும் பொருளாதாரத்திற்கு வகை செய்ய முடியுமா என்பதையும் கவனித்துச் சட்டமியற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

"மார்ட்கேஜ்", "மார்ட்கேஜீ" இவை பற்றியெல்லாம் ஒரு ஷரத்து இந்த மசோதாவில் இருக்கிறது. அதன்படி, உச்சவரம்புக்கு மேலே நிலம் வைத்திருப்பவர் அதை இழந்து விடுவார். ஒத்திவைத்தவர் ஒரு ரூபாயும் கொடுக்க வேண்டாம். ஏதோ ஒரு அளவுக்கு பணம் நிர்ணயம் பண்ணுவார்கள். ஸெக்யூரிடியைப் பொறுத்தவரையில் மறுபடியும் அதே நிலத்தை ஸெக்யூரிடி கொடுப்பதற்கு இடம் இருக்கிறது. இந்த நிலையில், பெரிய அளவில் எக்ஸ்ப்ரோப்ரியேஷன் செய்யும்போது, கடன் கொடுத்தவர்களுக்கு பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வதை விட வேறு விதமாக விதிக்கலாம். முன்பெல்லாம், 30 வருஷங்கள் அனுபவித்தவரிடமிருந்து கடனைத் திருப்பிப் பெற வேண்டியதில்லை என்று சொல்லி வந்திருக்கிறோம். அத்தகைய ஷரத்தைப் போட்டு அதை அமுல் செய்து நிலத்தை அவர்களுக்குச் சொந்தமாக்கலாம். அவ்வாறு செய்யாமல் நிலமும் அவர்களுக்குச் சொந்தம், அவர்கள் கடனை திருப்பித் தர வேண்டியதில்லை என்று விதிப்பது விநோதமாக இருக்கிறது. ஒன்று, கடன் நிவாரணச் சட்டத்தை பிரயோகித்து மீதி கடனை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும், அல்லது சர்க்கார் அதற்கான பணத்தை அவர்களுக்குக் கொடுத்து "ரெவின்யூ ரெகவரி ஆக்ட்" பிரகாரம் காம்பென்ஷேஷன் வசூலிப்பது போன்ற முறையைக் கையாள வேண்டும். அது தான் நியாயமே தவிர, "சொத்துக்களை மாத்திரம் திருப்பிக் கொடுக்க வகை செய்திருக்கிறோம்" என்று சொல்வது எவ்வளவு தூரம் நியாயத்திற்கும், வாதத்திற்கும் பொருந்தும் என்று பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இனாம் நிலங்களைப் பற்றி VIII-ம் சாப்டரில் சொல்லப்பட்டிருக்கிறது. 3,000 கிராமங்களில் நிலங்கள் இன்னும் இனாம் நிலங்களாகவே இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு இன்னும் பரிகாரம் ஏற்படவில்லை. ஜமீன் நிலங்களுக்கு பரிகாரம் கொடுத்திருக்கிறோம். ஜமீன் நிலங்களுக்கு ரயத்வாரிப் பட்டாக்கள் வழங்கியிருக்கிறோம். அந்த நிலங்களை அனுபவிப்பவர்கள் ரயத்துவாரிப் பட்டாதாரர்களாக இருக்கிறார்கள். ஆனால் இனாம் நிலங்களுக்கு இன்னும் பரிகாரம் கொடுக்கவில்லை. அவைகளுக்கு 2 வருஷ வாய்தா கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு ஸெட்டில்மெண்ட் பண்ண வேண்டுமென்று இதற்கு முன்பு நான் எத்தனை தடவை வற்புறுத்தினாலும், வேண்டாத வேலையை வற்புறுத்துவதாக கனம் அமைச்சர் நினைத்தார். இப்போது 3,000 இனாம் கிராமங்களுக்கு ஸெட்டில்மெண்ட் வேலை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருட காலத்திற்குள் இந்த வேலை முடிந்துவிடுமா, முடியாதா என்று நான் சந்தேகப்படுகிறேன். சில ஜமீன் பிரதேச நிலங்கள்கூட இன்னும் ஸெட்டில்மெண்ட் ஆகவில்லை. 10, 12 வருஷங்களாக ஸெட்டில்மெண்ட் வேலை செய்துவந்தும் அவை

இன்னும் பூராவும் செட்டில்மெண்ட் ஆகவில்லை. அப்படி இருக்க, இந்த 3,000 இனாம் நிலங்களுக்கு இரண்டு வருடத்தில் ஸெட்டில்மெண்ட் செய்து விட முடியுமா ? எப்படி இருந்தாலும், இவைகளுக்கு இந்த இரண்டு வருடத்தில் ஸெட்டில்மெண்ட் செய்வதற்கு சர்க்கார் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். ஜமீன் பிரதேசங்கள் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகளையே சர்க்கார் இந்த நிலங்கள் சம்பந்தமாகவும் எடுப்பார்களா, அல்லது வேறு எந்த முறைகளைக் கடைப்பிடிப்பார்கள் ? இவைகளுக்கென ஒரு லாண்ட் கமிஷனரை சர்க்கார் நியமிக்கப்போகிறார்கள். ஜில்லாவாரியாக அதிகாரிகளை நியமித்து எல்லா ஜில்லாக்களிலும் இந்த வேலையை உடனடியாக எடுத்துக்கொண்டு 6 மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரைவ்ஷன் மாத்திரம் இருந்தால் இது சாத்தியமாகும். ஏதோ நடக்கட்டும் என்ற அசிரத்தை இப்போது சர்க்காருக்கு இருக்கிறது. இனாம் நிலங்களைப் பொறுத்தவரையில் இந்த அசிரத்தை கட்டாயம் நீங்க வேண்டும். இந்த நிலங்களைப் பொறுத்தவரையில் இவைகளில் 3,000 கிராமங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. வேறு மக்களின் பிரச்னையாக இருந்தால், உதாரணமாக ஆலைத் தொழிலாளர்களின் பிரச்னையாக இருந்தால், சட்டசபையில் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டிருக்கும், சபையின் 41-வது விதியின்படி பிரேரேபணை கொண்டுவரப் பட்டிருக்கும் எல்லாம் வந்திருக்கும். நாடு சுதந்திரமடைந்து 10 வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இயற்றுவதற்கு இப்போது முன்வரும்போது, இனாம் நிலங்கள் சம்பந்தமாக ஸெட்டில்மெண்ட் முடிவதற்கு இன்னும் இரண்டு வருட வாய்தா கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். சர்க்கார் அதையாவது கொடுத்தார்களே என்று ஆறுதலடையத்தான் வேண்டியிருக்கிறது. இந்த இனாம் நிலங்கள் சம்பந்தமான ஸெட்டில்மெண்ட் பொறுத்தவரையில், சர்க்கார் இந்த வேலையை பிரதேசவாரியாக எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு ஸெட்டில்மெண்ட் ஆபீசர் போட்டு வேலை செய்தால் இந்த வேலை நிச்சயம் ஆறு மாத காலத்தில் முடிந்துவிடும். அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்குரிய முறையில் VIII-வது சாப்டரை அமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், இதில் மேல்வாரம், குடிவாரம், குடிவாரத்தார் என்ற பிரிவினரையெல்லாம் குறிப்பிடுகிறோம். எப்படியும் இந்த வேலையை இரண்டு வருடங்களில் இல்லாமல் 6 மாத காலத்தில் முடிப்பதற்கு வகை செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவில் 5 ஏக்கர் வரையில் பொர்சனல் கல்டிவேஷனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தகுந்த அம்சம். இனிமேல் இருக்கக் கூடிய குட்டி நிலச்சுவான்தார் யாரும் 5 ஏக்கருக்கு மேல் நிலம் உடையவராக இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் நாங்கள் இதை வரவேற்பதாக நினைக்கக்கூடாது. இதை ஏன் வரவேற்கிறோம் என்றால், இன்று வரையில் நிலத்தில்தான் இன்வஸ்ட்மெண்ட் இருந்துவந்திருக்கிறது. அது எங்கள் குற்றமோ, எங்கள் மூதாதையர் குற்றமோ, தெரியாது. நொண்டிகள், மைனர்கள், கைம்பெண்கள் ஆகியவர்களுக்கு அந்தக் காலத்திலிருந்தே நிலத்தில் தான் சொத்து எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த 60, 40 வாரச் சட்டம் வந்தது. 40 வாரம் கூடக் கிடைக்காத பெண் நிலச்சுவான்தார்களை எனக்குத் தெரியும். நெல்லை ஜில்லாவில் ஆறுவைமங்களம் என்ற குளத்தில் 2,500 பட்டாதார்களும், 500 விவசாயிகளும் இருக்கிறார்கள் என்றால் அங்கே யார் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்று நாம் பார்த்துக்கொள்ளலாம். அங்கே இருக்கிற நிலங்களோ 2,000 ஏக்கர்தான். இப்போதாவது நிலச்சுவான்தார்களுக்கு பொர்சனல் கல்டிவேஷனுக்கு இவ்வளவு நிலம் அனுமதிப்பதை பாராட்ட வேண்டியது தான். இது ஸெலெக்ட் கமிட்டிக்குப் போய்விட்டு வரும்போது மாறுதல் இல்லாமல் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். "நாம் புத்தகத்தில் படித்தது தான் ப்ரோக்ரஸிவ், இது ப்ரோக்ரஸீவ் இல்லை" என்று வெறுவிதமாகத் தீர்மானித்துவிடக் கூடாது என்று ஸெலெக்ட் கமிட்டிக்குப் போகக்கூடிய அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவை குறைக்கக் கூடாது என்று அவர்



களைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் 6 ஏக்கர் வரையில் சொந்தமாக விவசாயம் செய்யலாம் என்று டெனென்ஸி ஸீலிங்கிற்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. உண்மையில் பல விவசாயிகள் சொந்தமாக 10, 11 ஏக்கர்கள் விவசாயம் செய்கிறார்கள். மேலும் பொர்சனல் (Personal) கல்டிவேஷனுக்கு நில வரம்பு நிர்ணயிக்கும்போது, பிரதேச வாரியாக நிர்ணயிக்கலாம் ; அவ்வாறு நிர்ணயிக்கும்போது சில பிரதேசங்களில் அதிகமாகக் கூட அனுமதிக்கலாம். எல்லாப் பிரதேசங்களுக்குமே இது 5, 6 ஏக்கர்களாகத் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. டெனென்ஸி ஸீலிங்கிக்கு அதிகமாக நிலம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த ஷரத்தையும் ஸெலெக்ட் கமிட்டியினர் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

"கிரேசிங் கிரவுண்டுக்கு" "எக்ஸம்ப்ஷன்" கொடுக்கப்பட்டிருக்கிறது. 50 ஏக்கர் வரை "எக்ஸம்ப்ஷன்" கொடுத்திருக்கிறார்கள். கிரேசிங் கிரவுண்டில் வேறு எதுவும் செய்ய முடியாது. 50 ஏக்கருக்கு மேல் இருக்கிறதென்று சொல்லி பாக்கி பூராவையும் நாம் எடுப்பது என்றாலும் அந்த நிலத்தை யாரும் வந்து கேட்கமாட்டார்கள். விவசாயிகள் தங்களுக்கு வேண்டுமென்று அப்லிகேஷன் போட்டால் கொடுப்பது பற்றி ஆட்சேபணையில்லை. அந்த "ரைட்"டை லாண்ட் போர்டு வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். சர்ப்ளஸ் லாண்ட் ஒரு லட்சம் ஏக்கர் என்று புள்ளிவிவரம் போட்டு, அந்த கிரேசிங் லாண்ட் முழுவதையும் கோவாப்பரேடிவ் டெனன்சி சொஸைடிகள் எடுத்து நடத்த கோவாப்பரேடிவ் சொஸைடிகளை ஏராளமாக அமைத்து அதன் மூலம் சர்க்கார் பணம் போய்விடக் கூடாது. 50 ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடிய நிலத்தை எடுத்துக்கொள்வது என்பதில் க்ரேசிங் கிரவுண்ட் சர்ப்ளஸ் பேர்பாதியிருக்கும். கிணறு வெட்டினால் நல்ல விதமாக வரும். 10 ஏக்கருக்கு ஒரு கிணறு வெட்டி, 25 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு ஸ்பெஷல்கனெக்ஷன் கொடுத்து, 50 ஆயிரம் ரூபாய் பொதுப்பணத்தைப் போட்டு ஒரு பெரிய "எக்ஸ்பரிமெண்டி"ல் போய் இறங்கிவிடக் கூடாது. கோவாப்பரேடிவ் முறைக்கு இதைக் கொண்டு போனால் நல்ல முறையில் நடத்த முடியாது. பிறகு கோவாப்பரேடிவ் என்றால் இப்படித்தான் நடக்கும் என்றும் சொல்லக் கூடிய நிலைமைக்குப் போய்விடக் கூடாது. அந்த முறையில் இந்த கிரேசிங் கிரவுண்ட் 50 ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று விதிகள் வைத்துக்கொண்டு சர்ப்ளஸ் லாண்டை உபயோகப்படுத்தும்போது கிரேசிங் கிரவுண்டாக உபயோகப்படுத்த வேண்டுமா, அல்லது ஏதாவது மாற்ற முடியுமா என்பதற்கான யோசனைகள் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

"காம்பன்சேஷன்" விஷயமாக நான் எவ்வளவு தூரம் பேச அருகதையுள்ளவன் என்று தெரியவில்லை. எல்லா ஸ்டேட் காம்பென்சேஷனையும் பார்க்கும்போது நம்முடைய ஸ்டேட்டில் அதிகமாகக் காம்பன்சேஷன் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆந்திரா "பேஸிஸில்" பொதுவாக நம் ஸ்டேட் காம்பன்ஸேஷன் இருக்கிறது. இரண்டு மடங்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அது நியாயந்தான். எல்லா "ஸ்டேட்ஸையும்"விட கொஞ்சம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். காம்பன்ஸேஷன் கொடுக்கும்போது நிலத்தினுடைய "வேல்யூ" எவ்வளவு என்று நிர்ணயித்துக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஏமாற்றம் இல்லாமல் இருக்க, பெரிய வருத்தங்களுக்கு இடமில்லாமல் இருக்க இவ்வாறு காம்பன்ஸேஷன் "அமவுண்ட்" நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது தான். மற்ற மாகாணங்களை விட அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். இதை இன்னும் கொஞ்சம் "லிபரலைஸ்" பண்ண வேண்டுமென்ற முறையிலும் யாரும் பார்க்கவேண்டாம், இன்னும் கொஞ்சம் குறைத்து கொடுமைப் படுத்த வேண்டுமென்றும் பார்க்க வேண்டாம். இப்போது இருப்பது கூடிய வரையில் நியாயமான அடிப்படையில் இருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri C. Muthiah] [14th April 1960

அந்த நிலத்தை அவர்கள் துர்விநியோகப்படுத்தினால், அதிலேயிருந்து மகசூலே அடைந்தால், 200 ரூபாய் நிலச்சுவான்தாருக்கு அபராதம் என்றும், அந்த நிலத்தை இடித்தாலோ அழித்தாலோ ஒரு வருஷ சிறைத் தண்டனை என்று இப்படி ஒரு புரட்சிகரமான மாறுதலே அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நியாய வாரச் சட்டம் கொண்டுவந்தபோதே, நிலச் சுவான்தாருக்கும் விவசாயிக்கும், இருவருக்கும் இப்படிப்பட்ட தண்டனை கொடுக்கவேண்டுமென்று நாங்கள் அப்பொழுது கேட்டதற்கு, அப்பொழுது நிலச்சுவான்தாருக்கு கொடுப்பதற்கு மனமில்லாமலிருந்து, இன்றையதினம் நிலச்சுவான்தாருக்கு தண்டனை அளிப்போம் என்பதைப் பார்க்க நீதி எங்கும் ஒரே மாதிரியாக நிலவும் என்பதை நான் சந்தோஷமாகச் சொல்ல விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், அந்த தண்டனை இல்லையென்றால், அது எப்படி எப்படி மறையும், எந்த எந்த நிலையிலே உருக்குலையும் என்பதை நன்றாக அறிவோம்.

இப்பொழுது நாம் போட்டிருக்கும் சட்டத்திலே கூட, குடியிருப்பைப் பற்றி விசேஷமாகப் போட்டிருக்கிறார்கள். ஒரு விவசாயி குடியிருக்கும் நிலத்தையே சொந்தமாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்தக் குடியிருப்பு நிலத்தைச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். அப்படிச் சொந்தமாக்கும்போது, அதிலே விதிகளைப் பார்த்தால் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. குடியிருப்பு மனைகளில் குடியேறியிருக்கிறவர்களுக்கு முன்னால் பரம்பரையாக இருந்தவர்கள் மரம் வைத்து ஆதாயத்தை மட்டும் அடையலாம், வீடு கட்டுவதற்கு மரத்தை வெட்டினால், அங்கே "இன்ஜரி" செய்துவிட்டான் என்று வெளியேற்றப்பட வேண்டும் என்ற குறிப்பு இருக்கிறது. மனையைக் கொடுத்த பிறகு, அதிலிருக்கும் பலன்களையும் அவன் அனுபவிக்காமல், உடைமையை அடைவதற்கு வழியில்லாமல் செய்திருப்பது சோஷலிச சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்று ஆவடியில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டியதாக இருக்குமா என்று ஆலோசிக்கும்படி நான் கேட்க விரும்புகிறேன்.

மேலும், கிராமத்தில் கொல்லர்கள், சலவைத் தொழிலாளர்கள், மண்பாண்டம் செய்யக்கூடியவர்கள் இப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தொடர்பாக இருக்கும் இப்படிப்பட்டவர்களுக்குக் குடியிருப்புப் பிரச்னையிலே இடம் இல்லை என்பதைப் பார்க்கிறோம். அதற்காக மீண்டும் நாங்கள் போராடி சட்டசபையிலே சட்டம் கொண்டுவரவேண்டிய நிலைமை இனியும் இருக்காது என்று நான் நினைக்கிறேன். இது இறுதியான சட்டமாக வரப்போகிறது என்று சொல்வதன் காரணமாக, இதையெல்லாம் ஆலோசித்து, கிராமத்தில் குடியிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் குடியிருப்பிலே உத்தரவாதம் கொடுக்க வேண்டும். சாகுபடிக்காக அவர்களுடன் ஒத்துழைக்கும் இம்மாதிரியான ஆட்களுக்கும் இந்தப் பாதுகாப்பு இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்கின்ற காரணத்தால் நாம் அதை அதிகமாகக் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

தரும பரிபாலனச் சொத்தைப் பொறுத்தவரையில் சட்டம் இயற்றப்பட்டும் அது சட்டமே இல்லை என்பதைத்தான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இருநூறு எக்கர் சாமிக்கு வைத்தது போக, பாக்கியிருக்கும் நிலத்தைப் பொறுத்தவரையில், என்ன பாதுகாப்பு அந்த விவசாயிக்கு ஏற்கனவே கிடைத்து வந்ததோ, அதே பாதுகாப்பைத் திருப்பிக் கொடுத்துக் கொண்டேயிருக்கலாம், நிலத்தை மாற்ற முடியாது என்ற நிலைமை தான் இருக்கிறது. இது நியாய வாரச் சட்டத்திலேயே போடப்பட்டிருக்கிறது. மறு நிலையை மாற்றியமைக்கக் கூடிய நிலைமையிலே வேண்டுமானால் இதில் போடப்பட்டிருப்பதாகக் கொள்ளலாமே தவிர, பொருளாதாரத் துறையில் யாருக்கும் அதிலே அபிவிருத்தி இல்லை என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த நிலையை மாற்றி, 200 எக்கர் தேவைக்குப் போக, நிரந்தரமாக வேண்டுமானாலும், இதைப்போல், எவ்வளவு பணம் சாமிக்குக் கொடுக்கவேண்டுமோ அந்தப் பணத்தை, பூராப்



14th April 1960] [Sri C. Muthiah]

பணத்தையும், காம்பன்சேஷன் படி கொடுத்து நிலத்தை வாங்கிச்சொந்தம் ஆக்கிக்கொள்வதற்கு அரசியல் சட்ட அமைப்பு இடம் கொடுக்குமா என்பதையும் சர்க்கார் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். தரும பரிபாலனத்திலே கல்வியைத் தவிர இதர நிலங்களுக்கும் சலுகை கொடுத்திருப்பது அவ்வளவு முறையும் அல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குத்தகைதார்கள் என்ற முறை கடைசி சட்டத்திலே ஒழிக்கப்படும் என்ற நிலைமை இருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், குத்தகைதாருக்கு ஒரு உச்ச வரம்பு ஏற்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் நிரந்தரமாக ஒழிக்கப்படவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஒருவனுக்கு நிலமே இல்லாது, முப்பது எக்கர் குத்தகைக்கு எடுத்து வைத்திருந்தால், அந்த முப்பது எக்கருக்கும் நிலச் சுவான்தாராக ஆகிவிடுகிறார் என்று பார்க்கும்போது, மிக மிக வேதனையாகக் கூட இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். "டெனன்ஸி ஸீலிங் ஏரியா" என்று போட்டு "டெபனிஷன்" செய்து, ஐந்து எக்கருக்குள் வைத்திருப்பவர்களுக்குச் சிற்சில சௌகரியங்கள் கொடுப்பதால், இண்டர்மீடியரி எப்போதுமே இருந்துகொண்டிருப்பார். நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று எந்தக் கொள்கையின்படி முன்வந்தோமோ அதன்படி கொடுக்கக் கூடிய வகையில், "இண்டர்மீடியரி" என்பதை அடியோடு எடுக்கும்படியான நிலைமைக்கு இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய வகை செய்யவேண்டும். நிலமில்லாத விவசாயிகளுக்கு நிச்சயமாக நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். குத்தகை எடுத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு முப்பது எக்கருக்கு உரிமை உண்டு என்று சொல்லிவிட்டால், நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கிடைக்காமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுபோய்விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அந்த நிலைமையையும் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் முப்பது எக்கருக்கு நிலச் சுவான்தார்கள் இஷ்டப்பிரகாரம் 15 எக்கரை பண்ணையாக வைத்திருந்து, 15 எக்கருக்கு சாகுபடியாளராக இருந்தால், அந்த இடத்தை நிலச்சுவான்தார் விரும்பினால் அதை மாற்றி எடுத்துக்கொள்ளலாம் என்ற விதியைச் சேர்த்திருக்கிறார்கள். முதலிலே 40 வாரச் சட்டம் இயற்றியபோது சிறு நிலச் சுவான்தாரர்களுக்கு ஒரு வேலி நிலத்திற்கு விதிவிலக்கு அளித்தோம். பிறகு 60 வாரம் போட்டு இன்றைய தினம் நாம் அந்த விதி விலக்குக்கு மீண்டும் வந்திருக்கிறோம். முப்பது எக்கர் நிலத்தில் சாகுபடி செய்பவர்கள் எந்த எந்த நிலத்தை வைத்திருக்கிறார்களோ, அந்த நிலத்தை நிலச் சுவான்தார் இஷ்டத்திற்கு, இதுவரைக்கும் அவர்களுக்கு எவ்வளவு சுகம் இருந்து கொண்டிருந்ததோ அது போதும் என்று நினைக்கிறேன். அதை மாற்றுவதற்குள்ள அபிப்பிராயத்தை நிலச் சுவான்தார்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அப்படிக் கொடுத்தால், நிலத்தை மாற்றும்போது விவசாயிகளுக்கு மனக் கசப்பு ஏற்படும். உழைப்பை அதிகமாகச் செலவழித்து, வளப்படுத்தியிருக்கும் நிலத்தை மாற்றியமைப்பது என்ற நிலைமை ஏற்பட்டால், அவ்வளவு செலவழித்ததற்கு என்ன நிலைமை ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நிலைமையில், குத்தகைதாருக்கு இதிலே என்ன சலுகை கொடுத்திருக்கிறதென்றால், முப்பது எக்கருக்கு மேல் நிலம் அதிகமாக வைத்திருப்பவர்கள், அவர்கள் முப்பது எக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பது போக, மீதம் இருப்பதற்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்ற நிலையும் இருக்கிறது. நடுவிலே குத்தகை எடுத்தவர், ஆதாயத்தைப் பார்த்தவர், நிலத்தைவிட்டுப் போகவேண்டுமென்றால், அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றால், அது மிகவும் நியாயத் தவறாகும் என்றுகூட நான் சொல்வேன். அம்மாதிரி நடுத்தரக் குத்தகைதாருக்கு நஷ்ட ஈடு கொடுத்து அவர்களுக்குச் சலுகை கொடுப்பதென்றால், இந்தச் சட்டம் அவ்வளவு முறையாகாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நஷ்ட ஈடு என்று சொன்னால், அவர்களிடையே 3 வருஷ காலத்திற்கு அல்லது 5 வருஷ காலத்திற்கு ஒரு உடன்படிக்கை ஏற்பட்டிருக்கலாம். அப்பொழுது அவர்கள் கோர்ட்டிற்கு போய் அமுல் செய்யலாம். அம்மாதிரி லீகல் ரைட்ஸ் அவர்களுக்கு வந்திருக்கலாம். அப்பொழுது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியிருக்குமே தவிர வேறு ஒன்றுமில்லை.

SRI C. MUTHIAH : இதுவரையிலே அவர்கள் வைத்திருந்தாலும்கூட, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கின்ற நிலை லீகல் நிலைக்கு வேண்டுமானால் ஒத்துக்கொள்ளவேண்டுமே தவிர, கொள்கை அளவுக்குப் பார்த்தால் அது பொருந்தாது என்பதையும் நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இரண்டு வருஷங்களுக்கு வேண்டுமானால், "ரிஜிஸ்ட்ரேஷன் பீரியட்" முடியும் வரையில் சாகுபடியாளர்களுக்கு கொடுத்துவிட்டு அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காத நிலைமைக்கு சட்டத்தை திருத்த முடியுமா என்பதை ஆராயவேண்டும். நஷ்ட ஈடு கொடுப்பது என்றால், அவர்கள் அதிக ஆதாயத்தை தேடும்படியான நிலைமை ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும். சூழ்நிலை அப்படி இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது மசோதாவில் கண்டிருக்கிறபடி 30 எக்கர் என்று வைத்திருந்தாலும்கூட, "ஜாயின்ட் பாமிலி" வைத்திருக்கக் கூடிய நபர், தான் சொந்தமாக கஷ்டப்பட்டு சம்பாதித்து வாங்கிய நிலம் 30 எக்கர் வைத்திருந்தால், அவர் தனியாகப் போகவேண்டுமென்று நினைத்தால், பாக்கி இருக்கிற குடும்பத்தை விட்டுவிட்டு, அவர் தனியாகப் போகலாம். தனியாக கஷ்டப்பட்டு சம்பாதித்த 30 எக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு பாக்கியிருக்கிற நிலத்தை குடும்பத்திற்கு வைத்துவிட்டுப் போகலாம் என்று இருப்பதில் அவர் காலத்திலேயே அவர் எந்த விதத்தில் சம்பாதித்து வாங்கினார் என்பதைப் பார்க்கவேண்டிவரும். சில கொடுக்கல், வாங்கல் மூலம் நிலம் வாங்கியிருக்கலாம், தொழில் மூலம் வாங்கவேண்டிய நிலைமை இருக்கலாம், வரியை ஏமாற்றுவதற்காக சில இடங்களில் வாங்கப்பட்டிருக்கலாம். ஆகவே, ஏற்கனவே ஜாயின்டு பாமிலியாக இருந்தது மைனர்களுக்கு பிரிவினை செய்து அவர்கள் ஜாயின்டு பாமிலி இல்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகும்கூட, நாம் அவர்களுக்கு அதிக சந்தர்ப்பத்தைக் கொடுத்தும்கூட, அவர்களுக்கு விதி விலக்கு கொடுக்க வேண்டுமா என்பதை அரசாங்கம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். விதவைகளுக்கு அம்மாதிரி சலுகை கொடுத்திருப்பது மனச்சாட்சிக்கு பொருந்தும் என்றாலும், தனிப்பட்டவர்கள் தாங்கள் சொந்த முயற்சியால் நிலம் வாங்கியிருந்தால், அவர்கள் குடும்ப நிலத்தில் தங்களுக்குள்ள உரிமையை விட்டுக்கொடுத்தால் அவர் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவராக கருதப்படமாட்டார் என்று அவர்களுக்கு விட்டுக்கொடுப்பது என்று நினைத்தோமானால் அது மிகவும் தவறாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

கடைசியாக "டெபனிஷன்" கொடுத்திருப்பதைப் பார்த்தால், "பாமிலி டெனன்ஸி ஸீலிங் ஏரியா", "இண்டர்மீடியரி" இவைகளுக்கெல்லாம் கொடுத்திருக்கிற டெபனிஷனை மாற்றி அமைக்காவிட்டால், இந்த சட்டத்தினுடைய பலனை பூரணமாக விவசாயிகள் அடையமுடியாது என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவாதத்தில் நிலச் சீர்திருத்த மசோதாவின் பேரில் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் கடந்த 7, 8 ஆண்டு காலமாக கொண்டுவரப்படும், கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டு இந்த ஆண்டிலே கடந்த 6-ம் தேதி இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தைத் துருவிப் பார்த்தால் சாதாரண உழவர் பெருங்குடி மக்களுக்கு இந்த சட்டத்தின் மூலமாக என்ன நன்மைகள் எதிர்ப்பார்க்கப்பட்டனவோ அந்த நன்மைகள் இஞ்சித்தேனும், சிறிதேனும் அவர்களுக்கு



ஏற்பட இருப்பதாக என்னால் பார்க்க முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில், பல பேர்கள் நில உச்ச வரம்புச் சட்டம் என்ன, புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்த்தோம். இப்பொழுது அந்தப் புலி வந்தேவிட்டது. ஆனால் அது உயிரோடு இல்லாமல் புலித்தோல் போர்த்திய பொம்மையாகத் தான் இங்கே கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் புலிக்கு உயிர் இருப்பதாக என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. இந்த மசோதா கொண்டுவரப்படும் நோக்கங்களும் காரணங்களும் என்ற வகையிலே அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது என்னவென்றால் நில உடைமையில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் இது என்பது தான். ஆனால் இந்த மசோதாவை இந்த மன்றத்தில் பிரேரேபித்துப் பேசுகிற காலத்தில் காங்கிரஸ்காரர்கள் பல கூட்டங்களிலும், பல கான்பரென்ஸ்களிலும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டார்கள். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதையும், டெனன்டுகளுக்கு, குத்தகை சாகுபடியாளர்களுக்கு அந்த நிலத்தினுடைய உரிமை வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையையும் ஆவடி காங்கிரஸ், நாக்பூர் காங்கிரஸ் கூட்டங்களில் ஒப்புக் கொண்டிருக்கிறோம் என்ற நிலைமையையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவைகளை எல்லாம் பார்த்தால், இந்தச் சட்டத்தின் மூலம் சாகுபடியாளர்களுக்கு நிலம் உரிமையாக்கப்படுகிறதா, அல்லது விவசாயத்தில் நேரிடையாக உழவுத் தொழில் செய்து தினக் கூலிக்காக வேலை செய்கின்றவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்படுகிறதா என்று பார்த்தால், இரண்டும் இல்லை. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய சென்னை ராஜ்யத்தில் எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்பதைக் குறித்து நாங்கள் புள்ளி விவரங்கள் சேகரிக்கிறோம் என்று. அதுவும் குறிப்பாக $12\frac{1}{2}$ ஸ்டான்டர்டு எக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் விவசாய வருமான வரி கொடுக்கவேண்டுமாதலால், பெரிய விவசாயிகளுடைய புள்ளி விவரங்கள் அரசாங்கத்திற்கு உறுதியாகக் கிடைத்திருக்கும். அப்படியிருக்குமானால் இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டால் எவ்வளவு உபரி நிலம் இருக்கும் என்பதை அரசாங்கம் உறுதியாகச் சொல்ல முடியும். ஆனால், இதைப்பற்றி ஏன் சொல்லவில்லை என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த 4, 5, ஆண்டு காலமாக நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருப்பதன் காரணமாக ஏற்கனவே தாராளமாக நிலம் வைத்திருப்பவர்கள் இந்த சட்டத்தினுடைய நோக்கத்தை முழுக்க முழுக்க முறியடிக்க நிலங்களையெல்லாம் பிரித்து சொந்தக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் எழுதி வைத்துவிட்டார்கள் என்பதை நாம் உண்மையாக ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும். எனக்கு முன் பேசிய முத்தையா அவர்கள் சீர்காழி மாவட்டத்தில் ஏறக்குறைய 20,000 பேர்களுக்கு பட்டாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவர்கள் பெரும்பாலும் நிலம் இல்லாத ஏழைகள்தான், குத்தகைக்காரர்கள் தான் என்று குறிப்பிட்டார்கள். சீர்காழி மாவட்டத்தில் வேண்டுமானால் அம்மாதிரி நிலைமை இருக்கலாம். மற்ற இடங்களில் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், ஏற்கனவே 50 எக்கர், 60 எக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் தங்களுடைய உறவினர்கள், தங்களுடைய குடும்பத்தார்கள் பெயரிலே நிலத்தைப் பிரித்து எழுதி வைத்துக்கொண்டு, இந்தச் சட்டத்தின் நோக்கத்தை முழுக்க முழுக்க முறியடிக்கவேண்டுமென்று பார்க்கிறார்கள். குறிப்பாக கடந்த ஓராண்டு, ஈராண்டு காலத்தில் 30 ஸ்டான்டர்டு ஏகர் உச்ச வரம்பாக நிர்ணயிக்கப்படும் என்பதை அமைச்சர்கள் வாயிலாக பலதடவை சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆகவே எந்த அளவுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படும் என்பது எல்லோருக்கும் முன்கூட்டியே தெரிந்து அவர்கள் செய்திருக்கும் ஏற்பாட்டின் காரணமாக, இந்த சட்டத்தினால் எந்த விதமான பலனும் ஏற்படப்போவதில்லை என்பதை இந்த நேரத்தில் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தவிர, 30 எக்கர் உச்ச வரம்பு என்று கூறப்படும்பொழுது உண்மையிலேயே ஏற்கனவே எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளபடி நிலத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாத அளவுக்கு, இந்த உச்ச வரம்பு வந்திருக்கிறது. பத்து ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் நிலவரி செலுத்தினால் அது ஒரு ஸ்டாண்டர்டு எக்கர் என்று கொள்ளவேண்டும். அதாவது சுமார் ரூ. 300-க்கு மேல் வரி செலுத்துகிறவர்களைத் தான் இந்த சட்டம் பாதிக்கும். மற்றவர்களைப் பாதிக்காது. 300 ரூபாய்க்கு மேல் வரி கட்டக்கூடிய அளவுக்கு நிலம் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகத் தான் இருக்கும். இந்த மசோதாவில் யாருக்குப் பலன் என்றால், நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டாம் என்று சொல்லக்கூடியவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு உச்ச வரம்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்பட முடியாத நிலைமையில் இந்த உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு முறையில் இந்தச் சட்டத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு எக்கருக்கு 10 ரூபாய் நிலவரி கொடுக்கக்கூடியவர்களுக்கு நிகர வருமானம் ஒரு எகருக்கு 250 அல்லது 300 ரூபாய் கிடைக்கக்கூடும். ஆகவே 30 ஸ்டாண்டர்டு எகர் வைத்திருப்பவர்களுக்கு எல்லாச் செலவுகள் போக நிகர வருமானம் ஏறக்குறைய 10,000 கிடைக்கும். பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் நிகர வருமானம் வரக்கூடியவர்களுக்கு இந்த உச்ச வரம்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மற்ற ராஜ்யங்களிலே இருக்கக்கூடியதைப் பார்த்தால் ரூ. 3,000, 4,000, 5,000, 6,000 நிகர வருமானம் வரக்கூடிய அளவிலே தான் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதே தவிர 10,000-க்கு மேல் நிகர வருமானம் வரக்கூடியவர்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஏனைய ராஜ்யங்களிலெல்லாம் இந்த நில உச்ச வரம்புச் சட்டம் ஏற்கனவே கொண்டுவரப்பட்டு, செலக்ட் கமிட்டி ஸ்டேஜிலோ அல்லது செலக்ட் கமிட்டி அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிற நிலையிலோ இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையிலும், பல துறைகளில் அது முன் நின்றாலும், இந்தத் துறையில் நாம் இறுதியாகச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அதுவும் 30 எக்கர் உச்ச வரம்பு என்று வைத்திருப்பது உண்மையிலே நியாயமானது அல்ல என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒருவனுக்கு எவ்வளவு நிலம் அனுமதிக்கிறது என்பதை அமைச்சரவர்கள் காரணத்துடன் சொல்ல வேண்டும். சொந்த உழைப்பால் எந்த அளவுக்கு ஒருவன் நில சாகுபடி செய்ய முடியும் என்பதை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தின் முறைகளைப் பார்த்தால், ஏற்கனவே உள்ள (Land system) லாண்டு சிஸ்டத்தில் என்னென்ன தவறுகள், குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறோமோ, அவைகள் இந்தச் சட்டத்தால் நீடித்துத்தான் இருக்கும் என்பதைத்தான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தவறுகளை, குறைபாடுகளை சட்ட மூலமாகச் செய்கிறோம். அவ்வளவுதான். இப்பொழுது பார்த்தால், 30 எக்கர் வைத்திருப்பவன் கட்டாயம் 50 அல்லது 60 கூலியாட்கள், பண்ணையாட்கள் வைத்துக்கொண்டுதான் விவசாயம் செய்யமுடியும். அல்லது 10 எக்கருக்கு மேற்பட்ட நிலங்களை குத்தகைக்குத் தான் விட்டாக வேண்டும். ஏற்கனவே நாம் இண்டர்மீடியரிகள், உழைப்பவனுக்கும் சொந்தக்காரனுக்கும் இடையே, யாரும் இருக்கக்கூடாது என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும், திட்டக் கமிஷனும் வலியுறுத்தியிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முப்பது எக்கருக்கு உச்ச வரம்பு என்று வைப்பதினால், இடையிலே உள்ளவர்கள், வருமானத்தைச் சாப்பிட, திட்டக்கமிஷனின் நோக்கத்தை முறியடிக்கக் உதவுமே தவிர, அது மக்களுக்கு நன்மை பயக்காது என்பதை வலி



யுறுத்த விரும்புகிறேன். ஆகவே இந்த உச்ச வரம்பை 10 அல்லது 15 எக்கராக வைத்தால் போதும். அப்பொழுதுதான் ஒரு நல்ல விவசாயி தன் குடும்பத்தினர்களைக் கொண்டே விவசாயம் செய்ய ஏதுவாக இருக்கும். முப்பது எக்கர் என்றால், நிச்சயமாக குத்தகைதாரர்களை நம்பித் தான் ஆகவேண்டும். ஆகவே, இந்த வரம்பைக் குறைக்கவேண்டும் என்று உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்திலே மிக மோசமான பகுதி விதிவிலக்குதான். விதிவிலக்கு என்ற பெயரிலே, ஏராளமான நிலங்களுக்கு சட்டத்தின் கீழ் வராமல் இருக்கும் நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது சட்டத்தின் நோக்கத்தைக் கிஞ்சித்தேனும் பயன் உள்ளதாகச் செய்யாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மக்களுக்கும் நன்மை பயக்காது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கல்விக் கூடங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது கொள்கையளவில் ஒப்புக் கொள்ளக் கூடியது என்றாலும், நடை முறையில், இது நியாயமானதுதானா, சரியானதுதானா, என்று பார்க்கவேண்டும். பலர் இன்று கல்விக் கூடங்களுக்கு என்று நிலங்களைக் கொடுத்துவிட்டு, அவற்றைத் தாங்களே டிரஸ்டிகளாக இருந்து கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் சட்டத்திலிருந்து தப்புவதற்கே கல்விக் கூடங்களுக்குக் கொடுக்க முன் வருகிறார்களே தவிர, அதிலிருந்து வரும் லாபத்தில் கல்விக் கூடத்திற்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதைச் சற்று நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் அதிகப்படியாக அந்தக் கல்விக் கூடங்களுக்கு கொடுக்கிறார்கள் என்பதில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, கல்விக் கூடத்திற்கு என்று கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு அதில் ஏதாவது குறைகள் ஏற்பட்டால் அதற்கென்று நஷ்ட ஈடு கொடுத்து கல்விக் கூடங்களுக்கு உதவி செய்யலாமே தவிர, அடியோடு அந்த நிலங்களை உச்ச வரம்பிலிருந்து எடுத்து, அந்தச் சட்டத்தில் ஈடுபடுத்தாமல் இருப்பது நியாயம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கூட்டுறவு சங்க விவசாயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே, கூட்டுறவு விவசாயம் வைத்திருந்தால், எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்களோ, அதைத் தனித்தனியாக வைத்துப் பார்த்து மொத்தமாக இவ்வளவு நிலம் என்று வைத்திருக்கிறார்களே தவிர, ஒரேயடியாக கூட்டுறவு விவசாயம் என்றாலே விதிவிலக்கு என்று செய்யவில்லை. இங்கே, நாம் கூட்டுறவு விவசாயம் என்றவுடனேயே அடியோடு விதிவிலக்கு என்று செய்திருப்பது தவறு.

அடுத்தபடியாக, ஹில் ஏரியா நிலங்கள். நீலகிரி, ஏற்காடு, கொடைக்கானல் முதலிய மலைப் பிராந்திய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் ஒருவர் சொன்ன பிரகாரம், அந்த நிலங்களுக்கு உச்ச வரம்பு இல்லையென்றால், கீழே உள்ளவர்கள் எல்லோரும், நீலகிரிக்கும், ஏற்காட்டிற்கும், கோடைக்கும் வந்துவிடுவார்கள், அங்கே குடியேறிவிடுவார்கள், எங்களுக்குத் தொந்திரவாகப் போய்விடும் என்று சொன்னதுபோல் ஆகிவிடக் கூடும். என்ன காரணத்திற்காக விதிவிலக்கு அளிக்கிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கே, காப்பி, டீ, தேயிலை போன்ற பயிர்கள் விவசாயம் செய்கிறார்கள். அங்கே எல்லோரும் பெரிய, பெரிய தோட்டங்கள் தான் வைத்திருக்கிறார்கள் என்பதில்லை. சிறிய தோட்டம் வைத்திருப்பவர்களும் அதிக லாபம் அடைகிறார்கள். ஆகவே, சிறிய தோட்டங்களாக வைத்து நடத்த முடியாது என்பதில்லை. ஆகவே, அங்குள்ள நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பதன் அவசியத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, விதிவிலக்கு அளிப்பது நியாயம் இல்லை.

அதே போல பழத் தோட்டங்களுக்கும், பாக்குத் தோட்டங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கிறார்கள். சாதாரணமாக கிராமப் புறங்களிலே, ஒரு எக்கர் பாக்கு வைத்திருப்பவர்கள் கூட, ரூ. 2,500, 3,000 என்று நிகர

வருமானம் அடைகிறார்கள். இன்று பாக்குத் தோட்டம் போட்டு, 6, 7, ஆண்டுகளில் பலன்கொடுக்க ஆரம்பிக்கும் காலத்தில், இன்றைக்கு இருக்கக் கூடிய விலை வரம்பில், சாதாரணமாக ஒரு எக்கருக்கு ரூ. 3,000 வரை நிகர லாபம் கிடைத்து விடுகிறது. உண்மையாக இந்த சட்டத்திலிருந்து எதற்காக, என்ன காரணத்திற்காக விதிவிலக்கு அளிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. மற்றவர்களும், நஞ்சையாக இருக்கும் நிலங்களையும், இம்மாதிரிப் பாக்குத் தோட்டங்களாக மாற்ற முயற்சிப்பார்கள். ஆகவே, அது சட்டத்தின் நோக்கத்தையே முறியடிக்க வழிவகை செய்த தாக முடியும். இந்த விதிவிலக்கு நியாயமானது அல்ல. ஆகவே, இதே மாதிரிப் பழத் தோட்டங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டிய அவசியமே இல்லை.

அடுத்தபடியாக ஆடுமாடுகளுக்கு மேய்கால் நிலங்களுக்காக கிராமப் புறங்களில் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. இப்பொழுது சாதாரண விவ சாயிகள் 30, 40, மாடுகள் வைத்திருக்கிறார்கள். இந்த நில உச்ச வரம்பு சட்டத்தை முறியடிக்க, இன்னும் பல மாடுகளைச் சேர்த்துக் கொண்டு மேய்கால் நிலம் என்று கேட்பார்கள். தங்கள் மாடுகளை மட்டுமோ, பக்கத்தில் இருப்பவர்களின் மாடுகளையும் சேர்த்தோ அவர்கள், இவை களின் தீவினத்திற்காக 20 எக்கர், 30 எக்கர் நிலம் வேண்டும் என்று கோருவார்கள். நாளைக்கு லாண்டு போர்டுக்கு விண்ணப்பம் போடும்போது அப்படி அவர்கள் செய்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை. இதில் ஒரு குறிப்பு இருந்தாலும் நல்லதாக இருக்கும். ஏற்கனவே யார் யார் மாடு களின் மேய்ச்சலுக்காக நிலம் வைத்திருந்தார்களோ அவைகளுக்கு மட்டும் விலக்கு அளிப்பதானாலும்சரி என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால், ஒரேயடி யாக விலக்களிப்பது துர்வினியோகத்தில்தான் கொண்டு விடும் என்று தோன்றுகிறது.

இதிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கரும்பு விவசாயம் பற்றி. அதற்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். சட்ட சபையிலேயே முன்பு குறிப்பிடப்பட்டது, "தஞ்சை ஆரூரான் சர்க்கரை ஆலை, இம்மாதிரி வர விருக்கும் சட்டத்தை முறியடிக்கவே செய்யப்படுகிறது" என்று. சென்ற சில ஆண்டுகளில், பெரிய நிலச்சுவான்தார்கள், அந்தக் கரும்பு ஆலைக்கு சப்ளை செய்வதற்காக, கரும்பு விவசாயத்திற்கு மாற்றியிருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த ரகஸ்யம். நான் சொல்வது தவறாக இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியிலே உள்ள பெரிய நிலச்சுவான்தார் கள், கரும்பு என்பது இன்டஸ்ட்ரீ என்று வந்து விடுவதால், கரும் பாலைக்கு அளிக்க வென்று கரும்பு சாகுபடி செய்து வருவது நடக்கிறது. ஆகவே, அதற்கு என் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது பார்க்கிறோம், தென்னாற்காடு மாவட்டத்திலே, நெல்லிக்குப்பம் கரும்பாலைக்கு, கரும்பு அளிக்க, 2, 3 எக்கர்கள் வைத்திருப்பவர்கள்கூட, விண்ணப்பங்கள் கொடுக்கிறார்கள். அதில் அவர்களுக்கு ரூ. 2,000 அல்லது 3,000 லாபம் கிடைக்கும் என்ற காரணத்தினால் தான். ஆகவே, இந்தக் கரும்புச் சாகுபடிக்கு என் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பது தெரியவில்லை.

கடைசியாக நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி ஒரு சில வார்த்தைகள். நிகர பேர் ரெண்டைப் போல், 12 மடங்கு என்று சொல்லும்போது, ஒரு எக்கருக்கு ரூ. 300 லாபம் என்று வைத்துக்கொண்டால், நஷ்ட ஈடு கொடுப்பது ரூ. 3,000 அல்லது 4,000 ஒரு எக்கருக்கு என்று . . . . .

1-30 p.m. DEPUTY SPEAKER : The hon. Member may continue his speech after lunch. The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose.



**[After lunch—3 p.m.]**

DEPUTY SPEAKER: The hon. Member Sri M. P. Subramaniam may continue his speech.

* SRI M. P. SUBRAMANIAM : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, காலையில் நான் நஷ்ட ஈடு கொடுப்பதைப்பற்றி குறிப் பிட்டுக்கொண்டிருந்தேன். நம்முடைய ராஜ்யத்தில் தான் கூடுதலான நஷ்ட ஈடு கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியேதான் ஒப்புக் கொண்டாக வேண்டியதாக இருக்கிறது. அதாவது நிகர வருமானத்தை விட 12, அல்லது 10 அல்லது 9 மடங்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால் எக்கருக்கு மூவாயிரம் ரூபாய் வரையில் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதாக வருகிறது. நிலச் சீர்திருத்தச் சட்டம் வரப்போகிறது என்ற காரணத்தால் இப்பொழுது நிலத்தின் விலை எக்கர் ஒன்றுக்கு 1,500 அல்லது 2,000 அல்லது 2,500 என்று தான் விற்கப்படுகிறது. இந்த நிலையில் நஷ்ட ஈடு 3,000 ரூபாய் எக்கர் ஒன்றுக்கு என்று சொல்வது சரியல்ல. இதன் கருத்தைப் பார்த்தால் பெரிய நிலச்சுவாந்தார்களுடைய நிலத்தை சர்க்காரே வாங்கிக்கொண்டு பணமாகக் கொடுத்து உதவி செய் வதாக இருக்கிறது. ஆகவே நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதன் பயன் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே நஷ்ட ஈடு கொடுப்பதை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாக ஆகிறது. அதே நேரத்தில் மற்ற மாநிலங்களில் கொடுக்கக் கூடிய நஷ்ட ஈட்டைக் கவனித்தால் அங்கே மிகக் குறைவாகக் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. அஸ்ஸா மைப் பொறுத்த வரையில் அங்கே நஷ்ட ஈடு எப்படிக் கொடுக்கப்படுகிறது. என்றால் நிலவரியைப்பொறுத்து அதற்கு ஐம்பது மடங்கு என்று கொடுக்கப்படுகிறது. உதாரணமாக எக்கருக்கு வரி பத்து ரூபாய் என்றால் அதற்கு ஐம்பது மடங்கு அதாவது 500 ரூபாய் தான் நஷ்ட ஈடாகக் கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே பம்பாய் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்கே 100 மடங்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் ஆயிரம் ரூபாய் தான் கிடைக்கும். பீகார் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்கே இன்னும் குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. அங்கே முதல் க்வாலிட்டி நிலத்திற்கு 1,500 ரூபாய் தான் கொடுக்கப்படு கிறது. மற்ற வகையில் அங்கே 800 ரூபாய்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்படு கிறது. அதைப்போலவே மத்திய பிரதேசத்தில் ரூ. 500-ம் நில வரியைப் போல இருபது மடங்கு என்று சொல்லப்படுகிறது. அதாவது 720 ரூபாய் நஷ்ட ஈடாகக் கொடுக்கப்படுகிறது. இப்படி பல மாநிலங்களில் ஏற் பட்டிருக்கிறது. ஆனால் நம் சட்டத்தில் 12 அல்லது 11 அல்லது 10 அல்லது 9 மடங்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தை வாங்கிக்கொடுக்கும்போது பெரிய நிலச்சு வாந்தார்களுடைய நிலத்தை சர்க்காரே அதிகப்படியான பணம் கொடுத்து வாங்கிக்கொடுப்பதாகத்தான் இருக்கிறது. இதன் மூலமாக பெரிய நிலச் சுவாந்தார்கள் சுலபமாக பணம் சம்பாதிக்கக்கூடிய அளவில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. அவர்களுக்கு சர்க்காரே உதவி செய்வதாக ஆகிறது. அந்த முறையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

மற்றொன்று ஆப்சண்ட்டி லாண்ட்லார்டு. நிலத்தின் சொந்தக் காரர் தானாகவே சாகுபடி செய்யாமல் வேறு தொழிலில் ஈடுபட்டிருந் தால் அவரை ஆபசண்ட்டி லாண்ட்லார்ட் என்று குறிப்பிடப்பட வேண்டும். சிலர் வேறு தொழில்களில் ஈடுபட்டு தன்னுடைய குடும்பத்தில் யாரை யாவது வைத்து அந்த நிலங்களை சூப்பர்வைஸ் செய்யச் சொல்லலாம். அதாவது சென்னையில் இருந்து கொண்டு தஞ்சையில் சாகுபடி செய்து கொண்டிருக்கலாம். ஆனால் மற்ற ராஜ்யங்களில் இதற்கு எப்படி டெபனிஷன் கூறுகிறார்கள் என்றால் நிலச்சொந்தக்காரர்கள் கிராமத்தி லேயே தங்கி இருக்க வேண்டும், அல்லது அந்தக் கிராமத்தின் சுற்று வட்டாரத்திற்கு ஐந்து அல்லது பத்து மைலுக்குள் வசிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விதி அங்கேயெல்லாம் செய்யப் பட்டிருக்கிறது. அதே மாதிரி இங்கே விதி செய்வது நலமாக இருக்கும்

என்று எனக்குத் தோன்றுகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் சென்னையில் இருந்து கொண்டு ஆண்டு ஒரு முறை கிராமத்திற்குச் சென்று மகசூல் காலத்தில் கிராமத்திற்குச் சென்று சூப்ரவைஸ் செய்து விட்டால் போதும் என்று ஆகிறது. இப்படிப்பட்டவரும் சொந்த சாகுபடிக்காரர் என்ற முறையில் வந்து விடுகிறது. ஆகவே இந்த டெபனிஷனையும் மாற்றி அமைக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

இந்தச் சட்டத்தில் உச்ச வரம்புக்குமேல் உபரி நிலம் எப்படி அளிக்கப்படும் என்பதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இந்தச் சட்டத்தின் முக்கியமான நோக்கமே அதுதான். ஆகவே நோக்கத்திற்கு மாருக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. உச்ச வரம்பு கட்டி உபரியாகும் நிலத்தை எப்படி யாருக்குப் பகிர்ந்து அளிப்பது என்பதைக் குறிப்பிட்டிருக்கவேண்டும். அதுதான் முக்கியமான அம்சம். முடிவில் விதிகள் செய்யும்போது அதைப்பற்றித் தீர்மானிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சட்டத்திலேயே இருக்க வேண்டியது அவசியம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே விதிகளின் மூலம் குறிப்பிடாமல் சட்டத்திலேயே இருக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவு சாகுபடி முறையைப்பற்றிக் குறிப்பிடும்போது இதன் அவசியத்தைப்பற்றி பரவலாக பல ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. அதைப்பற்றி ஒன்றுமே இந்தச் சட்டத்தில் குறிப்பிடவில்லை. கூட்டுறவு சாகுபடி முறையை சிலர் எதிர்க்கிருர்கள் என்ற காரணத்திஞல் அரசாங்கம் பயந்துகொண்டு அதைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்கிருர்களோ என்று தோன்றுகிறது. கூட்டுறவு சாகுபடி முறையில் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து ஏன் அந்த முறையை தைரியமாகக் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். ஏன் அதை தைரியமாகக் கொண்டு வரவில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?

SRI M. P. SUBRAMANIAM : கூட்டுறவு முறை சாகுபடியை நான் அவசியம் ஆதரிக்கிறேன். ஒவ்வொரு நிலத்தையும் கூட்டுறவு சாகுபடி முறைக்குக் கொண்டு வரவேண்டும் என்பது என் அபிப்பிராயம். உபரி நிலத்தில் அவசியம் கொண்டு வரவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகை காண வேண்டும். உபரி நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும்போது நிச்சயமாக கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய முன் வருவார்கள். ஒவ்வொருவருக்கும் நாம் இப்பொழுது புதிதாக உரிமை வழங்குகிருேம். அதிக்ப்படியான பலன் அடையவேண்டுமாஞல் அதற்கு வேண்டியது கூட்டுறவு சாகுபடி முறைதான். ஆகவே அதற்கு இந்தச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக நான் குறிப்பிட வேண்டுவது என்னவென்ருல் நில உடைமையில் மட்டும் நாம் இப்பொழுது ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வருகிருேம். நிலத்தைப்பற்றி மட்டும் எடுத்துக் கொண்டால் மக்களிடத்தில் "ப்ரஸ்ட்ரேஷன்" அதாவது மன அதிருப்தி ஏற்படும். அதற்கு இடம் கொடுக்காமல் அரசியல் சட்டத்தில் செல்வம் ஒரு சிலர் கையில் குவியக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று கனம் அமைச்சர் குறிப்பிட்டது போல் மற்ற துறைகளிலும் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வர வேண்டும். ஒவ்வொருவருக்கும் முப்பது எக்கருக்கு மேல் இருக்க்கூடாது என்று சட்டம் கொண்டு வரும்போது அதே நேரத்தில் சிலர் 100 வீடுகளுக்கு மேல் வைத்துக்கொண்டு ஐயாயிரம் பத்தாயிரம் என்று சம்பாதித்துக்கொண்டு வருகிருர்கள். அதைப்போலவே சென்னை போன்ற பல நகரங்களில் சம்பாதித்து வருகிருர்கள். அதைப் போலவே பல தொழில்களை நடத்தி லட்சக்கணக்காக சம்பாதித்துக்கொண்டு வருகிருர்கள்.



நில உடைமையில் மட்டும் உச்ச வரம்பு கொண்டு வந்து மற்றத் துறையில் இதை போன்றச் சட்டம் கொண்டுவரப்பட வில்லை என்ருல் நாம் மற்றவர்களை கொள்ளையடிக்க அனுமதிப்பது போல் ஆகிறது. உடைமையில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்ஞல் எல்லாத் துறையிலும் அது இருக்கக்கூடாது. அதற்காக உடனடியாக எல்லாத் துறைகளிலும் அப்படி ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருப்பதற்கு வழிவகை காண வேண்டும். இதைத் தொடர்ந்து அவைகளுக்கும் தக்க சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால் தான் அரசியல் சட்டத்திற்கு ஒத்ததாக இருக்கும், கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல. ஆகவே மற்ற துறைகளிலும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இருப்பதற்கு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்ததைப்போல் உடனடியாக அதற்கும் கொண்டு வரவேண்டும். கடைசியாக நான் சொல்ல வேண்டுமென்பது என்னவென்ருல் இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை யாருக்குப் பலன் அளிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு கொண்டுவருகிருேமோ அவர்களுக்கு எந்த விதமான பலனும் கிடைக்கப்போவதில்லை என்ற என் அபிப்பிராயத்தைக் கூறிக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI S. RANGANATHA MUDALIAR: Mr. Deputy Speaker, this is one of the most controversial pieces of legislation, about the wisdom and need for which there is sharp division of opinion in the country. Recently a local daily characterised this legislation as pernicious and as a charter of expropriation. Much of the criticism in my humble opinion is partly due to ignorance, partly due to prejudice and partly due to suspicion of the motives of those who sponsor this kind of legislation. There can be no question and there can be no two opinions with regard to the usefulness and the beneficial effects of a legislation like this. The object of this legislation is to fix the maximum limit of individual ownership of land. How best it can be secured and what are the kinds of benefits that will flow from it are matters that have been thrashed out more than once by a number of speakers on more than one platform. That there are benefits, there can be no doubt. It is believed that this legislation will undoubtedly benefit agricultural production and it is also felt that the wider the scope of legislation and the more equitable the distribution of land, the more it will tend towards the establishment of a socialistic pattern of society in the rural sector of our economy, and ensure social and economic justice to the rural population. As the Hon. Minister observed this morning, it will produce among the small landholders the magic of ownership which will convert sands into gold. It is all true. But why should there be so much opposition to this legislation? Opponents of measures like this say that this fixation of ceiling and the determination of the size of the family holding will not solve the problem of the landless since the extent of land available will be utterly inadequate to quench the land hunger of the landless. It is also stated that this kind of legislation will affect agricultural production in two ways. One is, whereas large holdings will lend themselves to scientific agriculture, fragmentation which is the result of fixation of ceiling, will lessen the productivity of the land. Also persons who may be given lands—small landholders—will not have the resources even to cultivate the lands. Another objection is that the surplus that may be left over will not be sufficient for distribution among the landless. They say, it will introduce social discontent and conflict between those who have been given lands and those who have not been able to get any land, which will not be for the good of the country. Another

objection is that the surplus will be so little after all the big landlords have been allowed to dispose of their lands or to distribute them among their own kith and kin that it will not benefit any class of people. They fear, there will be no surplus left. Yet another objection is that distribution of small plots to the landless will result in the marketable surplus of agricultural produce being very little. It is also stated that the work involved in the distribution of lands and fixation of family holdings and other consequential measures will be beyond the administrative capacity of the Government to tackle. A further objection is that this Act will not be given retrospective effect. It is stated that it will come into force from the date of publication and it is asked : " What about lands which have been alienated in anticipation of this legislation ? " Unless the Government are prepared to give retrospective effect and bring within the scope of the Act all these alienations, I respectfully submit this Act will not really be beneficial. Another thing that requires the attention of the Government is, we have always been talking of a ceiling at the top. Is it not desirable to have ceiling on, as Bhave recently suggested, floor of ceiling. Why not have a floor ceiling whereby no one can have lands below a certain extent ? Then only everyone will come to possess land and will have the mental satisfaction that he is also having a piece of land. So, floor ceiling also seems to be necessary and necessary legislation has to be undertaken. The measure is attacked on the ground that it is expropriatory. The feelings of fear and the misgivings entertained by an intelligent and powerful section of the people are genuine. How are the Government going to allay those fears ? How are the Government going to bring within the scope of the Act hasty alienations and nominal alienations, that are effected in anticipation of this legislation ? These are important points for the Government to consider. If the Government are able to give satisfactory answers to these objections, then this measure will certainly confer real benefit upon the people. Otherwise, it will give rise to discontent. The advantages are many as the Hon. Minister indicated and I do not want to repeat them. But the objections have to be seriously taken into consideration by the Government and genuinely tackled. Thank you.

* **Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மசோதாவிலே பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அதுவும் முக்கியமாக பிற ராஜ்யங்களிலே ஏற்கனவே கொண்டுவரப்பட்ட மசோதாவிலே உள்ள குறைபாடுகளெல்லாம் நீக்கப்பட்டு நல்லமுறையிலே இந்த மசோதா அமைக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக இந்த மசோதாவிலே ரிட்ராஸ்பெக்ட் எபக்ட் கொடுக்கப்படவில்லை என்பது வரவேற்கத்தக்க ஒரு விஷயம். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் பலர் இது சரி அல்ல என்று குறைகூறினார்கள். ஆனால் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் அவசியம் இல்லை என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய தாத்பரியம் என்னவென்றால் டிசென்ட்ரலைசெஷன் பரவலாக இருக்கவேண்டும் என்பது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்பது நம்முடைய குறிக்கோள் அல்ல. ஆதலால் இந்த மசோதாவில் ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்படாமல் இருப்பதால் தவறு ஒன்றும் இல்லை.

ஜாயிண்ட் பேமிலியில் இருப்பவர்களுக்கு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஐந்து எக்கர் அதிகமாக கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பது மிகவும் தவிர்க்கக்கூடிய விஷயம். இது மாதிரி சீதனத்திற்காக 10 எக்கர் பெண்



களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு விஷயம் என்னவென்றால் டவுனிலே உள்ள சிறு நிலச்சுவான்தார்கள் விதிவிலக்குக் கொடுத்து நிவாரணம் அளிக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டது. இதற்குத் தக்கபடி இந்த மசோதாவில் சிறு நிலச்சுவாந்தார்களுக்கு 5 எக்கர் வைத்துக்கொள்ள புரோவிஷன் அளிக்கப்பட்டது ஒரு நல்ல அம்சமாகும். இதற்கு முன்பு பேசிய ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் அவர்கள் ஏன் இம்மாதிரி சலுகை கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டார்கள். ஆப்சென்டி லாண்ட்லார்டிசம் என்கரேஜ் பண்ணக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள், ஆனால் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் அவர்கள் அங்கேயே இருக்கவெண்டுமென்று தேவையில்லை. நம்முடைய சட்டத்திலேகூட Personal கல்டிவேஷன் பற்றி ஒரு ஷரத்து இருக்கிறது. அதே ப்ரொவிஷன் இருந்தால் போதும். அங்கேயே இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. இன்னும் சொல்லலாம் அங்கும் நிலத்தை உழ வேண்டுமென்றுகூட சொல்வார்கள். இம்மாதிரி எல்லாம் நிபந்தனைகள் போடக்கூடாது. ஆகவே 5 எக்கருக்கு குறைந்த நிலச்சுவாந்தார்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டது வரவேற்கக்கூடிய விஷயம். அதே சமயத்தில் ப்ரொபஷன் டாக்ஸ் கட்டினால் இந்த மசோதாவில் விதிவிலக்கு கிடையாது என்று சொல்லுகிறார்கள். வருஷத்திற்கு 900 ரூபாயாக இருந்தால் ப்ரொபஷன் டாக்ஸ் அதாவது மாதம் 80 ரூபாய்க்கு வருமானம் வந்தால்கூட ப்ரொபஷன் டாக்ஸ் கட்டக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் 3,000 ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்கள் ப்ரொபஷன் டாக்ஸ் கட்டினாலும் அவர்களுக்கு இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். இன்கம்டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் கொடுப்பவர்களைப் பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லப்போவதில்லை. ஆகையால் தக்கபடி இதை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

காம்பன்சேஷனை எடுத்துக்கொண்டால் 10 தடவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது அதிகம் என்று ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் இது 15 தடவையாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். காரணம் என்னவென்றால் ஒரு எக்கர் நிலமானது 5 ஆயிரம் ரூபாய், 6 ஆயிரம் ரூபாய் விற்கப்பட்டது. இப்பொழுது என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் இரண்டாயிரத்திற்குக் குறைவாகத்தான் இருக்கிறது. ஆகையால் இதற்கு 15 தடவையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜாயிண்ட் பேமிலி மெம்பர்கள் தொகையை குறைக்க ஏற்படலாம். இது 30 எக்கர் லிமிட்டுக்கு குறைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று ஒரு நல்ல ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மாதிரியாக கொஞ்சம் அதிகமான மெம்பர்கள் தொகை ஏற்பட்டால் அதிகமான நிலங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஒரு ஜாயிண்ட் பேமிலியை எடுத்துக்கொண்டால் ஹிண்டு பேமிலியைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் முஸ்லிம் ரெசிடன்ஸ் எடுத்துக்கொண்டால் அங்கு எல்லோருக்கும் பங்கு கிடையாது. ஏதோ மேலே இருக்கும் நபர்களுக்குத்தான் சில்ரன்ஸ் ரைட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்த மசோதாவில் ப்ரொவிஷன் செய்யப்போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். நான் செலக்ட் கமிட்டியில் இருப்பேன் என்று நினைக்கிறேன். ஆகையால் விஸ்தாரமாகப் பேசாமல் ஒருசில வார்த்தைகள் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷனுக்குச் சொந்தமான நிலங்களுக்கு அவசியம் சீலிங் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் ஏன் இப்படி ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷனில் தலையிட்டு பிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் மற்ற ராஜ்யங்களில் ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷனுக்கு மாத்திரம் பிரத்தியேகச் சலுகை கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் இப்படித் திடீரென்று சீலிங்கை போட்டிருக்கும் மனப்பான்மை எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் மற்ற ராஜ்யங்களிலே விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஆந்திரா,

[Sri V. Sankaran] [14th April 1960

ஒரிஸ்ஸா, பீஹார், பம்பாய், மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற ராஜ்யங்களிலே ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷனுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையிலே இருக்கும்போது நாம் இதுவரையில் இவ்வளவு நிதானமான மனப்பான்மையுடன் அந்த முறையிலே எற்படுத்தாததன் காரணம் எனக்குப் புரியவில்லே. கோவில் நிலங்கள் எல்லாம் பொதுவாக தஞ்சை ஜில்லாவில் சில பணக்காரர்கள் கையில் இருப்பது தான் இதற்குக் காரணம் என்று சில அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். இது மாதிரி மடங்களில்கூட ஊழல்கள் இருப்பதனல் இந்த ப்ரொவிஷன் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனல் இது போன்ற டிராஸ்டிக் டிரக்—தீவிரமான மருந்து—தேவையில்லே. எனென்ருல் **cure is worse than disease.** இதன் விளைவுகள் மிகவும் கூடுதலாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதற்கு நல்ல மாற்று தேவை. கோவில் நிலங்கள் இந்து ரிலிஜியஸ் கமிஷனர் கேட்டால் நிலங்களை ஆங்காங்கு உள்ள கிராமத்தில் இரண்டு அல்லது மூன்று எக்கர் நிலத்தை குத்தகைக்குவிட உத்திரவு போடலாம். அல்லது கூட்டுறவு முறையிலே பயிர் செய்வதற்கு அந்தந்த கிராமத்திலுள்ள மக்கள் ஒன்று சேர்ந்து பயிரிடுவதற்கு உத்திரவு போடலாம். இதைத் தவிர அறநிலையப் பாது காப்புச் சட்டத்திலே இதற்கான ஷரத்துக்கள் இருக்கின்றன. இது மாதிரியான ஊழல், விரயம் ஏற்பட்டாலும், அதை உடனடியாக நீக்குவதற்கு ப்ரொவிஷன் இருக்கிறது. இது மாதிரி மடத்தை எடுத்துக்கொண்டாலும், மடத்தில் ஏதாவது தவறு ஏற்பட்டால் பணம் விரயம் ஆனலும் அதை நீக்குவதற்கு ப்ரொவிஷன் செய்யப்பட்டிருக்கிறது.

3-30 p.m. இன்றுள்ள அமைப்பில், அஸிஸ்டென்ட் கமிஷனர், டெப்டி கமிஷனர், கமிஷனர் போன்ற அதிகாரிகளின் கைளில்தான் அதிகாரம் இருக்கிறது ஆலயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில். கடைசியில் அவர்களது "வீல் ஆப் அப்ரூவல்" வேண்டியிருக்கிறது. அது இல்லாவிடில் கோவில்களில் ஒன்றும் செய்ய முடியாது. இப்பொழுது, ஸர் சி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டியை சென்ட்ரல் கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள். ஆக, கோவில் நிலங்களை எடுத்துவிட வேண்டுமென்று சொல்வது, மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவது மாதிரித்தான். எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு கரடி தனது எஜமானனின் பேரில் மிகப் பிரியமாக இருந்தது. ஒரு நாள் அதன் எஜமானர் தூங்கிக் கொண்டிருந்தபோது அவர் தலையில் ஒரு ஈ வந்து உட்கார்ந்ததாம். அந்த ஈயை கரடி எவ்வளவு விரட்டியும் அது போகாது போகவே ஒரு கல்லை எடுத்து அந்த ஈயின் மேல் போட்டது. அந்தக் கல் யஜமானனைத் தாக்கவே அவர் இறந்து போய் விட்ட கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆகவே, இந்த ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷன்ஸ் நிலங்களை எடுத்து விட்டு அவைகளை சரிவர நடக்காமல் ஆக்குவது சரியல்ல. ஆனல் இதற்கு ஒரு பதில் சொல்லலாம். அப்படி அதன் நிலங்களை எடுத்து ; விட்டாலும்கூட அதன் நெட் இன்கம்-த்தை கொடுக்கிறோம் என்று சொல்லலாம். ரிலிஜியஸ் இன்ஸ்ட்டிட்யூஷன்களை சாதாரண "இண்டிவிடிவல்", அதாவது ஒரு தனிப்பட்ட மனிதனோடு "இக்வேட்" செய்வது என்பது பொருந்தவே பொருந்தாது. சாதாரண மனிதனின் வருவாயைக் கட்டுப்படுத்தலாம். ஆனல் ஒரு மத ஸ்தாபனத்தின் வருவாயைக் கட்டுப்படுத்துவது என்பது சரியல்ல. அப்படிச் செய்யக் கூடாது. ஸ்தாபனங்களை எடுத்துக் கொண்டால், பொதுவாக சமுதாயம் வளர வளர ஸ்தாபனங்களும் வளர வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது. எங்கள் ஊர் கோவிலை எடுத்துக் கொண்டால், அங்கு திருக்கல்யாணம் நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். முன்பு அதற்காக பதினயிரம் பேர்கள் வருவார்கள், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். ஆனல் இப்பொழுதோ லட்சக்கணக்கில் ஜனங்கள் வருகிறார்கள். ஆகவே அப்படி வரும் லட்சக்கணக்கானவர்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. முன்போல் ஏற்பாடு செய்தால் போதாது. ஆகவே, ஸ்தாபனங்கள் வளர்ந்து கொண்டு வரும்போது இன்றுள்ள இன்கம்-த்தை வைத்துக் கொண்டு அதைக் கட்டுப்படுத்துவது என்பது தவருன கருத்தாகும்.



14th April 1960] [Sri V. Sankaran]

உதாரணமாக அரசாங்கத்தை எடுத்துக் கொள்வோம். பத்து வருடங்களுக்கு முன்னல் அரசாங்கத்திற்கு 30 கோடி ரூபாய் வருமானம் வந்தது. ஆனல் இன்று அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானம் 80 கோடி ரூபாய். அந்நிலையியில் யாராவது முன்வந்து நான் 80 கோடி ரூபாய் ஆண்டுதோறும் தந்துவிடுகிறேன் அரசாங்கத்தின் வருவாயை நானே எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னல் ஆதற்கு அரசாங்கம் அல்லது நிதியமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்களா ? என்று கேட்கிறேன். இன்று 80 கோடி வருவது இன்னும் ஒரு பத்து வருடங்கள் கழிந்தால் 100 கோடியாகும். அதே போல் தான் பெரிய பெரிய கோவில்களின் நிலையும். பெரிய கோவிலை ஒரு "மினியேச்சர் அரசாங்கம்" என்று வேண்டுமானல் சொல்லலாம். அங்கும் அதன் நிர்வாகத்தைப் பார்ப்பதற்கு எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள், அரசாங்கத்தில் இருப்பதைப் போன்று.

(Mr. Speaker in the Chair)

ஆகவே இன்று, மத ஸ்தாபனங்களுக்கு கொடுக்க இருக்கிற வருமானமே என்றென்றும் இருக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஆகவே வருமானம் ஒரு நிலையில் இருக்கும்படியான விதத்தில் கட்டுப்படுத்தும் சட்டத்தை மத ஸ்தாபனங்களுக்கு அப்ளை செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவுதான் நிலம் அல்லது வருமானம் வைத்துக் கொள்ளலாம் என்று வரையறுப்பதைப் பார்த்தால் வீரபாகுப் பிள்ளை அவர்கள் கூறியதைப் போல், இனிமேல் மத ஸ்தாபனங்களுக்கு யாருமே தர்மம் செய்யக்கூடாது என்று இன்டயரக்டாக தடைபோடுவது போலாகும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய நிலையில் நிலச் சட்டங்கள் பல இருக்கின்றன. கோவில்களின் வருமானத்தைக் கட்டுப்படுத்துவதால் இனிமேல் யாருமே மத ஸ்தாபனங்களுக்கு தர்மம் செய்யக்கூடாது, செய்யவேண்டாம் என்று வரையறுப்பது போலாகும். 200 ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்வது, யாரும் இனிமேல் "என்டௌவ்" செய்யக்கூடாது என்று சொல்வது போலாகும். அப்படிச் செய்தால் ஆலயங்கள் மதஸ்தாபனங்கள் நாளாவட்டத்தில் நசித்து விடும். **To place the Religious Institutions at the mercy of the secular Government.** மத ஸ்தாபனங்கள், வகுப்புவாத மற்றதொரு சர்க்காரின் கையை எதிர்பார்த்து நிற்கும்படியானதொரு அமைப்பை ஏற்படுத்துவது தவறு என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பழைய காலத்தில் ராஜாக்கள், சமஸ்தானதிபதிகள் இருந்தார்கள். அவர்களின் சமஸ்தானங்களை எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக வருடத்திற்கு ஒரு லட்சம் அல்லது சில லட்சங்கள் என்று ரூபாய் கொடுத்து வருகிறது, மத்திய அரசாங்கம். இன்னும் ஒரு ஐம்பது வருடங்கள் சென்ற பிறகு பார்த்தால், அப்பொழுதுள்ள சந்ததியினர், எதற்காக இந்த ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று தெரியாமல் இப்படிப் பொதுப் பணத்தை, மக்களின் வரிப் பணத்தை எடுத்து, ஏன் இவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கும் நிலை ஏற்படக் கூடும். அதே கதி தர்ம ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது. தர்ம ஸ்தாபனங்களின் நிலங்களை எடுத்துக் கொண்டுதான் இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது என்பது நமக்குத்தான் தெரியும், இன்னும் பல ஆண்டுகள் கழிந்து வரும் சந்ததியினருக்கு அது தெரியாது. ஆகவே ஏன் இவ்வளவு பணம் தர்ம ஸ்தாபனங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று அவர்கள் கேட்க நேரிடும். ஆகவே, பின்னர் அது பாதிக்கப்படும் நிலை ஏற்படலாகாது. இதை அரசாங்கம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நமது முன்னேர்கள் எல்லாம் கோவில்களுக்கு நிலங்களைத்தான் எழுதி வைத்தார்கள், அவர்கள் பணமாகக் கொடுக்கவில்லை. பணமாகக் கொடுத்திருந்தால் அது போயிருக்கும். ஆனல் நிலமாக கொடுத்தால் அது போகாது என்பதற்காகவே நிலமாகக் கொடுத்தார்கள், நமது முன்னேர்கள். மொகலாய ஆட்சியில்கூட அவர்கள் கோவில் நிலங்களை எடுத்துக் கொள்ளவில்லை. கடைசியாக ஒரு வார்த்தை. எட்யூக்கேஷனல் என்டௌமெண்ட்க்கு

விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வழியிருக்கிறது. எட்யூக்கேஷனல் இன்ஸ்ட்டியூஷன்ஸ் அதிகம் நடத்துவதால், அந்த லூப்ஹோலை வைத்துக்கொண்டு ஒரு சமுதாயத்தினர் மட்டும் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழியிருக்கிறது. மற்ற சமுதாய ஸ்தாபனங்கள் இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழி கிடையாது. "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்று சொல்வது போல் இந்து மத ஸ்தாபனங்கள் மட்டும்தான் இதில் அகப்பட்டுக் கொண்டு சிக்க நேரிடுகிறது. சரித்திரப் பிரசித்தி பெற்ற பல ஆலயங்கள் எல்லாம் இன்று புராதன புதைப்பொருள் என்ற நிலைக்கு வந்து விட்டன. இன்று நமது அரசாங்கமே தனது சின்னமாக ஸிம்பலாக கோபுரத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. ஆக, பிரசித்தி பெற்ற ஆலயங்களை புராதன சின்னங்களாக ஆக்குகிற அளவிற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகளைக் கை விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்தியப் பிரதேசத்தில் இருப்பதைப் போன்று ரிலிஜியஸ் இன்ஸ்ட்டிட்யூஷனிலிருந்து கிடைக்கக் கூடிய வருமானத்தை அவற்றிற்கே செலவழித்தால் அவைகளுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம் என்றாவது வைத்துக் கொண்டால் நல்லது என்று சொல்லிக் கொண்டு நான் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI S. M. ANNAMALAI: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் வைத்திருக்கக்கூடிய மசோதாவைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் பதவியேற்று ஓராண்டுக்கு பிறகு, அதாவது 1953-ம் ஆண்டிலிருந்து இந்த மாதிரியான ஒரு புலி வருகிறது, புலி வருகிறது, ஏழெட்டு ஆண்டு காலமாக சொல்லி இப்போது அந்தப் புலியை சட்டமன்றத்தின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். "மரத்தை மறைத்தது மா மதயானை, மரத்தில் மறைந்தது மா மதயானை" என்று சொல்லுவதுண்டு. அதாவது மரத்தால் செய்யப்பட்ட ஒரு யானையை சிறு குழந்தையிடம் காண்பித்தால் அது உண்மையாகவே ஒரு யானை என்று தான் நினைக்கும். ஆனால் அறிவு பெற்றவர்கள் அந்த யானையைப் பார்த்து வெறும் கட்டை என்று தான் நினைப்பார்கள். ஆகவே இந்தத் தரப்பில் இருக்கிற நாங்கள் இதை ஒரு கட்டை என்று சொல்லுகிறோம், அந்தத் தரப்பில் இருக்கின்றவர்கள் இது ஒரு பெரிய யானை என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் கட்டை போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, பாமர மக்களுக்காக நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டி விட்டோம், உச்ச வரம்பு கட்டிவிட்டோம் என்று ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிற சர்க்கார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இதைப் படித்துப் பார்க்கிற பொழுது, இதன் மூலமாக பாமர மக்களுக்கு ஏதாவது பலன் கிடைக்குமா என்றால், இதில் மறைமுகமாக ராஜாஜியின் கொள்கைதான் புகுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் காண முடிகிறதே தவிர உண்மையிலேயே பாமர மக்களுக்கு இதனால் எந்த விதமான பலனும் கிடையாது. முப்பது ஏக்கர் வரை அனுமதிப்போம் என்று இந்தச் சர்க்காரிலுள்ள அமைச்சர்கள், இங்கும் வெளியிடங்களிலும் சொல்லிக்கொண்டிருந்ததின் காரணமாக, பல மிராசுதார்கள் தங்கள் நிலங்களை எல்லாம் பிரித்துப் பிரித்து பல பேர்களுக்கு எழுதி வைத்து விட்டார்கள். ஆகவே இந்தச் சட்டம் கொண்டு வருவதன் மூலமாக மீதி எவ்வளவு நிலம் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்களுக்கே தெரியாது. இதனால் பாமர மக்களுக்கு இதன் மூலமாக என்னென்ன நன்மை செய்யப்படும், யார் யாருக்கு கொடுக்கப்படும் என்பதைப்பற்றியெல்லாம் சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது. பொதுவாக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்படும், அதன் பின்னால் சிறு நிலச்சுவான்தார்களுக்கு இரண்டாவது சலுகை தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய மீதமுள்ள நிலங்களை என்ன செய்யவேண்டும், அதை எப்படி எப்படி விநியோகிக்க வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. பின்னால் இதற்கு வேண்டிய விதிகளை சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக்



கொள்ளலாம் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இந்தச்சட்டம் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டதிலிருந்து அமல் செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் நான் கேட்டுக்கொள்வது, தயவு செய்து இந்தச் சட்டத்தை 1952-ம் ஆண்டிலிருந்தே அமல் செய்கின்ற முறையில் கொண்டு வரவேண்டும் என்பதுதான். அதற்கான முறையில் இதை மாற்றி அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேலாக, மீதமுள்ள நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொள்வதில் சர்க்கார் நஷ்ட ஈடு என்ற முறையில் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருப்பது மிகவும் அதிகம். மற்ற மாநிலங்களை எல்லாம் எடுத்துப் பார்த்தால் இது மிகவும் கூடுதல் என்பதை நாம் கண்டு கொள்ள முடியும். ஆந்திர மாநிலத்தை எடுத்துக்கொண்டால், அங்கு வருவாயின் மீது பத்து மடங்கு, ஐந்து மடங்கு, எட்டு மடங்கு என்று விதித்திருக்கிறார்கள். பீகார் மாநிலத்தை எடுத்துக்கொண்டால், முதல் தர நிலங்களுக்கு 1,200 ரூபாய் என்றும், இரண்டாவது தர நிலங்களுக்கு 800 ரூபாய் என்றும், மூன்றாம் தர நிலங்களுக்கு 600 ரூபாய் என்றும், நான்காம் தர நிலங்களுக்கு 400 ரூபாய் என்றும் விதிகள் அமைத்திருக்கிறார்கள். கேரள மாநிலத்தை எடுத்துக்கொண்டால், விலையில் மார்க்கட் மதிப்பீட்டில் 60 சத விகிதம், 55 சதவிகிதம் என்று அமைத்திருக்கிறார்கள். மத்திய பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், நில வரியின் மீது 75 மடங்கு, 80 மடங்கு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இப்படிப் பிற மாநிலங்களை எடுத்துப்பார்ப்போமானால், நம்முடைய மாநிலத்தில் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிற அளவைக் காட்டிலும் மிக மிக அதிகம். இந்த நஷ்ட ஈட்டை உண்மையாகவே குறைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, இருக்கின்ற நிலங்களில் பல நிலங்களுக்கும் இந்த மசோதாவின் மூலமாக விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரிப்பட்ட விதிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களை எல்லாம் விட்டு விட்டு, மீதமுள்ள நிலங்களை எடுத்துப்பார்ப்போமானால் சாதாரணமாக கிராமப் புறங்களில் உள்ள நெல், கம்பு, கேழ்வரகு போன்ற தான்யங்கள் பயிரிடக்கூடிய நிலங்களுக்குத்தான் உச்ச வரம்பு கட்டப்பட்டிருக்கிறதே தவிர பெரிய பழத்தோட்டங்கள், சவுக்கு மரங்கள் இருக்கக்கூடிய இடங்கள் இவைகளுக்கு எல்லாம் உச்சவரம்பு கட்டவேண்டிய நிலைமையே இல்லை. ஏனென்றால் இவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம் இந்தச் சட்டத்தின் மூலமாக. அதே போன்றுதான் கோவில் நிலங்களுக்கும் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். இது தேவையா என்பதைப்பற்றி ஆலோசித்துப் பார்க்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில், 200 ஏக்கர் 300 ஏக்கர் என்று ஒவ்வொரு கோவிலுக்கும் தேவையில்லை. வேண்டுமென்றால், 50 ஏக்கரோ அல்லது 100 ஏக்கரோ வைத்துக்கொண்டு மீதமுள்ள நிலங்களை எல்லாம் சர்க்காரே எடுத்து அதன் மூலமாக கூட்டுறவு பண்ணைகளை ஏற்படுத்தி பாமர மக்களுக்கு நன்மை செய்யலாம். அதே போன்று தான் பெர்ஸனல் கல்டிவேஷன் என்று சொல்லப்பட்டிருப்பதை எடுத்துப்பார்த்தால், அதிலும் திட்டக்கமிஷனின் கருத்துப்படி இதில் செய்யப்படவில்லை என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள் நிலங்களை சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர் தங்கியிருக்கும் இடத்திலிருந்து 5 அல்லது 10 மைல் சுற்றளவுக்குள் இருந்தால்தான் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இதைப் பற்றி மாநில சர்க்காரே தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்று பிளானிங் கமிஷன் சொல்லியிருக்கிறது. திட்டக்கமிஷன் இதில் என்னவெல்லாம் கருத்துக்கள் கொடுத்திருந்ததோ அதில் இந்த மாநில சர்க்கார் இதையெல்லாம் ஏற்றுக்கொண்டது என்று என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. பீகார் மாநிலத்தில் ஏதாவது மைனர் பெண்களுக்கும், விதவைகளுக்கும், அதைப்போலவே மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய்க்குக் கீழ் சம்பளம் வாங்கும் நபர்களுக்கும் தங்கள் நிலங்களை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால், கலெக்டரின் பெர்மிஷனின் மேல் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆசாம் மாநிலத்தில் ஐந்து மைல் சுற்றளவுக்குள் இருந்தால் தான் நிலத்தை

சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியும் என்று விதித்திருக்கிறுர்கள். மைசூர் மாநிலத்திலும் 10 மைலுக்குள் வசித்து இருந்தால் தான் நிலத்தைச் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று விதித்திருக்கிறுர்கள். நம்முடைய மாநிலத்தை எடுத்துக்கொண்டால், 100 மைலுக்கப்பால் 150 மைலுக்கப்பால் இருந்தாலும் சரி, அதை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மசோதாவில் கண்டிருக்கிறது. அதைப் போலவே ஆப்ஸன்டி லான்ட்லார்ட் என்பதிலும் பல வேறுபாடு இருக்கிறது. நிலம் எந்த இடத்திலும் இருக்கும், சொந்தக்காரர் எந்த இடத்திலும் இருப்பார். அவர்கள் வேறு ஆட்களை வைத்துக்கொண்டு சாகுபடி செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரிப்பட்ட நிலங்களை கூட்டுறவுப் பண்ணைக்காக தேவை என்று கேட்டால் அந்த நிலச்சொந்தக்காரர்கள் அதைத் தர முடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள். இம்மாதிரிப்பட்ட இடங்களில் எல்லாம் அந்த நிலங்களை எல்லாம் சர்க்காரே நேரடியாக எடுத்து அதில் கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்த முன் வரவேண்டும். இவ்விதம் எல்லா நிலங்களுக்கும் 30 எக்கர் என்று உச்சவரம்பு கட்டி விட்டு மீதமுள்ள நிலங்களை எல்லாம் கூட்டுறவுப் பண்ணை அடிப்படையில் கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும். உத்திரப்பிரதேசத்தில் இவ்விதம் மீதமுள்ள நிலங்களை எல்லாம் 15 எக்கர்களுக்கு மேலாக இருக்கின்ற இடங்களில் எல்லாம் கூட்டுறவுப்பண்ணைகளை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறுர்கள். அதைப் போலவே நம்முடைய மாநிலத்திலும் கூட்டுறவுப் பண்ணைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 5 எக்கர் சொந்த சாகுபடியாக வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இப்படி 5 எக்கரை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொண்டால் வாரத்திற்குப் பயிரிடுகின்றவனுக்கு மகசூலில் 8-ல் ஒரு பாகம் நஷ்ட ஈடாக தாராளமாகக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனுல் வாரத்திற்குப் பயிரிடும்போது அக்ரிமெண்ட் இருக்கவேண்டும் என்று ஒரு விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அக்ரிமெண்ட் இருக்கவேண்டுமென்று சொல்லும்போது வேண்டுமானுல் தஞ்சை மாவட்டத்தில் இருக்கலாம். பிற மாவட்டங்களில் வாரத்திற்குப் பயிரிடுகின்றவர்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் யாதொரு விதமான ஒப்பந்தமும் கிடையாது. வாய் மொழி மூலம் பயிரிடுகிறுர்களேயொழிய—கிராமப் பழக்க வழக்கங்களை வைத்துக் கொண்டு அதன்படி பயிரிடுகிறுர்களேயொழிய—உண்மையிலேயே நிலச்சொந்தக்காரர்களுக்கும், வாரத்திற்குப் பயிரிடுகின்றவர்களுக்கு மிடையே ஒரு வித அக்ரிமெண்டும் கிடையாது. கணக்கப்பிள்ளைகள் அடங்கலில் குறிக்கவேண்டும் என்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறுர்கள். அப்படி அடங்கலில் இருக்கிறதா என்ருல் எந்தக் கணக்கப்பிள்ளையும் இது வரையில் வைத்தது கிடையாது. ஆக, வாரத்திற்குப் பயிரிடுகின்றவர்களை வெளியேற்றும்போது அக்ரிமெண்ட் இருக்கவேண்டுமென்பதை நீக்கி, 4 அல்லது 5 ஆண்டுகளாகப் பயிரிடுகிறேம் என்று பல சாட்சிகள் மூலமாக நிரூபித்தால், அப்படிப்பட்டவர்களுக்கு காம்பென்ஸேஷன் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நிலச்சொந்தக்காரர்களுக்கும் வாரத்திற்குப் பயிரிடுகின்றவர்களுக்கும் மத்தியில் இருக்கக் கூடியவர்கள். இப்படி மத்தியில் உள்ளவர்வர்களை, பிளானிங் கமிஷனே சொல்லியிருக்கிறது—ரிப்போர்ட்டிலேயே சொல்லப்பட்டிருக்கிறது—அவர்களை கட்டாயம் நீக்கிவிட வேண்டுமென்று. இந்த சர்க்கார் கொண்டு வந்திருக்கிற மசோதாவிலே பார்த்தால் அவர்களை விலக்கக்கூடிய முறையில் யாதொரு விதியையும் காணும். என்? அவர்களை அப்படியே வைத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறுர்களா? மத்தியில் இருக்கக் கூடிய அவர்கள் நிலத்தை குத்தகைக்கு எடுத்து வேருெருவருக்கு வாரத்திற்கு விட்டு—பயிரிடுகின்றவன் ஒருவன், நிலச் சொந்தக்காரன் ஒருவன், இவர்களுக்கு மத்தியில் ஒரு தரகர் மாதிரி இருந்துகொண்டு—ஆயிரக் கணக்கில் சம்பாதித்து வருகிறுன் என்ருல்



அப்படிப்பட்டவனை என் நீக்கக் கூடாது? திட்டக். கமிஷன் நீக்கிவிட வேண்டுமென்று சொல்லியும்கூட என் நீக்கவில்லை? இதை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதைப் போலவே திட்டக் கமிஷன் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலே வாரத்திற்குப் பயிரிடுகின்றவனை நிலத்திலிருந்து வெளியேற்றினுல் அவனுக்கு சர்க்கார் உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. அவனுக்குப் பயிரிட வேண்டிய நிலத்தை சர்க்காரே முயற்சியெடுத்து தேடித் தரவேண்டுமென்று பிளானிங் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றவர்களுக்கு வேறு என்ன வகை செய்யப்போகிறுர்கள் என்பதைப் பொறுத்த அளவில் இந்த மசோதாவில் எதையும் காண முடியவில்லை என்பதைச் சொல்லி, இப்படிப்பட்ட பிற்போக்கான மசோதாவை உண்மையிலேயே பாராட்டுவதற்கில்லை என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri K. G. PALANISWAMY GOUNDER**: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது சென்னை சட்ட சபையில் வந்திருக்கின்ற நிலச் சீர்திருத்த மசோதாவைப் பொறுத்த அளவில் இது சட்ட சபையின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமானது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இது போன்ற பெரிய சட்டங்கள் இந்த சட்ட சபையினுல் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அப்படி நிறைவேற்றப்பட்டிருந்தாலும் நமது நாட்டிலுள்ள ஜனங்களில் நூற்றுக்கு 70 பேர்களை பாதிக்கக் கூடிய ஒரு சட்டமாக, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. பல வருஷங்களாகவே நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது, வருகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தபோது மக்களுக்கு உண்மையிலேயே ஒரு பீதியாக இருந்து வந்தது. பல வருஷங்களாக சர்க்காருடைய கவனத்தில் இருந்து இப்போது மசோதாவாக ஆக்கப்பட்டு வந்திருக்கிறது. சட்ட சபையில் வந்த பிறகு, இன்று பல நண்பர்கள் பேசியதில் இதிலுள்ள சில குறைபாடுகளைப்பற்றிச் சொன்னுர்கள். என்னைப் பொறுத்த வரையில், இதைவிட வேறு வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர முடியாது என்று தான் சொல்வேன். மற்ற ராஜ்யங்களில் இந்த மாதிரியான சட்டத்தைக் கொண்டு வந்து இன்னும் அவைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறுர்கள். முக்கியமாக இந்த சட்டம் மற்ற ராஜ்யங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. நல்ல முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக சென்னை மாநில முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும், ரெவின்யூ அமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளையும் நான் மிகவும் பாராட்டுகிறேன். நமது ராஜ்யத்தில் இன்றைய தினம் நல்லபடியாக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமானது மற்ற ராஜ்யங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

இன்றைய தினம் பூமி என்று சொன்னுல் அதனுடைய வருவாயை நிர்ணயிக்க முடியாது. மற்ற பொருள்களை விலை கொடுத்து வாங்கலாம். அதற்கு ஒரு குறிப்பிட்ட விலை இருக்கிறது. ஒரு கட்டிடத்தின் விலையை நிர்ணயிக்கலாம். ஆனுல் பூமியின் வருவாயை நிர்ணயிக்க முடியாது. விவசாயி நல்ல முறையில் பயிரிட்டால் ஒரு எக்கருக்கு 25 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையில் வருவாய் வரும். வருவாயை வைத்து நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதில் பலருக்கு ஏமாற்றம் தான் ஏற்படும். இன்றைய தினம் சட்ட சபையில் இருக்கிறவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தெரியாது. நல்ல முறையில் விவசாயம் செய்கிறவர்களைக் கேட்டால்தான் தெரியும். பொருளாதாரத்தில், வேறு எந்தப் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலே பணத்தை வைத்துக் கொண்டு சம்பாதிக்கலாம். வியாபாரத்தை எடுத்துக் கொண்டால் லட்சம் ரூபாயை வைத்து வியாபாரம் செய்து பணத்தைச் சம்பாதிக்க வழி இருக்கிறது. கொடுக்கல் வாங்கல் மூலமாக லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு சம்பாதிக்கலாம். அல்லது பாங்கில் போட்டு கஷ்டம் இல்லாமல் சம்பாதிக்கலாம். வியாபாரத்தில் முதலாளிகள் ஒரு இடத்தில் இருந்துகொண்டு

குமாஸ்தாக்களாக இருப்பவர்களை வைத்துக் கொண்டு பல விதத்தில் வியாபாரத்தில் சம்பாதிக்கலாம். மில் ஆலை முதலாளிகள் தினத்திற்கு 1 மணி நேரம் சென்ருல் வேலை முடிந்து விடுகிறது. ஆனுல் விவசாயத்தை எடுத்துக்கொண்டால் காலை 6 மணிக்கு ஆரம்பித்து மாலை 7 மணி வரையில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தில் பூமி பாகுபாட்டைப் பொருத்த அளவில் அது பல பேர்களை பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. இன்றைய தினம் எதிர்க் கட்சிக்காரர்கள் பேசினுலும்கூட என்னைப் பொறுத்த அளவில் இதைவிட வேறு விதத்தில் நிலச் சீர்திருத்தம் கொண்டுவர ஏதுவாக இருக்க முடியாது. இந்த வகையில் கொண்டு வந்ததைப்பற்றி அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். நிலச் சீர்த்திருத்தத்தில் முக்கியமாக ஸ்டாண்டர்டு ஏக்கர் 30 ஏக்கர் என்று வைத்திருக்கிருர்கள். அதாவது 10 ரூபாய்க்கு மேல் ரெவின்யூ கிஸ்தி இருக்கக்கூடிய பூமிகளின் தரத்தை வைத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருக்கிருர்கள். முக்கியமாக இந்த 30 ஏக்கரைப் பார்த்தால் 10,000 ரூபாய் வரையில் வருஷ வருமானம் வரக்கூடிய நிலமாக இருக்கிறது. அந்த வகையில் கோயம்புத்தூர் ஜில்லா தொழில் வளர்ச்சியிலே முன்னேற்றமடைந்த ஒரு ஜில்லாவாக இருந்தாலும், விவசாய வளர்ச்சியிலே எங்களுடைய திருப்பூர், உடுமல்பேட்டை, தாராபுரம் பகுதியை எடுத்துக்கொண்டால் இதைவிட மோசமான ஜில்லா இருக்க முடியாது. எங்களுடைய ஜில்லா பல வருஷங்களாக மழை இல்லாத காரணத்தினுல் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்டு ஏக்கர் 30 ஏக்கர் என்ருல் அந்த விதியையொட்டிப் பார்க்கும்போது எங்கள் பகுதியில் 75-ல் இருந்து 100 ஏக்கர் வரையில் வைத்துக் கொள்ளலாம். ஏக்கருக்கு 25 ரூபாய் வீதம் 2,500 ரூபாய் வருஷ வருமானம் இருக்கலாம். அதற்கு மேல் இருக்க முடியாது. இந்த வருஷம் அங்கே மழையில்லை. என்னுடைய சொந்த நிலத்தையே எடுத்துக் கொண்டாலும் கால் பங்குகூட விளையாமல் இருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் தாராபுரம், உடுமல்பேட்டை பகுதியில் மேய்ச்சல் காடுகளாகத் தான் அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிருர்கள். அந்த முறையில் மேய்ச்சல் காடாக 50 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அவர்கள் 50 ஏக்கரில் ஆடு மாடுகளுக்கு போதிய மேய்ச்சல் வசதி
4-00 அளிக்க முடியாது. சென்னை ராஜ்யத்தில் காடுகள் பல வகையில் அபி
p.m. விருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை அபிவிருத்தி செய்வதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூரில்தான் காங்கேயம் பண்ணை போன்ற கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. அங்கே விவசாயிகளின் கால்நடைகளுக்கு மேய்ச்சல் வசதிக்கு 100, 200 ஏக்கர் நிலங்கள் கொடுக்கவேண்டும்.

மேலும், பெண்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கும்போது அவர்களுக்கு பூமியும் கொடுப்பதுண்டு. கலியாணம் ஆகும் பெண்களுக்கு பூமி கொடுக்கப்படுகிறது. கலியாணமான பெண்களுக்கு 10 ஏக்கர் நிலம் கொடுக்கப்படுவதை அனுமதிப்பது போல, கலியாணமாகாத பெண்களுக்கும் 10 ஏக்கர் நிலம் அனுமதிப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், கரும்புக் காடுகள், கோவில் நிலங்கள் ஆகியவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்று, கரும்பு சாகுபடி செய்பவர்களுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. மேட்டுப்பாளையத்தில் பாக்குத் தோட்டங்களில் ஏக்கருக்கு 3,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை வருமானம் வருகிறது.. தனிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கும் இந்த முறையில் விலக்கு அளிக்கவேண்டும்.

மேலும் விவசாயிகளுக்கு விவசாய வருமான வரி விதிக்கப்படுகிறது. நான் இங்கே விவசாய வருமான வரி மசோதா வந்தபோது, "விவசாயிகள் கணக்குகள் வைத்துக் கொள்ள முடியாது. எனவே, அவர்களுக்கு விவசாய வருமான வரி போடாமல் அதற்குப் பதிலாக ரெவின்யூ கிஸ்தியை அதிகமாக வசூலியுங்கள்" என்று சொன்னேன். மேலும் இந்த மசோதா சட்டமானுல் தனி மனிதர்களிடம் உள்ள அதிகமான நிலம்





குறைந்துவிடும். எனவே அடுத்த எப்ரல் 1-ம் தேதி முதல் விவசாய வருமான வரியை எடுத்துவிட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாய வருமான வரியால் கிராமங்களில் விவசாயிகளுக்கு உத்தியோகஸ்தர்களின் தொந்தரவுகளும் வேறு பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன.

அடுத்தபடியாக, நமது ராஜ்யத்தில் கால்நடை வளர்ப்பு பல வகையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்புக்கு உதவும் முறையில் ராஜ்யத்தில் எல்லா இடங்களிலும், முக்கியமாக கோயம்புத்தூர் ஜில்லாவில் அதிகமான காடுகளில் மேய்ச்சல் வசதிக்கு வகை செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவைப் பொறுத்த வரையில், இந்திய சர்க்கார் பிரதம மந்திரிகூட கூட்டுப் பண்ணையைப் பற்றிப் பேசியிருக்கிருர்கள். நான் கூட்டுப் பண்ணைகள் வரவேண்டும் என்பதை எதிர்க்கிறேன். கூட்டுப் பண்ணைகள் வந்தால் விவசாயத்திற்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் சம்பந்தமே இருக்காது. இன்று நமது ராஜ்யத்தில் பல கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. நமது ராஜ்யத்தில் மட்டுமன்றி பாரத நாட்டிலேயே கூட்டுறவு ஸ்தாபனங்கள் மக்களுக்கு ஏமாற்றம் அளித்திருக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தில் சென்னை ராஜ்யத்தில் உத்தியோகஸ்தர்கள்தான் வளர்ச்சியடைந்திருக்கிருர்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் வளர்ச்சியடையவில்லை. இது குறித்து நான் வருத்தப்படுகிறேன். வியாபாரத் துறையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கலாம். விவசாயத் துறையில் கூட்டுறவு முறை துணை புரியாது. ஒரு விவசாயக் குடும்பத்தில் நான்கு சகோதரர்கள் இருக்கிருர்கள் என்ருல், அவர்கள் நான்கு பேரும் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதில்லை, விவசாயத்துறையில் தகப்பனும் மகனும் ஒற்றுமையாக இருப்பதில்லை, பங்காளிகள் ஒற்றுமையாக இருப்பதில்லை. விவசாயத்தில் நல்ல பலனடைய வேண்டுமானுல் காலையிலிருந்து மாலை ஆறு மணி வரையில் நிலத்தில் பாடுபட வேண்டும். எனவே விவசாயத் துறையில் கூட்டுறவு முறை நல்ல பலனளிக்காது.

சென்னை ராஜ்யத்தில் விவசாய உற்பத்தி வருஷத்திற்கு வருஷம் பெருகியிருப்பதாக சர்க்கார் சொல்கிறார்கள். ஆனுல், நான் இங்கே அமராவதி அணைக்கட்டு போன்ற பல பெரிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருந்தாலும் இங்கே போதிய விளைச்சல் ஏற்படவில்லை என்றுதான் சொல்வேன். இங்கே விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே 70 சதவிகித மக்கள் விவசாயிகள். மற்றத் துறைகளில் உள்ளவர்களுக்கு சர்க்கார் பல சலுகைகள் கொடுக்கிறது. ஆனுல் விவசாயத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு சர்க்கார் அவ்வளவு சலுகைகள் அளிக்கவில்லை. மில் தொழிலாளர்களுக்கு சர்க்கார் பல சலுகைகளுக்கு வகை செய்திருக்கிறது. நாட்டில் உணவு உற்பத்திக்குப் பாடுபடும் நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத் தொழிலாளர்கள் சமூகத்திற்கு சர்க்கார் எந்த விதமான சலுகைக்கும் வகை செய்யவில்லை. விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சர்க்கார் சொல்கிருர்களே தவிர, உண்மையில் அது பெருகவில்லை. விவசாய உற்பத்தி ஏன் பெருகவில்லை என்ருல், இன்றைய தினம், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் வருகின்றனவே தவிர, பல நிலச் சுவாந்தார்கள் விவசாயத்தில் அக்கறை காட்டுவதில்லை. விவசாயத்திற்குப் போதிய உரம் கிடைப்பதில்லை. முப்பது ஏக்கர் நிலம் உள்ள ஒருவன் அவன் ஒருவனே விவசாயத்திற்குப் பாடுபடமுடியாது. அவன் பல தொழிலாளர்களை வைத்துக்கொண்டு பாடுபட வேண்டியிருக்கிறது.. மற்றத் தொழிலாளர்களின் ஊதியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, விவசாயத் தொழிலாளிக்கு குறைந்த ஊதியமே கிடைக்கிறது என்று சொல்ல வேண்டும். ஒரு மில் தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு 3, 4 ரூபாய் கூலி கிடைக்கிறது. ஆனுல் ஒரு விவசாயத் தொழிலாளி அதிகாலையிலிருந்து மாலை 6 மணி வரையில் நிலத்தில் பாடுபட்டால் 1 ரூபாய் தான் அவனுக்குக் கூலி கிடைக்கிறது. அதே மாதிரி மில்லில் வேலை செய்யும் ஒரு பெண்ணுக்கு தினத்திற்கு 3 ரூபாய் கூலி கிடைக்கிறது, ஆனுல் ஒரு

பெண் விவசாயத் தொழிலாளிக்கு முக்கால் ரூபாய் தான் தினக் கூலி கிடைக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கும் மற்ற தொழிலாளர்களைப் போல நிறையக் கூலி கிடைக்க சர்க்கார் வழி செய்ய வேண்டும். சர்க்கார் விவசாய வளர்ச்சியில் போதிய அக்கறை செலுத்தவில்லை. சென்ட்ரல் காட்டன் கமிட்டி பஞ்சின் விலைக்குக் கட்டுப்பாடு நிர்ணயித்துள்ளது. இது மில் முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறது. பஞ்சுக்கு நல்ல விலை கிடைத்தால் தான் விவசாயிகளுக்கு நல்லது. அப்போது தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு நல்ல கூலி கிடைக்கும். மேலும் இப்போது, விவசாயக் கூலி வேலை செய்யக் கூடிய்வர்கள் நகரப் பிரதேசங்களுக்குப் போய் அங்கு வேலை செய்வதால், விவசாயக் கூலியாட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நான் இந்த மசோதாவை வரவேற்பதுடன், நிலங்களை நல்ல முறையில் கண்காணிக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், நூலுக்கு விலைக் கட்டுப்பாட்டை எடுத்திருப்பது போல பருத்திக்கும் விலைக் கட்டுப்பாட்டை எடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்யவேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. பல வருஷங்களுக்கு முன் இயற்றப்பட்ட சட்டத்தின் காரணமாக, வட நாட்டு மூல்டான் ஷேட்டுகள் 2 சதவிகித வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். விவசாயிகளிடமிருந்து 8 அணா தான் வட்டி வாங்க வேண்டுமென்றால், உண்மையில் அவர்களுக்கு இன்று கடன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இன்று சர்க்கார் விவசாயிகளுக்கு பல வகைகளில் கடன்கள் கொடுக்கின்றது. கூட்டுறவு ஸொஸைடிகளின் மூலம் அவர்களுக்குச் சர்க்கார் கடன் கொடுக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு சர்க்கார் கடன் கொடுக்கிறது. இம்மாதிரி பல வகையில் அவர்களுக்கு சர்க்கார் கடன் கொடுக்கிறது. விவசாயிகளுக்கு கிராமங்களில் ரூரல் பாங்குகளின் மூலம் போதிய கடன் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். வியாபாரத் துறையில் சரக்குகளின் பேரில் பாங்குகளில் நிறையக் கடன் கொடுக்கப்படுகிறது. அதே போல, 25,000 ரூபாய் மதிப்புள்ள சொத்து உடைய விவசாயிகளுக்கு 15,000 ரூபாய் வரையில் கிராம பாங்குகளின் மூலம் வருஷம் பூராவும் கடன் கொடுக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அந்த வகையில் விவசாயிகளுக்குக் கடன் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கிறார்கள். அதற்காக மத்திய சர்க்கார் பணம் கொடுக்கிறார்கள். ஏதோ கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தாற்போல் இருக்கிறது. ஒரு எக்கர் உள்ளவர்களுக்கு மாடு வாங்குவதற்காக ஒரு தொகை...................

MR. SPEAKER: The hon. Member is speaking about credit facilities. It has no connection with land ceiling. Let him speak on the Bill.

SRI K. G. PALANISWAMY GOUNDER : இந்த நிலச் சீர்திருத்த மசோதாவை வரவேற்று, மற்றும் போதிய எல்லா நன்மைகளையும் விவசாயிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*SRI K. B. S. MANI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பில்லை என்னைப் போன்ற ஊழியர்கள் சபையின் சார்பில் வரவேற்றாலும் விவசாய மக்களாகிய என்னைப்போன்ற ஊழியர்கள் மனமார அதில் இருக்கும் சில அம்சங்களைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. உண்மையிலேயே இந்த நாடு இன்று எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னால் இந்த நாட்டிலே இருக்கும் நிலப் பரப்புகளை என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இப்படி அவசரமாக





இந்தச் சட்டம் வந்திருக்க வேண்டிய அவசியமில்லையென்று கருத வேண்டியிருக்கிறது. சட்டம் வருவதற்கு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே எந்த அளவுக்கு உச்ச வரம்பு கட்டப் போகிறார்கள் என்று மாகாணத்திலுள்ள எல்லா மிராசுதாரர்களுக்கும் தெரிந்துவிட்டது. அதையொட்டி என்னென்ன முன்னேற்பாடுகள் செய்யவேண்டுமோ அத்தனையையும் செய்து முடித்துவிட்டார்கள் என்பது ஓரளவு அரசாங்கத்துக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆனால் ஒரு சிலர் இந்த சொத்து ஏற்பாடுகளைச் செய்வதில் மித மிஞ்சிய பரிவோடு இருக்கிறார்களே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். சட்டம் வந்த பிறகுதான் அவர்கள் ஏன் அப்படி இருந்தார்கள் என்பது தெரிகிறது. சட்டத்திலே அவர்கள் ஓடி விளையாடி சகல கோலாகலமும் செய்யப் போதுமான இடம் இருக்கிறது. உதாரணமாகக் கூறவேண்டுமானால் இரண்டாயிரம் வேலிக்குச் சொந்தக்காரரான திருவாளர் வி.எஸ்.டி. எந்த விதத்திலேயும் பாதிக்கப்படவில்லை.

MR. SPEAKER : தயவுசெய்து பேசும்போது இந்தச் சபையிலே இல்லாத ஆளைப்பற்றிச் சொல்லவேண்டாம். இந்த மசோதாவைப் பற்றிப் பொதுவாக பேசுங்கள். குறிப்பிட்ட ஆளைப்பற்றிப் பேச வேண்டாம்.

SRI K. B. S. MANI : இம்மாதிரி இருக்கின்ற மிராசுதார்கள் பல ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள் வைத்திருக்கிறார்கள். ஏதோ பண்ணை நடத்துவதாகச் சொல்கிறார்கள். ஏதோ 10 மாடுகள் வைத்துக் கொண்டிருப்பார்கள். அவைகளுக்காக மேய்ச்சல் நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வார்கள். மடாலய நிலங்களைப் பொறுத்த அளவில் ஓரளவு வரவேற்கத்தக்கதாக இருக்கிறது.

முதலாளிகளைப் பொறுத்துப் பார்க்கும்போது, 30 ஸ்டாண்டர்டு எக்கர் உச்ச வரம்பு என்று இருக்கிறது. ஸ்டாண்டர்டு எக்கர் என்று கணக்குப் பார்க்கும்போது அந்த நிலத்தைத் தரவாரியாகப் பிரித்துக் கொண்டு வந்தால் கிட்டத்தட்ட 75 எக்கர் வரை வரும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியாததும் அல்ல, புரியாததும் அல்ல. இந்த உச்சவரம்பு மசோதா எந்த மக்களைத் திருப்திபடுத்த வேண்டுமென்று நினைத்தார்களோ அந்த மக்களுடைய நல் வாழ்வு எந்த அளவுக்கு இந்த உச்ச வரம்புச் சட்டத்தினால் நல்லதொரு பயனை அடையமுடியும்? நிச்சயமாக அந்த மக்கள் நல்லதொரு பயனை அடையமுடியாது என்பது திண்ணம். இந்தச் சட்டத்திலுள்ள செக்ஷன்களையெல்லாம் கடந்த 3 நாட்களாகப் பரிசீலித்துப் பார்த்ததில், வக்கீல்களை வைத்துக்கொண்டு பரிசீலித்துப் பார்த்ததில் சட்டத்திலே நிலச் சொந்தக்காரர்களுக்குச் சாதகமாக என்னென்ன வழி வகைகள் இருக்கின்றன என்பதை அழகாக வக்கீல்கள் வியாக்யானம் செய்கிறார்கள். ஒரு விவசாயி கூட நல்ல நிலைமையை அடையமுடியாத நிலைமை இருக்கிறது. இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டில் இருக்கும் நிலங்கள் அவ்வளவும் பண்ணையிலும் பண்ணையாக மாறிவிடுமே யொழிய வேறு ஒன்றும் இல்லை. ஒருவருக்கு 10 ஆயிரம் வேலிகள் இருக்கிறது என்றால் அது முதலில் (டெபாசிட் லீசர்ஸ்) மொத்தக் குத்தகைதாரரிடம் போகிறது. அந்த மொத்தக் குத்தகைதாரர் அவ்வளவையும் நேரடியாகச் சாகுபடி செய்வதில்லை. குத்தகைக்கு விடுகிறார்கள். மொத்தக் குத்தகைக்கு விடப்பட்ட 22 ஆயிரம் வேலி நிலத்தில் வாரம் குத்தகை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆயிரம், இரண்டாயிரம் என்ற அளவுக்கு மொத்தக் குத்தகைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான முதலீடும் செய்வதில்லை, தேவையில்லை. தெரிந்த உற்றார் உறவின் சொத்தைச் சாமீன் கொடுத்து 100 வேலி, 200 வேலி என்று கிராமம் கிராமமாகக் குத்தகை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கீழ்தான் உழைப்பவன் இருக்கவேண்டும். பாடுபடுபவர்கள் இருக்கவேண்டும். பாடுபடுபவனுக்கு இறுதியில் ஒரு நயா பைசா கூட வருமானம் இல்லாத நிலைமையில் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள். இந்தச் சட்டம் காரணமாக அந்த நிலைமை ஏற்படும். இதற்கு முன்னதாக வந்த தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தினால் ஏற்பட்ட லாபத்தைக் கூட

இந்தச் சட்டத்தினால் பாடுபடுபவர்கள் பெற முடியாது. சட்டப்படி ஒரு டாக்குமெண்ட் ஏற்படுத்திக் கொண்டால் ஸ்டாம் பேப்பரில் எழுதிவிட்டால் 4 மாத காலம் வரையில் ரிஜிஸ்டர் செய்துகொள்ளலாம் என்று மத்திய சர்க்கார் சட்டம் இருக்கிறது. டாக்குமெண்ட் செய்து கொண்டால் செல்லாது என்று இன்று வந்திருக்கும் சட்டத்தில் இருக்கிறது. ஆனால் குத்தகைக்காரர்கள் ரிஜிஸ்டர் செய்துவிட்டதினால் அவர்களுக்குச் சட்டப்படி நஷ்டாடு கொடுக்கவேண்டும் என்று கூறுகிற அமைச்சர் அவர்கள் வாதம் சரியல்ல. குத்தகைக்காரர்களுக்குச் சாதகமாகவும், விவசாயிகளுக்குப் பாதகமாகவும் இருக்கிற சட்டத்தை என் மாற்றியமைக்கவில்லையென்பதுதான் என் போன்ற ஊழியர்களின் கேள்வி. குத்தகை எடுத்ததன் காரணமாக—100 ரூபாய் கொடுத்து ரிஜிஸ்டர் செய்ததன் காரணமாக 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவுக்குச் சாகுபடி செய்ய அருகதை உள்ளவராகிறார். அப்படி அருகதையான பிறகு நேரடியாகச் சாகுபடி செய்கிறார்களா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். பண்ணையாட்களாவது, குத்தகைக்காரர்களாவது வாரம்தாரர்களாவது சாகுபடி செய்கிறார்கள். குத்தகைக்காரர்களுக்கு வாரம்தாரருக்கு அந்த பாத்தியதை கிடையாது. அவன் இறந்த பிறகு அந்த 30 ஏக்கர் நிலமும் டெபாசிட் லீசருக்குச் சொந்தமாகி விடுகிறது. இந்த பில்லில் உண்மையில் உழைப்பு செய்யக்கூடிய தொழிலாளிககு ஒரு வழியும் இல்லை.

கடந்த ஓராண்டுக் காலமாக மிராசுதார்கள் ஓரளவு பாகப்பிரிவினை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு வீட்டிலே 20 நபர்கள் இருந்து, அவர்கள் முன்னதாகவே பாகப்பிரிவினை செய்துகொண்டிருந்தால், முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் வீதம் 600 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் ஆகிவிடுகின்றன. பத்து நபர்கள் இருந்தால், 300 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் ஆகிவிடுகின்றன. ஐந்து நபர்கள் இருந்தால், 150 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் ஆகின்றன. தவறி, யாராவது பாகப்பிரிவினை செய்யாமலிருந்தால், ஐந்து நபருக்கு முப்பது ஏக்கர்மேல் ஒரு நபருக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர் என்று சொல்லப்படுகிறது.

பண்ணை சாகுபடி என்றெல்லாம் இருக்கிறது. பண்ணை என்பதே அடிமையின் சின்னமாக விளங்கும் பொருள். பண்ணையாள் என்றால் அடிமை என்று ஏற்பட்டுவிடுகிறது. அவனுக்குச் சுதந்தர வாழ்வு இல்லை. முதலாளி என்ன சொல்லுகிறாரோ அத்தனை காரியங்களையும் செய்தால்தான் அங்கு வேலை செய்ய முடியுமே தவிர, செய்யவில்லையென்றால் வெளியேறியே தீரவேண்டும். அப்படி வெளியேறவில்லை யென்றாலும், கட்டாயப்படுத்தி வெளியேற்றப்படுவான். அவனுக்குத் தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி 150 ரூபாய் 'பெனிபிட்'டாகக் கொடுத்துவிட்டு, உடனடியாக, அதே நிமிஷத்திலேயே வெளியேற்றிவிடலாம். அப்படிப்பட்ட அடிமைத் தளையை ஒழிக்கவேண்டும் என்பதுதான் இந்த மசோதா கொண்டு வரவேண்டிய நோக்கம். ஆனால், அந்த நோக்கத்திலிருந்து தவறும்படியாக இருக்கிறது இந்த மசோதாவின் வாசகங்கள். புராணத்திலே சொல்வார்கள்—முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெட்டாயிரம் கின்னரர்கள், கிம்புருஷர்கள், அத்தனை பேரும் அமுதம் எடுக்க வேண்டுமென்று திருப்பாற்கடலைக் கடைந்தார்களாம். மேரு மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடையும்போது, அமுதம் திரண்டு வரும்போது, அந்த வாசுகியானது தன்னுடைய விஷத்தைக் கக்கிவிட்டதாம். அதைப்போல்தான் இந்த மசோதா நல்ல முறையிலே உருவாகி வரும்போது, நல்ல முறையிலே சர்க்கார் கொண்டுவரும்போது, முதலாளித்துவம் என்ற பாம்பானது தெரிந்தோ தெரியாமலோ விஷத்தை இந்த மசோதாவிலே கக்கிவிட்டது. தேவர்கள் முதலானவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி, விஷத்தை அள்ளிக் குடித்து அள்ளிக் குடித்து (சிரிப்பு), கண்டத்திலே நிறுத்தி திருநீலகண்டம் என்று பெயர் பெற்றார் என்று புராணத்தில் சொல்வதுண்டு. (சிரிப்பு) அது போன்று, தொழிலாளிகளை நசுக்கும் ஒரு பயங்கரமான காரியத்தை இந்த மசோதாவில் புகுத்தியிருப்பதால், இனி அமைக்கப்படப்போகும் செலக்ட்



கமிட்டியார்தான் நிலைமையை நன்றாகப் பரிசீலனை செய்து, தீர்மானிக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால், உண்மையிலேயே தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், மற்ற ஜில்லாக்களில் எப்படி இருக்குகுமோ அதைப்பற்றி நான் சொல்ல விரும்பாவிட்டாலும், குறிப்பாக தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட இருபதாயிரம் விவசாயிகள், நிலத்திலே பாடுபட்டு உழைக்கும் விவசாயத் தொழிலாளிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள், அவதிப்படுவார்கள், திண்டாடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையைப் பார்த்தால், ஒரு முதலாளி தனக்குத் தேவைப்பட்ட காலத்திலே, உச்ச வரம்புக்குக் கட்டுபட்டது போக பாக்கியிருக்கும் நிலத்தை, அவசியப்பட்டால் பால் பண்ணை வைத்துக்கொள்ளலாம், மேய்ச்சல் நிலங்களாக ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்படியெல்லாம் அவர்களுக்குச் சகாயம் இருக்கும்போது, அவர்கள் எப்படி சர்க்கார் யோசனைப்படி, சர்க்கார் அபிப்பிராயப்படி, சர்க்கார் மக்களைத் திருப்தி செய்யும் முறையிலே, நிலத்தை விட்டுக் கொடுப்பார்கள் ? எப்படி விட்டுக் கொடுக்கக்கூடிய மனப்பான்மை வரும் ? வரமுடியாது.

நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கும் நஷ்ட ஈட்டுத் தொகை 12 மடங்கு போதாது என்று, மேலும் ஐந்து சத விகிதம் வட்டி என்றால், இது அடுக்கவே அடுக்காது. யார் உழைத்தார்கள் என்று கேட்கிறேன். அவர்களுக்கு நிலம் எப்படி வந்தது என்பதை அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்கட்டும். ஆயிரக் கணக்கான வேலி நிலம் வைத்திருக்கிறார்களே, அவர்களில் எத்தனை பேருக்கு மூல சாசனம் இருக்கிறது என்று கேட்கிறேன். மூதாதையர்கள் சம்பாதித்ததாகச் சொல்கிறார்களே, அதற்காவது மூல சாசனம் உண்டா ? ஏதாவது ஒரு மூல சாசனம் சமர்ப்பித்தால்கூட, வேண்டுமானால் சர்க்கார் தங்கள் அபிப்பிராயப்படி செய்யட்டும். நான் சொல்வேன், அவர்களிடம் மூலசாசனமே இல்லை என்று. பழைய காலத்தில், மகாராஜாக்கள், நவாபுகள் ஆண்ட காலத்தில், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களே தவிர, இவர்கள் பணம் கொடுத்து வாங்கியதல்ல என்பதை நான் சரித்திர பூர்வமாக விளக்கமுடியும், நிரூபிக்க முடியும். நஷ்ட ஈடு கொடுப்பதே மகா த்வறு. அதிலும், 12 மடங்கு கொடுப்பது என்றால், அது அநியாயம். அத்துடன் ஐந்து சத விகிதம் வட்டி என்று சொல்வது மிக மிக அநியாயம். ஆகவே, இதையும் செலக்ட் கமிட்டியார் பார்த்துத்தான் செய்யவேண்டும். எங்களைப் போன்றவர்கள் சொல்வதற்கு உரிமை படைத்த காரணத்திற்காகச் சொல்லிவிடுகிறோம், அதனுடைய லாப நஷ்டங்களையெல்லாம் அவர்களே பார்த்துக்கொள்ளட்டும்.

இவர்கள் எடுத்துக்கொள்வது முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருக்கிறது. விவசாயி வளப்படுத்தியிருக்கும் நிலத்தில் முதலாளிகள் தாங்களாகவே இஷ்டப்பட்டதை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஒரு முதலாளிக்கு 60 ஏக்கர் நிலம் இருக்கலாம். அந்த 60 ஏக்கர் நிலமும் நல்ல நிலமாக இருக்கமுடியாது. பத்து ஏக்கர் நல்லதாக இருக்கலாம் ; 15 ஏக்கர் இரண்டாம் பட்சமாக இருக்கலாம். 15 ஏக்கர் மோசமாக இருக்கலாம். இந்த மசோதாவின்படி அவருக்குத் தேவையான நிலங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஒரு தொழிலாளி உழைத்துப் பாடுபட்டு நன்றாக வைத்திருக்கும் நிலத்தைக்கூட முதலாளி இஷ்டப்பட்டால் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அந்த ஒரு உரிமை இருந்தாலே போதும் முதலாளிகளுக்கு. எந்த எந்த தொழிலாளி எங்கு எங்கு நன்றாகப் பண்படுத்தி வைத்திருக்கிறாரோ அதை மட்டும் பார்த்து எடுத்துக்கொள்வார்கள். இறுதியாக அளர் நிலங்கள், கழிசல் நிலங்கள் தான் கொடுக்கப்படும் என்பதை சர்க்கார் புரிந்துகொள்ள வேண்டும்.

சீதனம் பத்து ஏக்கர் என்று சொல்கிறார்கள். அந்தப் பத்து ஏக்கர் நிலம் யாருக்குச் சேருகிறது? எங்கே சேருகிறது? புருஷன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்ற அளவில் வாழ்க்கை நடத்தும் விவசாயத் தொழிலாளி சாகுபடி செய்வதை ஒரு ஏர் என்று சொல்வார்கள். எங்கள் தஞ்சை ஜில்லாவில் 3 ஏக்கர் 10 மா நிலம் இருந்தால் நல்ல முறையிலே இன்றிருக்கும் விவசாய முறைப்படியோ, ஜப்பானிய முறைப்படியோ, வரப் போகிற சைனா முறைப்படியோ, எந்த முறைப்படியானாலும், கண்டிப்பாக நல்ல முறையிலே உழுது பயிரிட முடியும். அந்த அளவுள்ள குடும்பம் 10 மா 3 ஏக்கருக்கு அதிகமாக, எந்த முறைப்படி விவசாயம் செய்தாலும் கூட, பாடுபடவே முடியாது, விவசாயம் செய்யவே முடியாது. வேண்டுமானால் மதிப்பிற்குரிய நண்பர்களில் சிலர் எங்கேயாவது புத்தகங்களைப் படித்துவிட்டு, அல்லது ஏதோ பேப்பரில் படித்துவிட்டுப் பேசலாமே தவிர, உண்மையிலேயே 3 ஏக்கருக்கு மேல் வைத்தால் ஒரு முடி நாற்றுக் கூட, 5 ஏக்கர், 20 ஏக்கர் கேட்கிறவர்கள் நட முடியாது என்று நான் சொல்கிறேன். உழுபவர்களுக்குத்தான் தெரியும். ஒரு மனிதன் மனைவி மக்களோடு சேர்த்து எவ்வளவு நிலம் சாகுபடி செய்யமுடியும் என்றால், மூன்று ஏக்கர் 10 மா நிலம் தான் செய்யமுடியும். 10 மா நிலம் இருந்தால், அவன் குடும்பம் ஆடம்பரச் செலவு இல்லாமல் நல்ல முறையிலே வாழ முடியும் என்று நாங்கள் மட்டுமல்ல, எங்கள் ஜில்லாவில் தெரிந்த விஷயம். ஆகவே, இந்த நேரடி விவசாயிகளுக்குக் கூடுமானவரை கொடுக்கப்படும்போது, கூட்டுறவுப் பண்ணை மூலமாகக் கொடுக்கும்போது, மூன்று ஏக்கர் விகிதாசாரத்தில் கொடுத்தால் போதும் என்று நான் நினைக்கிறேன்.

கோயில் நிலங்களைப் பொறுத்த வரையில், 200 ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். நான் அதைக் கூடுதல் என்றோ குறைவு என்றோ சொல்ல முன்வரவில்லை. 200 ஏக்கர் அவர்களுக்கே இருக்கட்டும். ஆனால், அந்த 200 ஏக்கர் நிலங்களை அவர்கள் பண்ணை சாகுபடி முறையில் சாகுபடி செய்யக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்வேன். அந்த 200 ஏக்கர் நிலத்தையும் குத்தகைக்குப் பயிரிடும் டெனன்ட்சுக்குக் கொடுத்து, நேரடி விவசாயிகளுக்குக் கொடுத்து, வேண்டுமானால், பழைய தஞ்சை ஜில்லா சட்டப்படி 40 வாரம் பெற்றுக் கொள்ளட்டும். அதற்கு மேல் இருக்கும் மற்ற நிலங்களை அவர்கள் பகிர்ந்து கொடுக்கவேண்டும்; கோயில் பாத்தியதை எடுபட்டுவிடவேண்டும். அப்படிச் சொல்லும்போது, "அது மாறான கருத்து, கோயில் சொத்துக்களை எடுக்கக் கூடாது" என்று சொல்கிறார்கள். கோயிலுக்கு ஊர்ஜிதமாக 200 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்று ஆன பிறகு, பாக்கியிருக்கும் நிலங்களுக்கு உழவுடை பாத்தியதை தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, தனக்குத் தேவையான மாடு கன்றுகள் வாங்குவதற்கோ, வீடு கட்டிக்கொள்வது போன்றவற்றுக்கோ அந்த நிலத்தை ஜாமீன் கொடுக்க முடியாது, என்ற நிலைதான் இந்த மசோதாவிலிருந்து தெரிகிறது. கோயிலுக்குச் சொந்தமாக இருக்கும் பத்தாயிரம் வேலி நிலத்தையும் எடுத்து ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்குக் கொடுத்தாலும், அதை ஜாமீன்கூட அவர்கள் கொடுக்க முடியாது. அம்மாதிரியான நிலைமையில் நிலத்தைக் கொடுப்பதால் உண்மையிலேயே பயன்பட முடியாது. கோயிலுக்கு என்று 200 ஏக்கர் என்று இருப்பதை 300 ஏக்கர் என்று வேண்டுமானால் கொடுத்துவிடுங்கள். ஆனால், பாக்கியிருக்கும் கோயில் நிலங்களையெல்லாம் கோயிலுக்குப் பாத்தியதை இல்லாத முறையில் எடுத்து, அவைகளை ஆர்ஜிதம் செய்து, கூட்டுறவு சொஸைட்டி வைத்துச் செய்தாலும், அல்லது சர்க்காரே நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தாலும், அதையொட்டி கடன் கிடைக்கும், மற்ற காரியங்கள் செய்ய அவர்களுக்கு நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குடியிருப்பு சம்பந்தமாக வரும்போது, கடந்த பத்து பதினைந்து வருஷங்களாக தஞ்சை ஜில்லாவில் குடியிருப்புத் தொல்லை அதிகமாகப் போய், இரவு பகலாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், விவசாயத் தொழிலாளிகள். அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு அமைச்சரிடமும்



சொன்னோம். அதற்காக வரும் சட்டம் குடியிருப்பைச் சொந்தமாக்கும் என்று நினைத்து உள்ளம் பூரித்தோம். ஆனால், மசோதாவைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது. ஒரு கிராமத்திலே 100 பேர்கள் இருந்தால், அந்த 100 பேர்களும் ஏர் பிடிப்பவர்கள் அல்ல. 80 பேர்கள் ஏர் பிடிப்பவர்களாக இருப்பார்கள். பாக்கி 20 பேர்கள் சலவைத் தொழிலாளிகள், குயவர்கள், தச்சர்கள், கொல்லர்கள் இதைப்போன்று சாதாரண வகுப்பார்களாக இருப்பார்கள். இவர்களும் சேர்ந்தால்தான் கிராமமாக இருக்கும். அவர்களெல்லோருடைய ஒத்துழைப்பைக் கொண்டுதான் கிராமத்திலே விவசாயம் நடைபெறமுடியும். நேரடியாக விவசாயம் செய்பவர்களுக்கு மட்டுந்தான் குடியிருப்புச் சலுகை, மற்றவர்கள் வீட்டை விட்டுப் போகவேண்டுமென்றால், அது சரியான முறையாக இருக்க முடியாது. கிராமத்திலே விவசாயம் சரிவர நடக்கவும் முடியாது. அவர்களுக்கும் குடியிருப்புச் சலுகை கொடுப்பது அவசியமாகும். அதோடு, விவசாயிகளுக்குப் பூரண உரிமை கொடுக்கப்படாமல், சில ஆண்டுகளுக்குத்தான் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செடிகள், மரங்கள் வைத்து, தண்ணீர் ஊற்றி, வளர்த்திருந்தாலும், ஒரு சிறு குச்சு கூட, வெட்டி வீடு கூட கட்ட முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் இந்த பில்படி.

இன்னும் சில விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆனால்..........

MR. SPEAKER : நாலரை மணிக்கு சபை எழுந்திருக்க வேண்டியது. தாங்கள் 18 நிமிஷங்கள் பேசிவிட்டீர்கள். இன்னும் இரண்டு நிமிஷங்கள் பேசி, பேச்சை முடித்துவிடுங்கள். அதுவரை சபை உட்கார வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

SRI K. B. S. MANI : தலைவர் அவர்களே, இந்த குடியிருப்பு சம்பந்தமாக சர்க்கார் அவர்கள் தயவு செய்து விவசாயிகளுக்கும், குடியிருப்போருக்கும் பூரண உரிமை கொடுக்க வேண்டும். அவர்கள் பயிரிட்ட மரங்களை வெட்டியாவது அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு உரிமை வேண்டும். ஏதாவது நிலத்திற்கு இடையூறு செய்தால் உடனே காலி செய்துவிடலாம் என்று சொல்லப்படுகிறது. ஒரு கொட்டு மண்ணை வெட்டி மண் சுவர் கட்டினால் கூட, இடையூறு என்று சொல்லி ஒரு கேஸ் போட்டு வெளியேற்றிவிடுகிறார்கள். குடியிருக்கமட்டும் அனுமதி கொடுக்க முடியாது. அவர்களுக்கு உண்மையிலே நல்லதொரு சகாயத்தை எதிர்பார்க்க இந்த மசோதாவில் அது சம்பந்தமாக நல்லதொரு திருத்தத்தை ஏற்படுத்தி, அதை மாற்றி அமைக்காவிட்டால், உண்மையிலேயே இதைக் காட்டிலும் தஞ்சை ஜில்லா பாதுகாப்புச் சட்டம் இருந்தால், எங்கள் ஜில்லா விவசாய தொழிலாளர்களுக்கு எத்தனையோ மடங்கு நேரிடையாக உதவியிருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டுவரப்போகிறோம் என்ற ஒரே வார்த்தையை அரசாங்கம் சொன்னதின் காரணமாக, நாட்டிலே இவ்வளவு பெரிய பரபரப்பு ஏற்பட்டு இவ்வளவு சீக்கிரம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பலபேர்களிடையே விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி இந்த பில்லை வரவேற்று, செலக்ட் கமிட்டியார் எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். 4-30 p.m.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Saturday, the 16th April 1960.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

*A.—Statutory Rules and Orders.*

* 100. *Notifications regarding the powers delegated to the Regional Inspectors of Municipal Councils and Local Boards in Muthurvaniangudi Panchayat (Ramanathapuram), Kottaiyur Panchayat (Ramanathapuram), Nelmadur Panchayat (Ramanathapuram), Pudanatham Panchayat (Salem), Puthiragoundampalayam Panchayat (Salem), Pulliangudi Panchayat (Tirunelveli), Pudupattinam village (Thanjavur), Boothangudi Panchayat (Thanjavur), Thethi village (Thanjavur), Karaiyur village (Thanjavur) and Kavanur village (Thanjavur). [Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act,* 1950 *(Madras Act X of* 1950). (11 *notifications.*).]

*B.—Reports, Notifications and other papers.*

† 60. *The Madras Chit Funds Bill,* 1960 *(L.A. Bill No.* 5 *of* 1960).

† 61. *The Legal Practitioners (Madras Amendment) Bill,* 1960 *(L.A. Bill No.* 6 *of* 1960).

† 62. *The Indian Penal Code and Code of Criminal Procedure (Madras Amendment) Bill,* 1960 *(L.A. Bill No.* 7 *of* 1960).

† 63. *The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill,* 1960 *(L.A. Bill No.* 8 *of* 1960).

* Placed on the table of the House on 9th April 1960.
† Circulated on 8th April 1960.



APPENDIX I.

[Vide answer to starred question No. 659 asked by Sri V. K. Kothan daraman at the meeting of the Legislative Assembly held on 14th April 1960, page 1 supra.]

PARTICULARS OF WEAVERS' CO-OPERATIVE SOCIETIES WHOSE CLAIMS FOR REBATE ARE PENDING SANCTION FOR MORE THAN ONE YEAR.

| *Serial number.* | *Number of societies.* | *Circle.* | *Pending from* | *Reasons for pendency.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 1 | Salem .. .. | March to June 1958. | Pending completion of enquiry regarding genuineness of claims. The claims are proposed to be rejected. |
| 2 | 1 | Coimbatore .. | May 1958 .. | Pending completion of enquiry into the affairs of the society. |
| 3 | 1 | Nagercoil .. | May 1958 .. | As there are cases of suspected accounts of production and sales, the rebate claims are under further scrutiny in the Deputy Registrar's Office. |
| 4 | 1 | Coimbatore .. | July 1958 .. | Pending completion of enquiry regarding the genuineness of rebate claims. |
| 5 | 1 | Dindigul.. .. | August 1958 .. | The rebate claims are to be rejected as there are malpractices in claiming the rebate. |
| 6 | 1 | Nagercoil .. | August 1958 .. | As there are cases of suspected accounts of production and sales, the rebate claims are under further scrutiny in the Deputy Registrar's Office. |
| 7 | .. | Tiruvallur .. | October 1958 onwards. | Previously the claims were not sanctioned as the societies have purchased yarn in the open market without obtaining non-availability certificate from Madras State Handloom Weavers' Co-operative Society. Later on these societies were exempted from the purchase of yarn in the open market. The rebate claims will be sanctioned by the Registrar of Co-operative Societies by 31st March 1960. |
| 8 | 1 | Nagercoil .. | December 1958. | The society is under section 45 enquiry. The claims will be admitted as soon as the enquiry is over. |

PARTICULARS OF WEAVERS' CO-OPERATIVE SOCIETIES WHOSE CLAIMS FOR REBATE ARE PENDING SANCTION FOR MORE THAN TWO YEARS.

| *Serial number.* | *Number of societies.* | *Circle.* | *Pending from* | *Reasons for pendency.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 1 | Tirukoyilur .. | July 1957 to August 1958. | Genuineness of rebate claims is doubtful and investigation into robate claims is proceeding. |

## APPENDIX III.

[Vide answer to the starred question No. 670 asked by Sri A. Vedarathnam, at the meeting of the Legislative Assembly held on 14th April 1960, page 16 supra.]

| | Name of Training Centre for Maternity Assistants. | Number of students. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | Government Hospital for Women and Children, Madras .. .. | 109 |
| 2 | Government Kasturba Gandhi Hospital for Women and Children, Madras. | 74 |
| 3 | Government Raja Sir Ramaswamy Mudaliar Lying-in Hospital, Madras. | 54 |
| 4 | Government Headquarters Hospital, Coimbatore .. .. | 25 |
| 5 | Government Headquarters Hospital, Salem .. .. .. | 29 |
| 6 | Government Headquarters Hospital, Vellore .. .. .. | 19 |
| 7 | Government Erskine Hospital, Madurai .. .. .. .. | 66 |
| 8 | Government Raja Mirasdar Headquarters Hospital, Thanjavur. | 59 |
| 9 | Government Hospital, Nagapattinam .. .. .. .. | 9 |
| 10 | Government Headquarters Hospital, Tiruchirappalli .. .. | 32 |
| 11 | Government Ranee's Hospital, Pudukkottai .. .. .. | 3 |
| 12 | Government Headquarters Hospital, Chingleput .. .. | 8 |
| 13 | Government Headquarters Hospital, Ramanathapuram .. .. | 9 |
| 14 | Government Headquarters Hospital, Ootacamund .. .. | 18 |
| 15 | Government Hospital, Coonoor .. .. .. .. .. | 16 |
| 16 | Government Headquarters Hospital, Cuddalore .. .. .. | 15 |
| 17 | Government Women and Children Hospital, Vannarpet .. .. | 26 |
| | Total .. | 571 |

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 675 asked by Sri P. G. Manickam, at the meeting of the Legislative Assembly held on 14th April 1960, page 18 supra.]

*The number of candidates who applied for admission during 1959-60, the number selected and the number of Harijans selected for each of the courses mentioned are given below :—*

| Name of the course. | Number applied. | Number selected. | Number of Harijan candidates selected. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| Health Visitors Course— | | | |
| 1 Regular State Scheme .. .. | 31 | 26 | 3 |
| 2 Integrated course of Midwifery-cum-Health Visiting. | No recruitment was made during 1959-60. | | |
| 3 Public Health Nursing Short Orientation Course— | | | |
| IVth Batch, May 1959 .. .. | 12 | 5 | Nil. |
| Vth Batch, August 1959 .. .. | 15 | 10 | Nil. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 16th April 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

* 679. Sri A. Govindasamy rose to put the question.

MR. SPEAKER : As the Hon. the Minister for Industries is not present in the House, I will take up question No. 684.

*Pre-Professional Course (Medicine).*

* 684 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of students in the pre-Professional Courses (Medicine), who appeared for the final examinations last year;

(*b*) the number passed; and

(*c*) the number of seats available in the first year M.B.B.S. during this academic year ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 414.

| | |
|---|---|
| (*b*) April 1959 .. .. .. .. .. .. | 366 |
| September 1959 .. .. .. .. .. | 40 |
| Total .. | 406 |

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, prior to 1st July 1945, the villages of Elavoor, Sunnambukulam, Opasamudram, Poongulam, Mangodu and Kallur, forming portions of Pulicat Lake were included in the Chingleput district. The absence of actual demarcation of the boundary between the Chingleput and the Nellore districts in the Pulicat lake area and the existence of only a conventional boundary led to disputes between the limeshell contractors of Chingleput and Nellore districts. To put an end to the disputes, the Government transferred with effect on and from the 1st July 1945, the above areas from the Chingleput district to the Nellore district. After the formation of the Andhra State, the Andhra Pradesh Government were addressed in December 1954 for their concurrence for the retransfer of the areas to this State. They however declined to accede to our request on the ground that the transfer was effected long before the formation of the Andhra State and the circumstances that led to the revision of the boundary in 1945 still held good. The question was taken up again in January 1958 when representations were received to secure the transfer of the shell-pits of the above villages but was not pursued. The villages have not been included in the list of areas to be transferred to the State under the Pataskar award. As the Pataskar award was accepted *in toto* by both the Governments, no further action was taken regarding the transfer of these villages.

## III.—ADJOURNMENT MOTION *RE* THE SERIOUS SITUATION CREATED BY THE ARREST OF WORKERS OF PETTAVAITHALI SUGAR FACTORY BY POLICE.

MR. SPEAKER : I have received notice of adjournment motion from the hon. Member, Sri S. M. Annamalai, to discuss a matter of urgent public importance, viz., the serious situation created by the arrest of workers of the Pettaivaithalai Sugar Factory by the Police.

To settle labour disputes, there is a machinery and the Assembly cannot be made the forum for settling labour disputes. Arrest of workers takes place in the normal course of law and therefore I do not see how this subject-matter can be discussed in this House. So, I rule the adjournment motion out of order.

## IV.—POINT OF ORDER *RE* MAIN OPPOSITION PARTY.

* SRI N. K. PALANISAMI : On a point of order, Sir. Is it in order and in accordance with conventions of parliamentary procedure for the main Opposition Party with less than 21 Members to function in this House as the main Opposition Party? I understand that the Indian National Democratic Congress held a meeting which was addressed by the Leader of the All-India Swatantra Party who asked its Members to oppose the Land Ceiling Bill which is being discussed in this House. They agreed to get signatures of the Members in support of the proposal but some of the progressive Members of the



16th April 1960] [Sri N. K. Palanisami]

Party opposed it and came out of the Party. Thus there is a split in the party and I want to know whether this information has been carried to you . . .

MR. SPEAKER : I am afraid I am not aware of anything that the hon. Member is saying. It may be so but I am not aware of any split or reduction in the strength of the members of the Main Opposition Party. At the present moment the strength of their members is equal to the quorum that is necessary for the House. I therefore recognize the hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliyar, as the hon. the Leader of the Main Opposition. But if at any stage I come to know that the strength of his party is diminished, I hope the hon. the Leader of the Opposition will tell me about it—then the hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar will become the leader of one of the Opposition Parties instead of being the Leader of the Main Opposition. Therefore, there is no point of order and I cannot come to the rescue of the hon. Member, Sri Palanisami.

## V.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS ANATOMY (AMENDMENT) BILL, 1960.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Anatomy (Amendment) Bill,[a] 1960.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Anatomy (Amendment) Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (2) THE MADRAS CORNEAL GRAFTING BILL, 1960.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I beg leave to introduce the Madras Corneal Grafting Bill,[a] 1960.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Corneal Grafting Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (3) THE MADRAS JUDICIAL PROCEEDINGS (REGULATION OF REPORTS) BILL, 1960.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Judicial Proceedings (Regulation of Reports) Bill, 1960.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 16th April 1960.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Judicial Proceedings (Regulation of Reports) Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(4) THE MADRAS MINING LEASES (ACQUISITION OF RIGHTS) BILL, 1960.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I beg leave to introduce the Madras Mining Leases (Acquisition of Rights) Bill,* 1960

MR. SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras Mining Leases (Acquisition of Rights) Bill, 1960'.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

(5) THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960)—*cont.*

9-30 a.m. SRI M. WILLIAM: Mr. Speaker, Sir, I welcome this Bill. I feel it is really a beneficient reform. Of course, it is quite in keeping with the goal of socialism to which this Government have committed themselves. Though Bills of this type are new to India, in western countries, probably with the exception of the United States of America and Great Britain, ever since the first world war, expropriation of lands by proper legislative measures has been effected. So far as Great Britain is concerned, the tenants' position was so very secure that they never clamoured for any agrarian reform. The landlords also considered themselves as gentlemen farmers, and they never wanted to harass the tenants. They were satisfied with the prestige and the social status of owning large extents of land. So much so, nothing can be said now that this Bill is a reactionary one. So far as this Bill is concerned, I can boldly say that it is more liberal in its character than the Bills that have been initiated in other States. We find that 30 standard acres have been fixed as the ceiling. So far as Kerala is concerned, 15 acres of double crop lands are fixed as the ceiling. So far as Orissa is concerned, 25 acres are fixed as the ceiling. In Mysore, they have fixed three family holdings as the ceiling on the calculation that each family holding must yield a net income of Rs. 1,200. So the total comes to Rs. 3,600 per year. On the basis of net income, they have fixed the ceiling at Rs. 3,600. Most of the other States have adopted thirty standard acres as the ceiling. In regard to Andhra Pradesh, we find that they have taken a net income of Rs. 5,000 as the ceiling.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 16th April 1960.





This Bill has a distinct advantage in that different kinds of lands have been graded and standard acres have also been fixed. So much so, the agricultural population are not left to the whims and fancies of the officials. In Andhra Pradesh, the quality of the lands and the extent of the lands are left to be decided by the officers. This means it would only add to the vexations of the agriculturists. This Bill is free from that defect.

As regards compensation also, fair and equitable compensation has been fixed for surplus lands. Of course, there are some objectionable features also in the Bill. So far as provision relating to mortgages is concerned, the mortgagee is asked to surrender the land to the landlord, and for the surplus amount that is due to him, he is asked to seek remedy elsewhere. This is not an equitable provision. The mortgagee must be paid the entire amount either by the Government or by the landlord. I think this matter will be considered by the Joint Select Committee.

Then there are some provisions regarding landlords themselves. There is the provision that a landlord who is not assessed to income-tax, sales tax or profession tax, has got the right to resume only 5 acres for his personal cultivation. When the ceiling is limited, it is only fair and equitable that landowners are allowed to resume their lands. Only five acres are allowed to be resumed. Of course, this may be increased to ten acres, though the landlord's right to resume the entire holding should not be disputed. In the Bill I find that there is no ceiling fixed on the tenant's possession of lands. I think the limit of 30 acres may apply to him. If the landlord is not entitled to resume more than five acres, how can the tenant retain thirty acres? I think some provision in this direction will be made.

So far as distribution of surplus land is concerned, it is stated that the tenant is entitled to get 30 acres including the land in his occupation. If the landlord is not allowed to resume more than five acres, how can the tenant be allowed to retain 30 acres? This aspect of the question must be considered, and suitable provision should be made.

This Bill is silent in regard to one important matter. Those who are assessed to income-tax, sales tax and profession tax, do not get any remedy. Of course they are the owners, and they do not get the right to resume their lands. There may be persons who are paying income-tax (petty Government officials) and who may be working in places elsewhere, and they might have given their lands to their tenants on waram or lease. They may like to resume their lands on retirement from service. As it is, there is no provision for this set of persons, who are assessed to income-tax, sales tax or profession tax, to resume their lands on retirement from service. Such a provision is highly necessary, because Government officials who are getting less than Rs. 100 per month, when they retire from service, have to fall back upon their lands. This Bill is silent in this matter.

Then, Sir, there are certain other objections also. There are provisions governing leases. There are loopholes for circumventing the effect of this Bill. The constitution of the Sugar Board and the lands to be appropriated for sugarcane cultivation, are mentioned

in this Bill. But in the Bills that have been initiated in other States, we find that lands which are already grown with sugarcane are exempted. Here much latitude is given. So much so, in order to escape from the proposed ceiling, it is quite possible that the lands may be converted into sugarcane fields and exemption asked for in respect of those lands. In this way, the effect of this Bill may be defeated. If our Government feel that the sugar industry can be successfully run in this State, they themselves can run it, and the surplus lands taken away can be set apart for this purpose, instead of leaving them to private individuals. This will only result in several mushroom corporations or factories being set up for overcoming the effect of this Bill. I think this matter also will be taken note of by the Hon. Minister.

Then, Sir, we have got a hierarchy of officers. We find that lands have been graded. The work will not be so very complicated. There is the Authorized Officer. Then comes the Land Tribunal. Then comes the Land Board. Then there is the Land Commissioner for Settlement—a hierarchy of officers. These officers will only add to the cost of the administration. From the decision of the Land Tribunal, a right of appeal to the District Court can be provided in this Bill with revisionary powers to the High Court. By doing so, this colossal expenditure can be avoided. In the Land Board, there are five persons. The Board is constituted for two purposes. One is for the purpose of granting exemption for lands required for providing grazing grounds, and the other is for lands required for plantations or lands on which there are plantations already. This can be done by the Collector, and his powers can be controlled by the higher authorities, instead of creating this Land Board and increasing the cost of the administration. This will improve matters. The matter can be considered by the Collector and then by the departmental heads. Such a provision can be made and this huge expenditure avoided.

Sir, with regard to the Sugar Factory Board, my humble submission is that it is absolutely not necessary. The work can be taken by the Land Commissioner or by the Director of Agriculture who is well-versed in that sphere of work.

With regard to exemption of lands, I beg to submit that there are certain loopholes. The entire Nilgiris district and Kodaikanal have been excluded. The whole area in those places cannot be said to be less fertile. There are portions in those areas which are more fertile than the standard acres in other places. That being the case, I do not know why the entire district should be excluded from the purview of the Act.

As for orchards, topes, etc., there is another loophole. The landlords are given the option to choose their own lands. If they are satisfied that the orchards are sufficient for their living, they need not be exempted on that score.

In this connection, I wish to state that Plantations above a certain extent, say, 100 acres, must be nationalized. We find that the Government have already taken to rubber cultivation, and taken to it very seriously. That is why, I suggest that estates above 100 acres may be taken over. I say all these things because of the clear inequalities that exist in the different sources of income.



V211, 31 N60
N61-3133

So far as the Kanyakumari district is concerned, it is provided that there will be re-survey and there will be ryotwari settlement and also imposition of additional taxes. There, we find that the basic system of taxation in force is Rs. 1-9-0 per acre, irrespective of the nature of the soil. In addition to it, there is also the agricultural income-tax. All these systems are working harmoniously. As for the standards those that are laid down, in the Bill seems to be sound. So, there is absolutely no difficulty in taking the surplus over the standards already settled. With regard to re-survey, I may submit that survey operations of the taluks had been done in a most beautiful way and there is no need to disturb it. However, there are some portions which were left out in the last settlement operations. Large tracts of land were not completely demarcated. In certain cases, though survey numbers had been given, the subdivisions had not been given. These lands may now be properly demarcated and the authorities might take up the re-survey of such portions of land.

With regard to the lands in Nanjilnad which are fed by the Kodaiyar Project, in addition to the basic tax of Rs. 1-9-0, the people are also paying water-cess for the last over 40 years. They have paid by way of water-cess more than the amount that has been invested on the Dam. There was agitat[illegible]back that the water-cess must be abolished. Alrea[illegible]their due share. This matter may also be tak[illegible] account by the Hon. Minister, while re-surveying and r[illegible] the tax in the K[illegible]umari district.

61330

Sir, our goal is socialism. [illegible] achieve this, all sph[illegible] of activities are to be controlled and inequalities that exist in di[illegible]rent sources of income in our country [illegible]re to be removed. If one [illegible]t of people alone are hit and the oth[illegible] sets of people are allo[illegible]d to enjoy without any limit on their in[illegible], there will be lo[illegible]unrest and heartburning. So, every source of income must [illegible]ntrolled by similar legislation. There is a standing [illegible] th[illegible] the urban population are the more favoured peop[illegible] One [illegible] the City can acquire any number of acres of land. Why should it be so? Why should a man in the City alone be allowed to own 30 to 40 acres of land? Why should there not be a restriction on the number of acres that a family in the City could hold? That is absolutely necessary. I speak these things as I feel that the entire community should work in harmony as a happy family. Then only, the Welfare State can flourish. With these words, I thank you, Sir, and resume my seat.

MR. SPEAKER: The hon. Member Sri K. R. Nallasivam may speak. He can speak for 20 minutes.

SRI K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, காஷ்மீரத்தில் ஆரம்பித்த நிலச் சீர்திருத்தத் திட்டமானது கன்னியாகுமரியைக் கொண்ட நமது ராஜ்யத்தில் இன்று முடிவடைந்திருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவில் ஒரு சில ராஜ்யங்களில் இத்தகைய நிலச் சீர்திருத்த மசோதாக்கள் வந்தன. கடைசியாக நமது ராஜ்யத்தில் இந்த மசோதா வந்திருக்கிறது. இந்த மசோதா கூடியவரையில் இதர ராஜ்ய மசோதாக்களிலுள்ள முற்போக்கான அம்சங்களை அதிகமாக கொண்டிருக்கிறதா என்று பார்க்கும்போது, இது கூடியவரையில் இதர ராஜ்ய மசோதாக்களிலுள்ள முற்போக்கான அம்சங்களை குறைவாகவே எடுத்துக்கொண்டு பிற்போக்கான மசோதாவாகவே

அமைந்திருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த மசோதா வரப்போகிறது என்று தெரிந்தவுடன், அனேகமாக இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்தே நமது ராஜ்யத்தில் பெருவாரியான நிலச்சுவாந்தார்கள் தங்கள நிலங்களை வேகமாக விற்றுவந்தார்கள். அது மட்டுமன்றி, அவர்கள் தாங்கள் வைத்திருக்கும் மீதி நிலங்களை தங்கள் குழந்தை குட்டிகள் எல்லோருக்குமாக பாகம்போட்டு சர்க்காருக்கு தங்கள் நிலம் கொஞ்சமும் கிடைக்காதபடி செய்துவைத்திருக்கிறார்கள். மேலும் இந்த மசோதா சென்ற டிசம்பர் மாதத்தில் இங்கே வருவதாக இருந்தது. ஆனால் அது ஒத்திப்போடப்பட்டு இப்போதுதான் இது இங்கே வந்திருக்கிறது. எனவே இந்தக் காலத்திற்குள் நிலச் சுவாந்தார்கள் தாங்கள் செய்யக்கூடிய பாக்கிக் காரியங்களையெல்லாம் செய்துவிட்டார்கள்; அவர்கள் தாங்கள் செய்ய வேண்டிய மிச்ச சொச்சம் காரியங்களையும் செய்து சர்க்காருக்கு கொஞ்சமும் அவர்களுடைய நிலங்கள் கிடைக்க வழிவகையில்லாதபடி செய்துவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இந்த மசோதா இங்கே வந்திருக்கிறது. இந்த மசோதா கடைசியில் வந்துவிட்டது என்று பெருமகிழ்ச்சி கொள்ளலாமே தவிர, இந்த மசோதா வந்ததால், பரவலாக, இந்த ராஜ்யத்தில் உள்ள நிலமில்லா விவசாயிகளுக்கு நிலம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்பபதற்கில்லை. இன்றைக்கு இருக்கும் நிலைமை அப்படியே இருக்கிறது. ஏதோ ஜனங்களுடைய உணர்ச்சியை வேறு திசையில் திருப்புவதற்கோ, அவர்களுடைய ஆவலை அடக்குவதற்கோ, காங்கிரஸ் சர்க்கார் அவர்கள் சொல்லும் சோஷலிஷ பாணி சமுதாயத்தை உருவாக்கி வருகிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை மக்கள் மனதில் உண்டாக்குவதற்காகவேதான் இந்த மசோதா பயன்படக்கூடுமே தவிர, இந்த மசோதா வந்தால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பலனடைந்துவிடுவார்கள் என்று சொல்ல முடியாது.

இந்த மசோதாவில் ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு நிலம் உடைமையாக இருக்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் அது பயங்கரமாக இருக்கிறது. நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள நிலங்களின் மொத்த அளவையும் விவசாய மக்களின் எண்ணிக்கையையும் பார்க்கும்போது, இந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற வரம்பு மிக அதிகமானது என்று நாங்கள் கருதுகிறோம். இந்த விஷயத்தில், நன்றாகப் பரிசீலனை செய்து சரியான அபிப்பிராயத்தைத் தெரிவித்தவர்கள் குமரப்பா கமிட்டியினர்தான். ஸ்ரீ. குமரப்பா அவர்கள், ஐந்து பேர் கொண்ட ஒரு சாதாரண குடும்பம் ஐந்து ஏக்கர் நிலத்தில்தான் தானாகப் பாடுபட முடியும் என்றும், அதைப் போன்ற மூன்று பங்கு அளவைத்தான் நில உச்ச வரம்பாக நிர்ணயிக்க வேண்டும் என்றும் 10 ஆண்டுகளுக்கு முன்பே விசாரணைக்குப் பிறகு அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றியெல்லாம் சர்க்கார் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ராஜ்யத்தில் உள்ள சாகுபடி நிலங்கள் எத்தனை ஏக்கர்கள், ராஜ்யத்திலுள்ள விவசாயிகள் எத்தனை பேர், குத்தகைதார்கள் எத்தனை பேர் என்றெல்லாம் கணக்கிட்டு இந்த நில உடைமை உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்திய ராஜ்யத்திலுள்ள நில விகிதாசார அளவை மதிப்பிட்டால் நிச்சயமாக நில உடைமை உச்சவரம்பை 15 ஏக்கருக்கு மேல் நிர்ணயிப்பது அநீதியாகும். மேலும் இந்த மசோதா வந்த பிறகு சர்க்காருக்கு அதிகமான நிலம் நிச்சயம் கிடைக்காது. நமது ராஜ்யத்தில் நில உடைமை உச்ச வரம்பை 15 ஏக்கராக நிர்ணயிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

விதி விலக்கைப் பொறுத்தவரையில், நல்ல வருமானம் ஈட்டக்கூடிய நிலங்கள் அத்தனைக்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கரும்பு ஆலைகளுக்குப் பயன்படக்கூடிய நிலங்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு என் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலங்களை 10, 15 ஏக்கர்களாகப் பிரித்துக் கொடுத்துவிட்டால் கரும்பு உற்பத்தி எப்படிக் கெட்டுப்போய்விடும் என்று எனக்குத் தெரியவில்லை. கரும்பு





உற்பத்தியிலும் குறைந்த அளவு நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிக விகிதத்தில் உற்பத்தி செய்கிறார்கள். 100 ஏக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்பவர் ஏக்கருக்கு 20, 30 டன் கரும்புதான் உற்பத்தி செய்வார், ஆனால் 5 ஏக்கர் நிலத்தில் கரும்பு உற்பத்தி செய்பவர் ஏக்கருக்கு 50, 60 டன் உற்பத்தி செய்வார். நடைமுறையில் இப்படித்தான் இருக்கிறது. எந்த விவசாயப் பொருள் உற்பத்தியாயிருந்தாலும், குறைந்த அளவு நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிக விகிதத்தில் உற்பத்தி செய்ய முடியுமே தவிர அதிக அளவு நிலம் வைத்திருப்பவர்கள் அதிக விகிதத்தில் உற்பத்தி செய்ய முடியாது. அது இந்த நாட்டில் மாத்திரம் அல்ல. சீனாவை எடுத்துக்கொண்டால் நேரிடையாக விசாரித்து நாங்கள் தெரிந்து கொண்டிருக்கிறோம். கம்யூனிச முறையில் அவர்கள் பரவலாக விவசாயம் செய்கிறார்கள். ஆனால் ஜப்பானில் அதிகபட்சம் 7½ ஏக்கராதான் வைத்துக்கொள்ளவேண்டும் என்று இருக்கிறது. விகிதாசார அடிப்படையில் பார்த்தால் சைனாவில் உற்பத்தி செய்வதைவிட ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். கரும்புக்கு மாத்திரம் அல்ல, காப்பி முதலியவற்றுக்கும் அப்படித்தான்.

(Srimathi K. Kamalambujammal in the Chair.)

ஆகவே நிச்சயமாக சிறிய அளவில் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அதிகமாகவே உற்பத்தி செய்கிறார்கள். இங்கேதான் அதிகமாக ஓரளவுக்குச் சாகுபடி செய்ய முடிகிறது. அதிகப்படியான நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களால் சாகுபடி செய்ய முடிகிறது இல்லை. ஆகவே அதிகப்படியாக நிலம் வைத்துக்கொள்வதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை: நிச்சயமாக அவர்கள் உங்களுக்குச் சாதகமாக இருப்பவர்கள் என்று நம்ப முடியாது. அவர்கள் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள். வாங்கிக் கொள்கிற அதிகப்படியான விதி விலக்கை எல்லாம் பெற்றுக்கொண்டு பிறகு அவர்கள் சுதந்திராக் கட்சிக்கு ஓடிவிடுவார்கள். ஆகவே இப்படிப்பட்டவர்களை தங்களைச் சேர்ந்தவர்களாக எண்ணிக்கொண்டு இன்றைய தினம் விதிவிலக்கு அளிப்பதனால் என்ன பயன் அடையப்போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

விதிவிலக்குச் சம்பந்தமாக இன்னும் சிலது சொல்ல விரும்புகிறேன். பொதுவாக கால்நடை வளர்ப்பு என்றோ, பால் பண்ணை என்றோ அதிகப்பட்ட நிலம் வைத்துக்கொள்ள ஒரு சிலருக்கு அனுமதி அளிப்பது சரியானது அல்ல. இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் கால்நடை வளர்ப்பில் இன்னார் மிகச் சிறந்தவர் என்று பலராலும் சொல்லப்படலாம். அவர்களால்தான் சிறந்த கால்நடை வளர்க்கப்படுகிறது, பாதுகாக்கப்படுகிறது என்றெல்லாம் நினைப்பதானது வெறும் மன மயக்கம்தான். சாதாரணமாக பழைய கோட்டைப் பண்ணை என்று இருக்கிறது. ஆயிரக்கணக்கான மாடுகளை அவர்கள் வைத்திருக்கலாம். அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் அங்கே சென்று பார்த்து ஆஹா ஆஹா என்று சொல்லி வரலாம். ஆனால் நான் சொல்கிறேன். அதைவிடச் சிறந்த கால்நடைகளை 50 ஏக்கராவுக்குள் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் மிகச் சாதாரணமானவர்கள் எங்கள் பகுதியில் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் வேண்டுமானால் யாரையும் அழைத்துச் சென்று காட்டத் தயாராக இருக்கிறேன். ஆனால் பெரிய பண்ணை என்று சொல்லிக் கொண்டு, பலவிதமான சலுகைகளைப் பெற்றுக்கொண்டு கால்நடைகளைப் பராமரிக்கிறவர்களால் பொதுமக்களுக்கு நன்மை உண்டா என்றால் இவர்கள் ஒன்றும் அதிகமான காளைகளை உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விவசாயிகளுக்குக் கொடுத்து உதவுவது இல்லை. 750 ரூபாய் பொறுமான காளைகளை இந்தப் பண்ணையில் வளர்க்கப்பட்டது என்ற பெயரை வைத்துக்கொண்டு ஆயிரம், ஆயிரத்து ஐநூறு என்று விற்று லாபம் அடைந்துவருகிறார்கள். ஆகவே கால்நடை மேய்ச்சல் நிலத்திற்கு என்றோ பால்பண்ணைக்கு என்றோ ஒரு சிலருக்குச் சலுகை அளிப்பது பிரயோசனப்படாது என்று சொல்லவிரும்புகிறேன்.

[Sri K. R. Nallasivam] [16th April 1960

இந்த மசோதாவில் இப்படி பலவிதமான விதிவிலக்குக் கொடுக்கப்படுவது எப்படி இவர்களது கொள்கைக்குப் பொருந்தும் என்று தெரியவில்லை. மற்றவர்களுடைய கருத்து அதிகமாக இதில் புகுத்தப்பட்டிருப்பது சரியல்ல. இன்றைக்கு நஷ்டஈடு கொடுக்கிற பிரச்னையை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் இதர ராஜ்யங்களில் கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாக்களில் உள்ள முற்போக்கான அம்சங்கள் கூட இல்லை. இதில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எவனும் பாடுபட்டு உழைத்து நிலத்தில் இருந்து வருகிற வருமானத்தைக்கொண்டு நூறு எக்கரா, 500 எக்கரா வாங்க முடியாது. வாழ்நாள் முழுவதும் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டிப் பாடுபட்டால்கூட 50 எக்கராவுக்கு மேல் உழைத்து வாங்க முடியாது. அப்படி இருக்க இன்றையதினம் எத்தனை நிலச்சுவாந்தார்கள் சாதாரண விவசாயிகளை தங்கள் நிலம் என்று சொல்லி ஏமாற்றி விற்று சுருக்கிக்கொள்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். கோயில் புறம்போக்கு, ஓடை புறம்போக்கு என்று இதுவரையிலும் இருந்த நிலங்களை எல்லாம் விவசாயிகளுக்கு—நிலச் சீர்திருத்தம் வரப்போகிறது என்றவுடனேயே தங்கள் நிலங்களை விற்பது போல விற்று இருக்கிறார்கள். ஏழை விவசாயிகளும் அவசரத்தில் பத்திரங்களை கூடப் பார்வையிடாது வாங்கியிருக்கிறார்கள். இதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்தால் பலபேர் வருஷக்கணக்காக சிறைக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் கூட ஏற்படலாம். அப்படி இருக்க நஷ்டஈடு சம்பந்தமாக இந்த மசோதாவில் வைத்திருக்கிற முறையானது மிகவும் ஆபத்தானது. அதிகாரிகளும், நிலச்சுவாந்தார்களும் ஒன்று சேர்ந்தால் இன்றையதினம் மார்க்கெட் விலைக்கு அதை விற்றுக்கொடுக்கக்கூடிய தரகராக, ஏஜெண்டாக சர்க்காரைச் செய்துவிட முடியும். இந்த முறையில் நஷ்டஈடு அமையக் கூடாது. நிலத் தீர்வை அடிப்படையில் 40 சத விகிதம், 50 சத விகிதம் என்று இன்றைய தினம் டெல்லி, திருபுரா, மணிபூர் முதலிய இடங்களில் சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் அப்படிக்கொண்டு வரவேண்டாம். நிலத்தீர்வை அடிப்படையில் 500 மடங்கு கொடுப்பது என்றாலும்கூட எக்கராவுக்கு 2 ரூபாய் என்று 1,000 ரூபாய்க்கு நஷ்டஈட்டைப் பொறுத்தவரையில் நிர்ணயிப்பது என்பது சரியானதாக இருக்கக்கூடும்.

அதற்கு அடுத்தப்படியாக ஸ்டாண்டர்ட் எக்கர், என்னைப் பொறுத்தவரையில் உயர்ந்த பட்சம் 15 ஸ்டாண்டர்ட் எக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு பேசுகிறேன். மூன்று போகம் விளையக்கூடிய நஞ்சை பிரதேசத்தில் ஒரு எக்கரா என்பது, காங்கேயம், வடாற்காடு போன்ற மானுவாரி பிரதேச நிலத்தில் ஒரு எக்கருக்கு சமம் என்று சொல்வதை ஒத்துக்கொள்ள முடியாது. காளிங்கராயன் வாய்க்கால் பிரதேசத்தில் நஞ்சை நிலம் ஒரு எக்கராகவும், காங்காயம் பிரதேசத்து நான்கு எக்கரவும் சமம் என்றால் இங்கே என்ன விளைகிறது? இதில் ஒன்றுக்கு ஆறு என்ற அடிப்படையிலாவது வைக்கலாம். இந்த ரேட்டில் புதிய திட்டம் 1–60 என்று இருக்கிறது. இதை 2 எக்கர் என்று வைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

10 a.m. கோயில், மடங்கள் நிலங்களைக் குறித்து பெரிய கூச்சல் இருக்கிறது. கோயில், மடங்களின் நிலங்களை எடுத்துக்கொண்டால், ஆண்டவன் ஊரை விட்டே போய்விடுவான், கோயில் குட்டிச் சுவராகப் போய்விடும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. விவேகானந்தர் என்ன கூறுகிறார் என்பதை நாம் இங்கே சற்று சிந்திக்க வேண்டும். கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. விவேகானந்தர் சொல்லுகிறார், ஆண்டவன் எங்கே இருக்கிறார் என்பதைப் பற்றி. ஏழைகளின் உழைப்பில், குடிசையில், உழைக்கின்ற வலுவான கரங்களில் ஆண்டவன் இருக்கிறான் என்கிறார். அவர் சிறந்த முறையிலே மதத்தைக் காப்பாற்ற வந்த விவேகானந்தர் அவர்கள். ஆண்டவன் கோயிலுக்குள்தான் இருக்கிறான். வேறு எங்கும் இல்லை, ஆகவே, கோயிலுக்கு நூற்றுக்கணக்கான எக்கர் நிலம் வேண்டுமென்று சொல்வது அநியாயத்திலும் அநியாயம் என்று நான் சொல்வேன், ஏனென்றால், லட்சோபலட்சம் மக்கள், கோடிக்கணக்கான ஏழை மக்கள், நாட்டிலே நிலம் இல்லாமல் பாடுபட்டு உழைக்க வசதி இல்லாமல், பாடுபட்டும் சரியாகச் சாப்பிடக்கூடிய நிலை இல்லாதபோது எல்லா நாடுகளும் முன்னேறிக்கொண்டிருக்க சோற்றுக்கு வழியில்லாத நிலையில் கோடிக்கணக்கான மக்கள் நம் நாட்டிலே திண்டாடிக்கொண்டிருக்கும்போது, ஆண்டவனுக்கு ஆயிரக்கணக்கான எக்கர் நிலம் வேண்டும், இல்லாவிட்டால் ஆண்டவன் போய்விடுவான் என்று சொல்வது அநியாயமானது, ஆண்டவன் மக்களுடைய மனதிலே வாழவேண்டும். என்றைக்கு இந்த நாட்டிலே ஆண்டவனுக்குக் கோயில்களும் மடங்களும் கட்டி, அதற்கு வேறுமாதிரியான படாடோபங்களை ஆரம்பிதார்களோ, அன்றைக்குத்தான் மதத்திலே மூட நம்பிக்கை புகுந்தது, உண்மையான பக்தியெல்லாம் குறைந்து பலவீனம் அடைந்தது என்று நான் சொல்வேன். அனேக மடங்களை எடுத்துக்கொண்டால், அவை காமக் கூடங்களாக இருக்கின்றன. கோயில்களைப் பார்த்தால், அங்கே பக்தியே இல்லாதவர்கள் தான் பூசை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். எவ்வளவு பக்தி சிரத்தை நம்மிடத்தில் இருக்கிறதோ அந்த பக்தி சிரத்தைகூட கோயிலிலே பூசை செய்கிறவர்களிடம் காணப்படவில்லை. அதற்காக கோவிலையே இடிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. உண்மையாக நான் சொல்கிறேன் நம்முடைய கோயில்கள் ஜனங்களுடைய பக்தியிலே வாழ வேண்டும். பக்தி இருந்தால் சிரத்தை இருக்கும். மக்களும் அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள். திருப்பதியைப் பாருங்கள். அங்கே மக்கள் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள். லட்சக்கணக்காக, அள்ளிக் கொடுக்கிறார்கள். எந்த அளவு பக்தி இருக்கிறதோ அந்த அளவு ஜனங்கள் அந்தக் கோயிலுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, மனித தெய்வங்கள், நடமாடும் தெய்வங்கள், நாம் பார்க்கும் தெய்வங்கள், வோட்டுப் போடுகிற தெய்வங்கள் இவர்களையெல்லாம் விட்டு எங்கோ ஆண்டவனுக்கு நிலம் வேண்டுமென்று சொல்வது நியாயம் அல்ல.

கடைசியாக நான் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது, விவசாய நிலங்களுக்கு மட்டும் வரம்பு வைத்துவிட்டு, மீதிச் சொத்துக்கு எந்தவிதமான வரம்பும் இல்லை என்று இருக்கிறது. மாத வருமானம் 5,000 ரூபாய், 50,000 ரூபாய் வருமானம் இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்று, விவசாய வருமானத்தைத் தவிர, மற்ற துறைகளிலே இருக்கலாம் என்றால், எப்படி சமத்துவத்தைக் கொண்டுவர முடியும் என்று நான் கேட்கின்றேன். தயவு செய்து, இந்தச் சபை முடியும் காலத்திற்குள்ளாவது இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் விரும்புவது எப்படி நிலவுடமைக்கு உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டிருக்கிறதோ, அதுபோலவே, சம்பள வருமானம், மற்றும் இருக்கும் வருமானங்கள் மீதெல்லாம் ஏதாவது திட்டவட்டமாக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்பது. இப்பொழுது கொண்டுவந்திருக்கும் சட்டம் ஏதோ தேர்தலுக்கு ஓரளவு பயன்படலாமே தவிர, மக்களுக்குப் பயன்படக்கூடிய மாதிரி இருக்காது. விவசாயத்தின் மூலம் பெறக்கூடிய வருமானத்தை விட மற்றுமுள்ள தொழில்மூலம், வியாபாரத்தின்மூலம் பெறக்கூடிய வருமானம் ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கிறது. லாபமும் விவசாயத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் பெறுமான நிலத்தை வைத்துக்கொண்டு ஒரு விவசாயி ஐந்து லட்சம் ரூபாய் சம்பாதிப்பது என்பது பெரிய காரியம், மிகக் கடுமையான காரியம். ஆனால், அதே ஐயாயிரம் முதலீடு போட்டுவிட்டு வியாபாரம் மூலம் வருஷமொன்றுக்கு இரண்டு லட்சம் சம்பாதிக்க முடியும், தொழில் வைத்து நடத்துகிறவர்கள் கணக்கை நேராகப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். 80 லட்ச ரூபாய் மூலதனம் போட்டு பேட்டைவாய்த்தலையில் கரும்பாலை வைக்கப்பட்டது. இந்த வருஷத்திலே மாத்திரம் அதனுடைய லாபம் $12\frac{1}{2}$ லட்சம் ரூபாய். இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், எவ்வளவு பெரிய நிலச்சுவாந்தாரராக இருந்தாலும் எந்த ஒரு நிலச்சுவாந்தாரும் நிச்சயமாக $12\frac{1}{2}$ லட்ச ரூபாய் லாபம் பெற முடியும் என்ற நம்பிக்கை இடையாது. புள்ளி விவரங்களைப் பார்த்தால் தெரியும். வியாபாரமாகட்டும், தொழிலாகட்டும், அல்லது சம்பள



16th April 1960] [Sri K. R. Nallasivam]

வருமானம் ஆகட்டும், நிச்சயமாக அதற்கும் உயர்ந்த பட்ச வரம்பு இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கவேண்டும். நாடு பூராவிலும் சகல பகுதியினருக்கும், சகல துறைகளுக்கும் உயர்ந்த பட்ச வரம்பு நிர்ணயித்தால்தான் சோஷலிசத்தின் முதல் படியிலே கால் வைத்தவர்கள் ஆவோம். அப்படிப்பட்ட நிலை இல்லாத வரையில் வெறும் வெத்து வேட்டாக, பிரசாரப் புள்ளியாகத்தான் இருக்கும் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI G. NARAYANASWAMI NAIDU : சபைத் தலைவி அவர்களே, ரொம்ப நாட்களாக எதிர்பார்த்த, மிராசுதார்களுக்கு ஒரு பக்கம் பயத்தையும், கிசான்களுக்கு ஒரு பக்கம் ஆவலையும் தூண்டிவிட்ட இந்தச் சட்டம் பாஞ்சாலி பெற்ற குழந்தை மாதிரிதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரே ஒரு காரியத்திற்கு மாத்திரம் பயன்படலாம் இந்தச் சட்டம் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது எந்தத் தொழிலை யார் செய்தாலும், மேலும் மேலும் அந்தத் தொழிலை விருத்தி செய்யவேண்டும். அதிகப்படுத்தவேண்டும் என்ற ஆவல் எழுவது சர்வ சாதாரணமான சம்பவம். இரும்புக் கடை வைத்தவன், ஏராளமான லாபம் வந்தால் மேலும் இரும்புக் கடைகள் வைக்கவும், இன்னும் சில இடங்களில் கிளைகள் ஏற்படுத்தவும் ஆவலுறுவான். பத்திரிகை நடத்துகிறவர்கள், முதலில் மாதப் பத்திரிகை ஆரம்பித்து, வாரப் பத்திரிகை, தினப் பத்திரிகை இப்படியாக ஆரம்பிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள். அதே விதமாக, நெல் விலை ஏராளமாக தூக்கி விற்கும் காலத்திலே, அதிகப்படியான பணம் பெறக்கூடிய நிலைமை மிராசுதார்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையிலே மேலும் மேலும் பணம் குவிந்தால் பக்கத்திலே இருக்கும் நிலம், அதற்குப் பக்கத்திலே இருக்கும் நிலத்தையெல்லாம் தாங்கள் வாங்கிக் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஆவல் எல்லா மக்களுக்கும் எழுவதைப்போல் அவர்களுக்கும் எழலாம். அதிலேயிருந்து மேலும் மேலும் நிலம் பெறுமல் தடுப்பதற்காக மாத்திரம் இந்தச் சட்டம் பயன்படலாமே தவிர, நாம் ஆவலாக எதிர்பார்த்த அந்தக் குறிக்கோள்கள் இந்தச் சட்டத்திலே ஒரு துளிக் கூட நிறைவேற்றப்பட்டதாக என்னால் கருத முடியவில்லை.

இந்தச் சட்டம் இரண்டொருவருக்கு நல்லது என்று நினைக்கிறேன். இந்தச் சட்டம் வரப்போகிறது என்பதற்கான அனேகப்பட்ட விளம்பரங்கள், பயமுறுத்தல்கள் கேட்கப்பட்டு நிலத்தையெல்லாம் ஏற்கனவே விற்றுவிட்டார்கள். இப்பொழுது இருப்பதெல்லாம் கொஞ்ச நஞ்சம் நிலம் இருக்கலாம். அந்த நிலத்திற்கு ஒரு அளவு அதிகப்படியான விலை பெறுவதற்கு இந்தச் சட்டம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே எங்கள் பகுதியிலே குழியொன்று நான்கு ரூபாய்க்கு விற்றது. இந்தச் சட்டப் பிரகாரம் இப்பொழுது நிலத்தை நாம் வாங்கினால் குழியொன்றுக்கு ஆறு ரூபாய் விலை கிடைக்கும். ஆக, இரண்டு ரூபாய் லாபம் வருகிறது. ஏற்கனவே, முன் ஜாக்கிரதையாக நிலத்தை விற்ற மிராசுதார்கள், கொஞ்சம் ஏமாந்திருந்த மிராசுதார்கள் இவர்களைப் பார்த்து நீங்கள் அவசரப்பட்டு விற்றுவிட்டீர்களே, எங்களுக்கெல்லாம் ஆறு ரூபாய் கிடைக்கப்போகிறது என்று சவால் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். மிராசுதார்கள் கட்டுப்பாடாக எதிர்ப்பதிலிருந்து அவர்களைத் தவிர்த்து, அவர்களுக்குள்ளே இரண்டு கட்சிகள் பண்ணிவிட்டு, ஏற்கனவே நிலம் விற்று ஏமாந்தவர்கள், புதிதாக சர்க்காருடைய திட்டத்திற்குக் கீழே நிலம் விற்று லாபம் பெறப் போகிறவர்கள் இந்த இரண்டு பேர்களுக்கு வேண்டுமானால் கொஞ்சம் மனத்தாங்கலை உண்டாக்கி அவர்களுக்குள்ளே பிரிவினையை உண்டாக்கிய பலன் இந்தச் சட்டத்தினால் ஏற்படமுடியும்.

அடுத்தப்படியாக, மடம், கோயில் இதையெல்லாம் பற்றி என்ன அவ்வளவு பெரிய அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த நிலத்தைப் பண்ணையாக வைக்கலாம் என்று கருதுகிறார்கள் என்பதற்கு எனக்கு அர்த்தமே புரியவில்லை. சொத்து அவர்களிடமே இருக்கட்டும், சாகுபடிக்காரருக்கு ஐந்து ஏக்கர், மூன்று ஏக்கர் என்று பிரித்துக்கொடுக்கப்பட்டு அதிலேயிருந்து வருமானத்தை மடாதிபதிகள் பெறுவதில் யாருக்கும் ஆட்சே



பனை இருக்கமுடியாது. இருந்தாலும், பண்ணை வைத்துக்கொள்ளலாம் என்றால், ஒரு பண்டாரசந்நதிக்கு 27 தேவஸ்தானங்கள் இருக்கும் இன்னொரு பண்டாரசந்நதிக்கு 22 தேவஸ்தானங்கள் இருக்கும் இன்னொரு பண்டார சந்நதிக்கு 18,000 ஏக்கர்கள் இருக்கும். இவர்களெல்லாம் ஊருக்கு ஒரு ட்ரஸ்ட் பேரிலே 200, 200 ஏக்கராக பண்ணை சாகுபடி செய்யலாம் என்று வந்துவிடுகிறது. மடாதிபதிகள் என்ன தப்பிதமான வழிகளில் செல்லமுடியுமோ அதற்குத் தூண்டுகோலாக மாத்திரம் இந்தப் பண்ணை முறை அவர்களுக்குப் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

இதெல்லாவற்றையும்விட வேடிக்கை என்னவென்றால், குத்தகைதார்களுக்கும் காம்பென்ஸேஷன் கொடுக்கவேண்டும். அவர்களுக்கும் இதனால் ஏற்படும் நஷ்டத்தைக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கும் ஒரு பகுதி கொடுக்கவேண்டும் என்ற பயித்தியக் காரத்தனம் யாருடைய மூளையிலே எப்போது முதல் முதல் உற்பத்தியாயிற்று என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏற்கனவே நான்கு வீதம் மணலி எஸ்டேட் குத்தகைதாருக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் குடிகளுக்குக் கொடுத்தது 16 வீதம். இதை 30 வீதமாகச் சேர்த்துக்கொண்டு இருக்கும் நிலையில் பாத்தியதை எப்படி ஏற்படுத்தினார்கள் நம்முடைய சர்க்காருக்கு உபதேசம் செய்யக்கூடிய சட்ட நிபுணர்கள் என்று என்னால் கருதக் கூட முடியவில்லை. ஒரு குத்தகைதாரராவது தங்களுக்கு இது வேண்டுமென்று எங்காவது கேட்டிருக்கிறாரா, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறாரா, அல்லது எங்காவது கோரிக்கை கொடுத்திருக்கிறாரா? எனக்குத் தெரிந்த வரையில், குத்தகைதாரர்கள் எங்கள் பகுதியில்தான் அதிகம். அவர்களே எதிர்பாராமல் இருக்கும்போது, இப்படி நம்முடைய சர்க்காரே அவர்களைத் தடுத்தாட்கொள்ளக்கூடிய நிலைமையை என் ஏற்படுத்தினார்கள்? அவர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, நிலத்திலே அவர்களுக்கு எவ்வளவு பாத்தியதை இருக்கிறது என்று கூட கருதாமல், இந்தக் குத்தகைதாருக்கு என் இந்தச் சலுகை கொடுத்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம், இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், நமது அமைச்சர் இதைப் பூராவும் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை, அல்லது பெரும் போக்கிலே பார்த்திருக்கிறார்கள், ஏதாவது பிசகு இருந்தால் செலக் கமிட்டியிலே தீர்த்துவிடலாம் என்று கருதிவிட்டார்கள் என்றுதான் நான் ஐயுறுகின்றேன். பாரம்பரியமாக உழுதுகொண்டிருந்த உழவர்களைத் குத்தகைகார்கள் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமான ஒரு மனிதன் திவான் ஆன கதைப் புத்தகம் ஒன்றை நான் படித்தேன். அதிலே ஒருவர் அரண்மனை வாயிலில் நின்றுகொண்டு வேலை கிடைக்குமா என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அப்படியே இருந்துகொண்டிருக்கும்போது போகிறவர்களும் வருகிறவர்களும் பார்த்தார்கள். பார்த்தவுடனே, இவரையும் ஒரு அரண்மனை உத்தியோகஸ்தன் என்று அவர்கள் முடிவுபண்ணிக்கொண்டு விட்டார்கள். இப்படி எல்லோருக்கும் பழக்கமானவுடன், போகிறவர் வருகிறவரை இரண்டணா சில்லரை போடுங்கள் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, இரண்டணா சில்லரை போடவேண்டுமென்பது அரண்மனை உத்தரவு போலிருக்கிறது என்று போகிறவர்கள் வருகிறவர்கள் போட்டதைப் பார்த்து, உத்தியோகஸ்தர்களும் கூட போட ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்து, மந்திரியும் இரண்டணா போட ஆரம்பித்தார். மந்திரியின் உத்திரவோ என்னவோ என்று அரசரும் இரண்டணா போட்டார். இப்படியாக அந்த சாதாரண மனிதன் பெரிய திவானாகி மேலும், மேலும் சம்பாதித்து, அதன் காரணமாக ராஜாவுக்கே கடன் கொடுக்கும் நிலைமைக்கு வந்து விட்டார் என்று அந்தக் கதை சொல்கிறது. அம்மாதிரி பண்டாரசன்னதிகளை காக்காய் பிடித்து, தர்ம ஸ்தாபனங்கள் என்ற பெயராலே அதர்மத்தை வளர்க்கிற புண்ணியவான்களை, மணலி எஸ்டேட்தார் போன்றவர்களை காக்காய் பிடித்து குத்தகைக்கு எடுத்து குத்தகைதார்கள் குடிகளை வருத்தி அவர்கள் இஷ்டத்திற்கு ஒரு சில வருஷங்களுக்கு கட்டாயமாக அவர்களிடம் பணம் வசூல் செய்து ஒரு காரியத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் இந்தச் சலுகை? நிலச்சுவான்தாரர்களுக்கும்

குடிகளுக்கும் பாகம் என்று சொன்னாலும் பொருந்தும். அதைவிட்டு நிலச்சுவான்தார்களுக்கும் இடைத்தரகர்களுக்கும் சேர்ந்து அதில் பாத்தியதை ஏற்படுத்திக் கொடுக்கிற ஒரு பரிதாபகரமான சட்டம் இப்பொழுது தான் முதன் முதலாக நம்முடைய சட்ட சபையில் வருகிறது என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, சிறு மிராசுதார்ர்கள் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள், வாய்தா கொடுக்கக்கூட முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு ஜீவனம் செய்யக்கூடியவர்களுடைய நிலம் குடிகளிடத்தில் இருந்தால் உழவர்களிடத்தில் இருந்தால், அதைத் திரும்பி பெற்றுவிடலாம் என்ற ஒரு ஷரத்து இந்த மசோதாவிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. நாம் நீண்ட நாட்களாக சிறு மிராசுதார்களுக்கு விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தோம். சிறு மிராசுதார்களும் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதிலே யாருக்கு சாதகம், யாருக்கு பாதகம் என்று சர்க்காருடைய ரீதியிலே பார்க்கிறபொழுது, இது குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றையும் உண்டாக்க முடியாது. சிறு மிராசுதார்கள் என் தங்களுடைய நிலத்தை விட்டு வெளியிலே வந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டும். இதற்கு 2, 3 காரணங்கள் இருக்கலாம் என்று கருதுகிறேன். இம்மாதிரி சிறிய மிராசுதார்கள் கிராமத்தை விட்டு வெளியேறி வந்தவர்கள் சிலர் உத்தியோகத்தின் பேரில் வந்திருக்கலாம். வியாபாரத்தின் பேரில் வந்திருக்கலாம், சிலர் கிராமத்தை விட்டு வந்து பெரிய கம்பெனி வைத்திருக்கலாம், அல்லது சினிமா கொட்டகை வைத்திருக்கலாம், அல்லது பஸ் சொந்தக்காரர்களாக இருக்கலாம். இம்மாதிரி நிலத்தில் நேராக தங்கள் கருத்தை செலுத்தாமல் ஏதோ கிராமத்தில் 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலம் இருக்கட்டும் என்று வாங்கிப்போட்டவர்களுக்கு, அவர்களிடமே அந்த நிலத்தை திருப்பி ஒப்படைப்பதின் காரணமாக பரம்பரை பரம்பரையாக அந்த நிலங்களை உழுதுகொண்டிருந்த உழவர்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக மாறிவிடும். இந்த சட்டத்தின் வாயிலாக மிராசுதார்களுக்கு ஓரளவு பெரிய நன்மையும், அதே சமயத்தில் குடிகளுக்கு பாதகமும் ஏற்படும் இந்த முறையை பின்பற்றினால் என்பதையும் சர்க்கார் நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். அதோடு கூட, 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கிறபொழுது, அந்த நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட உழவர்களுக்கு, அதற்கு பதிலாக என்ன காரியங்களைச் செய்யக்கூடும் என்பதைப்பற்றியும் சர்க்கார் சிந்தித்து, அவர்களுக்கு வேறு நிலம் கொடுக்கப்பட்டாலொழிய, அவர்களிடமிருந்து அந்த நிலத்தை எடுப்பது என்பது நிச்சயமாக உழவர்களுக்கு பெரிய பாதகத்தை உண்டாக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுக் கொல்லையிலே உழவர்கள் வீடு கட்டிக்கொண்டு குடியிருந்தால் அந்தக் குடிகள் அந்த வீட்டிலேயே இருக்கலாம் என்ற ஷரத்து கொஞ்சம் பரவாயில்லை. ஆனால், அவர்கள் கொல்லையிலே மரம் வைத்தால் அதை வெட்டக்கூடாது என்று இந்த சட்டம் சொல்லுகிறது. அதைவிட பண்டார சன்னதி சட்டம் கொஞ்சம் நல்ல சட்டம். வீட்டுக் கொல்லையில் இருக்கலாம். அங்கே மரம் வைத்தால், அதில் பண்டார சன்னதிக்கு பாதி, குடிக்கு பாதி என்ற ஒரு பழக்கம் இருந்துகொண்டு வருகிறது. இந்தச் சட்டம் அதையும் விட ஒரு பாய்ச்சல் பாய்ந்து குடிகளுக்கு மரங்களை வெட்டுவதற்குரிய உரிமையை தடுக்கிறது. இந்தச் சட்டப்படி உழவனாக இருந்தால் தான் அந்த நிலைமை என்றும் குறிப்பிடுகிறது. தச்சன், கொல்லன், கருமான் இம்மாதிரி நம்முடைய நாட்டிலே தொழிலாளிகளாக, வாழ்க்கை வசதிக்கு வேண்டிய அன்றாட காரியங்களை கிராம மக்களுக்கு செய்துகொண்டு வருபவர்களாக இருந்தால், அவர்கள் பெயரில் இருந்தால் இப்பொழுது உடனே எங்கள் ஜில்லா மிராசுதார்கள் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருப்பார்கள். சட்ட சபை மெம்பர்களுக்கு கிடைப்பதற்கு முன்னாலேயே இந்தச் சட்டம் அவர்களுக்குக் கிடைத்திருக்கும். அந்தச் சட்டத்தின் மூலம் உடனே நோட்டீஸ் கொடுத்து இப்பொழுதே கோர்ட்டு விவகாரம் ஆரம்பித்திருப்பார்கள். ஏற்கனவே பல வருஷங்க



ளாகவே மனைகளை காலி செய்கின்ற நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கச்சேரியில் போனால் பல வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில வழக்குகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன. இந்த வீடுகளெல்லாம் பல ஆண்டுகள் குடிகளிடம் பரம்பரையாக இருந்தால், தொழிலாளிகளிடம் பரம்பரையாக இருந்தால் அவர்களுக்கெல்லாம் அந்த மனைகளைச் சொந்தமாக்கி 20 வருஷங்களிலாவது கொஞ்சம் கொஞ்சமாக அதற்குரிய விலையை பாக்கியிடத்தில் நிர்ணயிப்பது போல நிர்ணயித்து வாங்கிக் கொள்ளவேண்டும் என்று சொல்லுவது தான் நியாயமான காரியம். கொல்லையில் வைத்த மரங்களை அவர்கள் அனுபவிக்கக்கூடாது என்று சொல்லுவது சரியல்ல. நாம் ஒரு பக்கம் வன மகோத்சவம் என்று சொல்லிக்கொண்டு, மரம் வைத்து பயிராக்குவதற்கு இருக்கக்கூடிய தூண்டுதலை இந்த சட்டத்தின் மூலம் தடுப்பது பொருத்தமாக இருக்கிறதா என்று எனக்குப் புரியவில்லை. மரத்தை வெட்டி வீடு கட்டலாம். ஆனால் அதை விற்கக்கூடாது என்பது பண்டார சன்னதி சட்டம். நானும் அம்மாதிரி மனைக்கட்டு ஒன்றில் குடியிருப்பவன். கொல்லையிலுள்ள மரத்தை சொந்த வீடு கட்டுவதற்கு வெட்டிக்கொள்ளலாம். இப்பொழுது இருக்கிற சட்டப்படி அந்த மரத்தை விற்கக்கூடாது என்பது சட்டம். ஆனால் இப்பொழுது வந்திருக்கிற சட்டப்படி அந்த மரத்தை பண்டார சன்னதிக்கு, கோவிலுக்கு கொடுத்துவிட வேண்டும். இம்மாதிரி விவகாரங்களினால் பல வீடுகள் இடிக்கப்படுகின்றன. முன்சீப் கோர்ட்டில், சப் கோர்ட்டில் போய் பார்த்தால் இம்மாதிரி மனைகளின் பேரில் பல வழக்குகள் போடப்பட்டு பல வீடுகள் பிரிக்கப்படுகின்றன. இதை அறிந்தால் மந்திரி அவர்களுக்கு திகில் படக்கூடிய அளவுக்கு வீடுகள் பிரிக்கப்படுவதற்கு நடவடிக்கை இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது என்று தெரியவரும். நீதிபதி ஸ்தானத்தில் இருக்கிற ஒருவர் சுதந்திர தினக் கூட்டத்தில் பேசும்பொழுது சட்டம் இம்மாதிரி அனுமதிப்பதின் காரணமாக எனக்கு இஷ்டம் இல்லாவிட்டாலும் வீடுகளைப் பிரிக்கவேண்டுமென்று கையெழுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதாகத் தெரிவித்தார்கள். அதை அவசியம் கவனிக்கவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இது விஷயத்திலே கொஞ்சம் அசிரத்தையோடு இருந்தால், பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்தது என்பதுபோல், இந்தச் சட்டம் நல்லது செய்யவேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந்தும், நடவடிக்கையில் மாறுதலான நிலைமையை உண்டாக்கிவிடும் என்பதை நமது சர்க்கார் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டம் வந்த பிற்பாடு எல்லோரும் பள்ளிக்கூடம் ஏற்படுத்த ஆரம்பித்து விடுவார்கள் என்று நினைக்கிறேன். இந்த அறிக்கை வந்த பிற்பாடு நிலம் விற்றால் செல்லாது என்று ஒரு இடத்திலும் இல்லை என்று நினைக்கிறேன். இது சட்டமான பிற்பாடு தான் இதை எல்லாம் தடுப்பதற்குரிய வாய்ப்புகள் இந்த சட்ட பூர்வமாக ஏற்படுகிறது என்று நினைக்கிறேன். பல இடங்களில் நல்ல விதமாக தர்ம ஸ்தாபனங்களும், பள்ளிகளும், அனாதை ஆசிரமங்களும் நடைபெறுகின்றன. ஆனால் அதற்குப் பின்னால் பெரிய நோக்கம் வேறு ஏதாவது இருக்கிறதோ என்று கருத வேண்டியிருக்கிறது. பழைய காலத்தில் பழக்கம் என்னவென்றால், பையன் கொஞ்சம் மைனராக இருப்பான், சொத்தை அழிப்பான் என்று இருந்தால், வீட்டிலே ஒரு படத்தை மாட்டி, காலணாவுக்கு சூடத்தை வாங்கி ஏற்றி வைத்துவிட்டால் சொத்தை பாதுகாக்க வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும் என்று நினைப்பதுபோல், மிராசுதார்கள் மேய்ச்சல் நிலத்திற்கு என்று 50 ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம்—கோழி வளர்ப்பதற்கு என்று தனியாக போடவில்லை, ஏனென்றால் அதற்கு அதிகமாக நிலம் வேண்டியதில்லை என்று ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம்—செலவு இல்லாமல வருமானம் வரக்கூடிய தோப்பு தோரவாக இருந்தால் அதையும் மிராசுதார்கள் வைத்துக்கொள்ளலாம் என்றெல்லாம் சொல்லிவிட்டால், சர்க்கார் எந்த நிலத்தை எடுத்து உழவர்களுக்கு கொடுக்கப் போகிறார்கள்? நான்கு வேலி நிலம், 5 ஏக்கர் நிலம் என்று சினிமா அல்லது நாடகம் போட்டுத்தான் உழவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இம்மாதிரி பல இடுக்குகள் இந்த சட்டத்தில் இருக்கின்றன. இதை

[Sri G. Narayanaswamy Naidu] [16th April 1960

விட 60 வாரச் சட்டம், நியாயவாரச் சட்டம் மிக உயர்ந்த சட்டம் என்று கருதப்படும் என்ற நிலைமையில் தான் இந்த சட்டம் அமைந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சட்டம் எப்படியிருந்தால, நல்லதாக இருக்கும் என்பதைக் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். ஏற்கெனவே தப்பு தண்டாக்களினால் எப்படியோ வக்கீலுடைய வாதத்தைக் கொண்டு கோர்ட்டுகளிடத்திலுள்ள செல்வாக்கைக் கொண்டு, நீதி ஸ்தாபனங்களில் மிராசுதார்கள் வந்தால் ' உட்காருங்கள் ' என்று சொல்லுவதும், உழவனாக இருந்தால், ' என் உள்ளே வந்து நின்று கொண்டிருக்கிறாய், வெளியே போக வேண்டும் ' என்று சொல்லுவதும் இம்மாதிரி பல்வேறு செல்வாக்கின் காரணமாக மிராசுதார்கள் நிலத்தைவிட்டு உழவர்களை அப்புறப்படுத்தி ஓடிப்போகும்படி செய்து விட்டார்கள். இந்த சட்டத்தின் மூலமாக அதிகப்படியான நிலம் சர்க்காருக்குக் கிடைத்தால், பணம் கொடுக்க முடியாமல் இருக்கிற உழவர்களுக்கு திரும்பிப் பணம் கொடுத்தால் அந்த அசல் நிலத்தை அவர்களுக்கே கொடுக்கிறோம், இல்லாவிட்டால் அதிகப்படி உபரி நிலத்தை கொடுக்கிறோம், என்று சொல்லுகிறார்கள் பெரிய தலைவர்கள் காங்கிரஸ் மகா நாடுகளில் கூட்டுறவு சங்கங்களுக்கு நிலத்தைக்கொடுக்க வேண்டும், கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தில் எந்தப் பகுதியிலும் கூட்டுறவு சங்கத்தைப் பற்றி சொல்லப்படவில்லை. கோவில் நிலம், பண்டார சன்னதி நிலம் 200 ஏக்கரா வரையில் அவர்கள் சொந்தமாகவே சாகுபடி செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. 1,200 ரூபாய்க்கு மாடு வாங்கி, அந்த மாட்டுக்கு சீக்கு வந்தது, அதற்கு 800 ரூபாய் செலவாகியது, ஆக 2,000 ரூபாய் செலவாகி மாடு செத்துப் போய்விட்டது என்று அந்த டிரஸ்டியோ, சூபரின்டெண்டோ அவருக்கு என்ன பெயரோ அவர் கணக்கு எழுதி விடுவார். மாடு வாங்கப்பட்டதா, ஆராதனை நடந்ததா, அபிஷேகம் நடந்ததா, வீட்டுக்கு பால் போயிற்றா என்றெல்லாம் ஒன்றும் தெரியாது. இம்மாதிரி காரியங்களெல்லாம் இப்பொழுது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அப்படியில்லையானால், கோவில் டிரஸ்டிகள் நியமிக்கும்போது, முதல்தர மிராசுதார்களாகப் போட்டு விடுகிறார்கள். இப்பொழுது ஒரு கமிட்டி சொல்லுகிறார்களே, அதிலும் இரண்டு, மூன்று பெரிய மிராசுதார்களைப் போட்டுவிடுகிறார்கள். அதற்கென்ன பெயர்—ஏரியா கமிட்டி—அந்த கமிட்டியில் பெரிய புள்ளிகளைப் பார்த்துப் போட்டு விடுகிறார்கள்.' அந்தக் கமிட்டிகளிலே கொட்ராப்புள்ளி மிராசுதார்களையும், குத்தகைதார்களையும் போட்டு வைத்திருக்கிறார்கள். அப்படியே போட்டுக் கொண்டு போவதால், விவசாயியோ, உழவனோ அந்தப் பக்கமே போகமாட்டான். இந்தப் பிரச்னையும் முடிந்து விட்டது என்று சொல்லிவிடலாம். ஆகவே, இதிலெல்லாம், கூட்டுறவு சங்கங்களுக்கு, கோவில் நிலங்களையும், மடத்து நிலங்களையும், இனும், தர்ம நிலங்களையும் கொடுக்க வேண்டும் என்று கண்டிப்பான விதி போட்டாலொழிய, ஒரு பலனும் ஏற்பட்டதாகாது, யாருக்காக இந்தச் சட்டம் கொண்டு வருகிறோம் ? மிராசுதார்களைப் பெருமைப்படுத்தவா, அவர்கள் உடம்பு இன்னும் ஊதவா, அவர்கள் உடல் நலம் பாதிக்காமல் இருக்கவா அல்லது உழவர்கள் நலம் கருதியா, இந்தச் சட்டம் கொண்டு வருகிறோம் ? இந்த நாட்டிலே ஒவ்வொரு உழைக்கும் உழவனுக்கும் சொத்துரிமை கொடுக்க வேண்டும் என்கும்போது, இம்மாதிரிச் சட்டத்தினால், இல்லாதவர்களுக்குக் கொடுக்கவா அல்லது இருப்பவர்களுக்கு அதிகச் சலுகைகளைக் கொடுத்து அவர்களைப் பலப்படுத்தவா செய்கிறோம் ? தெரிந்தோ தெரியாமலோ அம்மாதிரிச் செய்திருக்கிறார்கள், இந்தச் சட்டத்தினால என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, இந்த 60-40 சட்டத்தினாலும், நியாயவாரச் சட்டத்தினாலும், கிட்டத் தட்ட 50 சதவிகிதம் உழவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். கடைசியாக மாயூர ஒப்பந்தப்படி நடந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அந்த அளவுக்கு பண்ணையாட்களுக்காக சில நன்மைகள் செய்ய முயற்சித்தோம். ஆனால், அந்த இரண்டு சட்டத்தினாலும் செய்த நன்மைகளும், இந்தச் சட்டத்தினால், அவர்கள் நிலைமை இன்னும் மோசமாகப் போய்விடும், பண்ணையாட்கள் உடைமைகள், உரிமைகள் பாதிக்கப்பட்டுப் போய்விடும். அவர்களிடையே கடுமையான வேலையில்லாத்



16th April 1960] [Sri G. Narayanaswamy Naidu]

திண்டாட்டம் நிலவும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பண்ணையாட்களுக்கு சாகுபடி செய்யும் உரிமைகூட இல்லாமல் போய்விடும். சேரிகளில், பண்ணையாட்களுக்கு இருக்கும் வீடுகளைப பிரித்து அவர்களை வெளியேற்றும் நிலைமைதான் ஏற்படப்போகிறது. ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கும் பண்ணையாட்கள் இம்மாதிரி நிலைமையை ஏற்படுத்துவதால், அவர்கள் உரிமைகள் பறிபோய் கடுமையாகப் புறக்கணிக்கப்படும் நிலைமைக்கு தள்ளப்படுவார்கள் என்பதைச் சர்க்கார் உணர வேண்டும்.

பொதுவாக இந்தச் சட்டம் சிரசாசனம் போட வைத்தாலொழிய (சிரிப்பு) சமுதாயத்திற்கு நன்மை பயக்காது, சர்க்காருக்கும் நல்ல பெயரை ஏற்படுத்த முடியாது என்பதை சர்க்கார் தெரிந்து கொள்ள வேண்டும். இதை இங்கு அங்கு மாற்றினால், திருத்தினால் போதாது, இதை அடியோடு மாற்றி அமைத்தால்தான், நாம் உழவர்களுக்கு எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று மனத்தில் வைத்திருக்கிறோமோ அதை நிறைவேற்ற முடியும். இல்லாவிட்டால், இதனால் பலன் ஒரு சிறிதுகூட ஏற்பட முடியாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று வியாபார நிமித்தமும், உத்தியோக நிமித்தமும், வேறு பல்வேறு சந்தர்ப்பங்களாலும், நேரிடை உழவர்களாக இல்லாதவர்களுக்கும், 5 ஏக்கர் நிலத்திற்கு குறைந்து வைத்திருப்பவர்களுக்கு என்ற பெயரில் கொடுப்பதன் விளைவாக, என்ன லாபம் உற்பத்தியில் என்ன பெருக்கம் காணப்போகிறோம் என்பது தான் தெரியவில்லை. இதைச் சர்க்கார் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். உழத் தெரியாதவனுக்கும், மடம், கோவில் அதிகாரிகளுக்கும் இல்லாத, நிலம் வைத்துக் கொள்ளலாம் என்ற அபிலாஷையையும் கிளப்பி விடுகிறோம். சமீபத்தில் ஒரு கும்பாபிஷேகத்திற்குச் சென்றிருந்தோம். அங்கே பந்தல் போட வயல் கோரையை வைத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்படிக் கட்டுவதற்காக கோரையை காயப் போட்டிருந்தார்கள். அங்கே ஆகாத கணக்கப் பிள்ளை ஒருவர் எங்களிடம் சொன்னார். " கோரையைப் போட்டுக் கட்டுவதற்கு பந்தல் கட்ட ரூபாய் 250 செலவு என்று எழுதியிருக்கிறார்கள் என்று. பின்னால் கணக்கைப் பார்த்தால் அப்படியே, பாளைக் கணக்கு ரூ. 250 என்று எழுதியிருந்தார்கள். வயல் கோரையைப் போட்டுக் கட்டிவிட்டு, பாளைக்கு செலவு எழுதும் உத்தமர்கள், இம்மாதிரி பக்தி என்று வேஷம் போட்டு, கோவில் பணத்தைச் சாப்பிடுகிறார்கள். இப்படியே இவர்கள் தர்ம ஸ்தாபனங்களில், தீவட்டிக்கு என்றும், சாமி தூக்குகிறவனுக்கு என்றும் போட்டு, அந்தப் பணத்தையெல்லாம் சாப்பிடுகிறார்கள். இன்று பண்டார சன்னதிகள் மட்டுமல்ல, மற்ற டிரஸ்டிகளும், மேற்கத்தி மாடு கட்டிய வண்டிகளில் செல்கிறார்கள். ஆதிகாலத்தில், மேல் நாடுகளில் கோவில் பாதுகாப்பாளர்கள், டெம்ப்ளார்ஸ் என்று சொல்வார்களே, அம்மாதிரி இந்த டிரஸ்டிகள் இருக்கிறார்கள். ஏதோ பஜனையென்றும், இன்னும் என்னென்னவோ செய்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள். கடவுளுக்கு இவர்கள் ஒன்றும் செய்யக் காணோம். பக்தியை வளர்க்கக் காணோம். ஆடம்பரமும், ஆட்டமும் தான் அதிகமாக இருக்கிறது. திருப்பள்ளியெழுச்சி என்று விடியற்காலையில், பெரிய ஸ்பீக்கரையும் வைத்துக் கொண்டு இரைச்சல் போடுகிறார்கள்; ஒரு நாமத்தை வைத்து அதற்கு ஒரு லேட்டைப்போட்டு வைக்கிறார்கள். அதை யாரும் அண்ணாந்து பார்ப்பதில்லை. அது வெறும் விளம்பரம். இதற்கெல்லாம் செலவு செய்து விடுகிறார்கள். இப்படியெல்லாம் செய்கிறார்களே தவிர, வேறொன்றும் நல்லது செய்துவிடவில்லை. ஆகவே, கோவில் டிரஸ்டிக்கு இந்தக்கோவில் ஒரு ஏகபோக குத்தகையாகப் போய்விடுகிறது. ஒரு சிலர் பல கோயில்களுக்கு டிரஸ்டிகளாக இருக்கிறார்கள். அவர்கள் ஏழைகளின் வருத்தமோ கஷ்டமோ தெரியாதவர்களாக இருக்கிறார்கள். " ரொட்டி இல்லாட்டி, கேக் சாப்பிடு " என்று சொல்பவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் முற்றிலும் மாற்றியாக வேண்டும். கோவில்கள் பண்ணை வைத்தால் யாருக்கு நன்மை ஏற்படும் ? செலவுகள் தான் அதிகமாகும். உற்பத்தியில் பெருக்கம் இருக்காது ; ஏழைகளுக்கு நன்மை பயக்காது. கோவில் டிரஸ்டிகளும் பண்ணை வைத்து யாருக்கு நன்மை செய்யப்

போகிறார்கள்? பண்டார சன்னதிகள் யோகம் செய்கிறவர்களை திடீரென்று விவசாயம் செய் என்றால், அவர் எந்தக் கிராமத்தைப் பார்ப்பார்? இதையெல்லாம் பார்த்தால் விசித்திரமாகத்தான் இருக்கிறது இந்தச் சட்டம். இது யாருக்காவது திருப்தி அளிக்கும் என்றால், அது ஸ்ரீமான் ராமசாமி முதலியாருக்கும், அவர் கட்சிக்கும் இருக்குமே தவிர, மற்ற எந்தத் தரப்பில் உள்ளவர்களுக்கும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (பலத்த சிரிப்பு). ஆகவே, இந்தச் சட்ட அமைப்பில், பழைய பெருமைகள் புதிய அமைப்பில் அந்த மிராசுதார்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதையெல்லாம் தவிர்க்க வேண்டியது அவசியம். செலக்ட் கமிட்டியிலேயும், கொட்ராப்புள்ளி மிராசுதார்களையே போடாமல், அதை நல்ல முறையிலே அமைத்து, ஓரளவாவது இருக்கும் நிலையையாவது கெடாமல் செய்து, சர்க்கார் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். (சிரிப்பு.)

10 30 a.m. **SRI K. RAMACHANDRAN**: கனம் தலைவி அவர்களே, இந்த மசோதாவில் இருக்கிற அடிப்படையான அம்சமான அதாவது நில உடைமையில் ஏற்றத் தாழ்வு அதிகம் இல்லாமல் செய்ய வேண்டும் என்கிற கொள்கையை நான் வரவேற்கிறேன். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். பொதுவாக இந்தச் சட்டம் எல்லோராலும் வரவேற்கப்படுகிறது என்பதும் உண்மைதான். இந்தச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறதா என்பதைப் பொறுத்தவரையில் நாம் சற்று சிந்திக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. இந்தச் சட்டத்தையும் வரவேற்பதில் பொதுவாக நிலம் கிடைக்கிறதா அல்லது நிலம் கொடுக்கப்படுகிறதா என்பதைப் பார்த்தால் அந்த அடிப்படையில் அது இல்லை என்று தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற நிலைமையில் இம்மாதிரியான சட்டம் அவசியம் என்று கருதித்தான் இதைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் இப்பொழுது இல்லாமல் இருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவில் இது அமையவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. நான் ஆரம்பத்தில் சொன்னது போல இந்தச் சட்டத்தில் அதிகப்படியாக காபிடலிஸ்டிக் எலிமெண்ட்தான் இருக்கிறதே தவிர இந்தச் சட்டத்திற்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய கொள்கையாகிய சோஷலிஸ்டிக் எலிமெண்ட் என்பது அதிகமாக இல்லை என்று தான் நான் ரொம்பவும் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு ஆதாரமாக சிலவற்றை என்னால் எடுத்துக்காட்ட முடியும்.

முதலில் இந்தச் சட்டம் வெகு காலமாக வருகிறது வருகிறது என்று சொல்லிக்கொண்டே இருந்தோம். முப்பது எக்கர் தான் வரப்போகிறது என்று கூட சொல்லிக்கொண்டிருந்தோம். என்னென்னவிட்டுக் கொடுக்கப்படப்போகிறது என்றெல்லாம் சொல்லிக்கொண்டே தான் வந்தோம். அதாவது எக்ஸெம்ப்ஷன் என்னவென்று. இந்தச் சட்டத்தில் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்று சொல்லக்கூடிய அதாவது இந்த தேதி முதற்கொண்டு தான் அமுலுக்கு வரவேண்டும் என்று இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்தோம். ஆனால் அந்த நிலைமை இல்லாமல் இருக்கிறது. ப்ளானிங் கமிஷன் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கக் கூடாது என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஒருக்கால் இதை வைத்திருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. ப்ளானிங் கமிஷனில் அவ்வாறு அபிப்பிராயத்தை சொல்லியிருந்தாலும்கூட ஸ்டேட்டுக்கு ஸ்டேட்டு என்ன நிலைமை இருக்கிறது என்று பார்த்து அதை வைத்துக் கொண்டு நம்முடைய சட்டத்தை நாம் உருவாக்கலாமேயொழிய அவர்கள் சொல்லக்கூடிய அளவில் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு பல ராஜ்யங்களில் இப்படிப்பட்ட சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். ஒரு ராஜ்யத்தில் இம்மாதிரி ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கக் கூடிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் போலவே இந்த ராஜ்யத்திலும் கொண்டு வரலாம் என்ற கருத்தை நான் தெரிவித்துக்



கொள்ளுகிறேன். இதற்குக் காரணம் கூட பலர் இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது சில இடங்களில் இந்தச் சட்டம் வரப்போகிறது என்ற காரணத்தினால் நிலத்தை பிரித்துக்கொடுக்கும் அளவில் ஸ்டாம்பு பேப்பர் கூட கிடைக்கவில்லை என்ற தகவலை பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அதிகமான அளவில் நில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கூட சொல்லப்படுகிறது. ஆனால் மந்திரி சபை சொல்லலாம் அப்படி நிலம் மாற்றங்கள் ஏற்பட்டால் அதுவே நிலத்தை பிரித்துக் கொடுப்பது போலாகிவிடுமே என்று. நில மாற்றத்தில் பல வகைகள் இருக்கின்றன. நியாயமான முறையில் நில மாற்றங்கள் இருக்கின்றன. அதைப்போலவே நியாயமில்லாத முறையிலும் நில மாற்றங்கள் இருக்கின்றன. வரப்போகிற இப்படிப்பட்ட சட்டத்தை முறியடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் சிலர் தங்களுடைய நிலத்தை மாற்றியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை முறியடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பல நில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்தால் தான் ஒரு அளவில் இந்தச் சட்டத்தின் பலனை அனுபவிக்க முடியும். இல்லாவிட்டால் இந்தச் சட்டத்தின் முழு பலனையும் அடைய முடியாது. அதனால் இது ஒரு காபிடலிஸ்டிக் சட்டமாகத்தான் இருக்க முடியும் என்ற கருத்தை முதலில் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதைப்போலவே எச்செம்ப்ஷன் என்ற முறையில் அதாவது விதிவிலக்கு என்ற முறையில் பலவற்றை கொடுத்திருக்கிறார்கள். டெயிரி பாரம், லைவ்ஸ்டாக் பாரம், சர்க்கரை, ப்ளான்டேஷன், தோட்டங்கள், ஆர்ச்சர்டுகள், முதலியவைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவும் போக மீதம் என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை, இதைப்பற்றி நாம் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட விதிவிலக்கு கொடுத்தாகி விட்டது என்றால் எவ்வளவோ முதலாளிகளுக்கு அது வசதியாகப் போய் விடுவதாக இருக்கிறது. ஆனால் இதில் ஒரு கருத்துச் சொல்லலாம். இவர்கள் சேர்ந்துதான் நடக்க முடியுமேயொழிய பிரிந்து நடப்பதற்கு கஷ்டமாக இருக்கும் என்று சொல்லலாம். அப்படி பிரிந்திருந்தால் தொழிலுக்கு கஷ்டமாக இருக்கும் என்று சொல்லலாம். அது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த அளவுக்கு அவர்களுக்கு உரிமை ஏற்படுகிறது. இம்மாதிரி நிலைமை ஏற்படுகிறது என்றால் அந்த நிலங்களை என் நாஷனலைஸ் செய்யக் கூடாது என்று கேட்கிறேன். அப்படி செய்வதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தான் நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தியிருப்பதால் இது சோஷலிஸ்ட்டிக் தர்மத்திற்கு உகந்ததாக இல்லை என்று தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இதை மந்திரி அறிய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு அம்சம் கூட இருக்கிறது. அதுவும் காபிடலிஸ்டிக்காக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அதாவது நிலத்தை பிரித்துக்கொடுக்கும்போது முதலாளிகளுக்கு இன்னும் அதிகப்படியான நிலத்தை வாங்கிக் கொடுக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. அதற்கு வேண்டிய வழிவகை இதில் காணப்படுகிறது. அதற்கு வேண்டிய விதிகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலத்துடன் அதிகப்படியாக நிலங்களை வாங்கிக் கொள்வதற்கு வழிவகை இதில் இருக்கிறது.

செக்ஷன் 15-ஐ எடுத்துக்கொண்டால் டயரி பார்மிங், லைவ்ஸ்டாக் ப்ரீடிங் முதலியவைகளுக்கு ஏற்கெனவே இருந்த நிலத்தைவிட இன்னும் அதிகமாக நிலம் வேண்டும் என்றால் வேண்டிய நிலத்தை வாங்கிக் கொள்ளலாம் என்று ஒரு கருத்து இதில் இருக்கிறது. அடுத்தபடியாக செக்ஷன் 37-ஐ எடுத்துக்கொண்டால் ஷுகர் பாக்டரிக்கு ஏற்கெனவே இருந்த நிலத்தை விட நிலத்தில் கரும்பு அடிக்க முடியாது என்று கருதி அதிகப்படியான நிலம் வேண்டுமென்றால் அதை வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். ஐம்பது எக்கர் நிலம் இருந்தால் மேச்சல் நிலத்திற்கு என்று அதிகப்படியாக வாங்கிக்கொள்ளலாம் என்றும் இருக்கிறது. அதைப்போலவே 20-வது செக்ஷனில் ப்ளான்டேஷனுக்கு அடுத்

துள்ள நிலங்களை வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தை லாண்ட் போர்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் ஷுகர் பாக்டரி, ப்ளாண்டேஷன், டையரி பாரம், லைவ்ஸ்டாக் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதிகப்படியான நிலம் வாங்கிக் கொள்வதற்கு இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்த வகையில் நிலம் வைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்களோ அதிகப்படியான நிலத்தை வாங்கிக் கொள்ளலாம் என்ற முறையில் இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த மூன்று அம்சங்களைப் பார்த்தால் இந்தச் சட்டத்தின் நோக்கம் இல்லாமல் போய் விடுகிறது. நில உடைமைக்கு வரம்பு கட்டுவது இல்லாமல் முதலாளிகளுடைய கையை வலுப்படுத்துவதாகத்தான் இருக்கிறது. இந்த முறையில் தான் இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற என்னுடைய கருத்தை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இனாம் நிலங்களைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். பார்ட் இனாம் முழு இனாம் என்று இரு வகை இனாம் நிலங்கள் இருக்கின்றன. 1948-ம் வருஷ சட்டப்படி சில இனாம்களை எடுத்திருக்கிறார்கள். அதைத் தவிர 193 -ம் வருஷத்திய இனாம் நிலங்களையும் எடுத்திருக்கிறார்கள். பெரும் பகுதி இனாம் நிலங்கள் விடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இப்படிப்பட்ட இனாம் நிலங்களை அபாலிஷ் பண்ணவேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தும் இன்னும் அவைகளை அபாலிஷ் செய்ய எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. சில கிராமங்களில் சில நிலங்கள் சிலருக்குப் ப்ரைவேட்டாகவும் இருக்கின்றன. அதற்கு என்ன தீர்வை என்ன நம்பர் என்று கூட இல்லாமல் இருக்கின்றன. ரயத்வாரி நிலங்கள் என்ன வென்று கூட தெரியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படை பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. அதை அபாலிஷ் செய்வதற்கு முன்னதாக ரயத்வாரி செட்டில்மெண்ட் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படியே இரண்டு வருஷங்களாக சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அதை ஏற்படுத்திய பிறகு இந்தச் சட்டத்தை அங்கு அமுல் நடத்தப்படும் என்று சொல்லப்படுகிறது. ரயத்வாரி செட்டில்மெண்டைக் கொண்டு வந்தாலும்கூட அங்கே இருக்கக்கூடிய தொந்தரவுகள் நீங்கக்கூடியதாக இல்லை. ஆகவே ரயத்வாரி செட்டில்மெண்டு கொண்டு வந்தாலும் பயனில்லை. இந்தச் சட்டத்தை இப்பொழுது பாஸ் பண்ணினாலும் இது அமுலுக்கு வருவதற்கு எவ்வளவோ காலமாகலாம். இது எலெக்ஷனை அடுத்துக் கூட வரலாம். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால இது அமுலுக்கு வருவதற்கு இன்னும் இரண்டு மூன்று வருஷங்களாகலாம். அதற்குள் உடனடியாக இந்த இனாம் நிலங்களை அபாலிஷ் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். 1936-ம் வருஷத்திய பழைய சட்டத்தை முதலில் கொண்டு வந்து நிலங்கள் யாருக்கு பாத்தியம் என்ற அடிப்படையில் முதலில் கொண்டு வந்து அதற்குப் பிறகு ரயத்வாரி செட்டில்மெண்டை இண்ட்ரொடியூஸ் பண்ணினால் இந்தச் சட்டத்தை சரியான முறையில் அமுலுக்கு கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பொதுக் கருத்தைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஓனர்ஷிப்பாக இருக்கிறதா அல்லது பொசஷனாக இருக்கிறதா என்ற கருத்து வேறுபாடு இதில் இருக்கிறது. இந்த அடிப்படையில் பல செக்ஷன்கள் இதில் இருக்கின்றன என்பது என்னுடைய கருத்து. ஓனர்ஷிப் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்று சொல்லுகிறேன். அடமானம் ஒத்திகை இவைகளுக்கு என்ன செய்ய வேண்டும். இன்றைக்கு இருக்கக் கூடிய நில உடைமையைப்பார்த்தால் ஒத்திகைகள், குத்தகைகள் இவைகள் 30 முதல் 50 வரையில் எக்கர்கள் பாதிக்கப்பட முடியாது. சாதாரணமாக விவசாயிகளுக்கு ஒரு எக்கர், இரண்டு எக்கர், அல்லது அதிகமாக இருந்தால் ஐந்து எக்கர்கள்தான் வைத்துக்



கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த முறையில் நிலைமை இருப்பதால் சீலிங் பார் பொசஷன் என்ற முறையில் கொண்டு வருவது அவ்வளவு உகந்தது அல்ல. ஓனர்ஷிப்தான் இருக்க வேண்டும். சீலிங் பார் ஓனர் ஷிப் இருக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பர்சனல் கல்டிவேஷனைப்பற்றி செக்ஷன் 57-ல் சொல்லப்பட்டிருக்கிறது. பர்சனல் கல்டிவேஷன் எந்த முறையில் செய்யலாம் என்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஐந்து எக்கர் வரை சொந்த முறையில் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் கூட வருமான வரி, ப்ரொபேஷன், விற்பனை வரி முதலியவைகள் கொடுக்காமல் இருப்பவர்கள் அவர்களுக்கு ஐந்து எக்கருக்குக் குறைவாக இருந்தால் அவர்கள் அந்த நிலத்தை பர்சனல் கல்டிவேஷனுக்குக் கொண்டு வரலாம் என்ற கருத்தை சொல்லி இருக்கிறார்கள். இம்மாதிரி கொடுக்காதவர்கள்தான் பர்சனல் கல்டிவேஷனுக்குக் கொண்டு வரலாம் என்ற கருத்தைச் சொல்லி இருக்கலாம். இதைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்தி பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் டாக்ஸ் கட்ட வேண்டும். வேண்டாம் என்பது அல்ல. பொதுவாக வசதி உள்ளவர்கள் ஓரளவு அதிகமான எக்கர்களைக் கூட பயிரிட்டால் உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்ய முடியும். ஆகவே பர்சனல் கல்டிவேஷன் என்பதற்கு 5 எக்கரில் இருந்து 30 எக்கரா உச்ச வரம்பு வரையில் அனுமதி அளிக்கலாம் என்ற கருத்தை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் இந்தச் சட்டத்தில் வரக்கூடிய விவரங்களைப் பார்த்தால் ஏற்கனவே இயற்றி இருக்கக்கூடிய டெனன்ஸி ஆக்டுகளுக்கு விரோதமாக தோன்றுகிறது. இந்தச் சட்டத்தின் ஒரு க்லாசில் இதற்குப் பிறகு ஏற்கனவே உள்ள சட்டத்தில் உள்ள விதிகள் எல்லாம் இதனால் அடிப்பட்டுப்போய்விடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டெனன்ட் ப்ரொடக்ஷன் ஆக்ட்படி சரியான முறையில் விவசாயிகள் நடந்து கொள்ளவில்லை என்றால்—குறிப்பாக வருடாவருடம் குத்தகையோ வாரமோ கொடுக்காவிட்டால் அடிக்கடி கோர்ட்டுக்குப் போவதற்குப் பதிலாகச் நிலச்சுவான்தார் அந்த விவசாயியை நிலத்திலிருந்து வெளியேற்றலாம். நிலத்தையே சொந்தமாக பாத்யதைக் கொண்டாடினாலும் நிலத்திலிருந்து வெளியேற்றலாம் என்பதாக இருந்தது. இன்றைச்கு ஏற்படுத்தப் போகிற சட்டத்தில் நிலத்தில் இருந்து விவசாயியை வெளியேற்ற முடியாது என்பது மட்டும் அல்ல, அவர் இறந்த பிறகும் கூட அந்த விவசாயினுடைய மகனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற பிரிவைப் பார்க்கிறோம். இந்தச் சட்டத்தினால் டெனன்ஸி ஆக்ட் போய்விடுகிறது. அப்படி குத்தகை வாரம் முதலியவை தராவிட்டாலும், நில பாத்தியதைக் கொண்டாடினாலும் நிலச்சுவான்தாருக்கு அவற்றை வசூலிக்க என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறது? ஆகவே இந்தப் பிரிவுகளையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குறிப்பாக பல அம்சங்களைப் பொறுத்த வரையில் டெபனிஷன் என்ற முறையில் "புல் ஓனர்" என்றும், "லிமிடெட் ஓனர்" என்றும், "லாண்டு ஓனர்" என்றும், "ஓனர்" என்றும் நான்கு பிரிவாக விளக்கம் கொடுக்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றையும் ஒரு சில குறிப்புகளை வைத்து அமைத்து இருக்கிறார்கள். இது வேடிக்கையாகவும், கேலியாகவும் தோன்றுகிறது. இவை எல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு பிரிவை வைத்து டெபனிஷன் கொடுப்பது சரியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்குத் தகுந்த திருத்தமும் கொடுத்திருக்கிறோம். க்ளாஸ் பை க்ளாசாக வரும் போது இதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நாம் ஸ்டான்ர்ட் எக்கர் என்பதை நிலத் தீர்வை அடிப்படையில் நம் மாகாணத்தில் செய்திருக்கிறோம். இந்தத் தீர்வை ரொம்ப காலத்திற்கு முன்பாக செட்டில்மெண்டு ஆயிற்று. அப்போது ஏற்பட்ட

[Sri K. Ramachandran] [16th April 1960

தீர்வை அடிப்படையில் இப்போது நிர்ணயிப்பது சரியல்ல. இதை விட நல்ல வேறு முறையில் அமைக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. பொதுவாக இரண்டு போகத்திற்கு நிச்சயமாக தண்ணீர் கொடுக்கக் கூடிய உத்தரவாதமுள்ள பகுதிகள், ஒரு போகத்திற்குக் கொடுக்கக் கூடிய பகுதிகள், தண்ணீரே கொடுக்க முடியாத பகுதிகள் என்று பிரித்தும் அமைக்கலாம். இப்படி சாதாரண எளிய முறையில் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக ஆந்திரப் பிரதேசத்தை எடுத்து கொண்டால் 5,200 ரூபாய் வருமானம் என்ற அடிப்படையிலும் மேற்கொண்டு 1,200 ரூபாய் வருமானம் இதாருக்கும் என்று சொல்லி வருமானத்தை அடிப்படையாக வைத்து இதை நிர்ணயிக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்று நாம் நிர்ணயித்துள்ளது. அந்த வருமான அளவுக்காவது வருமா என்றால் கிடையாது. அதுவும் நஞ்சைப் பிரதேசத்தில் ஒரு எக்கர் என்பது ராமநாதபுரம் போன்ற வரண்ட பிரதேசத்தில் 4 எக்கர் என்பதற்குச் சமம் என்பது கொஞ்சம்கூட பொருந்தாது. இந்த வித்தியாசத்தையாவது மாற்றி அமைக்க வேண்டும்.

இன்னொன்று இந்தச் சட்டத்தில் ஸ்ரீதனம் என்று கல்யாணம் ஆகாத பெண்கள், கல்யாணம் ஆன பெண்கள் என்ற அடிப்படையில் விதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் " a wife living with her husband, the land acquired by her from any of her parents, brothers, grand-parents or maternal uncles." என்றும்,

" an unmarried female member of a family, the land acquired by her from her mother or any of her maternal grand-parents or maternal uncles."

என்றும் இப்படி ஒரு சிலர் கொடுத்தால்தான் ஸ்ரீதனம் என்ற முறையில் சொல்ல இருக்கிறார்கள். யாரேனும் இப்படிச் செய்திருப்பார்களோ, என்னமோ ஏதோ குறிப்பாக ஒன்றை மனதில் வைத்து எழுதி இருப்பது போல இருக்கிறது. இதுவரையிலும் உள்ள இந்து லா போன்ற சட்டங்களில் இது மாதிரியாக இல்லை. சொத்து பெண்களுக்கு வருகிறதென்றால் குறிப்பிட்ட சொந்தக்காரர் கொடுத்தால் தான். சொத்து என்கிற அபிப்பிராயம் சரியல்ல. மூன்றாவது மனிதர்கூடக் கொடுக்கலாம். இப்போது இருக்கக்கூடிய இதர சட்டங்களுக்கு முரணில்லாத வகையில் இந்த டெபனிஷனை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி மாற்றி அமைத்தாலும் கூட பத்து எக்கராவுக்கு மேல் இருக்க முடியாது. ஒரு குடும்பத்திற்கு 60 எக்கராவுக்கு மேல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, காம்பென்சேஷனைப் பொறுத்த வரையில் 27-வது செக்ஷனில் கொடுக்கிறார்கள். சட்டத்தில் விரிவாக இல்லாவிட்டாலும் விதி முறைகளை அமைக்கும்போது சரியாகப்போடலாம் என்றாலும் கூட சட்டத்திலும் தெளிவாக நியாயமான முறையில் இருப்பது அவசியம். நாம் கொடுக்கிற தொகை நியாயமானதாக இருக்க வேண்டும். அதோடு இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை 20 வருஷ பாண்டு மூலம் கொடுக்கலாம் என்ற முறையில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம் என்று செய்திருக்கிறார்கள்.

ஜமீன்களை எடுத்துக் கொண்ட காலத்தில்—அவர்கள் ஏராளமான சொத்துக்களை வைத்திருந்தார்கள்—முதலில் பாதித் தொகையைக் கொடுத்துவிட்டு பாக்கியை சரியான முறையில் நிர்ணயமானவுடன் கொடுப்பதாக ஏற்பாடு செய்தோம். அட்வான்ஸ் காம்பென்சேஷன் என்று முதலிலேயே பாதித் தொகை கொடுக்கப்பட்டுவிட்டது. அது போலவே இப்போது இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் போது வேண்டுமானால் முதலில் பாதித் தொகையைக் கொடுத்துவிட்டு பாக்கியை பல தவணைகளிலாவது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். டிஸ்போஸல் ஆப் லாண்டு பற்றி செக்ஷன் 84-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸ்டாச்சுடரியாக ஏற்பட வேண்டும்.



16th April 1960] [Sri K. Ramachandran]

மற்ற ராஜ்யங்களில் ஏற்பட்டிருக்கும் சட்டங்களைப்பார்த்தால் கேரளாவில் 50 சதம் நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்கலாம், ஹரிஜனங்களுக்கு கொடுக்கலாம்; 25 சதம் 5 எக்கர் நிலம் உள்ள குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பல ராஜ்யங்களிலே இருக்கின்றன. நம் ராஜ்யத்திலும் இம்மாதிரி இருக்க வேண்டும். இப்போது அப்படி நிர்ணயிக்கப்படவில்லை. பின்னால் ரூல் மேகிங் பவரிலே வைத்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டார்களோ தெரியவில்லை. எப்பொழுது சௌகரியப்படுகிறதோ அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து அதை நிர்ணயிக்காமல் விட்டுவிட்டிருப்பார்களானால் அது தவறான காரியம் ஆகும். இதெல்லாம் சட்டத்திற்குள்ளேயே வந்து விட வேண்டும். ரூல் மேகிங் பவரிலே வைக்க வேண்டுமென்று நினைத்தால் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று அர்த்தமாகும். செக்ஷன் 88 ஜனரல் ஆர்டர்ஸ் என்ற முறையிலே ஆதரைஸ்ட் ஆபீசர்க்கோ, லாண்டு போர்ட்டுக்கோ, சுகர் போர்ட்டுக்கோ உத்திரவு போடலாம். இந்த உத்திரவுகளை அவர்கள் ஏற்று நடத்த வேண்டுமென்று 88-வது பிரிவிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது ரொம்பவும் தவறு. இதிலே அதிகாரிகளுக்கு எல்லாம் பல சட்டங்களில் ஜுடிஷியல் பங்ஷன் பல செக்ஷன்களிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் சர்க்கார் ஜெனரல் ஆர்டர் போடும் அளவில் லைவ் ஸ்டாக்கு பாரமிற்கோ, சுகர் பாக்டரிக்கோ இம்மாதிரி ஜெனரல் நேச்சர் உத்திரவு போட்டால், அதை அமுல் நடத்த வேண்டுமென்ற அம்சம் இருக்கிறது. அது கூடவே கூடாது. அரசாங்கம் சட்டத்தின்படி அனுமதி இருக்கக் கூடிய அதிகாரிகள் சுதந்திரமாக இயங்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். சர்க்கார் தலையீடு நிச்சயமாக அவர்களிடத்திலே இருக்கக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சொத்துக்களைப் பொறுத்த வரையில் எலினேஷன் செல்லாது என்று ஒரு சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே ஏற்படுத்தினதற்கு கஷ்டம் இல்லை. சட்டம் நமக்கு தெரிவிக்கப்பட்ட காலம் 6-4-60-ல் இருந்து. இதற்குப் பின்னால் ஏற்படுகிறதற்கு இந்த எலினேஷன் வாய்ட் என்று செக்ஷனிலே சொல்லியிருக்கிறார்கள். எலினேஷன் வாய்ட் என்று சொல்லும் போது சட்டத்திலே பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றபோது இம்மாதிரி சங்கடங்கள் ஏற்படுகின்றன. வாயிட் என்று சொல்லுவதற்கு பதிலாக எந்த அளவிற்கு ஒருவர் வைத்திருக்கிறாரோ. அந்த நிலத்தையே அவருடைய சீலிங்கிலே சேர்த்து விட வேண்டும். அலியனேஷன் வாய்ட் என்றால் வாங்கினவர்கள் உரிமை போகலாம். அவ்வளவு நிலங்களை அவர்கள் விற்றிருக்கலாம். இன்னொருவர் வாங்கியிருக்கலாம். அந்த நிலங்களையும் விற்றவர் கணக்கிலே சேர்த்துக் கொள்ள வேண்டும். அந்த அளவிற்கு சர்க்கார் அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு விவசாயிகள் பேரிலே பட்டா போட்டுக் கொடுக்கலாம். அதற்குள் காம்பன்சேஷன் கொடுக்கலாம். இது விற்றவர்களுக்குத் தண்டனையாகவும் இருக்கும். அதே சமயத்தில் விற்றதினால் நிறைய பணம் கிடைத்திருக்கலாம். இல்லை என்ற நிலைமை ஏற்படுகின்றது போகும். இந்த நிலைமையில் அலியனேஷன் வாய்ட் என்று சொல்லுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சொன்ன கருத்துக்களை நல்ல முறையில் ஆராய்ந்து சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI G. G. GURUMURTHI : கனம் தலைவி அவர்களே, இந்தச் சபை முன் இருக்கும் மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாய நிலங்களைப் பற்றி பல சட்டங்கள் வந்த பிறகு கடைசியாக இந்த உச்ச வரம்பு மசோதா சபைமுன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவினால் பாதிக்கப்படக் கூடிய விவசாயிகள் மிகக் குறைவாக இருந்தாலும் பாதிக்கப்படாத விவசாயிகளும் கூட, இந்த மசோதாவினால் தங்களுக்கு என்ன கதி ஏற்படுமோ, அவர்கள்

எப்படி பாதிக்கப்படுவார்களோ என்ற ஐயப்பாட்டினால் பலர் தங்கள் நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் விவசாயத்துறையிலேயே நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தடையாக இருந்து அவர்கள் உற்சாகம் இழந்து இருந்தார்கள். இந்த சபையில் பேசும்போது கூட ஒரு சிலர் தங்கள் ஜில்லாவில் இருக்கும் நிலச்சுவாந்தார்களையும் மிராசுதார்களையும் மனதில் வைத்துக் கொண்டு மற்ற ஜில்லாக்களிலேயும் அப்படித்தான் இருக்கும் என்ற முறையில் பேசுகிறார்கள். மிராசுதார்களுக்கு நிலத்தைப் பற்றி என்னவென்றே தெரியாது. விவசாயிகளைப் போல் அவர்கள் பாடுபடவில்லை என்ற கருத்தை வைத்து பேசுகிறார்கள். அப்படி பேசுவதால் நிலத்திலே நேரடியாக பாடுபடும் விவசாயிகளுக்கு கூட இதிலே பயம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. மற்ற ஜில்லாக்களிலே பார்த்தால் நிலம் படைத்த மிராசுதார்களாக இருந்தாலும் கூட அவர்கள் நேரடியாக நிலத்திலே இறங்கி வேலை செய்யத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இரண்டு ஆயிரம், நான்கு ஆயிரம் ஏக்கர் உள்ள விவசாயிகள்கூட தினம் காலை எழுந்து தங்களுடைய நிலத்திற்கு சென்று மேற்பார்வை பார்ப்பதோடு மட்டுமல்லாமல், சில விவசாய வேலை செய்யக் கூடிய நிலைமையில் பல ஜில்லாக்களில் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டி மற்ற துறைகளில் வருகின்ற வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்டப்படாததைக் கருதி விவசாயிகளிடத்திலே பலவித அபிப்பிராய பேதங்கள் தோன்றியிருக்கின்றன. நிலவுடமைகள் போலவே மற்ற உடமைகளையும் கருதி அவைகளுக்கும் உச்ச வரம்பு கட்டுவதற்கோ, வருமானத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதற்கோ அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் இருககிறதா என்ற ஐயப்பாடு சாதாரண விவசாயிகளிடத்திலே இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் இங்கே சொல்லப்படுகிற வாதம், நிலம் எல்லாம் இயற்கையாக உண்டான சொத்து ஆகையால் விவசாய நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்டப்படுகிறது என்று கருத்துப்பட பலர் பேசினார்கள். விவசாயிகள் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் நிலங்களை ஆக்கிரமித்து எல்லாம் அந்த ஆக்கிரமிப்பினாலே விவசாயிகளுக்கு நிலவுடமை ஆய்ற்று என்று சொல்ல முடியாது. நிலத்திலே உழைத்தும் வேறுதுறையிலே இருக்கக் கூடியவர்கள் தங்களுடைய வருவாயையும் நிலத்தின் மீது முதலீடு செய்து உடைமையாக கொண்டார்களே தவிர வேறு விதமாக வந்துவிடவில்லை. ஒருவன் நிலத்திலே முதலீடு செய்யாமல் வேறு துறையிலே முதலீடு செய்து இருந்தால் அவர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. விவசாய நிலத்திலே முதலீடு செய்தவர்களுக்கு மட்டும் உச்ச வரம்பு வருகிறது. வேறு துறையிலே முதலீடு செய்தவர்களைப் பற்றி உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படுமா என்ற விவரம் தெரியவில்லை. நிலத்திற்கு முதலிலே உச்ச வரம்பு வருகிறது. பின்னால் மற்றவைகளுக்கும் உச்ச வரம்பு வரும் என்று சொல்லப்படவில்லை. அதற்கான திட்டங்கள் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? என்பதைத் தெரிந்துக்கொள்ள முடியவில்லை. இந்தத் திட்டத்தின் பிரகாரம் விவசாயி குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் ஒரு நிர்ணயம் செய்வதால் சமுதாய நீதி நிலைநிறுத்தப்படுகிறது என்று சொல்ல முடியாது. மற்றத் துறைகளிலும் சமுதாய நீதி நிர்ணயிக்கப்படவேண்டும். மற்றத் துறைகளிலும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் இருக்கின்றன. ஏனைய துறைகளில் வருவாயிலும், உடமைகளிலும் வேற்றுமைகளை வைத்துக் கொண்டு விவசாயத் துறையிலே மட்டும் வேற்றுமைகளை அகற்ற சட்டங்கள் செய்து கொண்டு போவோமானால் இன்னும் ஒரு தலைமுறையில் அரசியல் பொருளாதார மற்ற எல்லா துறைகளிலும் விவசாய சமுதாயம் பின்னால் தள்ளப்படும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்தத்தலைமுறையில் கிராமத்தில் இருக்கும் விவசாய மக்கள் அரசியல் பொருளாதாரம் மற்ற துறைகளிலும் முன்னுக்கு வரலாமே தவிர போகப் போக அவர்கள் நிலைமை மாறுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்றத் துறைகளிலே உள்ளவர்களின் வருவாய்க்கும், நிலம் உள்ளவர்களின் வருவாய்க்கும் பாகுபாடு இருக்குமானால் அடுத்த தலைமுறையில்





உள்ள விவசாய மக்கள் நிச்சயமாக முன்னுக்கு வரமுடியாது என்பதை நான் நிச்சயமாக சொல்லுவேன். நிச்சயமாக இதுதான் நடக்கப் போகிறது.

மசோதாவில் இருக்கும் ஷரத்துக்கள் எல்லா வகுப்பாளர்களுக்கும் எல்லா ஜில்லாக்களில் இருக்கக் கூடியவர்களுக்கும் சமமான நிலைமையிலும் ஒவ்வொருவரையும் பாதுகாக்கக் கூடிய நிலைமையில் இருக்க வேண்டும். ஸ்டாண்டர்ட் ஏக்கரை நிர்ணயிக்கும் அரசாங்கம் பூர்ணமாக தகவல்களை விசாரித்து தெரிந்து செய்திருக்க வேண்டும். நில வரியை வைத்து ஸ்டாண்டர்ட் ஏக்கரை நிர்ணயம் செய்வதிலே உண்மையான நியாயம் கிடைக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். நிலத்தினுடைய தரம், கிராமத்திற்குக் கிராமம் வேறுபடும். என்ன திட்டத்தின் மேல் நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கிறோம் ? நிலத்தின் வருவாயை வைத்து உச்ச வரம்பு வைக்கிறோமா, அல்லது நிலத்தின் விஸ்தீரணத்தின் எண்ணிக்கையை வைத்து நிர்ணயம் செய்கிறோமா என்று இந்த இரண்டுக்கும் மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன.

ஒரு ஸ்டான்டேர்ட் ஏக்கர் இவ்வளவு என்று சொன்னால், புஞ்சை 11 a.m.
நிலங்களை ஸ்டாண்டர்ட் ஏக்கராக மாற்றும்போது அதை அதிகப்படுத்த வேண்டும். நஞ்சை நிலம் ஒரு ஏக்கர் என்று சொன்னால் அதற்குச் சமமாக புஞ்சை நிலத்தை எடுக்கும்போது அதை ஐந்து ஏக்கர் என்று வைக்க வேண்டும். ஏனெனில், புஞ்சை நிலத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் அதில் ஐந்தில் ஒரு பங்குதான் இருக்கும். அப்படி வரும்போது, 30 ஏக்கர் நஞ்சை என்று சொல்லும்போது புஞ்சை நிலம் 150 ஏக்கர் என்று வைப்பதா என்று கேட்கலாம். ஒரு விவசாயி 150 ஏக்கர் வைத்திருப்பதா என்றுதான் கேட்கப்படுகிறதே தவிர, விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கிறார்களா என்பது ஆராயப்படவில்லை. கிராமப் பொருளாதாரத்தையும், விவசாயப் பொருளாதாரத்தையும் அடிப்படையாக வைத்து இந்தியா பூராவிற்கும் இருக்கும் ஒரு பெரிய விவசாய பொருளாதார திட்டத்தை மாற்றியமைக்கும்போது, அது விவசாயியாக இருந்தாலும் சரி அல்லது யாராகயிருந்தாலும் சரி அவர்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடிய முறையில் அமைய வேண்டும். அதற்காக நியாயத்தை தராசில் வைத்து அளந்து கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. எந்தச்சட்டம் வந்தாலும் ஒரு சிலர் பாதிக்கப்படலாம். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் கூடுமானவரையில் எல்லோருக்கும் நியாயம் கிடைக்கத்தக்க வகையில் நடவடிக்கைகளைக்கைக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, ஒரு இடத்தில் இரண்டு ப்ராஜெக்ட்ஸ் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் ஒரு ப்ராஜக்ட் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு விவசாயம் மூலம் நல்ல வருமானம் கிடைக்கலாம். ஆனால் இன்னொரு ப்ராஜெக்ட்டில் இருக்கக்கூடியவர்களுக்கு அவ்வளவு வருமானம் கிடைக்காமல் இருக்கலாம். ஒரு ப்ராஜக்ட் ஏரியாவில் உள்ளவர்களுக்கு 500-லிருந்து ஆயிரம் வரை வருமானம் கிடைக்கலாம் ஒரு ஏக்கரிலிருந்து. இன்னொரு ப்ராஜெக்ட் ஏரியாவில் உள்ளவர்களுக்கு ஒரு ஏக்கரிலிருந்து 100 அல்லது 200 ரூபாய் தான் வருமானம் கிடைக்கலாம். ஆகவே, குறைவான வருமானம் கிடைக்கக்கூடியவன் தனக்கு நியாயம் கிடைக்கவில்லையே என்றுதான் நினைப்பான். ஆகவே, கீழ் பவானி பிரதேசத்தில் உள்ள நிலங்களின் ஸ்டான்டேர்ட் ஏக்கர் அளவை, இப்பொழுதுள்ளதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் $4\frac{1}{2}$ மாதங்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. அந்தப் பிரதேசங்களிலும், இப்பொழுதுள்ள அமைப்பில் இருப்பதை விட, ஏக்கர் அளவை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அடுத்தபடியாக புஞ்சை நிலங்களைப் பொறுத்த வரையில் அவைகளில் பல தரம் இருக்கின்றன. நல்ல வருவாய் வரக்கூடிய புஞ்சை நிலங்களும் இருக்கின்றன, சில மேய்ச்சல் காடுகளாகவும் இருக்கின்றன. ஆனால் சில புஞ்சை நிலங்களில் விவசாயம் செய்துதான் ஆக வேண்டியிருக்கிறது.

[Sri G. G. Gurumurthi] [16th April 1960

அங்கு பயிரிடும்போது பயிரிட ஆகும் செலவைக்கூட விவசாயிகளால் எடுக்க முடியாத நிலைதான் இருக்கிறது. அதையும் நாலு எக்கர்கள் அதிகமாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சொந்த சாகுபடி என்று வரும்போது, ஒரு ஜில்லாவில் இருக்கக் கூடிய நிலையை வைத்து பரவலாக பேசப்படுகிறது என்பதுதான என் கருத்து. இந்தச் சட்டப் பிரகாரம், ஐந்து பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டான்டேர்ட் எக்கர்கள் இருக்கிறது என்று வைத்துக் கொண்டால், விவசாயி குடும்பம் ஒரு 15 எக்கர்களை சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொண்டு மற்ற 15 எக்கரை குத்தகைக்கு விட்டிருக்கலாம். ஆனால் அந்தக் குடும்பத்திலுள்ள வயது வந்த் ஒரு பையன் சில காலம் கழிந்து அந்த குத்தகைக்கு விட்டிருக்கும் 15 எக்கர் நிலத்தை தான் சொந்த விவசாயம் செய்ய வேண்டுமென்று விரும்பினால் இந்தச் சட்டப் பிரகாரம் அந்நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது. ஆக, தன் சொந்த நிலத்தில் தனக்கு சொந்த சாகுபடி செய்ய முடியவில்லை என்ற நிலை ஏற்படும்போது அவனுக்கு நீங்கள் என்ன வேலை கொடுக்கப் போகிறீர்கள் ? பின், எப்படி விவசாயம் அபிவிருத்தி அடைய முடியும் ? வருமான வரி, தொழில் வரி போன்ற வரியை ஒருவன் கொடுக்கிறான் என்றால் அவன் சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது. பஞ்சாயத்திற்கு வருமானம் வருகிறது என்று சொல்லி ஒருவனிடமிருந்து தொழில் வரி என்று எட்டணா வாங்கி விட்டால்கூட அவன் சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது. அதே போன்று பல விவசாய குடும்பங்களில் உள்ளவர்கள் இன்று பலயிடங்களில் உத்தியோகம் பார்த்து வருகிறார்கள். அப்படி உத்தியோகத்தில் இருப்பவர் ஒருவர், அந்த உத்தியோகம் பிடிக்காமல் அதை விட்டு விட்டு வந்திருக்கலாம். உத்தியோகம் வேண்டாமென்று சொல்லிவிட்டு நிலத்தை சொந்த சாகுபடி செய்து கொண்டு வாழலாம் என்று வரும்போது அவனால் நிலத்தை எடுத்து விவசாயம் செய்ய முடியாது. டெனன்ட் கையில் தான் ஆயுள் காலம் பூராவும் நிலம் இருக்கும். எங்கள் கோவை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கு நேரடியாக நிலத்தை உழுது வாழக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள், பல எக்கர்கள் வைத்துக் கொண்டு. ஆக, நான் சொல்வது என்னவென்றால் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள், ஒரு வேலைக்கு என்று சென்று விட்டு பின்னால் வந்து நாமே விவசாயம் செய்யலாம் என்று வரும்போது அவர்களுக்கு விவசாயம் செய்ய—குத்தகைக்காரர்களிடமிருந்து நிலத்தை எடுத்துக் கொள்ள ஒரு நிலை வருகிறதென்றால், வகை செய்யப்பட வேண்டும். அடுத்தபடியாக விதிவிலக்கு கொடுக்கக் கூடிய நிலங்களை எடுத்துக் கொண்டால், மலைப் பிரதேசங்களிலுள்ள நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது, அதாவது ஷெட்யூலில் குறிப்பிடப் பட்டுள்ள மலைப் பிரதேசங்களுக்கு. அதோடு அரசாங்கம் அப்போதைக்கப்போது கெஸட் நோட்டிப்பிக்கேஷன் மூலம் விதிவிலக்கு அளிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாலவாடி பிர்க்காவை எடுத்துக் கொண்டால் அது பூராவும் மலைப் பிரதேசம் நீலகிரியோடு இணைந்த பகுதி. பர்கூர் கிராமமும் மலைப்பிரதேசத்தை சேர்ந்தது. எனவே தாலவாடி, ராக்கா, பர்கூர், இமயம் ஆகிய மலைப் பிரதேசங்களுக்கு, மற்ற மலைப்பிரதேசங்களுக்கு கொடுக்கப்பட்டிக்கும் விலக்குபோல் விதிகள் கொடுக்கப்பட வேண்டும். கால்நடைகளுக்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கும் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களுக்கும் ஓரளவு உச்சவரம்பு வைத்தால் நன்றாயிருக்குமென்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. SUBRAMANIAM: கனம் சபைத் தலைவி அவர்களே, நான் இந்த உச்சவரம்புச் சட்டத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த உச்சவரம்புச் சட்டத்தில் 30 ஸ்டான்டேர்ட் எக்கர் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இதை சிலர் அதிகம் என்றும் சிலர் குறைவு என்றும் இங்கு பேசிய அங்கத்தினர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால் இந்த உச்சவரம்புச் சட்டம் எந்தமாதிரியான சூழ்நிலையில் புகுத்தப் பட்டிருக்கிறது என்பதை நாம் கவனித்தால் இந்த 30 எக்கர் என்று சொல்வது நியாயமான உச்சவரம்பு என்றே நமக்குத் தோன்றும். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் வளர்ந்து வரும் பொருளாதாரத் துறையில் விவசாயப் பொருளாதாரத்தை மட்டும்தான் நாம் கட்டுப்படுத்த முன்வந்துள்ளோம். மற்ற துறைகளில் எவ்வளவு வருமானம் வந்தபோதிலும் கூட அதைக் கட்டுப்படுத்த நாம் முன்வரவில்லை. இதற்கு முன்னதாக அதிக நிலம் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஓரளவு வாழ்க்கைத்தரத்தை நல்ல முறையில் நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது நாம் திடீரென்று உச்ச வரம்பு கட்டுவதால் அவர்கள் தங்கள் வாழ்க்கைத்தரத்தை ஓரளவு கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தமட்டில் 1950-ம் ஆண்டை பேஸிக் இயராக வைத்துப் பார்த்தால் இப்பொழுது வாழ்க்கைத்தரம் இரண்டு மடங்காக அதிகரித்திருப்பதை நாம் பார்க்கமுடியும். இப்படி அவர்கள் வாழ்க்கைத் தரம் அதிகரித்துக் கொண்டு வரும் காலத்தில், நாம் அதைத் கட்டுப்படுத்த முன் வந்திருக்கும்போது, இந்த 30 எக்கர் என்று உச்சவரம்பு கட்டியிருப்பது நியாயமானதே என்றுதான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கங்கை, யமுனா பாயக்கூடிய இடங்களில் கூட, யூ.பி., பெப்சு., பீஹார் போன்றயிடங்களில் கூட 30 எக்கர்கள் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் 30 எக்கர் என்று சொல்வது அதிகம் இல்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, அவர்களுக்கு காம்பன்ஸேஷன் கொடுத்திருப்பது சம்பந்தமாக, நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில், எல்லா ராஜ்யங்களிலும் கடைசியாக இப்பொழுது இந்த உச்சவரம்பு கொண்டு வந்திருக்கிறபடியால் மற்ற ராஜ்யங்களில் உள்ள சங்கடங்களை எல்லாம் நன்கு அலசிப்பார்த்து போதுமான காம்பன்ஸேஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆகவே எந்தவிதமாகப் பார்த்தாலும் எந்த மிராசுதார்களும் இதில் சொல்லப்பட்டிருக்கின்ற காம்பன்ஸேஷன் குறைவாக இருக்கிறது என்று சொல்வதற்கு இடமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பொறுத்தவரையில் பல வகைகளில் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. நஞ்சை நிலத்தைப் பொறுத்தவரையில் நான்கு விதமாக பாகுபாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 10 ரூபாய்க்கு அதிகமாக கிஸ்தி செலுத்தக்கூடிய நிலங்களாக இருந்தால் 30 எக்கர் என்றும், எட்டு ரூபாய் முதல் 10 ரூபாய் வரை கிஸ்தி செலுத்தக்கூடிய நிலங்களாக இருந்தால் 35 எக்கர் என்றும், நான்கு ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரை கிஸ்தி செலுத்தக்கூடியதாக இருந்தால் 48 எக்கர்கள் என்றும் பிரிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதோடு நான்கு ரூபாய்க்கும் கீழே கிஸ்தி செலுத்தக்கூடியதாக இருந்தால் 60 எக்கர் என்றும் இவைகள் எல்லாம் சரிசமமாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதே நேரத்தில் புஞ்சை நிலங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் சர்க்கார் முதல்தர பாசன வசதியுள்ள முதல் தரமான நிலங்களை எடுத்துக்கொண்டால் 35 எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக, நான்கு ரூபாய்க்கு மேல் எட்டு ரூபாய்க்கு கீழ் கிஸ்தியுள்ளதும் சர்க்கார் பாசன வசதியுள்ளதுமான நிலங்களில் 48 எக்கர் என்றும், பாசன வசதியில்லாத இடமாக இருந்தால் அதோடு இரண்டு ரூபாய்க்கு மேல் எவ்வளவு கிஸ்தி செலுத்துவதாக இருந்தாலும் அதில் 75 எக்கர்கள் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அதோடு ஒன்றேகால் ரூபாய்க்கு கீழே கிஸ்தியுள்ளதாக இருந்தால் 120 எக்கர்கள் என்றும், ஒன்றேகால் ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் வரையில் கிஸ்தியுள்ள நிலங்களாக இருந்தால் 90 எக்கர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் புஞ்சை நிலம் ஐந்து ஐட்டங்களாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இதைப் பொறுத்தவரையில் நஞ்சை நிலங்களுக்கு சிறிது பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன். இப்போது சொல்லப்பட்டிருப்பதின்படி பார்த்தால் நான்கு ரூபாய்க்கும் கீழே கிஸ்தி செலுத்தக்கூடிய நஞ்சை நிலமாக இருந்தால் 60 எக்கர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. தண்ணீர்



16th April 1960] [Sri R. Subramaniam]

[Sri R. Subramaniam] [16th April 1960

இல்லாத தோட்ட நிலமாக இருந்தால், இரண்டு ரூபாய்க்கு மேல் கிஸ்தியுள்ள நிலமாக இருந்தால் 75 ஏக்கர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இவ்விதம் இருப்பதை எடுத்துக்கொண்டால், தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் நான்கு ரூபாய் கிஸ்தியுள்ள நிலங்களில் கிடைக்கின்ற வருமானத்தை எடுத்துக்கொண்டால், செலவு போக கிராஸ் இன்கம் என்று எடுத்துக்கொண்டால் ஏக்கர் ஒன்றுக்கு நான்கு மூட்டை ஐந்து மூட்டை நெல் கிடைக்கிறது. நெட் இன்கம் மூன்று மூட்டை என்று வைத்துக்கொண்டாலும் கூட அறுபது ஏக்கரில் 180 மூட்டை கிடைக்கிறது. இதை வைத்துக்கொண்டு ஒரு மனிதன் தனது வாழ்க்கைத்தரத்தை நடத்தக்கூடிய வசதி இதன் மூலம் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தோட்டக்கால் நிலங்களை எடுத்துக்கொண்டால், சில இடங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 15 மூட்டை 20 மூட்டை வருமானம் கிடைக்கின்றன. ஆனால் இப்போது கூறப்பட்டிருப்பதைப் பார்த்தால் இந்த இரண்டையும் ஒன்றாக சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலங்களுக்கு இன்னும் சிறிது சலுகை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக, கோவில் நிலத்தைப்பொறுத்தவரையில், உச்ச வரம்பு கட்டவில்லை என்றே சொல்லலாம். 200 ஏக்கர் கொடுத்துவிட்டு பாக்கியுள்ள நிலங்களை எடுத்து வருடாவருடம் அதில் கிடைக்கக்கூடிய நெட் இன்கம் கொடுத்து விடலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு, கோவிலுக்கு சொந்தமான மரம், கட்டிடம், மெஷினரி இவைகளுக்கும் இதனுடைய மதிப்பின் அளவின் பேரில் நான்கு சதமானம் வட்டி கொடுக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதையும் நாம் நன்றாக கவனிக்கவேண்டும். மரம், மெஷினரி இவைகள் எல்லாம் நிலையானவை அல்ல. அதிலும் இப்போது இருக்கின்ற மதிப்பு இன்னும் 15 வருடங்களுக்கு இப்படியே இருக்கும் என்று சொல்லமுடியாது. ஆகவே இப்போது இருப்பதை அப்படியே வைத்துக் கொண்டிருந்தால் பின்னால் இது தொந்தரவு தரக்கூடியதாகத்தான் இருக்கும் என்பதுதான் என் அபிப்பிராயம். மடங்களை பொறுத்தவரையில் வேண்டுமானால் இப்போது 200 என்று இருப்பதை 100 என்று குறைத்துக்கொள்ளலாம். ஆனால் கோவில் நிலங்களைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு உச்சவரம்பு ஏற்படுத்தாமல், கோவில் நிலங்களை எல்லாம் சர்க்காரே ஏற்றெடுத்து, கோவில்களுக்கு அதிலிருந்து நெட் ஆன்வல் இன்கம் என்ன கிடைக்கின்றதோ அதை சர்க்காரே கொடுத்துவிட்டு இம்மாதிரி எடுக்கப்பட்ட நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய, அந்தந்த இடங்களில் நிலமில்லாது இருக்கும் மக்களை சேர்த்துக்கொண்டு செய்யலாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இருப்பதை வைத்துக்கொண்டுப் பார்த்தால் இனிமேல் கடவுள் பேருக்கு எழுதி வைக்க முடியாது என்று நினைக்கிறேன். முன்பு எல்லாம் சாகக்கூடிய காலத்தில் பலர் தங்கள் சொத்துக்களை கடவுள் பேருக்கு எழுதி வைத்திருப்பதாக தெரிகிறது. ஆகவே இவைகளை பாதுக்காக்கின்ற முறையில், கோவில் நிலங்களைப் பொறுத்தவரையில் உச்சவரம்பு தேவையில்லை என்று நினைக்கிறேன். அதோடு, காட்டில் பிரீடிங், டைரி பார்மிங், சர்க்கரை (சுகர்) பாக்டரி முதலியவைகளுக்கு இதில் நாம் உச்சவரம்பு கட்டவில்லை. ஆனால் இப்போதும் இதிலுள்ள மூன்று விதங்களிலுள்ள தொழிலுக்கும் கட்டுப்பாடு கிடையாது. ஏதோ இதற்காக லாண்ட் போர்ட் நிலங்களை எல்லாம் விநியோகம் செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கரை பொறுத்த அளவில் அவர்கள் கேட்கின்ற அளவு நிலத்தை நாம் கொடுக்கத்தான் போகிறோம். இப்போதுள்ள நிலத்திற்கு எந்த விதமான கட்டுப்பாடும் இல்லை. ஆனால் இனிமேல் காட்டில் ப்ரீடிங் வைப்பதாக இருந்தால் மேய்ச்சல் தரைக்காக ஏக்கர் ஒன்றுக்கு 1¼ ரூபாய்க்கும் கீழ் கிஸ்தி செலுத்தக்கூடிய 50 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது வைத்துக் கொண்டிருப்பவருக்கும் இனிமேல் வைக்கப் போகிறவர்களுக்கும் வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது. இப்போது வேண்டுமானால் நாம் காட்டில் பிரீடிங்-காக ஆயிரம் ஏக்கர் வேண்டும் என்றாலும் கொடுக்கலாம். இதற்கெல்லாம் உச்ச வரம்பு கட்டி கட்டுப்படுத்தவேண்டிய அவசியமில்லையென்று விடப்பட்டிருக்கிறது. இந்த



16th April 1960] [Sri R. Subramaniam]

உச்ச வரம்பு எதற்காக கொண்டு வருகிறோம். ஏதோ விவசாயத் துறையில் மனிதனுக்கு மனிதன் அதிகமான வருமானம் இருக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது, அவ்விதமில்லாத ஒரு சோஷயலிஸ சமுதாயத்தை, மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லாத, இடத்திற்கு இடம் வித்தியாசமில்லாத நிலைமையை கொண்டு வரவேண்டும் என்பதுதான் குறிக்கோள். அவ்விதமிருக்கும்போது இதில் இந்தவிதமான வித்தியாசங்கள் எதற்கு என்பதுதான் எனக்கு தெரியவில்லை. மனிதனுக்கு மனிதன் இடத்துக்கு இடம் வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி நன்றாக கவனித்து ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். மேலும் ஆர்ச்சர்ட், தோப்பு இவைகளுக்கு எல்லாம் உச்சவரம்பு கிடையாது என்று இருக்கிறது. சாதாரணமாக தோப்புகளை எடுத்துக் கொண்டால் நம்முடைய முதாதையர்கள் தங்களுடைய தோப்புகளை கொடுத்திருப்பார்கள். ஆனால் இப்போது அதில் நாம் பலவிதங்களில் கல்டிவேஷன் செய்து, அதிலிருந்து வருஷா வருஷம் எவ்வளவோ லாபத்தை அடைந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இதற்கு உச்சவரம்பு வேண்டியது இல்லை என்று சொல்வது நியாயமல்ல. தென்னந்தோப்பை எடுத்துக் கொண்டால், ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தது வருடம் ஒன்றுக்கு 200 ரூபாய் கிடைக்கும். இவ்விதம் 30 ஏக்கருக்கு என்று கணக்கிட்டுப் பார்த்தால் 6,000-ரூபாய்க்கு குறையாமல் கிடைக்கும். பிளானிங் கமிஷன் திட்டப்படிப் பார்த்தால் ஒரு குடும்பத்திற்கு family holding போதும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பாமலிஹோல்டிங் வருமானம் 1,200 ரூபாய் எனவே 3 600 ரூபாய் வருமானமாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த முறையில் பார்த்தாலும் இதன் மூலமா அதிகமாகத்தான் கிடைக்கிறது. ஆகவே இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டியது அவசியம் என்று தோன்றவில்லை.

ஸ்ரீதன லாண்ட்-களை பொறுத்தவரையில், இதற்கு தேவைப்படாத விளக்கங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக சொல்லப்பட்டிருக்கும் விளக்கத்தில், எப்படி இவைகள் எல்லாம் இணைப்பது, எப்படி இவைகள் கிடைக்கிறது, என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. கல்யாணம் ஆன பெண்ணுக்கு கொடுக்கலாம், ஆனால் கல்யாணமாகாத பெண்ணுக்கு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்யாணம் ஆன பெண் என்று எடுத்துக்கொண்டால், அவளுடைய தாய், தகப்பன், தம்பி எல்லோரும் கொடுக்கலாம். ஆனால் கல்யாணமாகாத பெண்ணுக்கு தாய்மட்டுமே கொடுக்கலாம். உண்மையில் பார்த்தால் நாம் குடும்பக்கட்டுப்பாட்டைப் பற்றி பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறோம். அந்த முறையில் கல்யாணமாகாத பெண்கள் குடும்பத்தை பெருக்காமல் இருக்கும்போது வாலண்டிரி இம்பொவரிஷனை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், இதற்கு ஏன் பாரபட்சம் காட்டவேண்டும் என்பதுதான் தெரியவில்லை. கல்யாணமானவர்களுக்கு எந்தவிதத்தில் வேண்டுமானாலும் சொத்து வரலாம். கல்யாணமாகாதவர்களுக்கு மட்டும் இதில் சலுகை கொடுக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. ஆகவே கல்யாணம் ஆனவர்களுக்கு, என்றும் கல்யாணம் ஆகாதவர்களுக்கு என்றும் ஏன் வித்தியாசம் காட்டப்பட வேண்டும். இதற்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை. ஆகவே இதைப்பற்றியும் நன்றாக ஆலோசனை செய்து பார்த்து இதில் பாகுபாடு இல்லாமல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நடுத்தர குத்தகைதாரர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இந்த சமூகத்திலுள்ள ஏழை மக்களின் ரத்தத்தை உறிஞ்சுகின்றவர்கள். இந்த மசோதாவில் இவர்களுக்கு முக்கியமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கது. அது மட்டுமல்ல, டெனண்ட்டுக்கு நஷ்ட ஈடாக நெட் ஆன்வல் இன்கம்மில் எட்டில் ஒன்று கொடுக்கும்போது இவர்களுக்கு அதில் ஐம்பது சதமானம் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் இருந்தால் ஒருக்காலும் இந்த நாட்டில் ஒழுங்காக டெனண்ட்டுகள் வாழ முடியாது, சந்தோஷகரமாக வாழ முடியாது. ஆகவே இந்த நாட்டிலிருந்தே நடுத்தர குத்தகைதாரர்கள் ஒழிக்கப்படவேண்டும்.

[Sri R. Subramaniam] [16th April 1960

அத்துடன் கூட, இந்த நிலச் சட்டம் வருவதால் அநேக நிலமில்லாத விவசாய மக்கள் தங்களுக்கு நிலம் கிடைக்கும் என்று எவ்வளவோ நாளாக எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது இந்த நிலச் சட்டம் வருவதால் எந்த வித சாதகமும் கிடைக்கவில்லை. ஏனென்றால் இப்போது சர்க்காருக்கே எவ்வளவு நிலம் கிடைக்கும் என்று தெரியவில்லை. நிலம் கிடைத்தால் எப்படி—எந்த விதத்தில்—வினியோகிக்கப்படும் என்று போட்டிருக்கவேண்டும். இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்களில் கொண்டு வரப்பட்டுள்ள எல்லா பில்களிலும் கிடைக்கக் கூடிய நிலத்தை எப்படி வினியோகிப்பது என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த மசோதாவிலே ஒரே ஒரு வாசகத்தைப் போட்டிருக்கிறார்கள்—அதாவது நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும் என்று. கிடைக்கக்கூடிய நிலத்தை எந்த விதத்தில் வினியோகிப்பது என்பதைப் பற்றி "ஸ்டாச்சுட்டரி ப்ரொவிஷன்" வேண்டும்—அதாவது இந்த சட்டத்திலேயே இடம் இருக்கவேண்டும். ரூல்ஸ் மூலம் செய்வது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் என்ன நினைத்திருந்தார்கள்? இந்த நிலச் சட்டத்தினால் அவர்களுக்கு நிலம் கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கு பதிலாக இப்போது இரண்டு விதத்தில் அப்புறப்படுத்தப்படுகிறார்கள்.

(Mr. Speaker in the Chair.)

ஒருவன் உச்ச வரம்புக்கு மேல் வைத்துக்கொண்டிருந்தால் மேலேயுள்ளதை சர்க்காரே எடுத்துக்கொள்கிறது. இப்போது இந்த மசோதாவில் 5 எக்கர் வரையில் ஒருவன் சொந்த உபயோகத்திறகு வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆகையால் இந்த நிலத்தையும் நிலச் சொந்தக்காரர் எடுத்துக் கொள்ளலாம். இப்போது கனம் நாராயணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். அதே போல ஏற்கெனவேயே 50 சத வீதம் குத்தகைதார்கள் நீக்கப்பட்டு விட்டார்கள். இந்தச் சட்டத்தினால் மேலும் நீக்கப்படுவார்கள் என்பது திண்ணம். இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? ஏதோ சிறு மிராசுதார்களுக்கு 5 எக்கர் வரையில் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் எத்தனை டெனென்ட்ஸ் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள்? ஆயிரக்கணக்கான டெனென்ட்ஸ் வெளியேற்றப்படுவார்கள். இந்தச் சட்டத்தினால் நன்மை வரும் என்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக அவர்களுக்கு பாதகம்தான் கிடைக்கின்றது. 5 எக்கர் நிலம் உள்ளவர்கள் 1956–57-லும், 1957–58-லும் ப்ரொபெஷன் டாக்ஸ், இன்கம் டாக்ஸ், ஸேல்ஸ் டாக்ஸ் கட்டாதவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு நிலத்தை பெற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இப்போது என்ன என்று சொல்லப்படவில்லை. இப்போது கட்டிக்கொண்டு இருந்தாலும், 1959–60-ல் ஸேல்ஸ் டாக்ஸோ, இன்கம் டாக்ஸோ, அல்லது ப்ரொபெஷன் டாக்ஸோ கட்டிக்கொண்டு இருந்தாலும் நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று தான் தோன்றுகிறது. 5 எக்கர் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள் வெளியே ஏன் சென்றார்கள்? வேறு உத்தியோகத்தை நாடி சென்றார்கள். இப்போது வயலையே நம்பி உழைத்துக் கொண்டு இருந்து வந்த விவசாயிகளை நீங்கள் அப்புறப்படுத்துகின்றீர்கள். நான் ஒன்று சொல்லுகிறேன். இங்கே பேசக்கூடிய எம். எல். ஏ.-க்கள் எல்லோரும் சிறு நிலச்சுவாந்தார்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்றுதான் பேசினார்கள். டெனென்ட்ஸ் ஸீலிங் 3 ஸ்டாண்டர்டு எக்கா என்று வைத்திருக்கிறீர்கள். ஆகையால் அந்த மாதிரி இந்த 5 எக்கரை மூன்று எக்கராகக் குறைத்து நேரடியாக விவசாயம் செய்யவேண்டுமென்று வைத்துவிடுங்கள். சட்டம் வந்து விட்டது என்று நிலத்தை வாங்கிக் கொண்டு விட்டு மதராஸிலோ அல்லது பம்பாயிலோ போயிருந்தால் என்ன பிரயோசனம். இவ்வளவு தூரத்தில் இருக்கலாம் என்று நிர்ணயிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரயோசனம் ஒன்றுமில்லை. இதனால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்று நினைக்கின்றேன்



16th April 1960] [Sri R. Subramaniam]

அடுத்தபடியாக குடியிருப்பில் எவ்வளவோ எதிர்பார்த்தோம், ஆனால் ஏமாற்றம்தான் கிடைத்திருக்கிறது. பரம்பரையாக நிலத்தில் வேலை செய்யக் கூடியவர்கள், மிராசுதார்களை நம்பி வாழ்ந்துகொண்டிருப்பவர்கள், அவர்கள் 2 வருஷம் வரையில் வெளியேற்றப்படமாட்டார்கள். டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ்க்கு உட்பட்டு 2 வருஷங்களுக்கு பிறகும் இருக்கலாம் என்று இருக்கிறது. இதிலே டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ் என்ன? அவர்களுடைய டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ் எல்லாம் "உன் பையனை மாடு மேய்க்க விடவேண்டும், குறைந்த கூலிக்கு வேலை செய்ய வேண்டும்" என்பதுதான். இதுதான் டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ். இதையெல்லாம் சர்க்காரே ஏன் வற்புறுத்துகின்றது. இதிலே எந்த விதமான நிவாரணமும் ஏற்படவில்லை. இவ்வளவு பெரிய புரட்சிகரமான ஒரு பில்லைக் கொண்டுவரும்போது குடியிருப்பு மனை சம்பந்தப்பட்ட வரையில் என்ன இருக்கிறது? சாதாரணமாகப் பார்த்தால் அந்தக் காலத்தில் பாரத யுத்தமே குடியிருப்பு மனையினால் தானே ஏற்பட்டது. பாண்டவர்களுக்கு குடியிருப்பதற்கு 5 மனை கூட தர முடியாது என்று சொன்னவுடன் தானே தருமபுத்திரர் துரியோதனனிடம் யுத்தத்திற்கு வரும்படி சொல்லியனுப்பினார். குடியிருப்பு மனையினாலேயே பாரதயுத்தமே ஏற்பட்டால், குடியிருப்பு மனை இல்லாமல் இருந்தால் எவ்வளவு கஷ்டம் என்பது சுகவாசிகளுக்குத் தெரியாது. இது கஷ்டப்படக் கூடியவர்களுக்குத் தான் தெரியும். குடியிருப்பு மனையைப் பொறுத்த வரையில் சர்க்கார் தாராள சிந்தனையுடன் வாங்கி குடியிருப்பவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் கூட இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் கனம் ராமச்சந்திரன் அவர்கள் கூடச் சொன்னார்கள் இதிலே ஏகப்பட்ட டெபெனிஷன்கள், இங்கு பார்த்தால் அங்கு பார்க்கவேண்டியிருக்கிறது. ஒரு வேளை இது லாயர்களுக்குப் புரியுமோ என்னவோ தெரியவில்லை. "ஆர்டினரி லே மேன்" நன்றாகப் படித்தவன் நன்றாக புரிந்து கொள்ளமுடியவில்லை, இதிலே பல வித டெபெனிஷன்கள், பலவித போர்டுகள், பலவித ட்ரிப்யூனல்கள், இம்மாதிரி அட்மினிஸ்ட்ரேஷன் செலவே அதிகமாக ஆகிவிடும் போல இருக்கிறது. இதை ஸிம்ப்ளிபை பண்ணவேண்டும். இதிலே ஷுகர் போர்டு என்று ஒரு போர்டு, லாண்ட் போர்டு என்று ஒரு போர்டு இருக்கின்றன. ஷுகர் சம்பந்தப்பட்ட வரையில் எக்ஸ்பெர்ட் ஒருவராகப் பார்த்து அவர்களுடைய ரெப்ரெஸெண்டேடிவ்வாக அனுப்பி இதை லாண்ட் போர்டே செய்யலாம். பலவித போர்டுகள், பலவித ட்ரிப்யூனல்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை ஸிம்ப்ளிபை செய்ய வேண்டும். சட்டத்தை ஸிம்ப்ளிபை செய்வதோடு அட்மினிஸ்ட்ரேஷன் செலவையும் குறைக்கவேண்டும். உச்சவரம்பினால் கிடைக்கக் கூடிய நிலம் பூராவுமே அட்மினிஸ்ட்ரேஷன் செலவில் போய்விடுமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இப்போது 30 எக்கருக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதே நிலச் சுவாந்தார்களெல்லாம் 30 எக்கருக்கு மேல் இல்லாமல் குறைத்துக் கொண்டு விட்டார்கள். இன்னும் சில இடங்களில் நாம் நிலம் கொடுக்கவேண்டியிருக்கும்போல் இருக்கிறது. ஏனென்றால் 4 ரூபாய்க்குக் கீழ் இருக்கக்கூடிய நிலமானால் 60 எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று போட்டிருக்கிறோம். அவர்கள் கூட தங்களுடைய நிலங்களை 30 எக்கருக்குக் கொண்டு வந்து விட்டார்கள். ஆகையால் நீங்கள் எதிர்பார்த்த அளவு நிலம் கிடைக்காது. எதிர்பார்த்ததில் 4-ல் ஒரு பங்குதான் கிடைக்கும் என்பது திண்ணம். நிலத்தை வழங்கும் காலத்தில் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்களுக்கு முதல் சலுகை கொடுக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. நிலங்கள் அத்தனையையும் சேர்த்து கோவாபரேடிவ் பார்மிங் வைத்து, அக்ரிகல்சரல் லேபரர்களை ஷேர்ஹோல்டர்ஸாக வைத்து அந்த முறையில் நடத்த வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI M. SELVARAJ : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று சபையின் முன்பு வைத்திருக்கும் நில உச்ச வரம்பு மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த இரண்டு நாட்கள்

[Sri M. Selvaraj] [16th April 1960

விவாதத்திலே இந்தச் சட்டம் கொண்டு வந்ததிலே ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஒரு சிலர் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைக் குறிப்பாக எடுத்துக் காட்டினார்கள். பொதுவாக மிராசுதார்களை பாதுகாக்கின்ற அளவில் இந்தச் சட்டம் வந்திருக்கிறதேயொழிய, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கொடுத்திருக்கின்றபடி

“ (i) no place for intermediaries;

(ii) land must belong to the tiller;

(iii) develop farmer's personality;

(vi) there should be no scope for exploitation of one class by another. ”

இந்த வகையில் பல குறியீடுகளைக் கொடுத்திருக்கிறார்கள்—அந்த வகையில் இல்லை. எந்த அளவில் மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது என்று பார்க்கும்போது சில வியாக்கியானங்களைப் பார்க்கும் நேரத்தில், உச்ச வரம்பு என்று 30 ஏக்கர் வைத்திருக்கிறார்கள். 30 ஏக்கர் என்று உச்ச வரம்பு வைத்து இதிலே பல விதி விலக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். பெரிய பெரிய பண்ணைகளுக்கு, ஷுகர் பாக்டரிகளுக்கு, கிரேஸிங் லாண்ட்ஸுக்கு, கோயில் நிலங்களுக்கு, ஆதீன நிலங்களுக்கு விதி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். இப்படி பலவிதமாகக் கொடுத்து மலையில் இருக்கக் கூடிய நிலங்களுக்கும் விதி விலக்கு கொடுத்து மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். நஷ்ட ஈட்டைப் பார்க்கும்போது, நஷ்ட ஈடு கொடுக்கும் முறையில் அதிக அளவு நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் இந்த சர்க்காருக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இதே சர்க்கார், நெய்வேலியில் நிலக்கரி எடுப்பதற்
11-30 a.m. காக நில ஆர்ஜிதச் சட்டத்தை 1953-ம் ஆண்டில் கொண்டுவந்தார்கள் ; அந்தச் சட்டத்திற்கு 1947-ம் ஆண்டிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்தார்கள். அங்குள்ள நிலங்களுக்கு 1947-ம் ஆண்டில் என்ன மார்க்கெட் வால்யூ இருந்ததோ அதன்படி தான் அவைகள் சம்பந்தமாக நஷ்டயீடு கொடுக்க வேண்டுமென்று சட்டம் செய்தார்கள். அதனால், நெய்வேலிப் பகுதியில் வாழ்ந்துவந்த ஏழை விவசாய மக்கள் பெரும்பாலோர் பாதிக்கப்பட்டார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 2 அல்லது 3 அல்லது 5 ஏக்கர்களுக்கு மேல் அதிக அளவுக்கு நிலம் இல்லாதவர்கள் தான் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 250 அல்லது 300 அல்லது 400 ரூபாய்க்கு மேற்படாதபடி நஷ்டயீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. நில உச்சவரம்பு மசோதா மிராசுதார்களைப் பாதுகாக்கும் முறையில் அமைந்திருக்கிறது. நிலச்சுவாந்தார்களுக்கு நிலத்திலிருந்து வரும் வருமானத்தில் 12 சதவிகிதம் நஷ்டயீடு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. புகையிலை சாகுபடி செய்பவர்களைப் பொறுத்தவரையில், 4,000, 5,000 ரூபாய் வருமானம் பெறக்கூடியவர்களுக்கு 250, 300, 500 ரூபாய் தான் நஷ்டயீடு கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம் ? நெய்வேலி சம்பந்தமான 1953-ம் ஆண்டுச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்ததுபோல இந்தச் சட்டத்திலும் இந்த ஷரத்திற்கு ஏன் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சில முக்கியமான விஷயங்களை ஸெலெக்ட் கமிட்டியில் பரிசீலிக்க வேண்டும் என்பதை கனம் அங்கத்தினர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சமூகத்திலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வை நீக்க வேண்டுமென்றும், சமுதாயத்தில் உண்மையான பரவலான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றும், ஏழைகள் உயர்ந்த படிக்கு வரவேண்டுமென்றும் நினைக்கும் நாம் நில உடைமை உச்ச வரம்பை ஏன் 30 ஏக்கராக நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். அந்த வரம்பை 10 அல்லது 15 ஏக்கராக நிர்ணயித்தால் போதாதா ? மற்ற மாநிலங்களில் நில உடைமை உச்ச வரம்பை நிர்ணயிக்கும்போது, விவசாய



16th April 1960] [Sri M. Selvaraj]

வருமானம் வருடத்திற்கு உயர்ந்த பட்சமாக 3,500 அல்லது 5,000 ரூபாய் இருக்கும் வகையில் அதை நிர்ணயித்திருக்கிறார்கள். மேலும், நஷ்டயீட்டைப் பொறுத்தவரையில், பம்பாயில் ஸ்லாப் ஸிஸ்டெத்தைக் கையாண்டு, நிலங்களை தரவாரியாகப் பிரித்து, முதல் தர நிலங்களுக்கு ஏக்கருக்கு 1,200 ரூபாய் நஷ்டயீடு, இரண்டாம் தர நிலங்களுக்கு ஏக்கருக்கு 800 ரூபாய் நஷ்டயீடு, மூன்றாம் தர நிலங்களுக்கு ஏக்கருக்கு 600 ரூபாய் நஷ்டயீடு, நான்காம் தர நிலங்களுக்கு ஏக்கருக்கு 400 ரூபாய் நஷ்டயீடு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, ஏன் இந்த சர்க்கார் மாத்திரம் மிராசுதார்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். குத்தகைதாரர் இருக்கக்கூடாது, இண்டெர்மீடியரீஸ் இருக்கக்கூடாது என்று நாம் சொல்லிவருகிறோம். நேற்று முன் தினம் இங்கு பேசிய கனம் சீர்காழி தொகுதி அங்கத்தினர் ஸ்ரீ. மணி, இந்த மசோதா வருவதற்குள் போன ஆண்டு கிட்டத்தட்ட 20,000 பட்டாக்கள் புதிதாக வழங்கப்பட்டிருக்கின்றன, மிராசுதார்கள் நிலங்களை அந்த அளவுக்குப் பிரித்துவைத்திருக்கிறார்கள் என்று சொன்னார். மேலும், 5 ஏக்கர் நிலமுள்ளவர்கள், அவர்கள் விற்பனை வரியோ தொழில் வரியோ கட்டாதவர்களாக இருந்தால், அவர்களே நேரிடையாக நிலத்தில் விவசாயம் செய்யலாம் என்று விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகவும் பல விவசாயிகள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. நிலங்களில் பரம்பரையாகப் பயிரிட்டு வரும் விவசாயிகள் வெளியேற்றப்பட முடியாத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் இந்த மசோதாவைத் திருத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெர்ஸனல் கல்டிவேஷனைப் பொறுத்தவரையில் நிலம் இருக்கும் இடத்திலிருந்து 5 அல்லது 10 மைல் தூரத்திலோ அல்லது நிலம் இருக்கும் தாலூகாவிலோ இருப்பவர்களுக்கே பெர்ஸனல் கல்டிவேஷனுக்கு நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கவேண்டும். மற்றப்படி வெகுதூரத்திலுள்ள நகரங்களில் உள்ளவர்களோ, 200, 300 மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களோ பெர்ஸனல் கல்டிவேஷனுக்கு நிலம் வைத்துகொள்ள அனுமதிக்கக் கூடாது. அதற்குரிய முறையில் மசோதாவை ஸெலெக்ட் கமிட்டி பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் வந்தவுடன் நமக்கு அதிகமான நிலங்கள் கிடைத்துவிடும் என்று நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இங்கு பேசிய அத்தனை அங்கத்தினர்களும், நாம் எதிர்பார்க்கும் அளவு அதிகமான நிலம் கிடைக்காது என்பதை எடுத்துக்கூறினார்கள். எனவே, ஸெலக்ட் கமிட்டியார் இதுசம்பந்தமான ஷரத்துகளையும் நன்றாகப் பரிசீலித்து ஓரளவுக்கு ஏழை விவசாயிகளுக்குச் சாதகமான முறையில் மசோதாவைத் திருத்தியமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். கோவில்களுக்கு நில உடைமை உச்ச வரம்பு 200 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இந்த மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ; மடாதிபதிகளுக்கும் அதே அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை கூட்டுறவு முறையில் விவசாயம் செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை கோவில்களுக்கும் மடாதிபதிகளுக்கும் கொடுத்துவிட்டு பாக்கியை விவசாயிகள் அனுபவிக்கும் வகையில் சட்டமியற்ற வேண்டுமென்றும் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த மசோதா பொதுவாக மிராசுதார்களைப் பாதுகாக்கும் மசோதாவாகவே அமைந்திருக்கிறது. தஞ்சாவூரில் உள்ள ஒரு பெரிய மிராசுதாருக்கும் கோயம்புத்தூரிலுள்ள ஒரு பெரிய மிராசுதாருக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையிலேயே இந்த மசோதா அமைந்திருக்கிறது. க்ரேஸிங் ஃபீல்ட்ஸுக்காக 50 ஏக்கர் என்று நிர்ணயித்திருந்தாலும் இந்த மசோதா பொதுவாக மிராசுதார்களுக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது. இருந்தாலும் தேர்தலுக்கு சமீப காலத்திலாவது இந்த மசோதாவைக் கொண்டுவந்தது குறித்து சந்தோஷப்படுகிறேன். ஏழை விவசாயிகள் நன்மையடையும் வகையில் மசோதாவை ஸெலெக்ட் கமிட்டி மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER: Mr. Speaker, Sir, I welcome this legislation more particularly now because the landowners of the whole State must also equally welcome this legislation. The thin end of the wedge between the tenants and the landowners was introduced in 1952 when Act XIV of 1952 was passed and hammered in so that their relationship may be severed farther and farther by subsequent spate of legislation. I believe this legislation will be the last of such legislations and the landowners must thank the Government for at least bringing forward now this legislation which will in a way sever the relationship between the landowner and the tenant once for all in respect of surplus lands at least so that hereafter there will be no charge against the landowner that he is exploiting the tenant. If there is any room even in this legislation to say that hereafter the landowner can exploit the tenant, it must also be removed. My view is that any tenant who is on the land today must be made the owner, with proper provision for payment of compensation to the landowner either by the tenant or by the Government or by giving enough credit to the tenant to purchase the land. The spate of legislation in respect of the relationship between landlord and the tenant was started in 1952 particularly in the Tanjore district because the landowners did not move with the world. They were not agreeable to give increased wage to the tenants which they demanded. Then the fair rent in the ratio of 60:40 was fixed by bringing forward a legislation subsequently—the Payment of Fair Rent Act. But there is no provision even in the Fair Rent Act that the tenant must share the crop with the landowner at the time of harvest. He has got to go to the Revenue Court again for fixing fair rent after the tenant has harvested away the crop and there is endless litigation.

Sir, even the Committee of the Panel on Land Reforms in their report has stated—

'Principle of ceiling should be applied to other sectors of economy also with due regard to the conditions prevailing in those sectors. Though the principle of applying it specially to agriculture, could be justified on several grounds, it was felt that if the State would announce its policy of application of ceilings to other sectors of the economy as well, imposition of ceiling on agricultural lands would meet with less opposition and there would be greater chances of its proving successful'.

This report is available in the Legislature Library. Sir, it is in this connection that I would like to refer to the statement of objects and reasons appended to this Bill. It is intended " to reduce the glaring inequalities in the ownership of agricultural land ". I believe it is only a prelude for the Government bringing forward further legislation for reducing glaring inequalities in other walks of life. There are people in other walks of life like Government Service, Industry, Trade and other like business earning huge sums of money. There are also people who are running theatres and staging dramas. There are also actors earning fabulous amounts. Why should they earn lakhs of rupees every year while a family of agriculturists should be content with less than Rs. 50 per member per mensem, which is far less than the salary of a peon serving in Government office? Salary of Government servants range from Rs. 50 to more than Rs. 5,000 per month. Why this glaring inequality in income in other sectors? Therefore it is but proper that while equalising ownership of agricultural land, there should be legislation reducing other



glaring inequalities of income from other sectors also very soon. And I believe that it will be announced by Government at least by the end of the discussion on this Bill, and that legislation about these other sectors also will be introduced ere long.

In this legislation, several aspects have got to be considered. The ceiling has been fixed at 30 standard acres. It is deduciable from several land revenue assessments. It is known that recently land revenue assessments have been considerably increased in certain places, and in certain other places they have not been increased. Temporary Resettlement of Land Revenue was introduced about forty years ago in some areas. No Resettlement was again introduced later on in those places. In zamin and inam villages, which have been taken over under Act 26 of 1948, land revenue settlement is taking place. Under Board's Standing Order Nos. 1 to 3, the principle of " half net principle " is adopted. That is, taking the average income of twenty years, which includes seasonal deduction, market deduction and other things, is adopted. If we are going to equate the standard acres on the land revenue system, be it twice or three times or four times or even six times, as some put it, it will not equalise the income of agricultural holdings in the whole State. Lands differ in quality, fertility, yield, vicissitudes of season, etc. We have got areas where there is a rainfall of 23 inches or less per year—areas like the non-Cauvery-Mettur Project area. There are some lands in places—like Arantangi and Pattukkottai taluks and in the district of Ramanathapuram. We cannot equate that 100 acres of dry land to thirty standard acres of double crop wet lands. One acre of wet land paying an assessment of Rs. 10 and above is said to be a standard acre. Let us consider the income. What is the average yield of paddy per acre of such land in this State? It is 1,800 lb. of paddy per acre. It comes to fifteen bags of paddy—1 bag 48 m.m. At the rate of 40 per cent of gross yield the landowner will get 12 kalams. What is the average price that we are going to consider to arrive at the net income. Let us take it at the maximum of Rs. 8 per kalam which will be an average for ten years. The price of 12 kalams come to Rs. 96. What is the assessment, and what are the deductions for vicissitudes of season, etc.? A landowner may ultimately get less than Rs. 75 per acre. Thirty acres will give him Rs. 2,250. What is the income of a family of five members per month? It will come to about Rs. 190. It is not even Rs. 50 per mensem per member. Is this the situation to which the Government are going to reduce the landowners? What will be the result? We will be driving the agriculturists from the villages to the towns to seek other avocations. The landowners will have to invest their compensation amount on any other business. Naturally they will come to towns for the purpose of settling there and doing some other business, which will increase their monthly earning. It is stated by some members of the Opposition that the limit of thirty acres is too much. Anyone who has got practical experience of agriculture in the several districts and in the several places in the districts will not say that thirty acres will give any useful or substantial income so that an agricultural family of five members can live even a middle class life. What is the middle class income group that we have got on the Government service? It is Rs. 400 to Rs. 500 a month. The Andhra Pradesh Government erstwhile part of Madras State, have fixed the ceiling area at that area which will yield a net income of Rs. 5,400. They have appointed

an authority for deciding the income and declaring the ceiling area in the several areas of the State. That will be proper. It may be that a man has got only dry land, and he may be irrigating it from a well. He may cultivate sugarcane, cotton or other commercial crops like groundnut and get a very large income. He will get much more than a man toiling in a single crop wet land for five or six months and getting only a few rupees per month. Therefore, it is but proper that one ceiling area of 30 standard acres should not be fixed for all places. It must be different in different areas correlated to the net income that an acre may yield and the minimum income for a family of five must be Rs. 5,400 and the ceiling area fixed accordingly. Why should the growing of potatoes, which will give several thousands of rupees per acre, be exempted? The hill areas are exempted. The entire Nilgiris district and the Kodaikanal taluk and Yercaud sub-taluk are exempted. There are places in such areas also where there are wet lands, and where crops other than tea, coffee or rubber are raised. They are all exempted under the bill. If we calculate the income from these areas, it will be seen that it is much more than what a landowner having thirty standard acres can get per year. A man with this mediocre extent of land has to provide for the education of his children and meet medical expenses and other unforeseen expenses like marriage, death, etc., and he has also got to put by something for the future. Have the Government considered the question whether he will have any means of saving? What will he do if we go to him for sale of national savings certificates or for other investments for our five-year plans? Madras State is almost wholly an agricultural State. Eighty per cent of the people are agriculturists. Let us consider whether this 30 standard acres will be enough as the ceiling. This 30 acres must be equated to several kinds of lands in several areas. As has been done in Andhra Pradesh, where a net income of Rs. 5,400 per year is fixed as the ceiling, we must appoint an authority or Board to declare and notify the ceiling equal to the area which will yield the above income in a particular area with reference to the classification of the soil, fertility of the soil, and the net income that can be expected from it.

Sir, so far as exemptions from the ceiling are concerned, it is stated that several exemptions have been given. Sir, I will take up topes. Of course definitions may be clarified at the time of the Joint Select Committee meetings. A man has got to grow trees—coconut or others—and rear them for ten years and only afterwards can expect some income. It takes twenty years for getting at the average income. Are the Government going to take away that land and give it to some other persons? Is it fair? What is the capital investment on the tope? What amount of labour would have been spent upon it? Some people said that topes should not be exempted from this legislation. They have not considered that it is not like paddy or other crop which is cultivated every season and harvested. Some others said that sugar factories should not be exempted from this legislation. We must consider the benefit to the public at large. We want to increase coconut production and avoid imports. The production of eighty million tons of oil is the target for the Second Five-Year Plan. Let us consider whether a man, who has invested so much capital and labour, can be taken away from his land. Should he not be encouraged to grow more trees, preserve the trees that he has grown, particularly these valuable trees, for benefiting the public?



Then, Sir, I come to sugar factories. In Madras State, we have got this one sugar factory "Aarooran" in Thanjavur district and two or three others on co-operative basis in the State. We have not yet thought of other agro-industrial factories. We have not made any provision therefor. How are we going to advance in industry? Do we not want sugar? In Punjab, Uttar Pradesh, and other North Indian places, there are a large number of sugar factories and these sugar factories and all the lands held by them are completely exempted. The Planning Commission has also exempted lands of these sugar factories. Still, this Government are not willing to exempt them. They want a Sugar Board for the purpose of finding out to what extent cultivation of land with sugarcane is necessary for a sugar factory in this State. As it is, so far as I know, the one factory in Thanjavur district is not able to find sugarcane for crushing for three months. The capacity of the factory is wasted. If we want to increase production we must allow extension of sugarcane cultivation. Sugarcane cultivation is necessary in our State either for the factory here or for the factory at Pettaivaithalai or any other co-operative sugar factory. We are going to establish more factories. There is the cry that we must establish more. With what? We are short of sugar. We are importing it from other States. Let us try to be as self-sufficient as possible in this regard. No Sugar Board is necessary for this purpose. All land now belonging to sugar factories must be exempted with power to extend sugarcane cultivation.

Sir, then I come to religious institutions and temples. I am not for paying any compensation or tasdik allowance to any of these temples. Why should we take over their land and pay them annually, whether the land yields or not, from out of our revenue? The lands are there. Take maths or religious institutions or temples. Now the Government are cultivating the lands either under Co-operative Farming or under the Tenants Co-operative Farming. There is also the Fair Rent Act. The proper thing will be not to impose any ceiling of 200 acres on these, but to take all these lands and give them to the tenants or landless labourers, make them co-operative farmers, and make the co-operative societies the tenants of the temples pay fair rent or whatever income that they get less the management charges to these temples or maths. Let us not impose on ourselves any burden of paying tasdik allowance for ever and leave a legacy for the future generation—an endless burden, a liability to pay tasdik allowance to these religious institutions from out of our revenue for ever. Even this may be refused by future Government and these religious institutions which are serving a good and laudable purpose will be ruined.

The next point is this. We have categorically made a mention of educational institutions, religious institutions, charitable institutions. What about the hospitals? For the Chengipatti Mahathma Gandhi Sanatorium 450 acres were donated by certain people for the benefit of the poor people, who are freely fed and who are freely treated. For charitable institutions, the ceiling has been fixed at 200 acres. Now, in this case, what about the other 250 acres? The case of these institutions should also be considered and fully exempted from any ceiling. After all, the Sanatorium is not going to cultivate the land. It is only the tenants who are going to cultivate the land. The tenants will pay the fair rent according to the provisions of the Act fixing the same. Except where a particular kind of technical

[Sri R. Srinivasa Iyer] [16th April 1960

skill is required to cultivate the land, like the sugarcane cultivation where agricultural graduates are employed and where a large number of labourers are also employed, cultivation should be done by the tenants for which they should pay the fair rent. I have no objection if the Government come forward to fix the rent once for all in cash or in kind. Let not the tenants be evicted. Suppose 200 acres of surplus land were cultivated by some tenants, the Government would have to take away the remaining acres and give the same to some other tenants, and not to the tenants who are already on the land. They may or not pay rent equal to the tasdik allowance. That is why I say that this liability to pay this tasdik allowance need not be undertaken. The exemption may be there, but ceiling could not be put in the case of all lands of religious and charitable institutions. Because, the Government have the power to cultivate the land under Co-operative Farming as was pointed out by hon. Member, Sri Muthiah Pillai, the other day.

Sir, the agriculturists have no other source of income. In this legislation, there is a provision which says that small landowners must be enabled to cultivate up to 5 acres of land provided they do not pay profession-tax, sales-tax or income-tax. Profession-tax is paid to a panchayat board even if a person earns Rs. 50 a month. Sales-tax is paid by a person even if he sells goods worth Rs. 25 a day. Because, there is the Rs. 10,000 limit. People who own a small extent of land have got to engage themselves in some trade or profession, be it in their own village or elsewhere. At present, even an upper division clerk, if he gets more than Rs. 2,000 per annum has got to pay income-tax. He may have a few acres of land in the village and must get rice for his use whereever he is. He may have relatives depending on him and who will look after the lands. He may have his agent to look after his lands, who may get something for his living. If we are to say now that all these agents and 'kariasthans' should go, we will only be increasing the unemployment problem. So, to say that small landowners should not have more than 5 acres, whether they live in the village or in some other place, may create some difficulty. Again, what about the retired persons and other persons owning 4 or 5 acres of land? Are we to prevent them from going there and cultivating the lands with servants or hired labour. Small landholders must be enabled to resume their lands for personal cultivation without any conditions as to payment of taxes, etc.

So far as tenants are concerned, we are creating a hierarchy not only permanent tenants but also hereditary tenants. Now, what has happened by Act XXVI of 1948? The permanent occupancy rights with liability to pay rent to landholders were abolished and ryotwari pattas were granted to the ryots so that they may have direct relationship with the Government. The intermediaries—Zamindars, Inamdars—were abolished. Now, they are creating a very large number of permanent tenants who will for ever be liable to pay rent to the landlords. Now, they take away the surplus land even from the tenants cultivating them and give it to others. Instead of that, I would suggest that if even within the ceiling of 30 acres, if the owner is personally cultivating only 10 or 15 acres with hired labour and let the remaining land to tenants to cultivate, Government may take even the remaining land and make the tenant the owner and make him pay compensation at market value to the



16th April 1960] [Sri R. Srinivasa Iyer]

owner, i.e., enable the tenant to purchase the land from the landowner in a period of, two to five years. The Government could very well fix the market value. It is stated that compensation at 12 times the net income is too much. It cannot be too much. Twelve times the net income will not be equal to the market value. It all depends upon the demand for land at the place. For instance, in a particular village, there may be very good lands, but there will not be any purchaser for the same. In another village say, in Coimbatore or Virudhunagar, there will be very great demand for lands. People in those places have got too much money and they will be prepared to pay more. But, the income from those lands will be less. Therefore, it is a question of supply and demand and the availability of money to invest on land. People have been investing on land as the best security in the past after the Arbuthnot crash. Now that investment has lost its value. When that is the case, let the land-owner be paid some reasonable compensation. Twelve times the net income is not too much. I would not say it is low. It may come to about 60 to 75 per cent of the value and not more. Let anybody calculate it. Let anybody go to the villages and calculate the average price at which it is being sold. I may state that such of the landlords who wanted to evade high stamp duty and who wrote the sale deeds for a lesser value, will suffer if the actual market value is taken into consideration.

Then, there is another matter. Who is going to pay the compensation? The Government are going to pay the same in 20-year Bonds. Why? Some lands may yield, and some may not. The tenant to whom the Government may give the land may not be able to pay the rent to Government. Or, he may walk away with the rent. Or, the lands may not yield fully or may not yield at all due to the vicissitudes of the season and the tenant may not be in a position to pay the rent. In the matter of disposal of surplus lands, I wish to reiterate that the tenant should be enabled to purchase the land, I mean the surplus land from the land-owner in a period of two to five years at market value. The Government may fix the price. Let there be no difference. Even this '12 times the net income' can be fixed by Government if it is equal to market value. Of course, some time could be given for the payment of the compensation. That does not matter. The interest may be only 4 per cent and not 5½ per cent or 6½ per cent as is now provided. Now, my point is this. Why should the Government take the responsibility of paying the compensation from out of the general revenues of the State? Why should the tax-payer be taxed more for paying compensation to the land-owner? We would like to know under what authority and under what procedure the Government can collect the rent. Is there any provision in the Bill for the disposal of surplus lands? As pointed out by those who spoke before me, there is no provision dealing with the disposal of surplus lands in the Bill. In the order of priority as decided upon by the Planning Commission, viz., landless labourers, evicted tenants and co-operative farming societies have to be allotted. I wish to take this opportunity to stress the need for providing for it in the Bill itself. Otherwise, there will be ever so many complications and difficulties which we may have to face in future.

As I could not touch on all the points within the short time allotted for me, I wish to refer to only one more point before concluding my speech. Sir, all the other States—I mean 5 out of the

[Sri R. Srinivasa Iyer] [16th April 1960

12 States—have consolidated the holdings before bringing forward such a piece of legislation in their respective States. I wish to categorically state in this connection that without consolidation of holdings, we cannot increase agricultural output. Sir, we have inaugurated the Package Deal in the Tanjore district on the 13th April this year. If we want more food to be produced in the same land, we must invest sufficient money, must invest sufficient man-power in it, must exercise proper supervision and control, must guide and advise on proper lines, must employ special means also. For this, consolidation of holdings is necessary. Then only we can hope to produce more. Now, I wish to point out that without consolidation of holdings, we are disintegrating the holdings. What are we going to do after this disintegration? Now, if we did not make suitable provision for consolidation of holdings and allow small holdings, small bits of lands, I mean small bits of surplus land being distributed in several places in every village and every taluk, it would be very difficult to consolidate them at a later date. That is why, I wish to stress that there must be provision for compulsory consolidation of holdings. Then only, the persons concerned will benefit and we can also hope to increase food production.

*SRI M. P. PERIASAMI : கனம் தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பு மசோதாவை ஆதரித்து அதிலே சில குறைகள் இருப்பதையும் எடுத்துக் கூற பிரியப்படுகிறேன். நிலம் அதிகமாக ஒரு சிலரிடம் குவிந்திருக்கக்கூடாது. அது பல வழிகளிலேயும் பிரிந்திருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் அரசாங்கத்திற்கு நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதன்படி இந்த நிலவுடைமைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்து கொண்டுவந்திருக்கும் மசோதா இருக்கிறதா என்று பார்த்தால், இன்னும் அதிகமாகக் குவியக்கூடிய நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது, ஒரு சிலரைப் பொறுத்த வரையில் என்று நான்
12.00 noon. குறிப்பிட விரும்புகிறேன். ஆயிரத்தில் ஒருவர், இரண்டு பேர் தான் இந்த சட்டத்தினால் பாதிக்கப்படலாம். இருந்த போதிலும், இதனால் சில நிலம் இல்லாதவர்கள் கூட இன்னும் அதிகமாக சேர்க்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கூட, உச்ச வரம்பு இருக்கிறது. நம் நிலங்களை விற்று விடலாம் என்று எண்ணியவர்கள் கூட, இப்பொழுது நிலம் வாங்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. நமது அரசாங்கம் இந்த பில்லை எவ்வளவு நிதானமாகக் கொண்டு வந்தாலும் கூட, சில சட்ட முறைகள் இதிலே சேர்க்கப்பட்டிருப்பதால், 30 ஏகரா என்று அப்பொழுது எதிர்பார்க்கப்படவில்லை. 30 ஏகரா ஒரு குடும்பத்திற்கு இருக்கலாம் என்று அபிப்பிராயப்படுவதாக இந்த பில்லில் இருக்கிறது. ஆனால் நான் நினைக்கிறேன். ஒருவருக்கு, ஆணாகப் பிறந்த போதிலும், அவருக்கு 10 ஏகரா இருந்தால் போதும், 4, 5, பிள்ளைகள் இருந்தாலும் 5×10, 50 ஏகரா வந்து விடும். இதையெல்லாம் விட்டு விட்டு, இப்பொழுது ஏகரா 30 ஆக இருந்தாலும், ஒரு குடும்பத்தில் 4 பேராக இருந்தால், 4×30, 120 ஏகரா வந்து விடும் போல் இருக்கிறது. அது மட்டுமல்ல. தென்னந்தோப்பு, மாந்தோப்பு, கரும்புத் தோட்டம் இவைகளுக்கெல்லாம் விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏகராவில் குறைந்தது 150 தென்னை மரங்கள் இருக்கலாம். 200 கூட வைத்திருக்கிறார்கள். சராசரி 150 மரங்கள் என்று வைத்துக்கொள்ளலாம். ஒரு தென்னை மரத்திற்கு ரூ. 5-க்கு மேல் வருமானம் வருகிறது. 5 ரூபாய் வருமானம் என்று வைத்துக்கொண்டால் 100 மரங்களுக்கு 500 ரூபாய் வருமானம் வந்து விடும். தென்னை மரங்கள் வைத்திருந்தால் ஒரு ஏகராவுக்கு கிட்டத்தட்ட 750 ரூபாய் வருமானம் கிடைக்கும். தென்னந்தோப்பில் செலவே கிடையாது. சரகு எடுக்கும் செலவு தான். வருஷத்திற்கு ஒரு முறை மழைக்காலத்திற்குப் பிறகு சரகு எடுப்பார்கள். ஒரு ரூபாய்க்கு 8 மரங்கள் சரகு எடுத்து விடுவார்கள். அப்படிப் பார்க்கும்போது எந்தவிதமான



16th April 1960] [Sri M. P. Periasami]

செலவும் கிடையாது. மரங்களை குத்தகைக்கு விட்டாலும் மரத்திற்கு ரூ. 5 வீதம், 100 மரங்களுக்கு ரூ. 500 கிடைக்கும். மழையே இல்லாமல் போனாலும்கூட, இரண்டு வருஷங்கள் மழை இல்லாவிட்டாலும் கூட, காய் கொஞ்சம் தான் குறையும். பூராவும் "பைல்யூர்" ஆகாது. ஆனால், விவசாயத்தில் காலாகாலத்தில் தண்ணீர் வராவிட்டால், மழை பெய்யா விட்டால், பயிர்கள் சேதம் ஆகிவிடும். அப்படியிருக்கும்பொழுது தென்னந் தோப்புகளுக்கு விதி விலக்கு கொடுக்கவேண்டியதில்லை. அப்படி விதி விலக்கு கொடுத்தால், இருக்கிற நிலத்துக்கெல்லாம் தென்னை மரங்களை வைத்து விட்டு, அதை ஒரு பாதுகாப்பாக ஏற்படுத்திக்கொள்வார்கள். அதே மாதிரி தான் மாந்தோப்பிலிருந்தும் ஏராளமான வருமானம் வரும். அதற்கும் விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி எடுத்துக் கொண்டால் எவ்வளவோ 30 எக்கர் வைத்துக்கொள்ளலாம். அதிலே ஒரு பத்து எக்கர், இதிலே ஒரு பத்து எக்கர் இப்படி வைத்துக்கொள்ளலாம். 30 எக்கர் என்று நிர்ணயித்திருக்கிற இந்த உச்ச வரம்பிற்கு அர்த்தமே இல்லை. ஏதோ அவர்களுக்கு சௌகர்யத்தை தேடிக் கொடுக்கும் நிலைமையில் தான் இந்தச் சட்டம் இருக்கிறது. இதையெல்லாம் யோசனை செய்து பார்க்க வேண்டும். தென்னை மரங்களிலிருந்து வருமானம் வருகிறது என்றால், அந்த வருமானத்தை அனுசரித்து நிலத்தை குறைக்க வேண்டும். 30 எக்கர் நிலத்தையும் வைத்துக்கொண்டு தென்னந்தோப்பில் 100 எக்கர் வைத்துக்கொண்டால், அது எப்படி நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டியதாகும்? என்னைப் பொறுத்த வரையில் அதற்கு மாறுபட்ட அபிப்பிராயம் தான் எனக்கு ஏற்படுகிறது. நீலகிரி, சேர்வராயன் போன்ற மலைப் பிரதேசங்களில் காப்பி, டீ போன்ற ரொம்ப விலை உயர்ந்த பொருள்களை பயிரிடுகிறார்கள். அதற்கெல்லாம் விதி விலக்கு இருக்கிறது. இதையெல்லாம் பார்த்தால் அம்மாதிரி தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு எவ்வளவோ சௌகர்யம் தேடித்தரக்கூடிய நிலைமையில் தான் இந்த சட்டம் அமைந்திருக்கிறது என்று தோன்றுகிறது. இதனால் சிறிய மிராசுதாரர்களுக்கு மன வேதனை உண்டாகிறது. ஆகவே, இதற்கெல்லாம் விதி விலக்கு கொடுக்காமல், செலக்ட் கமிட்டியின் பரிசீலனையின் போது அம்மாதிரி தோட்டங்களையும் உச்ச வரம்பிற்குள் கொண்டு வருவது உசிதம் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, மாடு மேய்ப்பதற்காக 50 எக்கர் வரையிலே மேய்ச்சல் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாடு வளர்ப்பவர்கள் அதை தர்மத்திற்கு கொடுப்பதில்லை. ஒரு மாடு 500, 1,000 ரூபாய் என்று தான் விற்கிறார்கள். மேய்ச்சல் நிலம் எல்லோருக்கும் பொதுவாக இருந்தால் எல்லோரும் மாடுகள் வளர்ப்பதற்கு சௌகர்யமாக இருக்கும். ஆகவே, மேய்ச்சல் நிலம் பொதுவாகத் தான் இருக்கவேண்டும். ஒருவருக்கே மாடுகள் வளர்ப்பதற்காக 50 எக்கர் மேய்ச்சல் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று விதி விலக்கு கொடுத்திருப்பது உசிதம் அல்ல என்று நினைக்கிறேன். பொதுவாக எல்லா மாடுகளையும் மேய்ப்பதற்கு என்று 50 எக்கரா, 100 எக்கராவை மேய்ச்சல் நிலமாக ஒதுக்கி வைக்கலாம். அப்பொழுது அது எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சர்க்கரை மில்லுக்கு கரும்பு பயிரிடுவதற்காக இஷ்டமான நிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு கிடைக்காது என்று நினைத்து இம்மாதிரி அரசாங்கம் செய்திருக்கிறது என்று எண்ணுகிறேன். கரூர் தாலூக்காவில் புகலூர் சர்க்கரை ஆலையை எடுத்துக்கொண்டால் யாருக்கும் 50 எக்கர், 100 எக்கர் என்று கிடையாது. ஐந்து எக்கர், 10 எக்கர், 15 எக்கர் என்று வைத்திருப்பவர்கள்தான் அங்கு அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கரும்பை அந்த மில்லுக்கு கொடுப்பதற்காக க்யூ வரிசையில் நிற்க வேண்டியிருக்கிறது. எவ்வளவோ பெரியவர்களைக்கூட சிபார்சு பிடித்துப் பார்க்கிறார்கள். ஒன்றும் நடப்பதில்லை. அவர்களிடமிருந்து கரும்பை அந்த மில்காரர்கள் எடுக்கமாட்டேன் என்கிறார்கள். அவர்கள் கரும்பை வைத்துக் கொண்டு காத்துக்கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையால்,

[Sri M. P. Periasami] [16th April 1960

கரும்பு கிடைக்காது என்று அதற்கு விதி விலக்கு வைத்து ஒரு சில ஏகராவை விட்டுவிடுவது என்றால், பணக்காரர்களே பணத்தை சேர்க்க இடம் கொடுக்கிறது. நாலு ஏக்கர், 5 ஏக்கர் நிலங்களில் கரும்பு வைத்து பயிர் செய்யப்படுகிறது. இதற்காக 60 ஏக்கர், 50 ஏக்கர் என்று விதி விலக்கு வைப்பது, இஷ்டம் போல் பணத்தை சேர்ப்பதற்கு இடம் அளிக்கும். கரும்பு போட்டால் ஒன்றும் அதிகமாக செலவாகிவிடாது. சில சமயங்களில் செலவு போக ஏக்கராவுக்கு ரூ. 1,000, 500 வருமானம் வரும். எவ்வளவு தான் செலவு பண்ணினாலும் சர்க்கரை மில் உள்ள இடங்களில் சரியான முறையில் வளர்ந்தால் சராசரி ஒரு ஏக்கராவுக்கு ரூ. 1,000 வருமானம் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு ஓராயிரம் வருமானம் என்றால், 100 ஏக்கர் இருந்தால் லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும். ஆகையால் இதற்கு விதிவிலக்கு கொடுப்பது தகுதியல்ல. அதையும் கவனித்து செலக்ட் கமிட்டியார் ரொம்பவும் ஜாக்கிரதையாக பரிசீலனை செய்யவேண்டும்.

ஐம்பது பஸ்கள், 60 பஸ்களுக்கு மேல் எத்தனையோ பேர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அதனால் வருமானம் கோடிக்கணக்கில், லட்சக்கணக்கில் வரும். அவர்களுக்கும் 30 ஏக்கரா வைத்துக்கொள்ளலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபொழுது சாதாரண ஜனங்களுக்கு இந்த சட்டத்தினால் நன்மை இருக்கிறது என்று சொல்லுவதில் அர்த்தமே இல்லை. ஒரு இடத்திலே பணம் குவியக் கூடாது. ஒரு இடத்திலே நிலம் குவியக்கூடாது, எல்லா ஜனங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு இந்த பில் கொண்டுவரப்பட்டாலும் ,இந்த விதிவிலக்குகளைப் பார்த்தால் பணம் குவிந்த இடத்திலேயே குவிவதற்கு சௌகரியம் ஏற்படுகிறது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. மற்ற சாதாரண ஜனங்களுக்கு அதைப் பார்த்து மனவேதனை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் மில் தொழில் வைத்திருப்பவர்களெல்லாம் பெரிய லட்சாதிபதிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு 100 ஏக்கர், 500 ஏக்கர் சொந்தமாக இருக்கிறது. பல ஊர்களில் பல மில்கள் வைத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதனால் பல ஜனங்களுக்கு வேலை கிடைக்கிறது. கூலி கிடைக்கிறது. ஏதோ அவர்கள் வேலை செய்கிறவர்களுக்கு ஓரளவுக்கு கூலியை கொடுத்துவிட்டு லாபம் சம்பாதிப்பதைத்தான் பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட மில் முதலாளிகள் தென்னந்தோப்பாக வாங்கிப் போட்டுவிடுவார்கள். அதன் காரணமாக வருமானம் வரட்டும் என்று நினைப்பார்கள். அதனால் பணக்காரர்களிடத்திலேயே மேலும் பணம் சேருவதற்கு வழி ஏற்படும். ஆகையால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு மில்களிலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை அனுசரித்து அவர்களுக்கு 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று தான் உச்ச வரம்பு குறைவாக வைக்கவேண்டும்.

அடுத்தபடியாக சீதன நிலம் என்றால், நிலம் இல்லாதவர்களுக்கு பெண் கொடுத்து, அந்தப் பெண் வழியாக அந்தக் குடும்பத்திற்கு 10 ஏகரா வந்தால் அது பிரயோசனப்படும். ஆனால் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறவனுக்கு 100 ஏகரா இருக்கலாம். பெண்ணைக் கொடுக்கிறவனுக்கு 100 ஏகரா இருக்கலாம். அப்பொழுது பெண்ணுக்கு 30 ஏக்கர் வரையில் சீதனம் கொடுத்தால், அவனுக்கு 30 ஏக்கர், அந்த அம்மாளுக்கு 30 ஏக்கர் இப்படி அவர்களுக்கு 50 ஏக்கர், 60 ஏக்கர் ஆகிவிடும். சீதனம் எப்படி வரவேண்டுமென்றால் நிலம் இல்லாதவனுக்கு பெண் கொடுக்கும்பொழுது சீதனம் வரவேண்டும்..

ஆனால், நிலம் இல்லாதவனுக்கு சீதனம் கொடுத்தால், புருஷன் வீட்டிலும் நிலம் கிடைத்ததாகும். இதெல்லாம் இல்லாமல், இருக்கிறவனுக்கே கொடுத்துக் கொண்டிருந்தால், 100 ஏக்கர், 150 ஏக்கர் ஆகுமே தவிர வேறொன்றும் இல்லை. ஆகவே, சீதனம் எப்படி கொடுக்க வேண்டும் என்று யோசனை செய்து பார்க்க வேண்டும். கோத்திரம் அறிந்து பெண் கொடு, பாத்திரம் அறிந்து பிச்சை இடு என்று சொல்வார்கள். அப்படிக்கின்றி, என்போன்ற தடியனுக்கு, " அம்மா பிச்சை



16th April 1960] [Sri M. P. Periasami]

கொடு " என்றால், போடுவது சரியாகாது. அந்த அளவிலே சீதனம் கொடுப்பதும் செய்தால் நலமாக இருக்கும். இதையெல்லாம் செலக்ட் கமிட்டியில் யோசித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது, 40—60 ஆக இருந்ததை நாம் 60—40, நிலக்காரனுக்கு 40-ம் உழுகிறவனுக்கு 60-ம் செய்தோம். எங்கள் நாமக்கல் தாலூக்காவில் இதில் விசேஷம் ஒன்றும் இல்லை. ஆனால், திருச்சி மாவட்டத்திலே, குழித்தலை தாலூக்கா I கரூர் தாலூக்காவிலே, அந்த பக்கத்தில் ஜனங்களுக்கு அதிக லாபம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் ஒரு கலத்திற்கு மூன்று மரக்கால்தான் போடுகிறார்கள். பதினாறு மரக்கால் கொண்டது ஒரு கலம் என்கிறார்கள். ஒரு பஞ்சாயத்துக்கு நானும் அங்கு போயிருந்தேன். அங்கு இருக்கும் நிலைமை எனக்குப் புரியவில்லை. நான் அவர்களையே நிலைமையைச் சரிசெய்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி வந்தேன். இன்னும் நெல் வாங்கியவன் ரசீது கொடுக்காமல், தொல்லைகள் ஏற்படுகின்றன. நெல் கொடுத்தவன் ரசீது கேட்டபோது, " மூன்று தலை முறையாக பண்ணையடிக்கிறோம் ; இன்று என்ன ரசீதுக்கு. அப்புறம் தரமாட்டேனா " என்று சொல்லியிருக்கிறான் சொந்தக்காரன். ஆனால், பின்னால் கேஸ் போட்டு, உழவன் 1,500 ரூபாய் நஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறான். இம்மாதிரி யெல்லாம் தொல்லைகள் வராமல் சர்க்கார்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். சட்டம் போட்டால் மட்டும் போதாது. அதை அமுலாக்கும்போது, தகுந்த அதிகாரிகளை போட்டு உண்மையிலேயே சட்டத்தின் நன்மை ஏழை உழைப்பாளிகளுக்குக் கிடைக்கிறதா என்றும் கண்காணிக்க வேண்டும். அந்த அதிகாரி, மிராசுதாருக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள், விவசாயி என்ன அடைகிறான் என்பதை யெல்லாம் பார்க்க வேண்டும். அம்மாதிரி செய்தால்தான் சட்டத்தின் முழுபலனும் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கும்.

கனம் மந்திரிகள் கூட மாறுவேடம் போட்டுக்கொண்டு போய் தவறுகளைக் கண்டுபிடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போதெல்லாம்கூட, மற்ற அதிகாரிகள் சூழ்ந்து இருப்பார்கள் ; சாதாரண மக்கள் அவர்களிடம் போய்ப் பேசக்கூட முடியாது. பக்கத்திலுள்ள அதிகாரிகள், சாதாரண மக்களாக இருந்தால், " போ, போ ; அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் " என்று வெளியே அனுப்பி விடுவார்கள். ஆகவே, மந்திரிகள் திடீரென்று, சொல்லாமல் கொள்ளாமல், போய் பார்க்க வேண்டும். பழைய காலத்தில்கூட அரசர்களெல்லாம் மாறுவேடம் போட்டுச் சென்று திருட்டு முதலியவைகளை யெல்லாம் கண்டு பிடிப்பார்களாம். நம் மந்திரிகள் பழைய காலத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியில் உள்ள மந்திரிகள் போன்றல்ல ; இவர்கள் பெரிய ராஜாக்களோ, ஜமீந்தார்களோ அல்ல. நம் மந்திரிகள் நம்மைப் போல் சாதாரண மனிதர்கள்தாம். ஆகவே அவர்கள் மக்கள் இடையிலே சென்று பார்த்து சட்டத்தில் உள்ள நன்மைகள் மக்களுக்குக் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

நடுத்தரத் தரகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒழிய வேண்டும். சாமி கூடப் போகிற பூசாரி இருக்கிறார்கள் ; நம்மை போன்ற தேங்காய் கொண்டுபோகிறவர்கள் இருக்கிறார்கள். இந்த சாமிக்கும் நமக்கும் இடையே உள்ள மனிதர்களைப்போல், தரகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் நம்மிடம் நாலு அணாவை வாங்கிக் கொள்ளுவார்கள். பூசாரியிடமும் ஏதாவது வாங்குவார்கள். இம்மாதிரியே, தரகர்கள், 100 ஏக்கர் நிலத்தைப் பெற்றுக்கொண்டு, பல உழவர்களுக்குப் பங்குபோட்டுக் கொடுத்து அதில் லாபம் அடைகிறார்கள். சொந்தக்காரனிடம் 200, 300 என்று சொல்லி, உழவாளியிடம் 400, 500-க்குக் கொடுத்து இடையில் இவர்கள், ஒரு கஷ்டமும் இல்லாமல், 100, 200, சம்பாதித்துக்கொண்டு போகிறார்கள். இவர்கள் இம்மாதிரி 10 ஏக்கர் வாங்கி மாற்றி விட்டால், 1,000, 2,000 சம்பாதித்து விடலாம். ஆகவே, இந்த இடைத் தரகர்களை ஒழிக்க சர்க்கார் ஜாக்கிரதையாக ஆவன செய்ய வேண்டும்.

[Sri M. P. Periasami] [16th April 1960

இப்பொழுது, தஞ்சாவூர் நாராயணசாமி அவர்கள் சொன்ன மாதிரி (ஒரு குரல்: மாயவரம் நாராயணசாமி) அவர்கள் ரொம்ப நாள் பழக்கமுள்ளவர், பஞ்சாயத்தெல்லாம் செய்தவர், நடுத்தர தரகர்கள் இல்லாமல் செய்து, நேரிடையாக குத்தகைக்காரர்களுக்கும், நிலச்சொந்தக்காரர்களுக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி நிலைமையைச் சீர்செய்ய வேண்டும். நேரிடையாகப் பாடுபடுகிறவனுக்கு நன்மை கிடைக்க வேண்டும். நிலச் சொந்தக்காரனுக்காவது லாபம் கிடைக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் நடுவில் உள்ளவன் சாப்பிட்டுவிட்டுப் போவது தடுக்கப்பட வேண்டும்.

நம் அரசாங்கம் இம்மாதிரி நில உச்சவரம்பு கொண்டு வரும்போது, தீர யோசித்து நல்ல முறையிலே செய்ய வேண்டும். சிலர் சொல்வார்கள், " நான் நல்ல கோலம் போடுகிறேன்; என்று கார்த்திருந்து திடீரென்று அவசரம் அவசரமாகப் போடச் சொன்னால் எப்படி செய்வது என்று. அம்மாதிரி, அவசரக் கோலம் அள்ளித் தெளிச்ச மாதிரி செய்யாமல், ஜாக்கிரதையாகப் பார்த்து, ஒரே இடத்தில் நிலம் குவியக்கூடாது என்ற அடிப்படையில், சோஷலிசப் பாணியில் நம் நாடு அமையவேண்டி, நல்ல முறையிலே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனங்கள் நினைக்கிறார்கள், காங்கிரஸ் அரசாங்கம் வந்து தங்களுக்கெல்லாம் பல சவுகர்யங்கள் கிடைக்கின்றன என்று. அப்படி எல்லோருடைய ஆதரவும் இருக்க, நல்ல சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரே இடத்தில், ஓரிடத்திலேயே நிலம் குவிய விடுவதால், அவர்கள் லட்சம் லட்சம் என்று சம்பாதித்துக் கொண்டு போகிறார்கள்; ஆனால், ஊழியர்கள், உழைப்பாளிகள், பட்டினியாகவே இருந்த இடத்திலேயே இருக்கிறார்கள். இதைத் தவிர்க்கத்தான் நாம் இந்த சந்தர்ப்பத்தில், சட்டம் கொண்டு வருகிறோம். இதற்காகவே நம்மை மக்கள் ஆதரிக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் நன்றாக யோசனை செய்து, நல்ல முறையிலே இந்தச் சட்டத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், நமக்கு முன்னால் இருக்கக்கூடிய நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டக்கூடிய இந்த மசோதா உண்மையிலேயே நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டக்கூடிய மசோதாதானா அல்லது நிலப்பிரபுக்களை சரிப்படுத்தக்கூடிய மசோதாதானா என்று நினைக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. அதிலும் திட்ட வட்டமாக கனம் அமைச்சர் அவர்கள் தைரியமாக கொண்டு வரக்கூடிய மசோதாதானா என்று கூட நினைக்க வேண்டியதாக இருக்கிறது. பயந்து பயந்து நிலப்பிரபுக்களுடைய மிரட்டலுக்கு இணங்கி கொண்டு வரக்கூடியதுதானோ என்று கூட நினைக்க வேண்டியதாக இருக்கிறது. இன்னும் பயந்து கொண்டு ஐந்து எக்கர் எடுத்துக்கொள்ளுங்கள், பத்து எக்கர் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய தன்மையில் இந்த மசோதா அமைந்து இருக்கிறது. இன்னும் 100 எக்கர், அல்லது 200 எக்கர் என்று உச்ச வரம்பு என்று சொன்னால் அது விவசாயிகளுடைய மத்தியிலும் பொது மக்களுடைய மத்தியிலும், எதிர் கட்சியினுடைய மத்தியிலும் அது ரொம்ப தர்ம சங்கடமான நிலைமையில் கொண்டுபோய் விடும் என்ற காரணத்தால் முப்பது எக்கர் என்று சொல்லிவிட்டு அதே நேரத்தில் இன்னும் கொசுராக சில எக்கர் நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய தன்மையில் இந்த மசோதா இருக்கிறது. பால் பண்ணை இவ்வளவு எக்கருள், அதுபோன்று கால்நடைகளின் தீவனத்திற்கு வேண்டி இவ்வளவு எக்கர்கள் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் மற்றும் தோட்டங்களுக்கு இவ்வளவு எக்கர் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்ற தன்மையில் இந்த மசோதா இருக்கிறது. இப்படிப்பட்ட ஓட்டை உடைசல்கள் உள்ளதாக இந்த மசோதா அமைந்திருக்கிறது. அத்துடன் இந்த முப்பது எக்கருடன் மட்டுமல்லாமல் அரை எக்கர், கால் எக்கர் என்று இருக்கக்கூடியவைகளையும் எடுத்துக்கொள்ளுங்கள் அவைகளையும் கொஞ்சம் கொசுராக எடுத்துக்கொள்ளுங்கள் என்ற தன்மையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. கனம் அமைச்சர் அவர்களே சொல்லுகிறார் "இது ஒரு வெள்ளை புரட்சி என்றும், சிகப்பு புரட்சிக்கு விரோதமானது என்றும்"



16th April 1960] [Sri V. K. Kothandaraman]

சொல்லி பெருமைப்படுகிறார். வெள்ளை புரட்சி என்பது இம்மாதிரி இருக்கும் என்று சொன்னால் கண்டிப்பாக சிகப்புப் புரட்சிதான் வர வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த நிலைமையில்தான் இருக்கிறது இந்த மசோதா. எதிர்கட்சியில் இருக்கக்கூடியவர்களுக்கு பயந்து கொண்டும் சுதந்தரா கட்சியைச் சேர்ந்தவர்கள் உச்ச வரம்பு கட்டக்கூடாது என்று சொல்வதற்கு பயந்து கொண்டும் இதைக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நிலப்பிரபுக்களுக்கு பயந்து கொண்டும் இப்படிப்பட்ட தர்ம சங்கடமான நிலைமையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அத்துடன் நிலப்பிரபுக்களை தாஜா செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால் உண்மையிலேயே நமது மதிப்பிற்குரிய மகாத்மா காந்திஜி அவர்கள் சொன்ன கொள்கைக்கு இது நேர் விரோதமாக இருக்கிறது. அவருக்கு துரோகம் செய்யக்கூடிய அளவில் இது இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பிருந்து மகாத்மா காந்திஜி சொல்லிக்கொண்டு வந்தார், அதாவது உழுகிறவனுக்கே நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் என்றும், நிலம் இல்லாமல் விவசாயம் செய்யக்கூடியவனுக்குத்தான் நிலம் இருக்க வேண்டும் என்று அவருடைய தலைமையின்கீழ் ஒரு இயக்கம் நடத்தப்பட்டு வந்தது. உச்ச வரம்பு கட்டுகிறோம் என்ற பெயரில்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் அழக்கூடிய குழந்தைக்கு, அதாவது சந்தரன் வேண்டும் என்று அழக்கூடிய குழந்தைக்கு கண்ணாடியை காட்டி இதுதான் சந்தரன் என்று சொல்வதை போல் இருக்கிறது இந்த மசோதா. அதேபோல்தான் கனம் அமைச்சர் அவர்களும் இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டு வந்து கண்ணாடி காட்டுகிறார். அந்த நிலையில்தான் இந்த மசோதா அமைந்திருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கக்கூடிய தன்மையில் இந்த மசோதா அமைந்திருக்கிறதா என்று பார்த்தால் உண்மையிலேயே இல்லை என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. நமது நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களும், அதற்கு அடுத்தபடியாக இருக்கக்கூடியவர்கள் வன்னியகுல படையாச்சிகளும்தான். இன்றைக்கு அவர்களுக்கு விட்டுக்கொடுக்கக்கூடிய தன்மையில் இந்த மசோதா இல்லை. அவர்களை பாதிக்கக்கூடிய தன்மையில்தான் இது இருக்கிறது. அவர்களுக்கு நிலம் கிடைக்கக்கூடிய அளவில் இது இருக்கிறதா என்று பார்த்தால் உண்மையிலேயே இல்லை என்பதை நான் மட்டிலும் சொல்லவில்லை ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் உள்பட ஆத்திரப்பட்டு ஆவேசத்துடன் சொல்லக்கூடிய நிலைமையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

கனம் அங்கத்தினர்கள் பேசுகிற நேரத்தில் சொன்னபடி பஞ்ச பாண்டவர்களுக்கு ஐந்து எக்கர் கொடுக்கச் சொல்லி, கௌரவர்கள் அப்படி கொடுக்க முடியாது என்று சொன்ன காரணத்தால் அந்த கௌரவர்களுடைய நிலைமை என்ன ஆனது என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு தெட்டத் தெளிவாகத் தெரியும். கௌரவர்கள் 100 பேர்கள் இருந்தும் பஞ்ச பாண்டவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னதால் பின்னால் என்ன தொல்லை ஏற்பட்டது என்பதும் துரியோதனாதிகளுக்கு என்ன நிலைமை ஏற்பட்டது என்பதையும் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே இன்றைக்கு நாங்கள் மைனாரிட்டியாக இருந்த போதிலும்கூட பொருளாதாரத்தில் இங்கே மைனாரிட்டியாக இருக்கலாம், பொருளாதாரத்தில் மெஜாரிட்டியாக இருக்கக்கூடிய மக்கள் இந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்பதை பார்த்தாக வேண்டும். பொருளாதார வசதியுடன் எந்த அளவு இருக்கிறார்கள் என்பதையும் பார்த்தாக வேண்டும். அப்படி பார்க்கவில்லையானால் நம் நிலை என்ன ஆகும்? ஆகவேதான் இன்றைக்கு

[Sri V. K. Kothandaraman] [16th April 1960

பார்த்தால் இது தேர்தலுக்காக வேண்டி கொண்டு வரப்பட்டதா அல்லது சுதந்தரா பார்ட்டியைக் கண்டு பயந்து கொண்டு கொண்டுவரப்பட்டதா? இது எப்படி இருக்கிறது என்று சொன்னால் நாக பஞ்சமி தினம் கொண்டாடுகிறார்கள். நாகப்பாம்பு கடிக்கும், அப்படிக் கடித்தால் செத்துப் போவார்கள் என்பது நன்றாகத் தெரியும். வீட்டில் அதை வரவிட மாட்டார்கள். வந்தால் கடிக்கும் என்று தெரியும். அப்படித் தெரிந்தும்கூட அது இருக்கும் இடத்தில் அதற்கு பால் ஊற்றுகிறார்கள், இன்னும் பழத்தையும் போட்டு அந்தப் பாம்பைக் கொண்டாடுகிறார்கள். அதைப்போலவே இன்றைக்கு நாகப்பாம்பு என்று சொல்லக்கூடிய நிலப்பிரபுக்களை கொண்டாடக் கூடிய நிலைமையில் சர்க்கார் இருக்கிறார்கள். அந்த நாகப்பாம்பை எப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல்,—அதைச் செய்ய தெரியும்,—அது ஒருக்கால் கடித்துவிடுமோ என்று பயந்து அது நம்மை கடித்துவிட்டால் ஆபத்து வந்துவிடும், தேர்தல் காலத்தில் தங்களை கைவிட்டுவிட்டால் என்ன செய்வது என்று பயந்து கொண்டு இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த அளவில் இதுகொண்டு வரப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் ரொம்பவும் தர்ம சங்கடமான நிலையில் இருக்கிறார் என்பது தெரிய வருகிறது. நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவதற்கு என்று கொண்டு வரக்கூடிய மசோதா கொண்டு வருவது அவ்வளவு லேசு அல்ல என்பது நமக்குத் தெரியும். எத்தனையோ கிராமங்களில் செத்தவனை புதைக்கக் கூடிய சுடுகாட்டை எடுத்துக்கொள்வதில்கூட எத்தனையோ தகராறுகள் இருக்கின்றன. அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய தன்மையில் எவ்வளவோ தகராறுகள் இருப்பது நமக்கு நன்றாகத் தெரியும். அதைப் பற்றிய பெட்டிஷன்கள் எவ்வளவோ ஹரிஜன இலாகாவிற்கு வந்திருப்பது நமக்குத் தெரியும். அப்படி நூற்றுக்கணக்கான பெட்டிஷன்கள் இருக்கின்றன. சுடுகாட்டு நிலத்தை எடுத்துக்கொள்வதற்கே தகராறுகள் இருக்கும்போது இப்படிப்பட்ட நிலங்களை எடுத்துக்கொள்வதில் எவ்வளவு தகராறுகள் ஏற்படும் என்பது நமக்குத் தெரியும். தகராறுகள் கண்டிப்பாக வரும். இருந்த போதிலும் தைரியமாக நிற்கவேுண்டும். மகாத்மா காந்திஜி சொல்லிவைத்துவிட்டு போனதை, அதை நிறைவேற்றி வைக்கக் கூடிய தன்மையில் மகாத்மா காந்திஜியின் பெயரால் ஆட்சி நடத்தக்கூடிய அமைச்சர்கள் இதைப்பற்றி நினைக்கவில்லை. மகாத்மா காந்தியின் பெயரை பெயர் அளவில் உபயோகிக்கக்கூடியதாக இருக்கிறதே தவிர உண்மையிலேயே அவருக்கு நாம் பக்தி செலுத்தக்கூடிய தன்மையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திட்ட கமிஷன் என்ன சொல்லி இருக்கிறது, உச்ச வரம்பு கட்டுவதற்கு. மூன்று குடும்பங்களுக்கு தேவையிருந்தால் போதுமானது. ஒரு குடும்பத்தில் ஐந்துபேர் இருப்பார்கள். அவர்கள் பாடுபட்டு விவசாயம் செய்து வந்தால் நிகர லாபம் 1,200 ரூபாய் வரக்கூடியதாக இருக்கும், அந்த அடிப்படையில் மூன்று குடும்பங்களுக்கு சேர்ந்து உச்ச வரம்பு கட்ட வேண்டும். அப்படியே ஐந்து பேர்களுக்கு மேற்கொண்டு போனால் ஆறு குடும்பங்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும். அந்த விதத்தில் 7,200 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். திட்ட கமிஷனில் உள்ளவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். அந்த திட்டக் கமிஷன் சொல்வதை கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறதா என்பதைப் பார்த்தால் இல்லை என்றுதான் தோன்றுகிறது. குறிப்பாக இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசியைப் பார்க்க வேண்டும். நெல் என்ன விலையில் விற்கிறது. அதை எடுத்துக்கொண்டால் ஒரு ஏக்கருக்கு இரண்டு போகம் என்று சொன்னால், இந்த இரண்டு போகத்திலும் குறைந்த பட்சம் ஐம்பது மூட்டை உற்பத்தி ஆகும். இன்றைக்கு ஒரு மூட்டை இருபது ரூபாய்க்கு விற்கப்படுவதாக சொல்லப்படுகிறது. அப்படி இருபது ரூபாய் என்று சொன்னால் குறைந்தது ஆயிரம் ரூபாயாகிறது. முப்பது ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு முப்பது ஆயிரம் ரூபாய் ஆகிறது. செலவு எல்லாம் ஆயிரம் ரூபாய் போனாலும் இருபது ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. இவைகளைத் தவிர மலைத்தோட்டம், பழத் தோட்டம் முதலியவைகள் இருக்கின்றன. அவைகளுக்கு என்ன ஆகும் என்பதையும் நிர்ணயம்



16th April 1960] [Sri V. K. Kothandaraman]

செய்து கொள்ள வேண்டும். அவற்றிலும் அவர்களுக்கு பங்கு இருக்கிறது. ஆகவே இந்த நிலையில் வருடத்திலே லட்சக் கணக்கான ரூபாய லாபம் கிடைக்கக்கூடிய முறையிலே இந்தத் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் கிடையாது. இந்தக் காரணத்தினால் தான் இந்த வாரத்தில் கூட விநோபாஜி அவர்கள் திட்டக் கமிஷன் முன்பாகச் சொல்லியிருக்கிறார்கள். "இன்றைக்கு ஒவ்வொரு ராஜ்யத்திலும் நிலவுடமைக்கு உச்ச வரம்பு கட்டி இருக்கக் கூடியது ரொம்பவும் மோசமாக இருக்கிறது. பாடுபடுகிற ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கக் கூடிய அடிப்படையில் இந்தச் சட்டம் அமையவே இல்லை. அது மாத்திரம் இல்லை. அபிவிருத்தி வரியைப் பணமாக வசூலிப்பதை நிலமாக எடுத்துக்கொண்டாலும் ரொம்ப நல்லது என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று நேருஜி அவர்களும் இந்த வாரத்தில், க்ஷேம நல சர்க்கார் மக்களுடைய நன்மையை உத்தேசித்துப் பல திட்டங்களைப் போட்டாலும்கூட அவ்வளவும் இன்றையத் தினம் நேர் விரோதமாகப் போகிறது, காங்கிரஸ் கட்சியில் பழமை விரும்பிகள் இருக்கிற காரணத்தினால் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார். 12.30 p.m.

ஆகவேதான் இதுபோன்று சொல்ல வேண்டுமானால் எவ்வளவோ சொல்லவேண்டியிருக்கிறது. அதுவும் உச்சவரம்பு என்ற பெயராலே கொண்டுவரப்படுகிற சட்டத்தில் பலவகையான விதிவிலக்குகள், பால்பண்ணை ரூபத்தில் பல ஏக்கரா, கால்நடை தீவனம் என்ற பெயராலே பல ஏக்கரா, இப்படி இன்னும் எத்தனை ரூபத்தில் வரப் போகிறதோ நான் அறியேன் பராபரமே. பின்னே தெரியும்.

மற்ற ராஜ்யங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமானால் இன்றைக்கு ஆந்திராவில் எப்படி இருக்கிறது? நிகர லாபம் என்ற அடிப்படையில் 5,400 க்கு மேல் என்று போட்டிருக்கிறார்கள். பீகாரில் நிலத்தை தரம்வாரியாக 5 விதமாகப் பிரித்து கொடுத்திருக்கிறார்கள். பம்பாயில் 3,600 ரூபாய் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. கேரளாவில் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஏக்கரா, அப்புறம் தலைக்கொரு ஏக்கர், மொத்தம் 25 ஏக்கருக்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பது மாத்திரம் அல்ல, கல்யாணம் ஆனவர்களாக இருந்தால் ஏழு, ஏழரை ஏக்கரா என்று செய்திருக்கிறார்கள். ஆனால் இங்கோ கல்யாணம் ஆனாலும் குடும்பம், ஆகாவிட்டாலும் குடும்பம். கல்யாணம் ஆன மந்திரிகளும் இருக்கிறார்கள், முதல் அமைச்சர் பிரம்மசாரியாகவும் இருக்கிறார். இந்த அடிப்படையில் கல்யாணம் ஆன குடும்பத்திற்கும் இவ்வளவு, ஒண்டிக்கட்டையாக இருந்தாலும் இவ்வளவு என்று ஏற்படுத்தியிருப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

அதேமாதிரி இன்னொன்று, 6—4—60-ந் தேதிக்குப் பிறகு அதில் எந்த விதமான மாறுதல் ஏற்பட்டிருக்குமானாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இருக்கிறது. ஆனால் 1955-ல் இருந்தே நிலச்சுவான்தார்களுக்கு நாங்கள் அறிவிப்புக் கொடுத்துவிட்டோம். இந்தக் காலத்திற்குள் பெரும்பகுதி பேர்கள் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படாத வகையில் நிலத்தைப் பிரித்துக்கொண்டுவிட்டார்கள். இல்லையென்றால் கனம் அமைச்சர் அவர்கள் நாம் அவர்களுக்கு எவ்வித அவகாசமும் கொடுக்கவில்லை யென்றாவது சொல்ல வேண்டும். அல்லது இந்தச் சட்டம் 1955-ம் ஆண்டு முதற்கொண்டே அமுலுக்கு வரும் என்று ரெட்ராஸ்பெக்ட் எ.'.பக்ட் கொடுத்துக் கொண்டுவரவேண்டும்,

அதேபோன்ற லாண்டு போர்டு என்று 5 பேரைக்கொண்டு போடப் போவதாகவும் அதில் 3 பேர் அதிகாரிகள், 2 பேர் நிலப் பிரபுக்கள் என்றுதான் போடுவார்கள். அல்லது நிலப்பிரபுக்களுக்கு சாதகமாக இருப்பவர்களை நியமிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜில்லா அடிப்படையிலோ, நகர அடிப்படையிலோ நம்மாதிரி ஆட்களைப் போடுவது என்றால் பயம். இந்தமாதிரியான பெரிய கமிட்டியில் நம்மைப் போன்றவர்களைப் போடுவார்கள் என்றே தோன்றவில்லை. ஆனாலும் விவசாயிகளுடைய பிரதிநிதிகள், எங்கெங்கே விவசாயத் தொழிற் சங்கங்கள்

இருக்கின்றனவோ அதன் பிரதிநிதிகளை வக்கீல்கள் என்ற அடிப்படையில் போடக்கூடாது—இதில் போடவேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டத்தை எந்த நோக்கத்தோடு கொண்டு வருகிறோமோ அந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று நஷ்டஈடு. மற்ற ராஜ்யங்களை விட நாம அதிகம் கொடுக்க வகை செய்திருக்கிறோம். அதற்குக் காரணம் நிலப் பிரபுக்களின் வேலைதான் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வளவு அதிகமாகக் கொடுப்பது சரியல்ல என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று சொந்த சாகுபடி. இதில் திட்டவட்டமாக ஒன்றுமே கிடையாது. அந்த கிராமத்தில் இருக்கவேண்டும். ஐந்து மைல் தூரத்தில் இருக்கவேண்டும், பத்து மைல் தூரத்தில் இருக்கவேண்டும் என்ற அளவுக்கு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அஸ்ஸாம், மைசூர் போன்ற ராஜ்யங்களில் இல்லை. இங்கே என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இதில் கூட விதிவிலக்கு. மைனர் விதிவிலக்கு. உடல் நலம் இல்லாதவர்களுக்கு விதிவிலக்கு, மூளைக்கோளாறு உள்ளவர்களுக்கு விதிவிலக்கு. மைனர் என்ற பெயராலோ குழந்தை பிறந்துகொண்டே இருக்கும். விதிவிலக்கு வந்துகொண்டே இருக்கும், உடல் நலம் என்றால் என்ன கொஞ்சம் கெட்டுப் போகலாம், ஆயுசு பூராவுமா போய்க்கொண்டே இருக்கும்? மூளைக் கோளாறு என்றால் அவர்கள் வீட்டில் தங்கியே சோறு தின்பது இல்லை, வீதியிலே போய்விடுகிறார்கள், இவர்களுக்காக இங்கே விதிவிலக்கு, இப்படி பல ரூபத்தில் விதிவிலக்குக் கொடுத்து நிலப்பிரபுக்களைக் காப்பாற்றக்கூடிய தன்மையில், ஏழை விவசாயிகளை எவ்வளவு வயிற்றில் அடிக்கவேண்டுமோ அந்தத் தன்மையில் இருக்கிறது. அதேபோன்று கோயில், மடம். இதற்காக 200 எக்கர் விதிவிலக்கு ஏன் என்று நமக்குப் புரியவில்லை. அங்கேயும் ஒண்டிக்கட்டை விவகாரம்தான். ஒரு மடத்திற்கு, ஒரு கோயிலுக்கு 200 எக்கர் என்றால் பல மடம், பல கோயில் ஒரு மடாதிபதி கீழேயே இருக்கலாம். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக 200 எக்கரா எதற்கு என்பது புரியவில்லை. புதிதாக, மடங்கள் கோயில்கள் கட்டலாம், அதற்கெல்லாம் என்ன செய்வது? இதையெல்லாம்கூட திட்டவட்டமாகக் கொண்டுவந்தாக வேண்டும். மலைத்தோட்டம், பழத்தோட்டம் என்று அதற்கு விதிவிலக்கு. இதில் நாம் ஒரு வரம்பு கட்டியாக வேண்டும். இன்னொன்று, கூழுக்கு உப்பில்லை என்று பலர் அழ, பாலுக்குச் சர்க்கரை இல்லையென்று ஒருவன் அழுதால் பாலுக்குச் சர்க்கரை கிடக்கட்டும், கூழுக்கு உப்பாவது கிடைக்க வகை செய்ய வேண்டும் என்றுதான் நான் சொல்வேன். இந்த அடிப்படையில் பார்த்தால் சோற்றுக்கு வகை இல்லை, சர்க்கரை ஆலை என்ற பெயரால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான எக்கரா நிலங்களை இன்றைய தினம் நிலப் பிரபுக்களுக்குச் சொந்தமானதாக ஆக்குவது சரியல்ல. ஆகவே சாகுபடியாளர்கள் விவசாயம் நீண்டகாலமாகச் செய்துகொண்டே இருப்பார்கள், 5 எக்கரா உள்ளவர்கள், நிலம் இல்லாத விவசாயி என்று சொல்ல முடியாது.

ஐந்து எக்கருக்கு உட்பட்டிருந்தால் கண்டிப்பாக அதை அவர்களுக்கு விட்டுவிடக்கூடிய தன்மையில் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்று பினாமியாக பலயிடங்களில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுகிறோம், ஆனால் வாங்கிக்கொண்டிருக்கிறவர்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், கொடுப்பவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் வாங்குவதும், கொடுப்பதும் இருக்கவேண்டும். பழைய குருடி கதவைத் திறடி என்று சொல்லுவதுபோல் பழையபடியே நிலப்பிரபுக்கள் நிலப்பிரபுக்களாக மாறிவிடுவதற்கு இடமில்லாமல் இருக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ஆகவே இதன் செலக்ட் கமிட்டியில் நிலப்பிரபுக்களை எல்லாம் போடுவது என்று சொன்



னால் அது உண்மையில் இந்த சட்டத்திற்கே விரோதமாக இருக்கும். சர்க்கார் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டம், கையேர்வாரம்தார் மாட்டேர்வாரம்தார் மசோதா செலக்ட் கமிட்டிக்கு போனபோது எப்படி தலைகீழாக மாறும் நிலையைக் கண்டு பயந்து சர்க்கார் வாபஸ் வாங்கும் நிலை ஏற்பட்டதோ அந்த நிலை இதற்கும் ஏற்படக்கூடாது. நான் சொல்கிறேன், அமைச்சர் மாணிக்கவேலர் அவர்கள் பின்னால், எப்படி பாரத யுத்தத்தில், "பயப்படாதே அர்ஜுனா, நான் இருக்கிறேன்" என்று கிருஷ்ண பரமாத்மா தைரியம் கொடுத்தாரோ அதேபோல் எதிர் கட்சியில் உள்ள நாங்கள் உங்களுக்கு தைரியம் கொடுக்கிறோம், உங்கள் கருத்தை வலுப்படுத்துகிறோம் இந்த மசோதாவை நிறைவேற்றுவதில் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே கொஞ்சமும் தயங்காமல் பயப்படாமல் 15 எக்கருக்குமேல் வரம்பு கட்டாமல், ஆளும் கட்சியைச் சேர்ந்த கொறடா அவர்களும் நிலப்பிரபுவாக இருப்பதால் அவர்களுக்கும் பயப்படாமல், (அவர் நிலப்பிரபுக்களையே போடவேண்டுமென்று விரும்புகிறார்,) காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு சாதகமாக அமைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN**: On a point of personal explanation, Sir, அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், கொறடாவிற்கு அதிக நிலமிருக்கிறது என்று. அவர் தெரிந்துதான் பேசுகிறாரா அல்லது தெரியாமல் பேசுகிறாரா என்று தெரியவில்லை. உச்சவரம்பு என் குடும்பத்திற்கு இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிலச் சீர்திருத்தத்தின் உச்ச கட்டத்தை இந்த மசோதாவின்மூலம் நாம் எப்படிப் பிடித்துவிட்டோம் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவில் குறிக்கப்பட்டிருக்கின்ற 30 ஸ்டாண்டர்ட் எக்கர் என்பது எனக்கு முன்னால் பேசிய பொதுவுடைமை அங்கத்தினர் சொன்னதுமாதிரி பெரிய நிலப்பிரபுக்களுக்காகச் செய்தது என்று சொன்னால், அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் என்னவென்பது புரியாமல் இருக்கவேண்டும், அல்லது நிலத்தை வைத்து அவர் பராமரிக்காமல் இருந்திருக்கவேண்டும், அல்லது அதில் ஒருவித அக்கறையும் எடுத்துக்கொள்ளாதிருக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் 30 எக்கர் என்று சொல்வதை ஒரு பெரிய சொத்தாக கருதிச் சொல்வது என்பது மிக மிக வருந்தத் தக்கதாகும். அது மட்டுமல்ல, இன்று நிலச் சீர்திருத்தம் வருவதற்கு முன்னால் கிராப் இன்ஷூரன்ஸை கொண்டுவந்தால் அவர்களுக்கு வருடாந்திர வருமானம் நிரந்தரமாக இருக்கிறது என்று சொல்லலாம். இந்த வருடம் விளையும், ஆனால் அடுத்த வருடம் மழை இல்லாது விளையாது. அப்படி மழையில்லாமல் போகும்போது ரஷ்யாவில் இருந்து மழையைக் கொண்டு வர முடியாது. அப்பொழுது, விவசாயக் குடும்பங்களுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் கொடுக்க முடியாது. விவசாயிகள் படும் பாட்டை நேரில் பார்த்தால்தான் தெரியும். அவர்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கிடைக்கத்தக்க அளவிற்கு க்ராப் இன்ஷூரன்ஸ் கொண்டுவருவதுபற்றி, எவ்வளவு ஆர்வத்தோடு இந்த சட்டத்தை செய்கிறோமோ அதே ஆர்வத்தோடு அதையும் செய்தால்தான் விவசாயக் குடும்பம், புயலில் சிக்கித் தவிக்கும் கட்டுமரம் மாதிரி, இயற்கையின் விளைவால் ஏற்படும் சிக்கல்களுக்கும், அவதிக்கும் ஆளாகும் விவசாயக் குடும்பம் பிழைக்க முடியும். 30 எக்கர்களை நம்பித்தான் விவசாயி தனது பிள்ளையை பள்ளிக்கு அல்லது கலாசாலைக்கு அனுப்ப வேண்டும். நகரப்புறங்களில் இருக்கும் வியாபாரிகளைப் போன்றவர்கள் எப்படி தங்கள் குடும்பங்களை முன்னுக்கு கொண்டுவருகிறார்களோ அதே போல் ஒரு விவசாயி தனது பிள்ளைகளையும் முன்னுக்கு கொண்டுவரவேண்டும் இந்த 30 எக்கரை மட்டும் நம்பிக்கொண்டு. ஆகவே, இந்த விவசாயிகளுக்கு ஒரு நிரந்தர வருமானம் கிடைப்பதற்கு வழிவகை செய்தாகவேண்டும். அதிலும் இந்தக் கமிட்டி அக்கறை செலுத்தவேண்டு

[Srimathi T. N. Anandanayaki] [16th April 1960

மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தில் 100 கிளாஸ்கள் போட்டும்கூட திருப்திகரமான அளவிற்கு இல்லை, குறைந்த கிளாஸ்கள் போட்டு இன்னும் நல்ல திருப்திகரமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். எக்கச்சக்கமான குழப்பங்களை இதில் கொண்டு வந்திருக்கிறார்கள். எங்களைப்போன்ற வக்கீல்களுக்கு இது வளமை தரும் சட்டந்தான். ஆனால் விவசாயிகளுக்கு இது வளமை தரும் சட்டமாகாது. விவசாயிகள் கோர்ட்களுக்கு அலைந்துகொண்டிருப்பதைவிட சுலபமாக இதைச் செய்வதில் அக்கரை காட்டவேண்டும். ஸ்ரீதனத்தை எடுத்துக் கொண்டால் ஐந்து இல்லஸ்ட்ரேஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஸீலிங் ஏரியாவில் 20 எக்கரையும் சேர்த்துவிட்டால், அதாவது ஸ்ரீதன எக்கரைச் சேர்த்துவிட்டால் கணவனது சொத்து 25-ம் இதுவும் சேர்ந்து 45 ஆகிவிடும் போது 30 போக பாக்கி 15 எக்கர் சர்ப்ளஸ்ஸாகிவிடும். அதை கொடுத்து விடவேண்டும். ஆனால் கணவனது 25 எக்கர்கள் ஃபாமிலி ஸீலிங்கில் உட்பட்டதாகயிருந்தால் பின் மனைவியின் ஐந்து எக்கர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இப்படியெல்லாம் இருக்கின்றன. ஒரு பெண் அதிர்ஷ்டக் குறைவாக இருந்து ஒரு நிலம் இல்லாத மனிதனைக் கட்டிக்கொண்டுவிட்டால், அவளது ஸ்ரீதன நிலமாக 40 எக்கர் இருந்தால் அதில் அந்த ஃபாமிலி 30 எக்கர்களை வைத்துக்கொண்டு பத்து எக்கர் சர்ப்ளஸ்ஸாக ட்ரீட் செய்யப்படும், அதோடு மனைவிக்கு தனது ஸ்ரீதன நிலமாக ஒன்றும் வைத்துக்கொள்ள முடியாது. ஆக, நிலமில்லாதவனை கல்யாணம் செய்துகொண்டதற்கு இந்த தண்டனையா? இது, சோஷயலிஸக் கொள்கைக்கே புறம்பானது. ஆகவே இந்தக் குழப்பம் இல்லாமல் ஒரு குடும்பத்தின் சொத்து 30 எக்கர் என்று வைத்துவிட்டு, தனியாக பெண்கள் 10 அல்லது 5 எக்கர் என்று எது நியாயமாகப் படுகிறதோ அதை அவர்கள் வைத்துக்கொள்வதற்கு இடம் இருக்க வேண்டும். பெண்களிடம் சொத்து இருந்தால்தான் ஆண்களிடம் இருப்பதைவிட ஜாக்கிறதையாக இருக்கும். ஆகவே பெண்கள் சொத்து வைத்துக்கொண்டிருப்பதை தடுப்பது நியாயமல்ல. பின்னர், கல்யாணமான பெண்ணுக்கும், கல்யாணமாகாத பெண்ணுக்குமிடையே வேறுபாடு இருப்பது என்பது துரோகமானதாகும். கல்யாணமான பெண்ணுக்கு தாய் தந்தையர் கொடுக்கலாம், அண்ணன் கொடுக்கலாம், தந்தை வழியில் உள்ள தாத்தா, பாட்டி கொடுக்கலாம், தாய் வழியிலுள்ள தாத்தா, பாட்டி கொடுக்கலாம், ஆனால் கல்யாணமாகாத பெண்ணுக்கு தாயார் மூலம்தான் வரவேண்டும். இல்லாவிடில் அம்மாவின் அப்பா மூலம் வரலாம். தாய் மாமன் மூலம் வரலாம். ஆனால் அண்ணன் மூலம்வரக் கூடாது. ஆக, படிப்பிலிருந்து கல்யாணச் செலவு வரை வரதட்சிணை கொடுப்பது வரையில் இந்த 30 எக்கர் சொத்திலிருந்துதான் கொடுக்க வேண்டும். வரதட்சிணை வேண்டாமென்று சொல்கிறார்களே தவிர கொடுத்தால் வாங்கிக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள் எல்லா ஆண்களும். கல்யாணமாகாத பெண்களுக்கு அப்பா மூலம் வர முடியாது. அம்மா மூலம் தான் வர வேண்டும். ஆக, 30 எக்கரில் என்னதான் செய்ய முடியும். பையன்களும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அப்பாவின் சொத்து எங்களுக்கே போதாது என்று சொல்லுவார்கள். இதைவிட ஒரு அநீதி பெண் இனத்திற்கு இந்த சபை செய்வது ஒன்றும் இருக்காது. செலக்ட் கமிட்டியில் பெண்களுக்கு இடம் தரமாட்டார்கள், அப்படித் தந்தாலும் குறைவாக இருக்கும், நாங்கள் எதையாவது சொன்னாலும் அதை ஏற்கவும் மாட்டார்கள். ஆகவே செலக்ட் கமிட்டியில் உள்ள ஆண்கள் இதை கவனித்து ஆவன செய்ய வேண்டும். கல்யாணமான பெண்களுக்கும், கல்யாணமாகாத பெண்களுக்கும் இடையே ஒரு வேறுபாடும் இருக்கக்கூடாது. மாமன் கொடுத்தாலும் சரி அல்லது அண்ணன் கொடுத்தாலும் சரி, தாய் கொடுத்தாலும் சரி அல்லது தகப்பனார் கொடுத்தாலும் சரி; கல்யாணம் ஆன பெண்ணிற்கும், கல்யாணம் ஆகாத பெண்ணிற்கும் இடையே ஒருவித வேறுபாடும் இருக்கக் கூடாதென்று அமைச்சர் அவர்களை தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, என்னைப்போன்று தனியாக தொழில் நடத்தக் கூடிய பெண்கள் ஏன் தங்களுக்கென்று தனியாக ஒரு பத்து எக்கர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது? நாங்கள் படித்துவிட்டு சம்பாதிக்கிறோம்,



16th April 1960] [Srimathi T. N. Anandanayaki]

அப்படியிருக்க நாங்கள் ஏன் தனியாக எங்களுக்கென்று ஒரு பத்து எக்கர் வைத்துக்கொள்ளக்கூடாது? நாங்கள் படித்துவிட்டு சம்பாதித்து சிக்கனமாக செலவு செய்து நிலம் வாங்கினால் அது ஃபாமிலி ஹோல்டிங்கில் போவது என்பது சரியல்ல. எங்கள் உழைப்பின் மூலம் நாங்கள் சம்பாதிக்கும் சொத்து எங்கள் கையில் இருக்க வேண்டும். அதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்றேன். அதற்கான விதிகளை இந்தச் சட்டத்தில் செய்யவேண்டும். பெண்கள் படித்துவிட்டு ஒழுங்காக வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்கு இது ஒரு ஆதரவாக இருக்குமென்ற காரணத்தினால் இதைச் சொல்கிறேன். நமது ரெவன்யூ அமைச்சர் அவர்கள் ஜனநாயக பண்பு படைத்தவர், எல்லோர் சொல்வதையும் கேட்டு எல்லோருக்கும் திருப்திகரமான அளவிற்கு சட்டத்தை அமைக்கக்கூடிய திறன் படைத்தவர், தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று சொல்ல மாட்டார்கள், ஆகவே அவர்களிடம், கட்டாயம் நியாயம் வழங்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது, அதனால்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக வரும்போது பெர்ஸனல் கல்டிவேஷன் என்று இருப்பதை பார்க்கவேண்டும். இதில் ஒருவர் தனக்காக சொந்த சாகுபடி செய்வதற்காக நிலத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் ஐந்து எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இவ்விதம் சொல்லிவிட்டு, வலது கரத்தால் கொடுத்துவிட்டு, இடது கரத்தால் வாங்கிவிடுவது போல், இவ்விதம் சொந்த சாகுபடி வைக்கவேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு ப்ரொஃபஷன் டாக்ஸ் இருக்கக்கூடாது, ஸேல்ஸ் டாக்ஸ் இருக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கிராமத்தில் சாதாரணமாக ஒரு வெற்றிலை பாக்குக்கடை வைத்துக்கொண்டிருந்தால் கூட, ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்கவேண்டிய நிலை தான் ஏற்படுகிறது. ஆகவே இவ்விதம் வரி கொடுக்கக்கூடியவர்கள் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சொன்னால், சிறு நிலச்சுவான்தார்கள் எல்லாம் மிகவும் தொல்லைகளுக்கு ஆளாவார்கள். சதாரணமாக சிறு நிலச்சொந்தக்காரர்களாக இருக்கக்கூடியவர்கள் அவர்களுக்கு இருக்கக் கூடிய நிலத்தை நம்பிக்கொண்டுதான் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தங்கள் நிலத்தை சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சொன்னால், அவர்களிடையே ஏற்படுகின்ற கொந்தளிப்பை நாம் பின்னால் அடக்கவே முடியாது. நான் எத்தனையோமுறை இங்கு சொல்லியிருக்கிறேன், உதவியற்ற பெண்கள், விதவையாய் இருக்கின்ற பெண்கள், சிறு மைனர்களாக இருக்கின்ற பெண்கள், இவர்களுக்கு எல்லாம் தங்களுக்கு இருக்கின்ற நிலங்களை ஒழுங்காக வைத்துக்கொள்ள முடிவதில்லை. எதாவது நிலங்களை விற்க வேண்டுமென்றால் கல்டிவேட் டெனன்ட்-டோடு சேர்த்துத்தான் விற்க வேண்டும், அதோடு பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன. ஆகவே இவ்விதம் ஐந்து எக்கர், மூன்று எக்கர் என்று நிர்ணயிப்பது மிகவும் கோரமாக இருக்கிறது. ஆகவே இவ்விதம் கட்டுப்பாடு ஒன்றும் நிர்ணயிக்காமல் ஐந்து எக்கர் என்றோ அல்லது மூன்று எக்கர் என்றோ, லான்ட் லார்டாக இருந்தாலும் சரி, லான்ட் லேடியாக இருந்தாலும் சரி, நிர்ணயிக்கவேண்டும். அப்போது தான் அவர்கள் ஒழுங்காக தங்கள் நிலங்களை வைத்துக்கொள்ள முடியும். அதே போன்று தான், மதராஸில் இருக்கக் கூடிய என்.ஜி.ஓ.க்களின் நிலைமையும். அவர்களுக்கு இங்கு நாம் கொடுக்கக் கூடிய சம்பளம் அவர்களுக்கு உப்பு, புளி, மிளகாய் வாங்குவதோடு சரியாய் போய்விடுகிறது. அதற்கு மேல் ஊரிலிருந்து அவர்களுக்கு சொந்தமாய் இருக்கக்கூடிய நிலங்களிலிருந்து எதாவது அரிசி வந்தால்தான் அவர்கள் இங்கு குடும்பத்தோடு பட்டினி இல்லாமல் வாழ முடியும். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் நான் உண்மையாக இந்தச் சட்டத்தின் மூலம் உதவி செய்யவேண்டும் என்றிருந்தால் இம்மாதிரிப்பட்டவர்களுக்கு இதில் சொல்லப்பட்டிருக்கின்ற கட்டுப்பாடுகள் ஒன்றும் இருக்கக்கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அவ்விதம் அமைந்திருந்தால்தான் இந்தச் சட்டத்தின் மூலம் இவர்கள் நன்மை அடைந்தவர்களாவார்கள். ஆகவே பெர்ஸனல் கல்டிவேஷன் என்பதில் ஐந்து எக்கர், எட்டு எக்கர்

என்று கட்டுதிட்டங்களை போட்டு சிக்கல்களை ஏற்படுத்தாமல் சுலபமான வழியில் ஏதாவது செய்ய முடியுமானால் அதை உடனடியாக செய்ய வேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரிலிஜியஸ் எண்டோமெண்ட்ஸ் என்கிற பகுதியில் வரும் போது கோவில்களுக்கும், மடங்களுக்கும், கல்வி ஸ்தாபனங்களுக்கும், டிரஸ்டிகளுக்கும் எக்ஸம்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக கோவில்களுக்கு 200 ஏக்கர்கள் என்று கட்டுபடுத்தியிருப்பது சரியானது தானா என்பதை நாம் ஆலோசித்துப்பார்க்கவேண்டும். இவ்விதம் 200 ஏக்கர்கள் உள்ள கோவில்கள் நம்முடைய ராஜ்யத்தில் மிகவும் குறைவு தான். குறிப்பாக சாம்ராஜ்யங்களாக இருந்த காலத்தில், மன்னர்கள் மானியங்களாக கொடுத்திருக்கும் ஒன்றிரண்டு கோவில்களுக்குத்தான் இம்மாதிரி சொத்து இருக்குமே ஒழிய, பெருவாரியான கோவில்களுக்கு 200 ஏக்கர்களுக்கு மேல் இருக்கப் போவதில்லை. இம்மாதிரி சொத்துக்களை வைத்துக் கொண்டு, முதலாளி தொழிலாளிகளை கசக்குவது போல் ஆண்டவனையும் நடத்தக்கூடாது. ஆனால் ஆண்டவன் நாம் செய்யும் எந்தசெய்கையையும் பொறுத்துக்கொள்வான். இன்றைக்கு இந்து மத ஸ்தாபனங்களில் எவ்விதம் நிர்வாகங்கள் எல்லாம் நடைபெற வேண்டும், எவ்விதமான ஒழுங்குகள் எல்லாம் கடைபிடிக்கவேண்டும், அங்கு நடைபெறுகின்ற ஊழல்களை எல்லாம் எவ்விதம் போக்கவேண்டும் என்பதற்காக நாம் சட்ட திட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். கோவில் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு வாழ்ந்தவர்கள் எத்தனையோ பேர்கள். இம்மாதிரியுள்ள நிலைமை மாற வேண்டும் என்பதற்காக நாம் அதற்கான சட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். தனியாக கோவில்களை எல்லாம் நன்றாக கண்காணிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்கள் போட்டிருக்கிறோம், அதற்குமேல் கணக்குகளை பரிசோதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறோம், அதற்குமேல் காண்ட்ரிபுஷன் கொடுப்பதை எல்லாம் கண்காணித்து வருகிறோம், இவ்விதமெல்லாம் கோவில் சொத்துக்களை பராமரிப்பதற்கு பல வழிகளை வகுத்து வைத்திருக்கிறோம். அதோடு கோவில்களின் நிலங்களை எடுத்து கூட்டுறவு பண்ணைகளை நடத்தலாம் என்று திட்டமிட்டிருக்கிறோம், தஞ்சை மாவட்டத்தில் இவ்விதம் நடத்திக்கொண்டு இருக்கிறோம். இந்த முறையில் கோவில்களை எல்லாம் எடுத்துப்பார்ப்போமானால், அதிகமாக நிலங்கள் இருக்கக்கூடிய கோவில்களிலுள்ள சொத்துக்களை பராமரிக்கிற முறையில் அங்கு இருக்கக்கூடிய நிலங்களையும் எடுத்து கூட்டுறவு பண்ணை முறையில் விவசாயம் செய்வதற்கு வழி வகை செய்வோமானால், இந்த கோவில் சொத்துக்களுக்கு உச்ச வரம்பு அவசியம் தானா என்பதை ஆலோசிக்கவேண்டியிருக்கும். எதற்கெல்லாமோ சலுகைகள் கொடுத்துக்கொண்டிருக்கும் நாம் ஆண்டவனுக்கு ஏன் இந்த சலுகையை கொடுக்கக்கூடாது என்பதை நாம் ஆலோசித்துப்பார்க்க வேண்டும். ஆண்டவனின் பேரில் சொத்து எழுதி வைத்தவன், தான் கொடுக்கின்ற சொத்தை குப்பனுக்கும் சுப்பனுக்கும் பட்டா செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதி வைக்கவில்லை, ஆண்டவனுக்கு செலவு செய்தது போக மீதியுள்ளதை ஆண்டவன் பேரால், சமுதாயத்திற்கு வேண்டிய நல்ல காரியங்களை எல்லாம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கும் சொத்துக்களை எல்லாம் பின்னாலுள்ளவர்கள் ஒழுங்கான முறையில் கண்காணித்துக்கொள்வார்கள் என்ற நோக்கத்தோடு அவ்விதம் எழுதி வைத்திருக்கிறார்கள். இவ்விதம் சொத்து எழுதி வைத்த சிலர் சொல்லியிருக்கிறார்கள், தாங்கள் கொடுக்கும் சொத்தை ஒழுங்காக பயன்படுத்தி, அதை சரியான முறையில் யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு, தங்களுக்கு இதனால் கிடைக்கும் புண்ணியம் அவர்களுக்கும் சாரும், அதல்லாமல் இதில் தவறுகின்றவர்கள், மிகவும் சண்டாளர்கள், அவர்கள் உலகத்திலுள்ள எல்லா பாவங்களையும் செய்தவர்களாவார்கள் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த முறையில் பார்த்தால் இந்தச் சொத்துக்களை எழுதி வைத்தவர்களுடைய புண்ணியத்தைத்தான் நமது அரசாங்கம் சம்பாதிக்கிறதா அல்லது அவர்களுடைய குறிக்கோள்



களுக்கு குறுக்கே நின்று பாவத்தை சம்பாதிக்கிறதா என்பதை நாம் பார்க்கவேண்டும். மடாதிபதிகள் காரியத்தை எடுத்துக்கொண்டால் அங்கேயும் சில ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் எப்படியிருந்தாலும், ஆண்டவனின் சொத்தை சூறையாடுவதை நாம் அனுமதிக்க முடியாது. ஆண்டவனின் சொத்தை நாம் கணக்கிட்டு திட்டவட்டமாக வைத்துக்கொள்வதற்கு நாம் வகை செய்திருக்கிறோம். இந்த முறையில் அமைத்திருக்கும்போது ஆண்டவனுடைய சொத்தை எல்லாம் உச்ச வரம்பு கட்டி இப்போது அதற்கு 200 ஏக்கர்கள் என்று நிர்ணயித்துவிட்டால், நாளைக்கு கோவில்களின் நிலைமை என்ன ஆகும், நாளைக்கு கனம் கோதண்டராமன் அவர்களை போன்றவர்கள் ஆட்சிக்கு வந்தால், இந்த 200 ஏக்கர் என்று கொடுத்திருப்பதையுமே வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள். வருங்காலத்தில் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்றுள்ள திடமான நம்பிக்கை நமக்கிருக்க முடியாது. ஆகவே கோவில் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டுகின்ற முறை எந்த நாட்டிலும் இல்லாத பொழுது, நாம் மட்டும் இதற்கு உச்ச வரம்பு கட்டுவது எடுத்து போற்றத் தக்கது அல்ல. டிரஸ்டி அலவன்ஸ் என்று கொடுக்கப்பட வேண்டும் என்று வேறு சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமெல்லாம் பல தொல்லைகளை நாம் ஏன் நமது ஆட்சியில் ஏற்படுத்த வேண்டும் என்றுதான் நான் கேட்கிறேன், நாளைக்கு ஆட்சியில் வருபவர்கள் வேண்டுமானால் இதை செய்து கொள்ளட்டும், ஆனால் நாம் இந்த பாவத்தை எல்லாம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே மதத்தின் பேரில் நம்பிக்கையுள்ளவர்கள் சொல்லுகின்ற முறையில் உத்தரப்பிரதேசத்தில் கோவில்களுக்கு இதிலிருந்து, முஸ்லீம் கோவிலாக இருந்தாலும் சரி, இந்து கோவிலாக இருந்தாலும் சரி, விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். நாமும் அதே முறையில் கோவில் சொத்துக்களை எல்லாம் நல்ல முறையில் கண்காணித்து அதன் நிலங்களை எல்லாம் கூட்டுறவு பண்ணை மூலம் நாட்டு மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் கொண்டு வரவேண்டும். இதற்கு யாரும் குறுக்கே நிற்கப்போவதில்லை. இல்லையென்றால் இந்த சட்டத்திற்கு வேட்டு வைப்பதின் மூலமாக தொல்லைகள் தான் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தனி மனிதர்களுக்கு எல்லாம் எவ்வளவோ விதிவிலக்கு கொடுக்கப்படும் போது ஏன் ஆண்டவனுக்கு மட்டும் விதிவிலக்குக் கொடுக்கக் கூடாது என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். இதைப்பற்றி பொறுக்குக் கமிட்டியில் நன்றாக பரிசீலித்துப்பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, நிச்சயமாக இதை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று மதப்பற்றுடையவர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இனிமேல் கோவில்களுக்கு காலணா சொத்துக்கூட இனிமேல் யாரும் எழுதி வைக்க முன் வரமாட்டார்கள். கோவில்களுக்கு சொத்து எழுதி வைத்து, பின்னால் அதை சுப்பனுக்கு கொடுப்பதை விட, தாங்களாகவே நேரிடையாக தர்மமாக கொடுத்துவிடலாம் என்ற எண்ணம் வரும்படியான முறையில், இதை பாழாக்கி விடாமல் நல்ல முறையில் இங்கே கவனம் செலுத்தி மதத்திற்கு எந்தவிதமான ஊறும் ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போதே சில கோவில்களுக்கு எத்தனையோ ஏக்கர்கள் இருந்தும் அநேக கோவில்கள் பாழடைந்து இருக்கின்றன. தஞ்சாவூரை எடுத்துக்கொண்டால் முன்னால் மன்னர்கள் பல கலை கோவில்களை கட்டியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அதை பழுது பார்ப்பதற்குக்கூட யோசித்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையில் இப்போது இருப்பதையும் குறைத்துவிட்டால் கோவில்களின் கதி என்ன ஆவது என்று தெரியவில்லை. ஆகவே நாம் இந்த பாவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டாம், அதை வேறு யாராவது ஏற்றுக் கொள்ளட்டும். ஆகவே இதைப்பற்றி நன்றாக ஆலோசித்து முடிவு கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மலைத் தோட்டங்களுக்கும், மலைப்புறங்களில் இருக்கின்ற பகுதிகளுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி ஜில்லா, கொடைக்கானல், ஏற்காட்டு பகுதியில் சில இடங்கள் இவற்றில் உள்ள பாரஸ்ட் நிலங்களுக்கு எல்லாம் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதே விதமான பாரஸ்ட் அம்பாசமுத்திரம் போன்ற பகுதியில் இருந்தால் விதிவிலக்கு கிடையாது. இவ்விதம் ஹில் எரியாவில் இருந்தால் அதற்கு வேறு விதி, அதல்லாத இடங்களில் இருந்தால் அதற்கு வேறு ஒரு விதி என்றிருக்கிற நிலைமை மாறி எல்லோருக்கும் எல்லா இடத்திற்கும் ஒரே நியாயம் கிடைக்கின்ற முறையில் இருப்பது தான் மிகவும் வரவேற்கத்தக்கது.

p.m. அதே போன்று மாட்டுப்பண்ணைக்கு இனிமேல் வரக்கூடியதற்கு 50 எக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று இருக்கிறது. இப்போது மாட்டுப் பண்ணை வைத்திருக்கக் கூடியவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இது வரையில் பிற மாவட்டங்களில் மண்ணை நம்பி வாழ்ந்தார்களே தவிர, அவர்கள் மாட்டில் அக்கரை செலுத்தியிருக்கமாட்டார்கள். சில இடங்களில் மண்ணில் புண்ணியமில்லை என்று மாட்டில் அக்கரை செலுத்தியிருக்கலாம். அவர்களுக்கு மாத்திரம் சலுகை கிடைக்கின்றது. தஞ்சை ஜில்லாவிலே ஒரத்தநாட்டில் வளர்க்கக்கூடிய உம்பளாச்சேரி, காங்கேயத்தை விடச் சிறந்தது. இனிமேல் இந்த உம்பளாச்சேரி மாடுகளில் அக்கரை செலுத்தலாம் என்று எண்ணலாம். ஆனால் அவர்கள் 50 எக்கர் வரையில்தான் வைத்துக்கொள்ளலாம். கோவை ஜில்லாவிலே மட்டும் இன்றைக்கு எத்தனை எக்கர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலை வருமானால், கோவை மாவட்டம் பண்ணிய அதிர்ஷ்டத்தை மற்ற மாவட்டங்கள் செய்யவில்லை என்ற நிலைமைதான் வரும். இப்படிச் சொல்லுவதானது பாரபட்சம் காட்டக் கூடியதாகத்தான் ஆகும். அவர்களுக்கு ஒன்றும் ஸீலிங் இல்லாமல் மற்றவர்களுக்கு மாத்திரம் ஸீலிங் வைப்பதானது நிச்சயமாக பாரபட்சமாகும். இன்றைய தினம் உம்பளாச்சேரி இல்லாவிட்டால் வேறு ஏதாவது புது பிரீட்களை தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலும் வளர்க்க ஆரம்பிக்கலாம். இதிலே நல்ல அக்கரை செலுத்தி புதிதாகக் கண்டுபிடிக்க முடியும். சலுகை தருவதை எல்லோருக்கும் தர வேண்டுமே தவிர ஒருவருக்கு ஒரு விதி, மற்றொருவருக்கு மற்றொரு விதி என்று இருக்கக்கூடாது. இந்த நிலைமையைப் பார்த்து பாரபட்சமின்றி சட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

அதே முறையில் சர்க்கரை சம்பந்தப்பட்டவரையிலும்கூட பாரபட்சம் இல்லாமல் கரும்பு பயிரிடுகின்றவர்களுக்கும்—கரும்பு பயிர் செய்யக்கூடிய சிறு சிறு நிலச்சொந்தக்காரர்களுக்கும் விதி விலக்கு தருவது நியாயம்.

இப்படிப்பட்ட சிறு சிறு குறைகளையெல்லாம் நீக்கிவிட்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் கட்டாயமாக நம்முடைய சட்டம் மிகச் சிறந்த சட்டமாக இருக்கும்—பிற மாகாணங்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கும். இதிலே பொறுக்குக் கமிட்டியின் யோசனைகளைக் கேட்டு, பாரபட்சமின்றி ஒரு நல்ல சட்டத்தை அமைச்சர் அவர்கள் தருவார் என்று எதிர்பார்த்து, இந்த சட்டத்தைக்கொண்டு வந்ததற்காக அவருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **Sri S. RAMAKRISHNA THEVAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது வந்திருக்கும் சட்டத்தை ஆமோதித்து சில வார்த்தைகள் சொல்ல முன்வருகின்றேன். பொதுவாக இந்தச் சட்டம் வருகிறது, வருகிறது என்று பல ஆண்டுகளாக நாம் ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம்—அது வந்துவிட்டது. ஆனால் இப்பொழுது வந்திருக்கும் உருவத்தைப் பார்த்தால் அது ரொம்பவும் பாகுபாடு உடையதாக இருக்கிறது. ஆனால் சட்டத்தை வகுக்கும்போதே வேண்டிய விதிகளை எல்லாம் போட்டு வகுத்துவிட்டார்கள் என்று நாம் சொல்வதற்கில்லை. இன்னும் எத்தனையோ இருக்கின்றன. இதை பொறுக்குக் கமிட்டியில் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்பதுதான் எனது வேண்டுகோள். இது இப்பொழுது இருக்கின்ற உருவிலேயே உருவானால் என் போன்ற கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகளை ரொம்பவும் பாதிக்கக்கூடியதாக இருக்கும். சாதாரணமாகச் சொல்லப்போனால், ஒரு குடும்பத்தில் உள்ள சிலரை ரொம்பவும் வஞ்சிக்கிறார்கள், சிலரை நல்ல முறையில் நடத்துகிறார்கள்.



இதிலே 30 ஸ்டான்டர்டு எக்கர்கள்—அதாவது அதிகத் தீர்வை நிலங்களை—வைத்து கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். இப்போது உயர் ரகத் தீர்வை, தரவாரித் தீர்வை எல்லாம் எப்படி ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று பார்ப்போமானால், தஞ்சை ஜில்லாவிலே, தஞ்சை தாலுகாவிலே ஒரு ஸ்டாண்டர்டு எக்கர் 12 ரூபாய், 10 ரூபாய், 8 ரூபாய் என்றால், அதே நிலைமையில் என்னுடைய கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவிலே, திருவாடானை தாலுகாவில் 8 ரூபாய் என்று எந்த நிகரத்தைக் கொண்டு ஏற்படுத்தி இருக்கிறார்கள்—எந்த வருமானத்தைக் கொண்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள்—என்று எண்ணிப் பார்க்க, அது கொஞ்சம் கூட ஒப்பிட முடியாமல் இருக்கிறது. இப்போது எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் கூடச் சொன்னார்கள், உயர் ரகத் தீர்வை இருக்கிற பகுதியில் எக்கருக்கு 50 மூட்டைகள் கிடைக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் பகுதியில் நன்றாக மழை பெய்து விளைந்த வருஷத்தில்கூட எக்கருக்கு 10 மூட்டைகள் கிடைப்பது ரொம்பவும் கடினம். இதிலே இன்னொரு நண்பர் சொன்னார், 5 மூட்டை கிடைக்கிறது என்று. கிடைக்கக்கூடியது 5 மூட்டையானால், 2½ மூட்டைதான் செலவு போகக் கிடைக்கலாம். எங்கள் பக்கத்தில் 90 பட்டணம் படி ஒரு கலம் என்று சொல்வார்கள். எக்கருக்கு 2½ கலம் கிடைப்பது துர்லபமாக இருக்கும். 12 வருஷ ஆவரேஜில் ஏதோ கொடுப்பதாக இருக்கிறது. இப்போதுள்ள இந்தச் சட்டத்தில் 12 வருஷங்களை எடுத்துக்கொண்டால் 5 வருஷமோ அல்லது 4 வருஷமோதான் விளைந்த வருஷமாக இருக்கும். அந்த ரேட்டில் வைத்துப் பார்த்தால் தஞ்சை ஜில்லாவில் உள்ள ஸ்டாண்டர்டு எக்கர் 8 ரூபாய்க்கு மேற்பட்டது என்றால், அதே ரேட்டில் பார்த்தால் 2 ரூபாய் ரேட்டுக்குக்கூட எங்கள் நிலத்திற்கு ஒப்பிட முடியாது. இந்த நிலைமையில் நிலம் அதிகமாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை இல்லை. இன்னும் கூட்டுவதையோ அல்லது குறைப்பதையோ பற்றி நான் இப்போது சொல்ல வரவில்லை. இப்போது தஞ்சை ஜில்லாவிலே 30 ஸ்டாண்டார்டு எக்கர் என்று எடுத்துக்கொண்டால் திருவாடானை தாலுகாவில் ஸீலிங் கொண்டுவருவதற்கு நியாயமே இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். திருவாடானை தாலுகாவில் உள்ள நிலத்தில், தஞ்சை தாலுகாவில் உள்ள ஒரு எக்கர் நிலத்திற்கு ஈடாக 5 எக்கர்கள்கூடச் சொல்ல முடியாது. இத்தகைய நிலைமையில் இருக்கிறது. திருவாடானை தாலுகாவில் எந்தக் காரணத்தைக் கொண்டோ 8 ரூபாய் 7 ரூபாய், 6 ரூபாய் என்று வரி நிச்சயித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து, இங்கே என்ன ஊதியம் கிடைக்கிறது என்று பரிசீலனைக் கமிட்டி நன்றாக ஆராய்ந்து, தொகுதியிலுள்ளவர்களையும், நல்ல முறையில் விபரம் தெரிந்து சட்டத்தைத் திருத்தியாக வேண்டும்.

இதிலே இன்னும் எத்தனையோ பாகுபாடுகள் இருக்கின்றன. கரும்பு ஆலைகளுக்கும், மர தோப்புகளுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது இதிலே இன்னொன்று சொன்னார்கள், ஏதோ நடுத்தரப் பேர்வழி ஆதாயத்தை அடைகிறான் என்று சொன்னார்கள். எங்கள் பகுதியில் நடுத்தரப் பேர்வழி கிடையவே கிடையாது. நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழுகின்றவர்களுக்கும் நேரடியாகத் தொடர்பே தவிர குறுக்கே இருக்கிறவர்கள் கொண்டுபோகிறார்கள் என்று சொல்ல முடியாது. சிவகங்கை ஜமீன், ராமநாதபுரம் ஜமீனை எடுத்துக்கொண்டால், நேரடியாக விவசாயம் செய்யக்கூடியவர்கள் 100-க்கு 95 பேர்கள் இருப்பார்கள். பாக்கி 5 பேர்கள் நிலத்தை நேரடியாகக் கேட்டு உழுபவர்களே தவிர, இடையே ஒருவர் குத்தகைக்கு எடுத்து, வேறொருவரிடம் விட்டு ஆதாயம் அடைவது கிடையாது. நிலமில்லாதவர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்து கொடுப்பது வரவேற்கத் தக்கதே. தஞ்சை ஜில்லாவிலும் 30 எக்கர், திருவாடானையிலும் 30 எக்கர் என்று வைப்பதானது ஒருவர் கண்ணில் வெண்ணையைத் தடவிவிட்டு, இன்னொருவர் கண்ணில் சுண்ணாம்பைத் தடவுவது போன்றதாகத்தான் இருக்கும். இரண்டும் வெள்ளைதானே என்று சொல்லுவது ரொம்பவும் பாதிக்கக்கூடியதாக இருக்கும். இதிலே 12 வருஷ வருமான கணக்கை எடுத்து நஷ்டஈடு கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் கூடக் கணக்குப் போட்டுப் பார்த்தேன், நான் போட்ட கணக்குப்படி

12 ஏக்கருக்கும் 60 மூட்டை என்று வைத்துக்கொண்டாலும் அதன் கிரயம் 900 ரூபாய் ஆகும். எப்படி கணக்குப் போடப்போகிறார்கள் என்று புரியவில்லை. பன்னிரண்டு வருஷம் என்று வைத்துக்கொண்டால் அதில் 5 வருஷங்கள்தான் விளைந்த வருஷங்களாக இருக்கும். 12 வருஷங்களையும் எடுத்துக்கொண்டாலும் ஓரளவாவது வருமா என்று பார்த்தால் 900 ரூபாய் வருகிறது. விளைந்த வருஷங்களை மட்டும் எடுத்துக்கொண்டால் பாதி 450 ரூபாய் வரும். உதாரணமாக நிலத்தை வைத்திருப்பவன் 100 ஏக்கர் வைத்திருந்தானானால், அதை ஈடு வைத்து, 50,000 ரூபாய் கடன் பட்டிருக்கிறான். கடன் பட்டிருப்பவனைப்பற்றி இந்தச் சட்டத்தில் என்ன இருக்கிறது என்று எனக்குப் புலப்படவில்லை. இந்த மசோதா பூராவும் இங்கிலீஷில் இருக்கிறது. இருந்தாலும் எனது அறிவைக் கொண்டு பார்த்ததில் அதற்கு ஏதாவது இருக்கிறதா என்றால் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஈடு உள்ள அந்தச் சொத்துக்களைப் பொறுத்தவரையில், நூறு ஏக்கர் ஈடு வைத்திருக்கிறவர் " நீ 50,000 ரூபாய்க்கு வழி சொல்ல வேண்டாமா, 20 வருஷங்களுக்குப் பிறகு பாண்டை மாற்றி வாங்கிக்கொள்ள வேண்டும் " என்றால் கடன்காரன் கதி என்ன என்று தெரியவில்லை.

இரண்டாவது, இதே கிராமங்கள், அயன் கிராமங்கள், 'நான்–அயன்' கிராமங்கள் என்று இரு வகைப்பட்டனவாக இருக்கின்றன. அந்த தர்மாசன கிராமங்களில் உள்ளவர்கள் படும் கஷ்டத்தை கனம் அங்கத்தினர் ஸ்ரீ வீரபாகு நன்றாக எடுத்துச் சொன்னார்கள். நிலமில்லாத குடியானவர்கள் பாடாவது கொஞ்சம் சௌகரியமாக இருக்கும்போலிருக்கிறது. அங்குள்ள அந்த 'நான்–அயன்' கிராமங்களிலுள்ளவர்கள் அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். சர்க்கார் எடுத்துக்கொள்ளாத கிராமங்களிலுள்ளவர்கள் முன்பு அனுபவித்த கஷ்ட நஷ்டங்களைக்காட்டிலும் அதிகமாக அனுபவித்து வருகிறார்கள். நான்–அயன் கிராமத்திற்குப் பக்கத்திலுள்ள அயன் கிராமத்தில் இருக்கும் அண்ணன் நல்ல நிலைமையில் இருக்கிறார்; தம்பி, நான்–அயன் கிராமத்துக்காரர், முன்போலவே இப்போதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார். எனவே அங்குள்ள சர்க்கார் எடுத்துக்கொள்ளாத நிலங்களைப் பொறுத்தவரையில் அவைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துப் பரிசீலிக்க வேண்டும். இரண்டு வகையான நிலங்களையும் ஒரே மாதிரி நடத்தக்கூடாது. எங்கள் ஜமீன் ஏரியாக்களுக்கு வரும் உத்தியோகஸ்தர்கள், அவர்கள் எங்கிருந்து வருகிறார்களோ அங்குள்ள பயிர் நிலைமையைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் எங்கிருந்து வருகிறார்களோ அங்குள்ள சீதோஷ்ண நிலைமையைப் பற்றி இந்தப் பகுதியில் பருத்தி பயிரிட்டால், சோளம் அது ஒரு ஆள் உயரம் வளரும் என்று சொல்லுவார்கள். என் போன்றவர்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயத் தொழிலில் ஈடுபடுபவர்கள்தான். நாங்களும் எங்கள் பகுதியில் என்ன என்ன பயிரிட்டால் லாபமாக இருக்குமோ அவைகளைப் பயிரிட்டுத்தான் பார்க்கிறோம். ஆனால் விளைச்சல் ஆங்காங்குள்ள பூமி வளத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. தென்னந் தோட்டங்களுக்கு இந்த மசோதாவில் விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களில் வளரும் பல பயிர்களுக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சமுத்திரக் கரையில் இருக்கும் எங்கள் பகுதிக்குத் தகுந்த விதி விலக்கு எதுவும் கொடுக்கப்படவில்லை. சமுத்திரக் கரையில் உள்ள எங்கள் பகுதியில் சமுத்திரத் தண்ணீர் வந்துகூட நிலங்களைப் பாதிக்கிறது. இத்தகைய நிலையிலுள்ள நிலங்கள் எங்கள் பகுதியில் 40 மைல் நீளத்திற்கு இருக்கின்றன என்று நான் முன்பே இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். நமது அமைச்சர் அவர்கள்கூட அந்தப் பகுதிக்கு வந்து அவைகளைப் பார்த்திருக்கிறார்கள். அங்குள்ள நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். ஜமீன்தார்கள் காலத்திலிருந்து இன்றுவரை கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம். மற்றப் பகுதியிலுள்ளவர்கள் 5, 6 ரூபாய் வரி கொடுத்தபோது நாங்கள் 14, 15 ரூபாய் வரி கொடுத்து வந்திருக்கிறோம். இப்போதும் அங்கே சில பகுதிகளில்தான் செட்டில்மெண்ட் வேலை முடிந்திருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு அங்குள்ள நிலங்களை சர்க்கார் நல்லபடி விநியோகிக்க வேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.



அங்குள்ள நிலைமையைச் சரியாய்ப் புரிந்து அங்குள்ள நிலங்களைப் பொறுத்தவரையில் மசோதாவிலுள்ள குண தோஷங்களைக் கண்டுபிடித்து அந்நிலங்களுக்கு சாதகமான முறையில் மசோதாவை மாற்றி அமைக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் சட்டத்தை அவசரமாகக் கொண்டுவந்தால் ஜமீன் பகுதியிலுள்ள என் போன்றவர்கள் முன்பு போலவே இன்னும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க நேரிடுமே தவிர, எங்களுக்கு நன்மை ஏற்படாது.

மேலும் எங்கள் பகுதியில் தண்ணீர் வசதி இல்லை. அந்தப் பகுதியை இத்தகைய சட்டத்திற்கு உட்படுத்தினால் அங்குள்ள மக்கள் எப்படி நாணயமாக இருக்க முடியும்? வரி போன்ற விஷயத்தில் அவர்கள் எவ்வாறு நாணயமாக நடந்துகொள்ள முடியும்? தண்ணீர் வசதி இல்லாத எங்கள் பகுதிகளில் பரிசீலனை இல்லாத பல வருஷங்களாக வாழையடி வழையாக கஷ்டப்படும் எங்கள் பகுதிகளில், இத்தகைய திட்டத்தை நிறைவேற்றினால் நாங்கள் நசுக்கப்படுவோம். இது சம்பந்தப்பட்ட ஷரத்தை நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். மேலும், இனாம் கிராமங்களையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு, அயன் மற்ற கிராமங்களுக்கு கொடுக்கும் சலுகைகளை அந்தக் கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டும். எங்கள் பகுதியில் நில உடைமை உச்ச வரம்பு ஏன் அதிகமாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன் என்றால், நான் 100, 500 ஏக்கர் வைத்துக்கொள்ள விரும்புகிறேன் என்று அர்த்தமல்ல. நான் அங்கே 100 ஏக்கர் தஞ்சாவூர் தாலுக்காவில் நிலம் வைத்திருக்கிறேன் என்றால், எனக்கு தஞ்சாவூரில் 30 ஏக்கர் நிலம் கொடுத்துவிட்டால் போதும், நான் மனத் திருப்தியுடன் அந்த 100 ஏக்கரைக் கொடுத்துவிட்டு தஞ்சாவூரில் குடியேறத் தயாராயிருக்கிறேன். ஏனென்றால், எங்கள் பகுதியில் 100 ஏக்கரில் 5 வருஷத்துக்கொருதரம் மொத்தம் 100 கலம் நெல் விளையும். ஐந்து வருஷங்களில் சில வருஷங்களில் தண்ணீரே இல்லாமல் சாவியாகப் போகும். நல்ல விதைகளும், நல்ல உரங்களும் போட்டிருந்தாலும் சாவியாகப் போகும். அது இயற்கையில் நடப்பது.

மக்களுக்கு நிலங்களை விநியோகிப்பதற்காக சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பது குறித்து சந்தோஷப்படுகிறேன். இந்த மசோதாவை ரொம்ப நுண்ணிய முறையில் பரிசீலிக்க வேண்டும். ஜமீன் பிரதேசங்களிலுள்ளவர்களான என் போன்றவர்கள் வாழையடி வாழையாக, பாரம்பரை பரம்பரையாக கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம். மசோதாவில் உங்களுக்காக இதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டால் நாங்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாவோம். மேலும் எங்கள் பகுதியில் சர்க்கார் எடுத்துக்கொள்ளாத கிராமங்கள், இனாம் நிலங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. அவைகளுக்கும் நன்மை செய்வதற்கு வகை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri D. S. AUTHIMOOLAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த மசோதாவில் ரொம்பவும் குறைபாடுகள் இருக்கின்றன. இது ஒரு இல்–ட்ராப்டெட் பில் என்று சொல்லலாம். 'லாண்டு டு தி டில்லெர்'—உழைப்பாளிக்கு நிலம் கொடுக்க வேண்டும்—என்று ரொம்ப நாட்களாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. கராச்சி காங்கிரசில் அவ்வாறு பேசப்பட்டது. இந்தியா பூராவிலும் கம்யூனிஸ்டு கட்சியினரும் அவ்வாறு பேசி வந்திருக்கின்றனர். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் அவ்வாறே பேசுகின்றனர். அதன் காரணமாக இத்தகைய மசோதாவைக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் இந்த சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த மசோதா அவசியம் என்று ப்ளானிங் கமிஷன் உணர்கிறது என்று ஒரு குறிப்பு தரப்பட்டிருக்கிறது. உழுபவர்களுக்கு நிலம் கொடுத்தால் இந்த நாட்டில் உற்பத்தி அதிகரிக்கும் என்று ப்ளானிங் கமிஷன் வாஸ்தவமாகவே நம்பியிருந்தால், இந்த மசோதாவைக் கொண்டுவருவதை இந்த எட்டாண்டு காலமாகத் தாமதித்திருக்க வேண்டியது அவசியமில்லை. இந்திய சர்க்கார் வருஷம் ஒன்றுக்கு 110 கோடி ரூபாய்வரையிலும் வெளி

நாடுகளுக்குப் பணம் கொடுத்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்திருக்கிறது என்று நான் ஒரு புஸ்தகத்தில் படித்தேன். இதை எல்லாம் பார்க்கும்போது, இந்த மசோதா இப்போது கொள்கை காரணமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா, அல்லது வேறு ஏதாவது மனப்பான்மையுடன் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்று புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது. ஆனால் ஆட்சியாளர்களும் இப்போது இக்கட்டான நிலைமையில்தான் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இப்பொது ஒரு சில எதிர்க்கட்சிக் குதிரைகள் விவசாயிகளைப் பார்த்து ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளை 'ஓவர்டேக்' பண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஆளும் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இந்த மசோதாவை ஆட்சியாளர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதாவில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஒரு அரசாங்கத்திற்கு நற்சான்றுகள், அதனால் இயற்றப்பட்டுள்ள நல்ல சட்டங்கள்தான். அவைதான் அரசாங்கத்தின் நற்சான்றுப் பொக்கிஷம். அப்படிப்பட்ட நல்ல சட்டங்கள் சமீபத்தில் வந்திருக்கின்றனவா ? ராஜாஜி மந்திரி சபைக்குப் பிறகு இந்த ராஜ்யத்தில் ஒரு முக்கியமான சட்டம் மாத்திரம்தான் வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதுதான் ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டம். 1937-ம் வருஷம் ராஜாஜி, சோஷலிஸத்தைப் பற்றி யாரும் கனவே காணாத அந்த காலத்தில் ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டுவந்தார். நான் ராஜாஜி கட்சியைச் சேர்ந்தவன் அல்ல என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் அப்போது கொண்டுவந்த அந்த நல்ல சட்டம், 'அக்ரிகல்சரிஸ்ட்ஸ் டெட் ரிலீப் ஆக்ட்' ஆகும். அது எவ்வளவு அர்புதமான சட்டம் ; அவர் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, கொடுமையான வட்டிக்குக் கடன்பட்டிருந்த எத்தனையோ ஏழை விவசாயிக் குடும்பங்களைக் காப்பாற்றினார். அப்படிப்பட்ட சட்டம் வரவேண்டும். சர்க்கார் என்றால், அதுதான் சர்க்கார். இது என்ன மசோதா ? இந்த மசோதாவை சட்டமாக்கி நல்ல முறையில், ஏழை மக்கள் பயனடையும் முறையில் நிறைவேற்ற முடியுமா ? இந்த மசோதாவின் நோக்கங்கள் சரிவர ஈடேறுமா என்று பார்த்தால், சர்க்கார் எல்லாப் புள்ளி விவரங்களையும் சரியாகக் கொடுத்திருக்கிறார்களா ? மசோதாவைச் சட்டமாக்கி அமல் நடத்தினால், இவ்வளவு ஸர்ப்ளஸ் லாண்ட்ஸ் நிச்சயம் கிடைக்கும் என்று சொல்ல முடியுமா ? இந்த மசோதா சட்டமானால், இந்த ராஜ்யத்திலுள்ள ஏராளமான விவசாயக் குடும்பங்கள் நல்ல பலனடைந்து உயர்ந்த நிலையை அடைவார்கள், நமது நாட்டின் பொருளாதார நிலை உயரும், "மோர் புட் ப்ரொடக்ஷன்" துரிதமாக ஏற்படும், நமது ராஜ்யம் க்ஷேமநல ராஜ்யமாக மாறும் என்ற நம்பிக்கைகளை எல்லாம் அளிக்கக்கூடிய முறையில் இந்த மசோதா இருக்கிறதா ?

சட்டத்தை ஏதோ பாஸ் செய்யலாம். அமல் நடத்துவதில்தான் சிக்கல் இருக்கிறது. வோட்டு வாங்க வேண்டிய 1962-ம் ஆண்டில் இதை அமல் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடும். நீங்கள் எப்படி அமல் நடத்தப் போகிறீர்களோ கடவுளுக்குத்தான் தெரியும். சென்னையில் நடக்கும் அரசாங்க பஸ் நிர்வாகம் மாதிரி அமல் நடத்திக்கொண்டு வந்தால் எதிர்பார்த்த பலனைக் காட்டிலும் இடைஞ்சல் வந்துவிடலாம். இந்தச் சட்டத்தைத் தயார் செய்தவர்கள் நல்ல முறையில் அமல் நடத்தும் மெஷினரியைத் தயார் செய்ய வேண்டும். அதுதான் முக்கியம். இந்த நாட்டிலே சோஷலிசம் வரவேண்டியதுதான். இந்த தேசத்தில் கோடிக்கணக்கான நஞ்சை நிலங்கள் இருந்தும் பட்டினிப் பட்டாளங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொருவருக்கும் நிலம் கிடைக்கவேண்டுமென்ற முறையில் இதை நல்லவிதமாக அமல் நடத்தவேண்டும்.

இந்தச் சட்டத்தில் இன்னும் ஒன்றை முக்கியமாக எதிர்பார்த்தேன். அதன் மூலம் இந்த நாட்டிலுள்ள ஏழை நடுத்தர நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு பெரிய நிவர்த்தி கிடைக்குமென்று எதிர்பார்த்தேன். அதைக் கம்யூனிஸ்டுகள் கூட எதிர்க்கலாம். நானும் அவர்கள் கட்சியில் ஒரு அனுதாபி. நான் ஒரு சமயம் தேர்தலுக்கு நிற்கும்போது—நிற்கிறேனா இல்லையா என்பது சந்தேகம்—இந்த ஒரு கொள்கையைப்பற்றி யோசிக்க



வேண்டியவனாக இருக்கிறேன். இப்படி ஒரு கொள்கையை "ப்ரீ மைண்ட்" வைத்துப் பார்க்க வேண்டும். அது அரசாங்கத்துக்கும் வேண்டும் ; தனி மனிதனுக்கும் வேண்டும். நடுத்தர விவசாயிகளுக்கு இந்த நாட்டில் நீங்கள் என்ன செய்து கொடுத்தீர்கள் ? "ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்". இந்த நாட்டிலுள்ள 5 ஏக்கர் நிலமுள்ள விவசாயிகளுக்கு என்ன செய்து கொடுத்தீர்கள் ? வோட்டு வாங்குகிற சட்டம் என்ற முறையில் டெனண்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் என்று போட்டு அவர்களைக் கசக்கிப்பிழிந்து விடவில்லையா ? கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு நிலம் இருந்தும் அவர்கள் சொந்தப் பயிர் வைத்துச் சாப்பிட முடியாத நிலைமையில் பல குடும்பத்தினர் இருக்கிறார்கள். உங்கள் சட்டத்தின் மூலம் சொந்தப் பயிர் வைத்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஏழை ஸ்திரீ. அவள் சாணி பொறுக்கியும், மற்ற வேலைகள் செய்தும் கொஞ்சம் பணம் சேர்த்தாள். எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்து கொண்டு வந்தால் 2,500 ரூபாய் வரை சேர்த்திருக்க முடியும் என்று பாருங்கள். அவளுக்கு இப்படி ஒரு சட்டம் இருக்கிறதென்று தெரியாது. அம்பாசமுத்திரம் தாலுகாவில் துப்பாகுடி கிராமத்தில் ஒரு நிலத்தைக் கிரயம் பேசி வாங்கி விட்டாள். இவளுக்கு நிலம் இருக்கிறது என்று சொன்னவுடன் அவளுக்கு இருந்த ஒரே ஒரு பெண்ணுக்குக் கிராக்கி வந்துவிட்டது. 2,500 ரூபாய் சொத்து இருக்கிறது என்றவுடன் அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாப்பிள்ளைகள் வந்தார்கள். அவள் சொத்தைப் போய் அனுபவிக்கப் போனாள். ஆனால் நம்முடைய சட்டத்தின் காரணமாகச் சொந்தப் பயிர் வைக்க முடியவில்லை. சாதாரணமாக சாணி பொறுக்கி 2,500 ரூபாய் சொத்தை வாங்கியவள் அதில் சொந்தப் பயிர் வைத்து இன்னும் 4 5 வருஷங்களில் மேலும் 2,500 ரூபாய்க்குச் சொத்து வாங்கி விடலாம் என்று மனோராஜ்யம் செய்து வந்தாள். சட்டம் என்ற கழுதை அங்கே அவளைத் தடுத்து விட்டது. அதற்கு அடுத்தபடியாக அவளுக்கு வரவேண்டிய 60–40 விகிதாசாரம்கூடக் கிடைக்கவில்லை. அங்கே ஒரு விவசாயச் சங்கம் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் காங்கிரஸ் விவசாயச் சங்கங்கள் இருக்கின்றன, கம்யூனிஸ்ட்டுகள் விவசாயச் சங்கங்கள் இருக்கின்றன. இந்த நாட்டிலுள்ள நடுத்தர மக்கள் வாழ்விழந்து போய்க் கிடக்கிறார்கள். சொந்த விவசாயத்துக்கு நிலம் கிடைக்கவில்லையென்றதால் ஏதோ கொடுத்ததைக் கொடு என்று சொல்லி அந்த நிலத்தை விற்றுவிட்டாள். 2,500 ரூபாய்க்கு வாங்கிய நிலத்துக்கு 1,750 ரூபாய்தான் கிடைத்தது. அதில் 700 ரூபாய் வரை யாரோ இரண்டு பேரிடம் தவறுதலாகக் கொடுத்துவிட்டாள். மீதி ரூபாயை மருமகன் கேட்டதற்கு முடியாதென்று கூறிவிட்டாள். உடனே, அவன் மகளை அடித்து விரட்டி விட்டான். மகள் மாப்பிள்ளை கூப்பிடவில்லையென்று சொல்லித் தற்கொலை செய்துகொண்டாள். உங்களுடைய சட்டத்தின் மூலம் இந்த நிலைதான் நாட்டிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு சாராருக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்றால் அதனால் இன்னொரு சாராருக்கு ஓரளவும் பாதகம் ஏற்படக் கூடாது. 1937-ல் ராஜாஜி மந்திரி சபை கொண்டு வந்த சட்டத்தை எடுத்துப் பரிசீலனைப் பண்ணிப் பாருங்கள். எத்தனை லட்சக் கணக்கான கடன்காரர்கள் நன்மை அடைந்தார்கள். அதனால் லேவாதேவிக்காரர்களுக்கு நஷ்டம் உண்டா ? அவர்களுக்கும் எட்டணா வட்டி கிடைத்தது. சட்டம் அந்த மாதிரி இருக்கவேண்டும். ஒரு குடும்பத்துக்கு 5 ஏக்கர் நிலம் இருந்தால் வருஷத்துக்கு 1,000 அல்லது 1.500 ரூபாய் வருமானம் வரும். ஏதோ குடும்பக் காலக்ஷேபம் நடந்து கொண்டிருக்கும். வோட்டு நமக்குக் கிடைக்க வேண்டுமென்ற முறையிலே சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஏதோ ஸேல்ஸ் டாக்ஸ், ப்ரொவிஷனல் டாக்ஸ், கண்டிஷன்கள், இதற்கு மத்தியில் சங்கங்கள் என்று கஷ்டப்படுத்துகிறார்கள். நானும் சில சங்கங்களில் அனுதாபியாக இருக்கிறேன். அந்தச் சங்கங்களைப்பற்றிய புகார்கள் வந்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சர்க்கார் 5 ஏக்கர் உள்ளவர்களுக்கு எந்த வித கண்டிஷன்களும் இல்லாத நிலைமையில் அவர்கள் இஷ்டம் போல் பயிர் செய்து கொள்ளலாம் என்ற முறையில் சட்டத்தைத் தைரியமாகச் செய்யவேண்டும். அப்படியானால்தான் நீங்கள் நியாயத்தை வழங்கியவர்களாவீர்கள். மந்திரி

[Sri D. S. Authimoolam] [16th April 1960

களுக்குப் பண்ணியம் சேரும். தர்மத்தைச் செய்து உங்கள் மந்திரி பதவி என்ற சுலையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதற்கு நீங்கள் பாடுபட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

" காம்பன்ஸேஷன் " ரொம்பவும் குறைவாகத் தீர்மானித்திருக்கிறார்கள். வருமானத்தைக் கணக்குப் பண்ணி ஒரு எக்கருக்கு இவ்வளவு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஒரு எக்கர் நிலம் 5,000 ரூபாய் மதிப்புள்ள நிலமாக இருக்கும். இந்தக் கணக்குப்படி பார்த்தால் 2,500 ரூபாய்கூடக் கிடைக்காது. ஜமீந்தார்கள் விஷயம் வேறு. அவர்களுக்கு நஷ்டஈடாக கோடிக்கணக்கான ரூபாய் இன்னும் வரக்கூடிய பட்ஜட்டுகளில்கூட ஒதுக்கப்படுகின்றன. அவர்கள் பிரிட்டிஷாருடைய காரியங்களுக்குக் கை பொம்மைகளாக இருந்தவர்கள். அவர்களுக்கு நிறைந்த அளவில் காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த நாட்டிலுள்ள நடுத்தர விவசாய மக்களுக்கு, சிறு நிலச்சுவான்தார்களுக்கு ஒழுங்கான காம்பன்ஸேஷன் கிடையாது. இந்த அரசாங்கத்தில் நீதி கிடையாதா ? எனக்கு நிலங்கள் ஜாஸ்தி கிடையாது. நான்கு லட்ச ரூபாய் சொத்தெல்லாம் முன்பே விற்று விட்டேன். என்னுடைய வகைக்காக நான் இதைச் சொல்லவில்லை. காம்பன்சேஷன் விஷயத்தில் நியாயமான அளவில் மார்க்கட் வால்யூ பார்த்துக் கொடுக்க வேண்டும். பணத்திற்குப் பதிலாக பத்திரம் எழுதிக் கொடுத்து விடுவது என்ற முறை இருக்கக் கூடாது. பத்திரமாகக் கொடுத்தால் அதை உடனே எந்த பாங்கில் வைத்து வேண்டுமானாலும் " காஷ் " பண்ணிக்கொள்ளலாம் என்ற ஷரத்து இருக்க வேண்டும். திட்டம் என்று போட்டு சில பேர் மில்லினராகவும், மல்டி மில்லியனராகவும் ஆவதற்கு ஊரிலுள்ளவன் தலையில் எல்லாம் கை வைக்காதீர்கள். இந்த நாட்டிலே உள்ள நிலச்சுவான்தார்கள் பாடுபட்டவர்கள் அல்லவா ? ஆயிரம் பேருக்கு ஒருவன் வேண்டுமானால் கவறுதலாகச் சம்பாதியம் பண்ணியிருக்கலாம். மற்றவர்கள் எல்லாம் கிராம வாழ்க்கையில் சிக்கனமாக இருந்து
1-3 a.m. சொத்து சம்பாத்தியம் செய்திருக்கிறார்கள். நான் அதனால் நிலச்சுவான்தார்களுக்காக ரொம்பவும் " ப்ளீட் " செய்வதாக நினைக்கவேண்டாம். நியாயமான அடிப்படையிலே இந்த அரசாங்கம் காரியங்களைச் செய்ய வேண்டும்.

கல்யாணம் ஆன பெண், கல்யாணம் ஆகாத பெண் என்று பாகுபாடு இருப்பதுபற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் ரொம்ப அழகாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். சட்டம் செலக்ட் கமிட்டிக்குப் போகிறபோது, கொஞ்சம் தீவிரமாக இருந்து, நெடுக சுற்றுப் பிரயாணம் செய்து நிலைமையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். சுற்றுப் பிரயாணத்திற்காக ட்ராவலிங் அலவன்ஸ் சற்று அதிகம் ஆனாலும் பரவாயில்லை. நல்ல விதமாகச் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும். திரு. கோதண்டராமன் அவர்களுக்கெல்லாம் பயப்படவேண்டாம். நியாயம் செய்வதில் ஓரளவு பயத்தை ஒதுக்கிவைத்துவிடவேண்டும். பேசுவதற்கு நேரம் இல்லாததால் நான் கடைசியாகக் கேட்டுக்கொள்வது, அரசாங்கம் நியாயத்திலிருந்து தவறிவிடக் கூடாது என்பது. சிறு நிலச்சுவாந்தார்களைப் பொறுத்தவரையில், அனுதாபத்தோடு இருந்து, எந்த " கண்டிஷன்களையும் " போடாத நிலைமையில் அவர்களுக்குப் பூரண விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஒவ்வொரு செக்ஷனைப்பற்றியும் நான் குறிப்பு வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றாலும் இந்த இடத்தில் அதைப்பற்றி ஜாஸ்தி சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் நாம் எதிர்பார்க்கும் பலனைக் காணவேண்டுமானால், சீக்கிரமாக இதை அமுல் நடத்தவேண்டும். அதோடு, சர்க்கார் வாஸ்தவத்திலேயே உழவனுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையில் மிகவும் லாபம் இருக்கிறதென்று நம்பினால், சாகுபடிக்குத் தகுதியான தரிசு நிலம் (ஏரபிள் லாண்டு) எங்கெங்கு இருக்கின்றது என்பதற்குப் புள்ளி விவரம் சீக்கிரமாகத் தயார் செய்யவேண்டும். அதையும் இந்த " ஸர்ப்ளஸ் " நிலங்களோடு சேர்த்து துரிதமான முறையில் விநியோகம் செய்ய வேண்டும். கொஞ்சம் அதிக நிலம் வைத்திருப்பவர்களுக்கு ஏதோ சில



16th April 1960] [Sri D. S. Authimoolam]

சட்டங்களை அரசாங்கம் செய்தபோதிலும், இதில் ஒரு நன்மையாகத்தான் செய்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் ஓரளவு உணர்ந்து சாந்தி அடைவார்கள். ஆகவே, சோஷலிசப் பாணியில் எதைச் செய்தாலும் அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், செய்வதை நல்ல முறையில் செய்ய வேண்டும். நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டும்.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** எந்த எந்த வகையில் எல்லாம் மேல் படிப்பு படித்தவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமோ அந்தஅந்த வகையில் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. கன்னியாகுமரி வேறு விஷயம். அங்கே பல துறைகளில் எக்விப்மெண்டு இல்லை. பல் வைத்தியம் என்றால் முன்பு நூற்கணக்கிலேயே கிடையாது. பல லட்சக் கணக்கில் இப்போதுதான் அது எல்லாம் ஏற்படுத்தி வருகிறோம். இந்த மாதிரி நிலைமை அந்த அரசாங்கத்தில் இருந்தது.

**Sri. N. MARUDHACHALAM :** மருத்துவப் பணியில் பணியாற்றுகிற தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை மாவட்டவாரியாகச் சொல்வார்களா?

**Mr. SPEAKER :** இதற்கு தனியாகத்தான் கேள்வி போட வேண்டும்.

I rule this Question out of order.

## *Medical Graduates*

*780 *Q.*—**Sri T. S. RAMASWAMI** (on behalf of **Sri K. SATTANATHA KARAYALAR**) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of vacancies that exist now in hospitals in our State for want of qualified doctors ; and

(*b*) the number of successful medical graduates during 1959 and the number absorbed in Government service?

[18th April 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) 75.

(b) Successful medical graduates 354; medical graduates absorbed in Government service 116.

MR. SPEAKER : I must inform the House that this question is also one for which an answer has not been received by me. It is customary that answer copies are sent to the Speaker before they are answered on the floor of the House. The answer to this question was received only this morning and a copy of that has not been furnished to the Speaker.

SRI K. VINAYAKAM : Sir, in view of the large number of posts which are still vacant for want of qualified hands, what steps do the Government propose to take to persuade the qualified doctors who come out of the colleges to take up the posts?

THE HON. SRI M. A. MANICKAVELU : Let me first answer the question put by the Hon. Speaker. The answer to this question also was received by me only this morning. Simultaneously it (a copy of the answer) should have been sent to the Hon. Speaker, I admit. But the difficulty is, the sitting of the Assembly commences at 8-30 a.m. That is one of the difficulties why the department had not sent the copy in time and all that. Anyway I shall look into the matter and see that answers are sent in time.

MR. SPEAKER : The question was sent to the Government on the 17th February 1960. And if to-day, on the 18th April, the Government cannot answer the question, even with two months' time, it is not the fault of the Speaker. The Hon. Minister should better advise the Department to send the answer to him two days earlier so that I can include it in the list of questions. I think, the Hon. Minister has no defence.

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not going into the previous history or delays relating to what happened prior to yesterday. I am only talking about yesterday's affair. Yesterday only this thing happened.

MR. SPEAKER : If the Hon. Minister does not get the answer in time, it is not my fault. He must see that his department works efficiently.

THE HON. SRI M. A. MANICKAVELU : All faults will be looked into and things set right as far as possible.

Sir, as regards the difficulty of getting qualified doctors for manning hospitals and other institutions, the low scale of pay is one reason. Then, the cadre strength is not enough and there is no proportionate chance of promotion. Again private institutions attract people by offering more pay. Another reason is qualified people make a good living by private practice. There is also the reluctance to go and serve in the rural parts. Now we are trying to attract people. So far as Primary Health Centres are concerned, we try to attract them by increasing the compensatory allowance by cent per cent. Then the recommendations of the Pay Commission may also have a bearing. Hon. Members should wait and see and in course of time more graduates will be forthcoming and the question of affording greater facilities and chances of promotion is being looked into. When all these are cumulatively examined and given effect to, I think, a better state of affairs will prevail.



18th April 1960]

SRI N. MAHALINGAM : போதுமான அளவு டாக்டகள் சர்க்காருடைய ஆஸ்பத்திரியில் இல்லாததனால் மாணவர்கள் படிக்கும் போதே அதிகமான ஸ்டைபண்டு கொடுத்து சர்க்கார் பணியைக் கட்டாயமாக ஏற்கவேண்டும் என்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த மாதிரியும் செய்ய ஒரு உத்தேசம் இருக்கிறது. அன்றைய தினம் கனம் அங்கத்தினர் இல்லாததனால் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

SRI. K. PERIANNAN : போதிய டாக்டர்கள் கிராமங்களில் போய் பணி புரிய முன் வராததனால் ரிடையர் ஆனவர்களுடைய சர்வீசையும் எடுத்துக்கொள்ள சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதுவும் செய்துகொண்டு வருகிறோம். 59, 60 வயதுவரையிலும்கூட டாக்டர்கள் வேலையில் வைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

SRI J. MATHA GOWDER : எம்.பி., பி. எஸ். படித்த டாக்டர்கள் கிடைப்பது மிகவும் சிரமமாக இருந்த காரணத்தினால், இதற்கு முன் எல்.எம்.பி. படித்த டாக்டர்களை ஆஸ்பத்திரியில் வைத்தது போல் இப் போதும் ஆஸ்பத்திரியில் நியமிப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல். எம். பி தரம் டாக்டர்களைத்தான் இப்போது ஜி.ஸி.ஐ.எம். படித்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அவர்களை நியமிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக் கிறோம்.

SRI K. ANBAZHAGAN : அரசாங்கத் துறையில் பணி புரியும் டாக்டர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றும் பொழுது அவர்களுக்கு வசதிகள் சிறிதும் அளிக்கப்படுவதில்லை என்பதன் காரணமாக அவர்களில் பலர் ராஜினாமா செய்வது உண்மையா ? அப்படியானால் அவர்களை அடிக்கடி மாற்றாமல் இருப்பதற்கு ஏதாவது வழி முறைகளைக் கையாளுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நினைத்தபடி அல்லது அடிக்கடி மாற்றுவது கிடையாது. மற்ற டிபார்ட்மெண்டுகளில் மூன்று வருஷத்திற்கு ஒரு தடவை மாற்றப்படுவது போல், இந்த டிபார்ட் மெண்டிலேயும் ரண சிகிச்சைப் பயிற்சி பெற்ற டாக்டர் ப்ரொமோஷன் பேரில் மாற்றப்பட்டால், வேறொரு ரண சிகிச்சை பயிற்சி பெற்ற டாக்டரை மாற்றவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நிர்வாக நிர்ப்பந்தத்தினால் இவ்விதமான மாறுதல் எற்படுகின்றன.

SRI. M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் ரிடையரான டாக்டர்களை நியமிக்காமல், இருக்கிற டாக்டர்களுக்கு ப்ரொமோஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ப்ரமோஷன் கொடுக் கிறோம். ரிடையரானவர்களையும் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படு கிறது.

SRI M. WILLIAM : How many such vacancies exist in the Kanyakumari district, for how long they have been existing and when will they be filled up ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I have given figures for the whole State. I do not have the break-up of figures district-war.

[18th April 1960

*Post-Graduate Schools in the Indian School of Medicine*

*709 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that a number of Post-Graduate Schools in the Indian School of Medicine are to be opened in India by the Central Council of Ayurvedic Research ; and

(*b*) if so, whether this Government have made any representation to open one in our State ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Government have no information in the matter.

(*b*) Does not arise.

*Co-operative farms*

*710 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of co-operative farms organized during 1959; and

(*b*) of these, the number of landless agriculturists organized in these societies and the number of marginal landholders ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The number of co-operative farming societies of all types registered during 1959 is **78** (seventy-eight).

(*b*) The number of landless agriculturists in the 78 (seventy-eight) societies is 2,645 (two thousand six hundred and forty-five) and the number of marginal landholders 99 (ninety-nine).

Sri V. SUBBIAH : கூட்டுறவு முறையிலே ஏற்படுத்தப் பட்ட சொசைடிகளில் குறிப்பாக நீர்ப்பாசன வசதி இல்லாமல் இருக்கும் புஞ்சை நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன. இம்மாதிரி தண்ணீர் வசதிகளும் மற்ற வசதிகளும் இல்லாமல் இருக்கும் சொசைடிகளுக்கு கிணறுகள் வெட்டுவதற்கும், குளங்கள் வெட்டுவதற்கும் அரசாங்கத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, first a certain answer was given to me and I sent it back to the Department to give me more particulars for answering supplementaries. But I must confess, I have not included this information in my note.

Sri T. IRUSAPPAN : தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலூகாவிலே விவசாயக் கூட்டுறவு பண்ணைகள் எத்தனை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ? எத்தனை இடத்தில் வேலை நடைபெறுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : இதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

Sri S. M. ANNAMALAI : கூட்டுறவு பண்ணைகளில் ஜாயிண்டு பார்மிங் டெனண்ட் பார்மிங் எத்தனை என்று அறிய முடியுமா ? டெனன்ஸி பார்மிங் ஏற்படுத்துவது சம்பந்தமாக எந்தெந்த இடத்தில் நிலச் சொந்தக்காரர்கள் எதிர்க்கிறார்களோ அந்தந்த இடத்தில் டெனன்ஸி பார்மிங் செய்ய முடியாது என்று அரசாங்கம் ஒரு விதி ஏற்படுத்தி இருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் சம்மதம் இல்லாவிட்டாலும் அந்தந்த இடத்தில் வாரம் பயிரிடும் கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பிப்பதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?



18th April 1960]

The Hon. Sri R. VENKATARAMAN : 1959-ம் வருஷத்திலே ஜாயிண்டு பார்மிங் சொசைடிகள் நான்கு இருந்தன. 1960 மார்ச் 31-ல் ஜாயிண்டு பார்மிங் சொசைடிகள் 12 இருந்தன. டெனண்ட் பார்மிங் சொசைடிகள் டிசம்பர் முடிய 78 இருந்தன. 1960 மார்ச் 31-ல் **148** இருந்தன. நிலச் சொந்தக்காரர்கள் ஒத்துக்கொண்டால்தான் டெனண்ட் பார்மிங் சொசைடிகள் ஏற்படுத்த முடியும். நிலச் சொந்தக்காரர்கள் சம்மதம் இல்லாமல் டெனண்ட் பார்மிங் சொசைடி ஏற்படுத்துவதென்றால் **அது எக்ஸ்ப்ரோப்ரியேஷன்** ஆகும்.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : கூட்டுறவு சொசைடிகள் அமைத்திருக்கின்ற இடங்களில் உணவு உற்பத்தி அதிகமாகி இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் இந்தக் கூட்டுறவு சொசைடி ஏற்படுத்துவதற்கு ஏன் காலதாமதம் ஏற்படுகின்றன. இவ்வாறு காலதாமதம் ஏற்படாமல் எவ்வளவு சீக்கிரம் ஏற்படுத்தமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ? தவிர தேவாலயங்களின் கீழும், மடாலயங்களின் கீழும் உள்ள நிலங்களை உடனடியாக இந்தச் சொசைடி மூலமாக பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்தால் உற்பத்தி அதிகரிக்கும் என்று அரசாங்கம் அறியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் மூன்று கேள்விகள் இருக்கின்றன. நான் ஒவ்வொன்றாக பதில் சொல்லி விடுகிறேன். கூட்டுறவு சொசைடி தஞ்சாவூர் ஜில்லாவில் இயங்குவதில் உற்பத்தி பெருகி இருக்கிறது. இரண்டாவது கேள்விக்கு செ சைடிகளுக்குக் கொண்டுவரப்படுகின்ற வில்லங்க சர்ட்டிபிகேட்டுகளை பரிசீலனை செய்கிற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. மூன்றாவதாக மடங்களிலும் கோவில்களிலும் உள்ள நிலங்களை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய சம்மதம் உடனடியாகக் கிடைப்பதில்லை என்பதனால் சொசைடிகள் ஏற்படுத்த முடிவதில்லை. சம்மதம் கொடுக்கும்படியாக அவர்களை பர்சுயேட் பண்ணுகிறோம்.

*Tube light factory*

711 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :

(அ) ஹங்கேரியின் தொழில் நுணுக்க உதவியுடன் சென்னையில் ஒரு "டியூப்" லைட் பல்ப் தொழிற்சாலை நிறுவ முயற்சி நடைபெற்று வருகிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரமென்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) An application for licence has been submitted by a party for setting up a factory for the manufacture of tube lights with Hungarian Technical Collaboration. The matter is under scrutiny by the Central Government.

(*b*) Full details are not available.

Sri A. VEDARATHNAM : இதற்கு ஹங்கேரி கவர்ன்மெண்ட் எவ்வளவு மூலதனம் வைப்பதாக அறிவித்திருக்கிறார்கள்? இது மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையில் எவ்வளவு காலம் இருந்துவருகிறது? அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்யமுடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதை மத்திய அரசாங்கத்திடம் கேட்கவேண்டும். ராஜ்ய சர்க்காரிடத்தில் இந்தத் தகவல் இல்லை.

*Family Planning Scheme*

*712 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any intense family planning scheme in the City of Madras ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) Copies of the proceedings of the Government which contain details of the scheme are placed in the Legislature Library.

SRI A. A. RASHEED : Has the attention of the Government been drawn to the activities of certain political parties which are trying to wreck the family planning scheme and if so what steps have the Government taken to counteract those activities?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware of any political party which is trying to wreck the scheme.

SRI C. NATARAJAN : இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு அரசாங்கம் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள்? அதோடு கனம் அமைச்சர் அவர்கள் நேரடியாக என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்? (சிரிப்பு).

THE HON. SRI M. A. MANICKAVELU : எவ்வளவு பணம் செலவு செய்தார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. நேரடியாக கண்காணித்து இந்த திட்டம் சரிவர நிர்வகிக்கப்படுகிறதா என்று பார்க்கப்படுகிறது.

*Cycle factory at Thanjavur*

* 713 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :

(அ) தஞ்சையில் நிறுவ இருக்கும் சைக்கிள் தொழிற்சாலை எப்போது வேலை துவங்கி எப்போது பூர்த்தியாகும் ?

(ஆ) இதுவரை என்ன வேலை நடந்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The construction of buildings is nearing completion and the electrification is in progress. Erection of the machines will be taken up as soon as the buildings are ready. After testing the machines and training the workers, the regular work is expected to start by July 1960.

SRI A. VEDARATHNAM : இந்த இயந்திர சாதன வசதிகள் வந்தாகி விட்டதா? ஆண்டு ஒன்றுக்கு எத்தனை சைக்கிள்கள் இங்கே உற்பத்தி செய்யப் படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. பூர்த்தியான பிறகு ஆண்டு ஒன்றுக்கு 6,000 சைக்கிள்கள் உற்பத்தியாகும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know how much money the Government are investing in the factory?

THE HON. SRI R. VENKATARAMAN : Non-recurring expenditure Rs. 5,41,400; recurring expenditure of Rs. 8,37,526 which is purely for purchase of raw materials; working capital of Rs. 2 lakhs. The total estimated cost will be about Rs. 7 lakhs.

SRI K. B. S. MANI : சர்க்கார் தஞ்சை ஜில்லாவில் ஆரம்பிக்கப் போகும் சைக்கிள் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சைக்கிள்களுக்கு என்ன பெயர் வைக்கப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இன்னும் உற்பத்தியே செய்யவில்லை. அதனால் என்ன பெயர் வைப்பது என்ற பிரச்னை எழவில்லை.





SRI A. VEDARATHNAM : மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு உதவி எதிர்பார்க்க முடியும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : Central Government loan would be Rs. 5,63,085.

SRI K. ANBAZHAGAN : இந்த சென்னை மாநில சைக்கிள் தொழிற்சாலையில் தஞ்சையில் நடத்தப்படுவதில் சைக்கிள் பார்ட்கள் எந்தளவு விகிதாசாரம் இங்கேயே தயாரிக்கப்படும்? எவ்வளவு வெளியிலிருந்து வரவழைக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு வேண்டிய உறுப்புகள், பாகங்கள் எல்லாம் பெரிய அளவிற்கு சென்னை ராஜ்யத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. அதுவும் முக்கியமாக ட்யூப் இன்வெஸ்மெண்ட் கம்பனி இங்கேயிருக்கிறது. அதுதான் முக்கிய மூலப்பொருளாகும். அது இங்கேயே கிடைக்கிறது.

SRI K. S. G. HAJA SHERIFF : May I know what is the employment scope in this factory?

THE HON. SRI R. VENKATARAMAN : On a 6,000-unit production, it may be roughly 200.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்தத் தொழிற்சாலையில் குறைந்தது எவ்வளவு பேர்கள் வேலை செய்வார்கள் என்று அரசாங்கம் உத்தேசிக்கிறது ?

MR. SPEAKER : இப்பொழுதுதான் இதற்குப் பதில் கொடுத்தார்களே. அடுத்த கேள்வி.

*Hurricane Lantern Unit, Palani*

* 714 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any production from the Hurricane Lantern Unit, Palani;

(*b*) if not, why;

(*c*) whether there is any alternate proposal for manufacturing; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*d*) The machines purchased for this Unit are capable of producing hurricane lanterns, tin containers, hinges, drums and a variety of sheet metal articles. To start with, it was proposed to take up the manufacture of hurricane lanterns, but on account of the very heavy competition in the market and as some of the private factories have discontinued the production of hurricane lanterns recently due to this heavy competitions, it was considered not safe to start with the manufacture of hurricane lanterns in this Unit and the manufacture of the other items have been taken up. The manufacture of hurricane lanterns in the Unit will be taken up when the market conditions improve.

The Unit is at present manufacturing tin containers, hinges, drums and other sheet metal articles from November 1959. Up to January 1960, articles to the value of Rs. 25,956·48 have been produced.

[18th April 1960

*Match sticks*

* 715 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) பட்டுக்கோட்டையில் தீக்குச்சி தொழில் வேலை என்ன நிலையில் இருக்கிறது ?

(ஆ) எப்போது பூர்த்தியாகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Industrial Co-operative Match Factory at Pattukkottai, was registered and started on 11th March 1958. The society has completed construction of factory buildings and purchased the machinery and equipment. It has obtained the licence from the Collector of Thanjavur for the storage of chemicals and also the licences from the Central Excise authorities and the Panchayat Board for starting the factory. The society is awaiting the licence from the Inspector of Factories.

(*b*) The factory is expected to go into production by the last week of April 1960.

SRI R. SRINIVASA IYER : If even the Government will take really two years to get these licences and consequently there is delay, what will be the fate of private industries ? So, will the Government take steps at least hereafter to see that these licences are granted quickly ?

THE HON. SRI R. VENKATARAMAN : As I have stated in a previous answer, the Government and the private industries are on the same footing and they are treated by the licensing authorities on the same footing.

SRI M. C. MUTHUKUMARASWAMY : தீக்குச்சி தொழிற்சாலை பட்டுக்கோட்டையில் மட்டும் செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ? அல்லது தஞ்சை ஜில்லாவிலுள்ள இதர தாலூகாக்களுக்கும் இதை விஸ்தரிப்பதற்கு ஏதாவது மனுக்கள் கிடைத்திருக்கிறதா ? அல்லது அரசாங்கமாவது அதுபற்றி ஏதாவது பரிசீலனை நடத்தியிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தெந்தயிடத்தில் " லோ வேஜ் பாக்கட்ஸ் " இருக்கிறது என்று கணக்கு போட்டார்களோ அந்தவிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வேறிடங்களில் வைக்க வேண்டுமென்று சொன்னால் கனம் அங்கத்தினர் தொகுதியாகிய நன்னிலத்தில் வைத்தால் ஒருவரும் இந்தத் தீக்குச்சித் தொழிற்சாலைக்கு வரமாட்டார்கள். ஏனெனில் இதில் கிடைக்கும் சம்பளம் 12 அல்லது 14 அணு, அதற்கு மேல் இருக்காது. அங்கே விவசாயத் தொழிலாளர்களுக்கு 1½ ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது.

SRI A. VEDARATHNAM : வேலை துவங்கினுல் நாள் ஒன்றுக்கு எத்தனை க்ரோஸ் பெட்டிகள் அங்கு உற்பத்தி செய்யப்படும் ? அதன் மூலம் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not have that information now, Sir.

*Japanese aid to Small Scale Industries*

* 716 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நம் மாநிலத்தில் சிறு தொழில் அபிவிருத்திக்கு ஜப்பானியர் உதவியளிக்க முன் வந்திருக்கிருர்களா ?

(ஆ) அப்படியானுல் அதன் விபரமென்ன ?



18th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : ஜப்பானிலிருந்து, சிறு கைத்தொழில்கள் இங்கு ஆரம்பம் செய்வதற்கு நமது அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டதா ? அப்படியானுல் அதைப் பற்றிய விவரங்களை அறிவிக்க முடியுமா ? அல்லது மத்திய அரசாங்கமாவது இது பற்றி ஏதாவது நமக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஜப்பானிலிருந்து வந்த டெலிகேஷன் நமது ராஜ்யத்தில், இந்திய நாட்டிலும் சிறு கைத் தொழில்கள் எந்த முறையில் நடக்கிறது என்பது பற்றி அவர்கள் கண்டு ஆராயவும் அதற்கு மேற்கொண்டு ஏதாவது விருத்தி செய்வதற்கான சிபார்சுகள் செய்வதற்காகத்தான் வந்தது. கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த ரிப்போர்ட்டை படித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் நன்ருக இருக்கிறது. சிறந்த முறையில் இருப்கிறது என்று தெரிவித்திருக்கிருர்கள். அவர்கள் இங்கு தொழில் செய்வதற்கு உதவி புரிவதற்காக வந்தவர்கள் அல்ல. ஆலோசனை கூறுவதற்காக வந்தவர்கள்.

*State Labour Advisory Board*

* 717 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House a copy of the resolutions passed at the meeting of the State Labour Advisory Board held on 12th and 13th December 1958 together with a statement showing the action taken by the Government on those resolutions ?

THE HON. SRI R. VENKATARAMAN : A paper [a] furnishing the information is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய பதிலிலிருந்து தொழிற்சங்கம் அங்கீகரிக்கப்பட்டது தவிர, கோர்ட் ஆப் டிசிப்ளினையும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம். லேபர் கமிஷனர், ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்லிஸ்மெண்ட்ஸ் ஆக்ட் 51–வது விதி எலெக்ட்ரிசிடி போர்ட் தொழிலாளர்களுக்கு செல்லும் என்று சொல்லியும் அதை எதிர்த்து எலெக்ட்ரிஸிட்டி போர்ட் ஏன் ஹைகோர்ட்டுக்கு ரிட்டிற்குச் செல்ல வேண்டும். இது, அந்தக் கோர்டிற்கு விரோதம் அல்லவா ?

THE HON. SRI R. VENKATARAMAN: This question has to be addressed to my colleague in charge of Electricity.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில் கூடுமானவரையில் அமுல் நடத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஏதாவது அமுல்படுத்தப் பட்டிருக்கிறதா ? அல்லது முயற்சி இருக்கிறதா ? அதை அமுல் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களை நான் கேட்கிறேன், இதுவரையில் அமுல் நடத்தப்படவில்லையானுல் எங்கே நடத்தப்படவில்லை என்பது பற்றி விவரம் கொடுக்கும்படியாக.

*Compensation to ex-Zamindars*

* 718 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when the interim payments of compensation amount for fasli 1367 payable to the ex-zamindars were sanctioned by the Government ;

[a] Printed as Appendix on pages 236–239 infra.

[18th April 1960

(*b*) the reasons for the delay in the disbursement of the payments to the zamindars by the District Authorities till this day ; and

(*c*) the total amount sanctioned for payment in Tiruchirappalli district for fasli 1367 and the amount remaining undisbursed for the above fasli ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) In respect of zamindari and under-tenure estates and inam estates held by individual landholders the interim payments due for fasli 1367 were deposited with the Tribunals before the end of fasli 1368, that is, between 3rd November 1958 and 25th June 1959. Payments to educational, religious and charitable institutions were sanctioned before the end of fasli 1367.

(*b*) Disbursements of the amounts deposited with the Estates Abolition Tribunals are made by the Tribunals after judicially deciding the claims made by the landholders and other interested persons in accordance with the provisions contained in sections 43 and 44 of the Abolition Act. Disbursements to institutions are made by the Collectors. Particulars of disbursements made by the Tribunals and the Collectors, are not available and have been called for from the Director of Settlements and the High Court and their reports are awaited.

(*c*) In respect of zamin estates and inam estates held by individual landholders in Tiruchirappalli district interim payments for fasli 1367 were sanctioned and deposited as follows :—

| | *Amount sanctioned.* | | *Date of deposit.* |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| | RS. | NP. | |
| Zamin estates .. .. .. .. | 46,868 | 00 | 17th March 1959 and 26th March 1959. |
| Inam estates (held by individuals) .. | 7,832 | 00 | 30th March 1959. |
| Inam estates (held by intstitutions) .. | 67,197 | 92 | (Collectors asked to disburse the amounts.) |

There are no undertenure estates in the district. The details of amounts undisbursed are not available as the disbursements are made by the Estates Abolition Tribunal, Tiruchirappalli, on the claim petitions of the landholders and other interested persons.

SRI K. R. VISWANATHAN : Will the Hon. Minister take expeditious steps to disburse the remaining undisbursed amount to the ex-zamindars and institutions ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, they are being expedited. So far as institutions are concerned, there is not much difficulty and it is being disbursed by the Collector. Only as regards individuals, as it is being disbursed through the Tribunal, there is a sort of formality which takes a little more time.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Even after the estates have been taken over and the ex-zamindars' claims have been once recognised, there is a lot of inordinate delay. Even after going through the procedure in the district court, there is delay with regard to interim payment with the result a lot of poor widows and



18th April 1960]

poor ex-zamindars are put to a lot of inconvenience. Therefore, without going through all these formalities, will the Government issue instructions to the Board of Revenue to disburse the interim payment quickly. Once the claims are recognised, it should be possible to pay the interim payment every year ?

THE HON. SRI M. A. MANICKAVELU : If claims are once recognised, there is no difficulty. But if any fresh or new claim arises, there is difficulty. Now the Government expect, after the change-over from the Tribunal to the District Court, that disbursement must be speedier. As regards the request for instructing the Board, there is a sort of delicacy as far as the Tribunal is concerned. But now that the District Court is functioning, we can only ask the Board to smoothen as far as possible—the difficulties experienced by the beneficiaries.

MR. SPEAKER : I will take two more minutes and finish the rest of the questions.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்தில், ஜமீன்தார்கள் இந்த நாட்டில் அவர்களாக உழைத்து சம்பாதித்து வாங்கிய நிலங்கள் இல்லை, ஏமாந்தவர்களிடமிருந்து எடுத்துக்கொண்ட நிலங்கள்தான் அவர்களிடமிருந்து வந்தது. இந்த முறையில் பார்த்தால் இனிமேலாவது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காமல் இருப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். 9-30 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : இவ்விதம் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அது மிகவும் சட்ட விரோதமாய் இருக்கும்.

*Scholarship to Harijan students*

*698 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Education Department exercises any control or guidance regarding the payment of Harijan Scholarships given to college students of our State ; if so, the nature of control ;

(*b*) whether the Government have received any complaint regarding the distribution of Harijan Scholarships to college students, if so, the nature of the complaints and the steps taken by the Education Department on those complaints ;

(*c*) whether the District Collector of the Kanyakumari district or the Government have received any complaint regarding the scholarship distribution in the South Travancore Hindu College, Nagercoil ; and

(*d*) if so, the nature of the complaint and the steps taken to rectify any irregularities found there ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No, Sir.

(*c*) & (*d*) Two petitions were received by the Collector of Kanyakumari regarding the delay in the disbursement of scholarships to Backward Class and Scheduled Caste students during 1959-60 in the South Travancore Hindu College, Nagercoil. The Collector has ascertained from the Principal of the College that the scholarship amounts have been disbursed and the acquittances sent to the Director of Harijan Welfare on 29th January 1960.

[18th April 1960

It has since been brought to light that the South Travancore Hindu College, Nagercoil, has got an undisbursed amount of Rs. 10,682·2 nP. This amount comprises three items for the years from 1956-57 to 1958-59. Steps are being taken to collect and remit the amount into the treasury.

SRI T. S. RAMASWAMI : Sir, was there any complaint from the Harijan students that receipts were got from them for a higher amount and a lower amount was paid to them ? Secondly, was there any complaint, Sir, about the fact that the Principal of the College drew the amount both from the Central Government and the State Government and distributed one sum an dretained the other sum. Was there a complaint in regard to this ?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir. I have stated in my answer that the head of the institution, the Principal, has drawn the amount and did not pay it to the students. So, we have asked the Collector to get the money and remit it into the treasury.

SRI A. VEDARATHNAM : ஸார், கல்லூரியில் படிக்கின்ற இந்த மாணவர்களுக்கு ஆண்டு இறுதியில் இந்த மான்யப் பணம் கொடுக்கப் படுகிறது. இதுவரை இந்தப் பணங்களைப் பெறுபவர்கள் மாணவர்கள்தான். இதை சில சமயங்களில் பெற்றோர்கள் கூட அறிவதில்லை. இதன் காரண மாக பெற்றோர்களுக்கு அறியாமல் மாணவர்கள் இதை துர்விநியோகம் செய்துவிடுகிறார்கள். ஆகவே அரசாங்கம் மாணவர்களுக்கு பணம் கொடுக்கின்ற காலத்தில் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் அறிவிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : பெற்றோர்களுக்கு அறிவிப்பது உசிதமில்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. சாதாரணமாக ஹரிஜன மாணவர்களுக்கு போர்டிங்கில் ரூபாய் கேட்கக்கூடாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இருந்தாலும் கண்டிப்பாக கேட்பதாக இருந்தால் அட்காக் தொகையாக 200 ரூபாய் ஒவ்வொரு மாணவருக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பட்ஜெட் விவாதத்தில் சொன்னது மாதிரி இந்தத் தொகைகள் எல்லாம் காலா காலத்தில் கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் புதிய முறை கையாளப்பட்டு காலா காலத்தில் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMI : ஸார், சென்ற பல ஆண்டுகளாக அரசாங்கத்திலிருந்து பணத்தை வாங்கி கையில் வைத்துக்கொண்டிருந்த தற்காக அந்த காலேஜ் பிரின்ஸ்பால் மீது அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : பிரின்ஸ்பால் கலெக்டர் அவர்களிடம் கொடுத்திருக்கிற விவரத்தின் படி, இந்தப் பணத்தை எந்த ஹெட்டில் சேர்ப்பது என்று தெரியாமல்தான் விநியோகிக்காமல் வைத்திருந்தார்கள் என்று தெரிகிறது. இவ்விதம் தெரியாமல் வைத்திருந்தால் அதன் பேரில் பெரிய நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல் மன்னிப்பு கொடுத்து விடலாம் என்றுதான் அரசாங்கம் நினைக்கிறது.

MR. SPEAKER : This is one of the questions for which I did not receive the answer. But I am prepared to concede this because the Hon. Minister was on tour and did not approve the answer. I am prepared to condone the fault, if it may be put so, in this particular case.

Questions are over.



18th April 1960]

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ADJOURNMENT MOTIONS.

### (1) CLOSURE OF MODERN HIGH SCHOOL, KODAMBAKKAM.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from the hon. Member Sri V. K. Kothandaraman. He wants the House to be adjourned for discussing a matter of urgent public importance, namely, 'the closure of the Modern High School, Kodambakkam, for the past one month and the consequent difficulties caused to about 1,200 students and 37 teachers'. Obviously I need not tell that this is out of order. This is not a Government school. The hon. Member says that the school is closed for the last one month. This is not a matter which has arisen suddenly. It is a continuing matter, and, therefore, cannot form the subject-matter of an adjournment motion. I rule it out of order.

### (2) DISPUTE BETWEEN THE MADRAS STATE ELECTRICITY BOARD AND THE WORKERS OF THE KUNDAH PROJECT.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from hon. Members Sri N. K. Palanisami, Sri S. M. Annamalai, and Sri V. K. Kothandaraman, to discuss a matter of urgent public importance, namely, 'the failure of the Government to take effective steps to settle the dispute between the Madras State Electricity Board and the workers of Kundah Project for ensuring industrial peace, which has resulted in a strike endangering the speedy execution of the project'.

Before I give my ruling, I would like to hear the Hon. Minister concerned, whoever he is.

Sri N. K. Palanisami rose.

MR. SPEAKER : Only after I admit it, the hon. Member can make a speech.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, as I have said before, an industrial dispute is a common occurrence. Certain claims are raised by workers and they are being examined by the department concerned. The duty or the responsibility of the Government in these matters is to provide the necessary machinery for conciliation. The necessary machinery for conciliation has been provided in this case, and, therefore, there is no further liability on the part of the Government. If no agreement is reached between the parties, that shows that they are not in agreement with each other. So far as this Government are concerned, there is no failure of duty or responsibility.

MR. SPEAKER:Yesterday I gave a ruling that this House could not be made the forum for settling disputes. But I was told that this being a Government concern, they might be able to throw some light. In view of the Hon. Minister's statement, I feel that the same machinery that is meant for settling disputes in the private sector will also exist in the public sector. I, therefore, feel that this House cannot be made the forum for settling disputes. I rule the adjournment motion out of order.

Sri V. K. Kothandaraman rose.

MR. SPEAKER : The hon. Member has other remedies. He cannot question my ruling.

### III. GOVERNMENT BILLS.

#### (1) THE INDUSTRIAL EMPLOYMENT (STANDING ORDERS) (MADRAS AMENDMENT) BILL, 1960.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I beg leave to introduce the Industrial Employment (Standing Orders) (Madras Amendment) Bill, 1960.

MR. SPEAKER: The question is—

That leave be granted for the introduction of the Industrial Employment (Standing Orders) (Madras Amendment) Bill, 1960.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

#### (2) THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960)—*cont.*

MR. SPEAKER: Now we will proceed with the discussion on Land Reforms Bill. The first speaker to-day will be Sri P. S. Chinnadurai. Being the leader of a party, I give him thirty minutes.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதலாக நாட்டில் இருக்கின்ற மிகப் பெரும்பான்மையான மக்கள் தீவிரமான நிலச் சீர்திருத்தம் வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். மக்களுடைய இந்தக் கருத்தை மிகவும் தெளிவாக பிரதிபலிக்கின்ற முறையில் கடந்த 12 ஆண்டு காலமாக இந்தப் பிரச்னையை முதன்மையாக வைத்து இந்திய சோஷியலிஸ்டுகள் இயங்கி வருகிறார்கள். சுதந்திரம் அடைவதற்கு முன்னால் சோஷியலிஸ்டுகள் இந்தப் பிரச்னையை இரண்டாம் பட்சமாக வைத்திருந்தபோதிலும், சுதந்திரம் வந்தவுடன் இதை முதல் பிரச்னையாக வைத்து, இதை மையமாக வைத்து இந்தியப் பொருளாதார அமைப்பு ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அவ்வாறு காங்கிரஸின் உள்ளேயிருந்துகொண்டு ஒன்றும் செய்யமுடியாது என்று கருதி சோஷியலிஸ்டு வெளியே வந்து தனியாக இயக்கத்தை நடத்துவதற்கு முற்பட்டார்கள். ஆனால் அப்போது நிலச்சீர்திருத்தம் வேண்டும் என்று சோஷியலிஸ்டுகள் கூறிய வேளையில், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற காந்தியடிகளின் வாக்கை முதன்மையாக வைத்துக்கொண்டு அதன்படி இன்றுள்ள அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்று சோஷலிஸ்டுகள் சொன்ன நேரத்தில் இன்று ஆளுகின்ற கட்சியில் இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்று சொல்லுவது, அல்லது இவ்வாறு கூறப்படுகின்ற கோரிக்கையானது நியாயமற்றது என்று கூறுகின்ற முறையில் நடந்து கொண்டார்கள். நியாயமற்றது என்று கூறியது மாத்திரம் அல்ல—உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 18th April 1960.



சொன்னால், கதிர் அறுப்பவனுக்குச் சொந்தமா, துணி வெளுப்பவனுக்குச் சொந்தமா என்று அன்றைக்குக் கேலி செய்ய முனைந்தார்கள். ஆனால் காலம் வேகமாக மாறிக் கொண்டு போனது. அதன் விளைவாகத்தான் ஆவடியிலே காங்கிரஸ் கூடியபோது சோஷலிஸ தத்துவத்தைப் பிரதானமாக ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உண்மையிலேயே—மனதார—இந்தத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், ஆவடி காங்கிரஸ் முடிந்தவுடனேயே கூட இதற்கான சரியான ஏற்பாடுகளைச் செய்திருந்திருக்கலாம். தீவிரமான நிலச் சட்டம் வேண்டுமென்ற மக்களுடைய கருத்தின் அடிப்படையில்—மக்களுடைய உண்மையான எண்ணத்தைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில்—உழுகின்றவனுக்கு நிலத்தை உடைமையாக்குகிற முறையில்—சட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கலாம். சுதந்திரம் அடைந்த நாள் முதலாக இந்த ராஜ்யத்தைப் பொருத்தவரையில் காங்கிரஸ் கட்சி தான் ஆட்சி புரிந்து வருகின்றது. உண்மையிலேயே உழுபவனுக்கு நிலத்தை சொந்தமாக்குகின்ற எண்ணம் இருந்தால், நிச்சயமாக இவர்கள் உழுபவனுக்கு நிலத்தை உடமையாக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதில் கடந்த 12 ஆண்டுகளில் எதுவுமே தடையாக இருந்திருக்கவில்லை. ஆயினும் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர காங்கிரஸ் கட்சி முனையவில்லை. இப்போது இந்தச் சட்டத்தின் மூலமாக நிலவுடமைக்கு உச்ச வரம்பு கட்டியிருக்கிறோம், இதன் மூலமாக ஒரு பெரிய புரட்சியை நாங்கள் சாதித்திருக்கிறோம் என்று இந்தச் சர்க்கார் சொல்லி வருகிறார்கள். சர்க்கார் தரப்பிலே இங்கு பேசிய கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் "இது ஒரு வெள்ளைப் புரட்சி" என்று சொல்லிக் கொண்டார்கள்—அதாவது இடது சாரிகள் சொல்லுகின்ற சிகப்புப் புரட்சி அல்ல—வெள்ளைப் புரட்சி என்று தம்முடைய பேச்சிலே இதனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நிலச் சட்டம் கொண்டுவருவதன் நோக்கம்—நிலவுடமைக்கு உச்ச வரம்பு கொண்டு வருவதன் நோக்கம்—உண்மையிலேயே நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்குவதாக இருக்கவேண்டுமேயல்லாது, இருக்கின்ற நிலத்தை சட்டபூர்வமாகப் பிரித்துக்கொள்வது என்று விட்டு வைத்தால், இதற்குப் பெயர் நிலச் சீர்திருத்தச் சட்டம் என்று இருக்க முடியாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். நிலச்சீர்திருத்தச் சட்டம் என்று இப்போது கொண்டுவந்து நிறைவேற்றப் போகின்ற சட்டம் உண்மையில் உழுபவனுக்கு நிலத்தை உடமையாக்குவதல்ல. இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு ஒரு நோக்கம் வேண்டுமானால் அந்த நோக்கம் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக ஆக்கப்பட வேண்டும் என்று பல்வேறு கமிட்டிகள் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றதே அந்த நோக்கத்தை ஈடேற்றுவதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி இந்தச் சட்டம் அமையவில்லை. இதிலே எங்கே நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்கியிருக்கிறார்கள் ? ஏற்கெனவே இருக்கின்ற நிலத்தை 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று பிரித்துக்கொள்வதற்கு சட்டம் வகை செய்கிறதே தவிர—அந்த அளவில்தான் இது நிலவுடமையிலே ஒரு புதிய மாறுதலைக் கொண்டு வருகிறதே தவிர—வேறு ஒன்றுமில்லை. இதுவே ஒரு பெரிய மாறுதல் இல்லையா—புரட்சி இல்லையா—என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். அந்த அளவுக்கு இது புரட்சிதான்—அந்த அளவுக்கு இது ஒரு மாறுதல்தான். இது வரையில் நிலத்தை ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம், எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் சமுதாயத்தினிடமிருந்து ஆக்கிரமித்து வைத்துக்கொள்ளலாம், எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் அவருடைய உடமையாக வைத்துக்கொள்ளலாம் என்று இருந்ததே, அதை மாற்றி இப்போது 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவுக்குத்தான் வைத்துக்கொள்ளலாம் என்ற ஒரு நிலைமையை இந்தச் சட்டம் உண்டாக்குகிறது. இது கூட இனிமேல்தான். ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சட்டத்தில் சொல்லியிருக்கின்றதைப் பார்த்தால் இந்த ஏற்பாடு உடனடியாக அமுலுக்கு வராது. இந்த சர்க்கார் சில நாட்களுக்கு முன்னால் சொல்லிக்கொண்டு இருந்ததே, ஒருவர் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் கொண்டுவரப் போகிறோம், ஒருவர் வைத்துக்கொள்ளக்கூடிய நிலத்தின் அளவுக்கு வரம்பு கட்டப் போகிறோம் என்று சொன்னார்களே, சென்ற ஆண்டுகளில்

[Sri P. S. Chinnadurai] [18th April 1960

சொன்னார்களே, அதே போன்று நிலைமையைத் தான் இந்தச் சட்டம் உண்டாக்குகிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய நிலத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது என்று சட்டம் இயற்றியிருப்பதாகச் சொல்லிய போதிலும், உண்மையில் சட்டம் எப்போது பலன் தரும் என்று பார்த்தால், வரம்பு 20 ஆண்டுகளுக்குப் பிறகு தான் வரும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் பிரிவினை ஆகாத இந்து குடும்பத்திற்கு சட்டத்திலே 30 ஏக்கர் என்று நிர்ணயித்த போதிலும் வீட்டிலேயிருக்கின்ற குழந்தைக்கும், ஒரு வயதுக் குழந்தை உட்பட, பாகப்பிரிவினை செய்வதை இந்தச் சட்டம் தடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இந்தச் சட்டம் இதை எந்த அளவுக்குத் தடுக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறவேண்டும். அப்படி பிரிவினை செய்து கொள்ளுகின்றபோது, இந்துக் குடும்பங்களிலேயே பாகப்பிரிவினை செய்துகொள்ளப்படும்போது ஒவ்வொரு குழந்தைக்கும்கூட 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருக்கிறது. அவர்கள் மேஜர் ஆகி, அவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபடும் போது, அடுத்த தலைமுறையில்தான் இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதாக இருக்கும். முப்பது ஏக்கர் உச்ச வரம்பு என்று இந்தச் சட்டத்திலே இழையோடி இருக்கக்கூடிய தத்துவம் அமுலுக்கு வர சாதாரணமாக 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என்பது எனது கருத்தாகும். இந்த நிலைமையில் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, உழுபவனுக்கு நிலம் என்ற அந்தப் புரட்சியை எங்கே செய்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற தத்துவத்தை அமுல் செய்யாத இந்தச் சட்டம் எப்படி மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று சர்க்கார் கருதுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

உண்மையிலேயே 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருப்பதிலேயே பல்வேறு விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மலை, மலையைச் சார்ந்த இடங்களுக்கு இதிலே விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. பாக்கு தோப்புகளுக்கு இதிலே விதிவிலக்கு. இதர தோட்டங்களுக்கு, பழ தோட்டங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக் குறித்து கனம் அங்கத்தினர்கள் பலர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மிகவும் வளமான பூமிகளுக்கெல்லாம் விதிவிலக்கு அளித்துவிட்டு, சமூகத்திற்கு ஏராளமான செல்வத்தை ஒவ்வொரு ஆண்டிலேயும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற செழிப்பு பூமிகளை விதிவிலக்காக ஆக்கிவிட்டு, பிறகு இந்த நிலச் சட்டம் எந்த வகையிலே மக்களுக்கு நன்மை அளிக்கப் போகிறது என்று நான் இந்த சர்க்காரைக் கேட்டு அறிய விரும்புகிறேன். யாரை மனதிலே கொண்டு இந்த மாதிரி விதி விலக்குகளைக் கொடுத்திருந்த போதிலும் இது நியாயமானது ஆகாது என்று குறிப்பிடுகிறேன். காப்பித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், ஏலத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள், உருளைக்கிழங்கு விளையக்கூடிய இடங்கள், பாக்குத் தோப்புகள் என்று இப்படி மிகவும் முக்கியமான நபர்கள் கையில் இருக்கின்ற—முக்கியமான நிலச்சுவாந்தார்கள் கையில் இருக்கின்ற—வளமான பூமிகளுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டு நிலச்சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்வது எந்த வகையில் பொருத்தமாகும் என்று கேட்க விரும்புகிறேன். அது கூட எப்படிக் கொண்டு வந்திருக்கிறார்கள்? பிரசுரம் ஆன தேதியிலிருந்து இனிமேல்தான் இது அமுலாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு வகையிலே இந்தச் சட்டம் கொஞ்சமாவது முற்போக்காக இருக்கிறது என்று சொல்ல வேண்டுமானால் இதனை முந்தைய தேதியிலிருந்து அமுலாவதாக அறிவித்திருக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததாகச் சொல்லியிருந்தால்கூட நன்றாக இருக்கும். ஏனென்றால் நிலச் சீர்திருத்தச் சட்டம் வரப்போகிறது என்பதற்காக சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஒவ்வொருவரும் அதிகப்படியாக உள்ள நிலத்தை பிரித்துக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள். அப்படிச் நிலச்சுவாந்தார்கள் இருந்துவந்து, அவர்கள் பல வகையாக யோசனை செய்து அதைத் தங்களுக்குள்ளேயே பிரித்துக்கொள்வதற்கும் பினாமி ட்ரான்ஸாக்ஷன்ஸ் முறையில் போலித்



18th April 1960] [Sri P. S. Chinnadurai]

தனமான கிரயங்கள் செய்துகொள்வதற்கும் கடந்த காலத்தில் நிறைய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட போலிக் கிரயங்களை இந்த மசோதா தடுக்கவில்லை. போலி பாகப்பிரிவினையை இந்த மசோதா தடுக்கவில்லை. அவைகளையெல்லாம் அனுமதித்துவிட்டு இப்போது இந்த முறையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. 'எல்லாவற்றிலும் நாங்கள் தான் முன்னால் நிற்கிறோம். எல்லா ராஜ்ய சர்க்கார்களைக் காட்டிலும் இந்த ராஜ்ய சர்க்கார்தான் மிகவும் முற்போக்காக இருக்கிறது' என்றெல்லாம் சொல்லிக்கொள்ளும் இந்த ராஜ்ய காங்கிரஸ் சர்க்கார் மற்ற ராஜ்யங்களிலெல்லாம் நில உடைமை உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகுதான் இந்த ராஜ்யத்தில் நில உடைமை உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவர முன் வந்திருக்கிறார்கள். அப்படி முன் வரும்போது, மற்ற ராஜ்யங்களின் சட்டங்களிலுள்ள தவறுகளையெல்லாம் இந்த ராஜ்ய மசோதாவில் புகுத்தாதபடி இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்று பார்த்தால், இவர்கள் அப்படிச் செய்யவில்லை என்று தெரிகிறது. மற்ற ராஜ்யங்களின் சட்டங்களிலுள்ள தவறுகளை இந்த மசோதாவில் புகுத்தாமலிருப்பதற்கு பதிலாக அத் தவறுகளுடன் அவைகளில் இல்லாத குறைகளையும் இந்த மசோதாவில் சேர்த்திருக்கிறார்கள். உதாரணமாக, பஞ்சாப் ராஜ்யச் சட்டத்தில் 1947-ம் ஆண்டிற்குப் பிற்பாடு ஏற்பட்ட போலிக் கிரயங்கள், போலி பாகப் பிரிவினைகள் முதலானவை அங்கீகரிக்கப்பட மாட்டாது என்ற ஷரத்து இருக்கிறது. ஆனால், நமது ராஜ்யத்தில் கொண்டு வரப்படும் இந்த மசோதாவில், 1947-ம் ஆண்டிற்குப் பிற்பாடு ஏற்பட்ட போலிக் கிரயங்களையும் போலி பாகப்பிரிவினைகளையும் செல்லுபடியாகாதபடி செய்யக்கூடிய ஷரத்து எதுவும் இல்லை. இது எதனைக் காட்டுகிறது? இந்த ராஜ்யத்தில் ஆட்சி நடத்தும் சர்க்கார் பஞ்சாப் ராஜ்யத்தில் ஆட்சி நடத்தும் சர்க்காரைக் காட்டிலும் பிற்போக்கான மனப்பான்மையோடு நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைத்தான் இந்த மசோதா தெளிவாகக் காட்டுகிறது என்று கருதுகிறேன். இன்னும், இந்த ராஜ்ய சர்க்கார் நில உடமை உச்ச வரம்பாக 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரை நிர்ணயித்திருக்கிறார்கள்; அதிலேயாவது, கொஞ்சம் முற்போக்கான மனப்பான்மையை இந்த சர்க்கார் காட்டியிருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. சராசரி விளைச்சல் கேரளாவில் நமது ராஜ்யத்தைவிடக் குறைவு. நமது ராஜ்யத்தில் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 2,100 பவுண்டு. கேரளாவில் அது ஏக்கருக்கு 1,400 பவுண்டுதான். நமது ராஜ்ய சராசரி விளைச்சலை விடக் குறைவான சராசரி விளைச்சலையுடைய கேரள ராஜ்யத்தில் நில உடமை உச்ச வரம்பாக 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரை நிர்ணயித்திருக்கிறார்கள். அப்படியானால் நமது ராஜ்யத்தில் அதற்கு எத்தனை ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். கேரள ராஜ்யத்தில் அந்தச் சட்டத்தை கடைசியில் எல்லாக் கட்சியினரும் சேர்ந்து ஏகமனதாகத்தான் சட்டசபையில் நிறைவேற்றினார்கள். (குறுக்கீடு). அங்கே துவக்கத்தில் எப்படிப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்ட போதிலும், துவக்கத்தில் கருத்து வேற்றுமைகள் இருந்தபோதிலும், கடைசியில் மசோதாவானது எதிர்ப்பு இல்லாத நிலையில்தான் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அப்படி இருக்க, கேரள ராஜ்யத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நில உடமை உச்ச வரம்பைப் போல் இரண்டு மடங்கை இந்த ராஜ்யத்தில் நில உடமை உச்ச வரம்பாக நிர்ணயிக்க என்ன நியாயம் இருக்கிறது, இந்த மசோதா அந்தச் சட்டத்தைக் காட்டிலும் எந்த வகையில் முற்போக்கானதாக இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். (சில கனம் அங்கத்தினர்கள்: மற்ற ராஜ்யங்களில் எப்படி இருக்கிறது?) மற்ற ராஜ்யங்களைப் பற்றிக் கேட்கிறார்கள். மற்ற ராஜ்யங்களில் எப்படியும் இருக்கட்டும். கேரளா நமது ராஜ்யத்திற்கு அருகாமையில் இருக்கும் ராஜ்யம். மேலும் நமது ராஜ்யத்தில் இப்போது ஒரு பகுதியில் இருப்பவர்கள் முன்பு கேரள ராஜ்யத்தில் இருந்திருக்கிறார்கள். எனவே அந்த ராஜ்யத்தைப் பற்றித்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். எனவே கேரள ராஜ்யத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும், நமது ராஜ்யத்தில் நில உடமை உச்ச வரம்பாக 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரைத்தான் நிர்ணயித்திருக்க முடியும். இந்தக் கருத்துக்களையெல்லாம்கூட, இந்த மசோதாவின் நோக்கத்தை அடிப்படையாக வைத்துப் பேசும்போதுதான்

சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், என் சொந்தக் கருத்தைக் கேட்டால் நான் சொல்வேன்: நிலம் என்பது சமுதாயத்திற்குச் சொந்தமானது. நிலம் என்றும் தனி மனிதனுக்குச் சொந்தமாக இருக்க முடியாது. நிலம் சகல வளங்களுக்கும் ஆதாரமானது. சகல வளங்களுக்கும் ஆதாரமாக இருக்கும் நிலம் எல்லோருக்கும் பொதுவானது. நிலத்தில் ஒரு காலத்தில் யார் உழைக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அந்தக் காலத்தில் அது சொந்தம். இப்போது ஒரு நிலத்தில் உழைப்பவரின் மகன் பெரியவனான பிறகு அவன் அந்த நிலத்தில் உழைக்க விருப்பமில்லாதவனாக இருப்பானேயானால் அந்த மகனுக்கு அந்த நிலத்தை வைத்துக்கொள்ள உரிமை இருக்க முடியாது. நிலம் சமுதாயத்திற்குச் சொந்தமானது. இதனைத்தான் இன்று வினோபாஜீ சொல்லி வருகிறார். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள நிலங்களும் அந்த கிராமத்திலுள்ள அத்தனை மக்களுக்கும் சொந்தமானவை. நிலத்தில் யார் யார் எப்போது எப்போது பாடுபடுகிறார்களோ அவரவர்கள்தான் அந்த அந்தக் காலத்தில் நிலத்தில் உரிமை உள்ளவர்களாக இருக்கலாமே தவிர, ஒருவருடைய தனி உரிமையாக அதைக் கொண்டாடுவது சமுதாயத்திற்குத் தீங்கிழைக்கும் என்பதுதான் அடிப்படையான நிலத் தத்துவம். இந்த மசோதா அந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு வரவில்லை. எனவே நான் அந்தத் தத்துவத்தை இங்கே வலியுறுத்த விரும்பவில்லை. இந்த மசோதவின் ஷரத்துக்களை மட்டும் பார்க்கும்போது, நில உடமை உச்ச வரம்பிற்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பது நியாயமானது அல்ல, முற்போக்கானதல்ல என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

மேலும், கோவில், மடாலயங்கள் ஆகியவைகளைச் சேர்ந்த நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில், நில உடமை உச்ச வரம்பு 200 ஏக்கர் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை தனித்தனி டிரஸ்டுகள் வைத்துக்கொண்டால் என்ன ஆகும் என்று பார்ப்போம். தஞ்சாவூர் கோவில்களில் தனித் தனியான சின்னச் சின்னக் கோவில்கள் கூட 200 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்துக்கொள்ள முடியும் என்று சொல்லக் கூடியவாறுதான் இந்த மசோதா அமைந்திருக்கிறது. இதையெல்லாம் பார்த்தால், கோவில்களுக்கும் மடாலயங்களுக்கும் சொந்தமான பல்லாயிரக் கணக்கான நிலங்கள், அவைகளை உழும் குடியானவர்களுக்குச் சொந்தமாக்கப்படாமல் மீண்டும் அந்தக் கோவில்கள் அல்லது மடாலயங்களின் தர்மகர்த்தாக்கள் வசம்தான் விடப்படும் என்று தெரிகிறது. அவர்களிடம் 200 ஏக்கர்களுக்கு மேல் இருக்கக்கூடிய உபரி நிலங்களை அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளும்போது அந்த நிலங்கள் குடியானவர்களுக்குச் சொந்தமாக்கப்படுகின்றனவா அல்லது அரசாங்கத்திற்காவது அவைகளில் முழு உரிமை அளிக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. அவைகளில் உழும் குடியானவர்களுக்கு நியாய வாரச் சட்டப்படி என்ன குத்தகை கொடுக்கப்பட வேண்டுமோ அந்தக் குத்தகையை அப்படியே கொடுக்க இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. நியாய வாரச் சட்டப்படி என்ன கிடைக்காதோ அதைக் கூடக் கொடுக்க இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, மடாலயங்கள், கட்டிடங்கள் உபரி நிலத்தில் இருக்குமானால், அதற்கு 4 சதவிகித வட்டியும் கொடுக்க இங்கே வகைசெய்யப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் இது முற்போக்கான மசோதாவென்று சொல்லப்படுவதற்குத் தகுதியானதல்ல என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக, மடாலயங்களுக்கென்றும் கோவில்களுக்கென்றும் தனித்தனி சொத்துக்கள் இருக்க வேண்டியது அவசியமேயில்லை, அந்த நிலங்கள் முற்றிலும் சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதுதான் என் கருத்து. கோவில்களுக்குச் செல்லும் பக்தர்களும் மடாலயங்கள் பேரில் பக்தி செலுத்தும் பக்தர்களும், அவைகளை நடத்துவதெற்கென்று தங்கள் வருமானத்திலிருந்து கொடுக்கும் பணத்தைக்கொண்டு அவைகளை நடத்தலாமே தவிர, அவைகளுக்குத் தனியாகச் சொத்து எழுதிவைக்க வேண்டியது அவசியமில்லை. சமதர்ம சமுதாயத்தை அமைக்க விரும்பும் நாம் அவைகளுக்கு



அப்படிச் சொத்து எழுதிவைக்க வேண்டியது அவசியமில்லை, அவைகளுக்கு எழுதிவைக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு இவ்வாறு பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது அவசியமில்லை என்று நான் இங்கே கூற விரும்புகிறேன். முதலாளித்துவ சமுதாய அமைப்பில் என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டனவோ அவைகளை சமதர்ம சமுதாய அமைப்பில் நீடித்து வைத்துக் கொண்டிருக்க முடியாது. யாருக்குக் கோவில்களும் மடாலயங்களும் வேண்டுமோ, அவர்கள் அவ்வப்போது தங்கள் உழைப்பின் மூலம் தங்களுக்கு வரும் வருமானத்தில் ஒரு பகுதியை அவைகளுக்குக் கொடுத்து அவைகளைப் பாதுகாத்துக்கொள்வார்கள். மற்றப்படி, சமுதாயத்திற்கு உணவு கொடுக்கும் நிலம் சமுதாயத்தின் சொத்து. எனவே மடாலயங்களுக்கும் கோவில்களுக்கும் இவ்வாறு சொத்து எழுதிவைப்பது அடிப்படையான சமதர்மத் தத்துவங்களுக்கு முரண்பட்ட செயல் என்று சொல்ல விரும்புகிறேன்.

நெடுங்காலமாகக் குத்தகைதாரர்களாக இருந்து வருபவர்களின் உரிமைகளைப் பொறுத்தவரையிலும்கூட, இந்த மசோதா முற்போக்கானதாக இல்லை. குத்தகைதாரனாக இருப்பவன் குத்தகைதாரனாகவே சாவதற்குத்தான் இந்த மசோதா வழிவகை செய்கிறது. அவர் நில உடமையாளனாக மாறுவதற்கு இது வகை செய்யவில்லை. குத்தகைதாரர்கள் நில உடமைக்காரர்களாக ஆக வேண்டுமானால், அவர்கள் நிலத்தை விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். நிலங்களின் விலையோ இன்று எப்படி இருக்கிறது ? " நிலச் சட்டம் வருகிறது, வருகிறது " என்று கனம் அமைச்சர்கள் தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் வெளியில் பறைசாற்றி வந்திருக்கிறார்கள். நில உடமை உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராகச் சட்டத்தில் நிர்ணயிக்கப்படும் என்பதை கனம் அமைச்சர்கள் பலவிடங்களில் சூசகமாகச் சொல்லிவந்திருக்கிறார்கள். இதன் விளைவு என்ன ? சிறு நிலச்சுவாந்தார்களும் இதுவரை நிலமில்லாதவர்களாக இருந்தவர்களும் ஓடி ஓடி பெரிய நிலச்சுவாந்தார்களிடமிருந்து நிலங்களை விலைக்கு வாங்கி வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே தீவிரமான நிலச் சட்டம் வரப்போகிறது என்றால் நிலத்தின் விலை குறைந்திருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் கடந்த ஓராண்டு காலமாக நில விலை உயர்ந்திருக்கிறது. ஒரு ஏக்கர் சாதாரணமாக என்ன விலைக்குக் கிடைக்கக்கூடுமோ அதைவிடக் கூடுதலான விலை கொடுத்துத்தான் குடியானவர்கள் நிலங்களை வாங்கி வந்திருக்கிறார்கள். 10-00 a.m. சட்டம் வரப்போகிறதென்று சொல்லி நிலச் சொந்தக்காரர்கள் அத்தனை பேரும் விற்று விட முற்படுகிறார்கள். அப்படி விற்கும்போது யாருக்கு விற்பது என்பதிலே ஒரு போட்டி. இம்மாதிரியான ஒரு போட்டியின் விளைவாக நிலம் இல்லாதவர்கள் அல்லது சிறு நிலச் சொந்தக்காரர்கள் பெரிய நிலச் சொந்தக்காரர்களிடம் ஓடி ஓடி நிலத்தை வாங்கி இருக்கிறார்கள். அதற்குக் காரணம் கூட காங்கிரஸ் கட்சியினர்தான். காங்கிரஸ் கட்சியினர் சட்டத்தின் மூலமாக மாத்திரமல்ல: சட்டம் வருவதற்கு முன்பே கூட நிலச் சொந்தக்காரர்களுக்கு உதவி இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். நான் குற்றம் சாட்டுவதால் அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வரலாம். கோபத்தினால் பலன் இல்லை. உண்மையில் நீங்கள் பெரும் தீங்கிழைத்திருக்கிறீர்கள். கோபத்தைச் சில சமயங்களில் வெளியிலே காட்டுவார்கள் ; சில சமயங்களில் மனதிலே வைத்திருந்து வேறு வகையிலே காட்டுவார்கள்.

சமூக நீதி வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்குமானால் நஷ்ட ஈடு என்ற ஷரத்துக்கு இங்கே இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துச் சட்டத்தை இங்கே சமர்ப்பித்திருக்க மாட்டார்கள். நஷ்ட ஈட்டைப் பொறுத்தவரையில் 9 மடங்கு முதல் 12 மடங்கு வரை என்றிருக்கிறது. நியாயவாரச் சட்டத்தின் மூலம் எவ்வளவு வருமானம் கிடைக்குமோ அந்த அடிப்படையிலே நிர்ணயம் பண்ணி நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன் இந்தச் சர்க்காரை—இந்த நிலம் யாருடையது யாருக்குச் சொந்தமானது ? எப்போது சொந்தமானது ? அதற்கு என்ன மூல சாசனம் ? பாரதிதாசன் அவர்கள் இதைத்தான் மிகத் தெளிவாக அவ

[Sri P. S. Chinnadurai] [18th April 1960

ருடைய பாட்டிலே குறிப்பிட்டார்கள். அதற்கான மூல சாசனம் எங்கே
இருக்கிறது ? இந்த நிலங்களெல்லாம் இந்த சமுதாயத்திற்குத்தான்
சொந்தம். உங்களுக்கோ, எனக்கோ, மற்ற எவருக்குமோ சொந்தமில்லை.
இந்தக் கால கட்டத்தில் வாழும் நமக்கு இப்போது சொந்தமானது.
வர இருக்கும் தலை முறையினருக்கு அவ்வப்போது சொந்தமானது.
நிலத்திலே எந்த அளவுக்கு உரிமை கொண்டாடலாம் என்ருல் பாடுபடும்
அளவுக்குத்தான் உரிமை கொண்டாடலாம் என்று கூற விரும்புகிறேன்.
ஒவ்வொருவரும் பாடுபடுவதற்கு எவ்வளவு நிலம் தேவையோ அதற்கு
மேல் வைத்துக்கொள்ள யாருக்கும் பாத்தியதை கிடையாது. அந்தப்
பாத்தியதைகூட பரம்பரை பரம்பரையாக வர முடியாது. அந்தந்தக் கால
கட்டத்தில் யார் யார் பாடுபடுகிருர்களோ அவர்களுக்குத்தான் சொந்தமாக
இருக்க முடியும். ஆகவே, நஷ்ட ஈடு யாருக்கு, என் கொடுக்க வேண்டும் ?
எதற்காக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை.
ஒன்பது மடங்கிலிருந்து 12 மடங்கு வரை நஷ்ட ஈடு கொடுக்க வேண்
மென்று எங்கே இருந்து கண்டுபிடித்தார்கள்? பன்னிரண்டு மடங்கு
என்பது என்ன நிர்ணயம் ? அது என் 50 மடங்காக இருக்கக் கூடாது
அது என் ஒன்று அல்லது இரண்டு மடங்காக இருக்கக் கூடாது ?
இதெல்லாம் அமைச்சருடைய கற்பனையிலே தோன்றிய ஒன்று. ஏதோ
அவர்கள் மனதிலே பட்டது ; இந்த அளவுக்கு நஷ்ட ஈட்டை நிர்ணயித்
தார்கள். அதுதான் சரியான நஷ்ட ஈடு, தேவையான நஷ்ட ஈடு என்று
யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. நிலச்சுவான்தார்களின் பிரதிநிதித்
துவத்தையுடைய கட்சிக்காரர்கள் நஷ்ட ஈடு போதாது என்று வெளியில்
சொல்கிருர்கள். ஐந்து சதவிகிதம் வட்டி கொடுக்கிருர்கள் என்று சொல்
லப்படுகிறது. பணத்தை 20 தவணைகளில் கொடுக்க வேண்டுமென்ற அந்த
அளவுகூடப் போதாது என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிருர்கள்.
அவர்களைப் பொறுத்தவரை இது சரியான நஷ்ட ஈடு அல்ல என்று சொல்
கிருர்கள்: என்னைப் பொறுத்தவரை இந்த நஷ்ட ஈடு தேவையல்ல என்று
விரும்புகிறேன். நஷ்டஈடு கொடுக்க அவசியமே கிடையாது.
இதைச் சுட்டிக் காட்டும் அமைச்சர் அவர்கள், ஒரு பக்கத்தில் நஷ்ட ஈடு
போதாது என்று சொல்கிருர்கள் ; இன்னொரு பக்கத்தில் நஷ்ட ஈடே
தேவையில்லையென்று சொல்கிருர்கள். ஆகவே நாங்கள் இரண்டுக்கும்
மத்தியில் மையமான பாதையைக் கடைப்பிடித்து இரண்டு பேருக்கும்
திருப்தி அளிக்கும் வகையில் செய்திருக்கிருேம் என்று சொல்லித் தப்
பித்துக் கொள்ள முடியாது. சமுதாயத்தில் ஒரு புதிய, புரட்சிகரமான
அம்சத்தைத் தோற்றுவிக்க விரும்புகிருேம். இப்போது காணப்படுகின்ற
சுரண்டல் முறையில்லாமல் வாழ்வதற்கு நல்ல வழி முறைகளை வகுத்துக்
கொடுப்பதற்கு வழி செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன்
இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படை நீதியை
நாம் நன்கு உணர வேண்டும். சுரண்டல் தத்துவத்திற்கே இடமில்லாத
ஒரு முறையை நாம் வகுக்க வேண்டுமென்ருல், இந்த நஷ்ட ஈடு
கொடுக்கும் ஷரத்தை முற்றிலும் எடுத்துவிட வேண்டுமென்றுதான் நான்
குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இதுபோல் இன்னும் பல விஷயங்களை
நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் இங்கே
கொண்டு வரப்படுகிற நேரத்திலே வெளியிலே பெரிய ஒரு கூப்பாடு இருந்து
கொண்டிருக்கிறது. " இந்தச் சட்டம் வந்தால் கொஞ்ச நாளைக்குள் நிலங்
கள் எல்லாம் தனித் தனியாகப் பிரிவினை செய்யப்பட்டு விடும். இன்றைக்கு
இருக்கும் குடியானவர்களுக்குப் பிறகு அவர்களுடைய மக்களுக்கு நிலத்
தைப் பிரித்து கொடுக்கும்போது நிலங்கள் மேலும் சிறு சிறு துண்டு
களாகப் போய்விடும். பின்னர் அவைகளை எல்லாம் கட்டாயமாகக்
கூட்டுறவு முறையில் ஒன்று சேர்க்கும் நிலைமை ஏற்படும். அப்படி ஏற்படும்
போது சமுதாயத்திற்குப் பெரிய தீங்கு ஏற்படும். அந்தத் தீங்கைத்
தவிர்க்க, எல்லோரும் ஒன்று கூடி இப்போதே இந்த நில உடமைக்கு
உச்ச வரம்பு கட்டும் சட்டத்தை எதிர்க்க வேண்டும் " என்று வெளியிலே
பேசப்படுகிறது. அதைப் பார்த்து " நாம் ரொம்பத் தீவிரமான சட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிருேம் " என்று அமைச்சர் வேண்டுமாளுல் திருப்தி
பட்டுக்கொள்ளலாம். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் இந்த
அளவிலே நீங்கள் சொல்லும் நோக்கம் கூட எப்போது அமுலுக்கு வரும் ?



18th April 1960] [Sri P. S. Chinnadurai]

அடுத்த தலைமுறைக்குத்தான் அமுலுக்கு வரும். சுதந்திரக் கட்சி
சொல்லக்கூடிய முறை வருவதற்கு இன்னும் மூன்று, நான்கு தலை
முறைகள் ஆகும். அது வரையில் காலம் காத்திருக்காது. கால வளர்ச்சி
யில் மக்களுடைய எண்ணங்கள் புதிது புதிதாக மாறி வருகின்றன.
அதற்குள்ளாக பல மாறுதல்கள் ஏற்படப் போகின்றன. இந்த மாதிரிப்
பேசக்கூடிய சுதந்திரக் கட்சியினருக்கு நீங்கள் பதில் அளிக்க வேண்டு
மென்பது என் கருத்து. காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவேகூட பல பேர்கள்
கூட்டுறவு முறை விவசாயத்திலே புகுந்து விடுமோ, அம்மாதிரி ஏற்பட்டு
விட்டால் பெரிய தகராறுகள் ஏற்பட்டு விடுமோ என்ற கருத்துப்பட மிகவும்
சங்கடப்பட்டு இந்தச் சபையிலே பேசியதைக் கேட்டேன். அதற்கெல்லாம்
பதில் சொல்ல நேரமில்லையென்ருலும்கூட ஒன்று மாத்திரம் சொல்ல
விரும்புகிறேன்.

கூட்டுறவு முறையின் மூலந்தான் விவசாயத் தொழிலை நடத்த வேண்டு
மென்பது இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கும் நிலம் இல்லாத
மக்களுடைய விருப்பம். இப்போதுள்ள கோரிக்கையும் அதுதான். நிலம்
இல்லாத மக்கள்தான் சுமார் 40 சதவிகிதம் இன்று இருக்கிருர்கள்.
அவர்களுடைய விருப்பத்தை நாம் ஒன்றும் புறக்கணித்துவிட முடியாது
என்று சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு முறையின் மூலமாக விவ
சாயத்தை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படைத் தாத்
பரியங்கள் இரண்டு. ஒன்று, நாட்டில் உற்பத்தி பெருக வேண்டும்.
இரண்டாவது, சுரண்டல் முறை ஒழிய வேண்டும். இந்த நிலம் சம்பந்தப்
பட்ட வரையில் முதலில் சுரண்டல் முறை ஒழிக்கப்பட்டு விட்டால் மற்றத்
தொழில்களிலும் சுரண்டல் ஒழிக்கப்பட்டுவிடும் என்று உறுதியாகச் சொல்ல
லாம். இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள், கிட்டத்தட்ட 70 சத
விகிதம் மக்கள் கிராம மக்கள். அங்கே சமத்துவம் வந்துவிட்டால் மற்றத்
துறைகளிலே சுரண்டலை ஒழித்துவிடலாம். அப்போது நிச்சயமாக மற்றத்
துறைகளிலே சுரண்டல் முறையை அனுமதிக்க மாட்டார்கள். நிலம்
சம்பந்தப்பட்ட வரையில் தனி உடைமை கிடையாது என்று கொண்டுவந்து
விட்டால் பல்வேறு தொழில்களிலும் தனி உடைமையை ஒழித்து விடலாம்.
கிராமத்தில் சிலர் அஞ்சுகிருர்கள். கிராம இந்தியா என்றும், நகர
இந்தியா என்றும் தனித் தனியாகப் பிரிந்து போகும் சீரழிவான நிலைமை
ஏற்பட்டு கிராமப் பொருளாதாரம் சீர்கேடுறவும், நகரத்திலே பொருளா
தாரம் குவியலாகவும் வழி ஏற்படும் என்று அஞ்சுகிருர்கள். கிராமங்
களில் மாத்திரம் அல்லாமல் இதர பகுதிகளிலும் சுரண்டலையும், தனி
உடமையையும் ஒழிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.
கூட்டுறவு முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்தால் கிராமப்
பொருளாதாரத்தைப்பற்றிக் கிராம மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியம்
இருக்காது என்று மறுபடியும் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின்
நோக்கம் என்ன என்று பேசப்பட்டு வருகிறதோ, பறை சாற்றப்பட்டு வரு
கிறதோ அந்த நோக்கம் உண்மையிலேயே ஈடேற்றப்படவில்லையென்பதை
நான் குறிப்பிட்டுச்சொல்லவிரும்புகிறேன். உண்மையிலேயே பார்க்கப்போனல்
இந்தச் சட்டத்தை நேரடியாக எடுத்து, அப்படியே ஒவ்வொரு ஷரத்தையும்
விவாதித்து, இந்தச் சட்டத்தின் நிலைமை என்னவாக இருக்கிறது, இது
எந்த அளவுக்கு மக்களுடைய வாழ்வில் புதிய விளைவுகளை உண்டாக்கும்
என்று பார்த்தால் ஏழை மக்களைப் பொறுத்த வரையில் ஏமாற்றம்
அளிப்பதாகவும், பணக்காரர்களைப் பொறுத்த வரையில், கிராம அளவிலே
இருக்கிறவர்களைப் பொறுத்த வரையில், அவர்களை ஒன்றும் பாதிக்க முடி
யாத நிலைமையிலும் இருக்கிறது. முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் வாங்க
முடியும் என்று பார்க்கும் அளவிலே மற்றவர் ஏதோ ஒரு வகையில்
பிரித்து வைத்துக்கொள்வதைத் தடுக்கவில்லை. வருகின்ற ஒரு தலை
முறைக்காவது இதனுல் ஒரு பாதகமும் ஏற்பட்டுவிடாது என்ற நிலைமை
தான் இருக்கிறது. இந்தச் சர்க்கார் தீவிரமான, உறுதியான கொள்கையைக்
கடைப்பிடித்து, நேரான மார்க்கத்தில் போவதற்குப் பதிலாக எப்படியாவது
ஆட்சியில் இருந்துகொண்டிருக்க வேண்டும் என்பதற்காக, ஒரு பக்கத்தில்
பணக்காரர்களைத் திருப்தி பண்ணி, மற்ருெரு பக்கத்தில் ஏழைகளுக்கு
ஆசை வார்த்தை காட்டி, எப்படியாவது அடுத்த தேர்தலை முடித்துவிடலாம்

என்றுதான் நினைக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். நிலப் பிரிவினையைப் பொறுத்த வரையில் ஒன்றுமே சொல்லப்படவில்லை. உபரி நிலம் எப்படி விநியோகம் செய்யப்படும் என்று சொல்லப்படாத நிலையில், உபரி நிலம் கிடைக்கும், கிடைக்கும் என்று நிலமில்லாத ஏழை உழவர்கள் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் வரும், இவ்வளவு ஏக்கர் தங்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் அளவுக்குக் கட்சி முறையில் அவர்களுக்கு ஆசை வார்த்தை காட்டி வோட்டுக்களைப் பெறலாம் என்ற எண்ணத்திலே இந்த மசோதாவில் ஒன்றும் திட்டவட்டமாகச் சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது என்றுதான் நான் குற்றம் சாட்டுகிறேன். இல்லாவிட்டால், உபரி நிலத்தை எப்படிப் பிரிப்பது என்று கூறப்பட்டிருக்கும். நிலமில்லாத ஏழை எளிய விவசாய மக்களை ஏமாற்றுவதற்காகவே வேண்டுமென்றே இது விடப்பட்டிருக்கிறது என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். ஆகவே, இவ்வாறு ஏமாற்றுகிற முறையில் சட்டத்தைக் கொண்டுவருவது முறையல்ல. இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டியில் சரியானபடி பரிசீலனை செய்து, சமுதாய நியாயம் வழங்கக்கூடிய முறையில் தீவிரமான மாறுதலைச் செய்வதற்கு, எந்த பிற்போக்காளர்களுடைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல், முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன்.

*SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் நிலச் சீர்திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலச் சட்டம் சென்ற எட்டு, பத்து ஆண்டுகளாக இந்த நாட்டிலே இருக்கும் நூற்றுக்கு 80 சத விகிதம் உள்ள உழவர் பெருமக்கள் தங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பும் வரப் பிரசாதமும் வரும் என்று எதிர்பார்த்த சட்டம். அதே நேரத்தில் இந்த நாட்டினுடைய உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு உணர்ச்சியையும் ஏற்படுத்தக்கூடிய ஒரு சட்டத்தை நமது சர்க்கார் ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதை ஒவ்வொரு நேரமும் உழவர் பெருமக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். எதிர்பார்த்த அளவுக்கு ஏமாற்றமடையும் நிலையில் இந்த சட்டம் இருக்கிறது. சென்ற காலத்தில்கூட, 1950-ம் ஆண்டை நினைவு படுத்துவோமானால், எங்கு பார்த்தாலும் பஞ்சம் ஏற்பட்டு, உண்ண உணவு இல்லாமல் பல பட்டினிகளை தேச மக்கள் சமாளிக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருந்தபோது, இந்த உணவு உற்பத்தியை நாட்டில் எப்படி உருவாக்க முடியும் என்பதை ஆலோசனை செய்த நமது சர்க்கார் இந்த நாட்டில் உழவனுக்கு உரிமை அளிப்பது ஒன்றுதான் நாட்டினுடைய உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு நல்ல மார்க்கமாக இருக்கும் என்பதை உணர்ந்து தஞ்சை ஜில்லா சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவந்தார்கள். சட்டம் வந்த மறு வருஷமே உணவுப் பஞ்சம் நீங்கி பட்டினி நிலைமையை மாற்றியிருக்கிறார்கள். உழவர்கள் பசியைப் போக்கியிருக்கிறோம் ; ஆறு அவுன்ஸ் அரிசி நிலைமையிலிருந்து விடுதலையடைந்திருக்கிறோம். இந்த நிலைமையை பத்து ஆண்டுகளாகக் கண்கூடாகக் கண்ட நாம், உணவு உற்பத்தி பெருக உழவர்களுக்கு நிலம் அளிப்பது தான் நியாயம். மேலும் உணவு உற்பத்தியை அதிகம் பெருக்குவதற்கும் உணவுப் பற்றாக்குறையை நாட்டிலிருந்து அகற்றுவதற்கும், அதே நேரத்தில் உழவர் பெருமக்கள் என்று சொல்லக்கூடிய 70 சதவிகிதம் உழவர்களுக்கு நிலம் கிடைக்கவும் இடை தரகர் ஒழியவும் உழவர்கள் பொருளாதாரம் வலுவடைவதற்கும் நாம் ஒரு சட்டத்தை இன்று கொண்டு வருகிறோம் என்று அமைச்சர் குறிப்பில் அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் சட்டமிருப்பது உழவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றவும், நில முதலாளிகளை பாதுகாக்கும் முறையில் இருக்கிறது. அதற்கடுத்தாற்போல், உச்ச வரம்பு நிலச்சுவாந்தார்களுக்கு முப்பது ஏக்கர் என்று வைத்திருப்பது, பயங்கரமானது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதை 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக குறைப்பதுதான் நியாயமானதாகும். உச்ச வரம்பு வைத்திருக்கக்கூடியதற்கு முன்னால், முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்பதை அறிந்த நிலச்சுவாந்தார்கள், தஞ்சையில் ஒரே நாளில் ஒரு லட்ச ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கியிருக்கிறார் ஒரு நிலச்





சுவாந்தார் என்று பார்க்கும், அளவிலே அதுமாதிரி ஒரு நாளில் இன்னும் எத்தனைபேர் எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டாம்பு வாங்கியிருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிலச்சுவாந்தாரும் எவ்வளவு ஸ்டாம்புகளை எப்படி எப்படி வாங்கியிருக்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும். என்ன என்ன முறையில் நிலத்தை பங்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, பிரிவினை, கிரயம், விக்கிரயம் என்ற முறையில் பங்கீடுகள் செய்யும்போது, அத்தனை நிலங்களும் ஏழை எளியவர்கள் பாமரர்களாகிய உழவர்களிடம் விற்கப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்யும்போது, உழவர்கள் எவ்வித பயனும் அதில் அடையவில்லை. ஆனால் வேண்டியவர்கள், நண்பர்கள், டிரைவர்கள், கடைக்காரர்கள் இதுபோன்று தங்களுக்கு வேண்டியவர்களாக, என்றென்றும் நிலச்சுவாந்தார்கள் அநீதிக்கு உடந்தையாயிருந்தவர்கள், உழவர்களை எதிர்த்து நிலச்சுவாந்தார்களுக்கு உதவியாக அவர்களை நசுக்குவதற்கு தங்களுடைய கைக் கருவிகளாக இருந்தவர்களுக்கு அந்த சாசனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக நான் சொல்ல விரும்புகிறேன். மேலும், விவசாயி யார் என்பதை இச் சட்டத்தில் விளக்கப்படாதது வருந்தத்தக்கது. மேலும் இது மாதிரி பல சாசனங்கள் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசினுடைய கணக்குகளைப் பார்ப்போமானால் எண்ணற்ற சாசனங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது தெரியும். இது மாதிரியான அக்ரமக்காரர்களுக்கு சலுகையளிப்பதுதான் இந்த சட்டத்தின் நோக்கம்.

இன்று முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நாம் குறித்திருக்கிறோம். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு அப்பால் நம் நாட்டில் மிச்சம் நிலம் இருக்கிறதா என்பதைத் துருவிப் பார்த்தால் நிச்சயமாக முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் கூட ஒவ்வொருவருக்கும் அவர்கள் பிரிவினைப்படி அவர்களுக்கு இருக்க முடியாது ; அந்த முறையில் முன்கூட்டி சர்க்காரை ஏமாற்ற ஏற்பாடு செய்துவிட்டார்கள். காரணம், தென்னந்தோப்புக்கள், மாந்தோப்புக்கள், மற்றவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று அவர்கட்கு தெரியாது. நாம் ஏராள விலக்கு அளிப்பதன் காரணமாக அவர்களுக்கு நிலம் 30 ஏக்கருக்கு குறையும் என்பதை தெரிவிக்கிறேன். ஆனால், விலக்களித்து இவ்வளவையும் நீக்கிவிட்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லும்போது நிச்சயமாக முப்பது ஏக்கருக்குக் குறைவாகப் போய்விட்டதே என்ற ஏமாற்றம்தான் அவர்கள் அடையவேண்டியிருக்கும். ஆனால், ஒன்றில் திருப்தியடையலாம். அண்ணனும் தம்பியும், அல்லது தந்தையும் மகனும், இருவரும் ஒரு அடி நிலத்திற்கு பொழிவாய்கள் தகராறு செய்துகொண்டு சுப்ரீம் கோர்ட் வரையில் போய், லட்சக் கணக்கான ரூபாய் செலவழித்து, தங்களுடைய கர்வத்தை விட்டுக் கொடுக்க முடியாத மனப்பான்மையையும், பிறருக்கு கொடுக்கும் தரும சிந்தனையற்ற எண்ணங்களையும் விட்டு, வேண்டியவர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறோம் என்ற கொஞ்சம் மாறுதல் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நாம் பெருமையாக ஏற்றுக்கொள்ளவேண்டுமேயல்லாது உண்மையிலேயே அதில் உழவருக்கு பயன் இருக்கிறதா என்றால் இல்லை.

ஆனால், இந்த நிலச் சீர்திருத்தம் உழவர் பெருமக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டியதற்காக என்று அமைச்சர் அவர்கள் குறிப்பில் தெரிவிப்பதை மாற்றி நிலப்பிரபுக்களுக்குள்ளேயே அவர்களுக்குள் ஒரு சீர்திருத்தம் செய்து வைப்பதற்காகவும் அதே நேரத்தில் உழவர்களை அந்த கூலியாக்கவும் இது அமைக்கப்பட்டது என்று நிச்சயமாக கூறிவிடலாம். அது நன்றாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். இந்த உச்ச வரம்பு நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்ற நிலை வரும்போது, இந்த நஷ்ட ஈடு இவ்வளவு அதிகம் தேவையா, இந்த நிலம் அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது, எந்த முறையில் வந்தது, எங்கிருந்து வந்தது என்பதையெல்லாம் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டாமா ? ஆனால், ஆயிரம் வேலி, 2,000 வேலி நிலத்தை வைத்திருக்கக்கூடியவர்கள், பழைய டெல்டாப் பிரதேசங்களிலும் புதிய ஆறுகள் தண்ணீர் பாசன

[Sri T. R. Ramamirtha Thondaman] [18th April 1960

வசதி வந்த காலத்திலும் வரப்புட் போட்டு கல் எறிந்தான் காணி என்று சேர்த்துக்கொண்டதே தவிர, விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்களா அதற்கு மூல சாஸனங்கள் உண்டா என்றால் இல்லை. ஆனால் அதுமாதிரி நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்போது வேண்டுமானால் பெயரளவில் ஏதாவது ஒரு நஷ்ட ஈடு என்று சொல்லியிருந்தாலும் திருப்தி அடையலாம். ஆனால், சென்ற காலத்தில் நிலத்தை விற்ற கிரயத்தைவிட அதிக நஷ்ட ஈடு கொடுக்கும் நிலை நமக்கு ஏற்படுமானால் எவ்வளவு நஷ்ட ஈட்டுத் தொகை எங்கிருந்து கொடுப்பது என்பதை நாம் கொஞ்சம் சிந்தனை செய்து நஷ்ட ஈட்டுத் துகையை பெருமளவு நிச்சயம் குறைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கூறுகிறேன். அதே நேரத்தில், முப்பது ஸ்டாண்டர்ட் எக்கர் என்னும்போது ஒவ்வொரு 30 எக்கருக்கும் 5 எக்கர் வீதம் சாகுபடியாளரிடம் உள்ள நிலத்தை நிலச் சுவாந்தார் உழவர்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இதில் சென்ற நியாயவாரச் சட்டத்தில் உள்ள உரிமைகள் பறிபோவதை நாம் காணலாம், ஆனால் ஐந்து எக்கரை எடுத்துக்கொள்வது என்ற நிலை வரும்போது அது முப்பது, முப்பதாக எத்தனை முப்பது ஏற்பட்டிருக்கிறது ; ஒவ்வொரு நிலச் சுவாந்தாரும் ஐம்பது சாகுபடியாளர்களிடம் நிலத்தை ஒப்படைத்திருப்பார்களானால், முப்பது முப்பதாக, பத்து பிரிவினை அவர்கள் செய்திருப்பாரானால், பைத்தைந்து ஐம்பது எக்கரை சென்ற காலத்தில் சாகுபடியாளரிடம் அதிலும் அவருக்கு பிடிக்காதவர்களிடம் உள்ள நிலத்தை அவர் பண்ணைக்கு நிலம் இல்லாதிருந்த நிலைமையை மாற்றி அவரைத் திருப்தி செய்வதற்கு உழவர்களிடமிருந்து ஐம்பது எக்கரை அவர்களுக்குச் சேமித்துக் கொடுப்பதற்குத்தான் நாம் இன்றைக்கு இந்த சட்டத்தை கொண்டுவந்திருக்கிறோம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(இத்தருணத்தில் ஸ்ரீ எம். ஜகன்னாதன் தலைமை வகித்தார்,)

அந்த நிலத்தை உழக்கூடியவர்கள் மேலும் பாக்கியுள்ள 25 எக்கரை ஷை சாகுபடியாளர்கள் ஆயுளுக்குப்பிறகு, அந்த நிலத்தைப் பூராவும் நிலச் சுவாந்தார் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இந்த நிலத்தை உழுகின்ற உழவர்களுடைய வாரிசுகள் உழவர்களாய் இருக்கப் போவது இல்லையா ? அந்த உழவர்கள் வாரிசுகள் இந்த உழவர்கள் தலைமுறையோடு அவன் "உழவன்" என்ற நிலை மாறி, அவர்களுடைய பிள்ளைகள் நிலச்சுவாந்தார்களாக மாறி, நிலச்சுவாந்தார்கள் உழவர்களாக மாறப்போகிறார்களா ? என்று நினைக்கிறேன். ஆகவே, நிலம் உழக்கூடிய உழவர்களிடமிருந்து முதலில் 5 எக்கர் பிறகு பூராவும் அப்புறப்படுத்தி பண்ணை முறையை ஏற்படுத்தி நிலச் சுவாந்தார்களை பலப்படுத்துவது. அதே நேரத்தில் இன்று நிலத்தில் சாகுபடி செய்யும் உழவர்கள் உரிமையை பறித்து அந்த கூலிகளாகவும், அடிமைகளாகவும் ஆக்குவதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம் என்பது தெளிவாகிறது. மேலும் உழவர்கள் நிலங்களில் 5 எக்கருக்குக் குறைவான சிறு நிலச் சுவான்தார்கள் பூரா நிலத்தையும் எடுத்துக் கொள்ளலாம் என்று இருப்பது கொஞ்சம் பரிசீலனை செய்யவேண்டிய விஷயம். சாதாரணமாக, பெரும்பகுதி ஏழைகள் 1 எக்கர் 2 எக்கர் சாகுபடி செய்து ஜீவனம் நடத்துபவர்கள். அதில் இருப்பவர்கள் ஷை நிலம் ஐந்து, ஐந்து எக்கராகப் பெரும் பகுதி பிரிக்கப்பட்டிருக்கிறது. அது அம்மாதிரி ஐந்து எக்கர் நிலம் உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளலாம், ஆனால் சேல்ஸ் டாக்ஸ் மற்ற வரிகள் கொடுக்காமல் இருப்பவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றால் சென்ற சட்டத்தில் இந் நிலையுள்ளவர்கள் உழவர் நிலத்தில் பாதி அடையலாம் என்றிருந்ததை அறிந்து நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக வரி முதலானவைகள் கொடுக்கக்கூடியவர்கள், ஒவ்வொரு வரி கொடுப்போரும் தங்கள் சிறு சிறு நிலங்களை, மனைவி, அக்கா, தங்கை இப்படி பல பேருக்கு எழுதி வைத்து, அந்த நிலைமையில் இன்றைக்கு உழவர்களிடம் இருக்கும் நிலங்கள் அத்தனையையும் சிறு நிலச்சுவாந்தார் என்ற பேரால் எல்லாவிடத்திலும் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறது. ஆனால், இப்பொழுது எங்கு பார்த்தாலும் இருக்கும் நிலைமையில் சாதாரணமாக இதுவரை உழுது



18th April 1960] [Sri T. R. Ramamirtha Thondaman]

கொண்டிருந்த சிறு சிறு விவசாய ஹரிஜனங்கள் அடியோடு நாசப்படுத்தப்படுவதுதான் என்பது தெளிவாகிறது. இப்பொழுது எங்கள் பகுதியில் சாதாரணமாக வழக்கத்தில் இருப்பது உழக்கூடிய நிலத்தில், சாதாரண ஹரிஜன உழவனிடமிருந்தும் இதர உழவர்களிடமிருந்தும் ஒரு நிலத்தை இரண்டு எக்கர், மூன்று எக்கர் நிலச்சுவாந்தார்களாக இருக்கக் கூடியவர்கள்கூட தங்களுக்கு பண்ணைக்கு வேண்டுமென்ற அவசியம் என்று எடுக்கவேண்டுமென்றால், அதற்கு எக்கர் ஒன்றுக்கு 600 ரூபாயிலிருந்து 750 ரூபாய் வரையில் பணம் கொடுத்து ஷை உழவரிடமிருந்து விடுதலை பெற்று நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்ற சம்பிரதாயமும் இன்றைய தினம் எங்கள் ஜில்லாவில் இருந்து வருகிறது. அதனால் அநீதியை உண்டுபண்ணுகிறது இந்த சிறு நில மீட்பு பிரச்னை என்பதை தெரிவிக்கின்றேன்.

(Sri M Jagannathan in the Chair.)

மேலும், ஒரு நிலச் சுவாந்தாருக்கு ஸ்டாண்டர்டு எக்கர் எவ்வளவு என்று நிர்ணயித்து சாகுபடி செய்யும் குத்தகைதாரருக்கும், 30 எக்கர் என்றிருப்பதை மாற்றி சாகுபடி செய்யும் குத்தகைதார்கட்கு 5 எக்கர் ஸ்டாண்டர்டு எக்கர் என்றும் எந்தச் சாகுபடிதாரரும் 5 எக்கருக்கு குத்தகை சாகுபடி செய்யக்கூடாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். மகாத்மாஜீ, நிலம் உழுபவர்களுக்குத்தான் சொந்தம் என்றார் சட்டம். சோம்பேறிக்கு நிலம் என்றிருப்பது சரியில்லை, ஆகவே காந்தி, கவி பாரதி, வள்ளுவர் சொன்னபடி உழத் தெரிந்தவர்களுக்குத்தான் நிலமென்றும் உழத் தெரியாதவர்களை நிலத்தில் இருந்து அகற்றியும் சட்டத்தை திருத்த வேண்டும். குறிப்பாக என் சரகத்தில் கீழ்க்காட்டூர் கிராம நிலச்சுவான்தார் சென்னை மிட்லண்டு தியேட்டர் முதலாளி, குழி 1-க்கு ரூ. 2-0-0, 2-8-0 நிலத்தில் இருந்த உழவர்களுக்கு கொடுத்து உழவரிடமிருந்து நிலத்தை எடுத்து, சர்க்கார் பண்ணைக்கு மாற்றியிருக்கிறார் என்ற உண்மையை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே உழவர்களிடமிருந்து எடுக்கும் நிலத்திற்கு பதில் நிலம் நிச்சயம் தரபட்டவேண்டும் என்பதை கூறுகிறேன். தவறினால் சர்வசாதாரணமாக இருக்கக்கூடிய சாதாரண மிராசுதார்கள், சிறு நிலச்சுவான்தார்கள் சாதாரண விவசாயிக்கு கொடுக்கக்கூடிய குழிக்கு ரூ. 2-8-0 நஷ்ட ஈட்டையாவது, சிறு நிலச்சுவாந்தாரிடமிருந்து காலி செய்யப்படும் உழவருக்கு கொடுக்கவேண்டுமென்ற நிலையை இந்தச் சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் உழுபவனுக்கு நிலம் என்ற உண்மையை நிலைநிறுத்துவது நல்லது என்று சொல்ல ஆசைப்டுகிறேன். மேலும் கோவில், மடாலயங்களுக்கு 200 எக்கர் நிலங்களுக்கு விதி விலக்கு அளித்து, அதற்கு மேலே இருக்கிற நிலம் எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்ளுவது என்று சொல்லுகிறார்கள். எந்த நிலத்தை என்ன செய்வது என்று தெளிவாக்கவில்லை எடுத்துக்கொண்டாலும்கூட அதற்கு ஒரு குத்தகை (Rent) கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறார்கள். கோவில்கள், மடங்கள், மடாலயங்கள், தேவஸ்தானங்கள், தேவாலயங்கள் என்று சொல்லப்படுபவைகளுக்கு ஆயிரமாயிரம் வேலி நிலங்கள் இருக்கின்றன. ஆனால், 200 எக்கர் நிலங்களை எடுப்பது, அதற்கு அப்பாற்பட்ட நிலங்களுக்கு குத்தகை கொடுப்பது என்ற நிலையைப் பார்க்கும்பொழுது, 200 எக்கர் நிலம் எடுக்கப்படுவது, உழவர்களிடமிருந்து கோவிலுக்கு பண்ணையாக வைத்துக்கொள்ளுவதற்காக எடுக்கப்படுகிறதா என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, 200 எக்கருக்கு விலக்களிப்பதை மாற்றி, மட கோவில் தர்ம ஸ்தாபன நிலம் பூராவையும் கூட்டுறவு சாகுபடி முறையில் கொண்டு வரலாம் அல்லது ஏதாவது ஒரு குத்தகை நிர்ணயம் செய்து, அந்தக் குத்தகையை கோவிலுக்கோ, மடத்துக்கோ, மட தலைவருக்கோ, சர்க்காருக்கோ கொடுக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தி, 200 எக்கருக்கு அதிகமாக உள்ள நிலத்திற்கு சர்க்கார் கோவில் நிர்வாகத்திற்கு ஒரு தொகை மட கோவில் சிலவுக்கு கொடுக்க வேண்டும் என்று இருக்கக்கூடிய நிலையைவிட, பூரா நிலத்தையும் உழவர்களுக்கு கொடுத்துவிடுவது, அதாவது கோவில் மட நிலங்கள் பூராவையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளுவது என்பதில் என்ன

கஷ்டம் இருக்கிறது, என்ன ஆட்சேபனை இருக்கிறது, என்ன தொல்லை இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கோவில்களிலும், மடங்களிலும் தர்மங்கள் நடக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். குறிப்பாக நான் சொல்லுகிறேன், பாரம்பரியமாக ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவிலுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம் கோவிலுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? சிதம்பரம் கோவிலுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? ஒவ்வொரு சித்திரை மாதமும் லட்சக் கணக்கான மக்கள் வந்து ஆயிரக் கணக்கான ஆடுகள், மாடுகள், மூட்டை மூட்டையாக நெல் அரிசி, மற்ற தானியங்கள், ஏராளமாய் விளையும் காய்கறிகள், நகைகள் இவ்வளவை கோவிலில் கொட்டி தரிசிக்கக்கூடிய திருவிழா நடக்கக்கூடிய (திருச்சி ஜில்லா) கலியப் பெருமாள் கோவிலுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ? இம்மாதிரி நம்பிக்கையோடு, பக்தியோடு ஆயிரக்கணக்கான மக்கள் வழிபடுகிற தேவஸ்தானங்களுக்கு எல்லாம் அதிக நிலங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக உத்ஸவ காலங்களில் தலா 2 ரூபாய், ஒரு ரூபாய் சம்பளம் கொடுத்து ஆள் கூப்பிடக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய தேவஸ்தானங்கள்தான்—பண்டார சன்னதிகளின் நிர்வாகத்திலுள்ள தேவஸ்தானங்களில்தான் அதிகமாக நிலங்கள் இருக்கின்றன. பண்டார சன்னதிகள் கையில்தான் அதிகமாக நிலங்களும் கோவில்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோவில்களுக்கு இம்மாதிரி நிலங்கள் ஏன் வந்தது, எப்படி வந்தது, எங்கிருந்து வந்தது என்பதையெல்லாம் நாம் கொஞ்சம் பரிசீலனை செய்துபார்க்கவேண்டும். சிலர் சொன்னார்கள், கோவில்களுக்கு ராஜாக்கள் காலத்தில் தர்மம் நடக்க வேண்டுமென்று மனம் உவந்து எழுதி வைக்கப்பட்ட நிலங்களையா எடுப்பது என்று சொன்னார்கள். ராஜாக்கள் காலத்தில் ஒவ்வொரு கோவிலுக்கும் எழுதி வைக்கப்பட்ட நிலங்கள் அந்த ஆலயங்களிலுள்ள கல்வெட்டுகளில். எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னின்ன கிராமத்தின் இன்னின்ன நிலங்கள் இன்னின்ன தர்ம காரியங்களுக்காக இன்னாரால் எழுதி வைக்கப்பட்ட, இன்னின்ன கிராமங்களுடைய மேல் வாரம் என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அப்பொழுது அரசாங்க அமைப்புப்படி 5 பாகம் உழுபவனுக்கும், 1 பாகம் ராஜபாகம், கிஸ்தி அதாவது 6-ல் ஒரு பங்கை தர்மத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று 6-ல் ஒரு கடமையைத்தான் ராஜாக்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். கடவுள் என்ற பெயரால், தர்மம் என்ற பெயரால் உழவர்களுக்குரிய உழ வாரமான உழவர்களின் சாஸ்வத உரிமையைக் கடவுளும் கடவுள் பிரதிநிதிகளும் உழவனுடைய 5 பங்கையும் அபகரிக்கிறது எவ்வளவு அக்கிரமம் ? உழவர்களை ஏமாற்றி, அவர்களுடைய உரிமையைப் பறித்து ஆட்சி செலுத்தக்கூடிய அக்கிரமக்காரர்களுக்கு மேலும் மேலும் பல சலுகைகளைக் கொடுப்பதா ? மேலும் மேலும் பல நன்மைகளைச் செய்வதா ? இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது ? எப்படி உழவர்கள் ஏமாந்திருக்கிறார்கள் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தர்மங்களுக்காக சர்க்கார் கோவில்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தர்மம் நடக்கக் கூடிய பல இடங்களை நாம் பார்க்கிறோம். சுவாமிமலையில் நிர்வாகம் நன்றாக நடக்கலாம். திருப்புகலூரில் நன்றாக நடக்கலாம். சில இடங்களில் நன்றாக நடக்கிறது என்பதைக் காட்டி, மற்ற எல்லா இடங்களையும் அதற்கு ஒப்பிடுவது சரியல்ல. திருவாடுதுறை ஆதீனகர்த்தரின் கீழும், தருமபுரம் ஆதீனத்தின் கீழும் இருக்கும் தேவஸ்தானங்கள் போன்றவைகளில் நடக்ககூடிய அக்கிரமங்கள் எவ்வளவு என்பதை நாம் நேரில் போய்ப் பார்த்தால்தான் தெரியும். அங்கு நடக்கக்கூடியது பட்ஜெட் போடுவது கடவுள் பேரால் பல விழாக்களை ஏற்படுத்தி, ஒரு சிலர் வாழவும், அநீதி செய்யவும், பொய்க் கணக்கு எழுதுவதும் . மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும ஒரு மனிதன் ஆயுள் வரை ஒரு கல்யாணம் செய்துகொண்டால் போதும் என்றும் அவன் வாழ்க்கையை அதன் மூலம் நடத்தலாம் என்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் உயிரற்ற கல் சாமிகளுக்கு ஒவ்வொரு வருஷமும் கல்யாணம் நடைபெறுகிறது. இதெல்லாம் ஒரு சிலர் பெரும் பகுதியினரை



ஏமாற்றிப் பிழைப்பதற்காகத்தான். என்பதைத் தெரிவிக்கிறேன். எங்கள் பக்கத்தில் இருக்கிற கடவுளுக்கு ஒரு திருக்கல்யாணத்திற்கு ரூபாய் 10,000 12,000 என்று எஸ்டிமேட் போடப்பட்டு பல திருக்கல்யாணங்கள் செய்யப்படுகின்றன. ஒரு வருஷத்தில் 365 நாட்களில் 200 நாட்கள் பல விழாக்கள் நடக்கின்றன. இப்படி ஒவ்வொரு கோவிலிலும் வருஷத்தில் பல நாட்களில் பல திருக்கல்யாணமும் இன்னும் எத்தனையோ விழாக்களும் செய்ய என்று ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது, வீணாக்கப்படுகிறது, விரயமாக்கப்படுகிறது. அங்கே பந்தல் போடுவது, வண்ணமிடுவது, மேளம் இன்னும் எத்தனையோ சோம்பேறிகள் சிலர் மைல் டான்ஸ், பொய்க்கால் குதிரை டான்ஸ் என்றெல்லாம் வைத்து இவர்களுக்குக் கொடுக்கும் தொகையைவிட 10 மடங்கு அதிகமாக பல பேர்களிடமிருந்து நப்பு பில்கள் வாங்கப்பட்டு பொய்க் கணக்கு எழுதக் கூடிய அக்கிரமக்காரர்களுக்கு அதனால் தன்னையும், தன் சுற்றத்தாரையும் உயர்த்திக்கொண்டு, உழைத்து உண்ண உணவளிக்கும் உழவர்களின் ரத்தத்தை உறிஞ்சி, மாடமாளிகைகள் கட்டிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சுயநலக் கூட்டத்திற்கு நாம் பணம் கொடுக்கிறோம். பணம் ஒதுக்குகிறோம். சலுகை கொடுக்கிறோம் என்று சொன்னால், அது மிகையாகாது நான் சொல்வது நியாயம் இல்லை. திருவாடுதுறை பண்டாரசன்னதியை தள்ளு என்று சொல்ல முன்வருவார்களா என்று கேட்கிறேன். சோடா முதலியவைகளை அமைக்கப்பட்ட எழுத்தாளி கால நிலை இளங்கன்னிகளைத் தரிசிக்க செல்லும்போது வழியில் கடையில் சோடா வாங்கி குடிக்கக்கூடிய அவநிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. சொல்லப்படுகிற நிலையில் இந்து மதமே தலைகுனியும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு கேவலமாக தரக் குறைவாக தலைகுனியும் இந்து சமுதாயத்திற்கே இழுக்கு உண்டுபண்ணக்கூடிய நிலையில் நடந்துகொள்ளும் பண்டாரசன்னதியின் நிர்வாகத்தின் கீழுள்ள தர்ம ஸ்தாபனங்களுக்கு, கோவில்களுக்கு சலுகை அளிக்கப்படுவது நியாயமா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து இது மாதிரி ஸ்தாபனங்களை சர்க்கார் நேரடியாக எடுத்து நடத்த வேண்டியது மிகவும் அவசியம் தெரிவிக்கின்றேன்.

**TEMPORARY CHAIRMAN (SRI M. JAGANNATHAN)** : இந்தச் சபையில் இல்லாத அங்கத்தினரைக் குறித்து தயவுசெய்து பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI T. R. RAMAMIRTHA THONDAMAN** : நான் எந்த அங்கத்தினரையும் பேசவில்லை. மனிதத் தன்மையற்ற கடவுள் என்ற பெயரால் காதல் லீலைகள் புரியும் ஸ்வாமியைப்பற்றிப் பேசினேன். (சிரிப்பு.) ஆகவே இம்மாதிரி நடந்துகொள்ளுபவர்களுடைய நிர்வாகத்தின் கீழுள்ள ஸ்தாபனங்களுக்கு விதி விலக்குக் கொடுப்பது நல்லது அல்ல. அந்தப் பூரா நிலங்களையும் நாம் எடுத்துக்கொண்டு, சமுதாயத்தில் கூட்டுறவு சாகுபடி முறையை அமுலுக்குக் கொண்டுவந்து, அந்த நிலங்களை எடுத்து கூட்டுறவு முறையில் நாம் சாகுபடி செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி, உழவர்களுடைய பொருளாதாரத்தை அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் சொல்லப்போனால், மடாலாய நிர்வாக இழிவான சம்பவங்கள் சொல்ல வெட்கப்படுகிறேன். அடுத்தபடியாக, குடியிருப்பு மனைகளைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். குடியிருப்பு மனைகளைப்பற்றி நாங்கள் நீண்டகாலமாக வற்புறுத்தி வருகிறோம். அதற்காகப் போராட்டங்களும் நடத்தி இருக்கிறோம். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால், திருப்பனந்தாளில் ஒரு சம்பவம் நடந்தது. பலருக்கு நன்றாகத் தெரியும். தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த திருப்பனந்தாளில் குடியிருப்பு மனையிலுள்ள 15 அடி நீளம், 8 அடி அகலம் சூரிய வெளிச்சம் உள்ளே வரக்கூடிய கதிர்வேல் குடிசையை அந்தக் கிராமத்தில், தன்னுடைய வாழ்க்கைத் துணைவி பிரசவமாகி இருக்கும் பொழுது பகல் 12 மணிக்கு தர்மபுரஆதீன கார்வார் ஆள்களைக்கொண்டு பிரித்து எறிந்தார். கதிர்வேலுக்கு அந்தச் சம்பவம் அடங்காத

கோபத்தைத் தூண்டி அவர் சிலரை அடிக்க, அதன் காரணமாக கார்வார் பொய்க் கேஸ் போட, அதனால் போலீஸாருக்கும் கதிர்வேலுவுக்கும் தகராறு ஏற்பட, அதனால் கதிர்வேலு 5 வருஷம் வரை அட்டகாசம் செய்ய, இதனால் கதிர்வேலைத் தேடிப் போலீஸ் படைகள் ரிசர்வ் போலீஸ் நாடெங்கும் அலைந்து அதனால்....

TEMPORARY CHAIRMAN (SRI M. JAGANNATHAN) : இன்னும் இரண்டு நிமிஷங்கள்தான் இருக்கின்றன.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : சர்க்காருக்கு லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவழிந்து எத்தனையோ பொதுமக்கள் இன்னலுக்கு ஆளாகி முடிவில் கதிர்வேல் போலீஸ் படையால் நீண்டநேர யுத்தத்திற்குப்பின் சுட்டுக் கொல்லப்பட்டார். கார்வார் சுகமாக வாழ்ந்தார். சிறு குடியிருப்பு இடத்தால் எவ்வளவு கொடூரமான நிலைமையை தர்மஸ்தாபனம் உண்டாக்கியிருக்கிறது, என்பதைப் பார்த்து குடியிருப்பு மனை விஷயத்தைத் தீவிர மனதுடன் கவனிக்க வேண்டும். இதுவரை மனைகளில் மரங்கள் இருந்தால், அது மனை சொந்தக்காரருக்கு பாதி, குடியிருப்பவருக்குப் பாதி என்றிருந்தது. இது பண்டாரசன்னதி சட்டம். ஆனால், நமது சட்டம் பண்டாரசன்னதி சட்டத்தையும் தாண்டிவிட்டது. வீட்டுக் கொல்லையில் உள்ள மரத்தை வெட்டினால் வீடு காலியாகிவிடும் நிலையில் இருப்பது சரியில்லை. குடியிருப்பில் உள்ள மரம் குடியிருப்பவருக்கே என்று திருத்த வேண்டும் அங்கெல்லாம் கிராமத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். மேலும் கொல்லு வேலைக்காரர்கள், தச்சு வேலைக்காரர்கள், கொத்து வேலைக்காரர்கள் மண்பாண்டத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், அத்தகூலிக்காரர்கள் என்று பல பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டம் பெருத்த நஷ்டத்தையும், கஷ்டத்தையும் விளைவிக்கும். ஆகவே அவர்களை அம்மாதிரியான அவல நிலைக்குக் கொண்டுபோகும். விவசாயிகளுக்கு மட்டும் குடியிருப்பு என்பதை அங்குள்ள எல்லோருக்கும் என்று மாற்றியமைக்கப்பட வேண்டும். தாடிக்கு வேறு சீயக்காய், தலைக்கு வேறு சீயக்காயா இருக்கவேண்டும். தலையில் வைத்த சீயக்காய் தாடிக்கும் வழியாதா ? குடியிருப்பு மனைகளில் உள்ள மரங்கள் அவர்களுக்கே நீடித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற முறையிலும், கிராமத்தில் உள்ள சகலருக்கும் மனைகள் கிடைக்கும் முறையிலும், ஜாயின்ட் செலக்ட் கமிட்டி திருத்தத்தைச் செய்யவேண்டும்.

10-30 a.m. மலைத் தோட்டம், தென்னந் தோப்பு, பாக்குத் தோப்பு இவைகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. ஒதுக்கக்கூடிய நிலங்கள் எத்தன்மையது ? தஞ்சையிலுள்ள நஞ்சை 30 ஸ்டாண்டார்டு ஏக்கர் என்றால், அங்கே மூன்று ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு போட்டால், அந்த லாபம் கிடைத்துவிடும். ஸீலிங் என்று சொன்னால், அது எல்லா இடங்களிலும் எல்லா நிலங்களுக்கும்—அது உருளையானாலும், தேயிலையானாலும், காப்பியானாலும், ஜாதிக்காய், மாசிக்காய் ஆனாலும், ஏலக்காய் சம ரீதியில் இருந்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். சமுதாயத்தில் 70 சத வீதமுள்ள பாமர உழவர் பெருமக்கள், தாங்களும் இந்த நாட்டில் உரிமை உள்ள மக்கள், உணர்ச்சியுள்ள மக்கள், இந்த நாட்டின் செல்வத்தை, உற்பத்தியைப் பெருக்கத் தகுந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படச் செய்ய, இந்த விலக்கு அளித்திருக்கக்கூடியதையெல்லாம் திருத்தியாக வேண்டும். உழவர்களுக்கு நிலத்தில் நம்பிக்கை ஏற்பட்டால் தான் உற்பத்தி பெருக முடியும், நாடு முன்னேற முடியும்.

இடைத் தரகர்களைப்பற்றி ஒரு வார்த்தை. சாதாரணமாக ஒரு குத்தகைக்காரர் 30 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. குத்தகைக்காரர் என்றால் யார் ? கிராமம் கிராமமாக, ஊரிலேயே இல்லாமல் கேள்வி முறையில்லாமல், ஊரிலுள்ள சாகுபடியாளர்களைக் கீழே வைத்துக்கொண்டு, கொள்ளையடிக்கும் கூட்டத்தினர் இருக்கிறார்கள். நேரிடையாகக் கிராமாந்தரங்களில் வாரிசு முறையில் சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்களும் இருக்கிறார்கள். இரண்டாவது தரகக் குத்தகைக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது பரவாயில்லை.



ஆனால், மற்றவருக்குக் கொடுப்பது பாபமான காரியம், அக்கிரமமான காரியம் செய்பவருக்கு பட்டாடை போர்த்துவது போல் ஆகும். என்பதை உணர வேண்டும். நான் புலி அடிக்கப் போகிறேன் என்று சொல்லி புலி வேட்டைக்குப் போய எலியைப் பிடித்து வந்ததுபோல் இது இருக்கிறது.

ஆகவே, இந்தச் சட்டத்தை நல்ல திருத்தங்கள் செய்வது என்பதை விட இதில் உழவர்களுக்கு நிலம் கிடைக்கும் முறையில் சட்டத்தையே மாற்றி அமைக்க வேண்டும். நல்ல முறையிலே ஏழை உழவர் பெருமக்களுக்கு நன்மை செய்ய ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு நில முதலைகளைப் போடாமல் செலக்ட் கமிட்டியில் 30 சத உழவர்கள் விகிதப்படி 4-ல் 3 பங்கு உழவர் பிரதிநிதிகளைப் போடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, இந்த நிலஉச்ச வரம்பு மசோதா நெடு நாட்களாக எதிர்பார்த்திருந்த சட்டம் ? இதனை முழு மனதோடு வரவேற்கிறேன். இந்தச் சட்டம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு முன் அமலாக்கப்படும் என்று நம்புகிறேன். இந்த மசோதாவின் நோக்கம், நில உடமைக்கு ஒரு வரம்பு கட்டவேண்டும். என்பதுதான். நம் நாடு ஒரு விவசாய நாடு. இந்த நாட்டில், விவசாய மக்கள் பெருவாரியாக இருப்பதால், அவர்களிடையே ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி, சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளை நீக்க இந்த நில வரம்பைக் கட்டப் போகிறோம். காங்கிரஸ் அரசாங்கமானது, இதற்கு முன் ஜமீன்தார்களை ஒழித்தது. இன்றைக்கு பெரு நிலச்சுவான்தார்களின் நிலத்திற்கு வரம்பு கட்டுகிறது. அதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இம்மாதிரி சட்டம் கொண்டுவருவதின் நோக்கம் சமுதாயத்தில் இருக்கும் ஆதிக்க உணர்ச்சிகளை எடுத்துவிட வேண்டும் என்பதுதான். ஜாதி, சமயம், இனம், கல்வி, பதவி என்றெல்லாம் ஆதிக்க உணர்ச்சிகள் ஆங்காங்கே நிலவுகின்றன. சமயத்தில் உயர்ந்தவர்கள், பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள் இவர்களெல்லாம் " யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் " என்ற ரீதியில் தான் வாழ வேண்டும். மற்றவர்களைச் சுரண்டி வாழ வேண்டும் என்பதைத் தடுக்கவே இம்மாதிரிச் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்தகைய ஆதிக்க உணர்ச்சிகளை மாற்ற முடியும், இரண்டு அடிப்படைக் காரணங்களால். ஒன்று, சமுதாயத்தில் கருத்து மாற்றம், மற்றொன்று பொருளாதார அடிப்படையில். இன்றைக்கு வினோபாஜி போன்ற பெரியார்கள் கருத்து மாற்றத்தை ஏற்படுத்திச் செய்ய வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். அந்த மாதிரி மாற்றம் சமுதாயத்தில் விரைவாக இல்லாமல், மெதுவாகவேதான் ஏற்படும். ஆகவேதான் விரைவில் மாறுதல்களைக் கொண்டுவர, அரசாங்கம் இம்மாதிரியான சட்டங்களைக் கொண்டுவரவேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறது. இனி இம்மாதிரிச் சட்டங்களுக்கும் சில எதிர்ப்புகள் வருகின்றன. " ஆங்காங்கே விளைவு குன்றும் ; பஞ்சமும் பட்டினியும் ஏற்படும்." என்றெல்லாம் சொல்லப்படுகிறது. சாதாரணமாகக் கிராமங்களில் சென்று பார்த்தால், தெரியும் ; பெரிய நிலச்சுவாந்தார்கள், 100, 200 ஏக்கர்களை வைத்திருப்பவர்கள், சரியாக விவசாயம் செய்வதில்லை ; சிறிய விவசாயிகள் 5, 10 ஏக்கர் வைத்திருப்பவர்களே சீராக செம்மையாக விவசாயம் செய்ய முடிகிறது. பெரு நிலச்சுவாந்தார்கள், சரியாக உழுவதில்லை ; உரம் இடுவதில்லை ; சரியாகப் பயிர் செய்வதில்லை. நிலம் குறைவாக இருந்தால்தான் நல்ல முறையிலே பயிரிட முடியும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

நிலம் இல்லாதவர்கள் ஒவ்வொருவருக்கும் எங்கே நிலம் கொடுக்கப் போகிறார்கள் என்று கேள்வி கேட்கப்படுகிறது. அம்மாதிரி யாரும் சொல்லவில்லை. அரசாங்கத்தின் சார்பில் யாரும் அம்மாதிரி நிலத்தைக் கொடுப்போம் என்று சொல்லவில்லை. " கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் " ஒருக்கால் அம்மாதிரிச் சொல்லிக்கொண்டு இருக்கலாம். இந்தச் சட்டத்தினால் ஓரளவுக்கு பெரிய ஏற்றத்தாழ்வு குறைக்கப்படுகிறது. எல்லோருக்கும்

[Sri K. R. Viswanathan] [18th April 1960

பகிர்ந்து கொடுப்பதாக சர்க்கார் சார்பில் யாரும் சொல்லவில்லை. ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதுதான் இந்தச் சட்டத்தின் ஒரே நோக்கம், வேறொன்றுமில்லை.

இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரும்போது, உச்சவரம்பு 30 எக்கர் என்று நிர்ணயிக்கப்படுகிறது. பிரிந்த குடும்பங்களாக இருந்து பெரும் நிலப் பரப்பை அனுபவித்து இந்தத் தலைமுறையில் வாழ்ந்தாலும், இரண்டு மூன்று தலைமுறைக்குப் பிறகு இன்றைக்கு இருக்கும் நிலையில் அனுபவிக்க முடியாது. அது இன்னும் குறைந்துகொண்டேபோய்த்தான் ஆக வேண்டும். அடுத்த பரம்பரையில், மகன், மகள் மனைவி உடன் பிறந்தார் என்று தனித்தனியாக இப்படி எல்லாம் பிரிந்து, பிரிந்து, 30 எக்கர்களுக்கு மேல் யாரும் வைத்திருக்க முடியாத நிலை வந்துவிடும். அப்படி அதிக நிலம் படைத்த குடும்பங்களையே காணமுடியாது. இத்தகைய நிலையில் இன்றைக்கு உச்ச வரம்பு கட்டுவதினால் இனிமேல் முப்பது எக்கருக்குக் குறைவாக உள்ள குடும்பங்கள்தான இருக்கும். அதற்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது. என்று வரையறுக்கப்படுகிறது. அந்த முறையில் இது நல்ல சட்டமாக அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இம்மாதிரியான சட்டம் வரப்போகிறது என்று நிலமுடைய பெரிய மிராசுதாரர்கள் பெரும்பாலும் நாலைந்து வருஷங்களாக தங்களுடைய நிலங்களை வினியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் இந்தச் சட்டம் வருவதனால் அவர்கள் வேறு எந்த விதத்திலும் குறை கூறுவார்கள் என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு இப்பொழுது இருப்பது ஒரே ஒரு குறைதான். அவர்கள் சொல்லக்கூடிய குறைகள் எல்லாம் நிலத்திற்கு மட்டும்தான் உச்ச வரம்பு கட்ட வந்திருக்கிறார்களா மற்றப்படி நிலம் அல்லாத மற்ற உடமைகள் இருக்கின்றனவே அவைகளுக்கு என் உச்ச வரம்பு இல்லை. நகரங்களில் அவர்களுக்கு அநேக வீடுகள் இருக்கின்றன, அவைகளை வைத்துக்கொண்டு அதிகமாகச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்களே, உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திங்கள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்காக சம்பாதிக்கிறார்களே, அவர்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டாமா, அதைப் போலவே தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் ஆயிரக்கணக்காக சம்பாதிக்கிறார்கள் அவர்களுக்கு எல்லாம் உச்ச வரம்பு கட்ட வேண்டாமா என்கிற ஒரு குறைதான் அவர்களுக்கு இருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான குறையும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு குறை இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்தக் குறையை இன்றைக்குத் தீர்த்து வைக்க அரசாங்கம் முன்வர வேண்டும். எல்லாவித உடமைகளுக்கும் உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை அரசாங்கம் வெளிப்படையாக அறிவித்தல் வேண்டும். நமது சர்க்காராக இருந்தாலும் சரி அல்லது மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி இதைப் பற்றி வெளிப்படையாக அறிவித்தல் வேண்டும்.

அடுத்தபடியாக நமது மாகாணத்தில் உச்ச வரம்பைக் கட்டுபடுத்தும்போது ஒவ்வொரு நிலத்தின் பரப்பை வைத்துக் கொண்டு உச்சவரம்பு கட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு எக்கருக்கு எவ்வளவு வாய்தா என்பதைக் கணக்கிட்டு அந்த அளவில் உச்சவரம்பு கட்டி இருக்கிறார்கள். ஆனால், ஆந்திரா, மைசூர் போன்ற மாகாணங்களில் நிலத்தினுடைய வருவாயைக் கொண்டு அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு உச்ச வரம்பு கட்டியிருக்கிறார்கள். அங்கு அப்படி வைத்திருப்பதால் அங்குள்ள நிலத்தின் வருவாயை எப்படி நிர்ணயிப்பது என்பதற்கு அங்குள்ள அதிகாரிகள் அதைப் பற்றி முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளுடைய பேச்சைக் கேட்டு வருவாயை முடிவு கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதனால் அங்கு அதிகாரிகளுக்கு அதிகப்படியான பொறுப்பு இருக்கிறது. அதனால் பல ஊழல்கள் ஏற்படுவதற்கு இடம் ஏற்படுகிறது. அதன் மூலம் பல சிக்கல்கள் ஏற்படலாம். அப்படிப்பட்ட நிலைமை நமது மாகாணத்தில் இல்லை. அந்த நிலைமையில் உச்ச



18th April 1960] [Sri K. R. Viswanathan]

வரம்பு கட்ட வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதுதான். இது ஒரு நல்ல கொள்கையுமாகும். நம் மாகாணத்தில் முப்பது "ஸ்டாண்டர்ட் எக்கர்" என்று நிர்ணயிக்கும்போது நிலத்தின் வளம், நிலத்தின் நில வளம் நீர்வளம் உள்ள ஒரு எக்கரின் அடிப்படையில் உச்ச வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. நமது மாகாணத்திலுள்ளவர்களுடைய வாழ்க்கைத்தரம் அண்டைய மாகாணத்திலுள்ளவர்களுடைய வாழ்க்கைத்தரத்தைவிட எந்த விதத்திலும் அதிகமாகவே இல்லை. பக்கத்திலுள்ள ஒரிஸ்ஸா மாகாணத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கும் உச்ச வரம்பு இருபத்தி ஐந்து எக்கர்தான் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு மேல் அங்கு நிர்ணயிக்க முன் வரவில்லை. அதே போன்று கேரள மாகாணத்திலும் இருபோக நிலங்களுக்கு பதினைந்து எக்கருக்கு மேல் நிர்ணயிக்க முன் வரவில்லை. அவர்களைவிட நாம் வாழ்க்கைத்தரத்தில் உயர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. அப்படி இருக்கிற காரணத்தால் இங்கு உச்ச வரம்பு முப்பது எக்கர் என்று வைத்திருப்பதற்கு பதிலாக உச்ச வரம்பு இருபத்தி ஐந்து எக்கர்கள் என்று வைத்தால் நியாயமாக இருக்கும். அதனால் ஒரு குடும்பத்திற்கு சராசரி ஐந்து பேர்கள் என்று வைத்துக் கொண்டாலும் தலைக்கு ஐந்து எக்கர் என்று மொத்தம் இருபத்து ஐந்து எக்கர்கள் ஆகின்றன. அதாவது ஐந்துக்கு ஐந்து இருபத்து ஐந்து எக்கர்கள். அதற்கு மேலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கு ஐந்து வீதம் அதிகமாகக் கொடுக்கலாம். இந்தக் கொள்கை சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. அதன் பிறகு எல்லா உறுப்பினரையும் சேர்த்தாலும் கூட குடும்பத்திற்கு ஐம்பது எக்கருக்கு மேல் போதல் கூடாது.

அடுத்தபடியாக நில வளம் நீர்வளம் இவைகளைக்கொண்டு ஸ்டாண்டர்ட் எக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஸ்டாண்டர்ட் எக்கரை நிர்ணயிக்கும்போது வரண்ட பிரதேசத்திலுள்ள நான்கு எக்கர்களுக்கு சமானம் என்று சொல்லப்படுகிறது. மழையை எதிர்பார்த்து வாழ்கிற பிரதேசங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆகவே மழை இல்லாத பிரதேசங்களை ஐந்து எக்கருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் எக்கர் சமானம் என்று நிர்ணயிக்கவேண்டும்.

இந்த சட்டமானது என்றைய தினத்திலிருந்து அமுலுக்கு வருகிறது என்று சொல்லும்போது 1960-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ம்தேதியிலிருந்து அதாவது இந்தச் சட்டம் முதலில் கெஜட்டில் விளம்பரப்படுத்திய தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில மாகாணங்களில் கடந்த தேதியிலிருந்து இது அமுலுக்கு வருவதாகக் கூறியிருக்கிறார்கள். நாம் உச்சவரம்பு கட்ட முடிவு கட்டி ஆரம்பிக்கிறோம். இப்பொழுது இன்னும் கொஞ்சம்கூட அந்த நிலச்சுவாந்தார்களுக்கு சலுகை கொடுக்கலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1960-ம்வருஷம் ஏப்ரல் மாதம் 6-ம்தேதியிலிருந்து என்பதைவிட இந்த மசோதாவானது சட்டமாகப்படுகிற அந்தத் தேதியிலிருந்து இது அமுலுக்கு வரும் என்று குறிப்பிடலாம். இப்படிப்பட்ட ஒரு உரிமையை அவர்களுக்கு நாம் கொடுக்கலாம். அப்படிப்பட்ட ஒரு உரிமையை அவர்களுக்கு நாம் கொடுக்கும்போது ஒரு நிபந்தனையையும் அவர்களுக்கு நாம் வைக்கலாம். நிலம் இல்லாத ஏழைகளுக்கும், முப்பது எக்கருக்குக் குறைவாக நிலமுள்ளவர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் தங்களுடைய நிலத்திலிருந்து கொடுக்கலாம் என்ற நிபந்தனையை வைத்தால் சர்க்காருக்கு ஏற்படக்கூடிய தொல்லைகள் ஓரளவு குறையும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இன்றைக்கு மிச்சமுள்ள நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுத்து வாங்கிக்கொள்ளப்போகிறோம். அதற்கு எவ்வளவு என்று நிர்ணயம் செய்ய வேண்டியதாக இருக்கும். அதன் பிறகு அதை எடுத்து என்ன செய்வது என்கிற வேலைகள் கொஞ்சம் குறையும், இப்படிப்பட்ட உரிமையை நிலச்சுவாந்தார்களுக்கு நாம் கொடுத்தால். அவர்களே கொடுத்து விடுவதற்கு என்பதற்காக இந்த மசோதா சட்டமாகிற தேதியிலிருந்து அது அமுலுக்கு வரும் என்று நிர்ணயிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு உரிமையை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இம்மாதிரி உச்ச வரம்பு கட்டியாகி விட்டது. அதன் பிறகு எஞ்சிய நிலத்தை என்ன செய்வது என்கிற அளவுக்கு அதனை 84-வது பிரிவில் வகுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய நல்ல அம்சம். இதைப்பற்றி தீர்மானிக்கவே இல்லை. அதைப்பற்றி தீர்மானித்த பிறகு விதிகள் செய்து அவற்றை கீழ் சட்ட சபையிலும் மேல் சட்ட சபையிலும் வைத்து அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தையும் அனுமதியையும் பெற்று அதன் பிறகு அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது ரொம்ப மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். இத்தகைய அம்சத்தை வரவேற்றாலும் சில இடங்களில் முடிவு கட்டுவதற்கு 'லாண்ட் போர்ட்", "ஷுகர் பாக்டரி போர்ட்," "லாண்ட் ட்ரிபுனல்", 'லாண்ட் கமிஷனர்" என்று பலவித நிறுவனங்கள் ஸ்தாபனங்கள், ஏற்பட வேண்டியதாக இருக்கிறது. அவர்களிடம் நிலச்சுவாந்தார்கள் விண்ணப்பித்து பல சிக்கல்களை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்படி பல நிறுவனங்கள் ஏற்படுவதால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய செலவினங்கள் குறைவாக இருக்கமுடியாது. ஆகவே சட்டம் அமுலுக்கு வரும் காலத்தை கொஞ்சம் தள்ளிக்கொடுத்தால் அதாவது சட்டமாகப்படும் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொன்னால் இப்படிப்பட்ட செலவுகளை அரசாங்கம் தவிர்த்து நிலச்சொந்தக்காரர்களே நிலத்தை விநியோகம் செய்துகொள்ள வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே அப்படிப்பட்ட ஒரு உரிமையை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உச்ச வரம்பு வருகிறபோது மற்றும் அரசாங்கம் நீர்பாசன வசதி செய்து கொடுத்தால் சில நிலங்களில் அதனால் நீர்பாசன வசதி ஏற்பட்டால், அந்த உச்ச வரம்பை மாற்றி அமைக்க நேரிடும் என்று சொல்லப்படுகிறது. அதுவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். சில இடங்களில் உச்ச வரம்பு கட்டும்போது ஊற்றுக் கிணறுகள் அதாவது "ஆர்டீஷியன் கிணறுகள்" இருந்தால் அவைகள் 15 அல்லது 20 வருஷங்கள் தான் ஓடிக்கொண்டிருக்கும், வசதி செய்து கொடுத்துக்கொண்டிருக்கும். அதன் பிறகு கிணறுகள் நின்று போய் விட்டால் நீர்பாசன வசதி குறைந்து போய்விடும். பாசன வசதிபெற்ற நிலங்கள் வரண்ட நிலங்களாகிவிடும். அதற்கு இந்தச் சட்டத்தில் உச்ச வரம்பு கட்டியதை மாற்றி அமைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உச்ச வரம்பு கட்டிய பின் நிலமுடையவர் ஏற்கனவே குத்தகைக்கு விட்டிருந்தால் அதை திருப்பி வாங்கிக் கொள்வதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இல்லை. பெரிய நிலச்சுவான்தார்களுக்கு இப்படிப்பட்ட உரிமை கிடையாது. இந்த நிலைமையை மாற்றி அமைக்கவேண்டும். முப்பது எக்கர் விட்டாலும் இப்பொழுது 60—40 சட்டம் இருப்பதனால் நிலச் சொந்தக்காரருக்கு 40 சத விகிதம் தான் கிடைக்கும் அதை வைத்துக் கொண்டு பெரிய மிராசுதார்கள் தங்களுடைய குடும்பத்தை நடத்த மிகவும் இடர்பட நேரிடும். இந்த நிலைமையில் முப்பது எக்கர் நிலம் இருந்தாலும் குத்தகைக்கு விட்ட நிலத்தை திருப்பி வாங்கிக்கொள்ளக்கூடிய உரிமை அவர்களுக்கு இருக்கவேண்டும். அந்த அளவில் இந்தச் சட்டத்தை மாற்றிகொடுத்தால் தான் பெரிய நிலச்சுவாந்தார்கள் தங்களுடைய குடும்பங்களை நல்ல முறையில் நடத்திக்கொள்ள முடியும். அந்த முறையில் மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்வதற்கு இன்றைக்கு இருக்கிற குத்தகைக்காரர்களை அப்புறப்படுத்த முடியாவிட்டாலும்கூட இனிமேல் குத்தகைக்கு நிலத்தைவிட்டால் அதை திரும்ப மீட்டுக்கொள்ள அதிகாரம் இருக்கும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சமய அற நிலையங்கள் அதாவது கோயில்கள், மடங்கள் என்று இருக்கின்றன. இவைகளுக்கு இருநூறு எக்கரா உச்ச வரம்பு என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி விதிப்பதற்கு என்ன





காரணம் என்று எனக்கு புலப்படவில்லை. இன்றைய தினம் மக்களிடையே சமய கருத்துக்களை வளர்க்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாக விருக்கிறது. அதன்பொருட்டு இந்து மத அறநிலைய பாதுகாப்பு சட்டம் செய்து தனியாக ஸ்தாபனத்தையும் உண்டாக்கியிருக்கிறோம். அந்த நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்தோமானால் இந்த உச்ச வரம்பு வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன். அப்படியே உச்ச வரம்பு செய்யவேண்டும் என்று நினைத்தார்களானால் அந்த ஸ்தாபனங்களுக்கே நிலையான வரும்படி எவ்வளவு செலவு எவ்வளவு ஆகியவற்றை எல்லாம் முந்தைய நான்கைந்து வருட வரவு செலவு பார்த்து அவர்களுடைய வரவுற்கும் செலவிற்கும் தக்கவாறு சொத்து ஒதுக்கிவிட்டு மற்றையவைகளை வேண்டுமானால் 30 எக்கரிலிருந்து 300 எக்கர் வரையிலும் உச்ச வரம்பை சரியான முறையில் அமைத்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னொன்று மிக முக்கியமாக கவனிக்கவேண்டியது ஆஸ்பத்திரிகள். குறிப்பாக செங்கிட்பட்டி ஆஸ்பத்திரிக்கு அதிகமாக நிலமிருக்கிறது. 400, 500 எக்கருக்குமேல் சொந்தமாகவிருக்கிறது. அதிலே 200 எக்கர் உச்ச வரம்பு என்று வைத்தால்—இன்றைக்கே எத்தனையோ பேர் இலவசமாக வைத்தியம் செய்துகொள்ளுவதற்காக வந்து இடம் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். உச்ச வரம்பும் ஏற்படுத்திவிட்டால் நோயாளிகளுக்கு ஒரு வித நன்மையும் செய்ய முடியாது. ஆகையால் இவைகளுக்கெல்லாம் உச்ச வரம்பு இல்லாத முறையில் மற்ற எல்லா உதவிகளையும் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச அனுமதியளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri P. S. ELLAPPAN:** கனம் தலைவர் அவர்களே, இந்த மூன்று நாட்களாக இங்கே நடக்கிற வைபவத்தைப் பார்த்தால் எல்லாம் ஒரே தராசாக இருக்கிறது. எது ஏற்றம், எது தாழ்வு என்று சொல்வதற்கில்லை. இதன் காரணமாக நானும் துப்பவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை என்ற நிலைமையில் இருக்கிறேன். சென்ற வருடத்திலே நான் பேசியபோது என்னையா உச்ச வரம்பு வருகிறது வருகிறது என்று ஏமாற்றுகிறீர்களே, அது வருமென்று ஜனங்கள் எவ்வளவு அபிலாஷையோடு இருக்கிறார்கள். நிலம் நமக்குத்தான் வருகின்றது என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள் ஆனால் அது வராமல் போய்கொண்டேயிருக்கிறது. எப்போது விமோசனம்? ஜனங்களை இப்படியெல்லாம் ஏமாற்றக் கூடாது, என்று போன வருடமே நான் சொன்னேன். இப்போது சட்டம் கொண்டு வருகிறார்கள். சட்டத்தைப் பார்த்தால் ஒரே மோசமாகப் போய் விட்டது. நான் பொதுமக்களுக்கு என்ன சொல்லுவேன். நான் சொன்னதெல்லாம் புளுகினது போல் அம்பலமாகிவிட்டது. ஒன்றும் சொல்வதற்கில்லை. ஒரு அன்பரை பார்த்து ஒரு சிநேகிதன் கேட்டான். உங்களுக்கு குழந்தையிருக்கா என்று. இருக்கு என்று அவர் சொன்னார். ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று அந்த சிநேகிதர் கேட்டார். வெளியில் வந்தால் தான் தெரியுமென்று அவன் சொன்னான். வெளியில் வந்தாலா என்று ஆச்சரியமாக போய்விட்டது அந்த நண்பருக்கு. இந்த மாதம் தான் நம்ப சம்சாரம் குளியாமல் இருக்கிறாள். பத்து மாசம் போய் குழந்தைப் பிறந்தால் ஆணா, பெண்ணா என்று தெரியும், என்றாராம். அப்படி பத்து வருடங்கள் கழித்து இப்போது குழந்தைப் பிறந்தாற்போல பிறந்திருக்கிறது இந்தச் சட்டம். ஆனால் இதைப் பார்த்தால் ஆணென்றும் சொல்லமுடியவில்லை. பெண்ணென்றும் சொல்ல முடியவில்லை. ஒரே பிண்டமாக வந்து சேர்ந்துவிட்டது. ஒரு பக்கத்தில் ஜமீன்களை கலங்கச் செய்கிறது. இன்னொரு பக்கத்தில் நிலமில்லாதவர்களுக்கு 5 சென்டாவது கிடைக்குமாவென்று உத்தரவாதமில்லை. மூன்று குசினிக்காரன் சேர்ந்து கூப்பைக் கெடுத்த கதையாக இருக்கிறது இந்த சட்டம். இந்த சட்டத்தினால் ஏழை ஹரிஜனங்களுக்கு, பாமர ஜனங்களுக்கு கொஞ்சங்கூட நன்மையில்லை. அதிகப்படி நிலத்தையெடுத்து ஏழை மக்களுக்கு விநியோகம் செய்வது பற்றி ஒன்றையும் காணோம்.

[Sri P. S. Ellappan] . [18th April 1960

இன்னென்றையும் சொல்லுகிறேன். கம்பர் விவசாயத்தைப்பற்றி ராமாயணத்தில் ஒரு பாட்டு பாடினர். நான் அந்தப் பாட்டைப் படித்துப் பார்த்தேன பிரசங்கத்தைக் கேட்டுத்தான் சொல்லுகிறேன்—

ஆழித்தேவர் கடலாளுர் அல்லா தேவர் அம்பலத்தார்
ஊழி தேவர் தான் கட்டி உலகம் கார்க்க வல்லாரோ.

என்ற மொழிப்படி உழுகிறவன் இருக்கிறனே அவனுக்கு பாற்கடலில் பள்ளிக்கொண்டுள்ள மஹா விஷ்ணு கூட இணையாக முடியாது. அவனைப் போல பசித்தீர்க்க முடியாது. அம்பலத்தில் ஆடுகிற நடராசர் கூட காப்பாற்ற முடியாது. முப்பத்து முக்கோடி தேவர்கள் என்கிறார்களே அவர்கள் முக்தியை நாடி கைலாசத்திற்கும், வைகுண்டத்திற்கும் அலைந்துக் கொண்டிருப்பார்களே தவிர, பசியிலிருந்து காப்பாற்ற முடியாது, என்று இப்படி மேழிப்பிடித்து உழுகிறவனுக்கு சமானமாக விஷ்ணு, சிவன், முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகமாட்டார்களென்று அவ்வளவு பெருமையாக உழவர்களைப் பற்றி கம்பன் பாடியிருக்கிறார். ஆனால் இப்பேற்பட்ட மக்களுக்கு இவங்க என்னடான்ன ஆப்பு வைக்கிறங்க. (சிரிப்பு) இதுவா பூரண சுதந்திரம், இதுவா ராம ராஜ்யம். இதெல்லாம் நான் சொல்லி என்னவாக போகிறது. இங்கே தான் ஆடிக் காற்றிலே அம்மிபறக்கிற பாட்டில் என் கதி என்னவாகிறது. இதில் ஏழை விவசாயிகளுக்கு யாதொரு நன்மையுமில்லை என்ற காரணத்தால் இந்த சட்டத்தை நான் எதிர்க்கிறேன். எந்தக்கட்சி சார்பிலுமில்லை, மக்களுடைய சார்பில் இதை எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்,

* Sri T. KARIA GOUNDER : கனம் தற்காலிகத் தலைவர்
11 a.m. அவர்களே, நான் பேசுகிறபோது கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் வெளியே போய்விட்டார்கள். சீக்கிரம் வந்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன். எங்களை எல்லாம் ஏதோ நிலப் பிரபுக்கள் என்று சொல்லுவது வழக்கம். 6-ம் தேதியோடு நிலப் பிரபுக்கள் என்ற அத்தியாயம் முடிந்து விட்டது. நிலம் இல்லாதவர்கள் இப்பொழுது நிலப்பிரபுக்களாக மாறி விடபோகிறார்கள். எனக்கு முன் பேசிய மதிப்பிற்குறிய நண்பர் எல்லப்பன் அவர்கள் சொன்னார்கள் எப்ப நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பது என்று. எனக்குக்கூட தோன்றுகிறது. எங்களிடம் இருக்கும் நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு, கொடுக்கவேண்டிய நஷ்டயீட்டை கொடுத்து விட்டு எங்களையெல்லாம் நகரத்திலே குடியேற்றி விடட்டும். உலகம் இப்போது ரொம்ப வேகமாக போய்க்கொண்டிருக்கிறது. அப்படி உலகத்தில் விவசாயி என்று என்னைப்போன்றவர்கள் என் பதுங்கி இருக்கவேண்டும். மற்றவர்கள் ஏரோப்ளேனிலே போவதைப்போல் எங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமே. ஏரோப்ளேனில் ஒரு மணிக்கு 600, 700 மைல் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாய நண்பர்கள் எல்லாம் ஒழியவேண்டுமென்று பல நாட்களாக பேசுகிறார்கள்.

மதிப்பிற்குறிய நண்பர் சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், இவர்களுக்கு இப்போது யாரால், எங்கிருந்து எப்படி நிலம் வந்தது என்று. இப்பொழுது பேசியவர், கம்பராமாயணத்தில் இருந்து ஒரு உபமானம் சொன்னார்கள். நான் என்னைப்பொறுத்தவரையிலே திருக்குறளிலிருந்து ஒன்றை சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் மக்கள் திருக்குறளை நம்புகிறார்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றவர் தொழுதுண்டு அவர் பின்செல்பவர். அந்தக்காலத்திலேயே இருந்து எங்கள் பாட்டன், முப்பாட்டன், ஐந்தாவது பாட்டன், அவர்களிடம் இடத்தில் இருந்து நாங்கள் நிலத்தை வைத்திருக்கிறோம். என்னைப்பொறுத்தவரையில் நாங்கள் ஏதோ சட்டசபையிலே இருந்துக்கொண்டு ஏதோ பேசிவிட்டு போவதாக எண்ணிவிடக்கூடாது. ஊருக்குப் போனவுடனே காலை ஐந்து மணியில் இருந்து நான் நிலத்தைச் சுற்றி வருவது உண்டு. ஏர் உழுவதற்குக்கூட எனக்குத் நன்றாகத் தெரியும். அப்படி உழுதுக்கொண்டபடி புத்திசாலித்தனமாக ஏற்பட்ட நிலங்களைத் தவிர வேறொன்றும் இல்லை.



18th April 1960] [Sri T. Karia Gounder]

ரேஸுக்குப் போவது, சீட்டு ஆடுவது போன்றவைகளில் விரயம் செய்யாமல், பாதுகாத்து வைத்திருந்ததினால் இவ்வளவு நிலங்கள் வந்திருக்கின்றன. இவ்வளவு நான் சொல்கிறேன் என்றாலும், இப்போது சொத்தை பங்கிட்டுக் கொடுக்க குறுக்கே நிற்பதாக எதுவும் கிடையாது. ஏதோ கால் காணி, அரைக்காணி வரும். சிலர் பேசுகிறார்கள். நாங்கள் ஏதோ அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்றோ ஒரு ஜதை உழவு மட்டும் ஐந்து ஏக்கர் நிலமும் வாங்கிக் கொடுக்கிறதாகச் சொல்லுகிறார்களே அதைப் போன்று தேர்தலுக்கு நாங்கள் சொல்லவில்லை என்பதை இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உச்சவரம்பைப்பற்றி பல மாகாணங்களில் சொல்லுகிறார்கள். ஒரிஸ்ஸாவிலே 25 ஏக்கர் என்றும், அஸ்ஸாமிலே 50 ஏக்கர் என்றும் கொடுத்திருக்கிறது. மலையாளத்தில் 15 ஏக்கர் என்று சொல்லுகிறார்கள். மலையாள ராஜ்யம் சமீபத்திலே திருத்தி அமைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் எந்த அளவிற்கு உச்ச வரம்பு வகிப்பார்கள் என்பது தெரியவில்லை. இந்த நிலச் சட்டத்திலே ஏதோ சர்க்கார் விதிவிலக்கு செய்துவிட்டார்கள் என்று மேடையிலே சொன்னார்கள். சுதந்திர கட்சியிலே ஏதோ இதுபற்றிச் சொன்னதாக நேற்று நான் கேள்விப் பட்டேன். இந்தச் சட்டம் வந்தால் உலகமே அழிந்து போய் விடும், இந்தச் சர்க்கார் 1962 வரை விடுவதாக இருந்தால் இன்னும் 30 வருஷ காலம்வரை உறுதி கொண்டு விடுவார்கள் என்றுகூட நேற்றைய தினம் சொல்லப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டுவருவதிலே பலரும் திருப்தி அடைய வேண்டும் என்பதுதான் என் போன்ற விவசாயிகளினுடைய கடமை. நிலத்தினுடைய தன்மையில் ஊர் ஊருக்கு வித்தியாசம் இருக்கிறது. காளிங்கராயன் வாய்க்காலில் 20 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாயில் ஏக்கர் விலை இருக்கிறதே. அங்குள்ள நிலத்தில் தன்மையே வேறு. எங்கள் பாலாற்றுப்பக்கம் விலையே வேறு. அங்கு தண்ணீர் வருவதே கிடையாது. எங்களுக்கும் மானாவாரி பிரதேசங்கள் இருக்கின்றன. மழை பெய்தல் தான் எனக்கு விளைச்சல் உண்டு. இல்லாவிட்டால் ஒன்றும் இல்லை. அப்படி பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைமையில் மக்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்திலே சர்க்கார் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு ஒரே முடிவுக்கு வரக்கூடாது. ஜில்லாவிற்குச் ஜில்லா வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை ஜில்லா விவசாயிகளைப்போல் மற்ற ஜில்லாக்களிலே இருக்க முடியாது. இந்த நாட்டிலுள்ள 57 லட்சம் பட்டாதார்களில் சில ஆயிரம் பேர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று விவசாய வருமான வரி சட்டம் வந்த காலத்திலே சர்க்கார் கணக்குப்போட்டது. நிலத்திற்கும் நாம் உச்சவரம்பு பண்ணி விடுகிறோம். இந்தத் தலைமுறையுடன் நாங்கள் போய்விடுவோம். ஒன்றே ஒன்று சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இது ஏனென்றால், விவசாயிகளை போன்று மற்றவர்களையும் பார்க்கவேண்டும். விவசாயத்துறையில் இல்லாதவர்கள் ஒரு நாளைக்கு லட்சக்கணக்கான ரூபாய் லாபம் பெறுகிறார்கள். 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய்க்கு மோட்டார் வண்டிகள் வாங்கி அதில் ஏறிக்கொண்டு போவதைப்பார்க்கும்போது விவசாயிகளாகிய எங்களுக்கு சற்று பொறாமை ஏற்படத்தான் செய்கிறது. எங்களைப்போன்று விவசாயிகள் இருக்கும் நிலத்தையும் கொடுத்துவிட எண்ணுகிறார்கள். எங்களுக்கு உரிமை இல்லை என்று எண்ணுகிறார்கள். நாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்துவைத்ததன் பலனாகத்தான் சர்க்கார் இந்த சட்டம் கொண்டு வருகிறார்கள். எங்கள் முதுகில் அடித்தாலும் பரவாயில்லை வயிற்றில் அடிக்காது இந்தச் சீர்திருத்தங்களை செலக்ட் கமிட்டியிலே கொண்டுவந்து நன்மை செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சப் லீஸ்க்கு விடும் ஆட்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். இந்த சட்டத்திலே இதைப்பற்றி சொல்லவில்லை. கமிட்டியில் ஆகிலும் இதை கவனித்து பரிசீலனை செய்து 30 ஏக்கருக்கு என்று சர்க்காரிடத்தில் சப் லீஸ் போட்டுக்கொண்டு அவர்களுக்கு கீழே ஒருவனுக்கு குத்தகைக்கு விட்டு வாழ்கிறவர்களை எல்லாம் இதிலிருந்து விடுதலை செய்து ழுங்கான முறையில் கொண்டுவந்து சட்டம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri T. Karia Gounder] [18th April 1960

உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்று பிரச்னை இருக்கிறது. என்னுடைய மகன் படித்துவிட்டு உத்தியோகத்தில் இருந்து பின்னால் விவசாயத்திற்கு வரவேண்டுமானால் என்ன செய்வது. உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்றால் ஒரு விவசாயினுடைய மகன் விவசாயக் கல்லூரியிலே படித்து விவசாயத்திற்கு வரவேண்டுமென்றால் அப்போது என்ன செய்வது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே விதிவிலக்கு அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுவும் தவிர உழுபவனுக்கு 30 ஏக்கர் இருக்கவேண்டுமென்று உத்தேசம் இருக்கக்கூடாது. உழுபவனுக்கு இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று பிரித்து கொடுக்கவேண்டுமே தவிர அதற்கு மேல் கொடுக்கக் கூடாது. எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கும் அளவிற்கு நாட்டிலே நிலம் இல்லை. ஏதோ ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்கிறதே அதனால் விவசாயிகள் பலம் பெற்று விட்டார்கள் என்று சில பேர் நினைக்கிறார்கள். விவசாயிகளினுடைய நிலைமையை சர்க்கார் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

சர்க்கார் பழந் தோட்டத்திற்கும், தென்னந்தோப்பிற்கும் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று எல்லாம் பேசுவார்கள். எனக்குத் தென்னந்தோப்பு இருக்கின்றன. எனக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு நான் சொல்லுகிறேன், என்னுடைய தென்னந்தோப்புகளை சர்க்கார் எடுத்துக்கொண்டு அதற்குள்ள வருவாயை கொடுத்துவிட்டால் நான் சென்னையிலேயே நிம்மதியாக இருந்துவிடுவேன். தென்னை மரங்களுக்கு நோய்கள் வருகின்றன. இதனால் லட்சக்கணக்கான மரங்கள் பாதிக்கப்படுகின்றன. முன்பு எல்லாம் காலரா உண்டு. இப்போது காலரா வருவதில்லை. இதைவிட கேவலமான நிலைமையில் தென்னை மரத்திற்கு என் பகுதியில் நோய்கள் ஏற்பட்டிருக்கின்றன. அடியோடு இந்தச் சொத்தை இழந்துவிடக்கூடிய நிலையில் என் பகுதியில் உள்ள விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு கோடிக்கணக்கான முட்டை இடுகிறதாம் இந்தப் பூச்சி. இந்தப்பூச்சி எங்கிருந்து வந்தது. எப்படி வந்தது, எப்படி இதை அழிப்பது என்று ரொம்பவும் பரிசீலனை செய்துவருகிறார்கள். உத்தியோகஸ்தர்கள் இந்த நோயின் காரணத்தை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஏதோ நாங்கள் தென்னந்தோப்பை வைத்திருக்கிறோம். யதாவில் எங்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சிலர் நினைக்கலாம். நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். நாங்களும் ஜனநாயகத் தன்மையை உணர்கிறோம். உழவர்களிடமே பொறுப்பைக் கொடுக்கிறோம். அவர்களிடம் கொடுமையான வேலை வாங்குவதில்லை. ஏதோ காங்கிரஸ்காரர்கள் என்றால் பாவிகள் என்ற எண்ணத்தை முற்றிலும் மறந்துவிடவேண்டும். என்னிடத்தில் வேலை செய்கின்ற பெண் ஆள் இடத்திலே கூட 8 மணி வேலை வாங்குவதில்லை. 6 மணி வேலைதான் வாங்குகிறோம். எங்களுக்கும் நல்ல எண்ணம் இருக்கிறது. இரக்கம் இருக்கிறது. இந்த நாட்டிலே எல்லோரும் சுகமாக வாழவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கிறது.

இந்த நாட்டிலுள்ள எல்லோரும் வாழ வேண்டும் என்பதுதான் என் எண்ணம். விவசாயிகளைத் தவிர, ஆயிரக்கணக்கில் வருவாய் வரக்கூடிய மற்ற பிரபுக்களையும், அவர்களைப் பற்றியும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் எப்படியாவது தொலைந்து போகட்டும் என்றுதான் கருதுகிறார்கள். நேற்று கூட மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் சொன்னார்கள், இனிமேல் இங்கு அரிசி அனுப்பமாட்டார்கள், இங்கு அரிசி வராது, அங்கேயே காலியாகிப் போய் விடுமென்று. நான் நேரிலேயே அவரது பிரசங்கத்தைக் கேட்டேன். அடுத்தபடியாக, ஸ்ரீதனத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது, இங்கு. அதில் எனக்கு அக்கறையிருக்கிறது. தாய்மார்களுக்கு 30 ஏக்கர் என்று கொடுக்கும்போது, ஸ்ரீதன சொத்துக்கும் 30 ஏக்கர் கொடுக்க வேண்டுமென்பதுதான் என் எண்ணம். சின்னதுரை அவர்கள் அடிக்கடி தலையாட்டுகிறார்கள். கோடிக்கணக்கில் சம்பாதித்து விட்டு அதை செலவழிக்க முடியாது திண்டாடிக் கொண்டிருக்கிறவர்கள் அவர் ஊரில் இருக்கிறார்கள். ஆனால் அதை வைத்துக்



18th April 1960] [Sri T. Karia Gounder]

கொண்டு, எங்களைப் போன்ற ஏழை விவசாயிகளைப் பற்றி அவர்கள் சொல்லும்போது, எங்கள் மனம் கஷ்டப்படும்படியாக அவர்கள் சொல்லும்போது அவர்கள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். எங்களுக்கு யார் பாதுகாப்பு கொடுக்கிறார்கள் ? என்று. நாங்களும் கொடியைப் பிடித்துக் கொண்டு அறப்போர் செய்ய ஆரம்பித்தால், அப்படி போராட ஆரம்பித்தால் உலகமே அழிந்து போய்விடுமென்பதை அவர்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதைப்பற்றி சந்தேகிக்கவே வேண்டாம். நாங்கள் என்ன ப்ளாக் மார்க்கெட் செய்கிறோமா ? இல்லை நாங்கள் என்ன திருடுகிறோமா இல்லை நாங்கள் என்ன தப்புக் கணக்கு எழுதுகிறோமா ? என்பதை எல்லோரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாங்கள் என்ன தப்புக் கணக்கு எழுதி சர்க்காரை ஏமாற்றுகிறோமா ? ஆகவே எங்களைப் பற்றி இழிவாக நினைக்காமல் இருக்கும்படி எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பின், நஷ்டயீடு விஷயத்தில் 20 வருட வாய்தா என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 வருட வாய்தா என்றால் நாங்கள் எங்கள் சொத்துக்களை இழந்துவிட்டு அலைந்து கொண்டிருப்பதா எங்கள் வாழ்நாளில் ? என்று கேட்கிறேன். ஆகவே, இந்த 20 வருட வாய்தாவைக் குறைத்து நஷ்டயீட்டையும் அதிகப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சொத்துக்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருப்பதைப்பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சில சொத்துக்களுக்கு மத்திய அரசாங்க ப்ளானிங் கமிஷனால் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது சட்டத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேய்ச்சல் ஆதாரத்திற்கு விதிவிலக்கு 50 ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அதை அதிகமாக்கவேண்டும். நான் சொல்வதினால் நண்பர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. விதிவிலக்கு கொடுத்திருந்தாலும் சர்க்கார் சும்மா விட்டுவிடப் போவதில்லை. விவசாய வருமான வரி வசூலித்து விடுவார்கள், அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்திற்கு. பின்னர், பாக்குத் தோட்டத்திற்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். தேயிலைத் தோட்டத்திற்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். காப்பித் தோட்டத்திற்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். மாந்தோப்புகளுக்கு, தென்னந்தோப்புகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருந்தாலும், சும்மா விட்டுவிடப்போவதில்லை, அவைகளிலிருந்து வருகிற வருமானத்தின்பேரில் விவசாய வருமான வரி வசூலிக்கிறார்கள், வசூலிக்கப்போகிறார்கள். ஆக, இந்த மேய்ச்சல் ஆதாரத்திற்கு இருக்கக் கூடியதை ஒன்றிலிருந்து இரண்டு மடங்காக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கேயம் போன்றயிடங்களைப் பார்த்தால் தெரியும். சில இடங்களில் ஏக்கருக்கு பத்து ரூபாய் கூட வருவாய் வராது. நல்லசிவம் அவர்களுக்கும் இது தெரியும். சில யிடங்கள் பொட்டல் காடுகளாகயிருக்கிறது. அவைகளுக்கு விதிவிலக்கில் சலுகை காண்பிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ப்ளானிங் கமிஷன், நன்றாக விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சமீபத்தில் நான் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கோவை ஜில்லாவிற்கு, என் நண்பர் கருத்திருமன் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர்கள் விவசாயத்தைப் பார்க்கவேண்டுமென்று போயிருந்தேன். அவர்கள் வீட்டில் நாலைந்து அண்ணன் தம்பி இருக்கிறார்கள். அவர்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு, ஆளுக்கு 25 ஏக்கர்களுக்கு கீழ்தான் வரும். அவர்களை இந்தச் சட்டம் பாதிக்காது. நான் பார்த்ததில், அங்கு ஏக்கர் ஒன்றுக்கு 30-லிருந்து 40 மூட்டை விளையும் அளவிற்கு அவர்கள் திறமையாக விவசாயம் செய்வது கண்டு நான் வெட்கப்பட்டேன். ஏனெனில், நானும் விவசாயம் செய்கிறவன்தான். இவ்வளவு திறமையான விவசாயிகள் இருக்கிறார்களே, இவர்களுக்கெல்லாம் சர்க்கார் விதிவிலக்கு அளிக்கக்கூடாதா என்றுதான் நான நினைத்தேன், என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அப்படி திறமையாக விவசாயம் செய்கிறவர்களுக்கு, ப்ளானிங் கமிஷன் சொன்னமாதிரி விதிவிலக்கு அளிக்க இந்தச் சட்டத்தில் இடம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கோவில் சொத்துக்களைப்பற்றி சொல்லப்பட்டது. கோவில்களில் மடங்

களில் தவறுதல் நடக்கிறது என்று சொல்கிறார்கள், எனக்கு முன்பு பேசிய நண்பர் விஸ்வநாதன் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். நமது நாடு கடவுளின் பேரில் உள்ள நம்பிக்கையை இழந்து வருகிறது. 200 கோடி ஜனங்கள் உள்ள இந்த உலகத்தில், கடவுள் நம்பிக்கையுள்ள காலத்தில் நம் நாட்டில் இன்று மழை பெய்யாமல் இருக்கிறது. நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு காரணம், கடவுளின் பேரிலுள்ள நம்பிக்கை குறைவதுதான். எனக்கு ஆண்டவன் பேரில் நம்பிக்கை இருக்கிறது, ஆகவே என்னை எல்லோரும் பின்பற்றுங்கள் என்று நான் சொல்லவரவில்லை. எனது அபிப்பிராயம், இது. பிற ஜாதியாருக்கு, அவர்கள் எல்லோருக்கும் கடவுள் நம்பிக்கையிருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நமது எதிர்கால சந்ததியினரை தவறான பாதையில் இழுத்துச் செல்லாதீர்கள் என்றுதான் சொல்கிறேன். எனக்கு ஒரு பேரன் இருக்கிறான், அவன் நெற்றியில் விபூதியை இட்டால், ஏன் தாத்தா அதை இடுகிறீர்கள் என்று கேட்கிறான். மடாதிதிகளானாலும் சரி, அல்லது கோவில்களானாலும் சரி, தப்புக் கணக்கு எழுதுகிறவர்களை நீக்கி விட்டு ஒழுங்காக கணக்கு எழுதுகிறவர்களை நியமிக்க முயற்சி செய்ய வேண்டுமே தவிர கோவில்களே வேண்டியதில்லை, எல்லாவற்றையும் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்வது தவறு. கோவில் அல்லது மடங்களின் வருவாய் அதிகமாக இருந்தால் அதைக் கொண்டு சமய நூல்கள், சமயப் பள்ளிக்கூடங்கள் முதலியவைகள் ஏற்படுத்தி மக்களின் அறிவை வளருங்கள். முன்பு ஐந்து கோடி என்றிருந்த ஜனத்தொகை இப்பொழுது ஐம்பது கோடியாக வளர்ந்து விட்டது. ஆனால் இருப்பது, முன்பிருந்த அதே அளவு நிலம்தான். இருக்கிற அறிவும் அதேதான். ஆனால் குறுக்கு வழியில் அறிவு வளர்ச்சியடையும் இந்நாளில் கடவுள் பேரில் நம்பிக்கை வைப்பது மிக அவசியம். ஆகவே, தவறான பாதையில் மக்கள் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுத்து மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வழிவகைகளை ஏற்படுத்தி சட்டம் செய்து இதில் கொண்டு வருமாறு அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். (பெல்) கடைசியாக, நிலங்களிடையே உள்ள பாகுபாடுகளைக் கவனிக்க வேண்டும். தஞ்சையை எடுத்துக் கொண்டால் 200 ரூபாய் வருவாய் வரக்கூடியது, 300 ரூபாய் வருவாய் வரக்கூடியது என்று பலதரப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. சிலயிடங்களில் வருவாய் அதிகமாக வரும், சிலயிடங்களில் வருவாய் குறைவாக வரும். ஆகவே, இவைகளையெல்லாம் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டும். சர்க்கார் இந்தச் சட்டத்தை இந்த சபையில் கொண்டு வரும்போது அதை எல்லோரும் வரவேற்பார்கள் என்று நினைத்தேன். புலி வருகிறது, புலி வருகிறது என்று கடைசியாக சர்க்கார் இதைக் கொண்டு வந்திருக்கும்போது, இந்தச் சட்டத்தில் பல குற்றங்கள் இருக்கிறது என்று சொல்கிறார்கள். சில பேர்கள் இதில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று நினைக்கிறேன். அப்படியில்லாமல் எல்லோரும் கலந்து கொண்டு, எங்களைப் பாதிக்காமல் இருக்கும்படி சட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இதில் செலக்ட் கமிட்டி அங்கத்தினர்கள் தீவிர கவனம் செலுத்தவேண்டும். சின்னதுரை அவர்கள் எங்களுக்கு ஒரு வழி சொல்லாமல் விட்டு விட்டார்களே என்று வருந்துகிறேன். எங்களை அடியோடு தரைமட்டமாக்க நினைத்துக்கொண்டு, மேலே போகிறவர்களை விட்டு விட்டு எங்களைக் கீழே பிடித்து இழுக்கிறார்கள். எங்களைப் பிடித்துக் கீழே இழுத்தால், நாங்களும் எங்கள் மேலே போகிறவர்களைக் கீழே இழுக்கத்தான் வேண்டிவரும். எல்லோரும் ஒன்றுதான், ஆண்டவனிடத்தில் எல்லோரும் ஒன்றே, ஆகவே, சமுதாய ஏற்றத்தாழ்வு, வருவாயில் ஏற்றத்தாழ்வு, வேறு விதங்களில் ஏற்றத்தாழ்வு என்றில்லாமல் எல்லோரும் ஒன்றுதான் என்ற மனப்பான்மை வளர்ந்தால்தான் நாடு வளம் பெற முடியும். எதிர்க்கட்சி நண்பர், எங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்பதால் முப்பது வருடம் ஆசீர்வாதம் வாங்கி விட்டோம் என்றார்கள். நாங்கள் மெஜாரிட்டியாக இருந்தாலும்கூட, நீங்கள் எல்லோரும் இதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து இந்த நாட்டிலுள்ள விவசாயிகளும், மற்றவர்களும் நல்ல முறையில் வாழ்வதற்குரிய வகையில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.





*SRI P. URKAVALAN : கனம் தலைவர் அவர்களே, நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டும் சட்டத்தின் பேரில் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த நாட்டில் வாழும் ஏழை எளிய விவசாயிகள் எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தை சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள். அது வாஸ்தவம்தான். ஆனால் இந்தச் சட்டமானது ஏழைகள் வாழ்வதற்குரிய வகையில் அமைந்திருப்பதாக தெரியவில்லை. ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், ஜில்லாவாரியாக நிலத்தின் தரத்தை வைத்துக்கொண்டு இந்த ஸ்டாண்டர்ட் ஏக்கர்களை நிர்ணயிக்கவேண்டுமென்று. இன்று தஞ்சாவூரில் நீர்வளம், நிலவளமுள்ள இடங்கள் அதிகமாக இருக்கின்றன. அதே சமயத்தில் மழையையே நம்பி இருக்கக்கூடிய புஞ்சை பிரதேசங்கள் எவ்வளவோ மற்ற இடங்களில் இருக்கின்றன. தஞ்சாவூரில் இருக்கும் இடங்களுக்கு 30 ஏக்கர் என்று கணக்கு வைத்துக்கொண்டால் மற்ற இடங்களிலுள்ள புஞ்சை பிரதேசங்களுக்கு குறைந்தது 100 ஏக்கர் என்றாவது நிர்ணயிக்கவேண்டும். ஆகவே இதையும் இன்னும் சற்று ஆலோசித்து நல்ல முறையில் நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நியாய வாரச் சட்டம் என்று ஒரு சட்டத்தை நாம் கொண்டு வந்தோம். அது இப்போது எந்த முறையில் அமல் நடத்தப்படுகிறது என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும். நூற்றுக்கணக்கான விவசாயிகள் இன்று நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது மாதிரி, இனிமேல் இந்த சட்டத்திற்கும் பல திருத்தங்கள் கொடுத்து பல வழிகளை கொண்டு வந்து பலவிதமான சிக்கல்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்திவிட்டால் கிராமங்களில் வசிக்கின்ற விவசாயிகள் மிகவும் கெட்டுப் போவார்கள் என்பதை நாம் எல்லோரும் உணரவேண்டும். 60–40 சட்டம் கொண்டு வந்தும் அதன் பேரில் உழுபவனுக்கே நிலத்தில் அதிகமான அளவில் அதிகாரம் இருக்கவேண்டும் என்று சொல்லி சட்டம் கொண்டு வந்தும் அதில் ஏதாவது பல வழிகளை கண்டு பிடித்து, விவசாயிகளை அப்புறப்படுத்திவிடுகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு நிலம் கிடைக்கவேண்டுமென்றால், நல்ல முறையில் விவசாயம் செய்கிறவர்களுக்கு 10 ஏக்கர் அல்லது 15 ஏக்கர்கள் கொடுத்தால் போதுமானதுதான். ஆகவே இப்போது 30 ஏக்கர் என்று வைத்திருப்பதை குறைத்து 15 என்று இருந்தால்கூட இதில் எந்தவிதமான பாதகமும் இல்லை. ஆனால் பெருவாரியாக நிலம் படைத்தவர்கள், பெரிய நிலச்சுவான்வதார்கள் பரம்பரை பரம்பரையாக தாங்கள் வைத்துக் கொண்டிருந்த நிலங்களை பிரித்துக் கொடுப்பதற்கு கஷ்டப்படுவார்கள். அதற்குத்தான் நாம் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு இதில் வழிவகை செய்திருக்கிறோம். அதன்படி நஷ்டஈடு வாங்கிக்கொண்டு, ஏழை வாழுகின்ற நாட்டில், விவசாயிகள் வாழுகின்ற நாட்டில் எல்லோரும் நல்ல முறையில் வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு நிலங்களை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த நாட்டில் கோவில்களுக்கும் மடங்களுக்கும் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. கோவில்களுக்கு எல்லாம் ஏராளமான அளவில், உண்டியல்கள் மூலமாக வருவாய் வருகின்றது. இம்மாதிரிப்பட்ட கோவில்களுக்கு எல்லாம் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலங்கள் இருக்கின்றன. இதை மற்றவர்கள் கட்டுக்குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அதை அவர்கள் கீழ் இருக்கின்றவர்களுக்கு இரண்டாம் குத்தகைக்கு விட்டுக்கொண்டு இருக்கின்றனர். இவ்விதம் கோவில் நிலங்களை கட்டுக் குத்தகைக்கு எடுக்கின்றவர்கள் கார் வைத்துக்கொண்டு உல்லாசமாக வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கிறவர்கள்தான். இவர்களில் ஒருவராவது நேரிடையாக உழைப்பது இல்லை. 100 ஏக்கர் 200 ஏக்கர் என்று கட்டுக்குத்தகை எடுத்துக்கொண்டு பின்னால் அதைப் பிரித்து இரண்டாம் கட்டுக் குத்தகைக்கு கொடுத்து, அவர்கள் கீழ் இருக்கின்ற விவசாயிகளை கசக்கிப் பிழிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை நாம் எல்லோரும் உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த குத்தகைக்காரர்களுக்கு, நடுத்தரக்காரர்களுக்கு நாம் இதில் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். இவர்களும் ஐந்து ஏக்கர்கள் சாகுபடிக்கு வைத்துக்கொள்ள

[Sri P. Urkavalan] [18th April 1960

லாம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விதம் குத்தகைக்கு எடுக்கின்ற நடுத்தரக்காரர்கள் நிலத்தில் இறங்கி நேரிடையாக வேலை செய்கின்றார்களா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் தங்கள் கீழே இருக்கின்ற விவசாயிகளுக்கு கொடுத்து, அதன் மூலமாக ஊதியம் அடைந்துகொண்டிருக்கிறார்களே தவிர அவர்கள் யாரும் சொந்த விவசாயம் செய்வதில்லை. சொந்தமாக சாகுபடி செய்வதாக இருந்தால் அவர்கள் நிலம் வைத்திருப்பதில் தவறில்லை. அதல்லாமல் அவர்களும் சாகுபடி செய்யாமல் மற்றவர்களுக்கு சாகுபடிக்கு கொடுத்து அதன் மூலமாக சம்பாதித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் ஏன் 30 எக்கர் கொடுக்கவேண்டும் என்று தான் நான் கேட்க விரும்புகிறேன். திருவாடுதுறை ஆதீனத்தை எடுத்துக்கொண்டால், பல இடங்களிலும் இந்த ஆதீனத்திற்கு ஆயிரக்கணக்கான எக்கர்கள் இருக்கின்றன. இது போன்ற தர்ம சொத்துக்கள், தேவஸ்தான மடங்கள் இவற்றிற்கு எல்லாம் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கோவில்களை பொறுத்தவரையில் 200 எக்கர்கள் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நியாயமல்ல, தர்மமுமல்ல, இது அதர்மம் என்றுதான் சொல்லவேண்டும். கோவில்களுக்கு அதற்கு வேண்டிய செலவுக்கு உண்டியல்கள் மூலமாக வருவாய் வருகிறது. அவர்களுக்கு, அதாவது இந்த கோவில்களுக்கு கண்டிப்பாக நிலம் வைத்திருக்கவேண்டுமென்றால், 50 எக்கர்கள் கொடுத்துவிடுங்கள், 200 எக்கர் இவைகளுக்கு என்ன அவசியம் ? இவைகளை எல்லாம் சாகுபடி செய்யப்போகிறார்களா ? கோவில்களிலுள்ள சாமியா சாகுபடி செய்யப்போகின்றது ? ஆகவே நிலத்திற்கு நன்றாக விவசாயம் செய்து பாடுபடுகின்ற விவசாயிகளுக்கு இந்த நிலங்கள் உபயோகப்படுகிற முறையில் இந்தச் சட்டத்தை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போவதாகத் தெரிகிறது. செலக்ட் கமிட்டியில் அங்கத்தினர்களை போடுகிற விஷயத்தில், இதில் கிராமத்திலுள்ள விவசாயிகளின் நிலையைத் தெரிந்தவர்கள், அவர்களுடைய வாழ்க்கையில் அன்றாடம் ஈடுபட்டிருப்பவர்கள், இவர்களை இந்தக் கமிட்டியில் போடவேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், பெரிய பெரிய நிலச்சுவான்தார்களையும், பெரிய பெரிய வக்கீல்களையும் இந்தக் கமிட்டியில் போட்டால் அவர்கள் பல திருத்தங்களை செய்து குட்டையை குழப்பி நாசம் பண்ணி, ஏழை விவசாயிகளுக்கு எந்த விதமான பயனுமில்லாதவகையில், லாயக்கில்லாத முறையில் ஆக்கிவிடுவார்கள் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்களிடத்தில் நேற்று முன்தினம் ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறேன். திருவாடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இடத்தில் 100 எக்கர்களை ஒருவர் கட்டுக்குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் இரண்டாம் குத்தகைக்கு கொடுத்து அதில் நாலில் ஒரு பங்கை விவசாயி எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், மூன்று பங்கை தங்களிடம் கொடுத்துவிடவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்றே தெரியவில்லை. நியாயவார சட்டத்தை நாம் போட்டிருக்கிறோம். ஆனால் இங்கே நடபபது இவ்விதம் இருக்கிறது. இவ்விதம் குத்தகைக்கு எடுக்கின்றவர்கள் நஷ்டமடையவேண்டிய அவசியமே இல்லை, அவர்கள் இந்த நிலத்தை 37 ஆயிரம் ரூபாய்க்கு எடுத்திருக்கிறார்கள், ஆனால் ஒரே வருடத்தில் அவர்களுக்கு 85 ஆயிரம் ரூபாய் கிடைத்துவிட்டது. இப்படியிருக்கும்போது ஏன் இதை விவசாயிகளுக்கு விட்டுக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். ஆகவே இதைப்பற்றி நன்றாக ஆலோசித்து அதற்குத் தகுந்தபடி சட்டத்தை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதில் மேய்ச்சல் தரையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மேய்ச்சல் தரை என்பது எப்போதும் தரிசாகத்தான் இருக்கும். விவசாயத்திற்கு வேண்டிய அல்லது அதற்கு உபயோகப்படக்கூடிய நிலத்தை எடுத்து மேய்ச்சல் தரையாக ஒதுக்கிவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தென்னந்தோப்பு முதலியவைகளுக்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது அவசியமில்லை. தென்னந்தோப்பில் எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் வருவாய் வந்துகொண்டிருக்கும். சிலர் அதிகமான அளவில் தோப்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை ஓரளவு குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை-



18th April 1960] [Sri P. Urkavalan]

யென்றால் நாம் உணவு உற்பத்தியை அதிகமாக பெருக்க முடியாது, என்பது மட்டுமல்ல, இந்த சட்டத்தினால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் போய்விடும், இந்த சட்டமும் அவசியமில்லாமல் போய்விடும், ஆகவே இதை நன்கு உணர்ந்து பொறுக்கு கமிட்டியில் நல்ல முறையில் ஓரளவுக்கு திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று கூற விரும்புகிறேன். குடியிருப்பு நிலத்தில் அவர்கள் எவ்வளவு காலத்திற்கு முன்னாலிருந்து குடியிருந்தாலும் சிற்சில இடங்களில் அகற்றப்படுகிறார்கள். 11-3 a.m. இடத்திலிருந்து அகற்றுவதோடுகூட அவர்களை பெரிய நஷ்டத்திற்கும் உள்ளாக்குகின்றார்கள். ஆகையால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும். குடியிருப்பிலே அவர்கள் மரம் வைத்து உற்பத்தி செய்திருப்பார்கள். குடியிருப்பிலே இருக்கக்கூடிய மரத்திற்கு இதிலே விதிவிலக்கு கொடுக்கவேண்டும். அவர்கள் மரம் வைத்து, வளர்த்து, பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இதில் அவர்களுக்கு எந்த வித உரிமையும் இல்லாமல் செய்துவிட்டால் நாளை யாருமே மர உற்பத்தி செய்ய இயலாமல் போய்விடும். இந்தச் சட்டத்தை நல்ல முறையில் கொண்டுவந்து நாட்டில் வாழும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களுக்கு ஸ்திரீதன சொத்து அவசியம்தான். ஸ்திரீதன சொத்து அவசியம் என்றாலும், இப்போது புருஷன், பெண்சாதி, குழந்தைகளுக்கு 30 எக்கர் என்று வைத்திருக்கிறது. அதற்கு மேல் பெண்களுக்கு ஏன் ஸ்திரீதன சொத்து ? அது தேவையில்லை.

தவிர 5 எக்கர் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம், கட்டுக் குத்தகைதாரர்கள் 5 எக்கர் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லும்போது, இப்போது அந்த 5 எக்கரில் சாகுபடி செய்யக்கூடியவர்கள் ஆயிரக்கணக்கில் வெளியே போகப்போகிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க என்ன செய்திருக்கிறார்கள் என்று நன்கு பரிசீலனை செய்யவேண்டும். மீதி வரக்கூடிய நிலத்தை, லாண்ட் போர்ட்டோ என்னவோ அமைத்து, அதற்கு அப்பால் நிலத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் அல்லது கூட்டுறவு விவசாயப் பண்ணை அமைக்கவேண்டும் என்றால் எது வரையில் அவர்கள் காத்திருக்கமுடியும். அவர்கள் தெருவில் போகவேண்டிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே உடனடியாக 5 எக்கர் நிலத்தை சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று இருப்பதை மாற்றியாகவேண்டும். இல்லை என்றால் நிலத்தை விட்டு வெளியேறும் விவசாயிகளுக்கு உடனடியாக பரிகாரம் செய்யவேண்டும். ஏனென்றால் அவர்களே நிலத்தை உழுபவர்கள், நாற்று நடுபவர்கள், கஷ்டப்படக்கூடியவர்கள், ஏழை விவசாயிகளாக இருப்பவர்கள். ஒரு செண்ட் நிலம்கூட உடமையாக இல்லாதவர்கள், சாகுபடி செய்துகொண்டு இருப்பவர்கள் இவர்கள். அவர்களுக்கு வேண்டிய வழிவகை செய்யவேண்டும். இல்லையென்றால் பெரிய கூக்குரல் கிளம்பும். ஆகவே இதனை நன்கு உணர்ந்து 5 எக்கர் சொந்த சாகுபடிக்கு எடுக்கும் நேரத்தில் அந்த நிலத்திலிருந்து வெளியேறும் விவசாயிகளுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்களுக்கு உடனடியாக நிலம் கிடைக்க வழிவகைகள் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தவிர, இப்போது நாம் உச்ச வரம்பு என்று 30 எக்கர் வைத்து சட்டம் கொண்டுவருகின்றோம். இந்தச் சட்டம் வந்து அதை அமுல் நடத்தக்கூடிய காலத்திலே பெரிய சிக்கல்கள் ஏற்படும். 30 எக்கர் என்று இருப்பதை ஓரளவுக்கு குறைத்து 20 எக்கர் என்று கொண்டுவரவேண்டும். அல்லது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதை நிறுத்தவேண்டும்.

கோவிலுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் 200 எக்கர் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அதற்கு மேல் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். அதெல்லாம் அவசியமில்லை. கோயில்களுக்கு பூஜை நடத்த, திருவிழா நடத்த போதிய வருவாய் இருக்கிறது. ஆகவே அதிகப்படியாக வருமானம் இருந்தால் என்ன பிரயோசனம். ஆண்டவனை

ஏழைப் பங்காளன் என்று சொல்வார்கள். அந்த பெயருக்கேற்ப அந்த நிலத்தினால் ஏழைகள் பிழைக்கட்டும். நாம் சட்டம் கொண்டு வருவது உலகத்தில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வு மறைய வேண்டுமென்பதற்காகத் தான். ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டுமென்பதற்காகத்தான். படித்தவன், படிக்காதவன் என்ற வித்தியாசம் இல்லாமல் செய்வதற்காகத் தான். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு மறையத்தான். அதற்காகத் தான் சட்டம் கொண்டுவருகின்றோம். கொண்டுவரக்கூடிய சட்டம் எல்லோருக்கும் பயன் தரக்கூடியதாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்திற்கு வேண்டிய திருத்தங்களை நல்ல முறையில் கொண்டு வந்தால், இந்தச் சட்டத்தை சீரான முறையில் அமுல் நடத்த ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI P. U. SHANMUGAM : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நிலச் சட்டம் குறித்து நடைபெறுகிற இந்த விவாதத்தில் நானும் பங்கெடுத்துக்கொண்டு எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நீண்ட நாளாக பல்வேறு கட்சிகளால் பேசப்பட்டு வந்த சட்டம், நெடுநாட்களாக ஆளும் கட்சியினால் வலியுறுத்திச் சொல்லப்பட்டு வந்த சட்டம், நாட்டிலுள்ள ஏழை எளியவர்களால் பெரிதும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டு வந்த சட்டம், பெரியதனக்காரர்களான மிராசுதார்களை பயமுறுத்துவதற்கு உதவியாக இருந்த சட்டம், ஏழை எளியவர்களிடமிருந்து சர்க்காருக்கு ஓட்டு வாங்குவதற்காக உதவியாக இருந்த சட்டம் இன்றைய தினம் இந்த மாமன்றத்தில் விவாதத்திற்கு வந்து பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப இருக்கிறது. தங்கள் மூலமாக சர்க்காருக்கு நான் தெரிவித்துக் கொள்வேன், இந்தச் சட்டம் வருகிறது, வருகிறது என்று சர்க்கார் சொல்லி மிராசுதார்களை பயமுறுத்தப் பயன்பட்டதே தவிர ஏழைகளை மயக்குவதற்குப் பயன்பட்டதே தவிர, உண்மையிலேயே பெரிய மிராசுதார்கள் இந்தச் சட்டத்தினால் பாதகமடைந்திருக்கிறார்களா ? கிடையாது. இந்தச் சட்டம் வருவதனால் ஏழைகள் தங்களுக்கு லாபம் இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தார்களே, அந்த ஏழை விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தினால் ஏதாவது லாபம் உண்டா, அவர்கள் ஏதாவது லாபம் அடைந்திருக்கிறார்களா கிடையாது. என்னைப் பொறுத்த வரையில் நான் ஒன்று சொல்வேன், இதன் விளைவாக ஆளும் கட்சிக்கு லாபம் இருந்திருக்கிறது—சர்க்காருக்குக்கூட ஓரளவு லாபம் இருந்திருக்கிறது. ஆளும் கட்சிக்கு லாபம் என்று சொல்வது இந்தச் சட்டத்தைக் காட்டி மிராசுதார்களிடத்திலிருந்து நிதியும், ஏழைகள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிற ஓட்டையும் பெறுவதற்கு இந்தச் சட்டம் பயன்பட்டிருக்கிறது. லாபம் சர்க்காருக்கு என்று நான் குறிப்பிட்டது, இந்தச் சட்டம் வருவதன் காரணமாக நிறைய ஸ்டாம்ப் (முத்திரைத் தாள்கள்) விற்றிருக்கிறது—அந்த வகையில் சர்க்காருக்கு லாபம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படவேண்டிய பெருந்தனக்காரர்கள் பாதிக்கப்படுவது கிடையாது. ஏனென்றால் சர்க்கார் நீண்ட தவணையைக் கொடுத்து, இருக்கக்கூடிய நிலங்களை சொந்தக்காரர்கள், மற்றும் உறவினர்களுக்கு எழுதி வைக்க அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, எல்லா வேலையையும் செய்து முடித்தாகிவிட்டதா என்று கண்காணித்து, ஜாடை மாடையாக பேசியதிலிருந்து அறிந்த பிறகு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினால் ஏழை விவசாயிகளுக்கு லாபம் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கம் இருந்திருந்தால்—இனியேனும் செய்யவேண்டுமென்று கருதினால்—இந்தச் சட்டம் 5 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லட்டும். அப்படிச் சொன்னால்தான் இது வரையில் இந்தச் சட்டம் வரப்போவதற்காக வேண்டி செய்யப்பட்ட பினாமி மாறுதல்கள், கிரயங்கள் எல்லாம் ஒருபுறமாக ஒதுக்கி வைக்கப்பட்டு, சர்க்கார் எதிர்பார்த்த நிலம் கிடைக்க வழி ஏற்படும். ஆனால் நீண்ட அவகாசம் கொடுத்ததன் பயனாக மிராசுதார்கள், பெருந்தனக்காரர்கள் எல்லாம் நிலத்தைப் பிரித்து எழுதி வைத்துவிட்டார்கள். இனியும் 30 ஏக்கருக்கு மேல் இருந்து சர்க்கார்



எடுத்துக்கொள்வதற்கு நிலம் இருக்குமா என்றால் என்னைப் பொறுத்த வரையில் இல்லை என்றுதான் சொல்வேன்—அம்மாதிரி சர்க்கார் எதிர்பார்ப்பார்களானால் அது ஆச்சரியம்தான். சர்க்கார் நிலத்தை வாங்கி ஏழைகளுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் மிராசுதார்களை உஷார்படுத்தி அதிகப்படியாக இருக்கக்கூடிய நிலத்தைப் பிரித்து எழுதிவைத்து விடுவதற்கு வழி செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை என்னால் கூறாமல் இருக்கமுடியாது. கழுத்தில் மணியைக் கட்டிக்கொண்டு பூனை எலி பிடிக்க முடியாது. கொண்டு வரப் போகிறோம், கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லி, நீண்ட அவகாசம் கொடுத்து, சட்டத்திற்காக வேண்டி நிலத்தை உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் எழுதி வைக்க ஏற்பாடு செய்துவிட்டு, இப்போது அதிகப்படியாகவுள்ள நிலத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம் என்று சொல்லுவதானது ஆச்சரியமாகவே இருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டது 30 ஏக்கரே அதிகம் என்று. நானும் கூடச் சொல்வேன், இது அதிகமானது. அதற்கு முன்பு ஒரு வார்த்தை. இதற்கு முன்பு ஒரு முறை இதே மாமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தனியார் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திலே நான் பேசும்போது சொன்னேன், புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லுகிறீர்களே, எப்போது புலி வரும், வரும் புலி சினிமாப் புலியா, சீறும் புலியா, அல்லது வைக்கோல் வைத்து அடைக்கப்பட்ட புலியாக இருக்குமா என்று கேட்டபோது, உணவு—போலீஸ் அமைச்சராக இருக்கக்கூடிய கனம் பக்தவச்சலம் அவர்கள் பசுத்தோல் போர்த்திய புலியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். இந்த மசோதா பசுத்தோல் போர்த்திய புலியாக வந்திருக்கிறதா என்றால், உண்மையிலேயே, இது அப்படி வரவில்லை, இது புலித்தோல் போர்த்திய நரியாகத் தான் வந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. சட்டத்தால் பாதிக்கப்படவேண்டியவர்கள் இந்த மசோதாவால் பாதிக்கப்படவில்லை, லாபமடைய வேண்டிய உழுகிற குடியானவர்கள் இந்த மசோதாவால் லாபமடைய முடியாது என்பதைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இந்த மசோதாவில் நில உடமை உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அடுத்து ஒன்று கூற விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விவசாய வருமான வரிச் சட்டத்தில் அந்த வரிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஸ்டாண்டர்ட் ஏக்கரைவிட அதிகமாக இருக்கின்றது, இந்த மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஸ்டாண்டர்ட் ஏக்கர். விவசாய வருமான வரிச் சட்டத்தில், 8 ரூபாய் வரி கட்டக்கூடிய பூமி ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில், 10 ரூபாய் வரி கட்டும் பூமிதான் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 8 ரூபாய் வரி கட்டக்கூடிய பூமியே ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இந்த மசோதாவிலும் நிர்ணயித்திருந்தால் இந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் அளக்கும் பூமியின் பரப்பளவு குறைந்திருக்கும். இந்த வித்தியாசத்தால் சர்க்காருக்கு லாபம் இல்லாவிட்டாலும், உழும் ஏழைகளுக்கு லாபம் ஏற்படவேண்டும் ; இல்லாவிட்டால் நிலச்சுவான்தார்களின் உறவினர்களுக்காவது லாபம் ஏற்படவேண்டும். அவர்கள் யாருக்கும் லாபம் ஏற்படாத நிலையில் இந்த வித்தியாசத்தை ஏன் சர்க்கார் ஏற்படுத்தினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. பொதுவாக இரு சட்டங்களுக்கிடையே இவ்வாறு ஸ்டாண்டர்ட் ஏக்கர் அளவில் வித்தியாசம் இருப்பது நல்லதன்று. பொறுக்குக் குழுவினர், இந்த வித்தியாசத்தை நீக்குவதன் பொருட்டு 8 ரூபாய் வரிக்குரிய பூமியையே ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கராக நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

குடும்பம் என்று சொல்லும்போது, இந்த மசோதாவில், 5 பேர்களுக்கு மேற்படாதவர்கள் ஒரு குடும்பம் என்று சொல்லப்பட்டிருக்கிறது ; ஆனால், குறைந்தபட்ச அளவு இந்த மசோதாவில் நிர்ணயிக்கப்படவில்லை. அப்படியானால், ஒரு ஆள்கூட ஒரு குடும்பமாகக் கருதப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். ஒரு ஆள் ஒரு குடும்பம் என்று சொல்வது பொருத்தமானதல்ல. இதையும் பொறுக்குக் குழுவினர் கவனிக்க வேண்டும். ஒரு தனி ஆள் குடும்பம் என்று கருதப்படுமானால், சிலர் தங்கள் குடும்பங்

களிலுள்ள ஒவ்வொருவரும் தனித்தனிக் குடும்பம் என்று சொல்லி யாரிடமும் 30 எக்கர்களுக்கு மேற்படாத அளவுக்கு நிலம் இருக்கும்படி தங்களிடமுள்ள மொத்த நிலங்களைப் பிரித்து எழுதிவைத்துக் கொண்டுவிடுவார்கள். இந்த முறையில் சட்டமியற்றினால், "வழக்கறிஞர்கள் அலமாரியில் ஒரு புத்தகத்தை சேர்த்தோம்" என்று இந்த ஆட்சியாளர்கள் பெருமை கொள்ளலாமே தவிர நாட்டில் பலனடைய வேண்டியவர்களுக்கு பலன் ஏற்படாது. இந்த மசோதா சட்டமாக நிறைவேறுவதாகவே வைத்துக்கொள்வோம். சட்டம் நிறைவேறிய பிறகு, இந்த ஆட்சியாளர்கள் "நாங்கள் நிலச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டோம்" என்று மக்களிடம் பெருமையாகப் பேசுவதற்கு இச்சட்டம் பயன்படுமே தவிர, "பாடுபடும் விவசாயிகள் இந்தச் சட்டத்தால் லாபமடைந்திருக்கிறார்களா" என்று அவர்கள் இவர்களிடம் திருப்பிக் கேட்டால், அதற்கு பதில் சொல்ல யாராலும் முடியாது.

இந்த சர்க்கார் இந்த மசோதாவில் பலவற்றிற்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். இதில் தேயிலை, காப்பிக்கொட்டை, ப்ளாண்டேஷன்ஸ் இவைகளுக்கு ஏன விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அகில இந்தியத் திட்டக் கமிஷனே இவற்றிற்கு விதிவிலக்கு அளித்திருப்பதாக குறிப்பிலிருந்து அறிகிறேன். இவைகளுக்கு ஏன் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நாட்டில் இருக்கும் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் இந்த நாட்டு மக்களிடம் இல்லை என்பது நாடறிந்த உண்மை. அவை வெள்ளைக்காரர்களிடம் இருக்கின்றன. நான் தாழ்மையோடு ஒன்றுகூற விரும்புகிறேன். இந்த மன்றத்தில் மதிப்பிற்குரிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் எங்களைப்பற்றிப் பேசும்போது, நாங்கள் வெள்ளைக்காரர்களின் தாசர்கள் என்றும் வெள்ளைக்காரர்களுக்கு வால்பிடித்தவர்கள் என்றும் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இங்குமட்டுமன்றி, வெளியிலும் மதிப்பிற்குரிய அமைச்சர்களும் மற்றவர்களும் எங்களைப்பற்றி அவ்வாறு பேசிவந்திருக்கிறார்கள். நாங்கள் வெள்ளைக்காரர்களின் தாசர்களா, அல்லரா என்பது வேறு விஷயம். அது எப்படி இருந்தாலும், வாதத்திற்காக நாங்கள் வெள்ளைக்காரர்களின் தாசர்கள் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொண்டு, வெள்ளைக்காரர்களை எதிர்த்து அவர்களை நாட்டைவிட்டு விரட்டிய இந்த வீரர்களை நான் ஒன்று கேட்கிறேன். "இந்நாட்டிலுள்ள வெள்ளைக்காரர்களுடைய நிலங்களை நில உடைமை உச்ச வரம்பு சட்டத்திற்கு உட்படுத்த நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? அவைகளை அச்சட்டத்திற்கு உட்படுத்தினால் ஒரு வேளை காமன்வெல்த் குடும்ப பாசம் அறுந்துபோகும் என்று நீங்கள் பயப்படுகிறீர்களா? அவைகளை அச் சட்டத்திற்கு உட்படுத்தினால், காமன்வெல்திலுள்ள இந்திய சர்க்கார், எலிஸபெத் இராணியின் கோபத்திற்கு ஆளாகும் என்று எண்ணுகிறீர்களா? அரிசி உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நிலங்களை நில உடைமை உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்படுத்தும் நீங்கள் காப்பி, தேயிலை உற்பத்தி செய்பவர்களின் நிலங்களை ஏன் நில உடைமை உச்ச வரம்புச் சட்டத்திற்கு உட்படுத்தவில்லை". இதற்கு இந்தச் சர்க்கார் கட்டாயம் சமாதானம் கூறித்தாணுக வேண்டும். காப்பி, தேயிலை உற்பத்தி செய்யப்படும் நிலங்களின் உடைமைக்கும் உச்ச வரம்பு விதிக்கும் பொறுப்பை பொறுக்குக் குழு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அவைகளுக்கு நில உடைமை உச்ச வரம்பு நிர்ணயிக்கக் கூடாது என்று திட்டக் குழு அறிக்கை வெளியிட்டிருப்பதால் அதைச் செய்ய முடியவில்லை என்று பொறுக்குக் குழு சொல்லக்கூடும். அந்த நிலங்களின் உடைமைக்கும் உச்ச வரம்பு விதிக்க வேண்டும் என்பதை பொறுக்குக் குழு திட்டக் குழுவிடம் வற்புறுத்தி, அவைகளுக்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்த மசோதாவை இந்த மன்றத்தில் எள்ளளவும் சட்டமாக நிறைவேற்ற முடியாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன். காப்பி, தேயிலை, பயிரிடப்படும் நிலங்களின் உடைமைக்கும் கட்டாயம் உச்ச வரம்பு விதிக்க வேண்டும். மேலும், இந்த மசோதாவில் பல தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பாக்குத் தோப்புகள், மாந்தோப்புகள் ஆகிய தோப்புகளுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய செங்கம் தொகுதி உறுப்பினர் ஒருவருடைய தோப்பில் லட்சம் மாமரங்கள் பாழாகியிருப்பதாகக் குறிப்பிட்டார். லட்சம் மாமரங்கள் வைத்திருப்பவர் சாதாரண ஏழையாக இருக்கமாட்டார். அவரிடம் லட்சம் மாமரங்கள் இருக்கின்றன என்றால் அவரிடம் எத்தனை எக்கர் நிலம் இருக்க வேண்டும்? அத்தனை மாமரங்கள் வைத்துக்கொண்டிருப்பவரின் நிலஉடைமைக்கு தோப்பு என்ற வகையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் சமுதாயத்திற்கு இதைவிட வேறு என்ன அநீதி செய்ய முடியும்? மேலும், சவுக்கு மரங்களுக்கு, "மரங்களை வெட்டும் வரையிலும் அல்லது 6 ஆண்டு காலத்திற்கு" என்ற முறையில் விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மரங்களை வெட்டுபவன் மீண்டும் சவுக்கையே பயிரிட்டால் என்ன செய்வது? இந்த விஷயங்களையெல்லாம் மசோதாவில் தெளிவாகச் சொல்ல வேண்டும். இந்த மசோதாவில் இது போன்ற பல சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு சாராரைத் திருப்தி செய்வதற்காக மட்டும் விதிவிலக்குக் கொடுக்கக்கூடாது. மேலும், சர்க்கரை ஆலைகளுக்குப் பயன் படக்கூடிய கரும்பு சாகுபடியாகும் நிலங்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு விதிவிலக்குக் கொடுத்திருக்கும், இந்த சர்க்கார் சர்க்கரை ஆலைகளில் பணம் போடுபவர்கள் ஏழைகள் என்று எண்ணுகிறார்களா? எக்காரணத்திற்காக அந்த நிலங்களுக்கு இந்த சர்க்கார் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். உத்தரப் பிரதேசத்தில் பெரிய சர்க்கரை ஆலை முதலாளிகள் இருக்கிறார்கள். இந்த ராஜ்யத்தில் உள்ள சர்க்கரை ஆலை முதலாளிகளும் பெரிய முதலாளிகள்தான். இந்த நிலச்சுவாந்தார்களை பூஷ்வாக்கள் என்று சொல்லலாம். அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் விதிவிலக்குக் கொடுக்க வேண்டும்? இந்தக் குறையையும் பொறுக்குக் குழுவினர் நீக்க வேண்டும்.



மேலும், கல்விக்காக தர்ம ஸ்தாபனங்கள் பெயரில் நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தால் அவைகளுக்கு இந்த மசோதாவில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சில பெரும் பணக்காரர்கள் கல்விக்காக என்று ஒரு சிறு தொகையை ஒதுக்கிவிட்டு பெரும் தொகையை விழுங்குவார்கள். சௌகார்பேட்டையில் அநியாய வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் அகத்திக் கீரையை வாங்கி மாட்டுக்குப் போட்டு அவர்களுடைய பாவத்தைத் தொலைப்பதாகச் சொல்கிறார்கள். அதுபோல், ஏராளமாக நிலம் வைத்திருப்பவர்கள் கொஞ்சம் நிலத்தைக் கல்வி ஸ்தாபனங்களுக்கு எழுதிவைத்துவிட்டு பாக்கியையெல்லாம் அவர்களே விழுங்குவதற்கு மசோதாவில் இடம் கொடுக்கக் கூடாது. இதையும் பொறுக்குக் குழுவினர் கவனிக்க வேண்டும். நாங்கள் இதையெல்லாம் சொல்லும்போது, நாட்டில் உள்ளவர்கள்மீது இவர்களுக்குத்தான் அக்கறை இருக்கிறதோ என்று கேட்கக்கூடும். இன்று உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால் சர்க்கார் நாட்டில் புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கக்கூடிய வகையில் சட்டமியற்ற வேண்டும்.

இந்த மசோதாவில் மடங்களுக்கு 200 எக்கர்கள் நில உடைமை உச்ச வரம்பாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மடங்களிலே மடாதிபதிகள் இருக்கிறார்கள். நடமாடும் குடும்பத்திற்கு 30 எக்கர்தான் நில உச்ச உடைமை வரம்பாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குடும்பமே இல்லாத, பற்றோ பாசமோ இல்லாத, துறவுக் கோலத்தில் இருப்பவருக்கு நில உடைமை உச்ச வரம்பு 200 எக்கராக நிர்ணயிக்கப்படுகிறது. கடவுளுக்குப் பக்கத்தில் இருக்கும் ருத்ராட்சப் பூனைக்கா 200 எக்கர்! நாட்டில் சினிமாக் கொட்டகைகளிலும் மற்ற இடங்களிலும் சுவரொட்டிகளின் மூலம் "சிறுகச் சிறுகப் பணத்தைச் சேமித்து வையுங்கள்" என்று ஏழை மக்களிடம் இந்த சர்க்கார் சொல்கிறார்கள். ஆனால் இந்த சர்க்கார் ஏழை மக்களுக்கு நில உடைமை உச்ச வரம்பை 30 எக்கராக நிர்ணயித்துவிட்டு, பெரிய பூஷ்வாக்களுக்கு அதை 200 எக்கராக நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த சர்க்கார் பூஷ்வாக்களுக்கு இதை 200 எக்கராக நிர்ணயித்திருப்பது அநியாயம், அக்கிரமம் என்று சொல்வேன். இந்த ஷரத்துக்களை யெல்லாம் மாற்றியமைக்க வேண்டும்.

நான் நிலச் சீர்திருத்த மசோதாவைப் பொதுவாக வரவேற்கிறேன். அதே சமயத்தில் இந்த மசோதாவில் நான் குறிப்பிட்ட மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இந்த மசோதாவைப் பத்திரிகைகள் வரவேற்கின்றன என்றால், அதற்குக் காரணம், இந்த நிலச் சீர்திருத்த மசோதா இன்னும் கடுமையாக ஆகிவிடுமோ என்று அவை அஞ்சுவதுதான் ஆகும். இந்த மசோதாவை இப்போது வரவேற்பவர்கள் இது இப்படியே நிறைவேறுமானால் இதை ஆதரிப்பார்கள். இது இப்படியே சட்டமாக நிறைவேறுமானால் அவர்களுக்குக் கஷ்டம் இல்லை, லாபம்தான். "அவசியமான மாறுதல்களை மசோதாவில் செய்யாது மசோதாவை நிறைவேற்றி விட்டு, நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டோம் என்று பெருமையடித்துக்கொள்ள எண்ணுகிறீர்கள், மசோதாவில் நல்ல மாறுதல்களைச் செய்து நாட்டில் உள்ள ஏழை மக்கள் சட்டத்தால் பயனடையக்கூடிய வகையில் சட்டமியற்றுங்கள்" என்று தங்கள் மூலம் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **Sri P. JAYARAJ** : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, இன்று விவாதத்தில் இருக்கின்ற நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும் மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று பல காலமாக இந்தச் சர்க்காரிலே முயற்சி எடுக்கப்பட்டு, இந்த மாநில மக்கள் எல்லாம் நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வருகிறது என்று எதிர் நோக்கிக் கொண்டிருக்கும்போது, இப்போது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த உச்ச வரம்பு, 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 ஏக்கர் என்றும் அதற்கு மேல் தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த 30 ஏக்கர் உச்ச வரம்பு என்பது மிக அதிகம் என்றுதான் சொல்ல முடியும். இந்த 30 ஏக்கர் நிலம் என்பது அந்தக் குடும்பத்திற்கு அதிகமான அளவில் வருமானத்தைத் தரும். இந்த 30 ஏக்கர் என்பதை 25 ஏக்கர் என்றாக்கி, மற்ற தனிப்பட்டவர்களுக்கு 5 ஏக்கர் என்று இருந்தால் ஓரளவு நன்மை பயக்குமென்று கருதுகிறேன். கோயில் நிலங்களுக்கெல்லாம் 200 ஏக்கர் வரை விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோயில் நிலங்களில் எல்லாம் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தால் நல்ல முறையில் பயன் அளிக்கும். இப்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கும் 200 ஏக்கர் நிலங்களும் விவசாய மக்களுக்குப் பயன்படுகிறதா என்று பார்க்க வேண்டும். சில கோயில்களுக்குக் குறைந்த அளவு நிலங்கள் இருக்கின்றன ; சில கோயில்களுக்கு அதிகமான அளவுக்கு நிலங்கள் இருக்கின்றன. எப்படி விதிவிலக்கு கொடுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சிறு நிலச்சுவாந்தார்களுக்கு 5 ஏக்கர் என்ற முறையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வாரச் சட்டம் கொண்டு வந்த சமயத்தில்கூட 6 ஏக்கர் வரை விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான உழவர் பெருமக்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும் நிலைமை ஏற்பட்டது. பிறகு 60 வார சட்டத்தில் இவ்வாறு சாகுபடி செய்யப்படுகிற 6 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் நிலமுடைய மிராசுதார்கள் விரும்பினால் பாதி நிலத்தைச் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாமென்ற ஷரத்து இருக்கிறது. நேரடியாக வேலை செய்கிறவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்றும் இல்லாவிட்டால் எடுத்துக் கொள்ள முடியாது என்றும் இருக்கிறது. அப்படியிருக்கும்போது இப்போது 5 ஏக்கர் நிலத்தை நேரடியான சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருப்பதால் ஆயிரக் கணக்கான விவசாயத் தொழிலாளர்கள், குத்தகைக்காரர்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும் வாய்ப்பு இருக்கிறது. இந்த அளவுக்குச் சட்டத்தை கொண்டு வருகிறவர்கள் உழவர்கள், குத்தகைதாரர்கள், பரம்பரையாக இருப்பவர்களுக்குப் பாத்தியதை கொடுக்கக்கூடிய முறையிலே அமைந்தால் அவர்களுடைய கூக்குரல் எழுப்பப்படும் நிலைமை இங்கு இருக்காது. சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நிலைமை வரும்போது 100-க்கு 90 பேராக உள்ள சிறு நிலச்சுவான்தார்கள் நன்மை பெற முடியும். 60—40 சட்டம் வரும்போதெல்லாம் உழுகின்றவர்களுக்கு



சலுகைகள் கொடுத்துவிட்டு இன்று உழுகின்றவர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய முறையில் ஷரத்து இருப்பது நல்லதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

குடியிருப்பு மனையைப்பற்றி ஒரு சில கருத்துக்கள் சூசகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1959-ம் ஆண்டில் எந்தக் குடியிருப்பு மனையில் இருந்தார்களோ அங்கேயே இரண்டு ஆண்டுகள் கூடுதலாக இருக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே, வோட்டுரிமை கொடுக்கப்பட்ட ஜனநாயக நாட்டிலே சுதந்திரம் கிடைத்த பிறகு விவசாய மக்களுக்குக் குடியிருப்பு மனை கிடைக்கவில்லையென்று சொன்னால் இந்த நாட்டில் பிறந்தவனாக அவன் கருதப்படவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் இந்த நேரத்தில் அவர்களுக்குக் குடியிருப்பதற்கு நிரந்தரமாகக் குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். இரண்டு வருஷம் அவர்களுக்குத் தவணை கொடுத்து, பிறகு எப்படியும் அவர்களை வெளியேற்றி விடலாம் என்று சொல்வார்களானால் மறுபடியும் பழைய நிலைமைதான் வந்து விடும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதை விட குடியிருப்பு மனையை நிரந்தரமாக வழங்குவது மிக முக்கியமானது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, குறிப்பாக ஹரிஜன மக்களுக்கு குடியிருக்க நிலம் வழங்கப்பட வேண்டும். சாகுபடி செய்யும் நிலத்தில் சாகுபடி செய்கிறவனுக்கு உரிமை இருக்கிறது என்று மாயவரம் கோர்ட்டில் ஒரு தீர்ப்பாகி இருக்கிறது. ஆனால், குடியிருக்கும் நிலத்திற்கு அனுமதி கிடைக்காமல் அவ்விடமிருந்து அப்புறப்படுத்துகிறார்கள். குடியிருக்க நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் குடியிருக்க நிலம் வழங்கப்பட வேண்டுமென்பது இந்தச் சட்டத்தில் இடம் பெற வேண்டும். இதை செலக்ட் கமிட்டியில் பூர்த்தி செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

கரும்பு ஆலைகள் வைத்திருக்கக்கூடிய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் இருக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள் கரும்பு ஆலை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்களுக்கோ, சர்க்காருக்கோ ஏதாவது அதனால் நன்மை கிடைக்கிறது என்று சொன்னால் விதிவிலக்கு அளிக்கலாம். கரும்பு ஆலை வைத்திருப்பவர்கள் தங்கள் தங்கள் வருமானத்தைப் பெரும் அளவில் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. கரும்பு ஆலைகள், பழத்தோட்டங்கள், மாமரத் தோட்டங்கள் ஆகியவற்றுக்கு விதிவிலக்குக் கொடுக்கக் கூடாது. அவைகளுக்கும் உச்ச வரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நில உச்ச வரம்பு மசோதாவானது ஏழை மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பல காலமாக நிலத்துக்கு நாங்கள்தான் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு வந்த மிராசுதார்கள் இன்றைய தினம் தாங்களாகவே தங்களுடைய நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லக்கூடிய நிலையை உருவாக்கிய காங்கிரஸ் அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டும் மசோதாவானது ஏழை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற முறையில் அமைய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **Sri V. SUBBIAH** : கனம் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த நிலவுடைமைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்துக் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா எந்த நிலையில் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்றால், விவசாயத்தில் நேரடி அனுபவம் இல்லாத பலர் இதைத் தயாரித்ததாகத் தெரிகிறது. இன்றைய சூழ்நிலையில் இந்த மசோதாவை வரவேற்க முடியுமா என்றால், வரவேற்க முடியாது என்றுதான் நான் சொல்ல முடியும். இன்றைய அமைப்பிலே ஒரு விவசாயக் குடும்பத்திற்கு முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதனுடைய வருமானத்தின் மதிப்பு, எந்த ரூபத்தில் கணக்கிட்டுப் பார்த்தாலும்கூட, வருஷத்திலே மூவாயிரம் ரூபாதான் இருக்க முடியும். 12 noon.

அதை வைத்து ஒரு விவசாயி குடும்பம் நடத்தி எப்படி வாழ முடியும் என்று கேட்கின்றேன். அண்டையிலுள்ள ஆந்திர நாட்டிலே ரூ. 5,400 என்று விவசாய வருமானத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். செல்வம் கொழிக்கும் பஞ்சாப், பம்பாய் போன்ற ஏனைய மாகாணங்களில் இதைவிடக் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். குறைவான அளவிலே இங்கே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இதை மட்டும் பார்ப்போமானால், கிராம அமைப்பிலே, கிராமப் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில்தான் இந்த அரசாங்கம் முதன் முதலாக உச்ச வரம்பு கட்டுகிறார்கள் என்றுதான் சொல்ல முடியும். இந்த நாட்டினுடைய பொருளாதார அமைப்பை சிந்தித்துப் பார்த்தால் நகரத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ளதைப்போல் இருக்கிறது. இன்று சென்னை நகரில் 16 லட்ச மக்கள் வாழ்கிறார்கள், குடியேறியிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் என்ன? கிராமத்தில் பத்து மணி நேரம் தினமொன்றுக்கு வேலை செய்தாலுங்கூட விவசாயி ஒருவனுக்கு ஒரு ரூபாய் கூலி கிடைப்பதில்லை என்ற நிலை இருக்கிறது. அதே சமயத்தில், சென்னை நகரத்தில் இருக்கும் கர்னாடிக் மில் போன்ற பஞ்சாலையில் ஒரு தொழிலாளி எட்டு மணி நேரம் நிழலில் இருந்து, வெயில் மழை பார்க்காமலேயே, வேலை செய்து நான்கு ரூபாய் சம்பளம் தினமொன்றுக்குப் பெறுகிறான். அந்த அளவிலே ஏற்றத் தாழ்வு இருக்கிறது.

இன்றைக்கு விவசாயம் செய்யவேண்டுமானால், அதைச் செய்வதற்கு யாரும் தயாராக இல்லாத நிலை இருக்கிறது. விவசாயினுடைய வருமானம் உழைப்பினால் ஆக்கப்பட்டது. அவன் எவ்வளவு உழைக்கின்றானோ அதற்குத் தக்கபடி அவனுக்கு வருமானம் வருகிறது. ஏனைய தொழில்களில் அப்படியல்ல. உழைப்பே இல்லாமல், நிழலில் இருந்துகொண்டே, வேறு துறைகளில் ஒருவன் சம்பாதிக்க முடியும். பல லட்சக் கணக்கான ரூபாய்களை, ஆலை வைத்து நடத்துபவர்களும், ட்ரான்ஸ்போர்ட் நடத்துபவர்களும் இன்னும் இதுபோன்ற ஏனைய தொழில் துறைகளில் உள்ளவர்களும் குவிக்க முடியும். அதற்கெல்லாம் கூட உச்ச வரம்பு கட்ட முடியவில்லை அரசாங்கத்தினால். அதற்கான தைரியம் அவர்களுக்கு வராது. அப்படிச் செய்யும்போது அன்றைக்கிருக்கும் நிலைமை வேறுவிதமாக இருக்கலாம். அதற்கெல்லாம் உச்ச வரம்பு நிர்ணயிக்காமல், கிராமத்திலே வாழக்கூடிய, இந்த நாட்டிலுள்ள எண்பது சதவிகிதமுள்ள மக்களைப் பொறுத்த வரையில், விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களைப் பொறுத்த வரையில் உச்ச வரம்பு கட்டுகிறார்கள் என்றால், அது ஏற்கக்கூடியதா, பொருத்தமுடையதா, தருமத்திற்கும் நியாயத்திற்கும் அது உகந்ததா என்று பார்த்தால், அது தருமத்திற்கும் நியாயத்திற்கும் பொருத்தமானதல்ல என்று நான் கூறுவேன்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதனால் மட்டும் ஏதாவது உபயோகமாக இருக்குமா, லாபகரமாக இருக்குமா என்றால் இருக்க முடியாது. ஏழைகளுக்குத்தான் உபரி நிலம் கொடுக்கப்போகிறோம் என்றாவது மசோதாவில் சொல்லியிருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. கொடுக்கக்கூடிய நிலத்தின் தரம் எப்படி இருக்கும். எப்படி அந்த நிலங்களினுடைய அமைப்பு இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஏக்கரும் இருக்கிறது. அதே கிராமத்தில் ஐம்பது ரூபாய் மட்டும் பெறுமானமுள்ள ஏக்கர் நிலமும் இருக்கத்தான் செய்கிறது. ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயம் பண்ணும்போது, எட்டு ரூபாய், பத்து ரூபாய் விகிதாசாரத்தை வைத்திருக்கிறார்கள். களர் நிலம், புல் கூட முளைக்காத அளவிலே இருக்கும் கல்லாந்தரையையும் பார்க்கிறோம். அதுவும் நிலமாகத்தான் அஸெஸ்மென்டிலே இருந்துகொண்டிருக்கிறது. அதற்கும் தீர்வை இருக்கிறது, பட்டா இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் கொடுத்துவிட்டால் அதை வைத்து ஒரு விவசாயிக் குடும்பம் எப்படி பிழைக்க முடியும்?





குறைந்தபட்சம் முப்பது ஏக்கர் என்றும், அதிக பட்சம் அறுபது ஏக்கர் என்றும நிர்ணயித்திருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தைப்பற்றிச் சொல்கிறேன். எங்கள் தாலுகாவிலே வயலி என்ற கிராமத்திலே சந்தனத் தேவர் குடும்பம் இருக்கிறது. பரம்பரையாக பல நூற்றாண்டுகளாக, அந்தக் குடும்பத்திலுள்ளவர்கள் நிலத்தைப் பாகப் பிரிவினை செய்துகொள்ளாமல் இருக்கிறார்கள். பாகப்பிரிவினை பற்றிய தஸ் ரவேஜி இல்லாமலேகூட அந்தக் குடும்பத்தில் 60, 70 பேர்கள் வாழ்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்குக் குறைந்தபட்சம் 400 ஏக்கர் முதல் 500 ஏக்கர் வரையில் நிலம் இருக்கிறது. இதற்கு என்ன விதிவிலக்கு இருக்கிறது என்று புரியவில்லை. அந்தக் குடும்பத்தையெல்லாம் என்ன செய்வது என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டிவிட்டோம் என்ற நிலைமையை வைத்துக் கொண்டு பார்ப்போமானால், இம்மாதிரிப் பல சிக்கல்கள் இருக்கின்றன. இந்த நாட்டிலே ஹிந்து தருமத்திலே, அவிபக்த குடும்பங்களாகப் பல்லாண்டுகள் வாழ்ந்ததற்கு என்ன விதிவிலக்கு இதிலே இருக்கிறது? பழத் தோட்டங்களுக்கும், சவுக்குத் தோப்புக்களுக்கும் விதிவிலக்கு அளித்திருக்கிறார்களேயொழிய, பரம்பரையாக இந்த நாட்டிலே ஏக குடும்பமாக இருந்து வருகிறவர்களுக்கு என்ன விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள் இந்த மசோதாவிலே என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை. போகட்டும். தரும சிந்தனைக்கூட அல்லவா இந்த அரசாங்கத்தார் அழித்துவிட்டார்கள். பல மதிப்பிற்குரிய மெம்பர்கள் பேசினார்கள். தரும ஸ்தாபனங்கள், கோயில்கள் இவைகளுக்குள்ள நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவது தப்பு என்றுதான் நான் நினைக்கிறேன். நிலங்களை சட்டம் போட்டு எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கலாம். ஆனால், நம்முடைய முன்னோர்கள் எதற்காக நிலத்தைத் தரும ஸ்தாபனங்களுக்கும், கோயில்களுக்கும் எழுதி வைத்தார்கள், எப்படி அவைகளுக்கு நிலங்கள் வந்தன என்றால், அவர்களுடைய தரும சிந்தனைதான் அப்படியெல்லாம் எழுதி வைக்கத் தூண்டியிருக்க வேண்டும். தரும சிந்தனையையே இந்த அரசாங்கத்தார் எடுத்துவிடுகிறார்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக என்று நான் சொல்கிறேன். ஹிந்து தருமத்திலே, கோயில்களுக்குச் சொத்து எழுதி வைப்பது, உண்டியில் பணம் போடுவது இவையெல்லாம் இனிமேல் நின்றுவிட்டால் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை. வேறு ஏற்பாட்டின் மூலம் அந்தச் சொத்துக்களைப் பொறுத்து ஒரு அமைப்பு கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். திருப்பதி சென்று பார்த்தால், அங்கே வெங்கடேஸ்வரா யூனிவர்ஸிடி போன்றெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எத்தனையோ தொழிற் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அம்மாதிரி அமைப்பிலே இந்த அரசாங்கம் இயங்க விட்டிருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை ஏற்படுத்தாமல் இந்த அரசாங்கம் விட்டுவிட்டார்களே என்று நினைக்கும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. இனிமேல் எப்படி இந்த நாட்டிலே தருமங்கள் நிலைத்து நிற்கும் என்று எனக்குத் தெரியவில்லை. தரும சிந்தனையக்கூட அல்லவா இந்த சட்டத்தின் மூலம் இந்த அரசாங்கம் அழித்துவிடுகிறார்கள். கோயில்கள், மடங்கள் இவைகளை நிர்வகிப்பவர்கள் தவறான, கேவலமான காரியங்கள் செய்வார்களானால், அவைகளைத் தடுப்பதற்கும், அப்படிப்பட்டவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுப்பதற்கும், வேண்டுமானால் சொத்தைப் பறிமுதல் செய்வதற்கும் கூடச் சட்டங்கள் இருக்கின்றனவே. இதையெல்லாம் விட்டுவிட்டு, இதற்கு உச்ச வரம்பு என்று போட்டுவிட்டார்களே என்று நினைக்கும்போது மனதுக்கே கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இந்த நாட்டிலே இனி தரும சிந்தனை இருக்குமா, தருமங்கள் நடக்குமா, நியாயம் இருக்குமா, நாணயம் என்பது இருக்குமா என்று சிந்திக்கக்கூடிய அளவிலே போய் விட்டது. ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், அம்மாதிரி பல நிகழ்ச்சிகள் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக யாருக்காவது ஏதாவது கிடைக்கப் போகிறதா என்றால், ஒன்றுமே கிடைக்க முடியாத முறையில் இது இருந்துகொண்டிருக்கிறது. ஏதோ செய்துவிட்டார்கள். இந்தச் சட்ட சபையிலே மசோதாவாக வந்துவிட்டது, ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்குப் போகப் போகிறது என்றெல்லாம் இருந்

தாலும், இதிலே சட்டத்தைப் பூராவும் மாற்றியமைத்தால்தான் ஏதாவது உருவாக இருக்க முடியும். இப்பொழுதிருக்கும் அளவை வைத்துக் கொண்டு பார்த்தால், இந்தச் சட்டம் உதவாக்கரையாகத்தான் இருக்கும். ஆதலால், இதை ஆதரிப்பது எப்படி என் நிலை என்போன்றவர்களுக்கு இருக்கிறது.

ப்ளாண்டேஷனுக்கு விதிவிலக்கு அளிப்பதுபற்றிப் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். பத்தாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தனிப்பட்ட ஒருவருக்கு இருக்கக்கூடாது என்பதற்காகத்தானே உச்ச வரம்பு கொண்டு வருகிறோம்? அப்படியிருக்கும்போது மலையிலே பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் தனிப்பட்டவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் ஏன் அப்படி வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்? அவர்கள் என்ன உழுகிறார்களா என்று கேட்கிறேன். அவர்களுக்கு அப்படி விட்டுவைப்பது எந்த நியாயத்தைச் சேர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை. வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கிறது, டாலர் கிடைக்கிறது என்ற காரணத்தால் விட்டு வைக்கிறார்களா என்று கேட்கிறேன். அதையெல்லாம் நாம் எடுத்துத்தான் ஆகவேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலம் கிராம அமைப்பு, கிராமப் பொருளாதாரம் இவைகளைக் குலைத்துவிடுகிறார்களே என்று பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது. ஏழைகளுக்கு உபயோகம் இருக்கிறதா, ஏழைகள் இந்த நாட்டில் வாழ முடியுமா, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதால் என்ன பலன் இருக்கிறது என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் காட்ட முடியவில்லை. ஆதலால், இதை வரவேற்க முடியாத நிலையில் நான் பேசுகிறேன்.

இந்த மசோதாவில் ஒன்று நாம் முக்கியமாகப் பார்க்கிறோம். எந்தச் சட்ட அமைப்புகள் வந்தாலுங்கூட, பல போர்டுகள், பல கோர்ட்டுகள், பல ட்ரிப்யூனல்கள், பல உத்தியோகங்கள் இவைகள் சட்டங்கள் பேரால் சிருஷ்டிக்கப்படுகின்றன என்பதை நினைக்கும்போது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. அரசாங்கத்தின் வரவு செலவு இனங்களைப் பார்க்கும்போது, உத்தியோகஸ்தர்களுக்காகப் பல கோடி ரூபாய்கள் செலவாகின்றன, மேலும் மேலும் செலவாக இருக்கின்றன என்ற நிலை வருமானால், அது இந்த அரசாங்கத்தினுடைய எதிர்காலம் எப்படி இருக்க முடியும் என்று நினைக்க முடியாத அளவிலே போய்க்கொண்டிருக்கிறது.

விவசாயிகள் எப்பொழுதும் தன் இச்சையாக வாழக்கூடியவர்கள். அவர்களும் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற ஒரு நிலை இருந்தாலும்கூட, பிரிட்டிஷார் காலத்தில், சுதேச மன்னர்கள் காலத்தில் அரசாங்கத்திற்கு அவர்கள் நில வரி கொடுக்க வேண்டுமே தவிர, மற்ற எந்த விதமான பந்தங்களும் அவர்களுக்கு ஏற்படவில்லை. சுதந்திரமாக அவர்கள் விவசாயம் செய்துவந்தார்கள். தர்ம சிந்தனையுடன் இருந்தார்கள். அந்தக் காலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பெரிய விவசாயி இருப்பானால், ஊரிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு அவன் மாலை வேளையில் உணவு சமைத்து வைப்பான். படிக் கணக்கில் பசுவின்பால் கொடுப்பான். தாய்மார்கள் வந்து அள்ளி அள்ளி வாங்கிக்கொண்டு போவார்கள். அவர்கள் தர்மங்கள் வளர வேண்டும் என்ற சிந்தனை உடையவர்களாக இருந்தார்கள். அம்மாதிரி எவ்வளவோ குடும்பங்கள் கிராமத்தில் இருந்தது எனக்குத் தெரியும். அம்மாதிரி இப்பொழுது எங்கே நடக்கப் போகிறது? பல சட்டங்கள் வந்து தர்ம சிந்தனையை அழித்துவிட்டதே? அந்த மனப்பான்மையே இல்லாமல் செய்துவிட்டதே? இந்த நிலையைப் பார்க்கிறபொழுதுதான் இந்த சட்டத்தை வரவேற்க முடியாது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நிலம் நகரக்கூடியது அல்ல. ஒரு ஏக்கர், ஒரு செண்டு அளந்து போட்டுவிட்டால் அப்படியேதான் இருக்கும். மற்ற தொழில்களெல்லாம் அப்படியல்ல. வளர்ச்சி அடையக்கூடியது, அவைகளுக்குப் பெருக்கம் உண்டு. ஆனால் நிலம் அப்படியேதான் இருக்கும். நிலத்தின் தரம் குறைந்துகொண்டுவரக்கூடிய நேரத்தில், ஏதோ நிலத்தைப் பகிர்ந்து



கொடுக்கிறோம், ஏதோ சட்டம் செய்தோம் என்ற ஒரு பெருமையைத் தவிர, இதன் மூலம் ஏதாவது லாபம் இருக்கிறதா என்றால், ஒன்றும் இல்லை என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI S. RAMALINGA PADAYACHI : சட்டமன்ற தற்காலிகத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நில உச்ச வரம்பு மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல முன் வருகிறேன். நமது மாநிலத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்று கொண்டு வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது ஆகும். ஒரு குடும்பத்தில் 5 பேர்களுக்கு மேற்பட்டு இருந்தால் அவர்கள் ஒரு நபருக்கு 5 ஏக்கர் வீதம் வைத்துக்கொள்ளலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதிகமாக எத்தனை நபர்கள் இருந்தாலும், 60 ஏக்கருக்கு மேல் மாக்ஸிமம் இருக்கக்கூடாது என்று கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும்பொழுது, இது ஒரு முற்போக்கான சட்டம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மனைவிக்கு ஸ்திரிதன நிலம் 10 ஏக்கர் இருந்தால், 10 ஏக்கா அதிகப்படியாக இருக்கலாம் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கும் பொழுது அதுவும் மிகமிக முக்கியமானது என்று கருதுகிறேன். ஒரு பெண்ணுக்கு ஸ்திரீதன நிலம் 30 ஏக்கர் வந்திருந்தால், புருஷனுக்கு நிலம் இல்லாவிட்டால், 30 ஏக்கரும் அவரே எடுத்துக்கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக, அந்த அம்மாளுக்கு 20 ஏக்கர் நிலம் ஸ்திரீதன நிலம், புருஷனுக்கு 25 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால், புருஷனுக்கு இருக்கிற 25 ஏக்கர் நிலத்தோடு அந்த அம்மாள் ஸ்திரிதன நிலத்திலிருந்து 5 ஏக்கர் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் 30 ஏக்கர் புருஷனுக்குச் செல்லும் ஸ்திரீதன நிலம் 10 ஏக்கர் அதிகப்படியாகச் செல்லும். புருஷனுக்கு நிலம் இல்லாவிட்டால் அந்த அம்மாளுக்கு 30 ஏக்கர் செல்லும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்திரீதனம் வருகிற இடத்திலே புருஷனுக்கு நிலம் இல்லாவிட்டால் 30 ஏக்கர் செல்லும் அல்லது புருஷனுக்கு 30 ஏக்கர் நிலம் இருந்தால், அந்த அம்மாளுக்கு 10 ஏக்கர் சேர்ந்து அதிகமாகச் செல்லும். புருஷனுக்கு 25 ஏக்கர் இருந்தால், அந்த அம்மாளுக்கு 5 ஏக்கர் நிலம் சேர்ந்து சீலிங்கில் கட்டுப்படும் என்றும் ஸ்திரீதன நிலம் 5 ஏக்கர்தான் இருக்கும் என்று சொல்லுகிறதைப் பார்க்கும்பொழுது அது வருத்தப்படக்கூடிய விஷயம். புருஷனுக்கு 30 ஏக்கர், அந்தப் பெண்ணுக்கு ஸ்திரீதன நிலம் 10 ஏக்கர் ஆக 40 ஏக்கர் எப்படி கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதைப்போல 25 ஏக்கர் புருஷனுக்கு இருந்தால், அந்த அம்மாளுக்கு ஏன் அதிகமாகப் 15 ஏக்கர் கொடுக்கக்கூடாது? ஆகவே மொத்தமாக 40 ஏக்கர் கொடுக்கலாம் என்ற கருத்தைக் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்று சோஷலிஸ்டு பாணியில் செல்லக்கூடியவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே 100 ஏக்கர்,200 ஏக்கர்,500 ஏக்கர் இம்மாதிரி நிலங்கள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் மாடமாளிகைகளை, உல்லாசமான பங்களாக்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். நஷ்ட ஈடு கொடுக்காவிட்டால், அவைகளைப் பராமரிப்பதற்கு அவர்கள் என்ன செய்ய முடியும்? இதற்கு முன்னால் குடிசையில் வாழ்ந்துவந்தால், அந்த பங்களாக்களைப் பராமரிப்பு செய்வதற்கு நஷ்ட ஈடு கொடுக்காமல் இருக்கலாம். அவைகளைப் பராமரிப்பதற்கு ஓரளவு தொகை வேண்டாமா? அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பது மிகவும் முக்கியம். ஆனால் நஷ்ட ஈடு வருவாயைப் போல் 9-லிருந்து 12 மடங்கு கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவு தேவைதானா என்று எண்ணவேண்டிய நிலையில் இருக்கிறது. அவ்வளவு கொடுக்கவேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறேன். ஓரளவுக்கு இன்னும் குறைத்துக்கொள்ளலாம். சாதாரணமாக மார்கெட்- ரேட்டுக்கும் குறைத்துக் கொடுக்கலாம். ஏழை மக்களுக்கு, கஷ்டப்படும் மக்களுக்கு மீதி நிலத்தைப் பிரித்துக் கொடுத்தால் அதிகமாகத் தொகை கொடுக்கவேண்டியது அவசியம் ஏற்படும். ஆகையால். இந்த நிலம்

[Sri S. Ramalinga Padayachi] [18th April 1960

ஒரு ஆண்டு வருமானத்தில் 9-லிருந்து 12 மடங்கு வரை கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஒரு வருஷத்தில் வருகின்ற வருமானத்தைப் போல் 8 மடங்கு கொடுத்தால் போதும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக தோப்பு துரவு, பாக்குத் தோப்பு, தென்னந் தோப்பு ஆகிய நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக 1,000, 2,000 எக்கர் நிலங்கள் வைத்திருப்பவர்கள் சில பேர்களுக்கு தோப்பு துரவு இல்லாமலே இருக்கலாம். அவர்களுக்கு 30 எக்கர் நிலம் தான் கிடைக்கிறது. ஆனால் இன்னும் சில பேர்களுக்கு 200 எக்கர் நிலம் இருந்தால், 20 எக்கர் சாகுபடிக்குப் போக மிச்சம் தோப்பு துரவாக இருக்கலாம், அப்படியிருந்தால் இந்த சீலிங் ஆக்ட்படி அவர்களிடமிருந்து நிலம் எடுப்பதற்கு இடமில்லை. தோப்பு இருப்பவர்களைப் பாதிக்காது. தோப்பு இல்லாதவர்களைப் பாதிக்கும். தோப்பு இல்லாதவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நமக்கு 30 எக்கர்தான் கிடைக்கிறது, தோப்பு இருக்கிறவர்கள் 200 எக்கர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ள முடிகிறதே என்று எண்ணுகிறார்கள். ஆகவே, அதற்கும் ஒரு உச்ச வரம்பு இருக்கவேண்டும். எப்படி 60 ஸ்டான்டர்டு எக்கர் இருக்கலாம் என்று சொல்லுகிறார்களோ, அதைப்போல தோப்பு நிலங்களையெல்லாம் சேர்த்து இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்று ஒரு " மாக்ஸிமம் " இருக்கவேண்டும்.

மலைப் பிரதேசங்களிலுள்ள நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களில்தான் நிறைய வருமானம் வருகிறது. காப்பி, தேயிலைத் தோட்டங்களில்தான் நிறைய வருமானம் வருகிறது. இந்தத் தோட்டங்களுக்கு எதற்காக விலக்கு அளிக்கவேண்டும் ? வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்கு ஆயிரக்கணக்கான எக்கர்கள் காப்பி, தேயிலை தோட்டங்களாகச் சொந்தமாக இருக்கின்றன. அந்த நிலங்களை அவர்களுக்கு மட்டும் ஏன் அப்படியே விட்டுவைக்கவேண்டும் ? அதே சமயத்தில் சாதாரண விவசாயி 30 எக்கருக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லுவது நியாயமில்லை. யாருக்கு தோப்பு துரவு, தோட்டக்கால் நிலங்கள் இருந்தாலும், அவைகளும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் இருக்கவேண்டும் என்ற ஒரு வரையறை வகுக்கவேண்டும். சிலரை மட்டும் சட்டம் பாதிப்பது, சிலருக்கு எந்த விதத்திலும் சட்டத்தினால் பாதகம் இல்லை என்ற நிலைமை இருப்பது நியாயம் இல்லை. இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து செலக்ட் கமிட்டி முடிவு செய்யவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

மேலும் இடைக்காலத் தரகர்களுக்கு ஈராளவு கண்ட்ரிபூஷன் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும் ? ஏற்கெனவே கொள்ளை அடித்துக்கொண்டிருப்பவர்களுக்கு மேலும் கொடுக்க வேண்டியது அவசியமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதோ கிராமத்தில் செல்வாக்குள்ளவர்கள் மக்களை மிரட்டி வேலை வாங்குகிறார்கள். தானே நேராக பயிரிட முடியாததாகையால், அப்படிக் கிராமத்தில் செல்வாக்கு உள்ளவர்கள் மூலம் 50 எக்கர், 100 எக்கர் பயிரிடுவதற்காக விட்டுவைக்கிறார்கள். அந்த இடைத் தரகர்கள் ஏழை மக்களை விரட்டி வேலை வாங்கி, தாங்கள் பணத்தை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஏழை மக்களை ஏமாற்றிச் சாப்பிடுகிறவர்களுக்கு இப்பொழுது நஷ்ட ஈடு கொடுப்பது பொறுத்தமா ? ஆகவே, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியமே கிடையாது.

தஞ்சை ஜில்லாவில், பாசனம் உள்ள ஒரு எக்கருக்கு வருஷ வருமானம் சுமார் ரூ. 300 வரலாம். ஆனால், புஞ்சை நிலங்களில் ரூ. 25, 30 கூட வராது. மானம் பார்த்த சீமையாக இருந்து விட்டால், இன்னும் மோசமாக இருக்கும். அம்மாதிரி நிலங்களுக்கு, ஒரு ஸ்டான்டர்ட் எக்கருக்கு 4 எக்கர் சமம் என்று வைத்திருப்பது சரியில்லை. அதிகமாகப் போடவேண்டும். அப்பொழுது ரூ. 10 தீர்வை கொடுத்தால், ஸ்டான்டர்ட் எக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது, ரூ. 1¼ தீர்வையில் உள்ள புஞ்சைக்காணிகள், 8 எக்கர் வரும். ஆகவே, ஒரு எக்கருக்கு 6 எக்கர் புஞ்சை என்றாவது கொள்ள வேண்டும்,



18th April 1960] [Sri S. Ramalinga Padayachi]

அங்கெல்லாம், கொள்ளு, சோளம் இம்மாதிரியான பயிர்கள்தான் விளைவிக்கிறார்கள். அம்மாதிரி உள்ள நிலங்களுக்கு எக்கருக்கு 6 எக்கர் புஞ்சை என்று கொடுக்கலாம்.

இந்தச் சட்டத்தினால், ஏழை மக்களுக்கு கால் காணி, அரைக்காணி கொடுத்து விடப்போவதில்லை. அது முடியாத காரியம். ஆனால் 1,000 2,000 எக்கர் வைத்திருப்பவர்கள், குறைந்து, நிலம் குவிந்திருப்பது குறைக்கப்படும். சில பேர் தங்கள் கட்சிகளுக்கு ஆள் தேடுவதற்காக அப்படியெல்லாம் பேசலாம். ஆனால், நம் சர்க்கார் அப்படி நினைக்கவில்லை. இந்தச் சட்டத்தினால் பொதுவாக ஏழை மக்கள், உழவர் பெருமக்கள் நன்மை அடைகிறார்கள் என்பது என் கருத்து.

அடுத்தபடியாக, மடத்திற்கென்றும், கோவில்களுக்கென்றும் நிலங்கள் 200 எக்கர் விலக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்னால், அவைகளுக்காக யாரோ எப்பவோ அந்த நிலங்களைக் கொடுத்தார்கள். ஆனால், அவைகள் இன்று நல்ல முறையிலே செயல்படுகிறதா என்று பார்த்தால், இல்லை. அம்மாதிரி, இப்பொழுது அந்த மடங்களுக்கும், கோவில்களுக்கும் 200 எக்கர்கள் தேவைதானா என்று பார்த்தால், இல்லை என்றுதான் தோன்றுகிறது. அதை ரொம்பக் குறைக்கலாம். ஆண்டவன் ஏன் குறைக்கிறாய் என்று கேட்க மாட்டார். அவரும் நம்மோடு சேர்ந்துவிடுவார். ஆகவே, அந்த லிமிட்டை ரொம்பக் குறைத்துவிடலாம். குறைந்தது 100 எக்கர் என்று வைத்தாலே போதும். அதையும் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்தால், ஏழை மக்களுக்குப் பயன்படும். அப்படிச் செய்வதால் ஆண்டவன் கவலைப்படப் போவதில்லை. அந்த ஏழை மக்களை வெறுப்போடு பார்க்க மாட்டார்.

இதுமட்டும் போதாது. பல நகரங்களிலே கட்டடங்கள் பல கட்டிக் கொண்டு, ஒரு வருஷத்தில் ரூ. 500, 1,000 என்றும், அதற்கு மேலும் வாடகை வாங்கி சுகமாக இருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் என்ன நினைப்பார்கள் ? நாம் நிலத்தை நம்பி வாழ்ந்தோம், அதனால்தான் இந்த கதியாயிற்று. அவர்களெல்லாம், வீடுகளைக் கட்டிக் கொண்டார்கள், கஷ்டம் இல்லை என்று நினைப்பார்கள். ஆகவே, அம்மாதிரி சொத்துக்களுக்கும் ஒரு மசோதா கொண்டுவந்து அதையும் கட்டுப்படுத்தவேண்டும் என்று நான் நினைக்கிறேன், அந்த என் கருத்தையும் தெரிவிக்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

எங்கள் தாலூகாவில், தாற்காலிகமாக ஆழக் குழாய் மூலம் ஆர்டிஷன் தண்ணீர் கொடுத்து, புஞ்சை நிலங்களை நஞ்சை நிலமாக்கியிருக்கிறார்கள். அதை இப்பொழுது வெட் லாண்ட் என்று கொண்டு 30 எக்கர் என்று வைத்தால், பின்னால் தண்ணீர் கொடுக்க முடியாமற்போனால், அப்பொழுது அவை திரும்பவும் புஞ்சையாகத்தான் போகவேண்டியிருக்கும். ஆகவே அப்படிப்பட்ட நிலங்களை புஞ்சையாகவே கருத வேண்டும் என்பது என் கருத்து.

தீர்வை ஒன்றாக இருந்தாலும், தஞ்சாவூர் நஞ்சைக்கும், சில மானம் பார்த்த சீமையிலுள்ள நஞ்சைக்கும் பெருத்த 'வித்தியாசம் உண்டு. தஞ்சையில், நீர்ப்பாசன சௌகரியம் ரொம்ப உண்டு. மானம் பார்த்த சீமைகளில் அப்படியல்ல நிலைமை. தீர்வை ஒரே மாதிரியாக இருக்கலாம். ஆகவே, தஞ்சாவூர் காவேரிப் பாசன நஞ்சைக்கும், வைகை பாயும் நஞ்சைக்கும், தாமிரபரணி நஞ்சைக்கும், மற்ற மானம் பார்த்த நிலங்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரியப்படவேண்டும். இம்மாதிரி நிலங்களிலே பருவமழை இல்லாவிட்டால், பயிர்கள் சாவியாகிவிடும். ஆகவே, எல்லா நிலங்களையும் தீர்வை தரத்திலேயே மதிப்பிடாமல், தஞ்சாவூர், வைகை, தாமிரபரணி நீர்வளங்களையும், மற்றப் பிரதேசங்களில் உள்ள நீர்வளத்தையும் பார்த்து பாகுபாடு செய்ய வேண்டியதவசியம். ஆகவே, அப்படிப்பட்ட நிலங்களை அதிகமாக வைக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனக்கொன்றும் நிலம் கிடையாது, நான் ஏதோ என் சொந்த லாபத்திற்காகப் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டாம்.

எனக்கு இருப்பதெல்லாம் எங்கள் வீட்டில் உள்ள நபர் ஒன்றுக்கு 2 அல்லது 3 ஏக்கர் நிலம்தான் இருக்கும். பொதுவான கருத்தைத்தான பேசுகிறேன்.

உபரி நிலங்களை எடுத்து எந்த விதமாக வினியோகம் செய்யப் போகிறார்கள் என்று தெரிவிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவைகளையெல்லாம் கூட்டுறவுப் பண்ணையில் வைத்து சாகுபடி செய்யவேண்டும் என்று என் கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கூட்டுறவுப் பண்ணை உபயோகமற்றது, அதனால் மக்களுக்கு நன்மை இல்லையென்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லலாம். அது நல்ல முறையிலே நடைபெறுமா, வெற்றிகரமாக இருக்குமா என்றெல்லாம் பல இடங்களில் சந்தேகத்துடன் பேசப்படுகிறது. அது தங்களுக்கு சாதகம் என்ற காரணத்திற்காக அப்படிச் பேசப்படுகிறது.

கூட்டுறவுப் பண்ணை நல்ல முறையில் நடந்தால் அது எவ்வளவோ
12-30 p.m. வெற்றிகரமாக நடக்கும். மக்களும் அதில் ஒற்றுமையோடு உழைத்தால் எவ்வளவோ வெற்றிகரமாக நடக்கும். மக்களுடைய ஒத்துழைப்பு அதற்கு இருக்க வேண்டும். வெற்றிகரமாக நடக்காது என்று சொல்ல முடியாது. கூட்டுறவுப் பண்ணையால் அரசாங்கத்திற்கும் லாபம் உண்டு விவசாயிகளுக்கும் லாபம் உண்டு. எதிர்க் கட்சிகள் கூட்டுப் பண்ணை வைத்தால் நடக்காது என்று சொல்வது சரியல்ல. அப்படி வெற்றிகரமாக நடக்காது என்று சொல்லி மக்களுடைய மனதைத் திருப்பி விடுகிறார்கள். அது சரியல்ல. மிச்சப்படும் நிலத்தைக் கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்த வேண்டும். எந்தவிதமான நஷ்டமும் இருக்காது. லாபமாகத்தான் இருக்கும். மக்களுக்கும் அதனால் சௌகரியம்; அரசாங்கத்திற்கும் சௌகரியம். சாதாரணமாக அரை ஏக்கர் ஒரு ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இது எவ்வளவோ சௌகரியமாக இருக்கும். கூட்டுறவு பண்ணைக்கு அரசாங்கமும் பல சலுகைகளைக் கொடுக்க வேண்டும். கூட்டுறவுப் பண்ணையினால் விவசாயிகளுக்கு எந்தக் காலத்திலும் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். ஏழை விவசாயிகள் அதனால் பலனடைவார்கள். கூட்டுறவுப் பண்ணை வைத்து நடத்துவதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை. எவ்வளவோ கூட்டுறவு முறையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவைகள் எல்லாம் நல்ல முறையில்தான் நடந்து வருகின்றன. நல்ல ஆட்கள் இருந்தால் நல்ல முறையில்தான் நடைபெறும். தாந்தோன்றித்தனமாக இருந்தால் அது நல்ல முறையில் நடக்காது. எவ்வளவோ கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஆகவே நிலங்களைக் கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டுவருவது எவ்வளவோ அவசியம். எனக்குப் பேசுவதற்கு அவகாசம் கொடுத்ததற்காகக் கனம் சபாநாயகருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI T. IRUSAPPAN:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பத்து ஆண்டுகளாகப் பாமர மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்த நில உடமை நிர்ணயச் சட்டம் இந்தச் சட்ட மன்றத்தில் இப்பொழுது வந்திருக்கிறது. ஏனைய ஏழை விவசாய மக்களும், நிலம் இல்லாத விவசாய மக்களும் எதிர்ப்பார்த்த அளவில் இந்தச் சட்டம் வரவில்லை. ஏழை விவசாயிகளும், நிலம் இல்லாதவர்களும், நிலம் படைத்தவர்களும், கொஞ்ச நிலம் வைத்துக்கொண்டிருந்தவர்களும் எதிர் பார்த்த அளவில் இந்தச் சட்டம் வரவில்லை. இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பார்த்திருந்தது. இந்தச் சட்டம் வந்தவுடன் அதை வரவேற்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் எதிர் பார்த்த அளவில் இந்தச் சட்டம் வரவில்லை. நல்ல முறையில் இதை வரவேற்று அதை ஆதரித்து நிறைவேற்றலாம் என்று இருந்தோம். ஆனால் நாங்கள் எதிர் பார்த்த அளவில் இந்தச் சட்டம் வரவில்லை. அதனால் ஏமாற்றம் அடைய வேண்டியதாகத்தான் இருக்கிறது. இந்த முறையில் இந்தச் சட்டம் வந்திருப்பதைப் பார்த்து நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். ஏழை விவசாயிகளுக்கு இந்தச் சட்டம் பயன்படுமா என்று பார்த்தால் கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். நேரடியாக





விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்தச் சட்டம் உதவுகிறதா என்று பார்த்தால், அதை உன்னி உன்னிப்பார்த்தாலும் எந்த விதத்திலும் அது நன்மை கொடுக்கக் கூடியதாகவே இல்லை. ஐந்து ஏக்கர் நிலம் தான் சொந்த சாகுபடி செய்யலாம் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். தற்சமயம் இப்படிப்பட்ட ஒரு சட்டம் வரப்போகிறது என்று சர்க்கார் முன்னாலேயே மக்களிடத்தில் சொல்லி வைத்திருந்தார்கள். மக்களிடத்தில் பிரசாரம் செய்து வந்தார்கள். இதை நிலப் பிரபுக்கள் அறிந்து உஷாராகி விட்டார்கள். இதை அறிந்து உஷாராகி மூன்று அல்லது ஐந்து ஏக்கர் தான் வரும் என்று நினைத்து அந்த விதத்தில் ஏற்கனவே அவரவர்களுக்குப் பங்கீடு செய்து கொடுத்து விட்டார்கள். அவர் அவர்களாகவே நிலத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். சர்க்காருடைய பிரசாரத்தினால் பெரும் நிலச்சொந்தக்காரர்கள் இதை அறிந்து பிரித்துக்கொடுத்து விட்டார்கள். சிறு நிலக்காரர்களும் நிலத்தை வாங்கியவர்களுக்கும் அப்படியே செய்து விட்டார்கள். தங்களுடைய வீட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் எழுதி வைத்துவிட்டார்கள். அதனால் இந்தச் சட்டம் வந்தும் ஏழை விவசாயிகளுக்குப் பலன் இல்லாமல் போய் விட்டது. எதிர் பார்த்த அளவில் பயன் கிடைக்கப்போவதில்லை என்றுதான் நாங்கள் வருத்தப்படுகிறோம். நேரடியாக விவசாயம் செய்யக்கூடியவர்களிடமிருந்தும் நிலத்தை வாங்கிக்கொள்ளுகிறார்கள். விவசாயத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கிறவர்களிடமிருந்தும் நிலத்தை பிடுங்கிக்கொள்ளுகிறார்கள் எந்த விதத்திலாவது விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தினால் நன்மை கிடைக்குமா என்று பார்த்தால் ஒன்றுமே கிடையாது. நஷ்ட ஈடு கொடுத்து அவர்களை வெளியேற்றப்படும் என்பதைப் பார்த்தால் அது நன்மை அளிக்கக் கூடியதாக இல்லை. ஆளும் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகக் கண் துடைக்கும் முறையில் தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் வருத்தப்படக் கூடிய அளவுக்குத்தான் இந்தச் சட்டம் இப்பொழுது வந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள், நேரடியாக விவசாயம் செய்யக்கூடியவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு வெளியேற்றப்படுகிறார்கள். இந்தச் சட்டத்தினால் எந்த விதப் பயனும் இல்லை என்றும், வெளியேற்றப்படுகிறார்கள் என்றும் ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் கே. வி. எச். மணி, நாராயணசாமி நாயுடு, ராமாமிருத தொண்டைமான் போன்றவர்கள் கூட வருத்தப்படக் கூடிய அளவில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று சொன்னால் இது மக்களுக்கு எந்த விதத்தில் பலன் அளிக்கும் என்பதையும் மக்கள் இதை எந்த அளவில் வரவேற்பார்கள் என்பதையும் பார்த்துக்கொள்ளலாம். மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற அடிப்படையில் இதைக் கொண்டு வரவில்லை. இப்பொழுதுள்ள நிலைமையில் மனிதனுக்குக் குடியிருப்புக்குக் கூட ஐந்து செண்ட் நிலம் இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கு இந்தச் சட்டம் வழி செய்யவில்லை. மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்று சொல்லும்போது அதற்கு வேண்டியது இதில் இருக்கிறதா என்று பார்த்தால் கிடையவே கிடையாது. குடியிருப்புக்கு ஐந்து செண்ட் நிலம் கூட இல்லாமல் இருக்கிறோம். பொறுமைப்படக்கூடிய அளவில் இந்தச் சட்டம் இல்லை. இந்தச் சுதந்தர நாட்டில், சுதந்தர சர்க்கார் நடக்கக்கூடிய காலத்தில் சுதந்தர தமிழருக்குக் குடியிருப்புக்குக்கூட ஐந்து செண்ட் நிலம் கிடையாது. அதைக் கண்டு பெருமைப்படாமல் வருத்தப்பட வேண்டியதாகத்தான் இருக்கிறது. இந்த மாதம் இரண்டாம் தேதி பத்திரிகையில் பார்த்தோம். பிணத்தைச் சுடத் தூக்கிக்கொண்டு போகக்கூடாது என்று நடை பாதையை மூடி விட்டதாகப் பார்த்தோம். அதற்குக் கூட நிலம் இல்லாமல் இருக்கிறோம், பிணத்தைச்சுட தூக்கிச் செல்வதற்குத் தடங்கல் செய்கிறார்கள். பலர் துன்பப்படுத்தப்படுகிறார்கள். இதைப்பார்க்கும்போது இந்தச் சட்டத்தை எப்படி வரவேற்க முடியும். யாருக்கு இந்தச் சட்டம் பயன்படுகிறது என்றால் நிலம் உள்ளவர்களுக்கும் பெரும் நிலச்சுவான்தார்களுக்கும் தான் இது பயனுள்ளதாக இருக்கிறது. அவர்களுக்குத்தான் இது உதவியாக இருக்கிறதே தவிர ஏழை விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் இந்தச் சட்டத்தினால் பயன் இல்லை. காரணம் கரும்புக்கு என்று இருக்கக்கூடிய நிலத்தைப் பற்றி நிர்ணயம் கிடையாது

ஆலயங்களுக்கும் மடாதிபதிகளுக்கும் இருக்கக்கூடிய நிலங்களுக்கு நிர்ணயம் கிடையாது, தோப்புத் துரவுகள் இருந்தால் அவைகளுக்கு நிர்ணயம் கிடையாது. கால் நடை வைத்துக்கொண்டிருந்தால் அதன் மேய்ச்சலுக்கு நிலம் இருந்தால் அதற்கு நிர்ணயம் கிடையாது. பால்ப் பண்ணைக்கு நிர்ணயம் கிடையாது. மற்றவைகளாக இருந்தால் அவர் அவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய நிலங்களை ஏற்கெனவே பிரித்துக் கொடுத்து விட்டார்கள். உழைக்கும் விவசாயிக்கும், நேரடியாக விவசாயம் செய்யக்கூடியவருக்கும் எதிர் பார்த்த அளவில் பலன் கிடைக்கவில்லை. ஏட்டளவில் தான் பேசி வந்தார்களே தவிர செய்கையில் வரவில்லை. இப்படிப்பட்ட நிலச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று மேடை மீது தான் சொன்னார்கள். ஆனால் ஏழைகள் பெருமைக்படக்கூடிய அளவில் இந்தச் சட்டம் வரவில்லை. பாம்பும் சாகாமல் பாம்பை அடிக்கக்கூடிய தடியும் ஒடியாமல் இருக்கும் அளவில் தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. உண்மையாகவே சோஷலிச சமுதாய அமைப்பில் இதைக் கொண்டு வரவில்லை. ஏழைப் பெருங்குடி மக்களுக்கு உதவக்கூடிய அளவில் இது வரவில்லை. ஆண்டவனுக்கு எதற்காக அதிக நிலம், அவன் என்ன ஏர் பிடித்து உழுகிறானா? கவலைப்பிடித்து இறைக்கிறானா? மண்வெட்டியைப் பிடித்துக் கொத்துகிறானா? உழுபவனுக்கு 5 செண்ட் நிலம் கூடக் கிடையாது. ஆனால் நாம் பண்ணிவைத்த சிலைக்கு 200 ஏக்கர் நிலம் எதற்காக? மக்கள் தலையில் கைவைக்கக் கூசுவதில்லை, ஆண்டவன் சொத்தில் கைவைக்க மட்டும் ஏன் இந்தத் தயக்கம். நாளுக்கு நாள் மக்கள் துயரம் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. ஏழையின் கண்ணீர் கூரான வாளை ஒக்கும். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இந்தச் சர்க்காரைக் கவனித்துக்கொள்ளத்தான் போகிறார்கள். அன்றைக்கு இந்தச் சட்டத்தை நிச்சயமாக தலைகீழாக மாற்றியமைப்பார்கள். இல்லை என்றால் சர்க்காரையே மாற்றிவைப்பார்கள். ஆகையால் ஏழைகளுக்கு நன்மை உண்டாகக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தை மாற்றி திருத்தி அமைக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI N. MARUDACHALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உச்ச வரம்பு சட்டத்தைக்கொண்டு வந்திருக்கக்கூடிய ரெவினியு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தினால் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தையே மாற்றி அமைக்கமுடியும் என்று நினைக்கலாம். ஆனால் நான் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உச்ச வரம்புச் சட்டமானது நீண்ட நெடுநாளாக வெளியிருக்கும் விவசாயி அவர்களின் கிளர்ச்சியின் மூலமாகவும், பல ஆயிரம் சங்கங்களுடைய அங்கத்தினர்களின் நிர்ப்பந்தித்தினாலும் கொண்டு வந்த சட்டம் என்று நான் கூறுகிறேன். இந்த சட்டத்தினால் தாழ்த்தப்பட்ட விவசாய மக்களுக்கு உருப்படியான ஏதாவது நன்மை கிடைக்குமா என்று பார்த்தால் எவ்விதமான நன்மையும் கிடையாது. அதாவது ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் இருப்பார்களானால் அவர்களுக்குப் பாகப்பிரிவினை ஆகாமலிருந்தால், ஒவ்வொருவருக்கும் 30 ஏக்ரா என்று உச்ச வரம்பு என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்குமேல் உள்ள நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 5 ஏக்ரா நிலம் உண்டு என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. தியாகிகளுக்கு 5 ஏக்கர் நிலம் கொடுத்த காரணத்தினால் இந்த எண்ணம் அவர்களுக்கு வந்ததோ என்று தெரியவில்லை. அதுபோக மற்ற நிலங்கள் இருக்கின்றன. தோப்பு தோட்டங்கள், பழத் தோட்டங்கள் இவைகளுக்கெல்லாம் மிகத் தாராளமான அளவில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. குன்னூர், மேட்டுப்பாளையம், முதலிய இடங்களில் 500, 600 ஏகராக்களுக்கு மேலுள்ள முதலாளிகள் இருக்கிறார்கள். அங்குள்ள பாக்குத் தோட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்த தகராறுகளெல்லாம் அமைச்சரவர்களுக்கு தெரியும். லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. கரும்புத் தோட்டம் அதே மாதிரிதான். பஸ் முதலாளி மில்லையும் வைத்துக் கொள்ளலாம். அதோடு முப்பது ஏக்ரா நிலத்தையும் வைத்துக்கொள்ளலாம். மற்ற சாதாரண ஏழைகளுக்கு உதவி செய்வது போலவே மலைத்தோட்ட விவசாயிகளுக்கும் நன்மை உண்டாகவேண்டுமென்றால், அவற்றிற்கும் விதிவிலக்கு அளிக்கக் கூடாது. இந்தத் தொழிலாளர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கு



எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. ஆகவே, இந்தச் சட்டத்தை ஏழைகளுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் அமைக்க வேண்டும். நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை எடுக்கிறபோது நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. அந்த நஷ்ட ஈடு—5,000 ரூபாய் இருந்தால் 12 மடங்கு அதிகமாகக் கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதிகபடியான நஷ்ட ஈடு கொடுப்பது அவ்வளவு சரியல்ல என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இன்றைக்கு நிலத்தை நிர்ணயித்து அந்த நிலத்தின் விளைவை நிர்ணயித்து மார்க்கெட் ரேட் பிரகாரம் வருடா வருடம் ஒரு முடிவு இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கும். நிலத்திலிருக்கிற விவசாயிகளை வெளியேற்றாமல் தடுக்க ஒரு சட்டம் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உணவு உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். சென்ற காலத்தில் திட்டக் கமிஷன் சொல்லிய ஒரு குறிக்கோளானது நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும், அதிலிருந்து உற்பத்தி பெருகவேண்டும், அப்போதுதான் விலைவாசி குறையும் என்கிற அடிப்படையில் இதன் சட்டம் கொண்டு வரவேண்டும் என்றுதான். திட்டக் கமிஷனின் அந்தக் குறிக்கோள்களுக்கு நேர் மாறாக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. எனக்கு முன் சொன்ன ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் பாம்பும் சாகாமல் தடியும் முறியாமல் இருக்கவேண்டும் என்கிற மனப்பான்மையில் நிலச்சுவான்தார்களை மனஸ்தாபம் செய்து கொள்ளாமல் விவசாயிகளின் கண்ணைத் துடைப்பதுபோல இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது போல் மலையிலுள்ள காப்பி, தேயிலைத் தோட்டங்களுக்கும் உச்சவரம்பு கட்டவேண்டும், 300 ஏக்ரா 400 ஏக்ரா என்று வைத்துக்கொண்டு, அவர்கள் வருடத்தில் லட்சக்கணக்காக லாபம் சம்பாதித்து வருகிறார்கள். இன்னொன்று பத்தாண்டு காலமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு சர்க்கார் நிலம் அளித்து வருகிறார்கள். தானிய உரத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினால், அப்படி வழங்கப்பட்ட நிலத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலங்களுக்கும் பட்டா கொடுக்கப்படவில்லை. ஆகையினால் அதற்கு ஆபத்து வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உணவு உற்பத்தி எந்த விதத்திலும் தடைப்படாமல் இருக்கவேண்டும். பட்டாளி மக்களுக்கு நல்ல நிலம் கொடுக்ககூடிய முறையில் இந்தச் சட்டத்தை அமைத்தால்தான் சர்க்கார் மக்களுடைய நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருக்கும். 1947–48-ம் வருடத்திலே சர்க்காருக்கு ஸ்டாம்பு விற்பனை மாத்திரம் 3 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. 1949-50 என்று வரிசையாக பார்த்துக்கொண்டே வந்தால் அது எக்கச்சக்கமாக உயர்ந்து கொண்டிருக்கும். இதற்கு முக்கிய காரணம் இந்த நிலச்சீர்த்திருத்தச் சட்டம் வருமென்று சில ஆண்டுகளாக நிலச்சுவான்தார்கள் தங்கள் சொத்துக்களைப் பலப்பல கூறாகப் போட்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்தச் சட்டம் வந்த காலத்தில் சர்க்காருக்கு நிலம் கிடைக்குமா கிடைக்காதா என் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த உபரி நிலத்தை எடுத்து எப்படி விநியோகிப்பது, சர்க்கார், யார் யாருக்கு கொடுப்பது என்ற முறையில் இதில் வகுக்கப்பட வேண்டும். இன்று பெரிய மூலதனம் போட்டிருக்கக்கூடிய, பஸ் தொழிலிலிருந்து தேயிலைத் தோட்டம் வரையிலும் இன்று ஒரு உச்சவரம்பு கொண்டு வந்தால் அதிலிருந்து நமக்கு நல்லதொரு நிலை ஏற்பட முடியும். இன்று, கோவில்களை எடுத்துக்கொள்வோம். கோவில்கள் அவசியந்தான். கோவில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாமென்று சொன்னது மாதிரி கோவில்கள் இருக்கவேண்டியதுதான். ஆனால் கோவில்களுக்கு வேண்டிய நிலம் எவ்வளவு என்பது பற்றி ஒரு திட்டம் இராக்க வேண்டும். 200 ஏக்கர் ஒரு கோவிலிற்கு அவசியமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 200 ஏக்கர் கொடுத்தால், கோவில் சிப்பந்திகள் கோவிலை அபிவிருத்தி செய்யவோ, அல்லது நல்ல விதமாகப் பூஜை செய்யவோ, மீண்டும் அதை புதுப்பிப்பதற்கோ அப்பணத்தை உபயோகிக்க மாட்டார்கள். அங்குள்ள ஆசாமிகள் ஆழம் பாழம்மாகத்தான் அதை முழுங்கத்தான் அது பிரயோஜனப்படுமோ தவிர சாக்கு அது பிரயேஜனப்படாது. கோவில்களுக்கு நிலம் வேண்டாமென்று சொல்லவில்லை,

வேண்டியதுதான். ஆனால் இவ்வளவு வேண்டாம், அதை 50 எக்கர் என்று ஒதுக்கி, அதை நிர்வகிக்க ஒரு கமிட்டி போட்டு அதைப் பரிபாலனம் செய்தால் நல்லது. கோவில்களும் சுகாதாரமான முறையில் இருக்க வேண்டும். ஆகவே, இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிலர், நில உச்ச வரம்புச் சட்டம் வரும், நமக்கும் நிலம் கிடைக்கும் அதை வைத்துக்கொண்டு சுபிட்சமாக வாழ முடியும் என்று எதிர்பார்த்த ஏழை மக்கள் இன்று ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே செலக்ட் கமிட்டியில் இதை ஆராய்ந்து பார்த்து இந்தச் சட்டத்தை நல்ல முறையில் சீர்திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் மனமாற வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாட்டிலே எப்பொழுது இம்மாதிரி ஒரு சட்டம் வரும், வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்களை ஏமாற்றக்கூடிய வகையில் ஆளும் கட்சியார் போய்க்கொண்டிருக்கிறார்களா அல்லது புலி வருகிறது, புலி வருகிறது என்று காட்டுகிற நிலையில் இருக்கிறதா என்பது போன்ற பேச்சுக்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது போல் இந்தச் சட்டம் இப்பொழுது இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. உழுபவன் ஊராளவேண்டும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்று பாடி வைத்தார்கள். செயல் முறையில் உழுதுண்டு வாழ்பவர்களுக்குத்தான் காலம் என்ற நிலைமை ஏற்பட, ஆண்டாண்டு காலமாக அடிமைகளாக, புழுவிற்கும் பூச்சிக்கும் கேவலமாக தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தவர்களின் நிலையை மாற்றி, அடித்தளத்தில் உள்ளவர்களை மேல் தளத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்து ஆளும் தரப்பில் உள்ள சர்க்கார் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது போற்றத்தக்கதேயாகும். இன்று நாட்டுப் புறங்களை எடுத்துக்கொண்டால், அங்குள்ளவர்கள் காலையிலிருந்து மாலை வரையில் கழனியில் வேலை செய்கிறார்கள். அவர்கள் ஒருவித சௌகரியமும் இல்லாமல் வாழ்ந்தார்கள். மற்றத் தொழிலாளர்களுக்கு எவ்வளவோ சட்டங்கள் செய்திருக்கிறோம். ஆலைத் தொழிலாளர்களானாலும் சரி அல்லது மற்ற தொழிலாளர்களானாலும் சரி, நகரப் புறங்களில் உள்ளவர்களுக்குப் பல சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களுக்கு நஷ்ட ஈடு உண்டு. ஆனால் ஏழை விவசாயிகளுக்கு குடியிருப்புத் திட்டமோ, அல்லது அவர்கள் விவசாயத்தைப் பெருக்குவதற்கு அல்லது மாடு மனை வாங்கவோ ஒன்றுமேயில்லாது திண்டாடும்போது, இன்று பலவித சட்டங்கள் கொண்டு வந்து அவர்கள் நிலையை சிறிதளவு முன்னேற்றியிருக்கிறோம். உழுபவனை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருப்பினும், உரிமையுடன் அதில் உழைப்பதற்கு அவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டுமென்ற நிலை வரவேண்டுமென்று எல்லோரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்று இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது வந்தால், பெரிய நிலக்கிழார்களுக்கு ஒருபுறம் சமாதானம் சொல்வது போலவும், அதே சமயத்தில் வோட்டுக்காக ஆளும் கட்சியினர் ஏழைகளிடம் சென்று, உங்களின் நன்மைக்காக இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லவும், ஆக இரண்டு பேர்களது வோட்டுக்களையும் வாங்கிக் கொண்டு போகலாம் என்ற எண்ணத்துடனேயே இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று பல குறைகள் இங்கு சொல்லப்பட்டன. சமுதாய சமதர்மம் வர வேண்டுமென்றால் பெரிய நிலக்கிழார்களை அடியோடு அடித்துக்கொன்றுவிட வேண்டுமென்பதல்ல. இன்று ஆளும் கட்சியிலேயே பல நிலக்கிழார்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சியில் தொழில் அதிபர்களும் இருக்கிறார்கள். ஆக, நிலக்கிழார்களின் சம்மதத்தின் பேரிலேயே இந்தச் சட்டம் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மச்சு வீட்டில் இருப்பவனை குச்சு வீட்டிற்குக் கொண்டு போகவேண்டுமென்றில்லாமல், குச்சு வீட்டில் உள்ளவனை மச்சு வீட்டிற்கு அல்லது மாடி வீட்டிற்குக் கொண்டு போகக்கூடிய ஒரு நிலைதான் சமுதாயத்தில் ஏற்பட வேண்டும். அந்நிலையை சிறிது சிறிதாக அஹிம்சா முறையில், தர்ம முறையில்



கொண்டு போக வேண்டுமென்பதுதான் நம் கொள்கை. அதற்கேற்ப சுதந்திரம் அடைந்த பத்து வருடங்களில் ஜமீந்தாரி முறையை ஒருவிதமாகச் சரிக்கட்டினோம். அதேபோல் பெரிய பெரிய அரசர்களை எல்லாம், அவர்களது பிரச்னைகளை அமைதியான முறையில் தீர்த்தோம். அதேபோல் பெரிய பெரிய நிலக்கிழார்களிடமுள்ள நிலங்களை எல்லாம் பிடுங்கிக் கொண்டு அவர்களையெல்லாம் தெருவில் ஓட்டாண்டிகளாக விட்டு விட வேண்டுமென்று எண்ணாது, அவர்களும் இந்த நாட்டில் பிறந்தவர்கள்தான், அவர்களும் இந்த நாட்டில் பிறந்த மகன்தான் என்ற உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டுமென்பதோடு, ஏழைகள் பரம்பரையாக என்றென்றும் ஏழைகளாகவே இருக்க வேண்டும் என்று நினைக்காமல் அவர்களது வாழ்க்கை நிலையும் உயரவேண்டும் என்ற முறையில் இந்தச் சட்டம் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. அடுத்தபடியாக, சிறுநிலச் சுவான்தார்களின் நிலையைக் குறித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற கடமைப்பட்டுள்ளேன். எங்கள் திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கு சிறு நிலச்சுவாந்தார்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் எப்படி என்று எனக்குத் தெரியாது. அங்கு ஐந்து எக்கர்களுக்குள் இருக்கிறவர்கள் 70 பர்சென்ட்டுக்கு மேல் இருக்கிறார்கள். அதில் முக்கியமாக பெண்கள், ஆதரவற்றவர்கள், கைம்பெண்கள், வாழ்க்கையில் யாதொரு ஆதரவும் இல்லாதவர்கள் ஒன்றிரண்டு எக்கர்களை வைத்துக்கொண்டு பிழைக்கக்கூடிய முறையில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். புருஷன் இறந்து விட்டால், தங்கள் நகை நட்டுக்களை விற்று சிறு நிலத்தில் போட்டு விட்டு அதிலிருந்து வரக்கூடிய வருவாயை வைத்துக்கொண்டு ஒரு குடிசையில் வசித்துக் காலத்தைக் கழிப்பவர்கள் நிறையப்பேர்கள் இருக்கிறார்கள், திருநெல்வேலியில். விவசாயத் தொழிலாளர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்ற நிலைமை ஏற்பட்டபோது திருநெல்வேலியில் ஒரு சீர்கேடான நிலைமை ஏற்பட்டது என்பதை நான் இங்கு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில், திருநெல்வேலியில் என்னிடம் வந்து நிறையப் பேர்கள் புகார் செய்து கொண்டார்கள். வயலில் உழுபவர்களை வெளியேற்ற முடியாது என்ற தைரியம் காரணமாக நிலச்சுவாந்தார்களாகிய பெண்களிடம் விவசாயத் தொழிலாளர்கள் வந்து, நீங்களே வந்து பாருங்கள், நாங்கள் அளந்து போட்டு விட்டோம் என்றும், நெல் களத்தில் கிடக்கிறது, அதை நீங்களே வந்து எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை சீர்கேடாயிற்று. சமீபத்தில் இந்த அறுவடையில்கூட அநேகப் பெண்கள், ஆண் துணையில்லாதவர்கள் அறுவடை வருமானத்தை, உழுபவர்கள் வந்து சொன்ன பிறகும் கூட, எங்களுக்கு ஒன்றுமே வேண்டாம், நீங்களே எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் அளவிற்கு அதிருப்தியடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஐந்து எக்கருக்கு ஒரு விதிவிலக்கு இருக்கிறது என்பது வரவேற்கத்தக்கதே. 1956–57, 1957–58-ல் ஸெல்ஸ் டாக்ஸ், ப்ரஃபஷனல் டாக்ஸ் அஸெஸ் செய்திருந்தால் அவர்கள் வெளியேற்ற முடியாது என்ற நிபந்தனையிருக்கிறது. ஒரு எக்கர் வைத்துக் கொணடிருந்தால் வருடாந்திர வருமானம் 600 ரூபாய் கிடைக்கும். அரை எக்கர் வைத்திருந்தால் 300 ரூபாய்தான் கிடைக்கும். அதை மட்டும் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியுமா ? ஆகவே சிலர் பெட்டிக் கடைகள் வைத்துக் கொண்டிருப்பார்கள். 1-00 p.m.

அப்போது அவர்கள் ப்ரபஷன் டாக்ஸ் கொடுக்கவேண்டியிருக்கும். சாதாரண பஞ்சாயத்துகளாக இருந்தால் நான்கு அணா என்று கூட ப்ரஃபஷன் டாக்ஸ் கொடுக்கவேண்டியிருக்கும். ஆகவே இம்மாதிரி டாக்ஸ் கொடுக்கிறவர்களுக்கு எல்லாம் இந்த சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுத்து உதவ வேண்டும். அதோடு இந்த ப்ரஃபஷன் டாக்ஸ் என்பது எவ்வளவு தொகை செலுத்துபவர்கள் இதில் உட்படுவார்கள், அது போலவே ஸேல்ஸ் டாக்ஸ்-லும் எவ்வளவு தொகை செலுத்துபவர்கள் இதில் உட்படுவார்கள் என்பதை நன்றாகத் தெளிவாக இதில் குறிப்பிடுவார்களானால் மிகவும் வரவேற்கத்தக்கதாய் இருக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[Srimathi Rajathi Kunchithapatham] [18th April 1960

அடுத்தபடியாக, கோவில்களுக்கு 200 எக்கர்கள் என்றிருப்பது வரவேற்கத்தக்க அம்சமல்ல என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதைப்பற்றி இங்கு பலவாருகப் பேசப்பட்டது. நடமாடும் தெய்வங்களுக்கு இவ்வளவு எதற்கு என்றும், நடமாடாத தெய்வங்களுக்கு இவ்வளவு எதற்கு என்றும் பேசப்பட்டது. நடமாடும் தெய்வங்களைப் போலவே நடமாடாத தெய்வங்களுக்கும் திருக்கல்யாணங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. இவை எல்லாம் எதற்கு என்றும் பேசப்பட்டது. வருடா வருடம் திருக்கலியாணம் நடைபெறுவது சரியல்ல என்ருலும், இதிலுள்ள கருத்தை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்விதம் வருடா வருடம் கலியாணம் நடப்பது சுவாமிக்கு அல்ல. சுவாமிக்கு கல்யாண திருவிழா என்று நடத்துவதின் மூலமாக, சிறு சிறு வியாபாரிகள், சிறு சிறு பெட்டிக் கடைக்காரர்கள், இவர்கள் எல்லாம் இந்தக் காலங்களில் தங்கள் வியாபாரத்தை நடத்திக்கொள்ளலாம்., அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளியவர்கள் ஓரளவு வருமானத்தைத் தேடிக்கொள்ள முடியும் என்ற எண்ணத்தோடுதான் ஆண்டவனின் பெயரைச் சொல்லி இவ்விதம் திருக்கல்யாணம் நடத்திக் கொண்டிருக்கிருர்களே ஒழிய, ஆண்டவனுக்கு வருடா வருடம் திருக்கல்யாணம் நடத்திஞல்தான் மன திருப்தி ஏற்படும் என்பது அல்ல என்பதுதான் என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம். இம்மாதிரியான திருவிழாக்கள் நடைபெற வேண்டியதில்லை என்று சொல்வதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை. அதோடு இப்போது 200 எக்கர்கள் என்று கட்டுப்படுத்தியிருப்பது சரியல்ல என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இவ்விதம் 200 எக்கர்கள் என்று நிர்ணயித்துவிட்டால், கோவிலின்பேரில் தர்மம் செய்ய வேண்டும் என்று எண்ணுகிற நிலக்கிழார்களை இனி மேல் கோவில்களுக்கு தர்மம் செய்ய வேண்டாம் என்று சொல்லுகின்ற அளவில், இனிமேல் தர்மம் செய்ய வேண்டியதில்லை என்ற மனோ பாவம் ஏற்படுகின்ற முறையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. ஆகவே, இதற்குப் பதிலாக கோவில் நிலங்களுக்கு உச்ச வரம்பு என்பது இல்லாத முறையில் அமைத்துவிடலாம். கோவில் சொத்துக்களை எல்லாம் கவனித்துக்கொள்வதற்கு எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்கள் இருக்கிருர்கள், மற்றும் எத்தனையோ அதிகாரிகள் எல்லாம் இதைப் பரிபாலித்துக்கொள்வதற்கு இருக்கிருர்கள். இவர்கள் மூலமாகக் கோவில் நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையிலோ அல்லது சேவாக் கூட்டுறவு முறையிலோ உழுபவர்களைக் கொண்டுவந்து நேரடியாக அதில் பாடுபடக்கூடிய வகையில் ஏற்பாடு செய்தால் நன்ருக இருக்கும். இது மட்டுமல்ல, இப்போது 200 எக்கர்கள் என்று சொல்லப்பட்டிருப்பதையும், யாரிடம் கொடுத்து சாகுபடி செய்யப் போகிருர்கள் என்பதும் இதில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. இப்போதுள்ள முறையில் நடுத்தரக்காரர்கள்தான் (மிடில் மென்) குத்தகைக்கு எடுத்து, அவர்கள் கீழே உள்ள விவசாயிகளுக்குக் கொடுத்து, அதில் விவசாயிகள் காலை முதல் மாலை வரையில் முதுகில் வெயில்பட வேலை செய்து கொடுக்கின்ற ஊதியத்தில் விவசாயிககுக் கொஞ்சம் கொடுத்துவிட்டு, கோவிலுக்கும் கொடுத்துவிட்டு, அதில் தானும் பங்கு எடுத்துக் கொள்ளுகின்ற முறைதான் இருக்கும். ஆகவே, இதைத் தவிர்க்கின்ற முறையில் கோவில் அதிகாரிகளின் கீழே கோவில் நிலங்களை எல்லாம் எந்த விதமான உச்ச வரம்பும் இல்லாமல், நேரடியாக விவசாயிகளைக் கொண்டு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தால் அதன் மூலம் பாமர ஏழை விவசாய மக்கள் எவ்வளவோ பயனடைய முடியும். அப்போது தான் கோவில் சொத்துக்களை வைத்துக்கொண்டு சுரண்டுகிற தன்மையையும் நம்மால் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, குடியிருப்பு மனை சம்பந்தமாகப் பார்க்கப்போனுல், ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எத்தனையோ குடும்பங்கள் ஒரு இடத்தில் வசித்துக்கொண்டிருக்கிருர்கள். இந்த இடத்தின் நிலச் சொந்தக்காரர்கள் இம்மாதிரியான சட்டம் வரப்போகிறது என்றறிந்து இந்தக் குடும்பங்களை அந்தக் குடியிருப்பு மனையிலிருந்து எந்த விதத்திலோ அவஸ்தைப்படுத்தி வெளியேற்றிவிடுகின்ற முறையைக் கையாண்டு கொண்டு



18th April 1960] [Srimathi Rajathi Kunchithapatham]

இருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டும் அல்ல, அவர்கள் உபயோகித்துக்கொண்டிருக்கிற குடி தண்ணீர் கிணறுகளைக்கூட மூடிவிடுகிருர்கள். இதன் காரணமாக அங்குள்ள ஏழை மக்கள் குடி தண்ணீர் இல்லாமலும், குடியிருப்பு மனை இல்லாமலும் கஷ்டப்படக்கூடிய நிலை வந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு குடியிருப்பு மனை வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1.06 p.m.

அடுத்தபடியாக, ஸ்ரீதனத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், 10 எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தந்தையாரோ அல்லது வேறு உறவினர்களோ, பாடுபட்டு ஏதாவது கொடுத்திருந்தால் அதில் அவர்களுக்கு ஒன்றுமே இல்லை என்று சொன்ஞல், அது சரியல்ல என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது இருக்கின்ற முறையைப் பார்த்தால் தந்தை யாருடைய சொத்து 30 எக்கர் என்று இருக்குமாஞல் இவர்களுக்கு 10 எக்கர்களை தவிர ஒன்றுமே கிடையாது என்று இருக்கிறது. இம்மாதிரியான நிலையில், பரிதாபகரமான நிலையில் பெண்களை விடக் கூடாது. கனம் அங்கத்தினர் ஒருவர் கேட்டார், எதற்காக இந்த ஸ்ரீதனம் என்று. அவ்விதம் கேட்பதாக இருந்தால் ஆண்களுக்கு எதற்காக சொத்து, அவர்களுக்கு மட்டும் ஏன் இந்த உரிமை இருக்கவேண்டும் என்று கேட்கக்கூடிய நிலை ஏற்படலாம். ஸ்ரீதனம் வாங்கக்கூடிய பெண்கள் எங்கேயோயிருந்து வந்தவர்கள் அல்ல. அவர்களும் ஒரே தகப்பனுக்குப் பிறந்தவர்கள்தான். அந்த வீட்டில் பிறந்த மற்ற ஆண்களோடு பிறந்தவர்கள்தான். மற்றவர்களுக்கு எவ்வளவு உணர்ச்சி இருக்கிறதோ அதே உணர்ச்சி இந்தப் பெண்களுக்கும் இருக்கும். அந்த வீட்டில் பிறந்த ஆண்களோடு இந்தப் பெண்களும் ஒன்ருகச் சேர்ந்து வாழ்ந்தவர்கள்தான். ஆண்களுக்குத்தான் உணர்ச்சி உண்டு, பெண்களுக்குக் கிடையாது, அவர்கள் வெறும் கல்சிலைகள்தான் என்று நினைப்பது தவறு. ஆண்களுக்கு எந்த விதமான உணர்ச்சி இருக்கிறதோ அதே உணர்ச்சி பெண்களுக்கும் உண்டு. ஆகவே அவர்களுக்கு இருக்கிற ஸ்ரீதனத்தை அவர்கள் போதுமான அளவுக்கு வைத்துக்கொள்ள உரிமை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இது பாரபட்சமாகத்தான் அமையும் என்பதைத் தெரிவிப்பதோடு, அவர்களுக்கு இதனுல் மனக்கசப்பை ஏற்படுத்தாத விதத்தில் வர்களும் ஸ்ரீதனத்தில் 30 ஏக்கர்களை வைத்துக்கொள்ளலாம் என்று 57-வது ஷரத்தில் அமைக்க வேண்டும் என்று பெண்களின் சார்பில் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: As there are no more speakers I adjourn the House till 8-30 a.m., to-morrow.

The House then adjourned.

[18th April 1960

## APPENDIX

[Vide answer to starred question No. 717, asked by Sri N. K. Palanisami on behalf of Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 18th April 1960, page 183 supra.]

**RESOLUTIONS PASSED BY THE STATE LABOUR ADVISORY BOARD AT ITS MEETING HELD ON 12TH AND 13TH DECEMBER 1958.**

*Resolution I.*—" This meeting of the State Labour Advisory Board recognizes that the Code of Discipline unanimously adopted at the 16th Session of the Indian Labour Conference at Nainital in May 1958 is a landmark in the history of industrial relations in our country and if sincerely implemented by all the parties concerned, will ensure peace in industry and cordial relationship between management and workers. The meeting further recognizes that unless the managements, trade unions and the Government discharged their respective individual and joint obligations, the efforts to bulid a new edifice of industrial relations will be frustrated.

The representatives of employers and trade unions as well as the State Government attending the conference will make every effort to implement the Code. This meeting desired to note the underlying fact that the code has been voluntarily agreed to by the representatives of All-India Organizations of employers and trade unions and of Governments of the States and the Union. Such voluntary agreements although they have not got the sanction of laws, are of great importance because obligations have been willingly undertaken.

As a step in the direction of implementing the Code, this meeting of the State Labour Advisory Board calls upon the employers including the employing authorities in Government departments and quasi-Government institutions and unions in this State to come to a mutual understanding to implement the Code.

The meeting realises that in order to see that the Code is implemented by all the parties, it is necessary to create an atmosphere wherein it will become impossible for anyone to ignore the weight of public opinion.

As a first step in this direction, this meeting recommends to the State Government to convene a conference on a wide basis of representatives of employers including the representatives of employing departments of Government and quasi-Government institutions, trade unions and the State Labour Officers. The only agenda of the Conference will be the Code of Discipline in Industry and measures for its implementation."

*Action taken.*—The Government have decided that the State Evaluation and Implementation Committee constituted by them, may look into the problems connected with the implementation of the Code of Discipline and that it is not therefore necessary to convene a special conference.

The question of extension of the Code of Discipline to employers and unions not affiliated to Central Organizations was discussed at the first meeting of the State Evaluation and Implementation



Committee held on 12th September 1959 when it was unanimously decided that the Labour Officers and Inspectors of Factories should contact the employers and unions not affiliated to any of the Central Organizations and advise them individually to ratify the Code of Discipline in writing. Instructions have been issued to these officers in this regard.

Posters explaining the significance of the Code in Tamil, English and Hindi have also been received from the Government of India. They have been distributed to the labour and employers' representatives through the Labour Officers. Copies of the Model Grievance Procedure referred to in the Code have been printed both in English and Tamil versions and circulated to all employers and registered trade unions with a request to adhere to the procedure.

*Resolution II—A tripartite machinery for the effective implementation of the Code of Discipline.*—" This meeting of the State Labour Advisory Board realizes that it is necessary to have a machinery which would promptly investigate complaints of breach of the Code of Discipline. The meeting is of the opinion that the Labour Department of the Government with its pre-occupation with the increasing day-to-day work will not be able to undertake this task. On the other hand a tripartite machinery will have the advantage of enhancing the chances of its findings being accepted by employers and workers and of mistakes being rectified.

This meeting therefore recommends to the Government to set up a Tripartite Organization. This Committee shall be authorized to constitute Committees from time to time for the quick investigation of complaints. In this connection the question of utilizing the proposed evaluation committee for investigating implementation of awards on settlements may be considered."

*Action taken.*—The Government have since constituted a State Evaluation and Implementation Committee, with the Commissioner of Labour as Chairman, and with five representatives each on the side of employers and employees. Representation has been given to all the All-India Organizations of employers and employees besides others. Accepting the recommendation of the State Labour Advisory Board, the Government have entrusted to this Committee the work of administration of the Code of Discipline.

*Resolution III—The early finalization of the rules in respect of the new enactments.*—" This meeting takes note of the fact that the rules for some State and Central enactments affecting labour and managements are still pending finalization and suggests that this may be expedited."

*Action taken.*—The Government have finalized and published in the *Fort St. George Gazette* the following rules :—

(1) The Madras Industrial Disputes Rules, 1958.

(2) Rules under the Madras Maternity Benefit (Amendment) Act, 1958.

(3) The Madras Industrial Establishments (National and Festival Holidays) Rules, 1959.

[18th April 1960

(4) The Madras Catering Establishments Rules, 1959.

(5) The Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Rules, 1959.

All the above rules are now in force.

THE HON. SRI C. SUBRAMANIAM : Secondary grade teachers under Government and in local bodies are granted the secondary grade scale only if they hold sanctioned secondary grade posts. Since there were no sanctioned secondary grade posts as such in lower elementary schools and the lower elementary standards of higher elementary schools under aided managements, all secondary grade teachers in these schools were getting the benefit of the scale of Rs. 45—2—85. Government, therefore, extended to aided schools also the rule that only secondary grade teachers who hold specifically sanctioned secondary grade posts will be eligible for the secondary grade scale. This was done with effect from 1st April 1958. Thus, secondary grade trained teachers in Local Body and aided elementary schools who are appointed after 1st April 1958 to posts other than sanctioned secondary grade posts will get pay only in the higher elementary grade scale. It has been specifically laid down, however, that this order should not adversely affect existing teachers to whom the benefit of the Rs. 45—2—85 scale has been given by Private managements before 1st April 1958.



19th April 1960]

SRI M. S. SELVARAJAN : வரக்கூடிய கல்வி ஆண்டிலிருந்து 5-வது வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப்படப்போவதினால் அங்கு கட்டாயமாக ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விதி செய்யப்பட்டிருப்பதன் காரணமாக, ஹையர் கிரேடு ஆசிரியர்களை நியமனம் செய்தால் மீண்டும் அவர்களை வெளியேற்றவேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று கருதி சிற்சில ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடங்களில் புத்திசாலித்தனமாக ஹையர் கிரேடு ஆசிரியர் ஸ்தானத்திற்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் கடந்த வருடமே நியமிக்கப்பட்டிருப்பது உண்மையா ? அம்மாதிரி இருந்தால், ஏற்கெனவே வேலை செய்து கொண்டிருக்கும் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பாதிக்கப்படாமல் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிப்பதற்கு வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேள்வியை பூராவும் புரிந்து கொள்ளமுடியவில்லை. இப்பொழுது 5-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதன் காரணமாக 5-வது வகுப்பு வரையில் இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளில்கூட ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியராவது இருக்க வேண்டியது அவசியம் என்று தீர்மானிக்கப்பட்டு, இந்த ஆண்டிலிருந்து அந்த மாதிரி நியமிக்கப்பட்டு வருகிறார்கள். யாராவது ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர் இப்பொழுதே அதிலே பணியாற்றி வருவாரேயானால், அந்த செகண்டரி கிரேடு வாத்தியாரை உபயோகப்படுத்திக் கொண்டு, அவருக்கு இந்த சம்பளத்தைக் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

SRI K. ANBAZHAGAN : ஏராளமான துவக்கநிலை பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களுடைய இடங்களில் ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான காரணங்களில் ஒன்றாக சொல்லப்படுவது ஹையர் கிரேடு ஆசிரியர்களைவிட செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பது. எனவே ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று அரசாங்கம் சிபார்சு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது எவ்வளவு தூரம் நாம் பணம் செலவழிக்க முடியும் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. பூராவும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே இருந்தால், இன்னும் நல்லதுதான். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை அதிகமான குழந்தைகளுக்கு இப்பொழுது நமக்கு இருக்கக்கூடிய பண வசதியை வைத்துக்கொண்டு படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டும் என்பதுதான். அதன் காரணமாகத்தான் ஹையர் கிரேடு வாத்தியார்களை இன்னும் நியமித்துக்கொண்டு வருகிறோம். அவர்களுக்கு இன்னும் பயிற்சி கொடுத்து புதியதாக உற்பத்தி செய்து கொண்டு வருகிறோம்.

SRI A. VEDARATHNAM : செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இப்பொழுது ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 'பேயில்' வேலைக்கு வருகிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய தொகை தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்பதுதான் புலனாகிறது. அப்படி எவ்வளவு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 'பேயில்' இருக்கிறார்கள் என்பது தெரியுமா ? அப்படியானால் இப்பொழுது 5-வது வகுப்பிலே ஆங்கிலம் போதிக்க ஆரம்பிப்பதின் மூலமாக அவர்களில் எத்தனை பேர்கள் 'அப்ஸார்ப்' செய்யப்படுவார்கள் ? அப்படி செய்யப்படுகின்ற காலத்திலே ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு வேலையை விட்டு போகும்படியான நிலை வருமா ? அதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறார்கள் என்பதை தயவு செய்து அறிவிப்பார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** தனியாக கேள்வி போட்டால், அதற்கு பதில் சொல்லலாம்.

**SRI P. G. MANICKAM:** நமது நாட்டிலே செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக சர்க்காருக்கு தெரியும். செகண்டரி கிரேடு பயிற்சி சாலைகள் குறிப்பாக பெண்களுக்காக அநேகமாக ஒரு சில இடங்களில்தான் இருப்பதனால், இதை அபிவிருத்தி செய்து இன்னும் அதிகமாக செகண்டரி கிரேடு பயிற்சி சாலைகளை ஏற்படுத்துவதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா? இதைப்பற்றி இந்திய சர்க்கார் மாகாண சர்க்காரை கலந்து இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** ஒரு அங்கத்தினர் செகண்டரி கிரேடு வாத்தியார்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். இப்பொழுது கேள்வியைப் போட்ட அங்கத்தினர் அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறார். இது இரண்டும் சரியல்ல. கணக்காகத்தான் இருக்கிறது என்று தெரியவருகிறது. கணக்கு என்று சொன்னால் 100-க்கு 100 சரியாக இருக்கும் என்று சொல்லுவதற்கு இல்லை. அவ்வப்பொழுது சில சமயங்களில் தட்டு ஏற்படுகிறது. சில சமயங்களில் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையினால் காலப்போக்கில் அது சரியாகப் போய்விடும்.

**SRI V. K. KOTHANDARAMAN:** செகண்டரி கிரேடு உபாத்தியாயர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பதின் காரணத்தினால், ஹையர் கிரேடு உபாத்தியாயர்களாக படித்திருக்கக்கூடியவர்களுக்கு வேலையில்லாமல் காலதாமதம் ஏற்படுவதினால் அவர்கள் அதிகமாக கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியுமா? அதைப் போன்று பெண்களுக்கு முதல் இடம் கொடுக்க முடியாத நிலைமையின் காரணமாக கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பெண்களாக இருந்தால், ஹையர் கிரேடிலும் சரி, செகண்டரி கிரேடிலும் சரி, அவர்களுக்கு 'பர்ஸ்டு பிரிபரென்ஸ்' கொடுக்கக்கூடிய அளவுக்கு முயற்சி செய்யப்படுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** ஏதாவது ஒரு பள்ளியில் ஹையர் கிரேடுக்குப் பதிலாக செகண்டரி கிரேடு வாத்தியார் அதே சம்பளத்தில் சொல்லிக்கொடுக்கிறேன் என்று முன்வந்து சொன்னால், அது கூடாது, ஹையர் கிரேடு ஆசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்று சொல்லுவது எவ்வளவு தூரம் சரி என்று தெரியவில்லை. ஏனென்று சொன்னால், செகண்டரி கிரேடு வாத்தியார்களாக இருக்கும் பொழுது அவர்கள் அதிகமாக படித்திருப்பதின் காரணத்தினால் கல்வியின் தரம் உயர்வதற்கு வழி இருக்கிறது. நான் முன்னே சொன்னதுபோல் எல்லோரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்தால், கல்வியின் தரம் உயர்வதற்கு அனுகூலமாக இருக்கும். ஆனால், இப்பொழுது நமக்கு இருக்கக்கூடிய நிதி வசதியை வைத்துக்கொண்டு அம்மாதிரி செய்ய முடியவில்லை.

**SRI K. ANBAZHAGAN:** கல்வியின் தரம் உயர்வதற்கு ஹையர் கிரேடு ஆசிரியர்கள் இருக்கவேண்டிய இடங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருக்க வேண்டுமானால் அவர்களை ஊக்குவிப்பதற்கும், ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் மனக்கசப்பு வளராமல் இருப்பதற்கும், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களுடைய இடங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தால், அவர்களுக்கு 10 ரூபாய் ஹையர் கிரேடு ஆசிரியர்களைவிட அதிகச் சம்பளம் தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இதனால் எப்படி மனக்கசப்பு தீர்ந்துவிடும் என்பது புரியவில்லை. மனக்கசப்பு கொஞ்சம் அதிகமாகும். ஏனென்றால் ஏற்கெனவே ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. அதோடு அவர்கள் வாங்குகின்ற சம்பளம் ஹையர் கிரேடு



ஆசிரியர்களைவிட அதிகம் என்று சொன்னால் இன்னும் கொஞ்சம் மனக்கசப்பு அதிகமாகும். ஆகையால்தான் இப்பொழுது பரிசீலனை செய்து ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு எத்தனை பேர்களுக்கு பயிற்சி கொடுப்பது, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு எத்தனை பேர்களுக்கு பயிற்சி கொடுப்பது என்று தீர்மானம் செய்து, அந்த அடிப்படையிலே வருஷம் ஒன்றுக்கு ஆசிரியர்கள் பயிற்சிக்காக எடுக்கப்படுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் நாம் முடிவு செய்ய முடியும்.

**SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM:** தலைவர் அவர்களே, இரண்டுபேரும் ஹையர் கிரேடு ஆசிரியர்களாக இருக்கக்கூடிய பள்ளிகளில் இப்பொழுது செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் போடுகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்தில் 100-க்கு மேற்பட்ட ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு இதனால் வேலை இல்லாமல் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. உடனடியாக அதுபற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இது மூலக் கேள்வியிலிருந்து எழுவது இல்லை. இருந்தாலும்கூட, அதைப் பரிசீலனை செய்து, இனிமேல் புதியதாக மாணவர்கள் சேர்க்கப்படும்பொழுது அதிகமாக வகுப்புகள் ஆரம்பிக்க வேண்டியிருந்தால், அந்த இடங்களில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படும்.

**SRI K. VINAYAKAM:** Sir, is the Hon. Minister aware of the fact that in a higher elementary school where there are classes from I to VIII, if the secondary grade teachers, who have been appointed already before 1958, were handling classes from I to V, and if a new section in Class VI or Class VII is started, the authorities in the City of Madras compel the teacher, who is already handling a class between I and V drawing the secondary grade teacher's salary, to go and handle the higher class, and also to compel the management to appoint the higher grade teacher to handle those classes with a view to saving money to the Government? Is this not an unhealthy practice? Will the Government take steps to instruct the authorities not to compel managements to do so?

**MR. SPEAKER:** I have completely lost the trend of the question. If the Minister can answer the question, I have no objection.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** I am also unable to find the trend of the question, because it is too long a question. Evidently the hon. Member wants that even in regard to standards I to V, secondary grade teachers, if they had already been appointed, should be allowed to continue to teach classes I to V. If it is a composite school in the sense it is a higher elementary school, it is easy to shift the secondary grade teacher to the higher classes and appoint higher grade teachers. Certainly we cannot take advantage of the appointment once made, which is not available to other schools.

**SRI T. IRUSAPPAN:** தலைவர் அவர்களே, மலைவாசிகளுக்காக புதியதாக பள்ளிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்களுக்கு மற்ற ஆசிரியர்களைப் போல் சம்பளம் கொடுப்பதினால் அங்கு போவது கிடையாது. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்துவதற்கும், அவர்களுக்கு தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பதற்கும் சர்க்கார் ஆலோசிக்குமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** மூலக்கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி ரொம்ப தூரம் போய்விட்டது.

**MR. SPEAKER:** தனிக் கேள்விதான் போட வேண்டும்.

[19th April 1960

*Pay Commission's Report*

* 740 *Q.*—Sri N. K. PALANISAMI :
Sri M. P. SARATHI :
Sri V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Madras Pay Commission has submitted its report to the Government :

(*b*) if so, the decision taken by the Government on the recommendations made by the Commission ; and

(*c*) whether a copy of the Report will be placed on the table of the House ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The Madras Pay Commission has submitted its Report to Government on 5th April 1960.

(*b*) The Report is under consideration of Government. No decision has been taken as yet.

(*c*) The copy of the Report together with the decisions of Government will be placed on the table of the House.

Sri N. K. PALANISAMI : சர்க்கார் 'பே' கமிஷனுடைய அறிக்கையின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பாக 'பே கமிஷன் ரிபோர்ட்' இந்த சபையில் விவாதிக்க சந்தர்ப்பம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : சர்க்கார் முடிவுகளையும் தெரிவிக்கிறோம். அதற்குப் பிற்பாடு விவாதித்து, அதன்பிறகு முடிவுகளில் ஏதாவது மாறுதல் ஏற்படுவது அவசியம் என்று தோன்றினால், அதுமாதிரி செய்துகொள்ளலாம்.

Sri V. K. RAMASWAMY MUDALIAR ; May I know, Sir, when exactly the Government will publish the report ?

The Hon. Sri C. SUBRAMANIAM : As soon as the decisions are taken.

Sri K. ANBAZHAGAN : ஆசிரியர்களுடைய குறைகளை அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக்கும்பொழுது, "ஊதியக் குழு தீர்மானத்தின்படி உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய முடிவு தெரிவிக்கப்படும்" என்பதாக ஆசிரியர்களுக்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மகிழ்ச்சி யார் யாருக்கு பங்கிடப்படுகிறது என்பதையாவது கூறுவார்களா?

The Hon Sri C. SUBRAMANIAM : பொறுத்திருந்தால் அந்த மகிழ்ச்சி யார் யாருக்கு பங்கிடப்படுகிறது என்பதை தெரிந்துகொள்ளலாம்.

Sri V. K. KOTHANDARAMAN : சார், விலைவாசி உயர்வின் காரணமாக நீண்ட நாளாகக் கேட்டுவரும் காரணத்தால், நிதியமைச்சரவர்கள் சொன்னதுபோல், இந்த மாத இறுதிக்குள் சர்க்கார் அறிக்கை வெளியிடப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த மாத இறுதிக்குள்ளாக வெளியிடுவோம் என்று நான் எப்பவும் சொல்லவில்லை. ரிபோர்ட்தான் கொடுக்கப்படும் என்று சொன்னேன். இது ஒரு பகுதிக்கு மட்டுமல்ல, சர்க்காரிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் உள்ள ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளவை என்ன சிபாரிசுகள், அவைகளின்மேல் என்னென்ன உத்தரவுகள் போடவேண்டும், அதில் என்ன செலவாகும், செலவு அதிகமாகுமா என்றெல்லாம் பார்க்கத்தான் பரிசீலனை நடக்கிறது.



19th April 1960]

Sri N. K. PALANISAMI : இந்த ரிபோர்ட் எத்தனை பக்கம் கொண்ட ரிபோர்ட் (சிரிப்பு) ; இந்த செஷனுக்குள்ளாவது அதை இங்கே வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பக்கத்துக்கும் செஷனுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. எத்தனை பக்கம் என்று ஞாபகம் இல்லை.

*Payment of salaries to aided school teachers*

* 741 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that only 75 per cent of the salary for November alone will be paid to the teachers who are serving in aided schools during December;

(*b*) if so, the reasons for postponing the payment;

(*c*) whether any amount will be paid as pay or grant for December during January; and

(*d*) when their full salary for November and December, will be given ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The rule relating to the payment of grant to managements of aided elementary schools provides that only 75 per cent of the teaching grant assessed for the month of October should be paid for the month of November. Under a wrong presumption that this rule applies also to non-fee levying schools, only 75 per cent of the salary was paid to the teachers in non-fee levying schools for the month of November 1959, payable in December 1959.

(*c*) & (*d*) Instructions have already been issued to the Director of Public Instruction to the effect that it is not correct to deduct 25 per cent from the salary of teachers of non-fee levying schools for November 1959, because of the rule referred to in clause (*a*) of the answer. He has also been instructed to restore the cut to the teachers and to ensure that full salaries are paid to the teachers in non-fee levying schools for all months.

Sri K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that in spite of the departmental instructions issued by the Government, the authorities have not given effect to the same and there are some schools in the State which have not got back this 25 per cent cut which has been withheld ?

The Hon. Sri C. SUBRAMANIAM : If there are individual cases, the hon. Member may bring the same to the notice of the department or to the concerned Minister.

*Films for children*

* 742 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) குழந்தைகள் பட தயாரிப்புக்கு இம்மாநில சர்க்கார் என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

(ஆ) குழந்தைப் படங்களை சென்னைக்கு வெளியே மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் காட்ட என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

(இ) இதுவரை எத்தனை குழந்தைகள் படம் தயாராகியிருக்கிறது ?

(ஈ) அவற்றின் செலவென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : ஸார், கனம் அமைச்சரவர்கள் இந்த அறிக்கையை தமிழிலே கொடுத்திருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இனியும் தொடர்ந்து கல்வி இலாகா சம்பந்தப்பட்ட அறிக்கைகளையாவது தமிழிலேயே சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, விஷுவல் எடுகேஷன்தான் இளம் பிள்ளைகளுக்கு ஏற்றது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள் என்ற காரணத்தால், அந்தத் துறையிலே, அந்தத் கல்விப் படங்களை அதிகரிக்க இப்பொழுது கல்வி சீரமைப்பு மாநாடுகள் கூட்டவும், பணம் கொடுத்து உதவும் ஆக்டர்களைக் கொண்டு கல்விப் படங்களைக் குழந்தைகளுக்காக எடுக்க அவர்களை அரசாங்கம் கேட்டுக் கொள்ளுமா, அவர்கள் அப்படி தயாரித்துக் கொடுக்கச் செய்ய சர்க்கார் ஏற்பாடுகள் செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இம்மாதிரித் தமிழில் விடை அளிப்பது இது முதல் தடவையல்ல ; விளம்பர இலாகா தொடர்ந்து தமிழில்தான், முதல் பதில்கூட கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைப் பொருத்தவரை, புதிய படங்களை இப்பொழுது இருக்கக் கூடிய கலைஞர்களைக்கொண்டு, அவர்கள் உதவியைக்கொண்டு படம் தயாரிக்கலாம் என்பது சம்பந்தமாக, இப்பொழுது பெரிய படங்கள் எடுப்பவர்களை அம்மாதிரிப் படங்கள் எடுக்கும் அதே சமயத்தில், குழந்தைகளுக்கான சிறு படங்களையும் தயாரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன் ; அது பலன் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI P. G. MANICKAM : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள குறிப்பில், (ஆ) என்ற பகுதிக்கு பதிலளிக்கையில், "ராஜ்யக் குழந்தைகள் படக்குழு தான் எடுத்த இரு படங்களையும் விநியோகஸ்தர் மூலம் எல்லா மாவட்டங்களிலும் காட்ட முயற்சி எடுத்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறது. இது எவ்வாறு முயற்சிக்கப்படுகிறது, எந்த முறையிலே மாவட்ட குழுவிலேயும் கவனிக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதெல்லாம் விநியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல், 16 மில்லிமீட்டர் படங்களாக எடுத்து விளம்பர இலாகா மூலம் காட்ட ஏற்பாடு நடக்கிறது.

SRI A. A. RASHEED : May I know the total receipts from these Children Films and what is being done with the money collected ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have no idea about the total amount collected. Whatever is collected will go into the accounts of the Government.

SRI T. S. RAMASWAMI : சார், இந்த குழந்தைகள் படக்குழு, இரண்டு படங்களைத் தமிழாக்கி யிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, "ஜல் தீப்" என்றும், "சுக் அண்டு கெக்" என்றும் இருக்கிறது. இரண்டும் தமிழ்ப் பதங்கள் இல்லை. அது எப்படி செய்யப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இவை பெயர்கள். இவற்றைத் தமிழிலே "சுக்கும் கெக்கும்" என்று போட வேண்டும் ; அது அவ்வளவு அழகாக இல்லை. "ஜல் தீப்" என்பது, கலங்கரை விளக்கம் என்பது ; அது பழைய பேர், அதைக் கொடுத்திருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் விளம்பரப் படங்களை ராஜ்யத்திலே உள்ள ஒவ்வொரு தியேட்டரிலேயும் எப்படிக் காட்டப்படுகிறதோ, அதே போன்று மாதத்திலே ஒண்ணும் தேதியிலோ அல்லது 15-ம் தேதியிலோ, குழந்தைகளுக்காகவென்று, குறைந்த பட்ச ரேட்டிலே ஒவ்வொரு தியேட்டரிலேயும் காட்டப்படவேண்டும் என்ற அளவுக்கு தீவிர முயற்சி, எடுக்கப்படுமா ?

---

[a] Printed as Appendix III on pages 326–327 infra.



THE HON. SRI C. SUBRAMANIAM : It is a suggestion for action. அது போன்ற அங்கத்தினரவர்கள் கருத்துக்களை எழுதியனுப்பினால், அதைப் பரிசீலனை செய்யப்படும்.

SRI S. M. ANNAMALAI : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், "ஜல் தீப்" க்காக ரூபாய் 7,000-மும், அதே சமயத்தில், "அலாவுதீனும் அற்புத விளக்கும்" என்ற படத்திற்கு ரூபாய் 4,040-ம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, சர்க்கார் சொந்தமாக எடுத்தால், செலவு குறையும் என்ற புள்ளிவிவரம் கிடைப்பதால், சர்க்கார் சொந்தமாகவே படம் எடுக்க முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கணக்கிலிருந்து சர்க்கார் எடுத்தால் செலவு குறைவு என்ற புள்ளிவிவரம் எடுப்பது சரியில்லை. ரூபாய் 4,040 என்பதில், அது சர்க்கார் செலவு மட்டும் ; பலபேர்கள் தாங்களே கருவிகள் முதலியவைகள் கொடுத்ததால், செலவு குறைவாக ஆயிற்று.

*Group Insurance Scheme*

*743 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is a proposal by the Government to introduce Group Insurance Scheme of the Life Insurance Corporation to the teachers of elementary and secondary schools;

(*b*) if so, when this proposal is likely to be implemented; and

(*c*) the additional financial implications to the Government by introducing the scheme ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) The matter is under consideration. A final decision in the matter will be taken soon.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. NON-FLYING OF NATIONAL FLAG ON THE FORT FLAGSTAFF.

SRI M. S. SELVARAJAN : Sir, on a matter of Public Importance, கோட்டையில் இருக்கும் பெரிய கொடிமரத்தில் கொடி பறக்கவில்லை. ஏதாவது விசேஷ சம்பவம் உண்டா ? அல்லது . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : I have no information, Sir.

MR. SPEAKER : I shall convey the hon. Member's information to the Minister concerned.

## III.—PAPERS IN TAMIL LAID ON THE TABLE OF THE HOUSE.

SRI K. VINAYAKAM : Sir, on a point of order. While welcoming the healthy convention of placing the papers placed on the table of the House in Tamil, may I know why a similar copy in English was not placed on the table ? The absence of a copy in English places some of us in a handicap.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I thought that everybody here knew Tamil. If any hon. Member does not know Tamil, it is time he learnt it.

MR. SPEAKER : More so, the Hon. Member Sri Vinayakam, an adopt in both the languages, cannot make this complaint.

## IV.—GOVERNMENT BILL.

## THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960.)

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற மூன்று நாட்களாக, இந்த மசோதாபற்றி இந்த மன்றத்திலே விவாதம் நடைபெற்று இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் விவாதத்தில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மசோதாவில் உள்ள குறைபாடுகளைப் பற்றியும் எடுத்துரைத்திருக்கிறார்கள். மன்றத்திற்கு வெளியிலேயும், இந்த மசோதா பிரசுரித்ததிலிருந்து, பத்திரிகைக்காரர்களும், அரசியல் வாதிகளும், பொருளாதார நிபுணர்களும், தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்கள் குறைபாடுகளைப் பற்றியெல்லாம் அவர்களும் எடுத்து உரைத்திருக்கிறார்கள். இந்த நிலையிலே நான் பொதுவாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாளை தினம் கனம் ரெவின்யூ அமைச்சரவர்கள் விவரமாகப் பதில் அளிப்பார்கள்.

9-30 a.m. இந்த மசோதா பற்றி பல குறைபாடுகளைத் திருத்தாதது பற்றி சொல்லப் படுகிறது. பெரிய ஒரு பொருக்குக் கமிட்டி போடுவதாக இருக்கிறது. அதை கனம் ரெவின்யூ அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த பொருக்குக் கமிட்டி அம்மாதிரியான குறைபாடுகளைத் திருத்த சந்தர்ப்பம் இருக்கிறது. நாங்கள் தயாரித்த இந்த மசோதாவில் குற்றம் ஒன்றும் இல்லை, திருத்தக் கூடியது ஒன்றும் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. பொருக்குக் கமிட்டி பரிசீலிக்கப் போகிறது.

இந்த மசோதாவை நன்றாக பரிசீலனை செய்து நன்றாக கவனித்து நம்முடைய லட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையில் இதைக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. லட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இதைப்பற்றி நன்றாக ஆராய்ந்து இதை தயாரித்து இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லுகிறேன், இதில் குறைகள் இருக்கலாம், இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்தப் பிரச்னையில் தீவிரமாக கவனம் செலுத்தி வந்திருக்கிறவர்கள், மிகுந்த அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் பாரபட்சம் இல்லாதவர்கள் இப்படிப் பட்டவர்கள் எல்லோரும் இதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது இந்த மசோதாவானது ஒரு சிறந்த மசோதாவென்றும், மற்ற ராஜ்யங்களும் இதை பின்பற்றக்கூடிய வகையில் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும், மிகுந்த லட்சியத்தைக் கொண்டதாக இருக்கிறது என்றும் மிகுந்த ஆற்றல் உள்ளவர்கள் இதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதே சமயத்தில் மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் விவசாய உற்பத்தியை இதன் மூலம் அதிகமாக பெருக்க வேண்டும் என்பதுதான். விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதுதான். கிராமங்களிலுள்ளவர்களுடைய தேசீய வருமானம் அதாவது நாஷனல் இன்கம் என்று சொல்லக்கூடிய வருமானம் உயர வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் முக்கியமான லட்சியம். நம்மிடையே இருக்குக்கூடிய முக்கியமான தொழில் விவசாயம். அத்துடன் மற்ற தொழில்களும் கன ரக தொழில்கள் உள்பட எல்லாமும் பெருக வேண்டியதுதான். அவைகளிலும் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது. அத்துடன் விவசாயத்திலும் அதிகப்படியான உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டைப் பொருத்த மட்டில் விவசாய உற்பத்திப் பெருக வேண்டும் என்பதுதான். இப்பொழுது போதிய அளவு விவசாய உற்பத்தி பெருகவில்லை. அதனால் நாம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய அடிப்படை லட்சியம் அதை பெருக்க வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதன் மூலம் இந்த மசோதாவின் மூலமாக நில,



உற்பத்தியை எவ்வாறு பெருக்குவது என்பதைப்பற்றி தவறாக சிலர் குறை கூறுகிறார்கள். பத்திரிகைகளில்கூட அதைப்பற்றி எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு பக்கத்தில் எழுதுவதோடு இப்படிப்பட்ட மசோதாவை இந்த சமயத்தில் கொண்டுவருவதற்கு அவசியம் இல்லை என்றுகூட சொல்லுகிறார்கள். இதற்கு என்ன அவசியம் என்றும் சொல்லுகிறார்கள். இந்த அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் நோக்கம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்குத்தான் என்பதைக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் சிலரிடத்தில் தவறான அபிப்பிராயம் இப்பொழுது இருக்கிறது. யாரிடத்தில் நிலம் குவிந்து இருக்கிறதோ அவரிடமிருந்து நிலத்தை எடுத்துக்கொடுத்தால் அதனால் விவசாயம் பாதிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதனால் விவசாயம் பாதிக்கப்படாது என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம். ஒருவரிடத்தில் நிலம் அதிகமாக குவிந்திருந்தால் அதனால் விவசாயம் பாதிக்கப்படும் என்பது எங்களுடைய அபிப்பிராயம். அவர்கள் அதிகப்படியான நிலம் வைத்துக்கொண்டு அவற்றில் அவர்களால் போதிய கவனம் செலுத்த முடியாது. ஒவ்வொரு ப்ளாட்டிலும் ஒவ்வொரு செண்ட் நிலத்திலும் அவர்களால் கவனம் செலுத்த முடியாது. எவ்வளவு அக்கரை காட்ட வேண்டுமோ அந்த அளவில் அவர்களால் பூரா நிலத்திலும் அக்கரை காட்ட முடியாது. அதனால் உற்பத்தியை பெருக்கமுடியாது. பெருக்கலாம் என்ற அக்கரை இருந்தாலும் பூராவாக அக்கரை செலுத்தவே முடியாது. அப்படி செலுத்த முடியும் என்று சாதாரணமாக எதிர் பார்க்கவும் முடியாது. அக்கரை செலுத்த வேண்டும் என்று நினைத்தாலும் அப்படி செலுத்துவதற்கு அவ்வளவு சாத்தியம் இல்லை. ஆகவே எல்லா நிலத்திலும் அக்கரை செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுதான் இந்த மசோதாவின் அடிப்படை. ஆகவே ஒருவரிடத்தில் மட்டும் அதிகப்படியான நிலம் வைத்துக்கொண்டிருப்பது தவறு, அதை பலருக்கு பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் முக்கியமான நோக்கம். நிலம் குறைவாக போய் விட்டால் அதிகப்படியாக நல்ல முறையில் கவனம் செலுத்தி அதிகப்படியாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள நிலைமையை எடுத்துப் பார்த்தால் இது நன்றாகத் தெரிய வரும். அமெரிக்காவில் நிலம் அதிகமாக இருக்கிறது, நம்முடைய நாட்டில் விவசாய நிலம் குறைவாகத்தான் இருக்கிறது. அமெரிக்காவில் மொத்தம் 48 லட்சம் பண்ணை அதாவது ஹோல்டிங்ஸ் இருக்கின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவைகளில் நூற்றுக்கு 35 விகிதம் பண்ணைகள் 50 ஏக்கருக்குக் குறைந்ததாகவே இருக்கின்றன. இவர்கள் விவசாயத்தில் நன்கு கவனம் செலுத்தி நல்ல முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். உணவு உற்பத்தியை அதன் மூலம் பெருக்குகிறார்கள். அங்கே மேலும் மேலும் விவசாயத்தில் அதிகப்படியாக கவனம் செலுத்தி நவீன சாதனங்களை உபயோகித்து நவீன முறையில் விவசாயம் செய்து விவசாயத்திற்கு வேண்டிய எல்லாவிதமான கருவிகளையும் பயன்படுத்திக்கொண்டு கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டு மிகுந்த நம்பிக்கை கொண்டு கூட்டுறவு முறையில் சாதனங்களை பயன்படுத்திக்கொண்டு மேலும் மேலும் உற்பத்தியை பெருக்கிக்கொண்டு வருகிறார்கள். அதனால் சாதாரணமாக குறைந்த அளவில் நிலத்தை வைத்துக்கொண்டால் நல்ல முறையில் கவனம் செலுத்தி அதிகப்படியாக உற்பத்தியை பெருக்க வசதி ஏற்படும் என்ற முறையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும் என்று சொல்லுகிறவர்கள் இதை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். 100-க்கு 35 பேர்கள் விவசாயம் செய்யும்போதே அதிகப்படியான உற்பத்தியைப் பெருக்கும் போது நம்மால் என் அதிகப்படியாக உற்பத்தியைப் பெருக்க முடியாது ? ஆகவே அவர்கள் இதைப்பற்றி கூறை கூறுகிறவர்களுக்கு இதில் கொஞ்சம்கூட பயம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி அச்சப்பட வேண்டியதில்லை. அப்படிப்பட்ட அச்சத்திற்கு கொஞ்சம் கூட இடம் இல்லை. இவர்களுடைய அச்சம் என்ன என்பது நமக்கெல்லாம் விளங்கவில்லை,

[Sri M. Bhaktavatsalam] [19th April 1960

மற்றென்றும் பொதுவாகச் சொல்லப்படுகிறது. நிலச் சீர்திருத்தம் கொண்டு வருகிறார்களே நிலத்திற்கு மட்டும் உச்ச வரம்பு கட்டுகிறார்களே மற்றவைகளுக்கும் என் கொண்டுவரவில்லை என்று கேட்கிறார்கள். மற்றவைகளுக்கு எல்லாம் கொண்டு வருவது என்பது வேறு விஷயம். நிலத்துடன் மட்டும் போட்டி போடுவானேன் என்று கேட்கிறார்கள். நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்திற்கு மற்றவைகளிலிருந்து வரக் கூடிய வருமானத்திற்கும் வித்யாசம் உண்டு என்பதை இந்த சமயத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். நிலம் என்பது மூல பொருள். அதைப் பொறுத்த மட்டில் அதை வைத்துக்கொண்டு அதை திருத்தி நல்ல முறையில் விவசாயம் செய்து நெல் உற்பத்தி செய்கிறார்கள், மற்ற தானியங்களையும் உற்பத்தி செய்கிறார்கள். இயற்கையான அளவில் மூல பொருள்கள் இருக்கின்றன. ஆனால் வீடுகள் அப்படி இல்லை. வீட்டை கட்டுகிறார்கள். வீட்டை மனிதன் கட்டுகிறான். அதனால் நிலத்துடன் அது போட்டி போட வேண்டாம். அந்த நிலப் பிரச்னையை வீட்டுடன் சேர்க்கக் கூடாது. அப்படி சேர்ப்பது சரியல்ல. நிலமாகிய மூல பொருளை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நிலத்தில்தான் உணவு பொருள்களும் மற்ற எல்லா பொருள்களும் உற்பத்தியாகின்றன. அதனால் எல்லோரும் அதன் பயனை அடைய வேண்டும். அதனால் எல்லோருக்கும் நிலம் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே நிலம் எல்லோருக்கும் பயன் அளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்பதற்காக இந்தப் பிரச்னையைப்பற்றி நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வந்தது. நிலம் எல்லோருக்கும் பயன்பட இருக்க வேண்டும் என்று அதைப்பற்றி பரிசீலிக்கப்பட்டது. அதன் பிறகு இன்றைக்கு இந்த மசோதா இந்த சட்ட மன்றத்திற்குக் கொண்டுவந்து விவாதிக்கப்படுகிறது. மற்றென்று நமது நாஷனல் இன்கம் அதாவது தேசீய வருமானம் ரொம்பவும் அதிகரிக்க வேண்டும். அதிகமான அளவில் உயர வேண்டும். அப்படி உயர்த்துவதற்கு அவரவர்களுக்கு இன்சென்டிவ் வேண்டும் அவரவர்கள் தகுந்த அளவில் அக்கரை காட்டி முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். வருமானத்தை அதிகரித்தால்தான் தேசீய வருமானம் சராசரி விவசாய வருமானம் அதிகரிக்கும், அதற்கு இன்செண்ட்டிவ் வேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப்பற்றி சிலர் சில குறைகளை எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். வெளியேயும் இங்கேயும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. மற்றவர்களும் எழுதி தெரிவித்திருக்கிறார்கள். குறைகளை எப்படி தீர்ப்பது அடிப்படை கொள்கைக்கு குந்தகம் இல்லாமல் எப்படி திருத்தி அமைப்பது எவ்வாறு திருத்துவது என்பதையெல்லாம் செலெக்ட் கமிட்டி அதில் கவனம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. பெரிய நிலம் படைத்தவர்களிடத்தில் கை வைக்கிறார்கள், இந்த மசோதா அவசியம் இல்லை என்று நினைக்கிறவர்கள் இதைப்பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டும். நிலம் இல்லாதவர்களுக்கெல்லாம் நிலம் சேர வேண்டும் தீவிர சாகுபடி செய்கிறவர்களுக்கும் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கும் இந்த மசோதா அவசியமாக இருக்கிறது. குறை கூறுகிறவர்கள் எல்லாம் அவர்கள் கூறும் குறைகள் எல்லாம் அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்ததாகத்தான் இருக்கிறது. அவரவர்களுடைய மனப்பான்மைக்கு ஏற்றவாறுதான் குறை கூறுகிறார்கள். நிலம் அவரவர்களுடைய கையிலிருந்து ஒரு செண்ட் கூட போகக் கூடாது என்று நினைக்கிறார்கள். மற்றும் சிலர் அரசியல் கண்ணோட்டத்துடன் குறை கூறுகிறார்கள். ஒன்று, நிலத்தில் ஏன் கை வைக்கவேண்டும் என்றும் இந்த மசோதா அரசியல் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றும் குறை கூறுகிறார்கள். இந்த மசோதா சரியாக இல்லை, ஏன் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும், உச்ச வரம்பு ஏன் முப்பது ஏக்கராகவா இருக்கவேண்டும், பத்து ஏக்கரா போதும் என்று இருக்கக்கூடாதா என்று வேறு சிலர் குறை கூறுகிறார்கள்



19th April 1960] [Sri M. Bhaktavatsalam]

ஒரு வகையில் விதி விலக்கு, அதாவது எக்ஸெம்பஷன் எதற்கு என்றெல்லாம் குறை கூறுகிறார்கள். அரசியல் கண்ணோட்டத்துடன் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்வது தவறு. அரசியலைச் சேர்ந்தவர்கள் தவறான எண்ணத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தை சொல்ல வேண்டும் என்று குறை சொல்லுகிறார்கள். இப்படி அரசியலைப்பற்றி சொல்லும்போது இங்கேயும் சொல்லப்படுகிறது, வெளியேயும் சொல்லப்படுகிறது.

முதலிலே இந்த அடிப்படையான ஆட்சேபத்தை இந்த மசோதாவிற்கு சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தலைவர் என்று சொல்லும்போது சுதந்திரா கட்சி ஸ்தாபகரைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் தீவிரமான ஒரு அபிப்பிராயம் தெரிவித்து இருப்பதை பத்திரிகைகளிலே கனம் அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள். இம்மாதிரி சட்டம் கொண்டுவருவது அக்கிரமம், அநியாயம், எப்படி கொண்டு வரலாம், மக்களுடைய ஆதரவு மக்களுடைய அங்கீகாரம் இருக்கிறதா ? அப்படி சட்டம் கொண்டுவருவதென்றால் பொதுத் தேர்தல் வரை பார்த்திருந்து அப்போது மக்களுடைய ஆக்ஞையைப் பெற்று அந்த ஆக்ஞை பேரில் கொண்டுவர வெண்டும். இது அரசியல் திட்டத்திற்கே விரோதம் என்று எல்லாம் ஒரு தீவிரமான அபிப்பிராயத்தை சுதந்திரா கட்சி ஸ்தாபகர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மன்றத்திலே இத்தகைய கொள்கை உள்ளவர்கள் சுதந்திரா கட்சியை ஆதரிக்கின்ற கனம் அங்கத்தினர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று எனக்கும் இன்னும் புலப்படவில்லை. ஆகவேதான் சுதந்திரா கட்சித் ஸ்தாபகர் சொன்னதை எடுத்துச் சொல்லுகிறேன். இம்மாதிரி இந்தச் சட்டத்தை எப்படி இங்கே கொண்டுவரலாம், தவறு என்று சொல்கிறவர்கள், அவர்கள் ஆட்சி பீடத்தில் இருந்தபோது எத்தனை சட்டங்கள் எத்தனை சட்டங்களைக் கொண்டுவந்து இந்த சபையிலே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயிகள் கடன் நிவாரண சட்டம் . . .

SRI T. S. RAMASWAMI : On a point of order, Sir. Neither the Swtantra Party nor its leader is in this House. So, in these circumstances, may I know whether it will be fair or in order to criticise a party or its leader who is not here and therefore cannot answer ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: When I refer to certain criticisms that have been levelled against this Bill either by hon. Members in this House or by others outside, I am in order whether they belong to this party or that party. Whatever criticism has been levelled, I seek to answer.

MR. SPEAKER : Answering Mr. Ramaswami, this question has been before the public for long and arguments for and against the Bill have been given in public. In fact, the hon. Member, Mr. N. K. Palanisami, has given notice of an amendment, which he has not moved as yet, that the Bill be circulated for eliciting public opinion. Therefore, answering public opinion is a genuine function of the Minister and I think he is perfectly in order. He is not criticising any individual leader. He is criticising the policy of a party which he is entitled to do.

SRI A. GOVINDASAMY: இந்த மன்றத்தில் அடிக்கடி சில குறிப்பிட்ட தலைவர்களையோ அல்லது இங்கே நடைபெறுகிற பிரச்னையைக் குறித்து கருத்து வேறுபாடு விஷயத்தை வெளியிலே பேசுவதை சபையிலே கூறுகிறபோது அதற்கு பதில் சொல்லக்கூடியவர்கள் இந்த சபையில் இல்லாத நேரத்தில் பேசக்கூடாதென்று தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள்.

[19th April 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: He is questioning your ruling.

SRI A. GOVINDASAMY: I am not questioning.

MR. SPEAKER: Let him say what he wants to say.

SRI A. GOVINDASAMY: கனம் சபைத் தலைவர் அவர்களே எங்களுக்கு யோசனை சொன்ன நேரத்திலே நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம். இந்த மசோதாவில் பேசும்போது வேறு சிலர் மடாதிபதிகளைக் குறித்து பேசுவதை பேசக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். நான் இதைப்பற்றி பேசுவதற்கு அனுமதி தரவேண்டும். தலைவர் தீர்ப்பை மறுத்து நான் சொல்ல வில்லை. தலைவருக்கும் சபைக்கும் அடங்கி நடக்கவேண்டுமென்று இருக்கும்போது வேண்டுமென்றே கலகம் மூட்டுகிறார்கள்.

MR. SPEAKER: கனம் அமைச்சர் அவர்கள் இது விஷயமாக பேசலாம் என்று சொன்னேன். இதை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவெண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு விஷயம் வரும்போது அதைப்பற்றி பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் அப்பொழுது பதில் அளிக்கிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, யாரைப்பற்றியும் எந்தெந்த தலைவரைப்பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ தனிப்பட்ட ஹோதாவிலே அவர்களுடைய குறைபாடுகளை நான் ஒன்றும் கூறவில்லை. கூற மாட்டேன். ஆனால் யாராக இருந்தாலும் அவர்கள் இந்த மசோதாவைப்பற்றி தெரிவித்த அபிப்பிராயம் வெளியிலே வந்திருக்கிறது. இதைப்பற்றி குறிப்பிடுவது என்னுடைய கடமையும் பொறுப்பும் ஆகும் என்று உணர்ந்து நான் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகள் கடன்பட்டு அவஸ்தைப்படுகிறார்கள் என்று கருதி கடனுக்கான ப்ரோநோட் எழுதி இருந்தும்கூட, அவை மாறுகிற முறையில் விவசாயிகள் கடன் நிவாரண சட்டம் அன்று கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இதற்கென்று தனியாக மாண்டேட் ஒன்றும் பெறப்படவில்லை. ப்ரோநோட் எழுதிக் கொடுத்து கைநீட்டி வாங்கின முதலே போய்விட்ட வகையில் மன்றத்தில் நாம் சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். இதுமாதிரிதான் மதுவிலக்குச் சட்டமும். இது முக்கியமாக காங்கிரஸ் கொள்கைதான். இதைப்பற்றியும் சட்டம் நிறைவேற்றினோம். நிலச்சீர்திருத்தம்பற்றி முறையே தேர்தல் யாதாஸ்தில் ஒவ்வொரு தடவையும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்த போதும், ஜமீன்தாரி ஒழிப்பு சட்டம் கொண்டுவந்தபோதும் தனியாக மக்களிடம் போய் பிரத்தியேகமாக கோரவேண்டுமென்று அதற்கு முன்னாலே ஆலோசனை கூறப்படவில்லை. இதற்கு முன் இருந்த சட்டசபையில்கூட பண்ணையாள் பாதுகாப்பு மசோதா சட்டமாக கொண்டு வரப்பட்டது. அப்படி இங்கு ஒரு மாண்டேட் வேண்டுமென்றோ சட்ட நிலயங்களையோ, கோர்ட்டையோ முன்னாலே கேட்டு கொண்டுவரவேண்டுமென்று யாரும் அபிப்பிராயம் சொல்லவில்லை. ஆகையால் இந்த நிலச்சீர்த்திருத்தத்தைப் பொறுத்தமட்டில் இப்போது பொதுவாக இதைக் கொண்டுவந்துவிடவில்லை. திட்ட குழுவின் யாதாஸ்து சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பே பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. இந்த யாதாஸ்திலே நிலச்சீர்திருத்தச் சட்டம் மிகவும் வற்புறுத்தப்பட்டுவருகிறது என்ற விஷயத்தை வாக்காளர்கள் எல்லோரும் நன்றாக உணர்ந்திருந்தார்கள். பொதுத் தேர்தலில் மக்களுடைய ஆக்ஞை பெற்றுத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று இந்த கருத்தை எவ்வளவோ பெரியவர், அறிஞர் தெரிவித்து இருந்தாலும் அதை நாம் ஒப்புக்கொள்ளக் கூடிய கருத்து அல்ல என்றுதான் நான் சொல்லவிரும்புகிறேன்.

அவர்கள் மற்றொன்று சொன்னார்கள், நிலத்தை எப்படி கொடுக்கப் போகிறார்கள் என்று. இங்கேகூட பல கனம் அங்கத்தினர்கள் பேசும்போது சீலிங் வைக்கப் போகிறார்களே சர்ப்ளஸ் டிக்லார் பண்ணுகிறார்களே,



19th April 1960] [Sri M. Bhaktavatsalam]

பிறகு எந்த நிலத்தை கொடுக்கப் போகிறார்கள் என்று கேட்டார்கள். தேர்தல் வரையில் காத்துக்கொண்டிருந்து அதற்குப் பிறகு சர்ப்லஸ் நிலத்தை கொடுக்கப்போகிறார்களா என்று ஒரு கருத்து தெரிவிக்கப் பட்டது. மற்றொன்று சொன்னார்கள் எங்கே கொடுக்கப் போகிறீர்கள், அதிகம் கொடுக்க முடியாது. அவர் அவர்கள் ஏற்கெனவே பிரித்துக் கொண்டுவிட்டார்களே என்ற கருத்து இந்த மன்றத்திலே தெரிவிக்கப் பட்டது. நான் கூற விரும்புவது என்னவென்றால் பெரும்பாலும் நிலம் குத்தகைக்கு சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கிற சீலிங்குக்கு மேல் உபரியாக இருக்கும் நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வோம் என்றால் அந்த அளவிற்கு அதிகமாக இருக்காது. கொஞ்சம்தான் இருக்கும். ஏனென்றால் பெரும்பாலும் குத்தகைக்கு இருக்கிறார்கள். குத்தகைக்கு இருப்பவர்களுக்கு ஊர்ஜிதம் செய்யும், வகையில் தவணைகளில் மதிப்பைக் கொடுத்து விடச் செய்வது என்பதுதான் இந்த மசோதாவின் அடிப்படை. ஆகையால் குத்தகைத்தாரர்கள் தங்களுக்கு சொந்த நிலம் என்று கருதக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அவர்களும் இன்னும் அதிக உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபடுவார்கள். அவர்கள் நிலத்திற்கு இனி வேறு யாரிடமும் எதிர்ப்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. தாங்கள் எவ்வளவுக்கெவ்வளவு விவசாயத்தில் கவனம் செலுத்துகிறார்களோ அதற்கேற்றவாறு இந்தப் பலன் முதல்படியாக அவர்களுக்கும், அடுத்தபடியாக நாட்டுக்கும் கிடைக்கும் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவது அவசியம். சீரிய முறையில் விவசாயம் செய்ய இன்றைக்கு குத்தகைதாரர்களாக இருப்பவர்களுக்கு நிலத்தை ஊர்ஜிதம் செய்துவிட்டால் சொந்த நிலமாகக் கருதப்படும். அமெரிக்க அரசாங்கத்தினர்கூட டெனண்ட் பார்மர் என்பவர்களை புல் பார்மர் ஆக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை நான் சில பிரசுரங்களில் படித்தேன். நிலம் சொந்தமாக இருக்கவேண்டுமென்ற முறை அமெரிக்காவிலேகூட இல்லை. அமெரிக்காவிலே டெனொன்ட் பார்மர் புல் பார்மராக ஆக்கும் ஒரு திட்டம், ஒரு அமைப்பு, ஒரு சட்டம்கூட அமெரிக்காவிலே நடைமுறையிலே இருக்கிறது. இந்த முறையிலே இங்கே குத்தகைக்கு வைத்துக் கொண்டிருப்பவர்கள் சொந்தக்காரர்களாகக் கருதப்படுகிறார்கள். சொந்தக்காரர்களாக இந்த உரிமை, வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படும். ஆகவே இப்போது நாம் ஏதோ நிலத்தை எடுத்துக்கொண்டு இதைப் பின்னாலே ஏதோ இஷ்டம்போல் கொடுக்கப்போகிறோம் என்று இல்லை. மூன்றாவது நஷ்டயீட்டைப்பற்றிகூட சொன்னார்கள். நல்ல சட்ட நிபுணர்களாக இருக்கலாம், அவர்கள் சட்டம் தெரிந்தவர்களாக இருக்கலாம். நமக்கும் சட்டம் தெரியும். இரு தரப்பாரும் வாதாடுகிறார்கள். பெரிய வழக்கறிஞர்கள் வாதாடுகிறார்கள். அது தவறு அபத்தம் என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் இதிலே எவ்வளவு ஆற்றல் உள்ளவர்களாக இருந்தாலும், வழக்கு தீர்ப்பு விஷயத்திலே எவ்வளவுதான் நிபுணர்களாக இருந்தாலும் நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால் அரசாங்கமும் நன்றாக பரிசீலனை செய்துதான் இந்த மசோதாவை இங்கே கொண்டுவந்திருக்கிறது.

அரசாங்கம் இதை நன்றாகப் பரிசீலனை செய்துதான் கொண்டு வந்திருக்கிறது. இன்னும் இந்த மசோதாவைப் பற்றிச் சில அடிப்படையான குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. என் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்? இந்த வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இப்போது இருக்கிற அரசியல் சட்டப்படிப் பார்த்தாலும் நஷ்ட ஈடு கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு விரோதமாக நாம் போக முடியாது. ஆனால் மார்க்கெட் வால்யூ கொடுப்பதில்லை என்ற முறையில் அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தான் இந்த மசோதாவிலும் நஷ்ட ஈடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சிலர் இது ரொம்ப அதிகமாக இருக்கிறது, குறைக்க வேண்டுமென்கிறார்கள். சிலர் ரொம்பக் குறைவாக இருக்கிறது, இது நியாயமில்லை என்கிறார்கள்: இந்த இரண்டு வாதத்திலும் ஒன்று தெரிகிறது. நாம் நிர்ணயித்துள்ள

நஷ்டஈடு ரொம்பக் குறைவானது என்று இல்லை. அவர்கள் வேண்டியபடி கொடுப்பது என்பதுமில்லை. ஆகவே, மத்தியஸ்தமாக நாம் இதை நிர்ணயித்திருக்கிறோம் என்பதை அங்கத்தினர்கள் உணரவேண்டும்.

மற்றொரு குறைபாடு சொல்லப்பட்டது. மலைத் தோட்டங்களுக்கு விதி விலக்கு அளித்திருப்பது பற்றி ஆட்சேபங்கள் தெரிவித்தார்கள். இந்த மசோதாவின் அடிப்படை நோக்கம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவது தான். அரிசியை மட்டும் உற்பத்தி செய்தால் போதாது. நமக்குப் பழங்கள் வேண்டும். அது ஓரளவுக்கு அந்நிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. வெளி நாட்டு மார்க்கெட்டில் நம்முடைய பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்கு வசதி செய்கின்ற இந்தப் பழத் தோட்டங்களுக்கு இந்தச் சட்டத்தினால் குந்தகம் ஏற்படக்கூடாது என்பதுதான் நம் கவலை. ஆரஞ்சுத் தோட்டம் இருக்கிறது, தென்னந் தோட்டம் இருக்கிறது. இதைப் பிரித்துக்கொண்டேபோனால் அந்தத் தோட்டத்திற்குக் குந்தகம் இல்லாமல் பிரிக்க முடியாது. தோட்டத்தைப் பிரித்துவிட்டால் குறைவாக நிலமுள்ளவர்கள் தோட்டத்தை அழித்து விட்டு விவசாயம் செய்கிறேன் என்று போய் விடலாம். இதனால் தோட்டம் பாதிக்கப்படும். இப்போதே நமக்குத் தென்னை பற்றாக் குறையாக இருக்கிறது. நாம் தேங்காய் எண்ணெய்க்காக கொப்பரையை இறக்குமதி செய்கிறோம். ஆகவே தான் தென்னையின் உற்பத்தியை அதிகரிக்க கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். இவற்றுக்கு விதி விலக்கு அளிக்கப்படவில்லையென்றால் உற்பத்திக்குப் பாதகம் ஏற்படும். இதே போன்றுதான் டி, காப்பி போன்றவைகளும் நமக்கு அந்நிய நாட்டுச் செலாவணியை ஏராளமாகத் தேடிக்கொடுக்கிறது. அதற்கும் பாதகம் ஏற்படக்கூடாது. இப்போதே பல இடங்களில் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்தால் லாபம் என்று கருதுகிறார்கள். மண் அரிப்பு அதிகமாக ஏற்படுகிறது. நிலத்தின் சக்தி பாதிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் சட்டம் செய்து கொண்டிருக்கிறோம். இவ்விஷயங்களையெல்லாம் கருத்தில் கொண்டே விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி உற்பத்தி பெருக வேண்டுமென்றால் கால்நடை அவசியம். அந்தச் செல்வம் முக்கியமானது. அதன் தரம் இப்போது ரொம்பக் குறைவாக இருக்கிறது. சிற்சில பேர் மாட்டுப் பண்ணை வைத்திருந்தால் அவற்றுக்காக மேய்கால் வசதி வேண்டும். எல்லாவற்றுக்கும் ஒரே மாதிரி சீலிங் என்றால் பாதிக்கப்படும். ஆகவேதான் அதற்கு விதி விலக்கு இருக்கிறது. கரும்பு ஆலைகளும் அப்படித்தான். சர்க்கரை நமக்கு வேண்டியிருக்கிறது. விவசாயிகள் கரும்பை உற்பத்தி செய்கிற இடத்திற்குப் அருகாமையிலேயே கரும்பு ஆலைகள் இருந்தால்தான் விவசாயிகளுக்கு லாபம். கரும்பாலைகளுக்குச் சொந்தமாக நிலம் இருக்க வேண்டுமென்பதில்லை. சொந்தமாக நிலம் இல்லாத கரும்பாலைகளும் இருக்கின்றன. கரும்பு விவசாயிகளுக்கு நாம் விலக்கு அளிக்காவிட்டால் அது தொழிற்சாலையைப் பாதிக்கும். ஆகவே தான் கால்நடைப் பண்ணை கரும்புத் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில் அதை மத்தியஸ்தமாக நிபுணர்களைக் கொண்ட போர்டை அமைத்து அவர்கள் சொல்கிறபடி நடத்த தீர்மானித்தோம். மற்றொன்று சொன்னார்கள். ஏன் நல்ல முறையில் விவசாயம் செய்கின்ற பண்ணைக்கு விதி விலக்கு அளிக்கக்கூடாது என்று திட்டக் கமிஷனும் அதைத்தான் தெரிவித்திருந்தது. அவ்வாறு விதி விலக்கு இந்த மசோதாவிலும் இல்லை. காரணம் என்னவென்றால் யார் நல்ல முறையில் விவசாயம் செய்கிறார்கள் என்று சொல்வது ? நம்முடைய முக்கியமான நோக்கமே எல்லா விவசாயிகளும் நல்ல முறையில் விவசாயம் செய்ய வேண்டும் எல்லாப் பண்ணைகளும் நல்ல விவசாயப் பண்ணைகளாக இருக்க வேண்டும் என்பதுதான். அதற்காகவே அதிகமான உதவிகளை அளித்து ஊக்குவித்து வருகிறோம். ஆகவேதான் ஒரு பண்ணைக்கு, சில விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிப்பது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

மற்றொன்று, இந்தச் சட்டத்திற்கு "ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்" கொடுக்க வேண்டுமென்பது. ஒரு வருஷம், இரண்டு வருஷம், மூன்று வருஷம் என்று சொன்னார்கள். சாதாரணமாக, நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு அதை விற்பதற்கு, பிரிப்பதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமை இருக்கிறபோது இதற்கு முன்னால் அவர்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று பரிசீலனை செய்யப் புகுவது சிக்கலில் கொண்டு போய்விடும். ஆகவே என்றைக்கு இந்த மசோதா பிரசுரிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தேதியில் இருந்து அமுலுக்கு வருகிறது. எனக்குத் தெரியும் தஞ்சையில் பலர் நிலத்தை விற்றிருக்கிறார்கள். வாங்கினவர்கள் ஏற்கெனவே இந்த நிலத்தை குத்தகைக்கு வைத்துக் கொண்டிருந்தவர்கள் தான். வேறு வகையிலும் "பார்டிஷன்" ஆகியிருக்கலாம். இந்த மசோதாவின் அடிப்படையான நோக்கம் ஒருவர் கையில் ஏராளமான நிலம் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது என்பதுதான். அந்த நோக்கம் நிறைவேறி வருகிறது. மசோதா வருவதற்குள் விற்று விட்டதனால் அந்த அளவுக்கு அரசாங்கத்தின் பொறுப்பு குறைந்து விட்டது. இல்லாவிட்டால் எல்லாவற்றையும் எடுத்து, காம்பென்சேஷன் நிர்ணயித்து கொஞ்சம் கொஞ்சமாகப் பங்கிட்டுக் கொடுப்பது பெரும் பாரமாக இருக்கும்.



10-00 a.m. நமது லட்சியம் எல்லாம் இது பரவலாக பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். ஒருவர் கையிலே இருக்கக்கூடாது என்பதுதான் நமது லட்சியம். ஆகவே, ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்படாததால், முன்னாலேயே நிலத்தைப் பிரித்துக்கொண்டு விட்டார்கள் என்பதைப் பற்றி வருத்தப்படவேண்டியதில்லை. அடுத்தபடியாக, ஸீலிங்கைப் பற்றிச் சொன்னார்கள். ஸீலிங் அதிகமென்று சொன்னார்கள். பத்து ஏக்கர் என்று இருந்தால் போதும் என்று சொன்னார்கள். ஐந்து ஏக்கர் இருந்தால் போதும் என்று நான் சொல்லக்கூடாதா ? சிலர் 40 ஏக்கர் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் சிலர் 50 ஏக்கர் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்துத்தான், மற்ற ராஜ்யங்களிலுள்ள மசோதாக்களையும் வைத்துப் பார்த்துத்தான் பொதுவாக 30 ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சிலர் அதிகமாக நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், தாங்களே சம்பாதித்து நிலம் வாங்கியிருக்கிறார்கள். எனினும், ஒருவரிடமே அதிக நிலம் இருக்கக்கூடாது என்பதையொட்டித்தான் உச்சவரம்பு வைத்திருக்கிறோம். எல்லாவற்றையும் பார்த்துத்தான் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது, மேற்கொண்டும் இதுபற்றி செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்யலாம். 30 ஸ்டான்டேர்ட் ஏக்கர்தான் நியாயம் என்று வைத்திருக்கிறோம். 30 ஏக்கரில் சில சமயம் 12,000, அல்லது 15,000 ரூபாய் கூட வருமானம் வரலாம். கரும்பு, மிளகாய் உற்பத்தியில் நல்ல வருமானம் வரலாம். ஆனால் இதில் இப்போதைக்கப்போது பார்த்து இன்கம் டாக்ஸ் போடுவது மாதிரி போடமுடியாது. பொதுவாக இதில் அதிகப்படியான வருமானம் வராது என்பதினால்தான் 30 ஏக்கர் என்பதுதான் நியாயம் என்று 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று போடப் பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்தாற் போல்தான் மற்ற ஸீலிங்களும் வைத்திருக்கிறோம். ஆனால் இந்த 30 ஏக்கருக்கு மேல் உள்ளதை எடுத்து அவைகளுக்கு காம்பன்ஸேஷன் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. காம்பன்ஸேஷன் அதிகமென்றும், காம்பன்ஸேஷனே கொடுக்க வேண்டாமென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலர் மார்க்கெட் வால்யூவைவிட அதிகமாகிறது என்று சொன்னதை, சில அங்கத்தினர்கள் அப்படி குறிப்பிட்டதைப் பார்த்தேன். காம்பன்சேஷன் அதிகம் என்றும், குறைவு என்றும் சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் பார்த்து கணக்குப் போட்டுத்தான் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நியாயமான காம்பன்ஸேஷன் கொடுக்க வேண்டும். நியாயமான அளவு நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டுமென்று கருத்தோடுதான் நஷ்டஈடு விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. விகிதங்களில் வித்தியாசம் போடப்பட்டிருக்கிறது. 9 முதல் 12 வரையில் என்று போடப்பட்டிருக்கிறது. நிலத்தின் மதிப்பு ஒவ்வொருயிடத்திலும் ஒவ்வொருவிதமாகயிருக்கிறது. ஏக்கர் ஒன்று ரூ. 10,000, 12,000 என்று விற்கிற நிலங்களும் உண்டு. அது, ஆங்காங்குள்ள சூழ்நிலையைப் பொறுத்தது. ஆங்காங்குள்ள பொருளாதார நிலையைப் பொறுத்தது.

கையில் நிறையப் பணம் உள்ளவர்கள் நிலத்தை அதிகப் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். அப்படி ரூ. 10,000, 12,000 என்று விலையுள்ள இடங்களில் நமது காம்பென்ஸேஷன் குறைவு. அதனால் இந்த காம்பென்ஸேஷனை அதிகப்படுத்தவேண்டுமென்பது நியாயம் அல்ல. பொதுவாகப் பார்த்தால், இது நியாயமானதே. மார்க்கெட் விலை வராவிட்டாலும், இது நியாயமான வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.. மற்றொன்று, தேவஸ்தானம், மடங்கள் இவைகளின் நிலங்களைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதிலும் இரண்டு தீவிரமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஒன்று, ஏன் மடங்கள், அறநிலயங்கள், தேவஸ்தானங்கள் இவைகளின் சொத்துக்களில் கை வைக்கிறீர்கள், அவைகளை அப்படியே விட்டுவிட வேண்டுமென்பது ஒரு கருத்து. மற்றொரு கருத்து, ஏன் இவைகளுக்கு காம்பென்ஸேஷன் கொடுக்க வேண்டுமென்பது. கோவில்கள், மடங்கள் இவைகளின் நிலங்களை ஏன் விட்டு வைக்கவேண்டும், அவைகளை எடுத்து மக்களுக்கு வழங்கி விடலாமே, அப்படி அளித்து மக்களுக்கு நிவாரணம் அளிக்கலாமே என்று கருத்தும் சொல்லப்படுகிறது. ஆனால் நான் சொல்கிறேன், கோவில்களைப் பொறுத்தமட்டில் அதுவே ஒரு சோஷியலிஸ்ட் அமைப்பாகும் என்று சொல்லவிரும்புகிறேன். கோவில்களின் சாமி சாப்பிடவில்லை. அந்தச் சொத்துக்கள் மக்களுக்கு பயன்படவேண்டும். அப்படி அவை நல்லமுறையில் பயன்படவேண்டுமென்பதில் கவனம் கொள்வதுதான் சீரான நிர்வாகம். அப்படி கோவில்களின் நிர்வாகம் சீராக நடக்கவேண்டுமென்றுதான், இந்த மன்றத்தில் அறநிலய பாதுகாப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. கோவில் வருமானம் மக்களுக்கு நல்ல முறையில் பயன்படவேண்டும். சாமிக்கு கோவில் அவசியமில்லை. ஆனால் மக்கள் நல்வாழ்க்கை நடத்துவதற்கு அறநிலயங்கள் பாதுகாக்கப் படவேண்டுமென்பதுதான் சீரியகருத்து. அதிக சொத்து இருக்கிற இடத்தில் சீராக நிர்வாகம் நடத்தப்படுவதில்லை. அதை நீங்கள் ஏன் நன்கு பார்த்துக்கொள்ளக்கூடாது ? அறநிலயப் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறதே என்று சொல்லலாம். சட்டம் ஓரளவிற்குத்தான் நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்ளமுடியும். நான் எல்லோரையும் குறை கூறவில்லை, சில மடங்களின் மேற்பார்வையில் உள்ளதில் தவறுகள் நடக்கின்றன. ஆகவே, இதற்கும் ஒரு வரம்பு கட்டவேண்டுமென்றுதான் அதற்கு வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு, இப்பொழுது 200 எக்கர் என்று வைத்திருக்கிறோம். அதற்கு மேல் சொத்துள்ளவைகளும் இருக்கின்றன. அப்படி எடுத்துக்கொண்டபோதிலும், கல்வி நிலயங்களைப் பொறுத்தமட்டில் அவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, அவற்றை நடத்தும் ஸ்தாபனங்களுக்கு எவ்வளவு நிலம் இருந்தாலும் சரி அவை அப்படியே இருக்க வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அறநிலயங்களைப் பொறுத்தமட்டில், 200 எக்கர்களுக்கு மேல் உள்ளதை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அறநிலயங்களுக்கு சொத்து கொடுத்திருப்பவர்கள், இன்னின்ன வகையில் தர்மம் நடக்க வேண்டுமென்று சொத்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு விரோதமாக நாம் போக முடியாது. ஆகவே, அந்தச் சொத்துக்களிலிருந்து இதற்கு முன்பு என்ன வருமானம் நிகராக வந்ததோ அதை "டஸ்திக் அலவன்ஸாக" கொடுப்பது என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அறநிலயங்களுக்கு ஒருவித நஷ்டமும் இராது. நிலத்தை நல்லமுறையில் சாகுபடி செய்யவேண்டும், குடியானவர்களின் உரிமை நன்கு பாதுகாக்கப் படவேண்டும், நல்லமுறையில் விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அரசாங்கம் உபரி நிலங்களை எடுத்துக் கொண்டு, மறுபடியும் அதை குத்தகைக்கு கொடுக்கிறது. தஞ்சாவூர், திருநெல்வேலி, வேறு சிலயிடங்களில் தேவஸ்தான நிலங்களை சாகுபடி செய்கிறவர்கள், குத்தகைதாரர்கள் அவர்களாகவே முன்வந்து கூட்டுறவு முறையில் நாங்கள் விவசாயம் செய்கிறோம் என்று முன்வருகிறார்கள். நல்ல முறையில் அங்கு விவசாயம் நடக்கிறது. கூட்டுறவு என்றால் அது ஒரு பெரிய பூதம் என்று அச்சப்படுகிறவர்களுக்கு சொல்கிறேன், கூட்டுறவு முறையில் ஒரு தவறும் இல்லை. ஆனால் இந்த மசோதாவை, கூட்டுறவுக்கென்று



சொல்வது தவறு, விவசாயம் செய்பவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்யவேண்டும், விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், என்ற நோக்கத்தோடுதான் அந்த அடிப்படையில்தான் இந்த மசோதாவில் உபரி நிலங்களை எடுத்து விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு கொடுத்து அதற்காக " டஸ்திக் அலவன்ஸ் " கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு இது நஷ்டம் என்றுகூட சொல்லலாம். ஆனால் நிலங்களில் சீராக விவசாயம் செய்யப்படவேண்டும், அதிகப்படியான நிலம் ஒரு அறநிலயத்தினிடம் இருந்தால் அதன் நிர்வாகம் சீராக நடைபெறாது என்றுதான் இப்படி செய்யப்பட்டிருக்கிறது. " டஸ்திக் அலவன்ஸ் " என்றால் இப்பொழுது கன்னியாகுமரியில் முன்பிருந்தவர்கள் அங்குள்ள நிலத்தை எடுத்துக் கொண்டு வருடத்திற்கு இவ்வளவு என்று கொடுக்கிறார்கள். கன்னியாகுமரி தேவஸ்தானங்களுக்கு வேறு அதிக வருமானம் இல்லை. வேறு சொத்தும் இல்லை. இந்த அரசாங்கம் நமது பப்ளிக் எக்ஸ்செக்கரிலிருந்து 13½ லட்சம் ரூபாய் வருடா வருடம் கொடுக்கிறது. சட்டப்படி செய்யப்படுகிறது. ஏன் கொடுக்கிறோம் என்றால், முன்பிருந்த அரசாங்கம் அவைகளின் நிலங்களை எடுத்துக் கொண்டது. ஆகவே, 13½ லட்சம் கொடுக்கிறோம். அப்படி ஓரளவிற்கு மேல் நிலம் இருந்தால் அதை எடுத்துக் கொண்டு அதற்கு எவ்வளவு நிகர வருமானம் வந்ததோ அதை வருடா வருடம் கொடுக்கிறார்கள். ஏனெனில், அவைகளில் பல தர்மங்கள் இருக்கலாம், சில அறநிலயங்கள் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்துகிறார்கள். ஆகவே, அந்த அறநிலயங்கள் பாதிக்கப்படக் கூடாது, அவை எள்ளளவும் பாதிக்கப் படக்கூடாது. அந்த நோக்கத்தோடுதான் இந்த மாதிரி நிகரமான வருமானத்தை வருடா வருடம் இந்த அரசாங்கம் கொடுப்பது என்ற உத்தரவாதம் அளிக்கக் கூடிய வகையில் இந்த மசோதாவில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. சில கனம் அங்கத்தினர்கள், தேவஸ்தானங்கள் அல்லது மடங்களில் சில பேர்கள் சொந்தப் பண்ணை வைத்து நடத்துகிறார்கள், அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதை முற்றிலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். நானும் கவனித்திருக்கிறேன். அதனால் அதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு பலன் ஏற்படுகிறதே தவிர அறநிலயங்களுக்கு அதனால் பலன் இல்லை, நஷ்டம் தான் ஏற்படுகிறது. ஆகவே, அறநிலய இலாகா மூலம், அப்படிப்பட்ட பண்ணையே வேண்டாமென்று கண்டிப்பாக இப்பொழுது வற்புறுத்தி வருகிறோம். தேவஸ்தான உபரி நிலங்களை எடுத்து விவசாயத்திற்கு கொடுத்து ஊர்ஜிதம் செய்வது ஒன்று. சிலர் சொன்னது போல் கூட்டுறவுப் பண்ணை அமைத்து அதைப் பயன்படுத்திக் கொண்டு உற்பத்தியை மேலும் பெருக்கி, அதன் மூலம் பயிரிடுகிற விவசாயிகள் பலன் அடையவேண்டுமென்ற முறையில் இப்பொழுது கவனம் செலுத்தப் படுகிறது.

சர்ப்ளஸ் நிலத்தை என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி சொல்லப் படவில்லை என்று சொன்னார்கள் பல அங்கத்தினர்கள். இன்றைக்கு பெரும்பாலும் நிலங்கள் எல்லாம், அதிலும் சர்பிளஸ் என்று கருதக் கூடிய நிலங்கள் எல்லாம் குத்தகைதாரர்களிடம்தான் இருக்கின்றன. இவற்றுக்கு நிலச்சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுத்த பின்னால் ஏற்கனவே நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஊர்ஜிதப்படுத்தி கொடுக்கலாம். அதல்லாமல் பண்ணைகள் மூலம் புதிதாக கிடைக்கின்ற நிலங்களை ஓரளவு புதிதாக சாகுபடி செய்கின்றவர்களுக்கு கொடுக்கலாம். இது மிகவும் குறைவாகத்தான் இருக்கும். ஆகவே சர்ப்ளஸ் நிலங்களை என்ன செய்யப்போகிறார்கள் என்று கேட்பதில் ஒன்றுமில்லை. இன்று பெரும்பாலும் சர்ப்ளஸ் என்று இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் குத்தகைதாரர்களிடம்தான் இருக்கிறது. அதை நஷ்டஈடு கொடுத்த பின்னால் இவர்களுக்கு ஊர்ஜிதம் செய்து கொடுக்கப்படும். இது தான் இந்தச்சட்டத்தின் அடிப்படையாக இருக்கும் கொள்கை என்பதையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*SRI N. MAHALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிலச் சீர்திருத்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய சர்க்கார் இந்த சட்டத்தில் முப்பது ஸ்டாண்ட்

டர்டு ஏக்கர்கள் வரை இருக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் திட்டக்கமிஷனிலுள்ளவர்கள் இதைப்பற்றி குறிப்பிடும் போது வருடத்திற்கு 2,400 ரூபாய் வருட வருமானம் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது நாட்டிலே ஒரு பெரிய மனக் குழப்பத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. அதாவது மாதம் 3,000 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய திட்டக்கமிஷன் அங்கத்தினர்கள் இதற்கு வருமானம் குறிப்பிடும் போது வருட வருமானம் 2,400 ரூபாய் நிலச்சுவான்தார்களுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லுவது எவ்வளவு நியாயமானது, அல்லது எந்த நியாயத்தைக்கொண்டு முடிவு செய்தார்கள் என்பதுதான் நமக்குப் புரியாமல் இருக்கிறது.

(Sri V. K. Krishnamurthy in the Chair.)

இருந்தாலும், நமது சர்க்கார் திட்டக்கமிஷன் முடிவுகளை புறக்கணித்துவிட்டு ஒரு நியாயமான முடிவு எடுத்ததைப்பற்றி நான் இந்தச் சர்க்காரை பாராட்ட விரும்புகிறேன். இப்போது ஸ்டான்டர்டு ஏக்கர் என்று சொல்லப்படுவது 10 ரூபாய்க்கு அதிகமாக தீர்வை செலுத்தும் நஞ்சை நிலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு சமமாக மற்ற நிலங்களை குறிப்பிட்டிருப்பது நஞ்சை நிலத்திற்கு வருகின்ற வருமானம் புஞ்சை நிலத்தில் கிடைக்குமா என்பதை, நாம் பார்க்கவேண்டும். மேலும் லோயர் பவானி பிரதேசத்தில் ஸ்டான்டர்டு ஏக்கர் என்று குறிப்பிட்டிருக்கக்கூடிய அளவு சரியாக இல்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இதை செலக்ட் கமிட்டியில் நன்றாக பரிசீலித்து நஞ்சை நிலத்தில் கிடைக்கின்ற வருமான அளவுக்கு இந்தக் கணக்கையும் சரிபார்த்து மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் பலவிதமான கருத்துக்களை தங்களுடைய விருப்பம் போல் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பூமியினுடைய பரப்பு ஒருவரிடம் மட்டும் தனியாக அதிகமான அளவில் இருக்கக்கூடாது என்பது தான். இந்த நோக்கத்தை இந்தச்சட்டம் நிறைவேற்றும் என்று நம்புகிறேன். மேலும் சட்டத்தின் மூலமாக சோஷியலிஸம் வந்து விடுமோ என்று சிலர் எதிர்பார்க்கின்றார்கள். சோஷியலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்று சொன்னால், வெறும் சட்டங்கள் மூலமாகவோ அல்லது இப்போது இருக்கக்கூடிய சொத்துக்களை பகிர்ந்து கொள்வதால் சோஷியலிஸம் ஏற்பட்டுவிடும் என்று யாராவது நினைப்பார்களானால், அது வெறும் கனவாகத்தான் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு பகிர்ந்து கொள்வதாக இருந்தால் நாட்டிலுள்ள வறுமையைத்தான் பகிர்ந்து கொள்ள முடியுமே தவிர புதிய சுபீட்சத்தை ஒன்றும் ஏற்படுத்திவிட முடியாது. தேசத்தில் உற்பத்தி பெருகவேண்டும் என்று சொன்னால் (மீன்ஸ் ஆப் ப்ரொடக்ஷன்) உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் எப்போதும் இருந்து வந்தாக வேண்டும். அதல்லாமல் இருப்பதை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சொல்வதாக இருந்தால் அது உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்ற நோக்கமாக இருக்காது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். நிலம் பூராவும் கூட்டுறவாகவோ அல்லது சர்க்கார் மூலமாக நேரடியாகவோ எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சில அங்கத்தினர்கள் கருதுகிறார்கள். இவ்விதம் எடுத்துக்கொண்ட நாடுகள் சில உலகத்தில் இருக்கின்றன. அந்த நாடுகளில் இருக்கக்கூடிய நிலையில், அங்கு ஏற்பட்டிருக்கின்ற உற்பத்தியை எடுத்துக்கொண்டால், இந்த முறையில் நடக்கக்கூடிய ரஷ்யா தேசத்தில் ஒரு ஏக்கரில் கிடைக்கின்ற வருமானத்தைவிட ஜப்பான் தேசத்தில் வருமானம் அதிகமாக இருக்கிறது. அதே போன்று தான் பெரிய அளவில் நிலங்களை எடுத்து விவசாயம் செய்யக்கூடிய அமெரிக்க நாட்டைவிட இஸ்ரேல் தேசத்தில் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆகவே பெருமளவில் நிலம் ஒன்றாக இருந்தால்தான் உற்பத்தி அதிகமாக பெருக முடியும் என்று சொல்வது தவறானவை என்று ஜப்பான் தேசத்திலும், இஸ்ரேல் தேசத்திலும் மற்றும் இதுபோன்ற ராஜ்யங்களிலுமுள்ள புள்ளிவிவரங்கள் நமக்கு தெரிவிக்கின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.





தவிர நிலத்தைப் பொறுத்தவரையில், நாம் ஒரு ஜனநாயக சமுதாயத்தில் வாழ விரும்புகிறோம். அதற்குத்தகுந்த முறையில் நம்முடைய அரசியல் அமைப்பு வகுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக நிலம் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கவேண்டும் என்று சில அங்கத்தினர்கள் சொல்லும் போது பல்லடம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், நிலம் யாருக்கும் சொந்தம், இந்த நிலங்கள் எல்லாம் எப்படி வந்தன, இந்த நிலங்கள் எல்லாம் சமுதாயத்திற்கு சொந்தமானது ஆகவே சமுதாயத்திற்குத்தான் நிலங்கள் எல்லாம் சொந்தமாய் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் இப்படித்தான் சோஷியலிஸம் அமைய வேண்டும் என்று சொன்னால், இதனுடைய எல்லையை எட்டிப்பார்க்கின்ற நேரத்தில், சமுதாயத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் நிலமாக இருந்தாலும் சரி, வேறு எந்தவிதமான தொழிலாக இருந்தாலும் சரி, வியாபாரமாக இருந்தாலும் சரி, இப்போதுள்ள சோஷியலிஸ வாதம் பொருந்தாது என்றுதான் சொல்ல வேண்டும். இன்றையதினம் உலகத்திலேயே ஒரு சோஷியலிஸ நாடு இங்கிலாந்து, சில ஆண்டுகளுக்கு முன்னால் வரை லேபர் சர்க்கார் தான் ஆட்சியை நடத்திக்கொண்டு வந்தார்கள். இவ்விதம் லேபர் கட்சி ஆட்சி நடத்தி கொண்டிருந்த காலத்தில் கூட, நிலங்களை எல்லாம் சர்க்காருக்கு அல்லது சமுதாயத்திற்கு சொந்தமாய் இருக்கவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைப்பற்றி அங்கு அபிப்பிராய பேதம் இருந்து வந்திருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஆகவே பல தொழில்களையும் தேசீயமயமாக ஆக்கவேண்டும் என்று இங்கிலாந்தில் சொல்லுகின்ற சமயத்திலும் லேபர் கட்சியில் இந்த அபிப்பிராய பேதம் இருக்கின்ற நேரத்தில், நமது நாட்டில் இன்னும் பழைய சோஷியலிஸ கொள்கைகளையே பின்பற்றிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் போதுஎனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. என் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று கனம் பல்லடம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு அவர்களை வேலையில் இருந்து நீக்கிவிடுவதாக இருந்தால் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று நாம் சட்டபூர்வமாக ஒத்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறு தொழிலாளர்கள் எல்லோருக்கும் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று நமது அரசியல் அமைப்பில் சட்டமே செய்திருக்கும் போது அவரவர்கள் வைத்திருக்கக்கூடிய பூமிகளை அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளும் போது மட்டும் நஷ்டஈடு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சொல்வது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது என்பதை சொல்ல விரும்புகிறேன். நிலம் அல்லது இது போன்ற பொருட்கள் ஒருவனிடம் சேர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது அவர்களுக்கு சும்மா கிடைத்துவிடுவதில்லை. அவர்கள் பல விதங்களிலும் சம்பாதித்து, அதை வேறு விதங்களில் எல்லாம் செலவு செய்யாமல் மீதப்படுத்தி சேமித்து, வீண் விரயம் செய்யாமல் இம்மாதிரி நிலங்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே இம்மாதிரிப்பட்ட சம்பாதித்து சேகரிக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டாம் என்று சொல்லுவது, இவ்வாறு சேமித்து சம்பாதிக்காமல், படாடோபமாக செலவு செய்வதற்கு ஆதரவு கொடுப்பது போல் தான் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், இவ்வாறு நிலங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்ட ரஷ்ய நாட்டில் என்ன நடக்கிறது என்று சொன்னால், அந்த நாட்டில் தொழிலாளர்களுக்கு போதுமான உரிமை இல்லை என்பதை பல அறிஞர்கள் குறிப்பிட்டிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். யுனைடெட் நேஷன்ஸ் வெளியீடுகளில், ரஷ்ய நாட்டில், தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உரிமை அல்லது, தொழிலாளர்களுக்கு ஸ்டிரைக் செய்யக்கூடிய உரிமை ஒன்றும் கிடையாது என்று குறிப்பிட்டிருக்கின்றனர். ஆகவே தொழிலாளர்கள் சௌக்கியமாக வாழ முடியாத நிலைமை தான் நிலங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற நாட்டில் இருந்து வருகிறது என்பதை நாம் அனுபவ பூர்வமாக காண்கிறோம். நம்முடைய நாட்டில், ஜனநாயக ரீதியில் எல்லோருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும்.

[Sri N. Mahalingam] [19th April 1960

இந்த நாட்டிலுள்ள மக்கள், அவர்கள் எந்தத் துறையில் இருந்தாலும் சரி, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற முறையில் தான், இந்தச் சட்டத்திலும் எடுத்துக்கொள்ளும் நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிறது. மேலும் நஷ்ட ஈடு கொடுக்கும் போது ஸ்லாப்-பாக கொடுக்கவேண்டும் என்று விவசாய அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனால் நஷ்ட ஈடு கொடுக்கும் போது என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் அது நியாயமாக சர்க்கார் மற்ற தங்களுடைய இதர காரியங்களுக்கு, அதாவது அணைகள் முதலியவைகள் கட்டும்போது, நிலத்தை எடுத்துக் கொண்டு, அக்விஷிஷன் செய்து, நஷ்ட ஈடு கொடுக்கிறார்களே அதே முறையில்—இருக்கக் கூடிய வகையில் இந்தச் சட்டத்தின்படி எடுத்துக் கொள்ளக் கூடிய நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன். சமீப காலத்தில் இந்திய சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை தேசீய மயமாக்கியது—ஸ்டேட் பாங்கை தேசீய மாக்கியது. இவைகளை தேசீய மயமாக்கியபோது அவற்றிற்கு மார்க்கெட்டில் அந்த ஷேர்களுக்கு என்ன மதிப்பு இருந்ததோ அந்த மதிப்பைக் கொடுத்து தேசீய மயமாக்கியிருக்கிறது. அவ்வாறு மத்திய சர்க்காரிலே மார்க்கெட் வால்யூ என்று கொடுத்து தேசீய மயமாக்கும்போது மாகாண சர்க்கார் மட்டும் ஏதோ தாங்கள் எண்ணிய தொகை தான் நஷ்ட ஈடு என்று குறிப்பிடுவதானது இதிலே மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் ஏதாவது கொள்கை வேறுபாடு இருக்கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. மற்ற தொழில்களுக்கு மார்க்கெட் வால்யூ என்று கொடுக்கப்படும்போது, அதே முறையில் நிலங்களுக்கும் சரியான முறையில் மார்க்கெட் வால்யூ கொடுக்கப்படவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த ஸ்திரீதனம். ஸ்திரீதனமாக 10 எக்கர் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன். நாளுக்குநாள் அவர்களுக்கு சம வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும், சம அந்தஸ்து கொடுக்கவேண்டும், அவர்கள் முன்னேறவேண்டும் என்று சொல்லும்போது அவர்களுக்குத் தனியாக சொத்து உரிமை இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தக்கது. அதே நேரத்தில் கல்யாணம் ஆகாத பெண்களுக்கு அந்த உரிமை இல்லை என்பது வருந்தத் தக்கது. இந்தக் கட்டுப்பாட்டை ஓரளவுக்கு நீக்கி, கல்யாணமாகாத பெண்களுக்காக தந்தை 10 எக்கர் வைத்திருந்து கொடுக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோயில்கள், பள்ளிகள், மற்ற தர்ம ஸ்தாபனங்கள் இவைகளுக்கெல்லாம் 200 எக்கர் உச்ச வரம்பு வைத்திருப்பதானது மிகவும் நல்லது. கோயில்களுக்கு எதற்காக நிலம் வேண்டும், அவைகளுக்கு இருக்கக் கூடிய வருமானம் தொடர்ந்து இருக்கவேண்டிய அவசியமில்லை, கோயில்களுக்குப் போக இஷ்டப்படுகிறவர்கள் கொடுத்தால் போதும் என்று கனம் பல்லடம் அங்கத்தினர் கூறினார்கள். இந்த நிலங்களெல்லாம் கோயில்களுக்குப் போகக் கூடியவர்கள், பிரியப்படக் கூடியவர்கள் கொடுத்துச் சேர்ந்ததுதானே தவிர திடீரென்று வந்தது அல்ல. கோயில்களுக்குப் போகக் கூடியவர்கள் கோயில்கள் நல்ல முறையில் நடைபெறவேண்டும், அதற்காக வருமானம் வேண்டும் என்று ஆண்டவனை வழிபடக் கூடியவர்கள் எழுதி வைத்ததால்தான் வந்தது. இப்போது 200 எக்கர் என்று வைத்திருப்பது சரியான அளவு தான். அதன் மூலமாக கோயில் விசேஷங்கள், திருவிழாக்கள், மற்ற கோயில் காரியங்கள் சரியானபடி நடக்க உபயோகமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மதம் என்பது மக்களை ஒரு நல்ல வழியில் நடத்திச் செல்வது, மக்களுக்கு உயர்ந்த நோக்கத்தை அளிக்கக் கூடியது, என்பது நம்மில் பலர் அறிந்தது தான். அந்த மத ஸ்தாபனங்களுக்கு 200 எக்கர் கொடுத்திருப்பதானது மிகவும் அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.



19th April 1960] [Sri N. Mahalingam]

இதைத் தவிர பல விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தோட்டங்கள், பழத்தோட்டங்கள் இவைகளுக்கெல்லாம் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் பலனுக்கு வருவதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன. இன்றைய தினம் இவைகளைப் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தால், இப்போது இருக்கும் அளவில் தான் எதிர்காலத்தில் இருக்குமேயல்லாது புதிதாக பழத் தோட்டங்களை உண்டாக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. எட்டு ஆண்டுகள் வரையில் தொடர்ச்சியாக வருமானம் இல்லாமல் இருந்து அதற்குப் பின்னால் பலன் காணவேண்டும் என்று இருப்பதால் இதற்கு விதிவிலக்கு இருக்கவேண்டும் என்பது நியாயமாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆக, இந்தச் சட்டம் வந்திருக்கும்போது இதில் இருக்கக் கூடிய விஷயங்களை மட்டும் எடுத்துப் பேசாமல் தத்துவார்த்தமாக இதைப் பற்றிப் பலர் பேசியிருக்கிறார்கள். இந்தச் சட்டமானது நாம் நினைக்கக் கூடிய சோஷலிஸ சமுதாயத்திற்கு வழிகோலியாக இருக்குமே தவிர உடனடியாக சோஷலிஸம் வந்துவிடும் என்று எதிர்பார்ப்பது கனவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்றால் சுமார் 10,000 ரூபாய் வருமானம் வரக்கூடும். இதுவே விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சமூகத்தினர்களுக்கு மிகவும் குறைவானதாக இருக்கும் என்று பலர் கருதுகிறார்கள். இந்த சபையிலேயே இதற்கு முன்பு ஒரு தடவை பேசியபோது குறைந்த பட்சம் 20,000 ரூபாய் வருமானம் வரக் கூடிய அளவுக்கு இந்த ஸீலிங் வரவேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். அந்த அளவுக்கு ஏற்படுத்தா விட்டாலும்கூட, பிளானிங் கமிஷன் சொன்னதைப் போல 2,400 ரூபாய், 3,600 ரூபாய் என்று அந்த முறையில் அபிப்பிராயம் இருப்பதை ஒத்துக் கொள்ளாமல் 10,000 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது பாராட்டத் தகுந்தது. நமது கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை கொண்டு வருவதில் சிரத்தை எடுத்துக் கொண்டு, பல கோணங்களிலிருந்து பார்த்து, விஷயங்களை ஆராய்ந்து, எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு காணக் கூடிய முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

தேசத்திலே ஒரு சோஷலிஸ சமுதாயம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொன்னால் அதற்கு கடினமான உழைப்பு மிகவும் அவசியம். அதைத் தவிர கூட்டுறவு முறையில் நிலங்களைப் பயிர் செய்ய வேண்டும் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். பூர்ணமாக கூட்டுறவு முறையில் நடத்தப்பட வேண்டுமென்று சொன்னாலும், அதற்கு மக்களிடையே கடினமான உழைப்பு மாத்திரமல்ல, நேர்மையான உழைப்பும், நேர்மையான மேற்பார்வையும் அவசியம். இதற்கு எந்த அளவுக்கு நம்முடைய சமுதாயம் தயாராகிவிட்டிருக்கிறது என்று நாம் முடிவு செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. தற்போது கூட்டுறவு இலாகாவில் பல தவறுகள் நடப்பதையும், கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருப்பதையும் பார்க்கிறோம். கூட்டுறவுமுறையில், கூட்டுறவு இலாகா மூலம் நிலத்தில் பயிர் செய்ய வேண்டுமென்று சொன்னாலும், சோஷலிஸ சமூகம் நமது தேசத்தில் அமைய வேண்டுமென்று சொன்னால், இதற்கு சட்டம் போட்டால் பலன் வந்து விடாது. இது உடனடியாக நிறைவேற வேண்டுமானால் மக்கள் மத்தியில் கடின உழைப்பு, மனப்பான்மையும் நேர்மை மனப்பான்மையும் அவசியம். ரஷ்ய நாட்டில் அவர்கள் இந்த முயற்சிகளைச் செய்த போது சரியான உற்பத்தி செய்யமுடியாமல் போய் பிற்பாடு அவர்களுடைய அடக்கு முறை அதிகமாக அதன் மூலமாகத் தான் உற்பத்தியை சரியான வழியில் செய்ய முடிந்திருக்கிறது. ஆக் இவ்வாறு பல நிலங்களுக்குப் பொதுவாக ஒரு சட்டத்தைக் கொண்டு

வரும்போது நடைமுறையில் எவ்வாறு இருக்கும் என்று சிந்தித்து உற்பத்தி குறையாமல் இருக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். தத்துவம் மட்டும் பேசிப் பிரயோசனமில்லை என்று கூறிக்கொண்டு இந்த புதிய சட்டத்தை வரவேற்று முடித்துக் கொள்ளுகிறேன்.

10-30 a.m. ***Dr. E. P. MATHURAM :** அவைத் தலைவர் அவர்களே, இந்த உசச வரம்பு மசோதாவானது கொண்டுவரப்படப் போகிறது என்று மக்களிடையே சில வருஷங்களாகப் பரப்பப்பட்டு, அது புலி வருகிறது, வருகிறது என்ற முறையில் சொல்லப்பட்டு வந்து, அதனால் அநேகமாக எல்லோரும் தங்களுடைய நிலங்களை ஓரளவுக்கு மட்டுப்படுத்திக் கொண்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஓரளவுக்கு குறைத்துக் கொண்டார்களென்றாலும்கூட ஒன்றும் செய்து கொள்ள முடியாமல் இருக்கின்றவர்களும் இருக்கிறார்கள். குறைத்தது எந்த அளவு என்று இங்கு இப்போது தெரியாது. ஏனென்றால் அவரவர்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த விதமாக புலி வருகிறது, புலி வருகிறது என்ற முறையில் செய்து கொண்டு போகிறதால், இந்த மசோதாவை உண்மையிலேயே இன்னும் கொஞ்சம் நீடிக்கவிட்டால் தானாகவே எல்லாம் சரியாகப் போய்விடும் என்பது எனது கருத்து. எதிர் பார்க்கிறபடி எல்லோருக்குமிடையே சமத்துவம் வேண்டும், சம உரிமை வேண்டும், சம நிலப்பரப்பு வேண்டும் என்று கருதும் காலத்தில் எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று அமுலுக்கு வரும்போதுதான் தெரியவருமே தவிர இப்போது ஒன்றும் புரியாது, தெரியாது. ஆகையால் இது ஒரு எக்ஸ்பெரிமெண்டல் பேஸிஸிலே இருக்கப் போகிறதே யொழிய, இதனுடைய முடிவு என்ன என்று கொஞ்ச காலம் ஆன பிறகுதான் தெரியும். எனவே, இந்த மசோதா சீக்கிரமாக சட்டமாக்கப்படாமல் இன்னும் கொஞ்ச நாட்கள் மசோதாவாகவே இருந்தால் அல்லது இது செலக்ட கமிட்டிக்குப் போனதும் அங்கேயே கொஞ்ச நாட்கள் தங்கிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்லவிரும்புகிறேன். நாம் இதர நாடுகளை இந்த விஷயத்தில் நம் நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். இதர நாடுகளில் பலவிதமான தொழில் அபிவிருத்தியும் ஏற்பட்ட பிறகு அந்நாடுகளில் உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் நிலப்பரப்பு குறைவாக இருப்பதால் இந்த விதமான சட்டத்தை அமல் நடத்தினால் நல்ல பலன் ஏற்படும் என்று அந்நாட்டினர் கருதி இந்த விதமான சட்டத்தை இயற்றி அமல் நடத்தியிருக்கிறார்கள. ஆனால் நமது நாட்டைப் பொறுத்த வரையில் இங்கே நிலப்பரப்பு அதிகமாக இருக்கிறது. ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலங்களைத் தவிர இனிமேலும் சாகுபடிக்கு கொண்டுவரப்படவேண்டிய நிலங்கள் இங்கே கோடிக்கணக்கில் இன்னும் இருக்கின்றன. இந்த நிலைமையில் இங்கே உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வருவது சரியா ? நமது சர்க்கார் பாக்கியிருக்கிற நிலங்களையும் ஓரளவு சாகுபடிக்குக் கொண்டு வந்து விட்டு சாகுபடிக்கு இனிமேல் நிலம் இல்லை என்ற நிலைமை ஏற்படும் போது நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டினால் அது எல்லாவற்றிற்கும் பொருத்தமாக இருக்கும் என்பது என் கருத்து. மக்கள் தங்கள் சுயப்பிரயாசையினாலும், தங்கள் மூதாதையர் பணத்தினாலும் தங்கள் பணத்தினாலும் உடைமையாக்கிக் கொண்டிருக்கும் நிலச் சொத்துக்களைப் பாதிக்கதாத வகையில் இச்சட்டத்தைகொண்டு வரவேண்டும் என்பது என் கருத்து. நில உடைமை உச்ச வரம்பை 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராக இந்த மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரதேசத்தில் 30 ஏக்கருக்கு எவ்வளவு வருமானம் வருமோ அவ்வளவு வருமானம் இன்னொரு பிரதேசத்தில் வராது. எனவே நிலங்களின் தராதரத்தையும் நிலச்சுவான்தார்களுக்கு வரக்கூடிய வருமானத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு உச்ச வரம்பை நிர்ணயிக்க வேண்டுமே தவிர, இத்தனை ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள் என்று உச்ச வரம்பு நிர்ணயிப்பது சரியல்ல. நமது நாட்டில் அதுவும் தமிழ் நாட்டில், ஒரு பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு 1,200 ரூபாய் வரை வருமானம் வரும் ; இன்னொரு பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு 1,600 ரூபாய் வருமானம் வரும் ; வேறொரு பிரதேசத்தில் 500 ரூபாய்





வருமானம் வரும். மேலும், ரெவின்யூ என்று சொல்லும்போது கொஞ்சம் ரெவின்யூ கொடுத்து அதிகமான தொகை வருமானம் பெறக் கூடியவர்களும் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் இந்த வரம்பு சிலரை கொஞ்சம் பாதிக்கும், சிலரை அதிமாக பாதிக்கும். எனவே நிலங்களின் தராதரத்திற்கேற்றவாறு நில உடமை உச்ச வரம்பை நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். நிலங்களை எல்லோருக்கும் பிரித்துக் கொடுத்த பிறகு நிலங்களின் தரம் உயருமா, குறையுமா, விளைச்சல் அதிகமாகுமா குறையுமா என்று ஆலோசிக்க வேண்டும். நிலங்களை எல்லோருக்கும் பிரித்துக் கொடுத்த பிறகு கண்டு முதலாவது திருப்திகரமாக இல்லாவிட்டால், அப்போது நமது உணவு நிலைமை மிகவும் கேவலமான நிலைமையை அடையாமலிருப்பதன் பொருட்டு சட்டத்தின் மூலம் மக்களின் உழைப்பை அவர்களைக் கட்டாயப்படுத்திப் பெற வேண்டியிருக்கும் : " போர்ஸ்ட் லேபர் "க்குச் சட்டமியற்றவேண்டிருக்கும் இதர நாடுகளில் போல " போர்ஸ்ட் லேபர்", "கான்ஸெண்ட்ரேஷன் காம்ப் " ஆகிய வற்றிற்கு அடிகோலும் நிலைமைக்குக் கொண்டுபோகாதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

இந்த மசோதாவில் இன்னும் பல கோளாறுகள் இருக்கின்றன. இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப்போய் அங்கும் அதிகமாக விவாதிக்கப்படுமாதலால், அந்தக் கோளாறுகள் அங்கே நீக்கப்படக்கூடும். அங்கே நன்றாக ஆலோசித்து யாருக்கும் கேடுபாடு ஏற்படாத வகையில் மசோதாவை மாற்றியமைக்க வேண்டும். குத்தகைதாரர்களை ஆயுள் காலக் குத்தகைக்காரர்களாக ஆக்குவதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் தவறான காரியம். நிலச் சொந்தக்காரர் நிலத்தை குத்தகைதாரரிடம் அக்குத்தகைதாரரின் ஆயுட்காலம் முழுவதும் ஒப்படைத்து வைக்க வேண்டுமென்றால், நிலத்தின் தரம் என்ன ஆவது நில விளைச்சல் எப்போதும் நன்றாக இருக்குமா ? இதில் பல விதமான தொல்லைகள் இருக்கின்றன. இப்போதே, 5 வருட காலம் வரை குத்தகைதாரரை மாற்றக் கூடாது என்று சொல்லும்போது, அனேக இடங்களில் எவ்வளவு கேவலமான முறையில் மக்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். எனவே ஒருவரை யு ள் காலக் குத்தகைதாரராக ஆக்குவது மிகவும் தவறான காரியம். அப்படிச் செய்தால், நிலம் வைத்திருப்பவர்களுக்கு நிலச் சொந்தக்காரர் என்ற ...ளரவம் இருக்குமே தவிர, அவருக்கு அது வேறு எந்த விதத்திலும் சாதகமாக இருக்காது. அது மட்டுமல்ல. அனுதினமும் சண்டைகள் நடக்கும். குத்தகைதாரருக்கும் நிலச்சுவாந்தாருக்கும் இடையே சண்டை நடக்கும். அதில் சர்க்கார் குறுக்கிட வேண்டியிருக்கும். நிலச்சுவாந்தார்களுக்கும் சர்க்கார் அதிகாரிகளுக்குமிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படும். சச்சரவுகள் அதிகமாகி, கடைசியில் படு கொலை கூட நடக்கும். இதெல்லாம் ஏற்படாதபடி சட்டமியற்ற வேண்டும். நிலச்சுவாந்தார்களுக்கு நிலத்தில் உரிமையைக் கொடுத்து, குத்தகைதாரர் நிலத்தை வாங்கிக் கொள்வதற்கு காலவரம்பு நிர்ணயித்து நிலத்தை வாங்கிக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தில் அவர்கள் நிலத்தை வாங்கிக் கொள்ள முடியாவிட்டால் பழையபடியே நிலத்தை நிலச் சொந்தக்காரரிடம் ஒப்படைத்து விடுவதற்கு வழி செய்யும் முறையில் சட்டமியற்ற வேண்டும். குத்தகைகாரர் இறந்த பிறகு அவருடைய " லீகல் ஏர் "-க்கு நிலத்தை நிலச் சொந்தக்காரர் கொடுக்கலாம் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இது வரையில் எந்தத் தொழிலிலும் எந்த விதத்திலும் இந்த மாதிரியான ஆயுள் காலக் குத்தகைதாரர் கிடையாது. நாம் தாம் ஆயுள் காலக் குத்தகைக்காரர்களை நியமிப்பதற்கு வழி செய்கிறோம். இவ்வாறு செய்வதில் ஒரு நியாயமும் இல்லை. பின்னால் தொல்லைகள் வராதபடி சட்டமியற்ற வேண்டும். தொல்லை வந்த பின் அதை நீக்குவது முடியாத காரியமாதலால், வருமுன் காப்போனைப் போல ஏற்கனவே, மசோதாவை சரிவரத் திருத்த வேண்டியது நம் கடமை.

நிலத்தை எடுத்துக் கொண்டால் காம்பென்ஸேஷன் அடுத்தபடியாக, நமது இந்திய அரசியல் சட்டத்திலேயே கொடுக்க வேண்டியதுதான். ஆனால் இந்த மசோதாவில் இது சம்பந்தமான அதற்கு இடம் இருக்கிறது. ஆனல் இந்த மசோதாவில் இது சம்பந்தமான ஷாத்தில் வரி கொடுப்பவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக் றது. இங்கே வரி கொடுப்பவன் பாவிபோலத் தெரிகிறது. வரி கொடுப் பவனுக்கு குறைந்த அளவு பணமும் வரியே கொடுக்காதவனுக்கு அதிக அளவு பணமும் கொடுக்கப்படும் போலத் தெரிகிறது. வரி கொடுப்பவன் பொல்லாதவனா ? வரிகொடுக்காதவனைப் பார்த்தால் பாவமாக இருக் கிறதா ? வரி கொடுப்பவன் மீது அதிக பாரத்தைப் போட்டு அவனுக்கு 9 வருஷத் திட்டம் என்று சொல்வது சரியல்ல. வரி கொடுப்பவனும் ஒரு இந்திய மகன்தான். வரி கொடுப்பவளும் ஒரு இந்திய மகள் தான். சட்டம் மற்றவர்களுக்கு எப்படி இருக்கிறதோ அப்படித்தான் இவர் களுக்கும் இருக்க வேண்டும். சட்டத்தில் இந்தப் பாகுபாடு இல்லாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

இன்னும் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். ரிலிஜியஸ் எண் டோமெண்ட்ஸ் சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர்கூட ஒரு விளக்கம் கொடுத்தார். இந்து மதத்தைப் பொறுத்த வரையில் வருஷாவருஷம் மானியம் கொடுக்கப்பட்டாலும், எல்லோ ருடைய நிலங்களுக்கும் உச்ச வரம்பு கட்டும்போது, கிருஸ்தவ மதத்தை பொறுத்தவரையில், அனேக இடங்களில் ஒரு தனிப்பட்ட கோயிலுக்கு என்று சொத்தோ சுதந்திரமோ தனிப்பட்ட முறையில் இல்லை. ஆங் காங்கு "ஜோன்ஸ்" இருக்கின்றன. சில இடங்களில் அவை ஜில்லா வாரியாக இருக்கின்றன. சில இடங்களில் இரண்டு, மூன்று ராஜ்யங் களில்கூட ஒரு ஸ்தாபனம் இருந்து பல விஷயங்களை கவனிக்கிறது. இந்த 200 ஏக்கர் வரம்பை பொதுவாக எல்லோருக்கும் நிர்ணயித்து இரண்டு மூன்று ராஜ்யங்களில் ஒரு ஸ்தாபனத்தை நடத்துபவர்கள் விஷயத்திலும் இந்த ஷரத்தைப் பிரயோகித்தால் மிகவும் கஷ்டம் ஏற்படும். அந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மிகவும் பாதகமான நிலைமை ஏற்படும், தனிப்பட்ட ஒரு கோயிலுக்கு இவ்வளவு நிலங்கள் இருக்க வேண்டு மென்ற முறையில் மசோதாவில் சேர்க்கப்பட்டால் இந்த மாதிரியான கஷ்டங்கள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். சர்ச் ஆப் சவுத் இந்தியாவை எடுத்துக் கொண்டால் பல ஸ்டேட்களில் இருக்கக்கூடிய கோயில்களுக்கு ஒரே இடத்தில் ப்ராப்பர்டி இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்குப் போய் 200 ஏக்கர் என்று சொன்னால் அதைப் பல ராஜ்யங்களுக்கும் பிரித்துக் கொடுக்கும்போது ஒன்று மில்லாத நிலைமை ஏற்பட்டு மதம் அழிந்து போக வழி ஏற்படும். சட்டத்தில் தனிப்பட்ட கோயில் என்று விளக்கம் இருந்தால் மிகவும் அனுகூலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உச்சவரம்பை 30 ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். முப்பது ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிற ஒருவர் கொஞ்ச காலத்திற்குப் பிறகு அதை விற்க வேண்டுமென்றால் சர்க்காரிடத்தில் விற்பதா, அல்லது தனி நபரிடத்தில் விற்பதா என்பதற்கு விதி இல்லை. ஒரு வேளை அந்தக் குடும்பத்தில் பொறுப்பானவர் திடீரென்று மரணமடைந்து விடலாம். நிலத்தை கவனிக்க சரியான ஆள் இல்லாமல் போகலாம். அப்போது அந்த நிலத்தின் உரிமை யாருக்கு ? அப்போது கோர்ட்டுக்குப் போய் நிர்ணயம் செய்யும் நிலைமை வந்துவிடும். அது மட்டுமல்லாமல் அந்தந்த காலத்தில் நிலங்களை விற்க வேண்டுமென்றால் அதற்கு வழி வகைகள் என்னென்ன ? அதை பற்றித் திட்டவட்டமாக இந்த மசோதாவில் இடம் பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, 20 வருஷ காலத்தில் அந்த நஷ்ட ஈட்டுப் பணம் சர்க்காரால் செலுத்தப்படும் என்றிருக்கிறது. அதுவும் பாண்ட் மூலமாக என்றிருக்கிறது. இதனால் அநேகருக்குப் பாதகம் ஏற்படும் நிலைமை உருவாகும். தன் கண் காண அந்த நிலத்தை விற்று விட்டால் அந்தப்



பணத்தை வேறு காரியங்களுக்குப் பயன் படுத்த வசதியாக இருக்கும். இருபது வருஷம் என்றால் தங்களுடைய ஜீவிய காலத்திற்குள் அந்தப் பணத்தைப் பெறுவது என்பது கஷ்டம். இருபது வருஷ காலத் தவணை என்பதை மாற்றி உடனடியாகவோ அல்லது 4, 5 வருஷ காலத்திற் குள்ளாகவோ கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும், 20 வருஷ காலத் திற்குப் பிறகு வாரிசு யார் என்ற கேள்வி வரும்போது பழையபடி கோர்ட்டுக்குப் போகும்படி நேரும். அந்த ஒரு நெருக்கடியைத் தவிர்க்க வழி செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**Sri S. LAZAR:** கனம் தலைவர் அவர்களே, எந்த நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் மிக அழகாகவும், விளக்க மாகவும் எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆனால் மசோதாவில் "Statement of Objects and Reasons" என்று குறிப்பிட்டிருக்கும் பகுதியில் பார்த்தால் "to reduce the glaring inequalities in the ownership of holdings." என்று ப்ளானிங் கமிஷன் சுட்டிக் காண்பித்திருக்கிறது என்று இருக் கிறது. ஆகவே, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, எந்த ஒரு காரணத் தை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்களோ அதே காரணத்தை அங்கே கொடுத்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதுதான். இப்போது, ரெவின்யூ அமைச்சர் அவர்களுடைய பாணியில் சொல்ல வேண்டுமென்றால், ஒரு சிலருக்கு ப்ளானிங் கமிஷன் என்று சொன்னால் "அலர்ஜி" ஏற்பட்டு விடுகிறது. ஆகையால் ப்ளானிங் கமிஷன் என்ற வார்த்தையை எடுத்து விட்டு பொதுவாக அரசாங்கத்தின் கருத்து இது என்று மாற்றியமைத்தால் நன்றாக இருக்குமென்று தெவிரித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் சுட்டிக் காண்பித்தது போல் ஒரு கட்சித் தலைவர், இந்த மசோதா அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குப் புறம்பானது என்று சொல்லி அதை அவசியம் ராஷ்டிரபதியின் கவனத் திற்குக் கொண்டு வருவதோடுகூட சுப்ரீம் கோர்ட்டின் கருத்தையும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று பேசியிருக்கும்படியான ஒரு பரபரப் பான செய்தியைப் பத்திரிகைகள் பிரசுரித்து இருக்கின்றன. அதைப் பற்றி நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். எனது தாழ்மையான அபிப்பிராயம் முற்றிலும் தவறானதாகக்கூட இருக்கலாம். அவர்கள் சொல்லக்கூடிய அந்தப் பிரிவுகள் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் 19, 31-வது பிரிவுகளில் கண்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள்—ஒவ்வொரு தனி நபருக்கும் கொடுத்திருக்கும் உரிமை, ஆதார உரிமை, சொத்துக்களை வைத்திருப்பதற்கும், மேற்கொண்டு சேர்ப்பதற்கும் அவைகளை விநியோகிப் பதற்கும் உரிமை உண்டு என்று சொல்லி விட்டு, அந்த உரிமைகள் எல்லா வற்றையும் பறித்துவிடக்கூடிய முறையில் அரசாங்கம் நிலங்களை "அக் வைர்" செய்து அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குப் புறம்பானது என்று கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றைக் கவனித்திருக்க வேண்டும். 5-வது உப-பிரிவிலே இது போன்ற உரிமையைக் கையாள்கிற போது அதற்கு ஒரு சில சட்டதிட்டங்கள், லிமிடேஷன்ஸ் போட அரசாங்கத் திற்கு உரிமை உண்டு என்று கருதுகிறது. ஆகவே, இந்த வாதத்தைத் இந்தச் சபையிலே சொல்வதற்குச் சரியான முறையிலே இல்லையென்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் மேற்கொண்டு குறிப்பிட்டுப் பேசுவது என்னவென்றால் இது போல் அரசாங்கம் நிலத்தை எடுத்துக் கொள்வது "is not for a public purpose" என்று 31-வது பிரிவிலே இருக்கும் வார்த்தைகளை எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். "பப்ளிக் பர்ப்பஸ்" என்ன என்பதைப் பற்றி பல உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஏதோ காலனி கட்டுவதைப் பற்றியோ, ப்ராஜக்டை நிர்மாணிப்பதைப் பற்றியோ அல்லது தொழிலாளர்

களுக்கு வீடு கட்டுவதைப் பற்றியோ மட்டும் "பப்ளிக் பர்ப்பஸ்" என்று சொல்வதற்கில்லை. என்னென்ன திட்டங்கள், நோக்கங்கள் இருக்கின்றனவோ அவைகளை நடைமுறையில் கொண்டுவர அவர்கள் செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் "பப்ளிக் பர்ப்பஸ்" என்று அந்த நீதி மன்றங்களில் தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற நிலச் சீர்திருத்த சட்டம் பீகார் மாகாணத்தில் 1949-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்திலேகூட இது போன்ற நிலங்களை அரசாங்கம் "அக்வைர்" செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. இதை ஆட்சேபணை செய்து, எப்படி இன்றைய தினம் வேறு கட்சித் தலைவர் ஒருவர் சொல்லியிருக்கிறாரோ அதைப்போல், அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குப் புறம்பானது என்று கூறி ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கிற்கு முடிவு சொல்லும்போது இது "பப்ளிக் பர்ப்பஸ்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1952-ம் ஆண்டில் இது சரியான சட்டந்தான் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும்கூட பல தீர்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இது அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குப் புறம்பானது என்று சொல்லக்கூடிய வாதமானது சரியான வாதமாகாது என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இதில் அரசியல் சட்டத்திற்கு மாறாக இருக்கக்கூடிய ஒரு பகுதி இருக்கிறது. அதை மட்டும் தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அரசியல் நிர்ணயச் சட்டத்திலே 26-வது பிரிவிலே மடாலயங்கள், கோயில்கள், மத ஸ்தாபனங்கள் முதலியவைகளுக்கெல்லாம் தனிப்பட்ட முறையிலே சொத்துக்களை வைத்துக்கொள்வதற்கும், மேற்கொண்டு சொத்துக்களை வாங்குவதற்கும், அவைகளை வைத்து நடத்துவதற்கும் உரிமையுண்டு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட உரிமையைக் கொடுக்கும்போது அதிலே கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

**'Subject to public order, morality, and health any denomination of any religious community or any section of the community could acquire, hold and dispose of property'.**

தனிப்பட்டவர்களுடைய சொத்தைப்பற்றிப் பேசுகிற 19-வது பிரிவிலே 5-வது உப பிரிவிலே அதற்கான "லிமிடேஷன்" கொண்டுவரலாம் என்று அதிலே திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோன்ற திட்டவட்டமான குறிப்பு 26-வது பிரிவிலே இல்லை. ஆகையால், மத சம்பந்தப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தவரைக்கும், மடமோ அல்லது மடாலயமோ அல்லது வேறு மத ஸ்தாபனங்களோ வைத்திருக்கும் சொத்துக்களை உள்ளபடியே அரசாங்கம் எடுத்துக்கொள்ள முடியுமா என்றால், முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். ஏற்கெனவே இந்தச் சபையிலேகூட, பொதுவாக ரெவின்யூ சம்பந்தமான விவாதத்தில் பேசுகிறபோது, சென்ற ஆண்டு நான் அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகையால், இதை அரசாங்கம் அவசியம் பரிசீலனை செய்யவேண்டும். அவசியமானால் அரசியல் சட்டத்தைத் திருத்திவிட்டு அதற்குப் பிறகு இதைச் செய்யவேண்டும் என்று அவர்களுக்கு நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த மசோதாவிலே "ஒரு குடும்பம்" என்று வரையறுக்கும்போது, "ஐந்து நபர்கள் கொண்ட குடும்பம்" என்ற முறையிலே அதற்கு முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் இருக்கலாம் என்று இப்பொழுது கண்டிருக்கிறது. ஆனால், "குடும்பம்" என்றால் என்னவென்று விளக்கம் கொடுக்கும்போது, வரையறுக்கும்போது, அதற்குக் கொடுத்திருக்கும் விளக்கம் மிகவும் தவறான கருத்தைக் கொடுக்கக்கூடிய முறையிலே அமைந்திருக்கிறது. "மிஸ்-லீடிங்" ஆக இருக்கிறது. நான் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். காரணம், **"undivided Hindu family"** என்று சொல்லப்பட்டிருந்த போதிலும்கூட, இதிலே சொல்லப்படுகிறது என்னவென்றால் ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்களானால், அவர்களைப் பொறுத்தவரைக்கும் **"undivided Hindu family"** தான் குடும்பம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நிச்சயமாக அரசாங்கத்தின்



கருத்து இது அல்ல என்று நான் நினைக்கிறேன். "அன்-டிவைடட் ஹிண்டு பாமிலி" என்று சொல்லிவிட்டால் அதிலே எல்லோருமே இடம் பெற்று விட்டார்கள். அதற்கு ஆதாரம் சொல்கிறேன். 1957 ப்ரிவி கவுன்ஸில் தீர்ப்பில் "அன்-டிவைடட் ஹிண்டு பாமிலி" என்றால் என்ன என்று இன்கம்-டாக்ஸ் ஆக்டின் கீழே தீர்ப்புக் கொடுக்கும்போது அவர்கள் சொல்லிவிட்டார்கள். அந்தக் குடும்பத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேரையும் அதிலே சேர்க்கும் என்ற ஒரு விளக்கம் அரசாங்கம் போடும்போது, **Hindu Co-parcener** என்று மட்டும்சேர்க்க முடியும் என்ற நினைப்பிலே போட்டிருந்தாலும்கூட, நடைமுறையில் பின்னால் தகராறு வரும்போது நிச்சயமாக அதற்கு விளக்கம் கொடுக்கக்கூடிய நீதி மன்றங்கள் ஏற்கெனவே சொன்ன ப்ரிவி கவுன்சிலினுடைய தீர்ப்பின்படி அந்தக் குடும்பத்தில் அத்தனை பேரையும் சேர்க்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகையால், அதை மாற்றியமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

ஹிந்து மதத்தைவிட, மற்ற மதத்தைச் சார்ந்தவர்களையும் **"if they are joint in residence or joint in estate** அவர்களெல்லாம் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கண்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட வரையறை கொடுத்து முடிவு செய்தால் ஏதோ ஒவ்வொரு குடும்பத்தையும் பிரித்துவிட்டவர்களாக ஆவோம். "ஜாயின்ட் இன் எஸ்டேட்" என்று சொல்வதிலே நியாயம் இருக்கிறது. பாகம் பிரியாத பொதுவாக உள்ள சொத்தைப் பொறுத்த வரைக்கும் ஒன்றாக இருந்தால், அவர்களை அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்வதிலே நியாயம் இருக்கிறது. "ஜாயின்ட் இன் ரெஸிடென்ஸ்" என்று சொல்லும் காரணத்தால் பல குடும்பங்களைப் பார்க்கிறோம்—அவர்களுக்குள்ளாக இருக்கும் சொத்திலே இருக்கும் பாகம் பிரிந்திருந்த போதிலும் ஒற்றுமையாக ஒரு இடத்திலே கூடியிருக்கிறார்கள். அந்த வரையரைப்படி கொடுத்தால், அவர்களைப் பிரித்து வைக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும். இது உகந்தது அல்ல. அதோடு கூட, பெருமளவுக்கு நடைமுறையில் சிக்கல்களைக் கொண்டுவரும் என்ற கருத்தினையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதைவிட முக்கியமாகக் கருத வேண்டியது—**"any person"** என்ற வார்த்தைக்கு வரையறுக்கும்போது, **"person"** என்றால் "பர்ம்"மாக இருக்கலாம், கம்பெனியாக இருக்கலாம், குடும்பமாக இருக்கலாம், சொஸைடியாகக்கூட இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தவிதஒரு வரையறையைக் கொடுக்கக்கூடிய அதே சமயத்திலே, ஒரு குடும்பத்திலே ஐந்து நபர்களுக்கு மேல் இருந்தால், ஒவ்வொருவருக்கும் ஐந்து ஐந்து எக்கர் வீதம் கொடுக்கப்படுகிறதே தவிர, அதுபோல் நாலைந்து பேர்கள் சேர்ந்திருக்கும் பார்ட்னர்ஷிப் கம்பெனி, வேறு முறையிலே இருக்கும் நாலைந்து நபர்களைக் கொண்ட சொஸைடிகள், ஐம்பது பேர்கள் கொண்ட சொஸைடிகள் வைத்துக்கொண்டாலும்கூட அவைகளைப்பொறுத்த வரைக்கும் அல்லது கம்பெனியை எடுத்துக்கொண்டபோதிலுங்கூட, அவர்களுடைய எண்ணிக்கை எத்தனையாக இருந்தபோதிலும்கூட, அவர்களுக்கு அதிகப்படியான அளவுக்கு நபர் ஒன்றுக்கு ஐந்து எக்கர் இருக்கும் என்ற நிலைமை இல்லை. **"Family"** என்ற ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, யார் யாரைப்பொறுத்து **"person"** என்ற வார்த்தையிலே வரையறுத்திருக்கிறதோ அவர்களைப் பொறுத்தவரைக்கும்கூட இதற்கு ஒரு விளக்கம் தேவை என்று வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

பெண்களுக்கு உரிமை என்னும் விஷயத்தில், ஒரு தோழியருக்கு பத்து எக்கர் தனிப்பட்ட முறையில் கொடுக்கலாம் என்று கொடுத்திருக்கும் அதே சமயத்தில் "ஸ்திரீதனம்" என்று சொன்னால், இப்பொழுதிருக்கும் நடைமுறையிலே ஹிந்து சகோதரர்களிடத்தில் இருக்கும் நல்ல கருத்தினை முற்றிலும் மாற்றியமைத்திருக்கிறார்கள். "ஸ்திரீதனம்" என்றால் தகப்பன் கொடுக்கும் சொத்து மட்டுமல்ல; இன்றைக்கிருக்கும் ஹிந்து மதச் சட்டத்தின்படி "ஸ்திரீதனம்" என்றால் அந்தந்த சொத்தின் பேரில் ஒரு

ஹிந்து மதத்தைச் சார்ந்த ஒரு தோழியருக்கு அந்தச் சொத்தின் பேரில்
தங்களுக்கு கண்ட்ரோல் இருக்கிறதோ, "having absolute control over
any property" அதெல்லாம் இன்றைய தினம் "Stridhanam property"
என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**'In modern Hindu Law, the term Stridhana denotes not only the specific kinds of property enumerated in the Smrithis but also other forms of property acquired or owned by woman over which she has absolute control'.**

இதுதான் அதில் இருக்கும் விளக்கமாகும். அதை வைத்துப் பார்க்கும்போது,
பெண்களுக்கு உரிமை வேண்டுமென்று சொல்கிறோம். சம உரிமை அளிக்
கப்பட்டிருக்கிறது என்று அரசியல் நிர்ணயச் சட்டத்திலே விளக்கியிருக்கிறோம்.
மேலும் மேலும் அவர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டுமென்று வாதாடு
கிறோம். ஆனால், அவர்களுக்கு ஒரு காரியம் செய்யவேண்டுமென்ற
நேரத்திலே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உரிமையைக் கொடுக்க நாம்
தவறுகிறோம். இப்பொழுதிருக்கும் ஸ்திரீதனம் சம்பந்தமான "டெபனிஷன்"
பிரகாரம், கல்யாணமான பெண்களைப் பொறுத்தவரைக்கும் தகப்பன்,
தாய் கொடுக்கும் சொத்து மட்டுமல்ல ஸ்திரீதனம் என்றும் தாயைப் பெற்ற
பாட்டன் கொடுப்பது மட்டுமல்ல ஸ்திரீதனம் என்றும், கல்யாணம் ஆகாத
பெண்ணாக இருந்தால், தாய் அல்லது தாயைப்பெற்ற பாட்டன், சகோதரர்கள்
இவர்கள் கொடுக்கக்கூடிய சொத்து மட்டும் ஸ்திரீதனச்சொத்து என்று சொல்
லப்படுகிறது. அவர்களாக சம்பாதிக்கக்கூடிய சொத்து—ஆசிரியத்தொழில்
போன்ற எத்தனையோ தொழில்கள் அவர்கள் செய்யலாம்—அவர்களுடைய
சொந்தச் சொத்து அல்லது வெகுமதியாகக் கிடைக்கக்கூடிய மற்ற சொத்துக்
கள் எத்தனையோ இருக்கின்றன. கல்யாணம் ஆகும்போது அவர்களுக்கு
வெகுமதியாக சொத்துக்கள் கொடுக்கபடுகின்றன. "**In token of affection,**
**affectionate presents, presents by the husband's family** இப்படி
யெல்லாம் இருக்கின்றன. ஸ்திரீதனம் என்னும் வார்த்தைக்கு இன்னும்
சற்று '**wider definition**" கொடுத்தால் பெண்களுக்கு உள்ள உரிமைகளைத்
தக்கபடி கொடுத்தவர்களாவோம், என்ற கருத்தைச் வற்புறுத்திச்
சொல்ல விரும்புகிறேன். "**Tenants and usufructuary mortgagees**"
என்ற வார்த்தைகளுக்கு இங்கிருக்கும் விளக்கம் வேறு. ஆனால்,
அதேசமயத்தில் நியாய வாரச் சட்டத்திலும் சாகுபடியாளர் சட்டத்
திலும் இருக்கும் வரையறைகள் வேருக இருக்கின்றன. இந்த வரையறை
களை வேறு வேருக வைத்திருப்போமானால் இரண்டு சட்டங்களையும் இதிலே
பிணைத்துப் பேசக்கூடிய நிலைமையில் பல பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கும்
போது நடைமுறையிலே சிக்கல்கள் ஏற்படும். எந்த டெபனிஷனை நீதி
ஸ்தலமோ, லாண்டு போர்டோ எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற சந்தேக
மும் ஏற்பட்டு ஒரு பெரிய பிரச்னை எழும்பிவிடும். நாளைக்கு சட்டசபை
உட்பட எல்லோருமே அங்கிருக்கும் "ரிடிஸிஸெம்" களுக்கு ஆளாகக்கூடிய
நிலைமை ஏற்படும். ஆகவே, "**tenant**" என்ற வார்த்தை ட்ரான்ஸ்பர்
ஆப் ப்ராபர்டி ஆக்டின் 58 (டி) பிரிவில் நன்ருக வரையறுக்கப்பட்டிருக்
கிறது. அதுபோன்று "டெனன்ட்ஸ்" என்ற வார்த்தை நியாய வாரச்
சட்டத்திலும், கல்டிவேஷன் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டிலும் வரை
யறுத்திருக்கிறோம். அதே வரையறுப்பை இங்கேயும் எடுத்துக்கொண்டால்
சிக்கல்கள் எதுவும் இல்லாமல் நாம் காரியத்தைச் செய்யக்கூடிய நிலைமை
ஏற்படும்.

முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்ருல், பல ட்ரிப்யூனல்கள்,
பல போர்டுகள் இதிலே அமைக்கின்றோம். லாண்டு போர்டு, ஷுகர்
பாக்டரி போர்டு, லாண்டு ட்ரிப்யூனல், இவைகளையெல்லாம் நாம் ஏற்படுத்து
கிறோம். பொதுவாக இன்றையதினம் சொல்லக்கூடிய பெரிய குற்றச்
சாட்டு என்னவென்ருல், அரசாங்கம் நாளுக்கு நாள் கோர்ட்டுகளைக்
கண்டு மிரளுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஏதோ வழக்குகள்
அதிகமாக இருக்கும் என்ற காரணத்திற்காக அப்பேர்ப்பட்ட முறையைக்
கையாளவேண்டிய அவசியம் இருக்கிறது என்று வாதாடக் கூடும். இப்படி



வாதாடக்கூடிய சர்வாதிகார நாடுகளில்கூட, ரஷ்யா, சீன போன்ற நாடு
களில்கூட, நீதிமன்றங்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்
கொண்டுதான் வருகின்றன. அதுபோல் வழக்குகளும் இருந்துகொண்டு
தான் இருக்கின்றன. வழக்கறிஞர்களையும் அவர்கள் ஒழித்துவிடவில்லை.
இதுபோன்ற நிலைமையை நாம் ஏற்படுத்துவோமானால், அதனால் பாதிக்கப்
படக்கூடியவர்கள் பொதுமக்கள் என்பதை நாம் மனதில் வைத்துக்
கொள்ளவேண்டும். சட்டத்தைப் போடுவதற்கு மட்டும் அரசாங்கம் முற்
படவேண்டுமே தவிர, சட்டத்தை அமுல் நடத்தும்போது அதில் இருக்கும்
சிக்கல்களையும் தீர்த்து வைக்கிறது என்ருல், அந்தப் பொறுப்பையும்
அரசாங்கமே எடுத்துக்கொண்டால், லெஜிஸ்லேசர், எக்ஸிக்யூடிவ், ஜுடீ
ஷியரி என்று மூன்று விதமான வேலைகளையும் அரசாங்கமே எடுத்துக்
கொள்ள முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டு இப்பொழுது இருக்கிறது.
ஆகையினல் இதை மாற்றக்கூடிய நிலைமையிலே கூடியவரைக்கும் எங் 11 a.m.
கெல்லாம் நீதி ஸ்தலங்களுக்கு காரியங்களை விடமுடியுமோ அந்த முறை
யில் விட்டால்தான் மக்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற முடியும். எதற்
கெடுத்தாலும் டிரிபியூனல் தீர்ப்புதான் கடைசி தீர்ப்பு. அதற்கு மேல்
அப்பீல் இல்லை என்று சொல்வார்களேயானல், உள்ளபடியே மக்களுக்கு
அதனல் அதிகப்படியான கஷ்டங்கள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். லாண்டு போர்டு, ஷுகர் பார்க்டரி போர்டு இவை
இரண்டையும் பொறுத்தவரைக்கும், அவர்கள் சொல்லக்கூடிய தீர்ப்பு
தான் கடைசி தீர்ப்பு என்று கூறப்படுவது, ஏதோ தவறுதலாகக்கூட
ஒரு தீர்ப்பை கொடுப்பார்களேயானல், அதை மாற்றுவதற்கு வழி இல்லா
மல் செய்துவிடுகிறது. அந்த போர்டில் அங்கம் வகிக்கக்கூடிய யாராவது
ஒரு நபர் தவறுதல் செய்யவேண்டுமென்ற காரணத்தினல், அதற்கு
முன்னல் இருக்கக்கூடிய ஆசாமி தனக்கு ஆகாதவர் என்ற முறையிலே
தவறுதலாக ஒரு தீர்ப்பை கொடுப்பாரேயானல், அதற்கு மேல் ஒரு
அப்பீல் இருக்கவேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒத்துக்
கொள்ளுவார்கள். அந்த முறையில் பார்க்கும்பொழுது லாண்டு டிரிபி
யூனல் தீர்ப்புக்கு மேலே உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ள
லாம் என்று இருக்கிறது. ஆனல் லாண்டு போர்டு, ஷுகர் பாக்டரி
போர்டை பொறுத்தவரைக்கும் அவைகளினுடைய தீர்ப்பிற்கு மேலே அப்பீல்
செய்ய முடியாது என்று இருப்பது உள்ளபடியே பின்னல் கஷ்டத்திற்கு
இடம் கொடுப்பதாகும் என்று சொல்வதோடுகூட, லாண்டு டிரிபியூனல்
முடிவின் பேரில் எடுத்த எடுப்பிலேயே உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்ய
வேண்டும் என்ற முறையில் இருப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது. ஏன்
இதுபோன்ற முறையை கையாளுகிருர்கள் என்பதை எங்களால் புரிந்து
கொள்ள முடியவில்லை. எந்த ஒரு நிலச் சட்டம் வந்தபோதிலும், முதல்
கோர்ட்டு ஸ்தலத்திலேயே இருக்கும். அடுத்த கோர்ட்டுதான் ஹைகோர்ட்டு
என்று குறிப்பிடப்படவேண்டும். இந்தவித ஒரு நிலைமை "கல்டிவேடிங்
டெனண்ட்ஸ் ஆக்ட், பேர் ரெண்டு ஆக்ட்" ஆகிய இரு சட்டங்களிலும்
இல்லாததினல் சாதாரண சாகுபடியாளர்கள், விவசாயிகள் ஹைகோர்ட்
வரைக்கும் வந்து, மதருஸ் வரைக்கும் வந்தும் தங்களுடைய கஷ்டங்களை
நிவர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. அநேகமாக எல்லோருமே ஸ்தலத்
திலேயே பிரச்னையை விட்டுவிட்டு வீட்டிற்கு சென்றுவிடுகின்றனர். வசதியுள்ள
பணக்காரர்கள், நிலப்பிரபுக்கள் மாத்திரமே ஹைக்கோர்ட்டிற்கு வந்து
வாதாடக்கூடிய நிலைமையை உண்டுபண்ணுகிறது என்று சொன்னல்,
அமைச்சர் அவர்கள் ஏதோ செய்துவிட்டோம், இனிமேல் செய்யும்பொழுது
அந்தவித நிலைமை இல்லாமல் செய்துவிடுவோம் என்று உறுதி கூறினர்.
ஆனல், வரக்கூடிய இந்த சட்டத்திலும் இந்தவித ஒரு சிக்கல் இருந்து
கொண்டுவருகிறது. இதை மாற்றிவிடுவார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

காம்பென்ஸேஷன் விஷயத்தைப்பற்றி பல்வேருக வாதம் செய்யப்
பட்டு பேசப்பட்டது. இதிலே குறிப்பாக கவனிக்கவேண்டியது என்னவென்
ருல், நிலச் சீர்திருத்தம் என்பதிலே நோக்கம் என்ன என்பதை
அமைச்சர் அவர்கள் விளக்கினர்கள். ஒருவருக்கு நில சம்பந்தமாக
**in the form of lands** அதிகப்படியான நிலம் இருந்

தால் agrarian structure over agrarian economy பாதிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, ஒருவர் சொத்துக்கு உச்சவரம்பு கொண்டுவரப்படவேண்டும் என்று சொல்லப்படவில்லை. நிலத்திற்கு தான் உச்சவரம்பு கொண்டுவரப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறதே தவிர, சொத்துக்கு உச்ச வரம்பு அல்ல. சொத்துக்கு உச்ச வரம்பு கொண்டுவரப்படுகிறது என்ற ஒரு தவறுதலான கருத்து இப்பொழுது இருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும், காங்கிரஸ் அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் திட்டவட்டமாக சொல்லியிருப்பது என்னவென்றால், **it recognizes private ownership** தனிப்பட்ட உடமையை நாங்கள் பாதுகாக்கிறோம் என்ற உறுதி மொழியை கொடுத்திருக்கிற அரசாங்கம் நிலத்திற்கு உச்ச வரம்பு என்று சொல்லி, சொத்திற்கு உச்ச வரம்பு வைப்பது போல "அடிகுவேட் காம்பென்ஸேஷன்" கொடுக்காமல் இருப்பது நியாயமாகாது. ஒரு வேளை சொல்லக்கூடும், அரசியல் நிர்ணய சட்டத்தில் 31-வது பிரிவுப்படி "நாங்கள் எதை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம், ஆகவே இதைப்பற்றி கேட்கக் கூடாது" என்று. ஆர்டிகில் 31 என்று சொல்லும்பொழுது, காம்பென்ஸேஷன் என்று சொல்லுகிறார்கள், அதற்கான சட்டத்தை வகுக்கலாம் என்று சொல்லுகிறார்கள், காம்பென்ஸேஷன் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டும் என்று சட்டம் செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் அந்த காம்பென்ஸேஷன் "அடிகுவேட்டாக" இல்லையென்று சொன்னால், அதற்காக எந்த கோர்ட்டிலும் வியாஜ்ஜியம் தொடர முடியாது என்று சொல்லுகிறார்கள். சட்டபூர்வமாக பேசுகிறபொழுது, நியாயமான முறையிலே சட்டத்தை வகுத்து நியாயமான காம்பென்ஸேஷன் நிர்ணயிக்கவேண்டுமென்று சொன்னால், நஷ்ட ஈடு என்று சொன்னால், அரசாங்கம் ஏதோ ஒரு "சாரிடி" கொடுப்பது அல்ல, ஒரு "இட்டு" கொடுப்பது அல்ல. நஷ்ட ஈடு என்று சொன்னால் நியாயமான நஷ்ட ஈடு என்றுதான் அர்த்தம்.

I was made to understand that there was no time-limit. So, I may be permitted to speak for a few minutes more.

TEMPORARY CHAIRMAN (Sri V. K. Krishnamurthy): A time-limit of 20 minutes for each member has been fixed.

SRI S. LAZAR: Sir, I may be permitted to take some more minutes.

அதைப்போன்ற ஒரு நிலைமையைப் பார்க்கிறபொழுது, இதைப் பொறுத்த வரைக்கும் நியாயமான முறையில் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. அதோடுகூட நஷ்டஈட்டைப் பற்றி சொல்லக்கூடிய அந்த பிரிவிலே, ரூ. 5,000, 10,000 வருஷ வருமானம் வரக் கூடியவர்களுக்கு 12 மடங்கு, அதை விட அதிகமாக வருமானம் வரக் கூடியவர்களுக்கு 9 மடங்கு என்று சொல்லப்பட்டிருப்பதுகூட அரசியல் நிர்ணய சட்டத்திற்கு புறம்பானது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரே 'யூனிபாரம்' ரேட்டாக இருக்கவேண்டும். பணக்காரர்கள் என்று சொன்னால் அவர்களுக்கு குறைந்த நஷ்டஈடு, ஏழைகள் என்று சொன்னால் அவர்களுக்கு அதிகப்படியான நஷ்டஈடு என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் அப்படியே சட்டமாக நிறைவேற்றினால் பின்னால் பல கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும். ஏதோ ரேட்டைப் பொறுத்தவரைக்கும், 12 மடங்கோ அல்லது 11 மடங்கோ எவ்வளவு மடங்கு நியாயம் என்று அரசாங்கம் கருதுகிறதோ அவ்வளவு மடங்கை, எல்லோருக்கும் ஏகோபித்த முறையிலே நிர்ணயிக்கவேண்டுமே தவிர அதில் ஒரு வித்தியாசம் காட்டுவது பொறுத்தமாகாது.

அதைவிட மிகவும் முற்போக்கான ஒரு முறையிலே ஒரு பிரிவு அமைந்திருக்கிறது. அதுவும் ஒரு தவறான கருத்தை தெரிவிக்கிறது. நில சம்பந்தப்பட்ட பத்திரங்கள் செடில்மெண்டாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, 6-4-60 க்குப் பிறகு ரெஜிஸ்டிரேஷன் செய்யப்பட்டிருந்தால் ரெஜிஸ்டிரேஷன் செய்யப்பட்டிருக்கிற தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய "ட்ரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட்" பிரகாரம்—நாட்டிலே எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம்" எந்த பத்திரமும் எழுதுகிற தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது. எழுதிய தேதியிலிருந்து 4 மாதங்களுக்குள்ளாக ரெஜிஸ்டிரேஷன் செய்துகொள்ளலாம். ஆனால் இப்பொழுது வந்திருக்கக் கூடிய இந்த சட்டத்தில் அதை மாற்றி அமைத்து ரெஜிஸ்டிரேஷன் செய்கின்ற தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொல்லுவது மிகவும் தவறான ஒரு கருத்தாக இருக்கும். சட்டத்தில் இம்மாதிரி செய்ய முடியும் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, எதை வேண்டுமானாலும் செய்வது நல்லது அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நிலம் பரவலாக பிரியவேண்டும் என்று சொல்லுகிறோமே தவிர, 'நிலத்தை இன்னாருக்கு கொடுக்கவேண்டும், ஆகவே கொடுங்கள்' என்ற கருத்தினை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பேற்பட்ட கருத்து இல்லை என்ற நிலைமையில், ஏற்கனவே இப்பொழுது பார்க்கிறோம், பல நிலச்சொந்தக்காரர்கள் அவர்கள் மகன், பேரன் முதலியவர்கள் பெயரால் 4 அல்லது 5 மாதங்களுக்குள்ளாக பிரித்து எழுதி வைத்திருக்கிறார்கள். அதில் தவறு எதுவும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை, மற்றவர்களும் கருதவில்லை. ஆகையால் அவர்களை பாதிக்கக்கூடிய முறையில் ரெஜிஸ்டிரேஷன் செய்துகொண்ட தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொல்லுவது நியாயமாகாது, நீதியாகாது. இதுபற்றி பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்கள் பேசுகின்றபொழுது உறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால் அந்த உறுதியை காப்பாற்றிக் கொடுக்கும் முறையில் இந்த பிரிவை எடுத்துவிடவேண்டும்.



சாகுபடியாளர்களுக்கு கொடுத்திருக்கக்கூடிய நிலத்தில் சொந்த சாகுபடிக்கு 5 ஏகர் வரைக்கும் எடுத்துக்கொள்ளலாம் என்று ஒரு பிரிவு இருக்கிறது. அதேசமயத்தில் "ப்ரொபெஷன் டாக்ஸ்" கொடுத்தால் கூட அவர்களுக்கு அந்த உரிமை கிடையாது என்று சொல்லப்படுகிறது. **"What is given by the left hand is sought to be taken away by the right hand"** என்ற முறையில் இது அமைந்திருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பஞ்சாயத்து சட்டப்படி கிராமத்தில் இருக்கக்கூடிய சாதாரண ஒரு ஆசிரியர் கூட, 40 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடியவர்கூட தொழில் வரி கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு நபரும் தொழில் வரி கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறபொழுது, தொழில் வரி கொடுத்தால்கூட, அவர்கள் சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லப்பட்டால், சட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பலன் அவர்களுக்கு நிச்சயமாக இருக்காது. இன்கம் டாக்ஸை வேண்டுமானால் வைத்துக் கொண்டு மற்றவைகளை எடுத்துவிடுவதுதான் நல்லது.

அதைவிட முக்கியமானது பிளானிங் கமிஷன் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள் **"Intermediarics should be abolished"** என்று. ஆனால் இந்த சட்டத்தை பார்க்கக்கூடிய நேரத்தில் "இண்டர்மீடியரீஸைப்" பொறுத்தவரையிலும் அவர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்றுதான் தெரிகிறது. அதைப்பற்றி நிச்சயம் திருத்தம் கொண்டு வரவேண்டும். "சப் லெஸ்ஸீஸைப்" பொருத்தவரைக்கும் உயர்நீதி மன்றம் அவர்களுக்கு எந்தவித சட்டமும் பாதுகாப்பு அளிக்காது, செல்லுபடியாகாது. "கல்டிவேடிங் டெனன்ண்டஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்" பாதுகாப்பு அவர்களுக்கு கிடையாது என்று சொல்லிவிட்ட பிறகு அந்தத் திருத்தம் மிகவும் அவசியம். உடனடியாக அதை அரசாங்கம் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறேன்.

அரசாங்கம் அவர்களுக்கு தோன்றும்போது எந்தவிதமான ஒரு உத்தரவைப் பிறப்பித்தாலும், லாண்டு போர்டு, ஷுகர் பாக்டரி போர்டு, லாண்டு

கமிஷனர் எல்லோருமே அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று ஒரு பிரிவு சொல்லுகிறது. அதற்கு இந்தச் சட்டம் தேவையே இல்லை என்று நினைக்கிறேன். சட்டம் கொண்டுவந்து சட்டப்பிரகாரம் நடக்கவேண்டுமென்று சொல்லும்பொழுது, அதேசமயத்தில் அரசாங்கம் எந்த உத்தரவு போட்டாலும், அந்த உத்தரவை லாண்டு போர்டு முதலியவைகள் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லுவது, இந்த சட்டத்தையே எடுத்துவிடுவது போலாகும். ஆகவே, இதை மாற்றி அமைக்கவேண்டும். இம்மாதிரி தேவைப்படும் மாறுதல்களை எல்லாம் செய்தோமானால் இந்த சட்டம் நிச்சயமாக எல்லோராலும் வரவேற்கக் கூடிய சட்டமாக இருக்கும், நடைமுறையில் நல்லவிதமாக இயங்கும் சட்டமாக இருக்கும் என்ற கருத்தினை சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri M. JANGAL REDDIAR:** தலைவர் அவர்களே, இந்த உச்ச வரம்பு மசோதாமீது, இந்த சட்டத்தை எதிர்த்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சட்டமானது, பல சிக்கல்களை உண்டாக்கி, இன வேற்றுமையை உண்டாக்குகிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். திட்டக் கமிஷன் சொல்கிறது அதனால், கொண்டு வருகிறோம் என்று மசோதாவில் போட்டிருக்கிறார்கள். திட்டக் கமிஷனில் இருப்பவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பது இங்கு எல்லோருக்கும் தெரியும். அவர்கள் ஏட்டளவில் பேசுகிறார்களே தவிர, நடைமுறையில் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அதை வைத்துக் கொண்டு நம் அரசாங்கம் செய்யும் சட்டத்தினால் எவ்வளவு தூரம் பலன் கிடைக்கும் என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டும். சட்டத்தின்படி நடந்தால், விவசாயிகள், உழவர்கள், கடைநிலை ஊழியர்களைவிட கீழ்தரத்திற்குப் போய்விடுவார்கள்.

இவர்கள் இப்பொழுது வைத்திருக்கும் 30 எக்கர் நிலத்தில், நன்றாகப் பாசன வசதிகள் இருக்கும் இடங்களில், ரூ. 1,000 வரை வரும். ஆனால், தென்னாற்காடு, செங்கல்பட்டு, வட ஆற்காடு போன்ற வரண்ட பிரதேசங்களில், 30 எக்கரில் சராசரி ரூ. 3,000 அல்லது 4,000 தான் வருமானம் கிடைக்கும். அதுவும் நிரந்தர வருமானம் இல்லை. இம்மாதிரி நிரந்தர வருமானம் இல்லாமல் விவசாயிகள் வாழ்க்கை நடத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். அப்படி வாழ்க்கையையும் நடத்திக்கொண்டு, பிள்ளைகளையும் படிக்க வைத்துக்கொண்டு, மற்ற அலுவல்களையும் அவர்கள் செய்ய வேண்டும். இது சாத்தியமே இல்லை. இந்த தேசத்தில் 70 சத விகிதம் உள்ள விவசாய வர்க்கம், தன்னுடைய கஷ்டத்தைச் சொல்லவும் தன்னுடைய நிலையை அரசாங்கத்திற்குச் சொல்ல, இந்த சட்ட சபையில் விவசாயின் சார்பாகப் பேச ஒரு அங்கத்தினரையும் அனுப்ப முடியாது; ஒரு அங்கத்தினருக்கு ரூ. 9,000 ஆகிறது என்று சர்க்காரே சொல்கிறது; அப்படியிருக்கும்போது, இந்த குறைந்த வருமானமாகிய ரூ. 3,000, 4,000-த்தை வைத்துக்கொண்டு, வாழ்க்கையையும் நடத்திக்கொண்டு, சட்ட சபைக்கு ஒரு அங்கத்தினரை அனுப்ப செலவு செய்யவும் அவர்களால் முடியாது. ஆகவே, அவர்கள் சார்பாக ஒரு அங்கத்தினரும் இந்த சட்ட சபைக்கு வரமுடியாது. 70 சத விகிதம் உள்ள விவசாய வர்க்கத்தை சட்ட சபைக்கு வரமுடியாமல் நடை செய்யும் ஒரு மசோதா இது என்று சொல்ல விரும்புகிறேன். எப்படி உத்தியோகங்களில், ஏற்றத்தாழ்வுகள், வேலை செய்பவர்களை உற்சாகமாகவும், ஊக்கத்துடனும், உணர்ச்சியுடனும் வேலை செய்ய தூண்டுகிறதோ, அப்படியே, விவசாயத்திலும், ஏற்றத் தாழ்வு இருக்க வேண்டும். சட்ட பூர்வமாக எதை வேண்டுமானாலும் செய்து விடலாம். ஆனால், நடைமுறையில் அது பலன் அளிக்காது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் திறமையாக உழைத்து கொஞ்சகாலம் கஷ்டப்பட்டால், ஆண்டவன் அருள் இருந்தால், மிச்சப் படுத்தி, வேறு நிலம் வாங்கலாம். ஆனால், இன்று அதிகமாக நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது என்கிறபடியினால், அவர்கள் இருக்கும் நிலத்தையும் விற்றுவிட்டு, விவசாயத்தையே விட்டுவிட்டு, கடை வைக்கலாமா,





சில்லரைக்கடை வைக்கலாமா, வேறு ஏதாவது உத்தியோகத்திற்குப் போகலாமா, என்றெல்லாம் அல்லல் படுவார்கள். உத்தியோகம் என்றால் படித்திருக்க வேண்டும். அப்படிப் படித்திருந்தாலும், எல்லோருக்கும் உத்தியோகம் கிடைக்கக்கூடியது என்பது இல்லை. அப்படியே எல்லோரும் உத்தியோகத்திற்குப் போய்விட்டால், உழைப்பதற்கு யார். எல்லோருக்கும் "நிலம் வேண்டும், நிலம் வேண்டும்" என்ற ஆசை இருக்கிறது என்று விவசாய மந்திரியவர்களே—மற்ற பேர் சொன்னால் பரவாயில்லை—அனுபவமும், ஆற்றலும் உள்ள விவசாய அமைச்சரவர்களே சொன்னார்கள். எல்லோருக்கும், எம்.எல்.ஏ.-க்கள் எல்லோருக்கும் மந்திரி பதவி வேண்டும் என்று ஆசை இருக்கிறது; இது கிடைக்குமா? கிடைப்பது சாத்தியமா? என்றுதான் கேட்கிறேன். ஆகவே, இது தீர யோசித்துச் செய்ய வேண்டிய விஷயம்.

இந்த சட்டத்தினால் ஏழைகளுக்கு நன்மை என்று நினைக்கிறார்கள். இல்லவே இல்லை; ஏழ்மையைத்தான் பங்கு போடுகிறோம். விவசாயிகளிடம் இருக்கும் நிலம் பர்மிட் மூலமாகவோ, லஞ்சம் வாங்கியோ, ப்ளாக் மார்கெட்டிலோ வாங்கியது அன்று. உழைத்து சம்பாதித்தது. இதையெல்லாம் ஒரே எழுத்தில், ஒரு சட்டத்தால், சீரழித்து விடுகிறதினால், பிற்காலத்தில் அவர்களின் சந்ததிகளுக்கு என்ன இருக்கும்? நீங்கள் நஷ்டஈடு 20 வருஷத்தில் கொடுக்கப்போகிறீர்கள். ஆகவே அதுவொன்றும் சரியாகக் கிடைக்காமல், அவர்களும் அல்லது அவர்கள் சந்ததிகள் தெருவில் நிற்கும் நிலைதான் ஏற்படும். விவசாய வர்க்கம் அழித்து விடப்படும். 10 வருஷங்களுக்குப் பின்னால், கட்டாயமாக அரசாங்க பண்ணை மூலம்தான் விவசாயம் செய்ய வேண்டியதாக வரும். அதற்கு இன்று மறைமுகமாக சூழ்நிலை உண்டுபண்ணப்படுகிறது. அரசாங்கப் பண்ணை வந்தால் என்னவாகும்? 70 சத விகிதம் உள்ள விவ்சாய வர்க்கத்திற்கு வேலை வாய்ப்புக் கிடையாது. அரசாங்கப் பண்ணையில் அத்தனை விவசாயிகளுக்கும் வேலையில்லை. வாரத்திற்கு இரண்டுபேர் வந்து வேலை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். வாரத்தில் 7 நாட்களில் 2 நாள் வேலை செய்யச் சொல்லி மற்ற நாட்களில் அவர்களுக்கு வேலையில்லை என்னும் நிலைமைதான் ஏற்படும்.

இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் நாம் எல்லாக் காரியத்திற்கும் தமிழே வேண்டும் என்று சொல்லும் வேளையில், தமிழிலே ஆக்கிக் கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால், முன்கூட்டியே கொடுத்திருந்தால், பெரும்பாலோருக்குப் புரிந்துகொள்ளமுடியும். திட்ட கமிஷன் சொல்கிறது, நாங்கள் செய்கிறோம் என்கிறார்கள். கனம் விவசாய அமைச்சரவர்களுக்குத் தெரியும், திட்ட கமிஷனில் இருப்பவர்களுக்கு எந்த விவசாய அனுபவமும் கிடையாது என்று.

இந்த மசோதாவில் மாகாணத்தில் எவ்வளவு நிலம் கிடைக்கும் என்று திட்ட வட்டமாக சொல்ல முடியவில்லை; அவர்களுக்கே ஒரே குழப்பம். ஆகவே இந்த சட்டம் மக்களுக்கு பாதுகாப்பாக இல்லை, யமனை அமைந்திருக்கிறது. இந்த சட்டத்தைப் பார்த்தால், அடுத்து வரும் எலெக்ஷனில் ஓட்டு வாங்குவதற்காகவே கொண்டுவரப்படுவதாக இருக்கிறது. ஆனால், ஓட்டு கிடைக்குமா என்பது சந்தேகிக்க வேண்டியதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது மக்களுக்கும் தெரியும், ஒரு ஏமாற்று முறை என்று.

நிலத்தின் தரத்தில் ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது. ஒரு ஜில்லாவில் ஒரு எக்கருக்கு ரூ. 10,000 கிரயம் கிடைக்கும்; அடுத்த ஜில்லாவில், அதே பரப்புள்ள நிலத்திற்கு ரூ. 1,000 கிரயம் தான் கிடைக்கும். உற்பத்தி, நிகர லாபம் இவற்றிலெல்லாம் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் பார்த்தால் எப்படி நஷ்ட ஈடு கொடுக்கப் போகிறார்கள் என்று விளங்கவில்லை,

[Sri M. Jangal Reddiar] [19th April 1960

மலைத் தோட்டம், டீ, காபி தோட்டம் இவற்றிற்கு விதிவிலக்கு. திட்டக் கமிஷன் சொல்கிறார்கள் என்பதினால், அளிக்கிறோம் என்கிறார்கள், அப்படி அங்கு வரம்பு கட்டினால், உற்பத்தி பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள்.

(Mr. Speaker in the Chair.)

அப்படியே, மற்றதிலும் உற்பத்தி பாதிக்கப்படாதா என்று கேட்க விரும்புகிறேன். இந்த சட்டத்தின் மூலம் நாம் விவசாயிகள் உற்சாகத்துடன் விவசாயத்தை செய்ய வழிசெய்ய வில்லை ; இந்த சட்டத்தை சட்ட சபையில் பல அங்கத்தினர்கள் ஆதரிக்கவில்லை என்பதை மந்திரியவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சட்டம் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறது என்றும் சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை எதிர்த்து, இந்த சட்டத்தை அரசாங்கம் உடனடியாக அமுலாக்க முயற்சிக்காமல், தீர யோசித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

**Mr. SPEAKER :** பல அங்கத்தினர்கள் பேச வேண்டும் என்று என்னை அணுகுகிறார்கள். அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஒன்று சபை மத்தியானம் உட்கார வேண்டும். அல்லது அங்கத்தினர்கள் தலைக்குப் பத்து நிமிஷம் மாத்திரம் பேச வேண்டும். நேற்று பேச அங்கத்தினர்களேயில்லை ; ஒரு மணிக்கே சபையை ஒத்திவைத்தேன். ஆகவே இப்பொழுதிலிருந்து, ஒவ்வொருவரும் 10 நிமிஷமே பேசுவதானால், 12 பேர் பேசலாம். ஆகவே, ஒவ்வொருவரும் 10 நிமிஷமே பேசினால் போதும் என்று நினைக்கிறேன். இப்பொழுது கனம் சசிவர்ணத் தேவர் பேசுவார்கள்.

**Sri T. L. SASIVARNA THEVAR :** I want some more time. கனம் சபாநாயகர் அவர்களே, சமூகப் புரட்சி பண்ணக்கூடிய இந்த சட்டத்தைப்பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த சட்டத்தைப்பற்றி, நமது உள்நாட்டு அமைச்சரவர்கள் சில விளக்கம் கூறினார்கள் ; அப்படிக் கூறுகிற நேரத்திலே, அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ் ஏற்பட்ட காலம் முதல் இது சொல்லி வரப்பட்டிருக்கிறது. தேர்தல் விஞ்ஞாபனங்களிலெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்று. ஜமீன் ஒழிப்பைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் ; ஆனால் எந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உச்சவரம்பு கட்டப் போகிறோம் என்று சொல்லவில்லை என்பதை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உச்சவரம்பு கட்டும்போது சிலர் சர்தாரணமாக ஆயிரம், இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் சம்பாதிக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். உச்ச வரம்பு கட்டி அவர்களுடைய வாழ்க்கையை தடுப்பது என்பது அவ்வளவு சரியல்ல. முப்பது ஏக்கர் என்று சொல்லும்போது சாதாரணமாக ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால் இந்த சட்டத்தில் பார்த்தால் ஒரு குடும்பத்திற்கு ஐந்து பேர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு முப்பது ஏக்கர்கள் என்று சொன்னால் அதை வைத்துக் கொண்டு நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய்தான் அந்தக் குடும்பத்திற்கு வருமானம் வரும். இதை வைத்துக்கொண்டு அந்தக் குடும்பத்தை நல்ல முறையில் நடத்திக்கொள்ள முடியுமா என்பதை சிந்திக்க வேண்டும். இங்கே பேசக்கூடிய காலத்தில் பத்தாயிரம் தான் வரும் என்று குறிப்பிட்டார்கள். எங்கள் ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் பத்து ரூபாய்க்கு குறைவாக கிஸ்தி செலுத்துகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு எட்டு ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் நிச்சயமாக அந்த வருமானம் அங்கே வராது. உச்சவரம்பு கட்டும்போது மற்ற வருமானங்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதையே எல்லோரும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நிலத்தில் மட்டும் லாபம் வரவில்லை. அதற்கு உள்விவகார அமைச்சர் அவர்கள் பதில்



19th April 1960] [Sri T. L. Sasivarna Thevar]

சொன்னது அவ்வளவு திருப்தியாக இல்லை. ஏதோ மழுப்புவதுபோல் தான் இருந்தது. நிலம் என்பது மூல பொருள் என்று குறிப்பிட்டார். மற்றவைகளையும் ஏன் குறிப்பிடக்கூடாது என்று கேட்கிறேன். மற்ற தொழில்களில் எவ்வளவோ லாபம் அடைகிறார்கள். பலர் வியாபாரம் செய்கிறார்கள்; உத்தியோகம் செய்து அநேகம் வருமானம் வருகிறது. பர்மிட் மூலமாக ஒரு நாளில் லட்சக்கணக்காக சம்பாதிக்கிறவர்கள் கூட இருக்கிறார்கள். பலருக்கு வருமானம் நிலத்திலிருந்து வரக்கூடியதைவிட ஜாஸ்தியாகத்தான் வருகிறது. அதற்கெல்லாம் ஏன் உச்ச வரம்பு இல்லை. பின்னால் வரும் என்று கூட தெரியவில்லை அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால். ஏன் ஏழை விவசாயிகளுக்கு மாத்திரம் இதைக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் நான் பரிபூர்ணமாகச் சொல்லுகிறேன், நிச்சயமாக ஆபத்துதான் வரும். ஆகவே நாலாயிரம் ஐயாயிரம் வந்தால் ஒரு குடும்பத்திற்கு அது எப்படி போதும் என்று கேட்கிறேன். அவர்கள் நல்ல முறையில் வாழ வேண்டாமா, வைத்திய வசதிகள் மற்றவசதிகள் செய்து கொள்ள வேண்டாமா ? நகரங்களில் வாழ்க்கையை நடத்துவது போன்று கிராமங்களிலுள்ளவர்களும் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டாமா ?

அகில இந்திய அரசியல் சட்டத்தில் என்ன சொல்லி இருக்கிறது, கிராமங்களில் உள்ளவர்களுக்கும் நகரங்களில் உள்ளவர்களைப் போன்று வருமானம் வரவேண்டும் என்று சொன்னால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யாவிட்டால் அது கிராமங்களிலுள்ளவர்களுக்குச் செய்த அநீதியாகுமல்லவா ? ஆகவே அந்த அளவில் இந்தச் சட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும். நகரங்களில் எவ்வளவோ பேர்கள் பத்தாயிரம் இருபதாயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் உச்ச வரம்பு கட்ட வேண்டியது அவசியம் இல்லையா ? பெரிய சம்பளம் வாங்கக்கூடிய உத்யோகஸ்தர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு எல்லாம் செய்யாமல் விவசாயிகளுக்கு மட்டும் செய்வது என்பது அவ்வளவு நியாயமாகாது. அப்படிச் செய்தால் அது பெரிய அநீதி செய்ததாகக் கருதப்படும்.

அடுத்தபடியாக ஒரு குடும்பத்திற்கு ஐந்து பேர்கள் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வரப்படுகிறது. அதன்படி ஒரு குடும்பத்திற்கு நான்கு பேர்கள் தான் இருப்பார்கள், அதாவது ஒரு புருஷன், ஒரு மனைவி, ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை. இப்படி நான்கு பேர்கள் போதும் என்று காலண்டர் எல்லாம் போட்டிருக்கிறார்கள். (ஒரு குரல் : மூன்று குழந்தைகள் இருக்கலாம்) காலண்டரில் இரண்டு குழந்தைகளுக்குத்தான் இடம் இருக்கிறது. மூன்று என்று போடவில்லை. இப்படிப்பட்ட குடும்பத்தில் பத்து வருஷங்களுக்குப் பிறகு முப்பது ஏக்கரை வைத்துக்கொண்டு எப்படி பிரிவினை செய்வது. அப்பொழுது ஒரு குடும்பத்திற்கு முப்பது ஏக்கருக்கு எங்கே போவது. இந்த முப்பது ஏக்கரை வைத்துக்கொண்டுதானே பிரிவினை செய்துகொள்ளவேண்டும். அப்பொழுது நிலத்திற்கு எங்கே போவது, அமைச்சர் கொடுக்கப்போகிறாரா என்று கேட்கிறேன். அல்லது கலெக்டர் கொடுக்கப்போகிறாரா என்றும் கேட்கிறேன். இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை. பதில் சொல்ல அவர்களால் முடியாது. ஆகவே உச்ச வரம்பு கட்டும்போது இதையெல்லாம் நிர்ணயம் செய்ய வேண்டாமா ?

மற்றொன்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, அதாவது நில வரியை பொறுத்து ஏக்கர் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது இல்லாமல் நில வருமானத்தை வைத்துக்கொண்டு நிர்ணயம் செய்ய வேண்டும். மற்றும் தோட்டம், தோப்பு முதலியவைகளை இதை விட்டு விலக்கி விட்டார்கள், கரும்பு

[Sri T. L. Sasivarna Thevar] [19th April 1960

நிலங்களையும் விலக்கி விட்டார்கள். அதனால் இனிமேல் தானியம் விளையக்கூடிய நிலங்களையெல்லாம் கரும்பு சாகுபடிக்கு மாற்றுவதற்கு முயற்சிக்க மாட்டார்களா ? அல்லது சவுக்கு முதலியவைகள் போட ஆரம்பித்து விடுவார்கள். (ஒரு குரல் : அப்படி ஆரம்பிக்க முடியாது.) அப்படி கரும்பு போட்டிருப்பதாக கணக்கு காண்பித்து விட்டால் என்ன செய்ய முடியும். அதாவது இந்தச் சட்டம் வருவதற்கு முன்பிருந்தே கரும்பு போட்டுக் கொண்டிருப்பதாக கணக்குக் காண்பித்து விட்டால் அரசாங்கத்தாரால் என்ன செய்ய முடியும். அதனால் பல சிக்கல்கள் ஏற்படலாம்.

நமது நாட்டில் ஹிந்து ஜாயின்ட் பாமிலி என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. புருஷனும் மனைவியும் சேர்ந்து இருந்தால் முப்பது எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்றும், அவர்கள் பிரிந்திருந்தால் அறுபது எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்றும் இருக்கிறது. குழந்தைகள் உள்பட இருந்தால் முப்பது எக்கர்தான் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. இவர்கள் தலைக்கு 2,500 அல்லது 3,000 ரூபாய்தான் வருமானம் வரும். இதை வைத்துக்கொண்டு அவர்களால் தங்களுடைய குடும்பத்தை நடத்த முடியுமா ? இந்த நிலைமையில் நகரங்களில் உள்ளவர்கள்தான் முன்னுக்கு வருவார்களே ஒழிய கிராமங்களில் இருக்கக் கூடியவர்கள் முன்னுக்கு வருவதற்கு இடமே இல்லை.

அடுத்தபடியாக நஷ்ட ஈட்டைப்பற்றிச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. நஷ்ட ஈடு ஜாஸ்தியாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சிலர் கொடுக்கவே கூடாது என்றும் சொல்லுகிறார்கள். கொடுக்க வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. நிலத்தைப் பறிமுதல் செய்துதான் கொடுக்கக்கூடாது. சட்டத்தைப் பார்த்தால் அதிகாரிகள் சொல்லுகிற அளவில் நஷ்ட ஈடு கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. பிற்பட்டு டிசைட் பண்ணி கொடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிக் கொடுப்பதாக இருந்தால் ஜாஸ்தி பணம் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் இருக்கும். தீர்வையை எடுத்துக்கொண்டு அதை விடப் பத்து அல்லது இருபது மடங்கு என்று கொடுக்கலாம். சாதாரணமாகத் தீர்வை பத்து ரூபாய் கட்டினால் அதற்கு இருபது மடங்கு, அதாவது 200 ரூபாய் என்று வரும். இப்படி 200 ரூபாய் கொடுப்பதுதான் நியாயமாகும். இல்லாவிட்டால் கோர்ட்டுத் தகராறுகள்தான் ஏற்படும். கழுதை தேய்ந்து கட்டெரும்பாகிவிடும். சட்டத்தில் இருப்பது போன்று கொடுப்பது என்று ஆரம்பித்தால் கோர்ட்டுக்குச் சென்று ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியதாக ஆரம்பித்தால் கடைசியில் அது ஐந்து ரூபாய்க்குக் கொண்டுபோய் விடும். இதைப் போலவேதான் நாம் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் நஷ்ட ஈடு கொடுப்பதைப் பார்க்கிறோம். அது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

கடைசியாக ஒரு வார்த்தை. இதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் இல்லை என்று சொல்லுகிறார்கள். இந்தச் சட்டம் பிரசுரமான தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொல்லப்படுகிறது. அதன் பிறகு நிலத்தை ஒன்றும் செய்ய முடியாது என்றும் சொல்லப்படுகிறது. அது வேண்டாம். இதனால் சர்க்காருக்குப் பெரிய பாரம் ஏற்படும். அனேகமாக எல்லா நிலங்களையும் இப்பொழுது விற்றுவிட்டார்கள். இந்தச் சட்டம் பாஸ் ஆகி அங்கீகாரம் ஆன தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று சொன்னால் சர்க்காருக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்கக் கூடிய பெரிய பாரம் நீங்கிவிடும். நிலச் சொந்தக்காரர்களே விற்றுக் கொள்ளலாம் அதற்குள். அவர்களே அப்படி விற்றுக்கொள்வதற்கு இடம் கொடுக்க வேண்டும். சர்க்கார் பணத்தைக் கொடுப்பதாக இருந்தால் மாதம் இவ்வளவு என்றுதான் கொடுப்பார்கள். ஆனால், அவர்களே விற்றுக்கொண்டால் பணத்தை நேரடியாக வாங்கிக்கொண்டு விடுவார்கள். அதனால் சர்க்காருக்குக் கொஞ்சம் பாரம் குறைந்துவிடும். அதற்கு சர்க்காருக்கு ஆட்சேபணை இருக்காது என்று நினைக்கிறேன். சட்டம் எந்தத் தேதி முதற்கொண்டு அமுலுக்கு வருகிறதோ அந்தத்



19th April 1960] [Sri T. L. Sasivarna Thevar]

தேதி வரையில் விற்றுக்கொள்ளலாம் என்று அனுமதிக்க வேண்டும். அம்மாதிரியே மற்ற மாகாணங்களில் சட்டம் செய்திருக்கிறார்கள். அதைப் போலவே நாமும் செய்யலாம். எனக்குத் தெரியும் எவ்வளவோ பேர்கள் நிலத்தை விற்றிருக்கிறார்கள் என்று. பலர் அடமானமும் செய்திருக்கிறார்கள். பரவலாக விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. பலர்கூடச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் பத்திரம்கூடக் கிடைக்காமல் இருந்தது என்று. பத்திரங்கள் கூடக் கிடைக்காத சந்தர்ப்பம் கூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அமுல் தேதி ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் பெருத்த பாரம் அரசாங்கத்திற்குக் குறையும். கனம் அமைச்சர் இதை ஒத்துக்கொள்ளுவார் என்று 11.30
நினைக்கிறேன். அப்படி ஒத்துக்கொண்டால் அது ஒரு நல்ல காரியமாகும். அப்படிச் செய்தால் அதை நான் வரவேற்கிறேன். a.m.

இரண்டாவதாகச் சிலவற்றிற்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது அதற்கு அவசியம் இருக்கிறது, சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்டவரையில் அதற்கு சொந்தமான நிலங்களுக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல எங்கள் பகுதியில் தங்கள் நிலத்தில் சில பேர் பல காலமாகக் கரும்பும் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கும் விதி விலக்கு அளிக்கப்படுமா ? இன்னும் கால்நடை சம்பந்தமட்டில் அதன் வளர்ச்சிக்கு நிலம் ஒதுக்க வேண்டுவது அவசியம். சில குறிப்பிட்ட பேர்களைத் தவிர. மற்றவர்களும் கால்நடை வளர்ச்சிக்காக நிலம் ஒதுக்கித் தர வேண்டுமென்றால், அதற்கும் நிவாரணம் அளிக்க வேண்டும். இதற்கெல்லாம் ஒதுக்கிவிட்டு 30 எக்கர் வைத்துக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் அது தவறு என்று ஞாபகப்படுத்துகிறேன். இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துவிடுகிறேன்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR:** கனம் சபாநாயகர் அவர்களே, நில உச்ச வரம்பு மசோதாவைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன் " எக்கநாமிக் ஹோல்டிங் " என்ன என்பது நிர்ணயம் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ரெவின்யூ மந்திரி அவர்கள் கொடுத்த கடிதத்தில் அல்லது ஸ்டேட்மென்டில் **In order to arrive at a decision as to the level of ceiling to be adopted, statistics of holdings were collected from the Agricultural Income-tax Department records for each district** என்று கண்டிருக்கிறது. இப்போதிருக்கிற வருவாயைக் கவனிக்கும் போது எக்கநாமிக் ஹோல்டிங்ஸ் என்ன என்பது தெரியாமல் எக்கர் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. பல மாகாணத்தில் இந்தமாதிரிச் சட்டம் கொண்டுவந்திருப்பதை அனுசரித்து இப்படிச் செய்திருக்கிறார் **Statement of Objects and Reasons**-ல் **for reducing the glaring inequalities in land holding** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்திப் பெருக்குவதற்காக இந்த மசோதா கொண்டுவந்திருப்பதாக உணவு மந்திரி சொல்லுகிறார். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத கொள்கையாக இருந்துகொண்டிருக்கிறது. உச்ச வரம்பு அவசியம்தான். அதனால் உணவு உற்பத்தி பாதிக்காது. அதிக உணவு உற்பத்தி ஏற்படுமா என்பதைக் கவனிக்கவேண்டிய விஷயம். இடத்திற்கு இடம் உற்பத்தி மாறுபடுகிறது. ஆகவே உற்பத்தியையும் கணக்கில் கொண்டு வரம்பு கட்டுவது அதாவது, **Thirty acres of land or land yielding an annual income of Rs. 5,400** என்று போடுவது சரியாகவிருக்கும். ஆந்திராவில் கூட 30 எக்கர் அல்லது 5,400 ரூபாய் வரும்படி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். புஞ்சையை எடுத்துக்கொண்டால் சிலவிடங்களில் நல்ல வரும்படி வருகிறது. ஆகவே வரும்படியைக் கணக்கிட்டு நாமும் எடுத்துக்கொண்டால் நலமென்று நினைக்கிறேன்.

" லாண்ட் ரெவினியூ பேசிஸில் " ஸ்டாண்டர்ட் எக்கர் என்பதற்கு வியாக்கியானம் ஒன்றும் காணவில்லை. **Land Revenue according to the Madras Act of 1948** என்று கணக்கெடுத்துக் கொண்டு செல்கிறார்கள். இப்பொழுது

[Sri A. R. Subbiah Mudaliar] [19th April 1960

இருக்கிற நிலைமையில் லாண்ட் ரெவினியூ பேசிஸில் செய்வது நலம் என்று நினைக்கிறேன். இன்னும் அநேக இடங்களில் செட்டில்மெண்டும் ஆக வில்லை. ஆகவே ஜமீன் ஒழிப்புக்கு முன் என்ன தீர்வை விதிக்கப்பட்டு வந்ததோ அந்த அடிப்படையில் செய்யலாம். அதோடு ஸ்டாண்டர்ட் எக்கர் 1-1/6 என்பதாக போன்ற விவரங்கள் வைத்திருப்பது பொறுத்தமில்லை. ஒரிசா மாகாணத்தில் நீர்ப்பாசன அடிப்படையில் **standard acres** நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். அதாவது **"perennially irrigated land" means land which receives supply of water from any source of irrigation for more than one crop in an agricultural year. "Seasonally irrigated land" means any land which receives supply of water from any source of irrigation for one crop in an agricultural year.** இந்த அடிப் படையில் ஸ்டாண்டர்ட் எக்கர் நிர்ணயம் செய்வது நல்லது என்று நினைக் கிறேன். அடுத்தபடியாக கிராப் இன்சூரன்சு தேவை. அதுவும் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும்போது. நிலவரும்படி இல்லாமல் பாதிக்கப்படக்கூடிய வருடங்கள் வந்து விட்டால் விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படும். ஆகவே லாண்ட் ஸீலிங் கொண்டுவரும்போது கிராப் இன்சூரன்சு சேர்த்து கொண்டுவந்தால் விவசாயிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நஷ்டயீடு கொடுப்பது இண்டர்மீடியருக்கும் இருப்பது சரியல்ல. **Tenants and landowners** இவர்களுக்கு பகிர்ந்து கொடுப் பது முறையன்று என்று நினைக்கிறேன். லிமிடெட் ஓனர் சம்பந்தமான வியாக்கியானம் சரியாக இல்லை. அதை விரிவுபடுத்தி பேசவேண்டுமானால் போதுமான நேரம் இல்லை. சிறு நிலச்சுவான்தாரர்களுக்கு சம்பந்தமாக விதி விலக்கு சரியாக கொடுக்கப்படவில்லை. சாதாரணமாக 50 ரூபாய் சம்பளம் வாங்குகிறவன் கூட ப்ரொபேஷன் டாக்சு கட்டுகிறான். 5,000க்குள் வியாபாரம் செய்கிறவன் சேல்ஸ் டாக்ஸ் கட்டுகிறான். அப்படி உள்ள சிறு நிலச்சுவான் தாரர்களுக்கு இந்தச் சட்டம் பாதிக்கிறது. அவர்களுக்கு அவசியம் விதி விலக்கு கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் கஷ்டமேற்படும். அதேமாதிரி பர்சனல் கல்டிவேஷன் சம்பந்தமாய் சொல்லப்பட்ட வியாக்கியானம் பொருத் தமாக இல்லை. இதைக் கவனித்து தளர்த்தவேண்டும். தோப்பு, பிளான் டேஷன் இவைகளுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நம் நாட்டுக்கு தென்னந்தோப்பு அவசியம். விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால் பலருக்கு விருத்தி செய்ய உற்சாகம் ஏற்படும். செக் ஷன்கள் 58, 63-ஐ பார்த்தால் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. நியாயவார சட்டப்படி நடக்க வேண்டும் என்று இருக்கிறது. இன்னொரிடத்தில் லைப் வரையிலும் பயிரிடுவோர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது என்று இருக்கிறது. ஆர்.டி.ஒக்களிடம் எவிக்ஷன் பெட்டிஷன் ஏராளமாக இருந்துகொண்டிருக்கிறது. **Pro-landlord**-ஆக **R.D.O.** போன்ற அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். இந்த சட்டம் வந்து விடும் காரணத் தினால் ஒரு தவணையில் செலுத்த தவறிவிட்டாலும் கூட விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி விடுவார்களென்ற பயம் இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் வரையில் இப்போதிலிருந்தே எவிக்ஷன் பெட்டிஷன்களையெல்லாம் நிறுத்தி வைக்கவேண்டுமென்ற உத்தரவை சர்க்கார் அதிகாரிகளுக்கெல்லாம் அனுப்பி வைக்கவேண்டும் அப்போதுதான் காங்கிரஸ் கொள்கைப்படி விவசாயிகளுக்கு நன்மை செய்ய வழி ஏற்படும். இல்லாவிட்டால் விவசாயி சட்டப்படி, ஐக்கோர்ட்டுக்கு தான் வந்து தன் கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும். இதற்கு இடமில்லாமல் **Executive instruction** போடும்படியாக கேட்டுக்கொள்ளு கிறேன். அத்துடன் கிரேசிங்குக்காக நிலம் ஒதுக்கப்பட்டிருப்பதை மனமார வரவேற்கிறேன். கால்நடை அபிவிருத்திக்கு இது மிகவும் அவசியம். நஷ்ட யீட்டை எடுத்துக்கொண்டால், சர்க்கார் கொடுக்கவேண்டுமென்று கண்டிருக் கிறது. எவ்வளவு தொகை சர்க்கார் கொடுக்கவேண்டும் என்று கணக்கு தெரியவில்லை. ஆகையால் நஷ்டயீடு சம்பந்தமாக நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவின்படி நிலம் யார் அடை கிறார்களோ அவர்கள் பணத்தை இரண்டு அல்லது ஐந்து தவணைகளில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வது நல்மாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி இல்லாமல் சர்க்காரே நஷ்டயீட்டைக் கொடுக்கவேண்டுமென்று



19th April 1960] [Sri A. R. Subbiah Mudaliar]

வந்தால் கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்க வேண்டிவரும். அதனால் சர்க்கார் பொதுஜனங்களுக்கு செய்ய வேண்டுமென்ற மற்ற காரியங்களுக் கெல்லாம் தடை ஏற்படும். ஆகையால் குடிகளே காம்பென்சேஷன் கொடுப்பது நலம் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளு கிறேன்.

* SRI T. SAMPATH : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். காரணம் என்ன வென்றால் மிராஸ்தார்களும், நிலச்சுவாந்தார்களும் ஒரு சுரண்டல் கும்பல் என்று தவறாக பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. நேற்று கூட ஒரு இரண்டு அங்கத்தினர்கள் இதைப் பற்றி சபையிலே குறிப்பிட்டார்கள். முதலில் இந்த மசோதா விரைவிலே வரவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டவன் நான். ஆனால் இந்த மசோதாவில் சொத்து பாத்தியதை பற்றி குறிப்பிடுவதால் இதை நன்றாகப் பரிசீலனை செய்து சட்டமாக்க வேண்டு மென்று குறிப்பிட விரும்புகிறேன். கனம் உணவு அமைச்சர் அவர்கள் கூட இதில் குறைகள் இருந்தால் அவைகளை அரசாங்கம் நன்றாகக் கவனி க்கும் என்று சொன்னார்கள். இது ஒரு மகிழ்ச்சிக்குறிய விஷயம். நேற்று பேப்பரிலே நம் நாட்டின் ஒரு தலை சிறந்த தலைவர் இந்த மசோதா சம்பந்த மாக குறிப்பிட்டக் கருத்து நம்மிடையே ஒரு பரபரப்பை உண்டு பண்ணு கிறது; இந்த மசோதா அரசியல் சட்டத்திற்கு முரணானது இல்லையா என்ற ஒரு பிரச்னையை கிளப்பி விட்டிருக்கிறது. இந்த மசோதா அரசியல் சட்டத்திற் குப்புறம்பாக இருக்குமா என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது. ஆகையால் நேற்று நானும் எனக்கு முன்னால் பேசிய நண்பர் லாஸர் அவர்களும் இந்த மசோதாவை நன்றாக ஆராய்ந்து அரசியல் சட்டத்திற்கு முரணா னதாக இருக்கிறதா என்று புரட்டிப் புரட்டிப் பார்த்தோம். இப்போது லாஸர் சொன்னது மாதிரி அரசியல் சட்டத்திற்கு முரண் ஆனதாக நிச்சய மாக இருக்க முடியாது என்ற முடிவிற்கு வந்தோம். அரசியல் சட்டத் தின் 31-வது பிரிவில் கண்டுள்ள பப்ளிக் பர்ப்பஸ் என்ற வார்த்தைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு இந்த மசோதா சட்டவிரோதமென்று சொல்லக் கூடாது, அரசியல் சட்டத்தின் 19, 31, 38, 39 பிரிவுகளில் 38, 39, பிரிவு கள் க்ஷேம நல சர்க்கார் அமைப்பதற்கு வேண்டிய விஷயங்களைக் குறிப்பிடு கிறது. அதில் க்ஷேம நல அரசாங்கத்தை அமைப்பதற்கு ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. 19-வது ஆர்டிக்கிள் உட்பிரிவு 5-வது பிரிவில் லிமிடேஷன் என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் தனிப்பட்ட நபருடைய சொத்துக்களை கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களுடைய சொத்தில் அரசாங்கம் தலையிடுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வழி யில் பார்த்தால் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு இந்த மசோதா முரணாக இருக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இருந் தாலும் பல பிரிவுகளை ஆராய்ந்துப் பார்த்ததில் ஒரு சில பிரிவுகள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கின்றன. ஹிந்து லா, டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட், ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் முதலியவைகளுக்கு சில பிரிவுகளுக்கு முரணாக இருக்கின்றன. பிரத்தியேக சலுகைகளை ஒரு சிலருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன். சில பிரிவுகள் டிஸ்கிருமினேஷனாக இருக்கிறது என்று சொல்ல விரும்பு கிறேன். கனம் லாஸர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்தச் சட்டத்தின் கீழ் பல அதிகாரிகள் பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக் கின்றன. லாண்ட் போர்ட், லாண்ட் டிரிபுனல், லாண்ட் கமிஷனர், சுகர் போர்ட் முதலிய பல ஸ்தாபனங்கள் இதனால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி அமைக்கப்பட்ட டிரிபுனல் அதிகாரிகளின் முடிவுகள் பைனல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. **Civil** கோர்ட்டுக்கு ஜூரிஸ்டிக்ஷன் கொடுக்கப்படவில்லை. கனம் லாஸர் அவர்கள் குறிப்பிட்டார்கள் ஒரு வேளை அரசாங்கம் இந்தக் கோர்ட்டுக்குக் கூட பயப்படுகிறதோ என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில் கோர்ட்டின் அதிகாரத்தை பறிப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். இதை **Ouster of Jurisdiction** என்று சொல்லலாம்

அடுத்தபடியாக இந்த மசோதாவை 16 சாப்டர்களாகப் பிரித்திருக்கிறார்கள். இதில் முதல் சாப்டர் டெபனிஷன் சம்பந்தப்பட்டவை. இதில் டேட் ஆப் தி கமென்ஸ்மெண்ட் ஆப் தி ஆக்ட் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது இந்த மசோதா 6-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது. இந்தத் தேதியிலிருந்து இந்த மசோதா அமுலுக்கு வரும் என்று நான் நினைக்கிறேன். பொதுவாக சட்டங்களுக்கு ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்காமல் இருப்பது நல்லது. அரசாங்கத்தின் நோக்கம் அதுவல்ல என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த மசோதாவில் பிரசுரம் ஆன தேதியில் இருந்து என்று சொல்வதில் ஒரு சங்கடமான நிலைமையை உண்டு பண்ணக் கூடும் நெருக்கடியை உண்டாக்கும். ஆகையால் இந்த மசோதா என்றைக்கு நிறைவேற்றப்படுகிறதோ அந்தத் தேதியில் இருந்து இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மசோதாவில் 33-வது பிரிவில் **R.D.O. or Authorized Officer**-க்கு இந்த நிலச்சுவாந்தார்கள் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு அவர்களுடைய நிலங்களை ஏற்கெனவே பாகப்பிரிவினை அல்லது கிரயம் செய்து விட்டதாக கருதினால் அதை ரத்துசெய்வதற்கும், செல்லுபடியாகாது என்று சொல்லுவதற்கும் அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவ்வாறு 33-வது பிரிவிலே அதிகாரம் கொடுத்திருப்பது ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுப்பதற்கு வழி செய்வது போல் இடம் கொடுக்கிறது. இதனால் வியாஜ்யத்திற்கு அதிகப்படியான விவகாரங்களுக்கும் இடம் கொடுக்கும். ஆகையால் இந்தப் பிரிவை நன்றாக பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்:நபடியாக 34-வது பிரிவை எடுத்துக்கொண்டால் இதில் டேட் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் என்று இருக்கிறது. இது ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டுக்கு முரண்பாடாக இருக்கிறது. இது சட்டப்படி செல்லாது என்று தான் நான் கருதுகிறேன். 43, 44-வது பிரிவுகளை எடுத்துக்கொண்டால் கோவில்களும், தர்ம ஸ்தாபனங்களும் எவ்வளவு நிலங்கள் வைத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடுகின்ற கிளாஸ் ஸ்ரீ லாஸர் அவர்கள் சொன்னபடி இந்தப் பிரிவுகள் அரசியல் சட்டத்தின் 26-வது பிரிவுக்கு முரணாக யிருக்கும் என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தக் கோவில் நிலங்களையும், தர்ம ஸ்தாபன நிலங்களையும், இந்த மசோதாவில் சேர்த்துக்கொண்டால் பெரிய வாதத்திற்கு இடம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக 43-வது பிரிவை எடுத்துக்கொண்டால் இது டிஸ்க்ரிமினேஷன் இருக்கிறது. காரணம் கல்வி சம்பந்தப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுக்கு சலுகைகள் அதிகமாய் கொடுக்கப்படுகின்றன. இந்த ஸ்தாபனங்களுக்கு **ceiling** லிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி போன்ற ஸ்தாபனங்களுக்கும் சிங்கப்பட்டி போன்ற ஸானிடோரியங்களுக்கும் இவ்வித சலுகை கொடுக்க வேண்டும். கல்வி சம்பந்தப்பட்ட தர்மத்திற்கும் மற்றைய தர்மங்களுக்கும் வித்தியாசம் காட்டுவது **discriminatory** யாக இருக்கும். மசோதாவில் 57-வது பிரிவின்படி மிராஸ்தாரர்களுக்கு ஒரு சலுகை கொடுக்கப்பட்டு இருக்கிறது. இத்துடன் கூட 58-பிரிவைச் சேர்த்து இருப்பது சரியல்ல. 58-வது பிரிவிலே குத்தகைகாரர் உழவர்களுக்கு தனிச் சலுகை கொடுத்து அதற்கு மாறுதலாய் அந்தச் சலுகை 63-வது பிரிவில் மறுக்கப்பட்டு இருக்கிறது. மிராஸ்தாருக்கு பண்ணை வைத்துக்கொள்ள கொடுக்கப்பட்ட சலுகை தாராளமாக கொடுக்கப்படவில்லை. **Personal Cultivation** மிராசுதார்கள் விரும்பி நிலங்களை சாகுபடி செய்ய விரும்பினால் ஐந்து ஏக்கர் அளவில் நிலம் எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. மிராசுதார்கள் வருமான வரி, சேல்ஸ் டாக்ஸ், ப்ரொபஷனல் டாக்ஸ் போன்ற வரிகள் செலுத்தினால் இந்த உரிமை அவர்களுக்குக் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியல்ல என்று நான் எண்ணுகிறேன். திருச்சி ஜில்லா, கையேர்வாரந்





தார், மாட்டுவாரந்தார் சட்டத்தில் ப்ரபஷனல் டாக்ஸ் விஷயம் விவாதிக்கப்பட்டு அது தேவையில்லை என்று இந்தச் சட்ட மன்றம் முடிவு செய்தது. இதில் கூட இன்னொரு பாகுபாடு. ஏற்கெனவே பண்ணையில் வைத்த நிலங்களைக் கூட கணக்குக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. அது சரியல்ல. பண்ணையில் இனி விரும்புகிறவர்களுக்கு நிலங்களை எடுத்துக் கொள்ள இந்த ஐந்து ஏக்கர் நிலங்களை, நிபந்தனையில்லாமல் சலுகை கொடுக்கப்பட வேண்டும். அடுத்தாற்போல், 59-வது பிரிவைப் பற்றிச் சில வார்த்தைகள். அது, குடியானவர்களுக்கு ஆயுள் பாத்தியதை கொடுக்கக்கூடிய பிரிவு. இந்த மசோதாவில் இதை சேர்ப்பது சரியல்ல. இந்த உரிமையை அவர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட தருணத்தில் இந்த மாதிரியான பாதுகாப்பு கொடுக்க நாம் யோசனை செய்யவில்லை. கால வரை செய்து தான் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு மாறுதலாக இப்பொழுது இந்தப் பிரிவில் அவர்களுக்கு ஆயுள் கால பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 63-வது பிரிவைப் படித்துப் பார்த்தால் 59-க்கு முரணாகவே இந்தப் பிரிவு அமைந்திருக்கிறது. நஷ்டயீடு சம்பந்தமாக ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். (பெல்) அதிலும் பாகுபாடு. வித்தியாசம் அதில் 5,000 ரூபாய்க்கு வருமானம் வருகின்றவர்களுககு 12 மடங்கு என்றும், அதற்கு அடுத்தாற்போல் அதற்கு மேல் வருமானம் உள்ளவற்றிற்கு 109 மடங்கு என்றும் குறிப்பிடப்பிட்டிருக்கிறது. அது சரியல்ல. நஷ்டயீடு கொடுப்பதில், எல்லோருக்கும் சமமாக கொடுக்கப்படவேண்டும். நஷ்ட ஈடு கொடுப்பதில் வித்தியாசம் காட்டுவது சரியல்ல. அடுத்தாற்போல் விதி விலக்கு. கரும்பு சாகுபடிக்கு ப்ளானிங் கமிஷன் விதி விலக்கு பூராவாக அளித்திருக்கிறார்கள். ஆனால் இங்கு, ஒரு கட்டுப்பாடுடனேயே விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு தனி ஸ்தாபனம், ஷுகர் போர்ட் என்று வைத்து அந்த ஸ்தாபனம் விசாரணை செய்து விதி விலக்கு அளிக்க லாயக்கு உண்டா இல்லையா என்று நிர்ணயம் செய்த பின்னர் தான் கம்பெனிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் நான் ஒன்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நல்ல மாதிரிப் பண்ணைகள் **well maintained farms** இருக்கின்றன. மாதிரிப் பண்ணைகளுக்கும் ஒரு விதி விலக்கு கொடுக்கலாம் என்று தான் நான் கருதுகிறேன்.

**MR. SPEAKER** : டைமாகி விட்டது. [illegible] தாண்டிப் போய் விட்டது. முடித்துக்கொள்ளுங்க[illegible]

**SRI T. SAMPATH** : வீட்டை [illegible] றியுள்ள நிலங்கள் [illegible] இருந்தால் அவைகளுக்கும் ஒரு தனி [illegible] லுகை கொடுக்க [illegible] டும், அவைகளுக்கும் ஒரு விதி விலக்கு [illegible] க்க வேண்டுமென்று [illegible] டுக் கொள்கிறேன். பீஹாரில் இம்மாதி[illegible] ங்களுக்கு பத்து ஏக்கர் [illegible] விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இ[illegible] கூட, மைனர்களையும் [illegible] வை களையும் சேர்த்துக்கொள்ளலாம் என் [illegible] ன் நான் சொல்ல[illegible] ப்படு கிறேன். ஒரு விஷயத்தை மட்டும் [illegible] பிட்டு விட்டு முடி[illegible] கொள் கிறேன். (மணியடிக்கப்பட்டது). 84-வ[illegible] உபரி [illegible] எப்படி விநியோகப்படுத்துவது எப்படி பிரித்துக்கொ[illegible] எவ்வளவு உபரி நிலம் கிடைக்கும், எப்படி அதை விந[illegible] போகிறார்கள் என்பது போன்ற விஷயங்கள் சொல்லப்படவேயில்லை. [illegible] டத்தில் சொல்வது தான் சரியென்று நினைக்கிறேன். விதிகளில் அமைப்பது சரியல்ல. மேலும் விதிகளைப் பின்பு அமைத்து 100-வது பிரிவில் இந்த 84-வது பிரிவு படி ஏற்படுத்தக்கூடிய விதிகளை சட்டமன்றத்தில் வைக்க தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சரியல்ல.

Clause 101 says—

'All rules made under this Act other than those made under section 84 and all orders made under section 100 shall, as soon as possible after they are made, be placed on the table of both the Houses of the Legislature . . .'

(The hon. Member had not concluded his speech when the Hon. Speaker rang the time bell and called on Sri A. Govindasamy to speak.)

SRI A. GOVINDASAMY : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகிற மசோதா, 1952-லே காங்கிரஸ் கொடுத்த தேர்தல் விக்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டு இந்தச் சட்டம் உடனடியாக வரும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் இது பற்றி கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் புலி வருகிறது மாதிரி ஒரு நாள் திடீரென்று வருமென்று ரெவின்யு அமைச்சர் சொல்லி வந்தார்கள். அந்தப் புலி வெளியே வர எட்டு வருடங்களாகியிருக்கிறது. அது எப்பேர்ப்பட்ட புலியாகயிருக்கும் என்பது பற்றி விவசாய அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். புலித் தோல் போர்த்திய பசுவாக இருக்குமென்று. அப்படியே வந்தாலும் பரவாயில்லை என்று எதிர்பார்த்தோம். பசு வந்தால் ஏழை விவசாயிகளுக்காவது நல்ல பால் கொடுக்குமே என்று அதை எதிர்பார்த்தோம். ஆனால் பசுவிற்குப் பதிலாக காளை தான் வந்திருக்கிறது. காளையைக் கொண்டு உழுது, உழுது உழைக்கிறவன் என்றென்றும் கூலியாகவே இருக்கக்கூடிய அளவிற்குத் தான் இந்தச் சட்டம் உதவுகிறது என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிலச் சட்டம் வருகிறது, வருகிறது என்று சொல்லி வந்தது. நமது சர்க்கார் நடத்தும் பஸ்களில் திருடர்கள் ஜாக்கிரதை, ரெயிலில் திருடர்கள் ஜாக்கிரதை என்று எழுதியிருப்பது மணிபர்ஸ் வைத்திருப்பவர்களை ஜாக்கிரதைப் படுத்த நினைப்பதோடு, திருடர்கள் உஷாராயிருக்க வேண்டுமென்று எச்சரிப்பது போல் இருந்தால், தங்களிடமுள்ள நிலங்களை எல்லோரும் பரவலாக பிரித்துக் கொண்டு விட்டார்கள். தஞ்சையில் ஒரு தனிப்பட்ட விவசாயி லட்சம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கினார் என்ற செய்தி அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்தது. ஆனால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தச் சட்டம் பிரேரேபிக்கப்பட்ட தினம் 6-4-60 இது அமுலுக்கு வருமென்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். உங்களுக்கு தைரியம் இருந்தால் 1952-லிருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வருமென்று சொல்லக்கூடாதா ? அப்படி சொல்லுவதின் மூலம் ஒன்றுக்கு மூன்று மடங்கு ஏழை விவசாயிகள் பயனடைய உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று வியாக்கியானம் செய்த அந்நிலை வரக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்க உங்களுக்கு ஏன் தைரியம் இல்லை என்று நான் ஆட்சியாளர்களைக் கேட்க விரும்புகிறேன். இந்த, சட்டத்தை எதிர்கட்சியில் இருக்கிற சுதந்திரக் கட்சி தான் எதிர்க்கும். அவர்களை, உங்கள் கொள்கை என்னவென்று நிதியமைச்சர் அவர்கள் இங்கு அடிக்கடி கேட்டார்கள். ஆனால் ஆளும் தரப்பிலிருந்தே இரண்டு வித கருத்துக்கள், கொள்கைக் குழப்பங்கள் வந்ததை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. பழம் பெறும் காங்கிரஸ் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசியபோது உண்மை விவசாயியின் குரல் அதில் தொனித்தது. ஆனால் புதிதாக காங்கிரஸில் சேர்ந்தவர்கள், நிலச் சொந்தக்காரர்களுக்காக வாதாடுவார்கள் என்பது, கரிய கௌண்டர் பேசும்போது நல்ல முறையில் தொனித்தது. அது மட்டுமல்ல, காங்கிரஸ் தரப்பில் பேசிய கும்பகோணம் உறுப்பினராக இருந்தாலும் சரி, பட்டுக்கோட்டை உறுப்பினராயிருந்தாலும் சரி, அல்லது திருப்பூர் உறுப்பினராக இருந்தாலும் சரி அவர்கள் மிராஸ்தார்கள் பக்கம் பேசினார்கள். சீர்காழி உறுப்பினர் முத்தையா, மணி, மாயவரம் உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் ஏழைகள் சார்பில் இங்கு பேசினார்கள். முத்தையா அவர்களின் கருத்து இங்கு பிரதிபலிக்கும் அளவுக்கு அமைச்சர் அவர்களுக்கு தைரியம் இருந்தால் இச்சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும். இந்தச் சட்டத்தை சிரசாக்கினை செய்யவேண்டுமென்ற முறையில் மாயவரம் நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசினார்கள். முழுக்க முழுக்க இதை தலைகீழாக மாறுதல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயிக்கும்போது, விவசாய வருமான வரிபோடுகிறபோது எட்டு ரூபாய் வரி



அடிப்படையில் வைத்து 12½ ஏக்கர் ஸீலிங் வைத்தார்கள். ஏன் இந்த உச்ச வரம்பு நிர்ணயிக்கும்போது 30 ஏக்கர் என்றும் ரூ 10 தீர்வை அடிப் படையில் நிர்ணயிக்க வேண்டும், மாற்றவேண்டும் என்று கேட்கிறேன். 12½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றும் எட்டு ரூபாய் வரி என்றும் வைத்தால் ஒன்றுக்கு மூன்று மடங்கு ஏழை விவசாயிகள் பயனடைவார்களே. ஏன் அந்தத் தைரியம் அரசாங்கத்திற்கு வரவில்லை என்று கேட்கிறேன். புள்ளிவிவரங்களை அள்ளி அள்ளி வீசுகிறவர்கள் இங்கு புள்ளி விவரம் கொடுக்கவில்லை. எவ்வளவு நிலம் இருக்கிறது, 30 ஏக்கர் என்று ஸீலிங் வந்த பிறகு எவ்வளவு நிலம் உபரியாகும். உபரி நிலத்தினால் பயனடையும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றியெல்லாம் கணக்குகள் கொடுக்காததன் மர்மம் என்ன? நில அமைச்சர் அவர்கள் இது பற்றி தெளிவாக கூற வேண்டும். அதைச் சொல்லாததற்கு காரணம் இந்த அரசாங்கம் மிராசுதாரர்களைக் கண்டு பயப்படுகிறது என்று தைரியமாகச் சொல்ல முடியும். ஒரு சில தனிப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் பயந்து கொண்டு தான் தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம், கரும்புப் பயிரிட்டு பரவலாக நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற பாரி கம்பெனி, வெள்ளைக்கார கம்பெனிக்கு பயப்படும் நிலையில் தான் இந்த அரசாங்கம் இருக்கிறது என்று எனக்கு துணிச்சலோடு கூற முடியும். புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கிற, தஞ்சாவூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற சர்க்கரை ஆலைக்கு பாது காப்புக் கொடுக்க வேண்டுமென்று நோக்கத்தோடு இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. கரும்பு சாகுபடியை நல்ல முறையில் விருத்தி செய்து நல்ல முறையில் அதிக உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்பதில் எனக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

ஆனால் இங்கே வாதாடிய பட்டுக்கோட்டை உறுப்பினர் அவர்கள் இதன் காரணமாக சர்க்கரை உற்பத்திக்கு தடை ஏற்[illegible] என்றெல்லாம் சொன்னார்கள். அவ்விதம் ஒன்றும் ஏற்பட[illegible] செய்துக் கொடுப்பதின் மூலம்தான் உற்பத்தி பெ[illegible] என்பதை நான் சந்தேகமில்லாமல் தெரிவித்துக்கொள்கிறேன். [illegible]லாமல் வெள்ளைக்கார கம்பெனிகளுக்கு மட்டும் பரவலாக எவ்[illegible] வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் இந்த அரசாங்கம் கரும்பு விவசாயத்தில் 12-00 noon. ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறதா அல்லது வெள்ளைக்கார முதலாளிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கிறதா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். விவசாய வருமான வரி போட வேண்டும் என்று தீர்மானித்தபோது காப்பித் தோட்டங்களையும், தேயிலைத் தோட்டங்களையும் சேர்த்துக்கொண்டார்கள். அப்போது 3,600 ரூபாய் வருமானம் பெறுகின்றவர்கள் வரி கட்ட வேண்டும் என்று நாம் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இப்போது மட்டும் ஏன் இந்த காப்பித் தோட்டங்களுக்கும், தேயிலைத் தோட்டங்களுக்கும் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். இவ்விதம் தேயிலைத் தோட்டங்களுக்கும், பாக்குத் தோட்டங்களுக்கும் விதிவிலக்கு கொடுக்கிறது என்று சொன்னால், இந்த சர்க்கார் பாக்குத் தோட்ட முதலாளிகளுக்கும், தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கும் பயந்துகொண்டுதான் இந்தச் சர்க்கார் சட்டம் கொண்டு வருகிறதா என்பதை கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் ஒரு போகம் விளையக் கூடிய நிலங்கள், இரு போகம் விளையக்கூடிய நிலங்கள் என்றெல்லாம் வகுக்கப்பட்டிருக்கிறது, அதோடு நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களைப்பற்றியும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் நஷ்டஈடு கொடுக்கும் விஷயத்தில் எங்கள் தரப்பில் இருந்து பேசிய கனம் செல்வராஜ் அவர்கள் நெய்வேலிக்கு ஒரு சட்டமும், இங்கே ஒரு சட்டமும் என்று ஏற்படுத்துவது சரியா என்றுதான் கேட்டார்.

ஹைகோர்ட்டு தீர்ப்புப்படியும் இதை நாம் பார்க்க வேண்டும். 53-லியே இந்த சட்டம் வந்தது, அதே நேரத்தில் 47-வது ஆண்டிலேயே பல திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. இதையெல்லாம் ஒத்திட்டுப் பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இப்போது சொல்லப்பட்டிருக்கும் நஷ்டஈடு,

[Sri A. Govindasamy] [19th April 1960

எவ்வளவு இருக்கிறது என்பதை பார்த்து நிச்சயமாக ஏழை மக்கள் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த மசோதா, மீண்டும் செலக்ட் கமிட்டிக்குப் போகவிருக்கிறது. காங்கிரஸ் தோன்றிய காலத்திலிருந்தே பல வருடக் கணக்காக இந்த சட்டம் கொண்டு வரப் போவதைப்பற்றி பரிசீலனை செய்துகொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது. ஐந்து கமிட்டிகள் இதற்கு முன்னால் இதைப்பற்றி பரிசீலனை செய்திருக்கிறது. ராகாவேந்திர ராவ் கமிட்டி, சுப்பிரமணியம் கமிட்டி, இன்றும் திட்ட கமிஷன் போன்ற எத்தனையோ கமிட்டிகள் இதைப்பற்றி பரிசீலனை செய்த பிறகும் இப்போது திரும்பவும் செலக்ட் கமிட்டிக்கு போகிறது என்று சொன்னால் இன்னும் இதை எதிர்ப்பவர்களுக்கு, அவ்விதம் எதிர்ப்பவர்கள் இன்னும் அந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள். சுதந்திரக் கட்சியில் போகக்கூடியவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்குத்தான் முயற்சி செய்யப்படுகிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இன்னும் எவ்வாறு எல்லாம் இதை எதிர்ப்பவர்களுக்கு தற்காப்பு கொடுக்கலாம், இந்தச் சட்டத்தை இன்னும் எவ்வளவு கால தாமதப்படுத்தலாம் என்று யோசிக்கிற அளவுக்கு இன்றைக்கு இது செலக்ட் கமிட்டிக்கு போகவிருக்கிறது. இதில் 45 அங்கத்தினர்கள் போடப்போகிறார்கள். இந்தக் கமிட்டியில் பெரிய மிராசுதார்களை எல்லாம் போட்டுவிடாதீர்கள் என்று சொன்னார்கள் பல அங்கத்தினர்கள். இவ்விதம் சொன்னவர்கள் அந்தப் பக்கத்தில் இருக்கும் மாயவரம் உறுப்பினர் நாராயணசுவாமி அவர்கள் கூறினார்கள், பெரிய மிராசுதார்களை இதில் போடாதீர்கள் என்று. ஆளுகின்ற கட்சிக்குத்தான் இந்த கமிட்டியில் மெஜாரிட்டி இருக்க முடியும். ஏனென்றால் இந்த சபையிலிருந்து போடக்கூடிய 30 அங்கத்தினர்களில் 20 பேர்கள் ஆளும் கட்சியை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இதில் அதிகப்படியாக மிராசுதார்களாக இருந்தால் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புக்கள்தான் இருக்கும் என்று எண்ணுகின்ற காரணத்தால்தான் ஏழை மக்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக ஏதாவது நன்மை கிடைக்குமா என்று சந்தேகம் ஏற்படுகின்றது. மிராசுதார் தரப்பிலேயே தாம் பேசுவதாக கனம் சம்பத் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்தக்கூடாது என்ற முறையில் திருப்பூர் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறினார்கள். கூட்டுறவு முறையில்தான் நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை நமது விவசாய அமைச்சர் அவர்களுக்கு கிடையாது. அதே நேரத்தில் கூட்டுறவு முறையில்தான் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை கனம் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களுக்கு. இரண்டையும் நாம் இங்கு பார்க்கிறோம். ஒரே தினத்தில் இந்த இரண்டையும் நாம் இங்கு பார்த்தோம். அதோடு உபரியாக இருக்கும் நிலங்களை என்ன செய்வார்கள் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இதில் எத்தனை ஏக்கர் நிலம் உபரியாக கிடைக்கும் என்று இதில் சொல்லப்படவில்லை. நாங்கள் வேறு வழியில் விசாரித்த பொழுது சுமார் இரண்டு லட்சம் ஏக்கர்கள் கிடைக்கும் என்று தெரிகிறது. இந்த நிலங்கள் ஏழைகளுக்கு அல்லது உழுபவனுக்கே நிலம் என்ற அடிப்படையில் கொடுப்பதற்கு உறுதி சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். அல்லது வேறு எந்த அடிப்படையில் இதை கொடுக்கப்போகிறார்கள் ? இதைத்தவிர குத்தகைகாரர்கள் இருக்கமாட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மையில் இந்த நிலைமை ஏற்படும் என்று அந்த தரப்பில் இருக்கின்றவர்கள் சொன்னார்கள். ஏழை மக்களுக்கே கொடுக்க வேண்டும் என்று தஞ்சாவூர் காங்கிரஸ் அங்கத்தினர் ராமாமிருத தொண்டைமான் அவர்கள் குறிப்பிட்டதை நாம் ஞாபகப்படுத்திப் பார்க்கவேண்டும். ஆனால் அந்தத் தரப்பிலேயே இருக்கின்ற கனம் மகாலிங்கம் போன்றவர்கள் சர்க்கார் திட்ட கமிஷன் கருத்துக்களையும் மீறி நல்ல முறையில் இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதாக வாதம் செய்கின்றார், அதைப் பார்த்து உண்மையிலேயே நான் வருந்துகின்றேன். இந்தத் தரப்பிலிருந்து 10 ஏக்கர் அல்லது 15 ஏக்கர் என்று உச்ச வரம்பு கொண்டு வாருங்கள் என்று கேட்டு வாதாடுகின்ற நேரத்தில் ஏன் வீடுகளுக்கு வரம்பு கட்டக்



19th April 1960] [Sri A. Govindasamy]

கூடாது, ஏன் சினிமாக்களுக்கு வரம்பு கட்டக்கூடாது, ஏன் சினிமா கதை எழுதுபவர்களுக்கு வரம்பு கட்டக்கூடாது என்று கேட்கப்பட்டது அந்த தரப்பிலிருந்து. உண்மையில் நாங்கள் மனமார வரவேற்கிறோம். வீடுகளுக்கும் உச்ச வரம்பு, வருமானத்திற்கு உச்ச வரம்பு, சினிமாக்களுக்கு உச்ச வரம்பு என்று கொண்டு வர தைரியமிருக்குமானால் நீங்கள் கொண்டு வாருங்கள். அதே சமயத்தில் இம்மாதிரிப்பட்ட எல்லா தொழில்களுக்கும் பஸ் தொழிலையும் தேசியமயமாக்குவோம் என்று நீங்கள் திடமாக சொல்ல வேண்டும். இன்றைக்கு பஸ் தொழிலை தேசிய மயமாக்கவேண்டும் என்று சொன்னால் அந்தப் பக்கத்தில்தான் எதிர்ப்பு இருக்கிறது. காரணம் பஸ் முதலாளிகள் அதிகம் அந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள், சினிமாவை எடுத்துக்கொண்டாலும்கூட, சினிமா கொட்டகை] நடத்துகின்றவர்கள் அந்தப் பக்கத்தில்தான் இருக்கிறார்கள், சினிமாவுக்கு கதை எழுதுகின்றவர்கள்தான் இந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள். ஆகவே எந்த தொழிலை எடுத்துக்கொண்டாலும் சரி, தேசிய மயமாக்குவதில் நாங்கள் என்றைக்கும் விரோதமாக இருந்ததில்லை, இதை எங்கள் கட்சித் தலைவர் அவர்கள், இதே மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் கடைசியாக அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது என்னவென்றால், கனம் அமைச்சர் அவர்கள் இந்த பிரச்னையில் கொஞ்சம் கொழ கொழ என்று இருக்காமல், கொஞ்சம் தைரியமாக இருக்க வேண்டும். மிராசுதார்கள் என்ன சொன்னாலும் சரி, நான் ஏழைகள் பக்கத்தில்தான் இருப்பேன், அவர்களுக்கு வேண்டிய பாடுபட்டு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் இதை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, செலக்ட் கமிட்டியில் இதில் வேண்டிய திருத்தங்களை செய்து இதை நல்ல முறையில் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **SRIMATHI A. S. PONNAMMAL** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த உச்ச வரம்பு சட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த சட்டமானது, இந்த நாட்டிலுள்ள ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதோடு பழுதில்லாமல் காங்கிரஸ் கொள்கையை ஏற்படுத்திய நிர்மாண திட்டங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதோடும் மட்டுமில்லாமல், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில், இந்த நாட்டில் உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் இருக்கக்கூடாது, அந்த நிலையில்லாத ஒரு சோஷலிஸ சமுதாயத்தை நிறுவ வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத்தில் ஒவ்வொரு குடும்பமும் 30 ஸ்டான்டர்டு ஏக்கர்கள் வைத்துக்கொண்டு இருக்கலாம் என்று இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் பொதுவாக வரவேற்றபோதிலும், இதில் குறிப்பிட்டிருக்கிற 30 ஸ்டான்டர்டு ஏக்கர் என்றிருப்பதை இன்னும் சற்று குறைவான அளவில் கொண்டு வந்திருந்தால் இன்னும் திருப்தியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இதைப்பற்றி பேசிய ஒரு சில அங்கத்தினர்கள், இப்போது இந்த நாட்டில் பலர் வைத்திருக்கும் நிலம் எல்லாம் அவர்கள் பரம்பரை பரம்பரையாக வைத்திருக்கக்கூடிய சொத்துக்கள், அவைகளுக்கு எல்லாம் உச்ச வரம்பு கட்டுவது என்பது நியாயமான காரியம் அல்ல என்ற முறையிலும் பேசினார்கள். அவர்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்வது, இவர்கள் எல்லாம் முன் காலத்தில் எங்கேயிருந்து இந்த நிலத்தைக் கொண்டு வந்தார்கள் ? வெள்ளைக்காரர் காலத்தில் யாரெல்லாம் அதிகமான அளவில் கிஸ்தி செலுத்தக்கூடியவர்களாக இருந்தார்களோ அவர்கள் தங்கள் தங்கள் பெயரில் நிலங்களை பட்டா போட்டு வைத்துக் கொண்டார்கள். இவ்விதம் அதிகமாக வைத்திருக்கின்றவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து, இந்த நாட்டில் ஏழைகளாக இருக்கின்ற மக்களுக்கு கொஞ்சம் கொடுத்து, அதன் மூலம் இந்த நாட்டில் உற்பத்தியை பெருக்கி, இந்த நாட்டில் பெருவாரியான அளவில் இருக்கின்ற ஏற்றத்

[Srimathi A. S. Ponnammal] [19th April 1960

தாழ்வைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அரசாங்கம் இதைக் கொண்டு வந்திருக்கிறது. மேலும் இந்தச் சட்டத்தின் மூலம் மக்கள் மத்தியில் பெரும் குழப்பம் அடைந்திருக்கிறார்கள் என்றும் பூச்சாண்டி காட்டிப் பேசினார்கள் சிலர். வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்டு கொண்டிருந்த காலத்திலும் சிலர் மகாத்மா காந்தி அவர்களிடத்தில், வெள்ளைக்காரர்கள் பெரிய பெரிய துப்பாக்கிகள் எல்லாம் வைத்திருக்கிறார்களே, பலம் பொருந்திய வெள்ளையனை எதிர்த்தால் மக்கள் நிலை என்ன ஆவது, அதோடு நாடு சுதந்திரம் அடைந்தால் ஆளும் திறன் இல்லையே என்றெல்லாம் கூறினார்கள். இப்பேர்ப்பட்ட பேர்வழிகளுக்கு காந்திஜி கூறினார், என் பாரத நாட்டு மக்களின் சக்தியெல்லாம் 24 மணி நேரம் ஒன்று சேருமானால் ஒரு சிறிய கைத் துப்பாக்கிக்கூட இல்லாமல் வெள்ளையனை வெளியேற்ற முடியும் என்று கூறினார். அம்மாதிரியே மக்களின் சக்தி ஒன்று சேர்ந்ததால் வெள்ளைக்காரர்களை வெளியேற்ற முடிந்தது. அம்மாதிரி ஏழை மக்களின் சக்தி, பாட்டாளி மக்களின் சக்தி எல்லாம் ஒன்று சேர்ந்து உழுபவனுக்கே நிலம் வேண்டும் என்ற எழுச்சி ஏற்படுவதற்கு முன்பாக சமயோசிதமாக காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்துள்ள இச் சட்டத்தை ஏழை மக்களின் சார்பில் வரவேற்கின்றேன். அதோடு இன்னும் சிலர் பேசுவதைப் பார்த்தால் இங்கே சுதந்திரா கட்சி அங்கத்தினர்கள் என்ற முறையில் பேசுகின்றார்களா, அல்லது ஜனநாயகக் கட்சி அங்கத்தினர்கள் என்ற முறையில் பேசுகின்றார்களா, என்ற நிலை எங்களுக்கு விளங்கவில்லை. மன்றத்திற்குள்ளே ஒருவிதமாகவும் மக்கள் மத்தியில் ஒருவிதமாகவும் நடந்து கொள்வது விந்தையாக இருக்கிறது. இப்போது நிர்ணயித்து இருக்கும் நஷ்ட ஈடானது மிகவும் அதிகம் என்றுதான் எங்களைப் போன்றவர்கள் கருதுகின்றோம். காரணம் லூயி பிஷப் என்ற ஆங்கிலேயன் காந்திஜீ அவர்களிடத்தில் சுதந்திரம் அடைந்தவுடன் விவசாயிகளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு காந்திஜீ கூறினார் யார் யார் நிலத்தில் உழுகின்றார்களோ அவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்படும் என்றார். அதற்கு லூயி பிஷப் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்றால் நிலம் படைத்த முதலாளிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமல்லாவா ? என்று கேட்டார். உடனே காந்திஜீ என்னுடைய ஏழ்மையான நாட்டிலிருந்து எப்படி நஷ்டஈடு கொடுப்பது என்று கூறிமறுத்துப் பேசியிருக்கிறார். ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் காந்திஜீ நஷ்டஈடு கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருந்த போதிலும் இந்த நாட்டில் ஜன நாயகத்தைக் காப்பாற்ற வேண்டும், சர்வாதிகாரம் கூடாது என்ற அடிப்படையில் நஷ்டஈடு கொடுக்க ஏற்றுக்கொண்டிருப்பது வரவேற்கக்கூடிய அம்சமாக அமைந்திருக்கின்றது. ஆனால் இவ்வளவு அதிகப்படியான நஷ்டஈடு கொடுப்பது நல்லதல்ல என்று எங்களைப் போன்றவர்கள் கருதுகின்றோம்.

அதோடு இன்னும் உபரி நிலங்களை ஏற்கெனவே யார் யார் உழுது வருகிறார்களோ அவர்களுக்கே சொந்தமாக்கப்படும் என்று கனம் உள்துறை அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கூறியதை நான் முழுமனதுடன் வரவேற்கின்றேன். ஆனால் ஒரு சில இடங்களில் இப்போது இருக்கக்கூடிய நிலையில் குத்தகை சீட்டு எழுதாமலே குத்தகைக்கு உழுது விவசாயம் செய்து வருகின்றார்கள். அவர்களும் வாழக்கூடிய அளவில் 3 ஆண்டு, 5 ஆண்டு நிலம் உழுது இருக்கின்றனா ? பக்கத்தில் நிலம் உழுபவர்கள் சொன்னால் அதையும் சரி என்று ஏற்றுக்கொண்டு அவர்களுக்கும் நிலம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அதோடு செலக்ட் கமிட்டிக்குப் போகும்போது இவர்களையும் பாதிக்காத அளவில் செய்ய வேடுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக நாம் இந்த உபரி நிலத்தை வினியோகிக்கும்போது தனிப்பட்ட முறையில் வினியோகம் செய்வதைக் காட்டிலும் கூட்டுறவு முறையில் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் நலமாக இருக்குமென்று கருதுகின்றேன். இந்த நாட்டில் கூட்டுறவு முறை கூடாது



19th April 1960] [Srimathi A. S. Ponnammal]

என்று சிலர் இங்கும், வெளியில் கட்சித் தலைவர் ஒருவரும் எதிர்த்து கொண்டு வருகிறார்கள். அப்படி எதிர்ப்பவர்களுக்கு நான் கூறிக் கொள்கின்றேன். யார் யார் ஏழைகள் வாழக்கூடாது என்று நினைகின்றார்களோ, ஏழைகளின் உழைப்பாகிய இரத்தத்தை உறிஞ்ச வேண்டுமென்று கருதுகின்றார்களோ, அதோடுமட்டு மல்லாமல் ஏழைகளுக்கு வட்டிப் பணம் கொடுத்து அதிக வட்டியை எதிர்பார்த்து தொடர் வட்டியும் வசூல் செய்து ஏழையின் வாழ்வைப் பாழாக்க நினைப்பவர்கள் தான் இந்தக் கூட்டுறவு முறையை எதிர்ப்பார்கள். கூட்டுறவினால் ஏழை மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும் என்று நாங்கள் நம்புகின்றோம். இந்த நல்ல திட்டத்தை விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள். அதாவது 10 ஏக்கர், 5 ஏக்கர், 4 ஏக்கர், 2 ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய சிறு நிலச் சுவான்தார்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய முன் வருவார்களானால் அவர்களுக்கு, நம் அரசாங்கம் பல துறைகளில் சலுகை காட்டுகின்றது. உதாரணமாக கிணறு வெட்ட வேண்டுமென்றால் 1/3 பாகம் இனாமாகவும், 2/3 பாகம் நீண்டகாலக் கடனாகவும் கிடைக்கிறது. பம்ப்செட் வைக்கவேண்டுமென்றாலும் 1/3 பாகம் இனாம், 2/3 பாகம் நீண்ட காலக் கடனாகவும் வசதி கிடைக்கிறது. அதோடு மாடு வாங்க வேண்டுமென்றால் பாதி இனாமாகவும் பாதி மான்யமாகவும் கிடைக்கிறது. இம்மாதிரியான சலுகைகளை அடைந்து உற்பத்தியும் பெருக்க கூடிய அளவில் கூட்டுறவு முறையில் வினியோகம் செய்தால் நல்லது என்று கருதுகின்றேன். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதற்கு அடுத்தபடியாக கரும்பு தோப்புக்கள், மலைத் தோட்டம் இவைகளுக்கெல்லாம் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி எல்லோரும் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் உணவு உற்பத்தியைக் காட்டிலும், சர்க்கரை அவ்வளவு முக்கியமில்லை என்றுதான் கருதுகின்றேன். பட்டணங்களில் வாழ்கின்றவர்களுக்கு வேண்டுமானால் சர்க்கரை அதிகம் தேவைப்படும். ஆனால் எங்களைப்போன்று பட்டிக்காடுகளில் வசிப்பவர்களுக்கு அவ்வளவு தேவையில்லை. அதோடு பட்டணத்தைக் காட்டிலும் கிராமப் புறங்களில்தான் அதிகம் மக்கள் வசிக்கிறார்கள் என்பதையும் ஞாபக மூட்ட விரும்புகின்றேன். ஆனபடியால் கரும்புக்கு விதி விலக்கு அளிக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் கருதுகின்றேன். கரும்புக்கு விதி விலக்கு மாத்திரமல்லாமல் பாக்குத் தோப்புக்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வருடத்திற்கு 1 லட்சம் 2 லட்சம் ரூபாய், என்று குத்தகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நிலை கோயம்புத்தூர் ஜில்லாவில் இருக்கிறதென்று நினைக்கின்றேன். இம்மாதிரி 1 லட்சம், 2 லட்சம் என்று குத்தகைக்கு விடக்கூடியவர்களுக்கு நாம் வருமானவரி அதிகம் போட்டால்கூட ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உண்டாக்கக்கூடிய இந்த நேரத்தில் இதற்கும் விதி விலக்கு இல்லாமல் செய்திருக்கலாம். திட்டமில்லாத எதிர்க்கட்சிக் காரர்கள் 15 ஏக்கர் வரம்பு வைக்க வேண்டும். அதோடு பஸ் தொழிற்சாலை, மில் இவைகளுக்கெல்லாம் ஏன் வரம்பு கட்டவில்லை என்று கூறினார்கள். அவர்களுக்கு நான் கூறிக்கொள்கின்றேன். ஒரு கட்டிடத்தில் ஏறவேண்டுமானால் ஒவ்வொரு படியாக ஏறவேண்டுமேயல்லாது எடுத்த எடுப்பில் மேல் படியை அடைந்துவிட முடியாது. அதே போன்றுதான் ஒரே சமயத்தில் எல்லாக் காரியங்களுக்கும் வரம்பு கட்டினால் சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்துவது மிகவும் சிரமம். அதோடு ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று கூறுவது போல ஒரே காலத்தில் பல சட்டங்களை கொண்டு வருவதால் பலன் அளிக்காது என்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் உணர வேண்டும்.

அடுத்தபடியாக பெண்களுக்கு ஸ்திரீதன சொத்து. ஒரு குடும்பம் என்று இருந்தால் அதிலே ஆண் வேறு, பெண் வேறு அல்ல. ஆண்-பெண்-குழந்தைகள் எல்லோரும் சேர்ந்துதான் ஒரு குடும்பம். அதாவது

[Srimathi A. S. Ponnammal] [19th April 1960

கணவனுக்கு 30 எக்கர் நிலமிருந்து மனைவிக்கும் 50 எக்கர் நிலமிருந்தால் இப்போதிருக்கிற சட்டப்படி கணவன் நிலத்தோடு மனைவியிடமிருக்கும் ஸ்திரீதன நிலத்திலிருந்து 10 எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. அப்படியில்லாமல் பெண்ணிற்கு இருக்கும் ஸ்திரீதன நிலத்திலிருந்து 30 எக்கரும் அதோடு கணவன் பெயரில் இருக்கும் நிலத்திலிருந்து 10 எக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று ஏன் வைக்கக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன். அதுமாத்திரமல்லாமல் கல்யாணமாகாத பெண்களைப்பற்றி இதில் குறிப்பிடவே கிடையாது. நியாயமாகப் பார்த்தால் கல்யாணமாகாத பெண்களுக்குத்தான் அதிகச் சலுகை காட்டவேண்டும். காரணம் அவர்கள் காலமெல்லாம் கன்னியாகவேயிருந்து வரக்கூடியவர்கள். பிற்காலத்தில் கஷ்டமில்லாமலும் வாழ வேண்டுமென்றால் இவர்களுக்கும் கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இவர்களுக்கும் வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

கடைசியாக கோவில் நிலங்களைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோவில் பராமரிப்பிற்காக 200 எக்கர் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்றிருப்பது வரவேற்கதக்கது. கோவில் நிலங்களை ஒரு சில பணம் படைத்த பெரியவர்கள் (ஆப்ஸென்டீ லான்ட்லார்ட்ஸ்) என்று கூறுவார்களே, அந்தப் பெரியவர்கள் 10,000 எக்கர் 20,000 எக்கர் என்று குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அவைகளை சப்-லீஸிற்கு விட்டு மேலும் மேலும் தங்களின் பணத்தைப் பெருக்கிக்கொண்டே போகிறார்கள். இந்த மோசமான நிலையைப் போக்கி ஏழைகளுக்கும் பிழைக்க வழிவகை செய்ய வேண்டுமானால் இப்பேர்ப்பட்டவர்களுக்கு குத்தகைக்கு விடுவதையோ அல்லது லீஸிற்கு விடுவதையோ கட்டாயமாக நிறுத்த வேண்டும். 'கோவில் நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய அனுமதி தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் அங்கே உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று கூக்குரல் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிக சக்திகள் உருவாகி வருவதற்குள் நல்ல முறையில் சட்டங்கள்களைச் செய்து ஏழை மக்களின் வாழ்வை உயர்த்த வகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதோடு ஏழை மக்கள் அமைச்சரையும் காங்கிரஸ் மகா சபையையும் மறக்காமல் இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

* Sri A. NESAMONY : Mr. Speaker, much has been said about this legislation, and the drawbacks that exist in it from the point of view of a lawyer have been ably pointed out by hon. Members Sri S. Lazar and Sri T. Sampath. I do not want to reiterate those arguments, but to confine myself to the clauses in this Bill which affect the transferred territory and also the exemptions contemplated in favour of religious institutions. As a body, Sir, we, M.L.As., who represent the transferred territory have been charged with questioning the authority of the Government of making appointments or taking disciplinary action against any officer and things like them. Now, whatever we do, we do in the interests of the people who have elected us to this House. We have nothing personal to gain by advocating the cause of any individual. We are only interested in the welfare of the people who have selected us to serve them. In that way, I would like to analyse the clauses in the Bill that relate to the transferred territory.

Sir, I now refer in particular to clauses 55 and 56 of the Bill under discussion. It is stated in clause 55 (1), ' The Settlement Officer shall effect within a period of two years from the date of the publication



19th April 1960] [Sri A. Nesamony]

of this Act ryotwari settlement of every land in the transferred territory and . . . in accordance with a settlement notification framed and published by the Government for the purpose . . .' In sub-clause (2) (a) of the same clause, it is stated ' the rates of assessment set out in the resettlement notification in force on such date and in such district as may be specified by the Government '. In sub-clause (4), it is stated ' Neither the settlement notification nor any order passed in pursuance thereof shall be liable to be questioned in any Court of Law.' Sir, I have gone through the Statement of Objects and Reasons and also the Notes on Clauses.

(Deputy Speaker in the Chair.)

Neither in the Statement of Objects and Reasons nor in the Notes on Clauses anything has been said as to why ryotwari settlement should be introduced in the transferred territory under cluase 55. As a result of this clause, the Jenmikaran Settlement Act, the Land Assignment Act, the Basic Tax Act and the Settlement and various other Acts which relate to lands in the transferred proclamation territory would be set at nought by an order of notification issued by the Government. Now, this notification cannot be challenged in a Court of law. In sub-clause (2) (a), it is stated ' the rates of assessment—set out in the resettlement notification in force on such date and in such district as may be specified by the Government '. Does this indicate that the Government are bent upon enhancing the land tax in that area ? If that be so, I submit that unless all those legislative measures now in force in that transferred territory are scrapped from the Statute Book, it could not be done. Now, the question will arise, whether the Government, by a notification, can abrogate an Act passed by a Legislature. This is a matter for serious consideration. I am sure that a notification cannot set at nought all the previous laws in force in the transferred territory. Unless an Act is passed in the Legislature for the purpose, the laws in force in the transferred territory could not be set aside. Probably, with a view to enhancing the land tax, they want to introduce ryotwari settlement in the transferred territory. Now, what is urgently needed therefore is the enfranchisement of land. It is for the Goevrnment to take that matter into consideration immediately.

The Sri Pandaravagai lands over which the Padmanabha Swamy temple has right should be enfranchised. This tenure was included in the Special Rights in Land Abolition Act of the former Travancore-Cochin State. But since this area happened to be transferred territory, the provisions relating to the Sri Pandaravagai lands were deleted and only so far as cognate tenures were concerned, the Act became law in the former Travancore-Cochin State. These lands should be enfranchised at the capitalised value of 16-2|3 of the annual rent as agreed to by His Highness the Maharaja and the Legislature. Similarly, as regards the Kandukirishi lands which belong to his Highness and surrendered to Government, they should be enfranchised by payment of 8-1|3 of the value in the case of Kandukirishi pattom lands and 16-2|3 in the case of Thanathu lands. But no steps have been taken by this Government to enfranchise these lands so as to secure them to the tiller. Legislation in this regard is long overdue and either in this Bill or in a separate Bill provision have to be made for the enfranchisement of these lands.

It has been stated on the floor of this House that people in 'kudiyiruppus' are being evicted and that tenants are losing their property by such evictions. The same problem exists in Kanyakumari district also. People occupying 'kudiyiruppus' on Government lands should be protected. If they are landless, they must be given lands elsewhere to construct huts to live in instead of being evicted at will. This is an urgent necessity at the present moment when we are trying to give land to the poor.

Next, I wish to say a few words on exemption in favour of trusts. The Bill as it is does not take note of the present organisation of churches in the matter of fixing of ceilings. I wish to state that the various denominations of Christians are coming together and one such coming together is the Organic Union of the Methodist Church, the Anglican Church and the South India United Church, as was referred to by Dr. Mathuram. The properties of these Missions are held by Corporations registered in foreign countries. Foreign missions are coming forward to have the properties transferred to the Indian church through an association created in India. The Church of South India which comprises several denominations has formed the C.S.I. Trust Association to that end. But they are bare trustees. They simply hold the properties of the fifteen Dioceses. The properties are actually administered by the fifteen Dioceses. It has to be considered whether the ceiling should be effected at the C.S.I. level or at the level of the fifteen Dioceses. The C.S.I. Trust Association holds properties of these Dioceses which are spread over the four southern States of Andhra, Mysore, Kerala and Madras and a portion of Ceylon. If the ceiling is effected at the C.S.I. Trust Association level, it may so happen that foreign Missions would not come forward to transfer the properties to the Indian Church. That will retard the progress of churches here. At the same time, it will adversely affect various charitable institutions run with the aid of rents, etc., from the properties.

With these few remarks, I welcome this Bill and I believe that when the Select Committee sits to consider the Bill in its various aspects, it will consider the case of transferred territories also.

*SRI P. S. SANTHANAM : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நில உடைமை உச்ச வரம்பு மசோதாவின் பேரில் என் கருத்துக்களைச் சொல்லப் பிரியமுடையவனாக இருக்கிறேன். உண்மையிலேயே இந்த மசோதாவானது உழைப்பாளியின் ஊதியத்திற்கு உச்ச வரம்பு கட்டக் கூடியதாகத்தான் அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த நாட்டில் சில நிலச் சொந்தக்காரர்களும் ஜமீந்தார்களும் நாட்டின் ஜனத்தொகையில் 1/6 பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்களை, விவசாய மக்களை, பல விதத்திலும் வதக்கி வாட்டி வந்திருக்கின்றனர். வெள்ளையர் இருந்த காலத்தில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போராடிய காங்கிரஸ் மகாசபையினர் தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்த்து, விவசாயிகளைப் பார்த்து, "ஏ விவசாயிகளே! நாம் ஒன்றுகூடி இந்த வெள்ளையரை நாட்டை விட்டு வெளியேற்றினால், பிறகு எங்கள் ஆட்சியில் நாட்டில் உள்ள நிலங்கள் எல்லாவற்றையும் உழுபவர்களுக்கே சொந்தமாக்குகிறோம். உழுபவனுக்கே நிலம் சொந்தம், எனவே மங்களகரமான மஞ்சள் பெட்டியில் உங்கள் ஓட்டுக்களைப் போடுங்கள்" என்று தெருக்களிலும் பட்டிதொட்டிகளிலும் சொல்லி வந்தார்கள், அன்று காங்கிரஸ்காரர்கள் அவ்வாறு "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று சொல்லி வந்தார்கள். "நாம் எல்லோரும் சேர்ந்து வெள்ளையரை நாட்டை



விட்டு வெளியேற்றினால், பிறகு எங்கள் ஆட்சியில் நாட்டில் எல்லோருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க இடமும் கொடுப்போம். எனவே எங்கள் மஞ்சள் பெட்டியிலேயே ஓட்டுப் போடுங்கள்" என்று அன்று காங்கிரஸ்காரர்கள் பாமர மக்களிடம் சொன்னார்கள். பாமர மக்களும் அவ்வாறே மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றி கண்டார்கள். அப்போது வெள்ளையர்கள் அதைப் பார்த்தவுடன் இந்த நாட்டில் ஏழை விவசாயிகள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டார்கள். அப்போது காந்தி மகான் "இந்த நாட்டில் ஏழை என்றும் பணக்காரர் என்றும் மக்கள் வித்தியாசமான நிலையில் இருக்கக்கூடாது. மக்களில் தோட்டி என்றும் தொண்டமான் என்றும் யாரும் இருக்கக்கூடாது. எல்லோரும் சமம்" என்ற தத்துவத்தைப் பரப்பினார்கள். அப்போது காங்கிரஸ்காரர்கள் சொன்னதையெல்லாம் மக்கள் உண்மையிலேயே நம்பினார்கள். அதே போல 1957-ம் வருடம் தேர்தல் நடந்தபோது காங்கிரஸ்காரர்கள் "உழுபவனுக்கே நிலம் சொந்தம். எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள். எங்கள் ஆட்சியில் நாங்கள் நாட்டிலுள்ள நிலங்களையெல்லாம் நிலமில்லாத உழைக்கும் விவசாய மக்களிடையே பகிர்ந்து கொடுப்போம்" என்று சொன்னார்கள். இந்த மசோதாவிலுள்ள குறைகளை நான் சட்ட ரீதியாக எடுத்துப் பேச விரும்பவில்லை. காங்கிரஸ்காரர்கள் பாமர மக்களை ஏமாற்றியதை இந்த மன்றத்தில் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இவர்கள் பாமர மக்களைப்பார்த்து "அதிகாலையிலிருந்து மாலை வரையில் நிலத்தில் உழைக்கும் நிலமில்லா விவசாயிகளே! நீங்கள் காளை மாட்டுச் சின்னத்தில் ஓட்டுப் போடுங்கள். உங்களுக்கு நிலம் கொடுக்கிறோம். உழுபவனுக்கு நிலம் சொந்தம்" என்று சொன்னார்கள். மக்களும் அவர்களுக்கு ஓட்டுப் போட்டார்கள். இப்போது நாடு சுதந்திரமடைந்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தச் சட்ட மன்றத்திலே நாம் மாமன்னர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இந்த மன்றத்திலே இப்போதுதான் நில உடைமை உச்சவரம்பு மசோதா வந்திருக்கிறது. இது உண்மையில் உழைப்பாளிகளின் ஊதியத்தைக் குறைக்கும் உச்ச வரம்பு மசோதாவாகத்தான் இருக்கிறது. உழைப்பாளியின் ஊதியத்தைக் குறைப்பதற்குத்தான் இந்த மசோதா உதவுமே தவிர, உழைப்பாளிகள் நல்வாழ்வு வாழ்வதற்கு உதவக்கூடிய ஷரத்து இதில் ஒன்றும் இல்லை. "நாங்கள் ஆட்சி பீடத்திற்கு வந்தவுடனேயே, நாங்கள் சட்ட சபையில் மெஜாரிடியினராக வருகிற முதல் தருணத்திலேயே ஜமீந்தார்களை ஒழித்து விடுவோம். ஜமீந்தார்களின் நிலங்களை நிலமில்லா ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்போம். உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று ஆளும் கட்சியினர் நாட்டில் பாமர மக்களிடம் அந்தக் காலத்தில் சொல்லி வந்தார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் "வந்தே மாதரம்" (வந்தே ஏமாத்திரம்) என்று சொன்னதுபோல "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று சொல்லி "மங்களகரமான மஞ்சள் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள்" என்று சொன்னபோது, பாமர மக்கள் மஞ்சள் பெட்டியில் ஓட்டுப்போட்டார்கள்.

ஜமீன்தார்களை ஒழித்து விட்டு அங்குள்ள நிலங்களை ஏழை விவசாயி 12-30 p.m.
களுக்குக் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த ஜமீன் நிலங்கள் எல்லாம் உண்மையிலேயே ஏழை விவசாயிகளின் கையில் போய்ச் சேரவில்லை. அதேபோன்று இன்று நில உடைமைக்கு உச்ச வரம்பு கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்படும் இந்தத் தேதிக்கு 3 வருஷங்களுக்கு முன் வரை நிலங்களை மாற்றம் செய்யவோ, கிரயம் செய்யவோ கூடாது என்று சட்டத்திலே விதி இருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையிலேயே இந்தச் சட்டத்தை வரவேற்க முடியும். இப்போது பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் தங்களுடைய நிலத்தைப் பிரித்து எழுதி வைத்து விட்டார்கள். ஏதோ மாமன், மச்சான், உற்றார், உறவினர் என்று எழுதி வைத்து விட்டார்கள். ஆண்டவன் மீது, பள்ளிக்கூடத்தின் மீதெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். பூனைக்கு அல்வா, புலிக்கு புல் வாங்கிபோட்டது போல கணக்கு எழுதி

இருக்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் ட்ரஸ்டிகளாக இவர்களே இருந்து கொண்டு அதை அனுபவித்து வருகிறார்கள். உதாரணமாக, திருவண்ணாமலையில் காத்தாயி அம்மாள் என்று ஒருத்தி இருந்தாள். அவள் 50,000 ரூபாய்ச் சொத்தைக் கோயிலுக்கு எழுதி வைத்து விட்டாள். அந்தக் கோயிலேலே மகன் ட்ரஸ்டி. ஆகவே, அவர்களே அந்தச் சொத்தின் வருமானத்தை தங்களுடைய உபயோகத்துக்குப் பயன்படுத்துக் கொள்கிறார்கள். உண்மையிலேயே பார்க்கப் போனால் இந்த உச்ச வரம்பு ஏழை விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய அளவுதான் இருக்கிறது. இது நிலத்திற்கு உச்ச வரம்பு அல்ல. விவசாயிகளின் உழைப்புக்கு உச்ச வரம்பு; விவசாயிகளுக்குக் கூலி கொடுப்பதில் உச்ச வரம்பு. எதற்கு உச்ச வரம்பு கட்டினால் நாட்டிற்கு நன்மை ஏற்படும்? முதலாளித்துவத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும். பெரிய பெரிய மில் முதலாளிகளுக்கும், பஸ் முதலாளிகளுக்கும் உச்ச வரம்பு கட்ட வேண்டும். ஒருவனுக்கு 3 லட்சம் ரூபாய்க்கு மேல் சொத்து இருக்கக் கூடாது என்று உச்ச வரம்பு கட்ட வேண்டும். பெரிய நிலச்சுவான்தார்களுக்கு உச்ச வரம்பு கட்டினால் அவன் அந்த நிலங்களையெல்லாம் விற்று விட்டு சென்னையில் வந்து 1 லட்சம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்று 4 பங்களாக்களை வாங்கிப்போட்டு விடுகிறான். அந்த நிலைமையில் இது ஏழைகளைப் பாதிக்கக்கூடிய சட்டமே தவிர இதனால் ஏழைகள் ஒருவித நன்மையையும் அடையப் போவதில்லை. இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போகும்போது, இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்ட தேதிக்கு 3 வருஷங்களுக்கு முன் உள்ள வரை ஒரு கால கட்டத்தை நிர்ணயித்து அந்தத் தேதிக்குப் பிறகு நிலத்தை மாற்றியிருந்தாலோ, விற்றிருந்தாலோ அது செல்லாது என்று சொல்லி இந்தச் சட்டத்தை உருவாக்கினால் ஏழை விவசாயிகளும், பாமர மக்களும் வாழ முடியும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. G. SANKAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உச்ச வரம்பு மசோதாவை நான் மனமார வரவேற்கிறேன். பல காங்கிரஸ் மெம்பர்களும், எதிர்க்கட்சி மெம்பர்களும் இதற்கு விரோதமாகப் பேசினார்கள். அது கண்டு ஓரளவு வருந்துகிறேன். முக்கியமாக, காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்கள் ரொம்ப மனதிற்கு விரோதமாகவே பேசினார்கள். முக்கியமான காரணம் என்னவென்று நான் சொல்வதைக் கூட மன்னிப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு நிலத்தில் அனுபவம் இல்லை. நான் ஒரு சிறு நிலச்சுவான்தார். பரம்பரை நிலச்சுவான்தார் அல்ல. என்னுடைய காலத்திலே நிலங்களை வாங்கி அதைச் சீர்திருத்தி ஓரளவு அனுபவத்தை நான் பெற்றிருக்கிறேன். ஒரு சமயம் பழைய மிராசுதார்களுக்கு வேண்டுமானால் அனுபவம் இல்லாமல் இருக்கலாம். வீட்டிலே இருந்து கொண்டு பண்ணையாட்களை வைத்து அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருந்திருக்கலாம். ஆனால் நான் ஒவ்வொரு நாளும் நான் விவசாயத்தைக் கவனித்து வருவதால் ஓரளவு அனுபவம் எனக்கு உண்டு. அரசாங்கம் நல்ல முறையில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். பத்தாயிரம் ரூபாய் வருமானம் இருந்தால் போதுமானதுதான். ஆனால் என்னுடைய தொகுதியில் 4 ரூபாய் தீர்வைக்குக் கீழ் உள்ள நிலங்கள் பல இருக்கின்றன. அந்தப் பகுதியை அமைச்சர் அடிக்கடி பார்த்திருக்கிறார்கள். எப்போதும் பஞ்சந்தான். வருஷா வருஷம் அமைச்சர் அவர்கள் அந்தப் பிரதேசத்தைப் பார்த்து பஞ்ச நிவாரணம் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கு மழை பெய்து விளைந்தால் 30 ஏக்கருக்கு வருஷத்திற்கு 3,500 ரூபாய் வரும். புஞ்சையில் சாதாரணமாக ஒன்றுமே வராது. தண்டத் தீர்வை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். பூதானத்திற்காகப் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் கொடுத்தேன். இன்றுவரை அந்த நிலங்களில் பயிர் செய்ய முடியவில்லை. அந்த நிலங்களுக்குத் தண்டத் தீர்வையை நான் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த விதமான தாலூகாக்கள், சங்கரன்கோயில், தென்காசியில் ஒரு பகுதி, திருச்செந்தூரில் ஒரு பகுதி, நாங்குனேரியில்





முழுவதும் ஆகும். இதைப் பற்றி நம்முடைய செலக்ட் கமிட்டி நல்ல முறையில் பரிசீலித்து இந்த ஏக்கரைக் கூட்ட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னால் ராஜாக்கள், ஜமீந்தார்கள், இனாம்தார்கள் மட்டப்படுத்தப்பட்டபோது நிலச்சுவாந்தார்களெல்லாம் ஓரளவு சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்பொழுது நாம் ஓரளவு மட்டப்படுத்தப்பட்டு வருவதைக் கண்டு ஒரு சில மக்கள் சந்தோஷப்படுகிறார்கள். இதைப்போல் மற்றவர்களைக் கண்டு எனக்கும் பொறாமையாகத் தான் இருக்கிறது. நானும் ஒரு பெரிய பஸ் சொந்தக்காரராகவோ, பெரிய மில் சொந்தக்காரராகவோ வியாபாரியாகவோ இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கலாமே என்று நினைக்கிறேன். அவர்களையும் கூடிய சீக்கிரம் மட்டப்படுத்தினால் மற்ற மக்களுக்கும் சந்தோஷம் வரும். அதைக் கட்டாயமாக நம்முடைய அரசாங்கம் சில வருஷங்களில் கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நான் சினிமாக் கொட்டகை வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். சினிமாவை வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன். எங்களுக்கு வாழ வசதி இருந்தால் போதும். எங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கவும், நாங்கள் வாழவும் வசதி ஏற்படும்படி வரும்படி வந்தால் அதுவே போதுமானது.

இன்று நான் பஸ்ஸில் வந்துகொண்டிருந்தபோது, ஒரு சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். டவுனில் ஏராளமான கட்டிடங்கள் இருக்கின்றனவே, அவற்றுக்கும் "ஸீலிங்" இல்லையா என்று பஸ்ஸில் வரும் சாதாரண மக்கள்—நம்முடைய எம்.எல்.ஏ.க்கள் அல்ல—பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்கும் கூடிய சீக்கிரம் ஒரு முடிவு வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

வாஸ்தவத்திலே மந்திரிகள் கூட ரூ. 1,500 சம்பளம் வாங்குகிறார்கள். மற்ற ஆபீசர்கள் இரண்டாயிரம், மூவாயிரம் என்று சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களைப் பொறுத்தும் "ஸீலிங்" வந்தால்தான் எங்களுக்கும் சந்தோஷமாக இருக்கும்.

இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்போவதால், இப்பொழுது நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. சில நிமிஷங்கள் இங்கே பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய சொற்பொழிவை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

* **Sri V. VEDAYYAN :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்கள் கூறுகின்றேன். இது உண்மையிலேயே ஒரு மிகச் சிறந்த மசோதாவாகும். சமுதாயத்திலும், அரசியலிலும், கிராமப் பொருளாதாரத்திலும் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கக்கூடிய மசோதா இது என்றால் மிகையாகாது.

எத்தனையோ சட்டங்கள், நிறைவேற்றிய பிறகு கூட ஏதோ அலமாரியில் தூங்குகிற நிலையில் இருக்கும். ஆனால், சட்டமாவதற்கு முன்பே அமுலாக்கப்பட்ட மசோதா ஒன்று உண்டு என்று சொன்னால், அத்தகைய சிறப்பு இந்த மசோதாவுக்குத்தான் உண்டு. நம்முடைய சட்டத்தின் முக்கியமான கருத்து, நில உடைமை பரவலாக்கப்பட வேண்டும் என்பது. அந்த ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், உண்மையிலேயே இப்போதே பரவலாக்கப்பட்டு விட்டது என்று சொல்லலாம். எத்தனையோ ஏழை, எளிய விவசாயிகளுக்கு 'இன்னும் இந்த ஸீலிங்'குக்கு உட்பட்டு, இருபது ஏக்கர் என்ற அளவிலே வைத்து பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். எத்தனையோ பேர், ஸ்டாம்ப் வாங்கிக் கொடுத்தால் அவர்களுக்குக் கூட சாஸனம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் அந்த அளவில் இது ஒரு பெரிய முக்கியமான, சிறப்புடைய மசோதா என்று தான் சொல்ல வேண்டும்.

இதற்கு ஏன் 'Retrospective effect' கொடுக்கக்கூடாது என்று
சிலர் கேட்கிறார்கள். அது சரியல்ல நம்முடைய ரெவினியூ அமைச்சர்
அவர்கள் 'ஹெல்த்' அமைச்சரும் கூட. ஒரு மனிதனுக்கு முதலில்
ஒரு வியாதி வரும் என்றால், அவனுக்கு சர்க்கரை அதிகமாக இருக்
கிறது, உப்பு அதிகமாக இருக்கிறது, இன்ன வியாதி வரும் என்று வைத்தியர்
கள் முதலில் சொல்வார்கள். அப்படிச் சொல்வதை வைத்துக்கொண்டு,
ஆகார கட்டுப்பாடுமூலம் குறைக்க வேண்டியதை குறைத்துக்கொள்ளா
விட்டால், ஊசிபோடுவோம், மருந்து கொடுப்போம், ஆபரேஷன் பண்ணுவோம்
என்று சொல்வார் அந்த வைத்தியர். ரெவினியூ அமைச்சரும், ஹெல்த்
அமைச்சருமாக இருக்கக்கூடிய நமது அமைச்சர் அவர்களும், சட்டம் வருவ
தற்கு முன்பே சரியான லிமிட் என்னவென்று சொல்லிவிட்டு, இதற்
குள்ளே குறைத்துக்கொள்ளாவிட்டால் அதற்கு மேலேதான் நாங்கள்
மருந்து கொடுப்போம், ஊசி போடுவோம் என்று சொல்லிவிட்டார்கள்.
அவர்களும் குறைத்துக்கொண்டு விட்டார்கள். அந்த முறையில் இது
ஒரு சிறந்த நல்ல முறை என்றுதான் சொல்லவேண்டும். அப்படிச்
செய்யாமல், வியாதியஸ்தரைப் பிடித்து உடனே ஆபரேஷன் செய்து அறுக்க
வேண்டுமென்றால், அது முறையாகாது. அவகாசம் கொடுத்து கொண்டு
வந்திருக்கக்கூடிய நல்லதொரு மசோதாவாகும் இது.

அது மாத்திரமல்ல. முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்லி
யிருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்க அம்சமாகும். முப்பது
ஸ்டாண்டர்டு எக்கர் என்று வைத்திருப்பது கூடாது, பத்து, பதினைந்து
ஸ்டாண்டர்டு எக்கர் கொடுத்து விட்டால் போதும் என்று சிலர் சொல்
கிறார்கள். அப்படிச் செய்தால் உண்மையிலேயே விவசாய உற்பத்தி அதிக
கப்படுவது பெரும்பாலும் பாதிக்கப்படும். இப்பொழுது சாதாரணமாக,
முப்பது எக்கர் என்றால், அங்கே படித்த பட்டதாரியோ அல்லது
ஒரு நிலப் பிரபுவோ தன்னுடைய சக்தி, அனுபவம், அறிவு எல்லா
வற்றையும் பயன்படுத்தி, வேறு தொழில் செய்யாமல், விவசாயத்
தொழிலை மாத்திரம் பார்த்து விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த
முடியும். அப்படியில்லாமல், பத்து, பதினைந்து எக்கர் என்ற அளவுக்குக்
குறைத்து நிர்ணயித்துவிட்டால், அவன் இதுவரைக்கும் நல்ல வசதியோடு
வாழ்ந்து வந்ததன் காரணத்தால், குறைந்த அளவு நிலத்திலிருந்து
வரும் வருமானம் அவனுடைய தேவைக்குப் போதாது என்ற காரணத்
தால், வேறு தொழில்களை நாடி பட்டணத்திற்குச் சென்றுவிடக்கூடிய
நிலைமை ஏற்பட்டால், உண்மையிலேயே அந்த அளவுக்கு விவசாயம்
பாதிக்கத்தான் செய்யும், கிராமங்களில் அறிவுப் பஞ்சம் ஏற்படும் விவசாய
அனுபவமுள்ளவர்களும் குறைவார்கள்; படித்த விவசாயப் பெரு
மக்கள், பெரும் குடியானவர்கள் எல்லாம் பட்டணத்தை நோக்கி வேறு
தொழில் செய்வதற்காகச் சென்று விடுவார்கள். இதையெல்லாம் மன
தில் கொண்டு, முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்லியிருப்பது
மிகவும் நல்லது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நிலத்தின் அளவை முப்பது எக்கருக்கும் கீழே குறைத்துவிட்டால்,
இன்று சமுதாயத்தில் அரசியலில் கூட ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கி
விடும். இன்று பெரும்பாலும் இந்த மன்றத்திலே வீற்றிருப்பவர்கள்
எண்பது சத விகிதம் அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்களைச் சேர்ந்த
வர்கள் இருக்கிறார்கள். சிலர் சொல்வது போல பத்து, பதினைந்து எக்கர்
என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டால், அவர்கள் 'Hand to mouth exis-
tence.' என்ற நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அப்பொழுது உண்மையிலேயே
எந்தத் தேர்தலிலும் அவர்கள் நிற்க முடியாமல், அவர்கள் அரசியலி
லிருந்தே அடியோடு ஒழிக்கப்படுவார்கள். இன்று நாம் பார்க்கிறோம்—
கலைஞர்கள் அரசியலுக்கு வருகிறார்கள். அதே போன்று தொழிலதிபர்
களும் அரசியலுக்கு மேலும் மேலும் வருவதற்கு வாய்ப்பு இருக்கும்.
உண்மையிலேயே இந்த விவசாயப் பெருங்குடி மக்கள் மறுபடியும் அர
சியலுக்கு வருவார்களானால் அவர்கள் மற்ற வருமானங்களுக்கும் வரம்பு
கட்டுவார்கள்; ஆகையால் தொழிலதிபர்களும் கலைஞர்களும் அரசியலி



லிருந்து அவர்களை ஒழிக்க முற்படுவார்கள்; பணத்தின் முன்பும், படா
டோபத்தின் முன்பும் ஏழை விவசாயிகள் நிற்க முடியாது. அந்த
நிலைமை ஏற்படுமானால், உண்மையிலேயே அரசியலிலே இந்த விவ
சாயப் பெருங்குடி மக்கள், எண்பது சத விகிதமுள்ள விவசாய மக்கள்
அடியோடு ஒழிக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலிருந்து இந்த
முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்ற அளவு ஓரளவு காப்பாற்றும். கலைஞர்
கள் என்ன செய்ய முடியும்? கலை மனிதனுக்குச் சோறு போட
முடியுமா? வேறு என்ன செய்ய முடியும்? ஆத்மாவுக்கும் மனதுக்
கும் ஒரு சாந்தி அளிக்கக் கூடிய சக்தி அளிக்கக் கூடிய பக்தியே
எதற்கு என்று சொல்லக்கூடிய அளவு அறிவு சென்றிருக்கும்போது,
இந்தக் கலை சாப்பாடு போடுவதற்கோ மற்றத் துறைக்கோ எப்படிப்
பயன்படப்போகிறது? களைப்பு மிகுந்த சமயத்திலே ஏதோ சில சமயங்
களிலே பயன்படலாமே தவிர, மற்ற அளவுக்குப் பயன்படாது. கலைஞர்
களுக்குச் செல்வத்தை கொடுக்கலாம், பணத்தைக் கொடுக்கலாம்,
வேறு எந்த விதத்திலும் உயர்ந்த வாழ்க்கையை அவர்களுக்குக் கொடுக்க
லாமே தவிர, மக்களுக்குச் சோறு கொடுக்க உதவாது. அப்படிப்பட்ட
கலை இந்த அரசியலில் புகுமானால், உண்மையிலேயே நம் அரசியலே
கெட்டுப்போய்விடும். கலை எதற்குப் பயன்படும்? கிண்டல் செய்வதற்குப்
பயன்படுவதை நாம் பார்க்கிறோம். கலையைத் தொழிலாகக் கொண்ட
அரசியல்வாதிகளைப் பார்த்து, 'ஏதாவது ஒரு திட்டம் கொடு, திட்டத்தைப்
பற்றிச் சொல்' என்றால், அவர்கள் உடனே கோமாளித்தனமான,
ரொம்ப கேவலமான உணர்ச்சிகளை எழுப்பி, அப்படிப்பட்ட அரசியல்
கோமாளிகள் ஆகிறார்கள். அந்த நிலைமை உண்மையிலேயே
மாறவேண்டும்.

**DEPUTY SPEAKER**: The hon. Member should not use the word 'கோமாளித்தனம்'. It is unparliamentary. The hon. Member should withdraw that word.

**SRI V. VEDAYYAN**: இந்த முறையில் . . .

**DEPUTY SPEAKER**: The hon. Member should first withdraw that word and then proceed.

**SRI V. VEDAYYAN**: என்னுடைய வார்த்தையை Withdraw செய்து கொள்ளுகிறேன்.

Sri C. N. Annadurai rose.

**DEPUTY SPEAKER**: The hon. Member does not probably understand. He has withdrawn that word.

**SRI C. N. ANNADURAI**: I request the Deputy Speaker to inform the hon. Member in Tamil.

**SRI V. VEDAYYAN**: அந்தக் சொல்லாய் யாருக்குப் பொருந்தும்
என்று எனக்குத் தெரியாது. ஏதோ சாதாரணமாகச் சொல்லி
விட்டேன். அந்த முறையில்தான் இருக்குமே தவிர வேறு
முறையில் அது பயன்படாது. ஆகையால், விவசாயப் பெருமக்கள் ஓரளவு
அரசியலிலும் பொருளாதாரத்திலும் மற்ற ரீதியிலும் நல்ல முறையிலே
பணியாற்ற வேண்டுமானால், அவர்களுடைய திறமை, அறிவு எல்லாம்
பயன்படவேண்டுமானால், ஓரளவு அந்த அளவுக்காவது அது நிலைத்
திருக்கவேண்டும். முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் வைத்திருந்தால்தான்
நல்லது.

கோயில் நிலத்திற்கு எல்லாம் உச்ச வரம்பு கட்ட வேண்டியதில்லை.
எல்லாவற்றையும் எடுத்து கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்து,
அனேகமாக நல்ல முறையிலே சீராக கோயில்களுக்கும் விவசாயிகளுக்கும்
பங்கு கொடுக்கும் முறையிலே சட்டம் அமையவேண்டும்.

[Sri V. Vedayyan] [19th April 1960

இடைத் தரகர்கள் சட்ட ரீதியாக ஒழிக்கப்படவேண்டும். குடியிருப்பு மனையைப் பொறுத்த வரையில் விவசாயிகள் எல்லோருக்கும் குடியிருப்பு மனை என்ற நிலை இருக்கவேண்டும். புறம்போக்கு நிலத்தைப்பற்றி இந்தச் சட்டத்தில் இடம் இல்லை. எத்தனையோ மிராசுதார்கள் அனேகமாக புறம் போக்கு நிலங்களை வைத்திருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் கூட ஒருவர் இறுநூறு எக்கருக்கு மேல் புறம்போக்கு நிலத்தை வைத்திருக்கிறார். புறம்போக்கு நிலத்தைப் பொறுத்த வரையில் எந்தவிதமான ஷரத்தும் இடையாது. அதை உண்மையிலேயே நிலமற்ற ஏழை எளிய விவசாயி களுக்கு வழங்கவேண்டும். அதைக் குறித்து ஒரு திட்டவட்டமான முடிவு செலக்ட் கமிட்டியில் செய்யவேண்டும். புறம்போக்கு நிலவுடைமையைப் பொறுத்தவரையில், ஒரு நிரந்தரமற்ற நிலைமையை நீடித்துக்கொண்டு போகாமல், எவ்வளவு மாறுதல் செய்யவேண்டுமோ அதை இந்தச் சட்டத்திலேயே செய்துவிடவேண்டும். ஏனென்றால், இதுதான் கடைசிச் சட்டம். இதற்கு மேலும் நிரந்தரமற்ற நிலைமையை நீடிக்காமல், இதுவே கடைசிச் சட்டமாக இருக்கவேண்டும். குறைந்த பட்சம் ஐம்பது வருஷங் களுக்காவது இதை கடைசிச் சட்டமாக இருக்கும்நிலைமையில் இந்தச் சட்டம் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

Sri C. N. ANNADURAI : கனம் அங்கத்தினர் பேசிய ஒரு வார்த் தையை திருப்பி வாங்கிக்கொள்ளவேண்டுமென்று தலைவர் அவர்கள் தீர்ப்பு அளித்ததின் பேரில் அதைத் திருப்பி வாங்கிக்கொண்ட பின்பும் கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்கு அளித்த வியாக்கியானம் நம் முடைய நடவடிக்கை குறிப்பிலே ஏறுமானால், சபாநாயகர் அவர்கள் அளித்த தீர்ப்பை மறுப்பதாக கருதப்படும். அதுபற்றி தங்களுடையக் கருத்தை தெரிவிக்கவேண்டுமென்று விரும்புகின்றேன்.

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் அர்த்தம் தெரியாமல் பேசினார் என்று நான் கருதுகிறேன். அர்த்தம் தெரிந்திருந்தால் அதைப் பற்றி பேசியிருக்கமாட்டார்கள் என்பது என்னுடைய கருத்து.

Sri S. LAZAR: May I bring to your kind notice that there had been occasions formerly even in this House when the word 'கோமாளித்தனம்' was used and it has been held to be parliamentary?

DEPUTY SPEAKER: The hon. Member is questioning the ruling of the Chair. The Chair has given its ruling and the hon. Member should not question it.

Sri M. P. SUBRAMANIAM: On a point of order . . .

DEPUTY SPEAKER: The Chair has given the decision. How can a point of order arise now?

Sri S. LAZAR : Sir, I was trying to point out to the Chair that there were precedents and decisions in this House. I submit this not with a view in any way to undermine the decision of the Chair, but with a view to bring to the kind notice of the Chair that in future if any Member used this word, it may be permitted. However, to say that this word should be expunged is not correct. To withdraw is one thing and to expunge from the proceedings is another thing. That is all I wanted to point out.

Sri C. N. ANNADURAI: I never wanted that the word should be expunged; I referred only to the new interpretation given by the hon. Member about the Chair's ruling. That is all.



19th April 1960]

* Sri T. T. DANIEL: Mr. Deputy Speaker, Sir, while supporting this Bill, I should like to refer to some points for the consideration of the Government. This Bill, I consider is a historical Bill for the reason that it brings about social economic revolution in the thought of the individuals as well as to complete the change in the social structure of the existing society. This Bill, I think is based on the fundamental doctrine that the land owner is the intermediary, standing between the tiller and his land. Sooner or later, the land by passage of time should flow into the hands of the tiller of the soil, who tills the land and earns his livelihood. I must point out that nearly three crores of tillers are in our country, who are tilling the soil and earning their livelihood for centuries. But still there is no economic salvation for them. I think, that this Bill strikes at the very Gordian-knot of this economic bondage of the several thousands of landless tillers in our country and inspire in their minds new hopes and new ambitions and opens out a new chapter in their lives.

While these changes are taking place in our country in a peaceful atmosphere, such changes have been brought about in other countries only at the point of swords or bayonets. Human blood was sacrificed for bringing about social economic revolutionary changes in other countries. This is due to the spiritual heritage which we as nation have inherited from time immemorial.

Sir, the notion about the incidence of properties is slowly altering, the notion about the rights of individuals are slowly undergoing changes. The individual must live—but he should not live at the expense of others. The individual must grow—but his growth should not hinder the growth of the nation as a whole. The individual must prosper—but his prosperity must not in any way endanger the prosperity of the nation. That seems to be the motive or, I will say, the spirit behind the Bill. We, as a Nation, have dedicated ourselves that we should create a Welfare State and that State should be created in our lifetime. And, the path that leads towards the formation of the Welfare State is not a bed of roses. It requires tremendous sacrifice on the part of the individual. It so happens that the axe of sacrifice has fallen bitterly, perhaps, on the necks of the landowners in our country. They are shedding their pure blood for the future prosperity of the Nation and I am sure that the children of our country will remember with gratitude the tremendous sacrifice which the landed gentry in our country is making for the progress of the Nation as a whole. Our sisters and mothers are singing the lullaby to the children in the cradles that to-morrow they and their children will live in the Welfare State. I believe that this Bill plays an important role in the creation of and in the formation of a Welfare State in our country.

I must also tell the Hon. Minister that I think, as has been pointed out by many jurists in our country, the Bill as it now stands will be *ultra vires* or will offend the provisions of Article 31 of the Constitution. If the purpose for which the excess lands are to be taken is clearly stated in this Bill, if it is not laid down clearly by the Government in clear terms that the excess lands are going to be used for the formation of a Welfare State, for the furtherance of the economic progress of the people, this Bill will not within the ambit of the Constitution of our country. I am afraid that the Statement

of Objects and Reasons as it is stated in the Bill is not worth anything at all. There seems to be some sort of hesitation, I fear, in the mind of the Government as to what they should do with the excess lands. Sir, the doctor with a shaky hand can never perform an operation successfully, however noble his intention may be. It is now for the Government to tell the people in clear terms what they intend to do with the excess lands. I am sure that the Select Committee will go into this and lay down clear provisions in the Bill that all the excess lands will go to the benefit of the landless tenants alone in this country.

Before the excess lands are taken, I must also suggest to the Government that they should bring into existence rural banks throughout the length and breadth of the State, which will offer credit facilities to the landless tenants, who will be benefited with these exces lands. If such credit facilities are not given to them, I am afraid that these lands will become fallow and that will affect naturally the production in our country. I would also say incidentally that this Bill will naturally affect the rural credit stability of the State and we should foresee that.

Sir, by custom and usage, we are agricultural country; we have more agricultural labourers than the number that we actually need for carrying on the agricultural operations in our country. By the introduction of mechanised agricultural operations or by the introduction of what is called the voluntary co-operative farming, there is this danger to the hundreds and thousands of agricultural labourers in the villages of being thrown out of their jobs. I think, Sir, that soon after the passing of the Bill, if sufficient precautions are not taken, thousands of villagers, who are actually depending on the lands will be thrown out of job and we can see on that day the exodus of the poor landless people from the villages to the cities to seek other jobs for their livelihood. I ask the Hon. Minister what is the alternative solution that our Government have to meet this situation. I ask the Central Government whether they have in their mind anything to face this emergency, which is bound to occur in our country and which has occurred in other countries, which have nationalized the lands. Sir, this Bill also is a Bill for the partial nationalization of the lands.

1.00 p.m. Sir, coming to the question of compensation, it is my humble view that adequate compensation must be paid to the landowners for the excess lands to be taken away from them. Adequate compensation according to me is really the market price of the land which they have purchased, which they have earned only according to law and not ill-gotten or by any other means. So it is only natural justice that whenever we take excess lands from the landowners, we should pay adequate compensation and that compensation must be not a pie less than the market value or price of the property.

Again, Sir, it is my humble opinion that the landowner should have the option to retain in his hands what he likes and this right must be unfettered and must not be violated or infringed by any outside agency. It must be his right to carve out the excess land



in his possession and give to the Government. It is not the Government that should dictate to him as to what portion of the land would be taken away from him. In this regard no less than the voice of the landowner must be decisive and it must be final.

Then there is the difficulty of alienation of land by judgment-debtors after the Bill comes into force. I am afraid they cannot alienate excess land even for clearing debts. That is a handicap from which they would suffer. I am afraid judgment-creditors may take proceedings for arrest of judgment-debtors. Unless and until the Government issue an order staying execution proceedings against all these landowners who have excess lands and who are in agricultural indebtedness, the judgment-debtors would be simply harassed by the creditors and there will be no salvation for them.

Coming to the question of distribution, I must say, the Government must remember that they are treading really a very dangerous ground. We are in a democracy and we are really making an experiment with land reforms. Even when a father distributes his property among his children, he is charged of favouritism for this son or that daughter. When that is so, I would like to point out that the machinery created for the distribution of excess land should be such that it would be above all these things. Otherwise people tomorrow will say that we have simply prostituted this measure in the name of nationalization of land and they will also say that our Government has simply committed rape on land.

Lastly I would also say that the hilly tracts in the transferred territory must be excluded from the operation of the Bill. The very same principle which has been extended to certain hilly tracts in our State must also be extended to the transferred territory and certain villages in that territory which are in hilly tracts must be excluded from the operation of the Bill.

In regard to 'kudikadappu', I would say that these people who have been living in such homesteads should not only be not evicted but also these lands should be registered in their names so as to give them a permanent right on that parcel of land with the house.

So far as the definition of the word 'family' is concerned, we need not take into consideration the definition of the word 'family' in the other laws, for the purpose of this Bill. The word 'family', I think, has been clearly defined, except it draws a line of distinction between a family whom the ancestor of an undivided Hindu family is dead and who is alive. I think the distinction is unnecessary.

*SRI M. S. SELVARAJAN: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பு சட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்த தேசத்தில் தனி ஒரு மனிதனுக்கு சராசரி சாகுபடிக்கு லாயக்கான நிலம் ஒரு ஏக்கர்தான் இருக்கிறது. இருந்தாலும், சாகுபடிக்கு லாயக்கற்ற நிலங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் வேறு தேசத்தின் நிலத்தை அடைய விரும்பாத இந்த தேசத்தில், இரண்டு ஏக்கருக்கு மேல் எண்ண முடியாது. இன்று நாம் கொண்டு வந்திருக்கும் சட்டம் தாற்காலிகமானது, ஆரம்பமானது; வளர்ந்துவரும் ஜனப் பெருக்கத்தைப் பொறுத்து நில உடமையின் அளவும் குறையத்தான் வேண்டும். கிராம கூட்டுறவு நிர்வாகந்தான் நம் இலக்கு, அந்த இலக்கை நோக்கிச் செல்வதற்கு வேண்டிய நேரம், பாதை இவற்றில்தான் மற்றவர்களுக்கும் நமக்கும் ஏற்பட்டிருக்கும் வேறு

பாடு. இந்த சட்டம் அந்த இலக்கை நோக்கி நம்மைக்கொண்டு செல்லுகிறது, இதன்மூலம் நில அளவை விஸ்தரிப்பதின் மீதுள்ள மோகம் தீர்ந்து போகிறது; நில அளவை விஸ்தரிக்கும் மோகத்திற்கு உதவிய கருவி, கரணங்கள், செல்வம், உடமை இவைகள் நிலத்தின் வளத்தைப் பெருக்க உபயோகிக்கப்பட்டேதான் ஆகும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அந்தக் கருவி, கரணங்களை விவசாய நிலத்தின் வளத்தைப் பெருக்க உபயோகித்தே ஆகவேண்டும். ஆகவே, இந்த தேச முழுதுக்கும், தேர்ந்து, அளந்து திட்டக்குழு வகுத்திருக்கும் பாதையினின்றும் கடுகளவுகூட இந்த ராஜ்ய சர்க்கார் விலகாமல், இந்த சட்டத்தைத் தொகுத்திருக்கிறார்கள். ஆகவே, எடுக்கக்கூடிய நிலத்திற்கு நிர்ணயித்திருக்கக்கூடிய நஷ்ட ஈடு பொருத்தமானதே. வேறு பல ராஜ்யங்கள் முன்னோடியாக இருந்து சென்னை ராஜ்யத்தில் நில உச்ச வரம்புச் சட்டம் வருவதன் காரணமாக, மற்றவர்கள் செய்த சட்டங்களில் உள்ள நல்ல அம்சங்களைக் கருத்திற்கொண்டு, நம் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றே நான் நினைக்கிறேன். நிலத்திற்கு இன்றைய தினம் இருக்கும் காலக்கிரயம் கொடுக்க வேண்டும் என்பது, இதுவரைக்கும் எந்த ராஜ்யத்திலும் கொடுக்கவில்லை; ஒரே ஒரு ராஜ்யத்தில் மட்டும் காலக்கிரயத்தைக் கணக்கிட்டு பாதியளவு கொடுத்திருக்கிறது. ஆகவே இங்கே நிர்ணயித்திருக்கக்கூடிய, எடுக்கக்கூடிய நிலத்திற்கு நஷ்ட ஈட்டுத் தொகை ஏறத்தாழ மற்றவர்கள் கொடுத்திருக்கும் அளவுக்கு நியாயமானதாகத்தான் அமைந்திருக்கிறது.

நாம் எட்டாவது பிரிவில் இனாம் நிலங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். ப்ளானிங் கமிஷன் இன்டர்மீடியரிகள் நீக்கப்படவேண்டும், ஒழிக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அந்த நோக்கோடுதான் நாம் ஜமீன் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம் செய்தோம். இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே, எட்டாவது பிரிவிலே, இனாம் நிலத்தைப் பொருத்தவரை ஷரத்து போதுமானது அல்ல. இனாம் நிலங்களுக்கு இரண்டுவித பாத்தியதைகள் மேல் பாத்தியதை, கீழ்வாரப் பாத்தியதை இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் பார்க்கும்போது, அம்மாதிரி இனாம்களையும் ஒழிக்க தனியான சட்டம் செய்தே தீரவேண்டும். இந்த நில உச்சவரம்புச் சட்டத்தோடு, அதற்கு அனுகுணமாக அந்த சட்டத்தையும் இதே காலத்தில் கொண்டுவரவேண்டும் என்பது என் கருத்து.

இந்த நேரத்திலே சில நிலங்களுக்கு விலக்கு அளிக்கிறோம். சர்க்கரை ஆலைகளுக்கு உதவியாக இருக்கும் நிலத்திற்கு விலக்கு அளிக்கும் நேரத்தில், இந்த தேசம் செல்லக்கூடிய இலக்கை மனதிற்கொண்டு, கூட்டுறவு முறையில் நடைபெறும் ஆலைகள் சம்பந்தப்பட்டவரை விலக்களித்தால் போதும். தனிமையாக இயங்கும் ஆலைகள் சம்பந்தப்பட்டவரை விலக்கு அளிக்க வேண்டுவது அவசியம் இல்லை.

வேறு சில நிலங்களுக்கும் விலக்கு அளிக்கிறோம். சவுக்கு போலவே, திருநெல்வேலி பிராந்தியங்களிலே உடைமரம் இருக்கிறது. அவை விறகுக்காக உபயோகிக்கப்படுகிறது. அப்படி உடைமரங்கள் வளர்ந்திருக்கும் நிலங்கள் நிரம்ப இருக்கின்றன. ஆகவே, சவுக்கைப்போலவே அந்த நிலங்களுக்கும், விலக்களிக்க இந்த சட்டத்திலே இடம் இருக்க வேண்டுமென்று யோசிக்க வேண்டும்.

ஸ்டாண்டர்ட் எக்கரை நிர்ணயிக்கும் காலத்தில், புஞ்சை ஒன்றேகால் ரூபாய்க்கு கீழ்ப்பட்ட நிலங்களை ஒரே நிலையில் வைத்திருக்கிறோம். எட்டணாவுக்குள்பட தீர்வையுள்ள பல எக்கர்கள் இருக்கலாம்; அவைகளில் பெரும்பாலும் சாகுபடிக்கொன்றும் உபயோகமில்லாதவைகளும் இருக்கலாம். அப்படிப்பட்ட அன்கல்டிவபில் நிலங்களை சட்டத்தின் வரம்பிலிருந்து விலக்கவோ அல்லது அளவை அதிகரித்து தனிமையாக ஸ்டாண்டர்ட் எக்கருக்குப் பொருந்தச் செய்வது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஆலய நிலங்கள், ஸ்தாபனங்களுக்குள்ள நிலங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வரம்பு கட்டுவது அவசியமில்லை.



ஆலயங்களைப் பற்றி சிலர் நினைத்துக்கொண்டிருப்பதுபோன்று நான் நினைக்கவில்லை. ஆலயங்கள் தெரிய பல தொழில் பட்டறை, அது ஒரு பெரிய தொழிற்சாலை என்றே நான் கருதுகிறேன். பல்வேறு கிராமத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதற்கும் வேலை கற்றுக் கொள்வதற்கும் இருக்கக்கூடிய ஒரு இடமாக அது இருக்கிறது. அங்கே சோஷலிஸ கருத்துக்கள் அடங்கி வித்துக்களை போட்டு விளைவிக்கக் கூடிய இடம் அது. சமத்துவத்துடன் பழகுவதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய இடம் அது. ஏழை எளியவர்களுக்கு வசதி அளிக்கக்கூடிய இடம் அது. ஒவ்வொருவரையும் சமமாக பாவிக்கக்கூடிய இடம் அது. குறைவான விலையில் உணவு கிடைக்கக்கூடிய இடமது. குறைந்த விலையில் உண்டை சாதம் கிடைக்கக்கூடிய இடம் அது. சில ஆலயங்களின் நிர்வாகத்தில் தவறான காரியங்கள் நடந்திருக்கலாம். அதற்காக எல்லாவற்றையும் ஒன்றாகச் சொல்லிவிடமுடியாது. அப்படிப்பட்ட தவறுகள் இனிமேலும் நடப்பதற்கு இடம் இல்லை. அதற்கு வேண்டிய கண்காணிப்பு இப்பொழுது இருக்கிறது. அதற்கு வேண்டி சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். அதாவது ஹிந்து ரிலிஜியஸ் அண்ட் சாரிட்டபிள் என்டோமென்ட் சட்டம் செய்து ஆலயங்கள் எந்த அளவுக்கு முறையாக பராமரிக்கப்படவேண்டுமோ அந்த அளவுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகிறது. அதனால் எந்த விதமான தவறுகளும் நடப்பதற்கு இடம் இல்லை. ஆலயங்களின் நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தற்போது கோயில் நிலங்களில் பயிர் செய்து வரும் ஏழை விவசாயிகள் விவசாயம் செய்யவும் முறையாக மகசூலை அவர்களே எடுத்துக்கொள்ளும் அளவில் இருக்க வேண்டும். அதற்குரிய முறையில் கோவில் நிலங்களை கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு வேண்டிய சட்டமும் இயற்ற வேண்டும். தனி நபர் ஐந்து எக்கர் நிலத்தை சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையில் நிபந்தனைகள் நாம் விதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒருவரால் மூன்று எக்கருக்கு மேல் சாகுபடி செய்வது என்பது முடியாத காரியம். ஒருவருக்கு மூன்று எக்கர் என்று இருந்தாலும் நிபந்தனையின்றி விட்டுவிட்டால் போதுமானது. சாதாரணமாக மூன்று எக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு நல்ல முறையில் சாகுபடி செய்து கொள்ளலாம். முப்பது எக்கரேஜ் நாம் சீலிங் வைக்கும்போது அதற்கு மேல் சர்ப்ளஸ் நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் வேண்டுமானால் ஐந்து எக்கர் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம். அதில்கூட அரசாங்கத்திற்கு சில பொறுப்புகள் இருக்கவேண்டியது அவசியம்.

அரசாங்கத்திற்கு விசேட அதிகாரம் வழங்கப்படுவதாக இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில கிராமங்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இப்பொழுது இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் சிறு நிலச்சுவான்தார்களிடம் வேலை செய்து கொண்டிருக்கலாம். ஆயிரக்கணக்கான பேர்கள் அப்படி இருக்கலாம். இந்தச் சட்டத்தை இயற்றும் காலத்தில் பல்வேறு சிரமங்கள் ஏற்படலாம். அப்படி நிலங்களில் வேலை செய்யக்கூடியவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடிய நிலைமை ஏற்படலாம். அப்படிப்பட்ட ஒரு அபாயம் வரலாம். எடுத்துக்கொள்ளக்கூடிய நிலத்தை யாருக்குக் கொடுப்பது என்று எதிர் காலத்தில் இத்தகைய வேலைகள் எல்லாம் வரக்கூடியதாக இருக்கிறது. அதனால் பல சிக்கல்கள் ஏற்படலாம் சிறு நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலத்தை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளும்போது சில இடங்களில் ஏராளமான விவசாயிகள் வெளியேற்றப்படுவார். அவைகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிராமத்திலுள்ள நிலங்களுக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று நினைக்கும்போது கிராமத்தினுடைய பொருளாதார நிலைமை வளம் முதலியவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. கிராமங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கிறது.

கிராமப் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டியதாக இருக்கிறது. பொருளாதார வசதி நிமித்தம் கிராமங்களிலுள்ள விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டால் நகரங்களுக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்படலாம். அதை தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி அதை அமுலுக்குக் கொண்டு வரும்போது ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக தொழில்கள் கற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். விவசாயிகளை கீழான நிலைக்கும் கொண்டு வரக் கூடிய நிலைமை ஏற்படும். அதற்கு அரசாங்கம் இடம் கொடுக்கக் கூடாது. சாதாரணமாக கிராமங்களுக்கு சுற்றுப்புறங்களில் தொழிற்சாலைகளை **அமைக்க**வேண்டும். அதிலும் சென்னையை அடுத்து ஏராளமான தொழிற்சாலைகளை நிறுவி வருகிறோம். கிராமப்புறங்களில் தொழிற்சாலை நிறுவி கிராமப்பொருளாதாரத்தை பாதுகாத்து பலப்படுத்த வேண்டும். 10-வது வகுப்பு வரை இலவச கல்வியளிக்கும் வசதியும் இச் சட்டம் அமுலுக்கு வருகிற காலத்தில் கிடைத்துவிடலாம் என்று நம்புகிறேன். அது ஓரளவு கிராமத்தைக் கவர்ச்சிக்கும். நில விநியோகத்தில் அப்படி வெளியேற்றப்படக்கூடியவர்களுக்கு முதலிடம் கொடுக்கக் கூடிய அளவில் திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. சர்க்காருக்கு சொந்தமான சாகுபடிக்கு லாயக்காக உள்ள ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களை உடனடியாக நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். அவற்றை கூட்டுறவு முறையில் சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மிஞ்சக் கூடிய நிலத்தையும் சர்க்கார் என்ற முதலாளிக்குச் சொந்தமான விவசாய நிலத்தையும் ஏழை விவசாயிகளுக்கு பங்கிட்டுக்கொடுத்து கூட்டுறவு அமைப்பின் மூலம் அதிகப்படியான விவசாயிகளை விவசாயத்தில் ஈடுபடுத்தி அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். மற்ற வசதிகளையும் இப்படிப்பட்ட வசதிகளையும் செய்துகொடுக்க அரசாங்கம் யோசிக்கும் என்று நம்புகிறேன். இத்தகைய நல்ல சீர்த்திருத்தத்துடன் செலெக்ட் கமிட்டி நல்ல சீர்த்திருத்தங்களைச் செய்யும் அதன் மூலம் நல்ல காரியங்கள் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

* **Sri P. ARASAN** : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உச்சவரம்பு சட்டத்தை மிகவும் வரவேற்கிறேன்.

உச்சவரம்பு சட்டத்தைப் பற்றி பேசும்போது பல அங்கத்தினர்கள் பல திருத்தங்களுடன் நல்ல முறையில் பேசினார்கள். அதை நான் ஓரளவுக்கு வரவேற்கிறேன். இருப்பினும் நான் கொஞ்சம் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த உச்சவரம்பு சட்டத்தில் 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 எக்கரும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் அதிகப்படியாக 5 எக்கர் வீதம் சேர்த்துகொடுக்க சட்டத்தில் வகைச் செய்யப்பட்டிக்கிறது. ஆகவே, நல்ல முறையில் விளையக் கூடிய நிலங்களில் இன்னும் குறைத்து உச்சவரம்பு கட்டவேண்டும். நில உச்சவரம்பு கட்டிய பிறகு மிராசுதாரர்களுக்கு, மிராசுதார்கள் நிலத்தில் இறங்கி வேலை செய்யாதவர்கள். பண்ணைச சாகுபடி செய்து லாபம் அடையும் நோக்கத்துடன், குத்தகைக்கோ வாரத்துக்கோ ஒப்புக்கொள்ளக்கூடாது என்ற சட்டம் கொண்டுவர வேண்டும். நில உச்சவரம்பு கட்டிய பிறகு எந்த விவசாயி அந்த நிலத்தில் பயிரிட்டுவந்தார்களோ அவர்களுக்கே அந்தந்த நிலத்தை கொடுத்து சாகுபடி செய்ய உரிமை கொடுக்க வேண்டும். இருப்பினும் உச்சவரம்புக்கு முன்னதாக எந்த ஒரு விவசாயியை வெளியேற்றபட்டிருந்தாலும், அந்த விவசாயிக்கே அந்தந்த நிலங்களை கொடுக்கவேண்டும் என்று சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும். கோவிலுக்கு 200 எக்கர் நிலம் உச்சவரம்பு கொண்டு வந்திருக்கிறது. அதைக் கொஞ்சம் குறைத்தால், நன்றாய் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக அந்த கோவில் நிலங்களை, 3 வருடத்திற்கு ஒருமுறை ஏலத்திற்கு விடுகிறார்கள். அதை 5 வருடத்திற்கு ஒருமுறை ஏலம் விடவேண்டும் என்று திருத்தம்





கொண்டு வரவேண்டும். அப்படி ஏலம் விடும்போது மிராசுதார்களே ஏலம் எடுத்துதான் சொந்த மண்ணை சாகுபடிக்கு வைத்துக்கொள்ளுகிறார்கள். அல்லது வேறு அதிகப்படியான குத்தகைக்கு விட்டு லாபம் அடைகிறார்கள். அந்த ஏலத்தை எந்த ஒரு விவசாயியாயிருந்தாலும், அரிஜன விவசாயியாயிருந்தாலும், இந்து விவசாயியாயிருந்தாலும் சரி, பின் தங்கிய விவசாயியாயிருந்தாலும் சரி, தானும் தன் குடும்பத்தார்களும் நிலத்தில் இறங்கி வேலைச் செய்யக்கூடியவர்களுக்கு மொத்தமாக இருக்கும் நிலத்தைப் பிரித்து பிரித்து குத்தகைக்கு விட்டு, நேரடியான குத்தகையாக விட்டு ஏழை விவசாயிகளை ஆதரித்து உணவு உற்பத்தி அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேற்படி நிலங்களை 3 வருடத்திற்கு ஒருமுறை ஏலம் விடுவதால் விவசாயம் செய்யும் விவசாயிகள் நல்ல முறையில் மராமத்து வேலை, எருவு, தழை, முதலியவைகளைப் போட்டு பண்படுத்தி சாகுபடி செய்தும், திடீரென்று வெள்ளத்தினாலும் காய்ச்சல், பூச்சி விழுந்து விளையாமல் போய்விடுகிறது. ஆகையினால் அவர்கள் நஷ்டம் அடைகிறார்கள். ஆகவே 5 வருடங்களுக்கு தொடர்ந்து சாகுபடி செய்தால் ஒரு வருடத்தின் நஷ்டத்தைப் மறு அல்லது மறு வருடத்தில் நஷ்டத்தை போக்கி லாபம் அடைய வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த உச்சவரம்புத் திட்டத்தை நான் வரவேற்று என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே சட்டமன்றத்தில் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நில உச்சவரம்பு மசோதாவை ஆதரித்து சிற்சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். இதிலே நிலச்சுவான்தார்களுக்கு 30 எக்கர் என்று வைத்திருப்பது மிகவும் பொருத்தமானது என்று கருதுகிறேன். இந்த 30 எக்கரிலும் 5 எக்கர் சொந்தமாக சாகுபடி செய்யலாம். மற்றதை குத்தகைக்கோ வாரத்திற்கோ விட்டுவிடலாமென்று செய்திருக்கிறார்கள். சொந்தமாக சாகுபடி செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு இது ஒரு வாய்ப்பையும் சந்தர்ப்பத்தையும் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமுடையது. இதைக்கூட சிலர் 30 எக்கர் அதிகம் 10 அல்லது 15 எக்கர் செய்யலாமென்று சொல்லுகிறார்கள். எத்தனையோ வருடங்களாக அந்த சொத்தை வைத்துக்கொண்டு சுகபோகமாக வாழ்ந்து வந்தவர்களை இன்று திடீரென துன்பத்துக்குள்ளாக்கக்கூடாது கொஞ்சம் தாராள மனப்பான்மைக் காட்டவேண்டியது அவசியம். அதன் காரணமாக சர்க்கார் 30 எக்கர் என்று செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி ஆளும்கட்சி இருப்பவர்களிடத்திலேயே இரண்டு வித கருத்துக்கள் வருகிறது என்றார்கள். எதிர்கட்சியில் உள்ளோர்களிடத்திலும் இதைப்பற்றி ஒரே விதமான கருத்தில்லை. சிலர் 30 எக்கர் என்பதை அதிகப்படுத்தவேண்டுமென்றும், சிலர் அது மிகவும் அதிகமானது என்றும் அதைக் குறைத்துவிடவேண்டும் என்றும் பேசியதை பார்த்தோம். ஆகவே ஆளும் கட்சியில் உள்ளவர்களிடம் மட்டும் அல்ல. எதிர்கட்சியில் உள்ளவர்களிடத்திலும் இரண்டுவித மனப்பான்மை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். எதிர்கட்சியில் நண்பர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள் புலி வரப்போகிறது புலி வரப்போகிறது என்று சொல்லி, கடைசியில் புலித்தோல் போர்த்திய பசு தான் வந்திருக்கிறது பசுவானாலென்ன, பாலாவது குடிக்கலாமென்றால் அதுவும் காளையாக வந்திருக்கிறது என்றார்கள். உண்மையிலே இதில் தவறு ஒன்றுமில்லை. பெரிய பெரிய ஜமீன்தார்கள் நிலச்சுவான்தாரர்கள் மிராசுதாரர்கள் எல்லாம் அஞ்சக்கூடிய வரையில் தங்ககளுடைய சொத்துக்களையெல்லாம் பிரித்துவிடக் கூடிய நிலையில் புலி வருகிறது என்று நிச்சயம் பயப்படக் கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவருவதன் நோக்கமே குவியலாக ஓரிடத்தில் நிலமிருக்கக்கூடாது அது பரவலாக பலர் கையில் இருக்கவேண்டுமென்பதுதான் அந்த நோக்கம். இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது. அது வரவேற்கத்தகுந்தது. அதுவும் அந்த நிலச்சுவான்தார்கள் யாருக்கு அந்த நிலத்தை எழுதி வைத்தார்கள்? தங்களுடைய குடும்பத்திற்குள் பிரிவினை செய்துக் கொண்டார்கள். அதிகப்படியான

நிலத்தை குத்தகைக்கு வைத்துக்கொண்டவர்களிடமே விற்றிருக்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்கு புரியவில்லை. நம்மில் யாராக இருந்தாலும் நமக்கும் சொத்து இருந்தால் அப்படித்தான் பந்தோபஸ்து செய்துகொள்வோம். எப்படியாவது நம்முடைய சொத்தை காப்பாற்றிக்கொள்ள முயற்சிப்போம். அந்த முறையில் சில நிலச்சுவான் தாரர்கள் செய்திருக்கலாம். 2,000-க்கு மேல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுவிட்டனவே, இப்படி பிரிப்பதற்கு அவகாசம் கொடுத்துவிட்டீர்களே, ஆகவே இந்த சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்ட் கொடுக்கவேண்டும் என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் 30 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ள முடியாது அதுவும் 5 ஏக்கர்தான் சொந்த சாகுபடிக்கு என்று வைத்துக்கொள்ளலாம். பாக்கி வாரத்திற்கோ, குத்தகைக்கோ விடலாம். உழவர்களையும் நாம் அனாதையாக விடவில்லை. 60 : 40 என்ற நியாயவாரச் சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகையால் நிலம் வேறு எங்கேயாவது போய்விடவில்லை. பழத்தோட்டம் பாக்குத்தோட்டம், தென்னந்தோட்டம், கோவில், அதற்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருப்பதை சிலர் கண்டித்து பேசியிருக்கிறார்கள். பல வகைகளில், ஓரளவிற்கு பாக்குத் தோட்டங்கள், காப்பித் தோட்டங்கள்,
1-30 p.m. கரும்புத் தோட்டம் இவைகளுக்கெல்லாம் அவசியம் விதிவிலக்கு தேவையில்லையென்று நானும் கருதுகிறேன். ஏனெனில், தானியத்தை இதை விட அவற்றில் கிடைக்கும் வருமானம் குறைந்து போகவில்லை. தானியத்தில் கிடைப்பதைவிட. அவைகளில் நல்ல வருமானம் கிடைக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதையும் கவனித்து அவைகளையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது, வருடாந்திரப் பயிரானாலும் அவைகளிலிருந்து நல்ல அளவிற்கு லாபம் வருவதால் அவைகளையும் இதில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று மறுமுறையும் கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : டையமாகி விட்டது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். மடங்களுக்கு நிலங்கள் பூராவையும் விட்டுவிடக் கூடாது என்று பலர் சொல்கிறார்கள். அது தவறு. இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு நல்ல தெய்வ நம்பிக்கையும், நல்ல பண்பாடும், நல்ல ஒழுக்கமும் வளர்ந்தோங்க வேண்டுமென்று சொன்னால், நம் கோவில்கள் கலைக்கோவில்களாகி விளங்கி நல்ல முறையில் இருக்கவேண்டுமென்ற நினைப்போடு, வேண்டுமானால் கோவில்களை நல்ல முறையில் நிர்வகிக்க தகுந்த ஏற்பாடுகள் செய்து அவைகளை நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாமே தவிர, கோவில்களில் நிலம் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது தவறு என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet against at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—Statutory Rules and orders.

* 106. *Notification issued with G.O. No. 3710, Revenue, dated 10th December* 1959, *amending rule* 50 (5) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Rules*, 1948. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]



* 107. *Notification issued with G.O. Ms. No.* 3563, *Home, dated 16th December* 1959, *exempting trailer MDO* 2648 *belonging to United Nations International Children's Emergency Fund and used for B.C.G. Vaccination Campaign, Unit II, Thanjavur, from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

* 108. *Notification under section* 22 *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding settlement of certain estates taken over in Mudukulathur taluk (Ramanathapuram district) issued with Memorandum No.* 103676-*J*-3|59-3, *Revenue, dated 11th January* 1960. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

### B.—Reports, Notifications and other papers.

* 65. *A short review of the activities of the Excise and Prohibition Department, for the first half-year* 1959 *commencing from 1st April to 30th September* 1959.

† 66. *The Madras Coinage (Alteration of References) Bill*, 1960 (*L.A. Bill No.* 9 *of* 1960).

* Laid on the table of the House on 18th April 1960.
† Circulated on 16th April 1960.

## APPENDIX I.

[Vide answer to clauses (b), (c) and (d) of the starred question No. 723 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 19th April 1960, page 245 supra.]

*Clause (b) of the question.*—Orders were issued in G.O. Ms. No. 908, Health, dated 22nd March 1960 negativing the requests (i) that the nine Sanitary Inspectors (Rs. 40—3—55—4—75—5—120) who are now retained as a separate cadre, should be equated with the Madras cadre of Health Inspectors (Rs. 60—3—90—E.B.—4—130) and (ii) that those among the Field Assistants and Health Assistants who are now retained as separate cadres, and who are eligible for promotion, should be promoted as Health Inspectors even with effect from 1st November 1956. However, it has been proposed to make the qualified Sanitary Inspectors, Field Assistants and Health Assistants among the transferred personnel eligible for promotion as Health Inspectors by amending the special rules for the Madras Public Health Subordinate Service in consultation with the Madras Public Service Commission. Pending a decision on the proposal, the Director of Public Health has been instructed to appoint the qualified and suitable candidates from among the Sanitary Inspectors, Field Assistants and Health Assistants as Health Inspectors, immediately under the emergency provisions in vacancies that are available.

*Clause (c) of the question—Sanitary Inspectors.*—Three posts of Health Inspectors (Rs. 80—150) transferred from the former Travancore-Cochin State were equated with the corresponding cadre of Health Inspectors in this State (Rs. 60—130). Nine posts of Sanitary Inspectors on a lower scale (Rs. 40—120) transferred from the former Travancore-Cochin State instead of being equated to the same cadre of Health Inspectors to which posts on Rs. 80—150 were equated, are kept as a separate cadre as there is no corresponding cadre to which they could be equated.

*Health Assistants.*—Thirty-six posts of Health Assistants (in the scale of Rs. 40—100) which were transferred from the former Travancore-Cochin State are retained as a separate cadre, as there is no corresponding cadre in this State to which they could be equated.

*Clause (d) of the question.*—The recruitment referred to is only the normal annual recruitment through the Madras Public Service Commission for the requirement of the State as a whole and it has no reference to Kanyakumari district alone.



## APPENDIX II.

[Vide answer to starred question No. 729 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri M. P. Sarathy) at the meeting of the Legislative Assembly held on 19th April 1960, page 250 supra.]

(a) The following quantities of fertilizers were intimated to the Government of Indian as the requirements of this State for 1959-60 :—

| Fertilizers. (1) | Requirements. (2) TONS. |
|---|---|
| *Nitrogenous fertilizers—* | |
| 1 Ammonium Sulphate .. .. .. | 160,000 |
| 2 Urea .. .. .. .. | 25,000 |
| 3 Ammonium Sulpahate Nitrate .. .. | 25,000 |
| 4 Calcium Ammonium Nitrate .. .. | 7,500 |
| *Phosphatic fertilizers—* | |
| 1 Superphosphate .. .. .. .. | 61,000 |
| 2 Triple Superphosphate .. .. .. | 2,000 |
| 3 Ammoniated Triple Superphosphate .. | 2,000 |
| 4 Mono Ammonium Phosphate .. .. | 200 |
| 5 Di-ammonium Phosphate .. .. | 200 |
| 6 Nitrophosphate .. .. .. .. | 3,000 |
| 7 Muriate of Potash .. .. .. .. | 12,500 |
| 8 Sulphate of Potash .. .. .. .. | 5,000 |

(b) The following quantities of fertilizers were allotted to this State during 1959-60 :—

| Fertilizers. (1) | Quantity allotted. (2) TONS. |
|---|---|
| *Nitrogenous fertilizers—* | |
| Ammonium Sulphate .. .. .. .. | 83,700 |
| Urea .. .. .. .. .. | 26,472 |
| Ammonium Sulphate Nitrate .. .. | 13,080 |
| Calcium Ammonium Nitrate .. .. .. | 6,650 |
| *Phosphatic fertilizers—* | |
| Superphosphate.. .. .. .. .. | 54,000 |
| Triple Superphosphate .. .. .. | 890 |
| Ammoniated Triple Superphosphate .. | 800 |
| Complex Fertilisers .. .. .. | 163 |
| Di-ammonium phosphate .. .. .. | 100 |
| Mono Ammonium phosphate .. .. .. | 150 |
| Nitrophosphate .. .. .. .. | 1,550 |

(c) The distribution of the chemical fertilizers, mentioned above except super-phosphate, is done as a Government Trading Scheme under the supervision and control of the Board of Revenue (Food Production) and Collectors of the districts.

(2) Under the existing set-up, the District Co-operative Supply and Marketing Society in each district except Thanjavur and the Tanjore Co-operative Marketing Federation, Ltd., in Thanjavur district are functioning as Government stockholders. Retail distribution is done by authorised distributors appointed by the Collectors. The distributors obtain stocks from the Government stockholder's godown on authorisation issued by the Collector or other authorised officer after pre-payment of cost. There are four such distributors for each taluk, of which, one is a Co-operative Society and the remaining three are private concerns. Each distributor is required to open as many depots as possible subject to a minimum of 5 depots in a deltaic taluk and three depots in non-deltaic taluk.

(3) One half of the total quantity of fertilizers allotted for the taluk, is earmarked for distribution through the Co-operative Societies and the balance is equitably distributed to the other three private merchants.

(4) In the Development Blocks, only Co-operative Societies function as distributors. Fresh appointments of new distributors in other areas is confined only to co-operative institutions if they are available.

(5) Twenty-five per cent of the fertilizers annually allotted to this State under the Central Fertilizer Pool, for distribution under the Government Trading Scheme, is earmarked for distribution to the manure mixing firms for preparation of mixtures.

(6) The retail prices of the fertilizers are fixed throughout the State at uniform rates.

(7) Super-phosphate is being distributed by the manufacturing firms to the consumers through their network of agencies under informal control of the Government.

## APPENDIX III.

[Vide answer to starred question No. 742 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 19th April 1960, page 264 supra.]

(அ) குழந்தைகள் படத் தயாரிப்புக்கு இம் மாநில சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி—

டில்லியிலிருக்கும் குழந்தைகள் படச் சங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காகவும், குழந்தைப் படங்களை உற்பத்தி செய்வதற்காகவும் இம் மாநில சர்க்கார் சென்னை ராஜ்யக் குழந்தைகள் படக்குழு ஒன்றை அமைத்திருக்கிறது. இக்குழு இதுவரையில் "ஜல் தீப்", "சுக் அண்டு கெக்" என்ற குழந்தைப் படங்களைத் தமிழாக்கியிருக்கிறது. சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியின் திரைப்பட உற்பத்திக் கலை மாணவர்கள் தங்கள் பயிற்சியின் ஒரு பகுதியாக "அலாவுதீனும் அற்புத விளக்கும்" என்ற குழந்தைகளின் பொம்மலாட்டப் படமொன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்; அதற்கென சுமார் ரூ. 4,040 இதுவரைக்கும் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தப்படம் சீக்கிரம் தயாராகிவிடும்.

(ஆ) குழந்தைப் படங்களை சென்னைக்கு வெளியே மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் காட்ட எடுத்துக்கொண்ட முயற்சி—

அரசாங்கம் எம்முயற்சியும் இன்னும் எடுக்கவில்லை. ஆனால், ராஜ்யக் குழந்தைகள் படக்குழு தான் எடுத்த இருபடங்களையும் விநியோகஸ்தர் மூலம் எல்லா மாவட்டங்களிலும் காட்ட முயற்சி எடுத்திருக்கிறது.





(இ) இதுவரை தயாரான குழந்தைகள் படங்கள்—

அரசாங்கத்தாரால் தயாரிக்கப்பட்டது ஒன்றுமில்லை. பாலிடெக்னிக் மாணவர்கள் தங்களின் பயிற்சியின் ஒரு பகுதியாக எடுத்துக்கொண்டிருக்கும் மேலே (அ) பிரிவில் குறிப்பிட்ட படத்தைத் தவிர, வேறு எப்படமும் அரசினரால் எடுக்கப்படவில்லை.

(ஈ) அவற்றின் செலவுகள்—

சென்னை ராஜ்யக் குழந்தைகள் படக்குழு "ஜல் தீப்" என்னும் ஹிந்தி குழந்தைப் படத்தை தமிழாக்கம் செய்வதற்கு ரூ. 7,000 மான்யமாக அரசாங்கம் வழங்கியுள்ளது. இதைத் தவிர சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியின் திரைப்பட உற்பத்திக்கலை மாணவர்கள் பயிற்சிக்காக எடுத்துக்கொண்டிருக்கும் "அலாவுதீனும் அற்புத விளக்கும்" என்ற படத்திற்கு இதுவரை ரூ. 4,040 செலவு செய்யப்பட்டிருக்கிறது.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

---

## Wednesday, 20th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—OBITUARY REFERENCE TO SRI P. M. VELAYUTHAPANI, EX-M.L.A.

MR. SPEAKER : *இந்தச் சட்டசபையின் பழைய அங்கத்தினரான திரு. பி. எம். வேலாயுதபாணி அவர்கள் இம்மாதம் 17-ம் தேதியன்று மறைந்துபோன செய்தியை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. வேலாயுதபாணி அவர்கள் இந்தச் சட்ட சபையிலிருந்து நல்ல பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் டெல்லியில்* Constituent Assembly-*ல் அங்கத்தினராக நல்ல வேலை செய்திருக்கிறார்கள். சென்னை நகர சபையிலும்* 12 *வருடங்கள் இருந்து நல்ல பணியாற்றியிருக்கிறார்கள். என்னுடைய நகரசபையில் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள். பல ஹரிஜன கமிட்டிகளிலும், மதுவிலக்கு கமிட்டிகளிலும், அங்கத்தினராக இருந்து பலவிதமான சமுதாய வேலைகள் செய்திருக்கிறார்கள். ஆகவே கனம் அங்கத்தினர்கள் அனைவரும் அவர்களுடைய மறைவுக்கு வருத்தம் தெரிவிக்கும் முறையில் ஒரு நிமிட நேரம் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*கனம் அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் எழுந்து நின்றனர்.*

### II.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

*Reserve forests in Pudukkottai*

* 744 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the work relating to the notification of all the reserve forests in Pudukkottai Division has been completed and whether the entire reserve forests area has been separately delimited and demarcated; and

(*b*) whether it is a fact that a large scale illicit tree cutting is going on without any check ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Sir, out of the total area of about 58,786 acres of forests in Pudukottai Range, survey and demarcation work has been completed over an extent of 32,286 acres, and the work is in progress over an extent of 16,594 acres. The remaining area of 9,906 acres will be taken up, soon after the work in hand is completed.

(*b*) If the question is about trees in the Reserved Forests, the answer is in the negative.

SRI V. ARUNACHALA THEVAR : *புதுக்கோட்டையில் நார்த்தா மலை காடுகளிலிருந்து சுமார்* 50 *ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மரங்களை திருட்டுத்தனமாக வெட்டிப் போனதின் காரணமாக, ரெவின்யூ இலாகாவும், பாரஸ்ட் இலாகாவும் தங்களுக்கு இதன் பேரில் சம்பந்தமில்லை என்று*

சொன்னதின் காரணமாக இப்போது கலெக்டர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா, இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் எனக்குத் தெரிகின்ற அளவுக்கு தகவல்கள் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இதில் குறிப்பிட்டிருக்கின்ற காடு ரிசர்வ் பாரஸ்டில் இல்லை. இதனால் பாரஸ்ட் இலாகாவுக்கு இதில் எந்த விதமான பொறுப்புமில்லை. இருந்தாலும் கலெக்டர் அவர்கள் இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக ரெவின்யூ இலாகாவோடு கலந்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

SRI T. T. DANIEL: May I know, Sir, what the nature of the boundry is which this Government are erecting usually to demarcate the boundary of the reserved forests from the adajacent private holdings ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Just as it happens in other cases, stones are erected and boundary is marked.

SRI R. SRINIVASA IYER : இந்தப் புதுக்கோட்டையில் சுமார் 1,500 குடும்பங்கள் விறகு வெட்டுவதை நிறுத்தமாட்டோம் என்று சொல்லுவதாக தெரிகிறது. இவ்விதம் காடுகளிலிருந்து விறகு வெட்டுவதை தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எனக்குத் தெரிந்த வரையில் விறகுக்காக மரங்களை வெட்டுவதில்லை. உலர்ந்த மரங்களைத்தான் விறகுக்காக எடுத்துக்கொண்டு போகிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவிலும் செங்கோட்டை பகுதிகளிலும்தான் மரங்களை வெட்டி விறகுக்கு உபயோகிப்பதாக தெரிகிறது. இவைகளை எல்லாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. ARUNACHALA THEVAR : எவ்வளவு பேர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

SRI K. B. S MANI : தனிப்பட்டவர்கள் காடுகளிலிருந்தும் ரிசர்வ் பாரஸ்டு அல்லாத காடுகளிலிருந்தும் தனிப்பட்டவர்கள் மரங்களை வெட்டுவதை தடுக்க சட்டம் ஏதாவது இருக்கிறதா, அப்படியானால் இதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட காடுகள் அதிகமாக ஒன்றுமில்லை.

SRI A. VEDARATHNAM : இந்த மரம் வெட்டுவது என்பது புதுக்கோட்டை காடுகளில் மட்டும் அல்ல. காடுகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கு எல்லாம் இவ்விதமாக திருட்டுத்தனமாக விறகு வெட்டிக்கொண்டுப் போவது நடந்து கொண்டிருக்கிறது. இவைகளை நன்றாக கண்காணித்து தடுக்க அரசாங்கம் முன் வருமா ? அதற்கான ஏற்பாடு இப்போது என்ன செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விறகு பற்றாக்குறை இருப்பதின் காரணமாக எவ்வளவு கண்காணிப்பு இருந்தாலும் விறகு வெட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதை தவிர்ப்பதற்கு எந்த வகையில் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ அந்த வகையில் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.



*Action against Police Officers for corruption*

* 745 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of cases proceeded against officers in the rank of District Superintendents of Police on charges of corruption, etc., since the year 1956; and

(b) when and what action has been taken on those who were found guilty ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Three, Sir.

(b) The allegations against one of the three officers were not substantiated and hence the proceedings were dropped. The proceedings against the other two are still pending.

MR. SPEAKER : Are they judicial proceedings or are they departmental proceedings ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: They are not judicial proceedings. But they are departmental proceedings before a tribunal.

MR. SPEAKER : If hon. Member wants to put supplementary questions, will they not prejudice the enquiry ?

(Sri K. Anbazhagan rose.)

MR. SPEAKER : In all fairness to the gentlemen, any questions put may prejudice their case. Anyway, I allow the hon. Member to put general questions without referring to individuals.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிற இந்த மூன்று பேர்களில் ஒருவர் மீது ருசு இல்லை என்ற காரணத்தால் அவர் மீதுள்ள நடவடிக்கை கைவிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் மீது எப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டது, அது எப்படி ருசுவாக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I am advised that I should not give any further information in this matter.

(ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் எழுந்திருந்தார்).

MR. SPEAKER : இதில் வேறு விபரங்கள் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்களே, இனிமேல் எதைக் கேட்கப் போகிறீர்கள் ?

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், திருச்சியில் இருக்கக் கூடிய டி. எஸ். பி.-யின் பேரில் . . .

MR. SPEAKER : இந்தக் கேள்வி இதிலிருந்து எவ்விதம் எழும் ? இதற்குத் தனியாகத்தான் கேள்வி போட வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், சேலத்தில் இப்போது டி.எஸ்.பி.-யாக இருக்கக்கூடியவர் . . .

SRI S. LAZAR : பாயிண்ட் ஆப் ஆர்டர். The hon. Member cannot name individuals.

MR. SPEAKER : நான்தான் முன்பே சொல்லிவிட்டேனே, இதுபோன்ற கேள்விகளை இந்தக் கேள்வியோடு சம்பந்தப்படுத்திக் கேட்கக் கூடாது என்று.

[20th April 1960

SRI V. K. KOTHANDARAMAN : இந்த விபரங்களை எல்லாம் எவ்விதம் அறிந்து கொள்வது ?

MR. SPEAKER : அதற்கு தனித்தனியாக கேள்வி போட்டுக் கொள்ள வேண்டும். The question is out of order. I would not allow it.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த வழக்குகளில் விசாரணைக்கு இருக்கின்ற போலீஸ் அதிகாரிகள் யார் யார் என்பதை, பொதுமக்களின் நலனை கருதி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் அதிகாரிகள் மீது சாதாரணமாக குற்றம் சாட்டப்படும்பொழுது இலாகா மூலம் விசாரிக்கப்பட்டு வருகிறது. இண்டியன் போலீஸ் சர்வீசிலுள்ள அதிகாரிகளை விசாரிப்பதற்கு தனியாக விதிகள் இருக்கின்றன. அதன்படி விசாரித்து அரசாங்கம் முடிவு எடுக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : இதில் ஒருவருக்கு லஞ்சம் கொடுத்ததற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. யார் யார் லஞ்சம் கொடுத்தார்கள் என்பதையும் கண்டு பிடித்து அவர்களின் மீதும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு போலீஸ் அதிகாரிகளின் மீதும் விசாரணை நடைபெற்று வருகிறது. இதற்கு மேல் தகவல்கள் கூறுவது உசிதம் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI S. LAZAR : இதுபோன்ற அதிகாரிகள் மீது கேஸ் போடுகின்றபொழுது, அதில் பிரைமாபேஸி கேஸ் இருக்கின்றது என்று தெரிவதற்கு முன்பே சஸ்பெண்ட் செய்து விடுகிற பழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. இனிமேல் இதை மாற்றி பிரைமாபேஸி கேஸ் இருக்கிறது என்று தெரிந்து பின்னுல் அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இனிமேல் என்பதில்லை. இப்போதும் பிரைமாபேஸி கேஸ் என்று தெரிவதற்கு முன்னுல் சஸ்பெண்ட் செய்வதில்லை.

### *Land survey*

* 746 *Q.*—SRI P. G. KARUTHIRUMAN (on behalf of SRIMATHI KAMALAMBUJA AMMAL) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா ?

(அ) நிலச் சர்வே செய்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ?

(ஆ) எத்தனை ஆண்டுக்கொருமுறை சர்வே செய்ய வேண்டும் ?

(இ) சமீபத்தில் நிலம் சர்வே செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமிருக்கிறதா ? அப்படியானுல் எப்பொழுது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 40 years.

(*b*) There is no fixed time-limit for resurvey.

(*c*) No proposal for a general resurvey is before Government.

SRI A. VEDARATHNAM : நிலங்களை மறு ஸர்வே செய்யாவிட்டாலும், நமது மாநிலத்தில் இன்னும் ஸர்வே செய்யப்படாத பகுதிகள் பெருமளவுக்கு இருப்பதால், அப்படிப்பட்ட "அன்ஸர்வேய்ட் ஏரியா"வையாவது ஸர்வே செய்ய அரசாங்கம் முன் வருமா ? கனம் அமைச்சருக்கே தெரியும், வாய்மோட்டிஉள்ள நிலங்களை நிலமில்லா விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது ; ஆனுல் அந்த



20th April 1960]

நிலங்கள் ஸர்வே செய்யப்படாமலிருக்கும் காரணத்தால் அவை இன்னும் நிலமில்லா விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. எனவே, அப்படிப்பட்ட "அன்ஸர்வேய்ட் ஏரியாவை" யாவது ஸர்வே பண்ண அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது எங்கெங்கு ஸர்வே செய்ய வேண்டுமோ அங்கெல்லாம் ஸர்வே செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1958-மிருந்து பவானி, கோபிசெட்டிபாளையம், ஈரோடு, தாராபுரம் ஆகிய தாலூகாக்களில் ஸர்வே நடந்துவருகிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் ஸர்வே நடந்து வருகிறது. எனவே, எங்கெங்கு சர்வே அவசியமோ அங்கெல்லாம் சர்வே நடந்து வருகிறது. வாய்மோட்டில்கூட ஸர்வே பூர்த்தியாகிவிட்டது என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் அங்கு ஸர்வே சீக்கிரம் பூர்த்தியாகும், நிலமும் வழங்கப்படும் என்று நினைக்கிறேன்.

SRI T. T. DANIEL: Sir, may I know the purpose for which the resurvey is being conducted in the Kanyakumari district although there has already been resurvey and resettlement in that district ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, it was undertaken as it was found necessary from the nature of the survey records available and the state of things on ground, in the interest of administration and in the interest of the ryots. So, we wanted to have a first-class survey of the conditions of the land prevailing there.

SRI V. SUBBIAH : அன்ஸர்வேய்ட் நிலங்கள் ரொம்ப இருக்கின்றன. இதனுல் ஜமீன் பிரதேசங்களிலும் இனும் பிரதேசங்களிலும் பல வருஷங்களாக ஸர்வே செய்திருந்தாலும், ஸெட்டில்மெண்ட் ஆகாதிருக்கிறது. அங்கெல்லாம் எப்போது ஸெட்டில்மெண்ட் ஆகும் ? அங்கே நிலங்கள் ஸெட்டில்மெண்ட் ஆகாததால் அங்குள்ள விவசாயிகள் கூட்டுறவு பாங்குகளிலிருந்தோ நில அடமான பாங்குகளிலிருந்தோ எந்த விதமான கடனும் பெற முடியவில்லை. எனவே அங்கெல்லாம் கூடிய சீக்கிரம் ஸெட்டில்மெண்ட் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜமீன், இனும் பிராந்தியங்களில் சர்வே அநேகமாக முடிந்துவிட்டது. அநேகமாக இன்னும் மூன்று வருடங்களுக்குள் எல்லா இடங்களிலும் ஸெட்டில்மெண்ட் வேலை பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

SRI K. VINAYAKAM: Sir, is the Hon. Minister aware of the facts that there are large tracts of land in the City of Madras in Puliyur, Kodambakkam and Saidapet which are yet to be surveyed and which are villages taken over from shortriyamdars and because of this, acquisition proceedings of the City Improvement Trust and the Corporation of Madras are hampered and are still stagnant ? If so, will the Government issue orders to appoint a Special Survey Party instead of trying to get them from Pattukkottai or some other place so that they might undertake special survey operations in the City of Madras ?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, if the situation warrants that there should be a survey, it will be undertaken. As regards the appointment of Special Survey Parties, whichever party is released, it is being put on this work in some other place. I may tell the hon. Member that there is no party sitting idle in Madras to be switched over to this work. Wherever and whenever a party is released from any work, it is being put on this sort of work in other places.

Sri N. K. PALANISAMI: May I know from the Hon. Minister whether there is any decision or order to the effect that there should be a survey of the lands once in every twenty years? If so, may I know why the Government are not able to conduct the survey periodically?

The Hon. Sri M. A. MANICKAVELU: What the hon. Member is referring to is not about survey. It is about settlement. Once in thirty years, there used to be settlement operations. As regards re-survey, it is done whenever it is found necessary. For instance, general survey was finished in 1928. Afterwards, as I said, if in any area it is needed, we are taking steps to have it surveyed.

Sri S. LAZAR: எஸ்டேட் அபாலிஷன் ஆக்டுக்குப் பிறகும் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்படும் ஏராளமான பஞ்சாயத்து போர்டுகளுக்கு ஸர்வேயர்கள் தேவை என்ற காரணத்தாலும் தேவைக்கேற்ற அளவில் ஸர்வேயர்களின் எண்ணிக்கை இல்லை என்ற காரணத்தாலும் இந்த வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது என்று இலாகாவினர் சொல்வதில் உண்மை இருக்கிறதா? அப்படியானால் ஸர்வேயர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இது சம்பந்தமாக நிலைமை முன்பு எப்படி இருந்தபோதிலும், இப்போது ஸர்வேயெல்லாம் முடிந்துபோய்விட்டது என்று நான் சொன்னேன். ஆகையால் ஸர்வேக்காரர்களுக்கு இனி மேலும் வேலை கொடுக்க வேண்டும் என்ற பிரச்னை தான் இனிமேல் ஏற்படுமே தவிர இப்போது போதிய அளவில் ஸர்வேயர்கள் இல்லை என்று சொல்வதற்கில்லை.

Sri R. SRINIVASA IYER: ஸர்வே நடந்து 40 வருஷங்கள் ஆகிவிட்டன. இப்போது "ரீசர்வே" பண்ணவேண்டுமென்று தோன்றவில்லை என்று கனம் அமைச்சர் சொன்னார். ஸர்வே நடந்து 40 வருஷங்கள் ஆகிவிட்டதால், இப்போது சில நிலங்கள் சேர்ந்திருக்கும், சில நிலங்கள் பிரிந்திருக்கும், மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும். எனவே ஸர்வே நடந்து 40 வருஷங்கள் ஆகியுள்ள கிராமங்களில் மட்டுமாவது "ரீசர்வே" நடத்த அரசாங்கம் உத்தரவிடுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அப்போதைக்கப்போது ஏற்படும் மாறுதல்களை வில்லேஜ் ஆபீஸர்ஸ் அப்போதைக்கப்போது எழுதிக்கொண்டு வருகிறார்கள். மாறுதல்கள் பெரிய அளவில் ஏற்பட்டால் தான் ஸர்வே பண்ண வேண்டும். மற்றப்படி, அப்போதைக்கப்போது ஏற்படும் மாறுதல்கள் வருடாவருடம் குறிக்கப்பட்டுத்தான் வருகின்றன.

Sri S. M. ANNAMALAI: இப்போது ஜமீன் நிலங்களிலும் இனாம் நிலங்களிலும் ஸர்வேயும் ரீசெட்டில்மெண்டும் நடந்து வருகின்றன. இந்த நிலங்களில் ஸர்வேயும் ரீசெட்டில்மெண்டும் முடிந்த பிறகு, ரயத்துவாரி நிலங்களில் ஸர்வேயும் ரீசெட்டில்மெண்டும் செய்வதற்கு அதே உத்தியோகஸ்தர்களின் சேவையைப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அதிக உத்தியோகஸ்தர்கள் எதற்காக என்று தெரியவில்லை. எவ்வளவு உத்தியோகஸ்தர்கள் வேண்டுமோ அவ்வளவு உத்தியோகஸ்தர்களுக்கே ஏற்பாடு செய்து இந்த வேலைகளைச் செய்து வருகிறோம். அதற்கு வேண்டிய பார்டீஸ் இருக்கின்றன. இந்தப் பார்டீஸ் எங்கெங்கு பிரித்து அனுப்பப்படவேண்டுமோ அங்கங்கு பிரித்து அனுப்பப்படுகின்றன.

Sri S. NAGARAJA MONIGAR: எதற்கோ அதிகமான ஆட்கள் வேண்டுமா என்பதற்கு கனம் அமைச்சர் பதில் சொன்னார். ஜமீந்தாரி நீக்கப்பட்டு பல வருஷங்கள் ஆகின்றன. ஜமீன் பிரதேசங்களில் ஸர்வேயும் ஸெட்டில்மெண்டும் நடக்க வேண்டியிருக்கிறது. அந்தப்





பிரதேசங்களில் அந்த வேலைகள் முடிந்த பிறகுதான் அங்குள்ளவர்கள் ரயத்வாரி அனுகூலங்களைப் பெற்று முன்னேற்றமடைய முடியும். ஸெட்டில்மெண்ட் வேலைகளை முடிக்க இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் என்று கனம் அமைச்சரே சொன்னார். எனவே, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டு இந்த வேலைகள் துரிதப்படுத்தப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: ஆட்களை அதிகப்படுத்துவதால் மாத்திரமே இந்த வேலையைத் துரிதமாகச் செய்துவிட முடியாது. "செக்" பண்ண வேண்டியவைகளை எப்படி எப்படி செக் பண்ண வேண்டுமோ அப்படி அப்படி செக் பண்ணுவது போன்ற காரியங்களைச் செய்வதற்கு ஆகக்கூடிய நாட்கள் ஆகத்தான் ஆகும்.

Sri N. MARUDACHALAM: ஸர்வே நடத்த வேண்டும் என்று பஞ்சாயத்து போர்டுகளிடமிருந்து சர்க்காருக்கு ஏதாவது விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? அப்படி வந்திருந்தால், அவைகள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

The Hon. Sri M. A. MANICKAVELU: தெரியவில்லை, இதுபற்றி என்னிடம் ஒன்றும் தகவல் இல்லை.

### *Minimum wages for agricultural farm labourers*

*747 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் விவசாய பண்ணைகளில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு விவசாய கூலி நிர்ணயச் சட்டப்படி கூலி கொடுப்பதில்லை என்பது உண்மையா?

(ஆ) அப்படியானால், இனிமேலாவது கொடுக்கப்படுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The Director of Agriculture, Madras, has been addressed for furnishing the information. His report is awaited.

Sri V. K. KOTHANDARAMAN: கோவை விவசாயப் பண்ணையிலும் குடியாத்தம் ஷுகர்கேன் ரிசர்ச் பண்ணையிலும் தொழிலாளர்களுக்கு விவசாயக் கூலி நிர்ணயச் சட்டப்படி கூலி கொடுக்கப்படுவதில்லை என்று கனம் அமைச்சருக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறதா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவர்களுக்கு அச் சட்டப்படி கூலி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இது பற்றி என்னிடம் தகவல் இல்லை என்று சொன்னேன். இது சம்பந்தமாக அங்குள்ள நிலைமையைத் தெரிவிக்கும்படி விவசாய இலாகா டைரெக்டரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவரிடமிருந்து தகவல் வந்த பிறகு, ஏதாவது செய்ய வேண்டுமா என்பது கவனிக்கப்படும்.

Sri A. GOVINDASAMY: சர்க்கார் நடத்தும் விவசாயப் பொறுக்கு விதைப் பண்ணைகளில் வாரத்திற்கு ஒரு முறை கூலி கொடுக்கப்படுகிறது. அங்கே தொழிலாளர்களுக்கு தினக் கூலி கொடுக்கவும் பகல் உணவு கொடுக்கவும் அரசாங்கம் முயற்சி செய்யுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்வேன்.

[20th April 1960

SRI N. MARUDACHALAM: விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் விவசாயிகள் 5, 6 வருஷங்களாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரக் கூலிகளாக ஆக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பிற்பாடு விடையளிக்க முடியும்.

### *Prices of foodstuff*

*748 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether the question of stabilisation of prices of food articles has been discussed and approved at the meeting of the National Development Council held at Delhi on the 19th and 20th March 1960;

THE HON. SRI M. BHAKTAVATSALAM: At the meeting held on 19th and 20th March 1960, the National Development Council considered some basic questions relating to the Third Five-Year Plan including price policy. It was generally agreed that the plan could be formulated only on the basis that the price line would be held. It was also agreed that the Chief Ministers should meet again to discuss specific measures relating to price policy. Sir, I may add that since this answer was drafted, a meeting of the National Development Council was held on the 17th instant, and that Council has appointed a small sub-committee to go into the question of this price policy.

SRI N. K. PALANISAMI: May I know whether the Government have made any specific proposals in the National Development Council regarding price stabilisation in our State? If so, may I know the details?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This Government like any other Government made certain proposals for the consideration of the National Development Council. This Government have suggested a kind of partial procurement and running of fair price shops. But, meanwhile, the entire question has been referred to the Sub-Committee of the National Development Council. The question will be taken up again after the Sub-Committee presents its report.

SRI N. K. PALANISAMI: May I know whether the scheme of State Trading was discussed and if so what was the result of the discussion?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The question of State Trading is being discussed at every meeting. State Trading is not discussed as an ideal. The question is to what extent it cou d be undertaken in order to solve the problem of prices. It is in that spirit the question has been tackled.

SRI K. ANBAZHAGAN: உணவு விலையை ஒரு மட்டத்திலே நிர்ணயிப்பதற்காக நடத்தப்படுகிற ஆலோசனையில், அகில இந்தியாவில் உணவுப் பழக்க வழக்கங்கள் மாறுபடுவதாலும், மாகாணங்களில் உணவுப் பொருள்களின் விளைச்சலின் தரம் மாறுபடுவதாலும், அகில இந்திய ரீதியில் ஒரு கொள்கையை வகுக்க முடியும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது இந்த மாகாணத்திற்கு என்று ஒரு தனி விலைவாசிக் கொள்கையை வகுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ?



20th April 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விலைவாசியைப் பொறுத்த மட்டில் இந்த மாகாணத்திற்கு என்று ஒரு தனிக் கொள்கையை வகுப்பது என்பது சீரான ஒரு நிலையை உருவாக்க எதுவாக இருக்காது என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. அகில இந்திய ரீதியில்தான் ஒரு கொள்கை நிர்ணயிக்கப்படவேண்டும். அவ்வாறு விலைவாசிபற்றிய ஒரு கொள்கையை நிர்ணயிக்கும் போது அந்தந்த மாகாணங்களிலுள்ள நிலையை எடுத்துக் கொண்டு அந்தந்த மாகாணங்களுக்கு எவ்வாறு பொருந்தும் என்று பார்த்து இந்தக் கொள்கை நிர்ணயிக்கப்படும்.

SRI A. A. RASHEED: Is it not a fact that stabilisation of prices is interconnected with production? If it is a fact, how could the prices be stabilised without adequate production?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is no doubt correct to say that the question of stabilisation of prices is interlinked with the question of production; and the question of increasing production is being attended to. But in the meantime, it is not right to say that we should wait till production increases substantially. Therefore, we have to tackle the question of price factor also.

SRI S. LAZAR: May I know the names of members of the Sub-Committee of the National Development Council, and the terms of reference to this Committee? May I also know whether the prevailing trend of prices will go down because of this?

MR. SPEAKER: The names were published in the newspapers.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This Government have no information about the names of members of the Sub-Committee. About the terms of reference, they are quite comprehensive, e.g., how this upward trend in prices should be checked. So, they cover a very large and wide field.

### *Rickshaws*

*749 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether any time-limit has been fixed by the Government for the abolition of rickshaws?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The answer is in the negative.

SRI A. A. RASHEED: Have the Government of India recommended to this Government for the abolition of rickshaws?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government of India have suggested that these rickshaws may be abolished in a gradual way.

SRI A. A. RASHEED: What is the number of rickshaws now plying and when do the Government expect all the rickshaws to be abolished in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In the City of Madras, 3,725 hand-pulled and 1,004 cycle rickshaws are plying. As many as 1,500 men were licensed as drivers of cycle rickshaws. I cannot say when these rickshaws would be totally abolished. We have, while

dealing with the question of abolition of rickshaws, to tackle the question of employing the men who may be thrown out of employment on account of such abolition. Therefore all the rickshaws cannot be abolished once and for all by one stroke of the pen.

SRI P. M. MUNUSAMI GOUNDER: ஸார், சென்னை நகரில் இவ்வாறு மனிதனை மனிதன் உட்கார வைத்து இழுப்பது மிகக் கேவலமாக இருக்கிறது. உடனடியாக இதை மாத்திரம் நிறுத்த சர்க்கார் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மனிதனுக்கு மனிதன் பணி செய்வது கூடக் கேவலந்தான். மற்றவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது ரொம்பக் கேவலமானது என்பதை ஒப்புக் கொள்கிறேன். இதைப் போக்கத்தான் வேண்டும். இதற்கு முன்பு இதிலே வேலை செய்கிறவர்களுக்குத் தகுந்த வேலை கிடைக்கச் செய்ய வேண்டும். சாதாரணமாக ஏழை மக்களுக்கு இது ஒரு வாகனமாக இருக்கிறது. முக்கியமாக, சைக்கிள் ரிக்ஷா இழுப்பது நகரங்களில் குறைந்த செலவில் போக்குவரத்துக்குச் சௌகரியமாக இருக்கிறது. இது இல்லையென்றால் கஷ்டம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் வைத்துக் கொண்டு படிப்படியாக இதைப் போக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

### *Hand-drawn carts*

* 750 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to ban the hand-drawn carts in the city?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir. A proposal to regulate the load to be carried in hand carts and to license the pullers and carts under the Hackney Carriages Act is under consideration.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that in no other civilised part of the world man is used as beast of burden? If so, will the Government at least stop men being used as beast of burden?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have not gone round the world (laughter) and I do not know what is prevailing in other parts of the world. But I do agree that hand-cart pulling is much worse than rickshaw pulling. It is a detestable thing. But still, there is again the problem of employing those people who may be thrown out of job. We are taking steps slowly to abolish the thing.

SRI A. A. RASHEED: Till the hand-drawn carts are abolished, will the Government at least provide the hand-cart pullers with enough chappals or shoes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The entire question is being looked into. We are also considering the question of amending the City Police Act and the Hackney Carriages Act and instructions have also been given to the Collectors and Road Transport Authorities to license liberally three and four-wheeled motor vehicles of low horse-power.





SRI K. ANBAZHAGAN: இந்த தள்ளு வண்டிகள், பார வண்டிகள் இழுப்பவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி இந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கம் நடத்தும் எந்தத் தொழிற்சாலையிலாவது, அரசாங்கம் நடத்தும் தொழிற்சாலைகளில் உடல் உழைப்புத் தேவைப்படுகிற இடங்களில் இவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தப் பிரச்னை இப்போது பரிசீலனையில் இருக்கிறது. இதை எந்த வகையில் தீர்ப்பது, அவர்களுக்குத் தகுந்த வேறு வேலைகள் எப்படிக் கொடுப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: In the light of the eventual abolition of this mode of transport, viz., hand-carts, what is the alternative mode of transport which the Government suggest, apart from the costlier modes of transport like lorries and other such conveyances?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have just answered that there is a proposal to license liberally three and four-wheeled motor vehicles of low horse-power.

### *Veterinary Hospital employees*

* 751 *Q.*—DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை மிருக ஆஸ்பத்திரியில் 1930 லிருந்து வேலை செய்து வரும் 88 தொழிலாளர்களை நிரந்தர சர்வீசின்கீழ் கொண்டுவராமலும் வீட்டுவாடகை, எந்த வித ஓய்வும் விடுமுறையுமின்றி வைத்திருப்பது உண்மையா?

(ஆ) அந்த தொழிலாளிகள் சங்கத்திலிருந்து விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) அப்படியாயின் அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The 85 workers employed in the Madras Veterinary College and the Hospital are staff paid from contingencies, whereas the Union list contains the cadre strength of the Union including workers of other Institutions in the City. But all of them are not working since 1930. The rules applicable to contingent staff paid from contingencies are also applied in the case of Madras Veterinary College and Hospital workers in respect of house rent allowance, leave facilities, etc. The contingent staff are paid at market rates which generally include the element of house rent allowance. Hence the question of paying any house rent allowance to the staff paid from contingencies does not arise. The question of confirmation also does not arise for this class of workers. The question of bringing the contingent staff into regular establishment depends on the recommendation of the Pay Commission.

(*b*) A representation has been received from the President, the Madras Government Medical and Health Workers' Union, Madras.

(*c*) The matter is under examination in consultation with the heads of departments concerned.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU: அந்த மிருக ஆஸ்பத்திரியில் பணிபுரிகிற பலர் மாடு முட்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்கள், நாய்கள் கடித்து சிகிச்சை பெறுகிறார்கள். அப்பேர்ப்பட்ட

[20th April 1960

வர்களுக்கு "சிக் லீவும்" மற்றப்படி அலவன்ஸ்களும் கொடுக்க மறுக்கப்பட்டு வருகிறது என்று கூறப்படுகிறது. மிருகஆஸ்பத்திரியில் பணி புரிகிற அவர்களையும் மிருகங்களாக சர்க்கார் கருதுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு சர்க்காரைப் பொறுத்த மட்டில் கருதவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய கஷ்டங்களுக்குத் தகுந்த பரிகாரம் என்ன அளிப்பது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

9 a.m. DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : நான் கூறுகிற ஒருவர், இப்பொழுது மூன்று மாதங்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். உடனடியாக சர்க்கார் அவருக்காவது அந்த விடுமுறையோ அல்லது அதற்குரிய பணமோ தர முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி கேட்டால் அதைப் பொறுத்து நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு நிலைமையையும் எடுத்து விளக்கக்கூடும்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கண்டின்ஜெண்ட் தொழிலாளியாக அரசாங்கப்பணியில் மூன்று ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகள் வரையில் பணியாற்றியவர்களை அதற்குப் பின்னால் ஊர்ஜிதம் செய்வதாக இந்த அமைச்சரவையினால் முன்னால் ஒரு தடவை பதிலளிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்டவர்கள் பத்து, பனிரெண்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, இனியாவது அவர்களை உறுதி செய்வதற்கு, வேலையில் காயப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றிடம் சம்பளக் கமிஷன் பரிசீலனை செய்திருக்க வேண்டும். அவர்களுடைய சிபாரிசுகள் வந்திருக்கின்றன. அவர்களுடைய சிபாரிசுகள் இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனைக்குப் பிறகு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

### *Pullambadi Channel Scheme*

* 752 *Q.*—SRI T. K. SUBBIAH : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புள்ளம்பாடி வாய்க்கால் திட்டத்தில் தனியாரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களின் பரப்பு என்ன ?

(ஆ) அதில் எவ்வளவு நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) எத்தனை தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் ?

(ஈ) முடிவாக எல்லாத் தரப்பினருக்கும் நஷ்ட ஈடு எப்போது கொடுத்து பூர்த்தி செய்யப்படும். ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The Pullambadi Canal Scheme contemplates acquisition of land to a length of 52 miles under the Main Canal, 75 miles under the distributaries and 3,992 acres under tanks. Of the above extents an area of 212.55 acres under Main Canal and 264.19 acres under the tanks has been acquired so far and compensation paid to the tune of Rs. 5,97,545.

(*c*) Two Special Deputy Tahsildars and two Special Revenue Inspectors were working in this scheme up to 28th February 1959. From 1st March 1959 two Special Deputy Tahsildars are working in this scheme.



20th April 1960]

(*d*) Award has yet to be passed in respect of the following areas:—

Main Canal—39 miles 1 furlong.

Distributaries—75 miles.

Tanks—3,465 acres.

It will take at least 3 or 4 years to complete the above items of work with the existing special staff. Hence action is being taken to speed up the work by employing additional staff.

SRI T. K. SUBBIAH : போதிய எண்ணிக்கையில் தாசில்தார்களை நியமனம் செய்யாத காரணத்தினால்தான் நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது, இன்னும் அதிக ஆண்டுகளுக்குக் காலதாமதம் ஆகிறது என்பதை அரசாங்கம் உணர்ந்து, விரைவில் இன்னும் அதிகமான தாசில்தார்களை நியமனம் செய்து நஷ்டஈட்டைக் கொடுக்கமுன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : நானும் கடைசியாகச் சொன்ன பதிலில் அதைத்தான் சொன்னேன். மேலும் "ஸ்டாப்" வேண்டுமானால் அதை நியமித்து, தக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI R. SWAMINATHA MERKONDAR : புள்ளம்பாடித் திட்டத்தின்கீழ் நிலத்தை இழந்திருக்கும் நிலச் சொந்தக்காரர்கள் இரண்டு ஆண்டுகளாக நிலத்தின் வருமானத்தை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு கொஞ்சம் தாராளமாக காம்பென்சேஷன் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தாராளமாக என்று சொன்னால் அதற்கு ஒரு வரம்பு இருக்காது. நிலத்திற்கு எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமோ அதைப் பார்த்துத்தான் அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்யும்.

SRI S. LAZAR : அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் "ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்ட நிலங்களுக்கு இன்னும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் ஆகும்" என்று சொல்லுகிறார்கள். ஆனால், அந்தப் பிராந்தியத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களின் தூண்டுதலினால், அந்தச் சொந்தக்காரர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே நிலத்தை "பொஸெஷன்" கொடுத்துவிட்டார்கள். சீக்கிரமே நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு, ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் ஆகும் என்றால் ஜனங்களுடைய கஷ்டம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, இன்னும் ஒரு சில மாதங்களிலாவது அதைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு உத்திரவிடுவார்களா ? அதிலே சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுத்தாகிவிட்டது. அதற்கெல்லாம் ஆபீசர்கள் எண்ணிக்கை போதாத காரணத்தால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கருதி, உடனடியாக தேவையான ஆபீசர்களைப் போட்டு, நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு தூரம் விரைவாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் நடவடிக்கை எடுக்கலாம்.

SRI R. SWAMINATHA MERKONDAR : இந்த நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்தில் துரிதமாக பரிசீலனை செய்து நஷ்ட ஈடு ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவிடுமா ?

THE HON. SRI P. KAKKAN : குறிப்பிட்ட காலவரையறைக்குள் என்று சொல்ல முடியாது. எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கலாம்.

SRI T. K. SUBBIAH: அந்தப் பகுதியிலே நிறையபுறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்தப் புறம்போக்கு நிலங்களையாவது எடுத்து, அவர்களுக்கு பரிவர்த்தனையாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN: இப்பொழுதே நிலமில்லாத ஏழைகளுக்கெல்லாம் அத்தகைய நிலங்களைக் கொடுத்து வருகிறோம். கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்டால் அது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR: இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட ஜனங்களுக்கு சிறிதேனும் அனுகூலம் செய்யும் வகையில் ஒரு உத்தேச தொகை, ஜமீன்தாரி ஒழிப்பிலே "அட்வான்ஸ் பேமெண்ட்" கொடுத்தது போல, கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அந்தத் தகவல் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி கேட்டால் அதைப் பற்றிச் சொல்லுகிறேன்.

## *Gift of cows and buffaloes*

* 753 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட இந்தியாவிலிருந்து பசுக்களும், எருமைகளும் இம் மாநில விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறதா ?

(ஆ) அப்படியானால் அதன் விபரமென்ன ?

(இ) இது வரை மாடுகள் ஏதேனும் அவ்வாறு வினியோகிக்கப்பட்டிருக்கின்றனவா ?

(ஈ) என்ன நிபந்தனையின் பேரில் ? எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *(a) & (b)* The Stray Hariana Cows and Heifers available in Punjab State and Delhi are supplied free of cost to the individual breeders, co-operative societies, temple goshalas, etc., by the Government of India.

*(c) & (d)* A statement [a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: மேஜையின் பேரில் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட பசுக்கள் 1,553 என்றும், ஆனால் கிடைத்திருக்கும் பசுக்கள் 661 தான் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. பாக்கி கிடைக்காததற்குக் காரணம் என்ன ? அங்குள்ள பசுக்கள் தீர்ந்து போய்விட்டனவா ? அல்லது வேறு என்ன காரணத்தால் கிடைக்கவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவை தானமாக வருகிற பசுக்கள். இருந்தாலும், நல்லதாகப் பார்த்து வாங்க வேண்டும். தெருவிலே ஓடுவதை எடுத்துக் கொண்டால் போதிய பலனை அளிக்காது. ஆகையால் பார்த்து, நல்லதாகப் பொறுக்கி அனுப்புவதற்காக மத்திய அரசாங்கத்தின் சார்பாக அங்கே ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக அதிகாரி ஒருவரும் அங்கே இருக்கிறார். பார்த்து அனுப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது.

[a] Printed as Appendix I on pages 432–433 infra.



SRI A. VEDARATHNAM: நாற்பது சத விகிதம் ரயில்வே கன்ஸெஷன் கொடுத்திருக்கிறார்களே, அதன்படி ஒரு மிருகத்தை அங்கேயிருந்து வரவழைப்பதற்கு என்ன சார்ஜ் ஆகிறது என்பதைத் தயவுசெய்து தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையில் ஆகிறது.

SRI T. T. DANIEL: May I know whether any committee has been constituted for the purpose of distributing the cows and whether the beneficiaries have to pay the expenses for transporting the cows to their places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, the beneficiaries have to bear the transport charges. No committee has been formed. Those who require the cows are given facilities to secure them.

SRI A. R. SUBBIAH MUDALIAR: தனிப்பட்டவர்கள் வாங்க வேண்டுமானால் வாகன் லோடுக்கு மாடுகள் வேண்டியிருக்கிறது. **Officer-in-charge of Wild Animals Catching Scheme** என்பவரை அணுகி வாங்க வேண்டியிருப்பதால், பல கஷ்டங்கள் இருக்கின்றன. தனிப்பட்டவர்கள் டில்லிக்குப் போய்வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இங்கிருந்து அதிகாரிகளை டெப்யூட் பண்ணி மாடுகள் வாங்கி வரச் செய்து விநியோகம் செய்வதற்கு சர்க்கார் யோசிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனிப்பட்டவர்கள் அவ்வாறு கால் நடை இலாகா டைரக்டரவர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் வாங்கிவந்த பிறகு குற்றம் சொல்லக்கூடாது.

SRI K. R. NALLASIVAM: இந்தத் திட்டத்தின்கீழ் ஹரியானா பசுக்கள் கொண்டு வந்து வைத்திருப்பவர்களின் அனுபவம் என்ன ? பால் குறைவாகக் கிடைக்கிறதா ? பால் அதிகமாகக் கிடைக்கிறதா என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எனக்கு அனுபவம் இல்லை. எனக்குப் பின்னால் உட்கார்ந்திருக்கிற "விப்" அவர்கள் கூட நிறைய வாங்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவருக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்வார்கள்.

SRI A. GOVINDASAMY: சர்க்கார் கொறடாவுக்குக் கிடைத்த வாகன் லோடு கால் நடை, சர்க்கார் முயற்சியால் சிபார்சு செய்து கிடைத்ததா ? சொந்த முயற்சியால் கிடைத்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யார் கேட்டாலும் கொடுக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டால்கூட வாங்கிக் கொடுக்கலாம். இதற்குத்தனி சிபார்சு வேண்டியதில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: இதுபோன்று இலவசமாகக் கொடுக்கக் கூடிய பசு மாடு, எருமைகளையெல்லாம் தனியாருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, கூட்டுறவு பால் பண்ணைகளுக்கும் ஹரிஜனங்களுக்கும் சர்க்காரே செலவை ஏற்றுக்கொண்டு கொடுப்பதற்கு முயற்சிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யாராயிருந்தாலும் போக்குவரத்துச் செலவையும் கூட சர்க்காரே ஏற்றுக் கொள்வது என்ற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. ஆனால் ஹரிஜனங்களோ, மற்றவர்களோ கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைத்துக் கொண்டு கேட்டால் இவைகளை வரவழைப்பதில் அவர்களுக்கு ஒன்றும் சிரமம் இருக்காது வேண்டுமானால் அரசாங்கம் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கடன் கொடுக்கலாம்.

[20th April 1960

SRI A. VEDARATHNAM : பசுக்கள் அரியாணுப்பசுக்கள் என்று சொல்லப்படுகிறது. என்ன பிரீட் எருமை கிடைக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரியாணுப் பசுக்கள் இலவசமாக கிடைக்கின்றன. இவை நல்ல பசுக்கள், நல்ல தரம். எருமையைப் பொறுத்த வரையிலும் "முர்ரா பிரீட்" வரவழைக்க திட்டம் இருக்கிறது. வரவழைத்துக் கொண்டிருக்கிறோம்.

### *Manufacture of glass bangles*

* 751 Q—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) 1957-58, 1958-59 ஆண்டுகளில் கண்ணுடி வளையல்—மாலை—விளையாட்டுச் சாமான்கள் செய்ய பயிற்சி அளிக்கும் தொழிற்சாலைகளில் எவ்வளவு பேர் பயிற்சி பெற்றுர்கள் ?

(ஆ) மேற்படி ஆண்டுகளில் இது போன்ற தொழிற்சாலைகளை நடத்த நமது ராஜ்யத்தில் எந்த எந்த தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு மானியம் அல்லது கடன் கொடுக்கப்பட்டுள்ளது ? (ஜில்லாவாரியாக)

(இ) இவர்களில் எவ்வளவு பேர்கள் ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement [a] furnishing the particulars is placed on the table of the house.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஸ்டேட்மெண்டில் பார்த்தால் ஹரிஜனங்கள் ஒன்று, இரண்டு பேர்கள் தான் இந்த பயிற்சியை பெற்றிருக்கிறுர்கள். ஹரிஜனங்கள் இந்த பயிற்சியில் சேருவதற்கு மறுத்துவிட்டார்களா ? அல்லது அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காரணம் ஒன்று தான். இது விஷயத்தில் யாரையும் நிர்பந்திக்கக் கூடாது. நிர்ப்பந்திப்பது சரியல்ல. யார் இதை உணர்ந்து வருகிறுர்களோ, அவர்களுக்குத் தான் இந்தப் பயிற்சி அளிக்கப்படும, அப்படி முன் வருகிறவர்களுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படும். முக்கியமாக ஹரிஜனங்கள் வருவார்களேயாளுல், பிரத்யேகமாக அவர்களுக்கு வேண்டியவசதிகள் அளிக்கலாம்.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : பெண்கள் விரும்பி அணியும் இந்தக் கண்ணுடி வளை தொழிற்சாலையில் எத்தனை பெண் தொழிலாளர்கள் பணி புரிகிறுர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தொழிலில் பெண்கள் ஈடுபடுவது ரொம்பவும் பொறுத்தம் என்பதை நானும் உணர்கிறேன். இந்தத் தொழிற்சாலையில் எததனை பெண்கள் இருக்கிறுர்கள் என்பது பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி தொழிற்சாலைகள் ஆரம்பித்து பயிற்சி கொடுக்கப்படும் இடங்களிலே எற்கனவே சம்பிரதாயமாக தலைமுறை தலைமுறையாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பது உண்மையா ? வேறு ஜாதியினரை பொறுக்கி எடுப்பதற்கு தற் போதைக்கு அவசியம் ஏற்படவில்லை, சாத்தியமும் இல்லை என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே ஜாதி பிரச்னை, தொழில் பிரச்னை ஒன்றுமில்லை. யார் இதற்கு வருகிறுர்களோ, யார் தகுதி உள்ளவர்களோ அவர்களுக்கு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

[a] Printed as Appendix II on page 433 infra.



20th April 1960]

### *Food Zone*

* 755 Q.—DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU: Will the Hon. the Minister for Home be pleased to state what action the Government propose to take in view of the statement of the Food Minister of India, made recently in the Lok Sabha, that there is no compulsion for any State to remain in a particular zone ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have not come across such a statement.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : சில மாதங்களுக்கு முன்பு டெல்லி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் பொழுது ஆந்திர உறுப்பினர் ஒருவர், ஆந்திரா பட்ஜெட்டை ஆந்திர அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தபொழுது உணவு மண்டலத்திலிருந்து ஆந்திரா பிரிந்து போகவேண்டுமென்று கேட்டோம், டெல்லி அமைச்சர் அவர்கள் மறுத்திருக்கிறுர்கள் என்று கூறியது உண்மையா ? என்று. பாராளுமன்றத்தில் ஆந்திர உறுப்பினர் ஒருவர் கேள்வி கேட்டபொழுது துணை அமைச்சர் அவர்கள் அப்படி ஆந்திரா தென் உணவு மண்டலத்திலிருந்து பிரிந்து போகலாம் என்று பதில் கூறியுள்ளார். அதைப் பார்த்து தமிழகத்தின் உறுப்பினர் சென்னையும் பிரிந்து போகலாமா என்று கேட்க, ஆந்திராவுக்கு கூறிய பதில் சென்னைக்கும் பொருந்தும் என்று பதில் கூறியதாக பத்திரிகையில் பார்த்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் வேறு விதமாக பதில் கூறுவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எது எப்படியிருந்தாலும், மத்திய அரசாங்கம் அது சம்பந்தமாக உத்தரவு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இந்த ராஜ்யம் பிரிந்து போக வேண்டுமென்றுல் பிரிந்து போகலாம். பிரிந்து போனபிறகு எவ்வாறு சமாளிப்பது என்பது இந்த அரசாங்கம் நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய விஷயம்.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : பிரிந்து போனுல்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்று இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் பல முறை கூறியிருக்கிறுர்கள். பிரிந்து போவது இந்த மாநிலத்திற்கு சாதகமாயிருந்தால் ஏன் பிரிந்து போகக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிரிந்து போனுல் விலைவாசியை கட்டுப்படுத்த முடியும் என்று நான் சொன்னபோது, மற்ற ராஜ்யங்களும் அதற்கு இணங்க வேண்டும், சேர்ந்து பிரிய வேண்டுமென்று தான் நான் சொன்னேன். மற்ற ராஜ்யங்கள் அதற்கு இணங்காத போது, நாம் பிரிந்து போவது அவ்வளவு அனுகூலம் என்று சொல்லுவதற்கு இல்லை.

MR. SPEAKER: Question No. 756.

SRI K. VINAYAKAM: Sir, we have a lot of interpellations to ask on the previous question.

MR. SPEAKER: I am glad that the hon. Member has raised this point. In all Parliaments the Member who puts the main question has preference in the matter of putting supplementary questions but in this Assembly I find that, before the Member who asks the main question asks supplementary questions, others want to participate. Not only that. Some Members want to put supplementary questions on every main question. That is objectionable. We must give a chance to the Member who puts the main question because he or she has taken the trouble to put the main question.

Therefore, he or she has the main right to put supplementary questions and others have no right to put supplementary questions. Also, the Chair has to weigh the importance of the question under reference. If the Hon. Member Srimathi Sathiyavanimuthu wants to put supplementary questions she can do so but since I have now passed on to the next question, even if she wants to put a supplementary question, I will have to say, I am sorry.

SRI T. S. RAMASWAMI: Sir, of course, everybody will agree that the hon. Member who puts the main question has preference over others in putting supplementaries. But others also have a right to put supplementary questions . . .

MR. SPEAKER: Unless they catch the eye of the Speaker.

SRI T. S. RAMASWAMI: All the points have not been exhauted . . .

MR. SPEAKER: The person who has to decide whether the points have been exhausted, is the Speaker. Now I have decided that all the points have been exhausted.

### *Bridge across the Coleroon*

* 756 *Q.*—SRI T. K. SUBBIAH : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :

(அ) திருமானூருக்கும் விளாங்குடிக்கும் மத்தியில் கொள்ளிடத்தின் குறுக்கே ஒரு பாலம் கட்ட முதன் முதலாக எந்த ஆண்டு அரசாங்கம் தீர்மானித்தது ?

(ஆ) அதற்கான பரிசோதனைக்கும் மற்ற ஆராய்ச்சிக்கும் செலவிடப் பட்ட தொகை எவ்வளவு ?

(இ) முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டம் சேர்க்கப்பட்டிருந் ததா ?

(ஈ) அவ்வாறாயின் திட்டக் காலத்திற்குள் கட்டி முடிக்காததின் காரணம் என்ன ?

(உ) இத்திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளதா ?

(ஊ) இன்று வரை ஆரம்பிக்காத காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) In April 1948, the Government decided to construct a bridge at the site. But subsequently the Chief Engineer reported that there were already three bridges between Tiruchirappalli and Thanjavur at three points, viz., Srirangam, Lower Anicut and Anaikaran chatram and that as such the construction of this bridge was not of immediate necessity. The work was therefore deferred in 1951.

(*b*) Rs. 29,746.

(*c*) No, Sir.

(*d*) Does not arise.

(*e*) The work of constructing a high level bridge at the site is included in the Second Five-Year Plan with a provision of Rs. 30,00,000.





(*f*) The cost of the bridge is estimated at Rs. 37,50,000 and it was not taken up on account of the huge cost. The Government of India were therefore addressed for their approval for taking up a causeway, which is considered sufficient at a cost of Rs. 14,00,000 from the Central Road Fund. The approval of the Government of India to take up the work from the State's allocations in the Central Road Fund has been received only recently. The work will be taken up after settling the preliminaries.

SRI T. K. SUBBIAH : திருமானூருக்கும், திருச்சிக்கும் மத்தியிலே எந்த விதமான பாலமும் கிடையாது என்பது தெரியுமா ? என்ஜினீயர் அவர்கள் இதை அறிந்திருந்தபோதிலும் என் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை அரசாங்கம் தெளிவாக்க முடியுமா? இந்த ஆண்டிலாவது சென்ட்ரல் ரோடுபண்டிலிருந்து கிடைத்த தொகையைக்கொண்டாவது வேலையைத் துவக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் ஏற்கனவே பதில் சொன்னேன். ஏற்கனவே அணை கட்டப்பட வேண்டுமென்று போடப்பட்ட திட்டத்திற்கு கிட்டத்தட்ட 37½ லட்ச ரூபாய் அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகையினாலே பெரிய பாலம் கட்ட வேண்டியதில்லை, கிராஸ்வே கட்டினால் போதும் என்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, சென்ட்ரல் ரோடு பண்ட் ஸ்டேட் அலோகேஷனிலிருந்து செலவு செய்து கொள்ளுவதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பரிசீலனை செய்து வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI R. SRINIVASA IYER : சென்ட்ரல் ரோடு பண்டிலிருந்து இந்தப்பாலங்கள் உள்பட இன்னும் சில வேலைகளுக்கும் பணம் செலவழிப்பதற்கு 1960ஷ் மார்சு 25-தேதி அனுமதி தரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளுக்கு பிளான், எஸ்டிமேட் எல்லாம் தயாராக இருக்கிறதா ? சமீபத்தில் அந்த வேலை துவக்கப்படுமா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : எப்பொழுதுமே இந்த மாகாணத்திலுள்ள எல்லாத் திட்டங்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, அவர்களுடைய அங்கீகாரம் பெறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி இதர திட்டங்களும் வந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். நான் இன்னும் அவைகளைப் பார்க்கவில்லை. அவைகளும் வந்திருந்தால், அவைகளைப் பார்த்து, பரிசீலனை செய்து வேலைகள் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI V. SUBBIAH : தாம்பரபரணி ஆற்றின் பேரில் சுலோசன முதலியார் பாலத்திற்கு பதிலாக வேறு புதிய பாலம் கட்டுவதற்கு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : இது, கொள்ளிடத்தில் கட்டப்படுகின்ற பாலத்தைப் பொறுத்தது இந்தக் கேள்வி. கனம் அங்கத்தினர் தாம்பிரபரணியைப்பற்றிக் கேட்கிறார். அதற்குத் தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

SRI R. SWAMINATHA MERKONDAR : கனம் தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொள்ளிடம் பால வேலை சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தற்பொழுது அதற்கான பிளான், எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது போடப்படுவது கிராஸ்வே. ஏற்கனவே இதற்குப் பிளான் தயார் செய்துதான். மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதி, அவர்களுடைய அங்கீகாரத்தைக் கேட்டோம். இப்பொழுது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். இனிமேல் செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் செய்யப்பட்டு வேலைகள் எடுத்துக்கொள்ளப் படும்.

SRI T. K. SUBBIAH : கொள்ளிடத்திலே அதிகமாக வெள்ளம் வருவதின் காரணமாக 'காஸ்வே' கட்டாமல் 'பெட்லெவல்' காஸ்வே கட்ட எஸ்டிமேட் தயார் செய்யும்படி கனம் அமைச்சர் அவர்கள் உத்திரவிடுவாரா ?

THE HON. SRI P. KAKKAN : 'காஸ்வே' சீக்கிரம் வரவேண்டும். என்று கனம் அங்கத்தினரே ரொம்பப் பிரயத்தினம் எடுத்துக் கொண்டார். ஏற்கனவே பரிசீலனை செய்து 'காஸ்வே' கட்டினுல் போதும், பக்கத்தில் ஏற்கனவே போக்குவரத்திற்கு 3 பாலங்கள் இருப்பதினுல் பெரிய பாலத்திற்கு அவசியம் இல்லை என்று திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினரைப்போல் நானும் இதை யெல்லாம் துரிதமாகக் கட்ட வேண்டும் என்றுதான் பிரயத்தினம் செய்துகொண்டிருக்கிறேன். அங்கத்தினர் இதில் பிரயத்தினம் செய்த தற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The next two questions, Nos. 757 and 758, are being postponed at the request of the Minister.

*Manamkondan River Irrigation Scheme*

*759 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருத்துரைப்பூண்டித் தாலுக்கா மானங்கொண்டான் ஆற்றில் அரசாங்கம் மேற்கொண்ட திட்டத்தின்மூலம் இதுவரை எத்தனை எக்கர் நிலத்திற்கு பாசன வசதி கிடைத்திருக்கிறது ?

(ஆ) மேலும் இதை விஸ்தரிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது ?

(இ) அதன் மூலம் எத்தனை அதிகப்படியான எக்கருக்கு பாசன வசதி எப்போது கிடைக்கும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 80 acres.

(*b*) There is a proposal for the installation of six pumpsets at Government cost. Plans and estimates are under preparation by the local officers.

(*c*) The Manamkondan scheme undertaken by the Government is intended to provide irrigation facilities to 584 acres of Manavari lands. After the proposed installation of the six pumpsets, irrigation facilities to the originally contemplated extent of 584 acres are expected to be available.

SRI A. VEDARATHNAM : சார், இந்த ஐநூற்று சொச்சம் எக்கருக்கு பாசனத்திற்கு ஆறு பம்புகள் வைக்கப்பட வேண்டும் என்று பல வருஷங்களாக ஏற்பாடுகள் இருந்தும், எந்த விதமான முயற்சிகளும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இது எப்பொழுது துவக்கப்படும் ? எப்பொழுது பூர்த்தி செய்யப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது திட்டத்தின் படி விவசாயிகளும் முன்வந்து இந்த டெவலெப்மெண்டிலே ஈடுபட வேண்டும். அப்படிப் போதிய அளவு அவர்கள் வராததால்தான் சரியாக டெவலெப்மெண்ட் ஆகவில்லை. 80 எக்கர்கள்தான் டெவலெப் ஆகி யிருக்கிறது. அதனுல்தான் தாமதம். இப்பொழுது 6 பம்பு செட்டுகள் சர்க்கார் செலவிலேயே வைத்து நடத்துவது என்று உத்தேசம்.

SRI A. VEDARATHNAM : விவசாயிகள் என்ன ஆதரவு இதற்குத் தர வேண்டுமோ, அதைச் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார் கள். ஆனால், அரசாங்க துறையில் எந்த விதமான முயற்சியும்



எடுக்கவில்லை. ஆகவே, இப்பொழுது பேக்கேஜ் டீலிலாவது இதை எடுத்துக் கொண்டு, அதன்மூலம் மானங்கொண்டான் ஆற்றுப் பாசனத்தை பயன்படுத்திக்கொள்ள வகை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது 80 எக்கர் தான் டெவலெப் ஆகியிருக்கிறது என்று சொன்னேன். மொத்தம் 584 எக்கரில், இந்தத் தீவிர விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் விசேஷமாகக் கவனிக்கப்படலாம் என்று நினைக்கிறேன்.

*Sethusamudram Scheme*

*760 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for works be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to a statement of Dr. Subbaroyan, Minister for Communications, that Sethusamudram Scheme would not be taken up even in the third five year plan; and

(*b*) if so, whether any representation has been made about the same ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) Yes, Sir, and a representation has been duly made.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. Minister aware of the fact that the Union Minister for Communications has stated that the Sethusamudram Scheme would not be taken up because it would cost Rs. 30 crores ?

THE HON. SRI P. KAKKAN: It has appeared in the papers. But we have not got any communication from the Government of India.

SRI A. A. RASHEED: Sir, since the Sethusamudram scheme is essential for the welfare of our State, will the Government reemphasise the matter and see that this scheme is included at least in the third Five-Year Plan ?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir. Our Finance Minister has written to the Union Minister concerned, Dr. P. Subbarayan, to include this scheme in the Third Five-Year Plan.

SRI A. GOVINDASAMY : சேது சமுத்திரம் ஸ்கீமானது ரூபாய் 30 கோடியில் நிறைவேற்றப்படும் என்று ஒரு கருத்தும், ரூபாய் 10 கோடியில் நிறைவேற்றப்படும் என்று வேருெரு கருத்தும் இருக்கிறது தான் தாமதத்திற்குக் காரணம் என்பது உண்மையா ? அது எப் பொழுது பரிசீலிக்கப்படும் ? எப்பொழுது முடிவு செய்வார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றிப் பல முறைகள் கேள்விகள் போடப் பட்டிருக்கின்றன. ஆகவே, சில முக்கியமான கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

சேது சமுத்திர திட்டத்தை மத்திய சர்க்கார் நியமித்த கமிட்டி பரிசீலனை செய்து முதலிலே ரூபாய் 998 லட்சத்தில், அதாவது கிட்டத்தட்ட ரூபாய் 10 கோடி என்று திட்டமிட்டார்கள். பிற்பாடு பரிசீலனை செய்து பார்த்த பிறகு, அது ரூபாய் 28 அல்லது 30 கோடி செலவாகும் என்று முடிவு செய்தார்கள். இதை நல்ல முறையிலே பரிசீலனை செய்து, இதைக் கொண்டு வரவேண்டும் என்று மதிப்பிற்குரிய முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் மத்திய சர்க்கார் மந்திரியாக விருந்த திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு

எழுதி, அதி சீக்கிரமாக கொண்டுவரவேண்டுமென்று இதை செகண்ட் பிளானிலேயே சேர்க்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பரிசீலனை செய்துதான் பிற்பாடு முடிவு எடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிலேயே சொல்லப்பட்டது. நாமும் இப்பொழுது இந்த ஸ்கீமை மூன்றாவது திட்டத்தில் முதல் பிரையாரிடி கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டிருக்கிறோம், இப்பொழுது பத்திரிகையில் கனம் மத்திய சர்க்கார் மந்திரி சொன்னதைப் பார்த்து, கனம் நிதி அமைச்சரவர்கள் இதை மூன்றாவது திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். இதனால் எல்லாம் நன்மை ஏற்படலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**Sri M. S. SELVARAJAN** : சார், உத்தேச சேதுசமுத்திர திட்டத்திலே தூத்துக்குடி பெரிய துறைமுக அபிவிருத்தித் திட்டம் சேர்க்கப்படாமல், அது தனியாக இருக்குமானால், அதைத் தனிமைப் படுத்தி, இரண்டாவது திட்ட கடைசி வருஷத்திலாவது நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் இந்தச் சபையிலேயே உறுதி சொன்னார்கள். அதைக் காரியத்தில் செய்ய, துரிதமாகச் செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN** : முதலிலே தூத்துக்குடி துறைமுகமும் சேது சமுத்திரத் திட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. தூத்துக்குடி துறைமுகத்தை பெரிய அபிவிருத்தித் திட்டமாகச் செய்யத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று, மத்திய சர்க்காருக்குச் சொல்லி, விரைவாக அதை எடுக்க வேண்டுமென்று, மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. கனம் முதல் மந்திரி மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்களும் தூத்துக்குடிக்கு வந்து அதைப் பார்வையிட்டார்கள். இரண்டாவது திட்டத்திற்குள் எடுக்க வேண்டும் என்றுதான் இருந்தோம் இருந்தாலும். மூன்றாவது திட்டத்தில் எடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

**Sri A. A. RASHEED**: May I know, Sir, whether any reply has been received from the Union Minister for Communications to the letter sent by our Finance Minister?

**The Hon. Sri P. KAKKAN**: Not yet, Sir.

**Sri K. ANBAZHAGAN** : சார், இரண்டாவது திட்டத்தில் எதிர்பார்த்து, கைவிடப்பட்டு, மூன்றாவது திட்டத்திலே வற்புறுத்தப்பட்டும் செலவு அதிகமாகும் என்று மத்திய சர்க்கார் கைவிட்டாலும் விடலாம் என்பதால், நம் மாநில சர்க்கார் தங்கள் நிபுணர்களைக்கொண்டு ரூபாய் 10 அல்லது 15 கோடிச் செலவில் நிறைவேற்ற முடியுமா என்று ஆராய நம் மாநில நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைக்கவும் அதற்காக இந்தச் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அதை வற்புறுத்தவும் சர்க்கார் முன்வருமா ?

**The Hon. Sri P. KAKKAN** : இந்த சேது சமுத்திரத் திட்டம் மத்திய சர்க்கார் திட்டம் என்று தெரிவிக்கிறேன். அவ்வளவு தொகை செலவு செய்ய நம் மாநிலம் செலவழிக்க நமது நிதி நிலை அதிக சௌகரியமாக இல்லை. ஆகையினால்தான், நாம் அதை மத்திய சர்க்காரே செய்யவேண்டும் என்கிறோம். அவர்களும், கைவிட்டுவிட்டோம் என்று பதில் சொல்லவில்லை. இன்னும் நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை வைக்கவேண்டும். அப்படி நம்பிக்கை வைத்து நல்ல முறையிலே அதை எடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

**Sri A. GOVINDASAMY** : தூத்துக்குடியில் நடந்த இரண்டு இடைத் தேர்தல்களின் போதும், இந்த சேது சமுத்திரத் திட்டம் வரும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டதே, அதைக் காப்பாற்றவாவது எவ்வளவு காலம் ஆகும் என்று சொல்ல முடியுமா ?





**The Hon. Sri P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் ஒன்று சொன்னால், அதை அவர்கள் வேறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடி திட்டம் நிச்சயமாக இந்த அரசாங்கம் கொண்டு வரும் என்றுதான் சொன்னேன். இப்பவும் அப்படித்தான் சொல்லுகிறேன். அந்தத் திட்டத்தைக் கொண்டுவர தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

### *Agricultural research farms*

*761—**Sri A. VEDARATHNAM** :
**Sri V. K. KOTHANDARAMAN** } கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இந்தச் சபையில் 14-3-1960-ல் 336-ம் நெம்பர் கேள்விக்கு அளித்த பதிலை யொட்டி, இந்த மாநிலத்தில் எந்தெந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் என்னென்ன புதிய ரக விதைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) அந்தப் புதிய விதைகளிலுள்ள விசேஷ அம்சங்கள் என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: (*a*) & (*b*) Answer[a] is placed on the table of the House.

**Sri A. VEDARATHNAM** : சார், இந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் அவரவர்களுக்குத் தோன்றிய முறையிலே ஆராய்ச்சி நடத்தி விதை ரகங்களைக் கண்டுபிடிக்கிறார்களா, அல்லது அரசாங்கம் இன்னின்ன மாதிரியான விதைகள் தேவை அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று உத்திரவு போட்டு அதன் பேரில் செய்கிறார்களா ? மானாவாரிப் பிராந்தியங்களில் மழை குறைவு, ஆகவே, அந்தக் காய்ச்சலைத் தாங்கக் கூடிய ஸ்ட்ரெயின்களை கண்டுபிடிக்க உத்திரவு உண்டா ? ரங்கூனில் வெள்ளத்தில், அல்லி, தாமரை போல், தண்ணீரில் விதைக்கும் விதைகள் இருப்பதாகவும்—அது டில்லியில் கண்காட்சியில் கூட வைக்கப்பட்டிருந்தது—அம்மாதிரி விதைகளைக் கண்டுபிடிக்க அரசாங்கம் ஆராய்ச்சியாளர்களுக்கு உத்திரவு இட்டு, ஏற்பாடு செய்வார்களா ? ஏனென்றால், இரண்டு வித ரக விதைகளுக்கும் தேவை அதிகமாக இருக்கிறது இங்கே. ஆகவே, அந்த முறையில், முயற்சி எடுக்கப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் விடையளித்தது சென்ற ஐந்தாண்டுகளில் என்னென்ன ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள், என்னென்ன ரகங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி. ஆனால், 150 ஸ்ட்ரெயின்கள் வரை நெல்லுக்கும், மில்லெட், பல்சஸ். ஆயில் ஸீட்ஸ், காட்டன் முதலியவைகளுக்கு எல்லாம் பல ஸ்ட்ரெயின்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிப் பண்ணைகள் தங்கள் இஷ்டம் போல் செய்வதில்லை ; அதற்கு ஒரு கோ-ஆர்டினேஷன் இருக்கிறது. இதற்கெல்லாம் இந்த ஆராய்ச்சிக்கு, தலைவராக ஒருவர் இருக்கிறார். ஆராய்ச்சிப் பண்ணைகளும் ரீஜனலாக வைத்து ஒவ்வொன்றுக்கும் தொடர்பு இருக்கிறது. நெல்லுக்கு மட்டும் சொல்லுகிறேன், 72 ஸ்ட்ரெயின்கள் இருக்கின்றன. அதில் 41 ஸ்ட்ரெயின்கள் இப்பொழுது பிரயோகத்தில் இருக்கிறது. ஆனால் குறிப்பாக கனம் அங்கத்தினர் கேட்ட மானாவாரி நிலத்திற்கு ஏற்ற ஸ்ட்ரெயின் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. ஆகவே, குறிப்பாக விடை அளிக்க முடியவில்லை.

**Mr. SPEAKER** : இன்னும் ஐந்து நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு பாக்கிக் கேள்விகளையும் முடித்துவிடுகிறேன். 9-30 a.m.

---

[a] Printed as Appendix III on pages 434–435 *infra*.

[20th April 1960

SRI V. K. KOTHANDARAMAN : மேஜையின் மீது வைக்கப்பட்ட ஸ்டேட்மெண்டில் நீண்டகால விவசாய விதைகள் கொடுக்கப்பட்டிருப்பதாக அதில் காணப்பட்டிருக்கிறது. ஆகையினால் குறுகிய காலத்தில் விவசாய உற்பத்தி செய்யக் கூடிய அளவில் விதைகளைக் கண்டுபிடிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீண்டகால பயிர்களைத்தான் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. நந்தன் காலத்தில் நாம் படித்தது போன்று, இரவில் நட்டு மறுநாள் காலையில் அறுவடை செய்து அறுக்கக் கூடிய அளவில் ஆராய்ச்சி இன்னும் செய்யவில்லை.

SRI A. GOVINDASAMY : திண்டிவனத்தில் இருக்கக்கூடிய மணிலா ஆராய்ச்சிப் பண்ணை டி.எம்.பி. ஆராய்ச்சியில் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அதை விதைப் பண்ணையாகவும் ஆராய்ச்சிப் பண்ணையாகவும் சேர்த்து அமைக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி தனி கேள்வி வேண்டும். சேர்த்து விதைப் பண்ணை வைக்கவேண்டிய நிலம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அதற்குத் தக்கபடி விடை அளிக்க எனக்கு கொஞ்சம் அவகாசம் வேண்டும்.

MR. SPEAKER : As we have already exceeded the time-limit, I shall hereafter allow two supplementaries to the hon. Members who put the main questions.

*Electric fans for N.G.Os.*

* 762 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

செக்ரடேரியேட் காரியாலயங்களில் வேலை செய்யும் என்.ஜி.ஓ.க்களுக்கும், ஜில்லா தாலுக்காக்களில் உள்ள என்.ஜி.ஓ.க்களுக்கும் மின்சார விசிறி போடுவதில் பாகுபாடு படுத்தும் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN: The provision of electric fans for the Non-Gazetted Officers working in the various offices in districts and taluks is a matter of policy. Such provision will involve huge expenditure initially. Just as there is distinction in the matter of pay and allowances for the Secretariat staff and other Non-Gazetted Officers there is distinction in the matter of provision of fans and other amenities.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தக் கோடை காலத்தில் வெய்யில் ரொம்பக் கடுமையாக இருக்கிறது. மூன்று வருஷ காலம் மழை இல்லாத காரணத்தால் அப்படி இருக்கிறது. அவர்கள் செய்யக் கூடியது எல்லாம் மூளை உழைப்பு வேலையாக இருக்கிறது. அப்படி வேலை செய்யும்போது வெய்யில் அதிகமாக இருந்தால் வேலை செய்ய முடியாது என்பது அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகையால் உடனடியாக எந்த விதமான பாகுபாடும் இல்லாமல் எல்லா என்.ஜி.ஓ.க்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் பெரிய டாக்டராக இருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் எந்த மாதிரியான கஷ்டங்கள் இருந்தாலும் அதைப் பற்றி அங்குள்ள மேலதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னால் அதைப் பார்த்து வேண்டிய அனுகூலம் செய்து கொடுக்கப்படும்.



20th April 1960]

*Cyclones.*

*763 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா —

(அ) புயல் சின்னம் உருவாவதை முன்னறிவிக்கும் நிபுணர்கள் அது உருவாவதை ஆராய்ந்தார்களா ?

(ஆ) எந்தக் காரணத்தால் புயல் சின்னம் அடிக்கடி சோழ மண்டலக் கரையில் உருவாகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The development of cyclones in the Bay of Bengal is usually the result of the interaction of the following factors:—

(i) Low pressure waves ;

(ii) Convergence of different air streams in the lower levels ; and

(iii) upper level flow patterns favourable for 'removal' of air aloft.

In the period October to December the Coromandel Coast is not liable to be affected by cyclone storms and depressions, which travel west or north-westwards from the south of the Bay of Bengal. A low pressure area exists in this season over the South Bay and low pressure waves move from east to west in the latitudinal belt of the Coromandel Coast. Both these features are responsible for the high frequency of cyclonic storms and depressions affecting this coast.

SRI A. VEDARATHNAM : இந்த நிபுணர்கள் அந்தப்புயல் சின்னம் உருவாவதைத் தவிர்க்க ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறார்களா ? அல்லது அப்படி ஆலோசனை கூறும்படி அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறார்களா ? அப்படியானால் அதன் விவரத்தை அறிவிக்கமுடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மாறுதல்கள் எல்லாம் சமுத்திரத்திற்கு அப்பால் ஏற்படுகிறது. அதாவது கரை ஓரத்திற்கு ரொம்ப தூரத்தில் ஏற்படுகிறது. அங்கே ஏதாவது ஐலண்டு இருந்தால் இங்கே இருந்துகொண்டு பார்க்க முடியும். இங்கே இருந்துகொண்டே முன்னதாக அதைப் பார்க்க முடியாது. கூடுமான வரையில் புயல் வருவதை எவ்வளவு சீக்கிரத்தில் தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளப்படுகிறது. அப்படி தெரிந்துகொண்டு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

(Sri T. S. Ramaswami rose.)

MR. SPEAKER : Is it a point of order ?

SRI T. S. RAMASWAMI : No, Sir. It is a submission to the Chair on a very important matter.

MR. SPEAKER: Yes, let me hear what it is.

SRI T. S. RAMASWAMI: Sir, in the list of unstarred questions and answers laid on the table today, answer to question No. 1547 is included. This is a very important question on which I have also written to the Minister concerned. But I have not received any reply from the Minister and this was raised as a question also. As the subject-matter raised in this question is a very important and serious one in which grievous harm has been done to a section of transferred Government Officers, I request that this question may please be converted into a starred question and opportunities for putting supplementaries and eliciting information may be given to us. Or, the Chair may please allow a half-hour Debate on the subject-matter raised in the question.

[20th April 1960

MR. SPEAKER: It is for the Speaker to decide whether a question should be starred or unstarred. If he thinks that the answer to a particular question will be too long and it may take the time of the House much more than actually needed, it is for him to make it unstarred. If, however, the hon. Member thinks that the question is so important, he may put a short notice question. I shall allow it.

SRI T. S. RAMASWAMI: Only when the Minister also agrees, I can get an answer to a short-notice question on the subject, Sir.

MR. SPEAKER: I hope he will agree if the subject is so important.

## UNSTARRED QUESTIONS

### *Fair Price Shops*

291 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of fair price shops proposed to be opened in the Tiruchirappalli district;

(*b*) the agency which is going to run these shops;

(*c*) the price at which rice will be sold in these shops;

(*d*) whether such shops are being already run by the other agencies at the initiative of the District Collector, Tiruchirappalli;

(*e*) whether there will be difference in price of rice that will be sold by the fair price shops and the agencies who were already selling rice at 13 annas per measure; and

(*f*) whether there is a proposal to ask the existing agencies to run the fair price shops?

*A.*—(*a*) One hundred and thirty-seven.

(*b*) All the fair price shops so far opened in the Tiruchirappalli district are run by co-operative institutions.

(*c*) The price of second sort boiled rice ranges from R. 0-87 nP. per Madras measure to Re. 0-89 nP. per Madras measure inclusive of sales tax and that of Andhra raw rice from Rs. 1-09 nP. per Madras measure to Rs. 1-12 nP. per Madras measure inclusive of sales tax.

(*d*) From the 1st May 1959 till the 15th July 1959 voluntary fair price shops for rice (which were opened at the instance of the Collector) were being run in municipalities in Tiruchirappalli district and in important rural centres where rice was being sold at 13 annas per Madras measure.

(*e*) Yes, as indicated in the answer to clause (c) of the question.

(*f*) No.

### *Agitation against 'Akash Vani'*

292 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state the number of persons arrested due to the agitation against 'Akash Vani' in Tiruchirappalli and Madras?

*A.*—Sixty-one persons in Tiruchirappalli and five persons in Madras were arrested up to the end of January 1960.



20th April 1960]

293 *Q.*—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many persons were arrested in connexion with the 'Vanoli Agitation' in Tiruchirappalli; and

(*b*) how many persons were punished?

*A.*—(*a*) Sixty-one persons were arrested up to the end of January 1960.

(*b*) All the sixty-one persons were convicted.

### *Water-supply Scheme for Coimbatore district*

294 *Q.*—திரு. பி. ஜி. மாணிக்கம்: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஒவ்வொரு வருடத்துக்கும் கோயமுத்தூர் ஜில்லா குடி தண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

*A.*—(*a*) & (*b*) A statment is given below.

*Statement showing the amount allotted for Water-supply schemes for the Coimbatore district in each of the first three years of the Second Five-Year Plan and the amount spent.*

| *Serial number and name of scheme.* | 1956–57. | | 1957–58. | | 1958–59. | |
|---|---|---|---|---|---|---|
| | *Amount allotted.* | *Amount spent.* | *Amount allotted.* | *Amount spent.* | *Amount allotted.* | *Amount spent.* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (RS. IN LAKHS.) | | | |
| 1 Urban Water-supply schemes. | 76·86 | 76·86 | 25·28 | 17·75 | 11.49 | 25.00 |
| 2 Rural Water-supply Comprehensive Programme. | 4·11 | 3·14 | 3·65 | 3·41 | 3·15 | 3·32 |
| 3 Local Development Works Programme. | 21·52 | 18·61 | 5·81 | 7·44 | 2·92 | 3·15 |

### *Number of Harijan students appeared for the S.S.L.C. Examination*

295 *Q.*—திரு. பி. ஜி. மாணிக்கம்: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடத்தில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் எத்தனை ஹரிஜன மாணவர்களும், மாணவிகளும் பரீட்சைக்கு ஆஜரானார்கள்?

(ஆ) இவர்களுள் எத்தனை மாணவர்கள் மாணவிகளுக்கு ஹரிஜன நல இலாகா மூலம் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை பணம் (examination fees) கொடுக்கப்பட்டது?

[20th April 1960

*A.*—(அ) & (ஆ) The particulars regarding the number of Scheduled Castes students who appeared for the S.S.L.C. Public Examination held in March 1959 and the number of those who were granted examination fees from the Harijan Welfare Department are furnished in the statement below :—

| Name of district. | Number of Scheduled Castes students who appeared for the S.S.L.C. Public Examination held in March 1959. | Number of Scheduled Castes students who were granted examination fees from the Harijan Welfare Department for the S.S.L.C. Public Examination held in March 1959. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| North Arcot .. .. .. | 438 | 181 |
| Madras .. .. .. .. | 365 | 158 |
| Chingleput .. .. .. | 116 | 43 |
| South Arcot .. .. .. | 232 | 167 |
| Thanjavur .. .. .. | 232 | 174 |
| Tiruchirappalli .. .. .. | 405 | 231 |
| Madurai .. .. .. | 298 | 125 |
| Ramanathapuram .. .. | 289 | 184 |
| Tirunelveli .. .. .. | 417 | 230 |
| Salem .. .. .. .. | 328 | 153 |
| Coimbatore .. .. .. | 318 | 139 |
| The Nilgiris .. .. .. | 85 | 75 |
| Kanyakumari .. .. .. | 264 | 253 |
| Total .. | 3,787 | 2,113 |

Separate figures in respect of boys and girls are not available.

*Employment opportunities during the First and Second Five-Year Plan periods*

296 *Q.*—**திரு. பி. ஜி. மாணிக்கம்** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டு திட்டமூலமாக எத்தனை பேர்களுக்கு தொழில்களும், உத்தியோகங்களும் கிடைத்திருக்கின்றன ?

*A.*—Information is not available.

*Slum Improvement Schemes*

297 *Q.*—**திரு. அ. வேதரத்னம்** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் சென்னை நகர ஜாகை வசதி, சேரி ஒழிப்புக்கு மத்திய சர்க்கார் புதுத் திட்டத்தின்படி எத்தனை ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) இத்தொகையைக் கொண்டு சென்னை நகரில் என்னென்ன அபிவிருத்தி வேலைகளைச் செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

(இ) எப்போது இந்த வேலைகள் நடைபெறும் ?



20th April 1960]

*A.*—(அ) A sum of Rs. 60 lakhs (rupees sixty lakhs) has been set apart for the improvement and clearance of slums in the Madras City during 1959–60 under the Union Government's Scheme.

(ஆ) & (இ) So far 22 projects have been sanctioned for execution by the Corporation and City Improvement Trust at a total estimated cost of Rs. 128·98 lakhs. The allotment for 1959–60 is intended to be utilized on these projects which are in different stages of execution, as also on new projects that may be sanctioned in the course of the year. They are expected to be completed by the end of the current Plan period.

*Construction of a bridge near Madurai*

298 *Q.*—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the construction of a bridge on the bye-pass near Madurai has been completed ; and

(*b*) the total cost of the bridge including the cost of the road connecting the bridge with the Tirupparankunram Road ?

*A.*—(*a*) It is nearing completion.

(*b*) 19·96 lakhs.

*Causeway across Vellar*

299 *Q.*—SRI S. SWAMIKANNU PADAYACHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the reasons for the delay in constructing a causeway across Vellar in Kammapuram to Kudalathur Road in South Arcot district ?

*A.*—Presumably, the Member refers to the construction of a causeway across Vellar in Kammapuram–Palayamkottai Road. This work is expected to be taken up for execution during the course of Third Five-Year Plan.

*Export of handloom cloth*

300 *Q.*—SRI N. K. PALANISAMI :
SRI S. M. ANNAMALAI : } Will the Hon. the Minister for Industries be pleased to state the quantity of handloom clothes exported to foreign countries during 1957, 1958 and 1959 ?

*A.*—The following are the figures of export of handloom cloth through Madras Port :—

| *Year.* | *Quantity exported (in million yards).* | *Value in rupees (in millions).* |
|---|---|---|
| 1957 .. .. .. | 49·1 | 75·5 |
| 1958 .. .. .. | 39·6 | 67·1 |
| 1959 .. .. .. | 30·7 | 65·8 |

*National Water-supply Scheme*

301 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount allotted for providing protected water-supply under the National Water-supply and Sanitation Schemes in Udayarpalayam taluk, Tiruchirappalli district, separately (i) for areas lying adjacent to the present National Water-supply region and (ii) for areas which are far removed from the region ?

[20th April 1960

*A.*—Nil, Sir. No village in the Udayarpalayam taluk has been selected for execution of works under the National Water-supply and Sanitation (Rural) Scheme.

302 *Q.*—திரு. ச. மொ. அண்ணாமலை : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1958–59, 1959–60-ம் ஆண்டுகளில் மாவட்டங்கள் வாரியாக கிராம தண்ணீர் விநியோகத் திட்டத்தின்படியும் (Rural Water-supply Scheme), தேசீய தண்ணீர் திட்டத்தின்படியும் (National Water-supply Scheme) எத்தனை திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன ?

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்திற்கு தேசீய தண்ணீர் விநியோகிக்கும் திட்டத்தை (National Water-supply Scheme) விஸ்தரிக்கும் திட்டம் உண்டா ?

*A.*—(*a*) A statement furnishing the information is given below.

(*b*) The National Water-supply and Sanitation (Rural) Scheme has been extended to the North Arcot district in October 1959.

*Statement showing the particulars regarding the number of works programmed during the years 1958–59 and 1959–60 under the Rural Water-supply Comprehensive Programme and National Water-supply and Sanitation (Rural) Scheme.*

| Name of the district. | Rural Water-supply Comprehensive Programme. | | | | National Water-supply and Sanitation (Rural) Schemes. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1958–59. | | 1959–60. | | 1958–59. | | 1959–60. | |
| | Wells | Composite Schemes. | Wells. | Composite Schemes. | Water supply | Sanitation. | Water-supply | Sanitation. |
| Chingleput .. | 140 | 9 | 120 | 8 | *Investigation to be taken up shortly. **Under investigation. | | | |
| North Arcot .. | 200 | 16 | 200 | 12 | 48 | 48 | 46 | 33 |
| South Arcot .. | 100 | 5 | 120 | 10 | 72 | 72 | 137 | 152 |
| Thanjavur .. | 220 | 4 | 120 | 8 | 62 | 62 | 69 | 63 |
| Tiruchirappalli | 150 | 16 | 250 | 12 | *Under Investigation. | | | |
| Madurai .. | 100 | 6 | 100 | 10 | 39 | 39 | 39 | 39 |
| Ramanathapuram | 200 | 16 | 250 | 16 | 48 | 48 | 26 | 40 |
| Tirunelveli .. | 250 | 12 | 250 | 12 | | | | |
| Salem .. | 120 | 6 | 120 | 10 | | | | |
| Coimbatore .. | 120 | 4 | 120 | 8 | | | | |
| Nilgiris .. | 25 | 14 | Nil. | 20 | | | | |
| Kanyakumari | 75 | 4 | 50 | 4 | | | | |
| Total .. | 1,700 | 112 | 1,700 | 130 | 269 | 269 | 317 | 327 |

*Tenkasi Water-supply Sche...e*

303 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon the Minister for Revenue be pleased to state—

(*a*) the stage at which the Tenkasi Water-supply Scheme stands;

(*b*) the time by which Government hopes to complete it; and

(*c*) whether the source from which water is to be taken has been finalised ?



20th April 1960]

*A.*—(*a*) The work of laying of pumping main for the Tenkasi, etc. composite water-supply scheme has almost been completed and the work of distribution system is in progress. About 60 per cent of the work in the scheme has so far been completed.

(*b*) The scheme is likely to be completed in 1962–63.

(*c*) The source for the scheme has not yet been settled.

*Palni Water-supply Improvement Scheme*

304 *Q.*—திரு. பி. எஸ். கே. லட்சுமிபதிராஜு : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பழனி நகர சபை நீண்ட நாளாக வற்புறுத்தி வரும் குடி தண்ணீர் அபிவிருத்தி திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இதைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

*A.*—(*a*) The investigation report of the Palni Water-supply improvement scheme is awaited from the Chief Engineer, Public Works Department (General).

(*b*) The question of including the scheme in the Third Five-Year Plan is under the consideration of the Government.

*Training Schools*

305 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of training schools (Higher and Secondary-Basic and Non-Basic) in the State during the year 1958–59 ;

(*b*) the number of applications received by all the schools during this school-year ;

(*c*) the number of students actually admitted ; and

(*d*) whether there is a proposal to increase the number of training schools ?

*A.*—(*a*) The number of training schools in the State as on 1st July 1959 was as shown below :—

| Non-Basic. | Secondary. | Elementary. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 28 | 23 | 5 |

| Basic. | Senior Basic. | Junior Basic. |
|---|---|---|
| (4) | (5) | (6) |
| 105 | 86 | 19 |

(*b*) & (*c*) The time and labour involved in collecting the particulars for answering the question will not be commensurate with the public interest which it may serve.

(*d*) No, Sir.

[20th April 1960

*Export of oil-cake*

306 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of oil-cake that was exported from our State to any agency outside the State in 1958-59 ?

*A.*—

| | TONS. |
|---|---|
| To other countries (by sea)— | |
| Groundnut oil-cake—United Kingdom .. .. | 2,986 |
| Cotton seed oil-cake—United Kingdom .. .. | 1,435 |
| Sesamum oil-cake—Ceylon .. .. .. .. | 37 |
| Other oil-cakes .. .. .. .. .. | 117 |
| Total .. | 4,575 |
| To other States in India (by rail) .. .. .. | 23,309 * |
| Total exports .. | 27,884 |

* Varietywise details are not available.

*Preparation of children's food from oil-cake*

307 *Q.*—திரு. ச. மொ. அண்ணாமலை : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பிண்ணாக்கிலிருந்து குழந்தைகளுக்கு உணவு தயாரிக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அப்படியாயின் அதன் விபரம் என்ன ?

*A.*—(அ) No, Sir.

(ஆ) Does not arise.

*Assignment of forest lands*

308 *Q.*—திரு. ச. மொ. அண்ணாமலை : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போளூர் தாலூகா குறத்திக் குன்றுக்கு அருகாமையிலுள்ள காட்டுப் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து தர வேண்டுமென்று 15-ம் தேதி டிசம்பர் மாதம் 1958-ம் ஆண்டில் மகஜர் வந்ததா ?

(ஆ) அப்படியானால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

*A.*—(*a*) No, Sir. Only a petition for lease of forest lands in Kurathi Kundru Reserved Forest area was received.

(*b*) The Government do not consider it desirable to lease out or assign the lands within this Reserved Forest or any lands adjoining it.

*Aid to ex-Servicemen*

309 *Q.*—திரு. ச. மொ. அண்ணாமலை : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

என்று புகார் சொன்னார்கள். ஆனால் நிலப்பிரச்னையைப் பொறுத்த வரையில் 100-க்கு 85 பேர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். இந்த மசோதாவில் விவசாயிகள் உற்பத்தி செய்வதை அதிகரிக்கச் செய்யும் வகையிலே மிகவும் நல்ல முறையிலே இந்தச் சட்டத்தை செய்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரு எக்கருக்கு சராசரி நெல் உற்பத்தி 1,300 பவுண்ட்தான். ஆனால் நம் மானிலத்திலே ஒரு எக்கருக்கு 2,000 பவுண்ட் உற்பத்தியாகி இருக்கிறது. இதிலிருந்து சென்னை ராஜ்யத்தில் உள்ள மக்கள் எவ்வளவு உற்சாகம் காட்டி வருகிறார்கள் என்பது தெரியவரும். சில அங்கத்தினர்கள் இந்த விவசாய நிலங்கள் எல்லாம் விவசாயிகளுக்கு எப்படி கிடைத்தது என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். விவசாயிகளுக்கு பலவகையிலே இந்த பூமிகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த காலத்தில் தர்காஸ்து நிலங்கள் கிடைத்திருக்கலாம். தானமாக வாங்கியிருக்கலாம். ஜமீன்தார்களுக்கு நூற்றுக் கணக்கான எக்கர் நிலங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலே இருந்த அரசர்கள் கொடுத்திருக்கலாம். இப்படியாக பலவகையிலே கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்பு இருந்திருக்கிறது. இப்படி எல்லாம் கிடைத்திருந்தாலும் இந்த நிலங்களை நல்ல முறையிலே விவசாயம் செய்கிறார்களா ? விவசாயம் செய்து உணவு உற்பத்தி பெருக்கிக்கொள்கிறார்களா ? என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். யார் யார் அதிகமாக உணவு உற்பத்தியை பெருக்கி இருக்கிறார்களோ அவர்களிடத்தில்தான் இந்த பூமிகள் இருக்க வேண்டும்.

சாதாரணமாக வெளி நாடுகளில் எவ்வளவு உற்பத்தி செய்கிறார்கள் என்று பார்த்தால் அமெரிக்காவில் 5,000 பவுண்ட் உற்பத்தி செய்கிறார்கள். ரஷ்யாவில் 4,000 பவுண்ட் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் சராசரி உற்பத்தி ஒரு எக்கருக்கு 1,300 பவுண்ட்தான் கிடைக்கிறது. தவிர அமெரிக்கா போன்ற நாடுகளில் விவசாயத்தில் ஈடுபடுகிறவர்கள் 100-க்கு 12 பேர்கள்தான். இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறதென்றால் பெரும்பாலான மக்கள் விவசாயத்தை நம்பி வாழமுடியாமல் பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனால்தான் இந்த உச்சவரம்பு மசோதா கொண்டுவருவதனால் உற்பத்தி அதிகமாகுமா என்பதை நாம் பார்க்க வேண்டும். இதுபோல் ரஷ்யாவை எடுத்துக்கொண்டால் 100-க்கு 15 பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகக் குறைவாக இருந்தாலும் அங்கே உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் அங்குள்ள மக்கள் அதிகமாக பூமியை நம்பி வாழ்வதில்லை. ஏனென்றால் விவசாயத் தொழில் லாபகரமானத் தொழில் இல்லை என்ற காரணத்தால்தான். ஆகையால் இந்த விவசாயத் தொழில் ஒரு லாபகரமான தொழில் இல்லை, இதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே விவசாயத் தொழிலை மாத்திரம் அதிகமாக நம்பியிருப்போமானால் பெரிய பொருளாதார சீரழிவுதான் ஏற்படும். அதனால்தான் விவசாய மக்கள் பெரும்பாலோர் விவசாயத் தொழிலிலேயே நம்பிக்கை வைக்காமல், கைத்தொழிலிலும் நம்பிக்கை வைக்க வேண்டும். உணவு உற்பத்தியை பெருக்குவதோடு நின்றுவிடாமல் வேறு கைத்தொழில்களிலேயும், மற்றத் தொழில்களிலேயும் ஈடுபட வேண்டும். இந்த வகையில் பார்க்கும்போது இந்த உச்ச வரம்பு மசோதா கைத்தொழிலை அதிகரிக்க உதவுகிறது என்று சொல்ல விரும்புகிறேன். இந்த அடிப்படையான தத்துவம் இதில் அடங்கி இருக்கிறது.

ஒரு விவசாய குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்தால், அவர்களுக்கு 100 எக்கர் நிலம் இருக்குமானால் அதில் ஒவ்வொருவருக்கும் 25 எக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கும்படியிருக்கும். அப்படியிருந்த நிலங்கள் போகப் போக 5 எக்கர் நிலமாக மாறிவிடுகிறது. ஆகையால் இந்த உச்ச வரம்பு மசோதாவானது பெரும்பாலும் பூமியையே நம்பியுறாமல் வேறு தொழிலுக்குப் போவதற்கு தூண்டுதலாக அமைந்திருக்கிறதென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். இந்த உச்ச வரம்பு கட்டும் விஷயத்தில் 30 எக்கர் நிலம் கூடாது, இன்னும் குறைய வேண்டும் என்று



20th April 1960] [Sri P. G. Karuthiruman]

சில அங்கத்தினர்கள் கூறினார்கள். சில அங்கத்தினர்கள் 30 எக்கர் என்றிருப்பதை 50 எக்கர் ஆக மாற்றவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஒரு விவசாயி 10 எக்கர் நிலமும் மாடும் வைத்திருந்தால் அவன் நல்ல முறையில் விவசாயம் செய்கிறானா என்று நாம் பார்க்க வேண்டும். அவன் நேரடியாக உழுது பயிரிட்டு நல்ல முறையில் விவசாயம் செய்யவில்லை என்றால் இந்த 10 எக்கர் நிலம் வைத்திருப்பவனுக்கு 50 எக்கர் நிலம் கொடுத்தாலும் நல்லபடி உணவு உற்பத்தி பெருக்க முடியாது என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக அவர் நல்ல விவசாயியாக இருந்தால் அவர் 10 எக்கர் நிலம் வைத்திருந்தாலும் கூட இரண்டு, மூன்று போகம் பயிரிட்டு 30 எக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயியைவிட அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகையால் 30 எக்கர் உச்ச வரம்பு செய்தால் எல்லா விவசாயிகளும் உணவு உற்பத்தி அதிகரிப்பார்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஆகையால் விவசாயிகள் திறம்பட எவ்வளவு அக்கறை நேரடியாக எடுத்துக்கொள்ளுகிறார்களோ அதைப்பொறுத்திருக்கிறது விளைச்சல். சில விவசாயிகள் தாங்களே நேரடியாகப் பயிரிடாமல் அவர்கள் ஏஜண்டை வைத்துக்கொண்டு அவர்கள் விவசாயம் செய்யலாம். அதேமாதிரியாக கிராமத்தில் விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்கள், விவசாயத்தை நன்றாக கவனித்து கண்ணும் கருத்துமாக உணவு உற்பத்தியை அதிகரிக்கிறார்கள். ஒரு பக்கத்தில் உணவு உற்பத்தி அதிகம் ஆகிக்கொண்டேதான் போகிறது. ஆனால் நிலத்தை இன்னும் அதிகரிப்பது என்பது சாத்தியமாகாது. இருக்கிற நிலத்தை வைத்துக்கொண்டுதான் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். சாதாரணமாக உணவு உற்பத்தி அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதே சமயத்தில் உணவு உற்பத்தி ஒரு பங்கு அதிகரித்தால் பன்மடங்கு ஜனப்பெருக்கம் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆகவே விவசாயத்தையே அதிகமாக நம்பி நாட்டு மக்கள் வாழமுடியாது.

கிராமங்களில் நியாயமான முறையில் சாகுபடி செய்கிறவர்களை வெளியேற்றுதல் கூடாது. கிராமத்தில் வாழும் குடியானவர்களை வெளியேற்றிவிட்டு யாரும் நன்றாக வாழமுடியாது. இனிமேல் நிலத்தை சிறு பட்டாதாரர்கள் எடுத்துக்கொள்வதற்கு அனுமதியில்லை. ஏமாற்றுவதற்கு வசதி இருக்கிறது என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். ஹிந்து லா ஆப் ஸக்ஸஷன் பிரகாரம் அவரவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு பிரித்துக்கொடுப்பதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் ஒரு சிலர்தான் பாதுகாக்கப்படுகிறார்கள். பலபேர் தப்பித்துக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. **Avoidance of tax is no offence but concealing of tax is offence** அதாவது வரியைக் கட்டாமல் இருந்தாலும் பரவாயில்லை, குற்றமில்லை. ஆனால் அதை மறைப்பது குற்றம். ஆகையால் இதை யாரும் ஏமாற்றித் தப்பித்து கொள்ளமுடியாது. "கருத்திருமன் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தனக்குச் சொந்தமான ஆயிரம் எக்கர் பூமியை இந்த நில உச்ச வரம்பு சட்டம் வருவதற்கு முன்பே பிரித்துக்கொடுத்து விட்டார்கள்" என்று எல்லாம் சொன்னார்கள். ரிகார்டுகள் இருக்கின்றன, அவைகளை வேண்டுமென்றால், யார் வேண்டுமென்றாலும் பார்த்துக்கொள்ளட்டும்.

25, 30 எக்கர்களை வைத்துக்கொண்டு, அவைகளில் நல்ல முறையில் உற்பத்தி செய்து, உற்பத்தியைப் பெருக்கி மக்கள் சந்தோஷமாக, திருப்திகரமாக, நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். உச்ச வரப்பிற்கு மேற்பட்டதை யாருக்கு கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கு கொடுக்க நான் தயாராயிருக்கிறேன் என்று சபாநாயகர் அவர்கள் மூலம் சவால் விடுகிறேன்.

**Mr. SPEAKER** : சவால் ஒன்றும் விட வேண்டாம்.

**Sri A. GOVINDASAMY** : He is challenging the Speaker.

**Mr. SPEAKER** : அதுதான் சொல்லிவிட்டேன், சவால் ஒன்றும் விடவேண்டாமென்று.

[20th April 1960

**Sri P. G. KARUTHIRUMAN :** ஆக, இங்கு இருக்கும் நாங்கள் எல்லோரும் இந்த மசோதாவை வரவேற்கிறோம். அப்படி அதை வரவேற்கும்போது, அது நம்மை பாதிக்குமா, பாதிக்காதா என்று பார்த்தல்ல வரவேற்பது. எது வந்தாலும் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறோம். காலத்தை அனுசரித்து காரியங்கள் செய்யவேண்டியதுதான் விவேகம், அதுதான் நல்லதும்கூட. பூமி குறைந்திருப்பதால் மன ஏக்கம் கொள்ள வேண்டியதில்லை. காலம் எல்லாம் கட்டி ஆண்டாலும் மன ஆசை இருக்கிறதே அது போக மாட்டேன் என்கிறது. சிறு நில விவசாயிகளும் சிறப்பாக இருக்க முடியும் என்பது குறித்து கம்பர் வெகு அற்புதமாக கூறியிருக்கிறார்.

“ வையக முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் என காத்து இனிது அரசு செய்கின்றான் ” என்று.

ஒரு ஏக்கருக்கும் குறைவான நிலம் ஒரு வறிஞனிடம் இருக்கிறது. வேறு எந்தவிதமான நிலமும் அவனிடம் கிடையாது. அந்த பூமியை மட்டும் நம்பித்தான் அவன் வாழ வேண்டும். அவர்கள் தங்களிடமுள்ள நிலத்தில் நன்கு பாடுபட்டு விவசாய உற்பத்தியை அதிகரித்து வாழ்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு நன்கு பாடுபடுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் அதிக பலனை அடைகிறார்கள். பூமியில் நல்ல உரம் போடாமல், அதை கவனியாமல் இருந்தால் பூமிக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடாது. அதனால் அது சம்பந்தப்பட்ட விவசாயிக்குத்தான் நஷ்டம். ஆக, பழங் காலத்தில்கூட சிறுநில விவசாயிகள் இருந்திருக்கிறார்கள். வறிஞர்கள் இருந்திருக்கிறார்கள். ஆகவே, நம்மைப், போலுள்ள பொது ஜனப் பிரதிநிதிகள் ஏழைகளுக்கு வேண்டிய வழி வகைகள் செய்துகொடுக்க வேண்டியது மிக மிக அவசியம். அதிக நிலம் இருக்கக்கூடியவர்களைத்தான் இது பாதிக்கிறது. உச்ச வரம்பிற்கு அதிகமாக நிலம் இருப்பவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்து அறிவிக்க வேண்டுமென்று இருப்பது வரவேற்கத்தக்கது. 90 நாட்களுக்குள்ளாக, உச்சவரம்பிற்கு மேல் இருப்பவர்கள் நிலையை விளக்கி அவர்களுக்கு எவ்வளவு இருக்கிறது என்று சொல்லும் நிலை இருக்கிறது. ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துக்கொள்கிறேன். இந்த தேசத்தில் எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்திருக்கிறோம். ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசம் கிடையாது. ஆண்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அதே உரிமை பெண்களுக்கும் இருக்க வெண்டும். ஆக, இந்த உச்ச வரம்புச் சட்டத்தை நான் பரிபூரணமாக ஆதரிப்பதோடு, எந்த ஒரு கட்சியின் நலனுக்காகவோ இல்லாது, மக்கள் நன்கு வாழ வேண்டும். மக்கள் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், மக்கள் உணவுப் பிரச்னை தீர வேண்டும், மக்கள் சுபிட்சமாக வாழவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. க்ஷேமநல சர்க்கார் என்று, திட்டம் போட்டிருக்கும் நிலையில், இதை வெற்றிகரமாக நடத்தவேண்டும், இது மக்களுக்கு ஒரு வரப் பிரசாதம் என்றும் சொல்லிக்கொண்டு, இதனால் மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஆன் எ பாயின்ட் ஆப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். அங்கத்தினர் அவர்கள் பேசுகிறபோது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டுமென்று, சொன்னார்கள். இந்த ஸீலிங் ஆண்களையும் பெண்களையும் கொண்ட குடும்பத்திற்கா, அல்லது ஆண்களுக்கு மட்டுமா என்று விளக்கம் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** தனிப்பட்ட மெம்பரால் விளக்கம் **கொடுக்க** முடியாது. அமைச்சரை கேளுங்கள்.

**Sri C. N. ANNADURAI :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த ஏற்பாட்டில் கலந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் நாட்டிலே சில புதிய நிலைமைகளை



20th April 1960] [Sri C. N. Annadurai]

உண்டாக்குவதற்கான ஒரு சிறந்த ஏற்பாட்டில் பங்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்ற பெருமையை நிச்சயமாக ஒவ்வொருவரும் அடைய முடியும். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவது என்றால், அந்த ஏற்பாட்டைப்பற்றி பல வருடங்களாக பொது மன்றங்களிலும், அரசியல் கட்சி மகாநாடுகளிலும், நிபுணர்களின் அறிக்கைகள் மூலமாகவும் நாட்டு மக்களுக்கு பல்வேறு வகையான வாக்குறுதிகளும், பல்வேறுவிதமான ஆசாபாசங்களும் ஊட்டப்பட்டும், காட்டப்பட்டும் வந்தன. அவைகள் எந்தளவுக்கு இந்த மசோதாவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது, அவை எப்படி நிறைவேற்றப்படயிருக்கிறது என்பதைப்பற்றி யோசிக்கவேண்டிய தருணத்தில், அந்த வகையில் நடப்பதற்கு சர்க்கார் முன் வந்ததற்கு நிச்சயமாக முற்போக்கு சக்திகள் அத்தனையும் பாராட்டத்தான் கடமைப்பட்டிருக்கிறார்கள். நிலைமைகளின் நிர்பந்தத்தால் அவர்கள் அப்படி கொண்டுவந்திருக்கிறார்களா அல்லது இந்தக் காலத்தில் செய்யாவிட்டால் இதைவிட தீவிரமான புரட்சிகரமான திட்டங்கள் பிற்காலத்தில் வந்துவிடும் என்பதற்காக பாதுகாப்பு உணர்ச்சியோடு செய்கிறார்களா என்பதெல்லாம் சுவையான அரசியல் பிரச்னைகளே தவிர இப்பொழுது அவைகள் அவ்வளவு அவசியமல்ல என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது என்றதொரு திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்ததுபற்றி இன்று நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். இந்த மகிழ்ச்சியில் இரண்டற ஆளும் கட்சியோடு சேருவதற்கு ஏற்ற முறையில் இந்தத் திட்டத்தை உருவாக்கவில்லை என்பதுதான் எங்களுக்குள்ள வருத்தமாகும். இந்த மாமன்றத்தைப் பொறுத்த வரையில் ஒரு பத்து பேர்கள் இருக்கலாம், இதை வெளிப்படையாக வேண்டாமென்று சொல்வதற்கு. அப்படி சொல்வதற்கு முடியாமல் தயக்கத்தோடு அதை மனதிற்குள்ளாகவே வெறுத்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள் ஒரு இருபது பேர்கள் இருக்கலாம். மற்ற 10 a.m.
யாராயிருந்தாலும் சரி கருத்திருமன் அவர்கள் சொன்னதுபோல் முப்பது ஏக்கருக்கு மேல் வேண்டியதில்லை, வேண்டியதில்லை, வேண்டியதில்லை என்று அதற்கு மேலே இருக்கப் போவதில்லை என்று தெரிந்த பிறகு மிகத் தாராளமாக பேசக்கூடியவர்கள்தான் இந்த மன்றத்தில் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். கருத்திருமன் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்று நம்பிக்கொண்டிருப்பவன் அல்ல நான், திரு கருத்திருமன் அவர்களை நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னாலேயே நன்றாகத் தெரியும். அவர்களைப் பார்த்தால் ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு சொந்தக்காரர் என்று தோன்றுமே தவிர அவர் உண்மையிலேயே அப்படிப்பட்டவர் அல்ல.

நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுவது என்கின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதனுடைய நோக்கத்தை பார்த்து, அதிலுள்ள பலாபலன்களைப் பார்த்து அதிலிருக்கின்ற கஷ்டங்களைப் போக்குவதற்காக சட்டங்களை இயற்றுகிறோம், தேவையான நீதிகளை ஏற்படுத்துவதற்காக பலவிதமான சட்டங்களை இயற்றுகிறோம், சமுதாயத்தில் இருக்கின்ற கேடுபாடுகளை நீக்குவதற்காக நாம் பல சட்டங்களை இயற்றுகிறோம். இதில் எந்த நோக்கத்தோடு, எந்த விதத்தில் நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இதிலுள்ள குறிப்புகளிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பொதுவாக இந்த நாட்டில் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் என்று பல காலமாக பேசப்பட்டு வந்ததை நாம் எல்லோரும் அறிந்துவந்திருக்கிறோம். பல காலமாக உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லப்பட்டு வந்த காலத்தில், அன்று காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரிய தலைவர்கள், நிலம் உழுபவனுக்கு சொந்தம் என்றால், மோட்டார் ஓட்டுபவர்களுக்கு சொந்தம் ஆக்கப்பட வேண்டும், ரயில், அதில் பிரயாணம் செய்கின்றவர்களுக்கு சொந்தம் ஆக்கப்படவேண்டும் என்ற புரியாத பொருளாதார தத்துவங்களை எல்லாம் பேசிக்கொண்டு இருந்தார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள்கூட, அவர்கள் இங்கு முதல் அமைச்சராக வருவதற்கு முன்னால் இப்படியெல்லாம் பேசுவதை நான் வேடிக்கையாக கேட்கிறேன். அப்படிப்பட்ட மனப்பான்மையிலிருந்து மாறி, நிலம் உழுபவனுக்கு சொந்தம் என்ற கருத்தை அல்லது

[Sri C. N. Annadurai] [20th April 1960

அந்த அடிப்படை அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள முற்பட்டிருப்பது ஓரளவுக்கு வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில், அதற்கான முற்போக்கு சக்தி கொண்ட கருத்துக்கள் இந்த சட்டத்தில் உண்மையாகவே அமைந்திருக்கும் என்ற எண்ணத்துடன், இதற்கு முன்னுரையாக கூறப்பட்டிருக்கும் இடத்தில் (ப்ரிஆம்பிள்) மிக ஆவலோடு கவனித்துப் பார்த்தேன். ஆனால் அதில் இதை ஒன்றும் குறிப்பிடாமல் ஒரு புதிய முறையை, ஏற்பாட்டை கொண்டு வந்திருக்கிறோம், இந்த ஏற்பாட்டின் மூலமாக அதிகப்படியான அளவில் பலர் பலன்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்று இவைகளை எல்லாம் அதிகப்படுத்தி சொல்லியிருக்கிறார்களே தவிர நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்ற அடிப்படையில் இதைக்கொண்டு வந்திருப்பதாகத்தெரியவே இல்லை. நிலத்தில் பாடுபடுகின்ற உழவர்கள் என்பதற்கு அல்லது கல்டிவேட்டர் என்பதற்குக்கூட இந்தச் சட்டத்தில், இந்த மசோதாவில் இன்றைய தினம் கொடுக்கப்பட்டிருக்கின்ற வியாக்கியானங்களைப் பார்த்தால் அவைகள் ஒன்றும் முற்போக்கு சக்தியை காட்டுவதாக இல்லை. உழவர்கள் யார், விவசாயிகள் யார் என்பதற்கான விளக்கத்தைப் பார்க்கும்பொழுது, இதன் மூலம் பலன் அடைபவர்கள் விவசாயிகள், அல்லது உழுபவர்கள் என்று சொல்ல முடியாத அளவுக்கு விளக்கங்கள் இருக்கின்றன. அறுவடை காலத்தில் வயலோரங்களில் போகிறவர்கள் மட்டும் உழவர்கள் அல்ல, விதைப்பாடு நடைபெறுகின்ற சமயத்தில் வயலோரங்களில் நின்றுகொண்டிருப்பவர்கள் மட்டும் உழவர்கள் அல்ல, அறுவடை கழிந்து நெல்லை களஞ்சியத்தில் போடுவதை பார்த்துக்கொண்டிருப்பவர்கள் மட்டும் உழவர்கள் அல்ல, அல்லது களஞ்சியத்திலிருந்து நெல்லை எடுத்து இயந்திரத்துக்கு கொண்டு போவதற்கு உத்தரவிடுகின்றவர்கள் விவசாயிகளும் அல்ல, உழவர்களும் அல்ல. ஆகையினால் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சொல்லுகின்ற நேரத்தில் இப்போது யார் யார் விவசாயத்தில் நேரிடையாக நிலத்தில் உழைக்கின்றவர்கள்தான் விவசாயிகள், உழவர்கள். இந்த முறையில் விளக்கம் கூறப்படவில்லை என்றால் இது மிகவும் பிற்போக்கான ஒரு நிலையைத்தான் ஏற்படுத்துமே தவிர வேறு எதுவுமிருக்க முடியாது. உண்மையிலேயே உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாக வேண்டும், அவர்களுக்கு நிலம் தரப்பட வேண்டும் என்ற எண்ணமிருந்தால், உண்மையிலேயே, நிலத்தில் யார் தன்னுடைய உழைப்பைப் போட்டு அதன் மூலம் கிடைக்கின்ற பலத்தை தன்னுடைய வாழ்க்கைக்ககாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான் விவசாயிகள், உழவர்கள் என்ற கருத்தில் அவர்களுக்கு நிலங்கள் கொடுக்கவேண்டும் என்ற விளக்கம் தரப்பட்டிருக்குமானால் உண்மையில் இந்த மசோதாவில் முற்போக்கு சக்தி இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இவைகளை ஆளும்கட்சியில் இருக்கின்றவர்கள், முன்னால் இருந்த காங்கிரஸ் தலைவர்கள், இப்போதல்ல, நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே இதற்கு மறைமுகமாக வேட்டு வைத்து தகர்த்துவிட்டிருக்கிறார்கள். முதன் முதலாக காங்கிரஸ் கட்சி சார்பில் போடப்பட்ட விவசாய கமிட்டியில் கல்டிவேட்டர் என்பதற்கு கொடுத்திருக்கின்ற விளக்கத்தைப் பார்த்தால், "எவர் ஒருவர் தன்னுடைய உடலுழைப்பை நிலத்தில் போடுகின்றாரோ அவர்தான் உண்மையான கல்டிவேட்டர் அல்லது உண்மையான உழவர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அமைக்கப்பட்ட மற்றொரு கமிட்டியில் (லான்ட் டெனியூர் கமிட்டி) முன்னால் கல்டிவேட்டர் என்பது யார் என்று சொன்னதை மாற்றி, கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில்,

"The Congress Agricultural Reforms Committee defined the cultivator as one who puts in a certain amount of manual labour in cultivation. This definition is closely associated with the idea of tiller. It is undoubtedly too narrow."

என்று சொல்லி, உழைப்பை போடுகின்றவர்தான் உழவர்கள் அல்லது விவசாயிகள் என்கின்ற முற்போக்கான விளக்கத்தை மறைத்துவிட்டு, ஆளை வைத்து வேலை வாங்குகின்றவர்களும், கூலி கொடுத்து வேலை வாங்குகின்றவர்களும், தான்யமாக கொடுக்கவில்லையென்றாலும், பணம்



20th April 1960] [Sri C. N. Annadurai]

கொடுத்து வேலை வாங்குகின்றவர்களும் விவசாயிகள் தான் என்று புதிய விளக்கத்தை சேர்த்துக்கொண்டார்கள். இந்த மசோதாவும் அந்த அடிப்படையில் கட்டப்பட்டிருக்கிறது. முற்போக்கான சக்தியுள்ளதாக இந்த மசோதா அமைந்திருக்குமானால் இதில் குற்றம் குறை காண மக்கள் முற்பட்டிருக்கமாட்டார்கள். நம்முடைய ரெவன்யூ அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விளக்கத்தில் கல்டிவேட்டர் யார், ரயத்துகள் யார் என்பதற்கு இப்படிப்பட்ட விளக்கத்தை கொடுத்திருக்கிறார்கள். பம்பாய் மாநிலத்திலும் இதே விளக்கம்தான் தரப்பட்டிருக்கிறது. அதையேதான் சென்னை மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் முற்போக்கான சக்தியுள்ள விளக்கங்கள் என்று சொல்ல முடியாது என்பதுமட்டும் அல்ல, முற்போக்கான வழிக்குகொண்டு செல்லாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே இதற்கு முற்போக்கான விளக்கம் தேவை, அதை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே நிலத்தை ஐந்தாறு வகையில் பிரித்திருக்கிறார்கள். இன்னொரு வகையில் கரும்பு விளைகின்ற நிலங்களை விலக்கு கொடுத்தும், இன்னொரு வகையில் வியாபார பொருட்கள் பயிரிடுகிற நிலங்களுக்கு விலக்கு கொடுத்தும் தோட்டக்காலுக்கு விலக்கு கொடுத்தும், மலை பிராந்தியங்களுக்கு விலக்கு கொடுத்தும், இவ்விதம் பலவற்றிற்கு விலக்கு கொடுத்துவிட்டு, மிச்சப்படுகிறது என்னவென்று பார்த்தால் மிகவும் குறைவு. நம்முடைய நாட்டில் இருக்கின்ற நிலத்தின் அமைப்பை எடுத்துப் பார்த்தால்

**Pattadars paying rupee one and less—22·2, pattadars paying more than rupee one and below Rs. 30—66·6, pattadars paying more than Rs. 30 and less than Rs. 50—3·6, pattadars paying Rs. 50 and above—7·1**

என்ற இவர்கள் எல்லாம் வர மாட்டார்கள். ஆனால் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரி செலுத்துகின்ற பட்டாதாரர்கள் 2,000 பேர்கள் என்று இந்தக் கணக்கிலிருந்து தெரிகிறது. இவர்கள் கொடுக்கின்ற கணக்கை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் சரி, தகப்பன், மகன், புருஷன், மனைவி, ஒன்றாக இருந்தாலும் சரி, அல்லது புருஷன், மனைவி வேறு வேறாக இருக்கிறார்கள் என்று கணக்கு காட்டினாலும்கூட ஆயிரக் கணக்கான பட்டாதார்கள்தான் இருப்பார்கள். இவர்களுக்கு தொல்லை கொடுக்கவேண்டாம் என்ற அளவில், இந்த ஆயிரம் பேரை காப்பாற்றுவதற்கு இவர்களுக்கு இருக்கின்ற பயத்தை போக்குவதற்கு பெரிய பெரிய அரசியல் வாதிகள் எல்லாம் தனித்தனி இயக்கங்கள் ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை, இதற்கென்று தனிக்கட்சி ஆரம்பிக்கவேண்டிய அவசியமேயில்லை, அவர்கள் விரும்புகிற நோக்கங்கள், அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு இதிலேயே இருக்கின்றது. ஆகவே நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகின்றபொழுது இதற்கு பெருவாரியான அளவில் ஆதரவு இல்லாததன் காரணம், முற்போக்கான சக்திகளின் அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை, இன்னொன்று இம்மாதிரிப்பட்ட ஒரு மசோதா வரப்போகிறது, வரப்போகிறது என்று கடந்த 15 வருட காலமாக ஏறத்தாழ எல்லா காங்கிரஸ் தலைவர்களுமே கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஜெய்பூரில் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து, கராச்சியில் தீர்மானம் போட்டது முதல் இம்மாதிரியான ஒரு சட்டம் வரப்போகிறது, வரப்போகிறது என்று எங்கும் எடுத்துப் பேசப்பட்டுவந்ததன் காரணமாக, இதிலிருந்து எவ்விதம் எல்லாம் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமோ அவ்விதமெல்லாம் வேண்டிய பாதுகாப்பையும், அதற்கான வழிகளையும் தேடிக்கொள்ளப்பட்டன. அதற்கான வாய்ப்புகள் முன்பே அளிக்கப்பட்டுவிட்டது. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இங்கு கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள். நாம் நிலங்களை பிரிக்க வேண்டும் என்றுதானே, சொல்லுகிறோம், நாட்டில் பல இடங்களில் பெரும் அளவில் நிலம் படைத்தவர்கள் அவர்களாகவே நிலத்தை பிரித்துக்கொண்டார்கள், இதுவே போதாதா என்று கேட்டார்கள். கட்டி தானாக போவதற்கும், அதை ஆப்ரேஷன் செய்து எடுப்பதற்கும் இருக்கின்ற வித்தியாசத்தை கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகின்றேன். இதன் மூலம் நாம் நாட்டில் நடைபெறுகின்ற அக்கிர

மங்களை நீக்கவேண்டும் என்று கருதியிருந்தால் இதை தக்க நேரத்தில், உரிய நேரத்தில், இந்தப் புரட்சிகரமான மாறுதலை கொண்டுவந்து இருப்பீர்களானால் இன்றைய தினம் இம்மாதிரிபட்ட ஒரு சட்டம் வரப்போகிறது என்று தெரிந்த நேரத்தில் லட்சக் கணக்கான பொது மக்கள் இந்த மன்றத்திற்கு வெளியே இருந்துகொண்டு உங்களை வாழ்த்தியிருப்பார்கள். அழுகும் பொருட்களுக்கு வரியை கொண்டுவந்தபோது மக்களிடம் இருந்த உணர்ச்சி கூட, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டும் இந்த மசோதா வருகின்ற நேரத்தில் இல்லை என்பதை வருத்தத்தோடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட புரட்சிக்கரமான மாறுதலுக்காக உடனடியாக ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் நாட்டு மக்கள் உள்ளத்தில் இது எந்த அளவுக்கு ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று நீங்கள் அருள்கூர்ந்து பார்க்க வேண்டும். இது புரட்சிக்கரமான திட்டமாக இருக்கக்கூடாது என்பதற்காகவே நீங்கள் இதைப்பற்றிப் பல ஆண்டு காலமாகப் பேசிப் பேசி வந்து, அவரவர்கள் தங்கள் தங்களுக்கும் பாதுகாப்புக்களைத் தேடிக்கொள்ளும்படி செய்திருக்கிறீர்கள். நேற்றைய தினம் நான் கனம் அமைச்சரிடம் தனிப்பட்ட முறையில், பேசிக்கொண்டிருந்த போது, இந்த மசோதா சட்டமானால் பிரித்துக்கொடுப்பதற்கு, எவ்வளவு நிலங்கள் கிடைக்கக்கூடும் என்று அவரிடம் கேட்டேன். அப்போது அவர், ஏறக்குறைய 5 லட்சம் ஏக்கர் கிடைத்தால் அதுவே அதிகம் என்று சொன்னார். எனவே, கொடி இல்லாமல், கொட்டு முழக்கம் இல்லாமல், சட்ட மன்றம் இல்லாமல் வினோபா பெற்ற நிலங்களைவிட அதிகமான நிலங்களை, நீங்கள் சட்டத்தின் மூலம் பெறக் கூடியவர்களாக இல்லை. அதிகமான நிலங்கள் இருந்தன. இருந்த நிலங்களுக்கு அவரவர்கள் பாதுகாப்புச் செய்துகொண்டு விட்டார்கள். அவர்கள் அவைகளுக்குப் பாதுகாப்புச் செய்துகொண்டிருந்தபோது நீங்கள் தூங்கிக்கொண்டிருந்தீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். அப்போது நீங்கள் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தீர்கள் என்று சொல்வேன். நீங்கள் எந்த வகையில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தீர்கள் என்றால், நிலங்கள் தானாகப் பிரிகின்றன என்ற நல்லெண்ணத்தில் சந்தோஷப்பட்டீர்கள். ஆனால் உங்கள் நல்லெண்ணத்தை, யார் யார் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு எப்படிப்பட்ட சூதான காரியங்களில் இறங்கியிருக்கிறார்கள் என்பதை, தஞ்சை மாவட்டத்திலிருந்து இந்த மன்றத்திற்கு வந்திருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மன்றத்தில் கண்ணீரும் கம்பலையுமாக நின்று எடுத்துப் பேசினர். நான் இதைச் சொல்லுகிறபோது "எங்கள் கட்சிக்குள் புகுந்து நீங்கள் ஒன்றும் விளையாடாதீர்கள்" என்று கேட்டுக் கொள்வது எனக்குத் தெரிகிறது. ஆனால், நான் உங்கள் கட்சிக்குள்ளே புகுந்து விளையாடவில்லை. உங்கள் கட்சிக்குள்ளேயே இந்தக் கருத்து இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கருத்துக்கேற்ற வகையில் பேசப்பட்டிருப்பதையெல்லாம் நான் கூர்ந்து பார்த்தேன். ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர், இந்த மசோதாவானது, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல இருக்கிறது என்று சொன்னார். அவ்வாறு சொல்வது ஒரு வகையில் சரி, இன்னொரு வகையில் தவறு என்று நான் கூறுவேன். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக வரவில்லை. பிள்ளையார் பிடிக்கும்படி வேறு யாரிடத்திலோ சொல்லிவிட்டதால் அது குரங்காக வந்துவிட்டது என்று நான் கருதுகிறேன். உங்களுக்கு உண்மையிலேயே உள்ளூர முற்போக்கு எண்ணம் இருந்திருக்குமானால், நீங்கள் மனதார முற்போக்கு எண்ணத்தில் திளைத்திருந்தால் இது பிள்ளையார் பிடிக்கக் குரங்காக மாறியிருக்காது. ஆனால் நீங்கள் எதையோ பிடித்துவைத்துவிட்டு "இது தான் பிள்ளையார்; இது ஒரு வகையான பிள்ளையார்; வேண்டுமானால், இதற்கு குரங்கு பிள்ளையார் என்று பெயர் வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்வதற்காகத்தான், நீங்கள் இத்தகைய மசோதாவைத் தயாரித்திருக்கிறீர்களே தவிர, இதில் முற்போக்குக் கருத்துக்கள் இல்லை என்பது குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

இந்த மசோதாவில் சில விதி விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கரை ஆலைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும், கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று



சொல்கிறீர்கள். "Caesar's wife should be above suspicion" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. கட்சி ஆட்சி நடக்கிறது, மக்கள் ஆட்சி நடக்கிறது என்று சொல்கிறவர்கள் தப்புத் தண்டாவில் ஈடுபடாதவர்களாக இருக்க வேண்டும். ஒருவிதமான சந்தேகத்தையும் ஏற்படுத்தாத வகையில் அவர்களுடைய போக்கும், பேச்சும், நடவடிக்கைகளும் இருக்க வேண்டும். இப்போது சர்க்கரை ஆலைகளுக்கு நிலங்கள் ஒதுக்கி வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ்காரர்களே, சர்க்கரை ஆலைகள் வைத்திருப்பவர்களும் காங்கிரஸ்காரர்கள்தான். காங்கிரஸில் இப்போது வந்து சேர்ந்திருப்பவர்களும் மிராசுதார்கள் என்பது ஊர் அறிந்த உண்மை. அப்படிப்பட்ட நிலையில் நீங்கள் 'சர்க்கரை ஆலைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கிறோம்' என்று சொன்னால் ஊரிலுள்ள பொதுமக்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்று நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். "இவர்களிடம் தஞ்சமடைந்து விட்டார்கள் மிராசுதார்கள், இவர்களிடம் அடைக்கலம் புகுந்து விட்டார்கள் மிட்டாதார்கள். ' நீங்கள் சர்க்கரை ஆலை ஏற்படுத்திவிட்டால், சர்க்கரை ஆலைகளுக்கு என்று நீங்கள் 200, 300 ஏக்கர் நிலங்களை ஒதுக்கிவிட்டால், நாங்கள் உங்களைத் தொடமாட்டோம். உங்கள் நிலங்களை சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கிவிட்டால் நீங்கள் இப்போது போல எப்போதும் மிராசுதார்களாகவே இருக்கலாம்' என்று இவர்கள் மிராசுதார்களுக்கும் மிட்டாதார்களுக்கும் கை காட்டியிருக்கிறார்கள்" என்று பொதுமக்கள் பேசிக் கொள்வார்கள். சர்க்கரை உற்பத்திக்காக எதற்காக கரும்பு சாகுபடி செய்யும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும்? கரும்பு '200 ஏக்கரில்தான் பயிராவேன்' என்கிறதா? கரும்பு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கரில் பயிராகாதா? பலர் 5, 10 ஏக்கரில் கரும்பு பயிரிட்டு சாகுபடி செய்து அதை எடுத்துக்கொண்டுபோய் புகலூர் ஆலையில் காத்துக்கொண்டிருக்கவில்லையா? வடபாதி மங்கலங்களும், தென்பாதி மங்கலங்களும் 1,000, 2,000 ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருப்பதால் கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் சொல்வாரானால், ஏழை மக்களைப் பொறுத்த வரையில் கனம் அமைச்சர் எவ்வாறு தம் மனதை இரும்பாக்கிக் கொண்டார் என்று கேட்க விரும்புகிறேன். கரும்பை ஒரு ஏக்கரிலும் பயிரிடலாம், இரண்டு ஏக்கரிலும் பயிரிடலாம். அதற்கு ஆயிரம் ஏக்கர்தான் வேண்டும் என்பதில்லை. அடுத்த தேர்தல் வரட்டும், இந்தத் தேர்தலுக்கு இப்படி இருக்கட்டும் என்ற எண்ணத்தில் இந்த கனம் அமைச்சர் இவ்வாறு நிர்ணயித்திருக்கிறாரோ என்னமோ தெரியவில்லை. இவருடைய கருத்துக்களெல்லாம் தேர்தலோடு ஒட்டியிருக்கின்றன. தேர்தலைப் புரிந்துகொண்டால்தான் இவரைப் புரிந்துகொள்ள முடியும். மற்ற அமைச்சர்கள் தத்துவத்தோடு இணைந்திருக்கிறார்கள். அவர்களைக் கேட்கிறேன்: எந்தக் காரணத்திற்காக கரும்பு பயிரிடப்படும் நிலங்களுக்கு விலக்கு அளித்திருக்கிறீர்கள்? நெல் சாகுபடி செய்வதில் கிடைக்கும் லாபத்தைவிட அதிகமான லாபம் கரும்பு சாகுபடி செய்வதில் கிடைக்கிறது என்பதை, கரும்பு உற்பத்தியாக, அதைப் பயிரிடுபவர்கள் தள, தளவென்று ஆவதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவில்லையா? கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு கொடுப்பவர்களுக்கு ஆலைக்காரர்கள் தங்கள் லாபத்தில் பங்கு தருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? லாபகரமான பொருளான கரும்புக்கு ஏன் நீங்கள் விதி விலக்கு அளிக்க வேண்டும்? நீங்கள் இப்படிப்பட்ட விதி விலக்குகளை அளிப்பதால் மசோதாவிலுள்ள முற்போக்கு அம்சங்களை பாழ்படுத்தியிருக்கிறீர்கள். சர்க்கரை ஆலைகள் வளர வேண்டும், சர்க்கரை உற்பத்தி திருப்திகரமான நிலையில் இருக்க வேண்டும் என்றால், உங்களுக்கு உபரியாகக் கிடைக்கும் நிலங்களில் கரும்புப் பண்ணைகள் வைத்து கரும்பு சாகுபடி செய்து அதை ஆலைகளுக்கு அனுப்பினால் உங்களை யார் தடுக்க முடியும்? எனவே, இந்த மசோதா பணக்காரர்களுக்குச் சலுகை காட்டுகிறது என்று நான் வருத்தத்தோடு கூறுவேன். அதனால்தான், உங்கள் கட்சி உறுப்பினர்களே, "பிள்ளையாரை அல்லவா நான் கேட்டேன்? குரங்கை அல்லவா நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்?" என்று மிக்க மனம் நொந்து இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த மசோதாவை

அனுதாபத்தோடு கவனித்த மற்றொரு அங்கத்தினர்கூட இருக்கும் நிலங்களைப் பங்கு போடுவதற்கு பதிலாக புதிதாக நிலங்களைச் சேர்ப்பதற்கும் இந்த மசோதா வழி செய்கிறது என்று கூறிவிட்டார். மேய்ச்சல் காடுகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஊரறிந்த ஒரு உண்மையைச் சொல்கிறேன். மேய்ச்சல் காடுகளை கண்ணுக்கெட்டிய தூரம் வரை வைத்துக்கொண்டு அவைகளில் காளைகளை வளர்த்து, கவர்னரிடம் கைகுலுக்குகிறவர்களும், அந்தக் காடுகளை வளர்ப்பதன் மூலம் லட்சக் கணக்கான ரூபாய் லாபம் சம்பாதிப்பவர்களும் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பது ஊர் அறிந்த உண்மை. இந்த நிலங்களுக்கு ஏன் விலக்கு அளிக்கிறீர்கள் என்று நாங்கள் கேட்கும்போது 'நாங்கள் அப்படித்தான் செய்வோம். நீங்கள் யார் அதைக் கேட்க' என்று இவர்கள் சொல்வார்களானால், ஜனநாயகத்தில் இவர்களுக்கு இருக்கும் கட்சி வலுவை வைத்துக்கொண்டு எங்களை மிரட்டுகிறார்கள் என்று அதற்குப் பொருளே தவிர, இவர்கள் செய்யும் சூது, சூழ்ச்சிகளை உலகம் கண்டுபிடிக்க முடியாது என்று பொருள் அல்ல. மேய்ச்சல் காடுகளில் எப்படி உங்களுக்கு 1960-ம் ஆண்டில் திடீரென்று அக்கரை வந்துவிட்டது? பத்து, 50 ஏக்கரில் மேய்ச்சல் காடுகள் வைத்தால் போதாதா? "சர்க்கார் இறைச்சித் தொழில் நடத்த வேண்டும்" என்று இந்த மன்றத்தில் நான் சொன்னால், "இங்கே மேய்ச்சல் காடுகள் இல்லையே. மாடுகள் மேய வேண்டுமானால், அவை அண்ணாதுரை வீட்டுத் தோட்டத்தில் மேயுமா" என்று ஒரு கனம் அமைச்சர் கேட்டார். இப்போது மிராசுதார்கள் மேய்ச்சல் காடுகள் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்று இவர்கள் அவர்களுக்கு சலுகை காட்டுகிறார்கள். இம்மாதிரி மசோதாவில் ஓட்டை வைத்து மிராசுதார்களுக்கு கதவைத் திறந்துவைக்கிறார்கள். இவ்வாறு செய்வதற்கு, இவர்கள் மிராசுதார்களிடம் "இங்கே உங்களுக்குக் கதவு திறந்து இருக்கிறது. 1962-ல் எங்களை கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று பொருளே தவிர, இந்த விதி விலக்குக்கு வேறு காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை. இது தவிர, தோட்டங்களுக்கு ஏன் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. கமுகும், வேறு நல்ல பலன் தரக்கூடிய பொருள்கள் பயிரிடப்படும் நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நல்ல பலன்தரக்கூடிய இந்தப் பொருள்களுக்கு ஏன் விதிவிலக்கு என்றால், 'அதெல்லாம் வேறு' என்று இவர்கள் ஒரே வரியில் பதில் சொல்லிவிடுகிறார்கள். இதனால்தான் நான் அப்போதே துவக்கத்திலேயே சொன்னேன்: நீங்கள் ஒவ்வொன்றுக்கும் தரும் வியாக்கியானத்தைப் பொறுத்துத்தான் சட்டத்தில் முற்போக்குத் தன்மையோ பிற்போக்குத் தன்மையோ அமைய வேண்டும். எனவே, 'நிலம்' என்பதற்கு, பயன்தரக்கூடிய எதுவும் நிலம் என்று வியாக்கியானம் தந்திருந்தால் இத்தனை விதி விலக்குகள் தந்திருக்க வேண்டி யிருந்திருக்காது. இந்த மசோதாவை ஆராய்வதற்கு அமைக்கப்படும் கமிட்டியினர் இப்படிப்பட்ட விதிவிலக்குகளை கூடியவரை நீக்க வேண்டும் என்று அக்கமிட்டியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கொறடா "ஒரு தனிப்பட்ட ஆள், எவ்வளவு முயற்சித்தாலும் 30 ஏக்கருக்கு மேல் நிர்வகிக்க முடியாது" என்று சொன்னார். உண்மையிலேயே அவர் சட்ட சபையில் மட்டும் உட்கார்ந்து கொண்டிருப்பவர் அல்லர். அவர் வயலோரத்தில் சுற்றிப் பார்க்கிறவர். அவர் அவசரப்பட்டு அவ்வாறு சொல்லிவிட்டாரோ என்னமோ, நான் கூடக் குறித்துக்கொண்டேன். முப்பது ஏக்கருக்கு மேல் இருந்தால் ஒரு தனிப்பட்டவர் பார்க்க முடியாது என்று அவர்கள் கருதுவதால்தான் எங்கள் பக்கத்திலிருந்து, "நீங்கள் உச்ச வரம்பு கட்டும்போது 15 ஏக்கர் என்று வைத்தால் போதும் 30 ஏக்கர் வேண்டாம்" என்று சொல்கிறோம். உழவுத் தொழிலில் அதிக அக்கறை காட்டி, அதற்குக் கம்ப நாட்டாழ்வாரைச் சுட்டிக் காட்டிய நமது கருத்திருமன் அவர்கள் "30 ஏக்கருக்கு மேல் ஒரு தனிப்பட்ட ஆள் உழவுத் தொழிலைக் கவனிக்க முடியாது" என்று சொன்னால் உச்ச வரம்பு கட்டும் நேரத்தில் அதை 15 ஏக்கர் என்று ஏன் வைக்கக் கூடாது? அவ்வாறு 15 ஏக்கர்



என்ற முறையிலே வைத்துக்கொண்டிருந்தால் அந்த நிலத்தில் முற்போக்குத் தன்மையிலே விவசாயம் செய்து அதில் மற்றக் குடிசைத் தொழில்களில் கிடைக்கக்கூடிய பலன் இந்த உழவிலே கிடைக்குமானால் அந்த 15 ஏக்கரை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் மிக நிம்மதியாக வாழ வழி வகைகள் கிடைக்கும். ஆகவே, 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 15 ஏக்கர் என்று குறைப்பது ஓரளவு நாம் முற்போக்குப் பாதையை நோக்கி அழைத்துச் செல்லப்படுகிறோம் என்ற உத்தரவாதத்தை மக்கள் மனதிலே ஏற்படுத்த முடியும். ஆகவே, இந்த மசோதாவில் 30 ஏக்கர் என்று இருப்பதை 15 ஏக்கர் என்று குறைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, மடாலயங்களுக்கும், கோயில் நிலங்களுக்கும் அடியோடு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று முன்னர் பலர் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்போது அந்த நிலங்களுக்கு அடியோடு விதி விலக்கு அளிப்பதற்குப் பதிலாக 200 ஏக்கர் வரை இருக்கலாமென்றும் அதற்கு மேற்பட்டவை இந்த மசோதாவினால் பாதிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி இந்த மன்றத்திலே, மடாலயங்கள், அற நிலையங்களுக்கெல்லாம் நிலம் தேவையா, அதனால் அறம் வளர்கிறதா என்ற புதுப் பிரச்னைகள் எல்லாம் எடுத்து விளக்கப்பட்டன. நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது மிக நல்ல கருத்து ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். "இந்தச் சொத்தெல்லாம் உண்மையிலேயே சாமிக்குத் தேவையில்லை; அங்கே இருக்கும் சில காரியங்களுக்குத் தேவை" என்று சொன்னார்கள். உண்மையிலேயே சாமிக்குத் தேவை யென்றால் யாரும் உச்ச வரம்பு கட்ட மாட்டார்கள். ஆனால் அந்த நிலங்கள் சில ஆசாமிகளுக்குப் பயன்படுவதால் உச்ச வரம்பு கட்டுவதோடு மட்டுமல்ல; அந்த நிலங்களை ஒரேயடியாக சர்க்காரே எடுத்துக்கொண்டு "லாண்ட் கமிஷன்" வைத்து அந்த நிலங்களை ஒப்படைத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்துக்கொண்டு அவர்கள் என்னென்ன தர்மங்களைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களோ அந்தத் தர்மங்களுக்குப் பணத்தைக் கொடுக்க யாரும் குறுக்கிட மாட்டார்கள். இப்போது தர்மத்தை எவ்வாறு செய்கிறார்கள். அந்தத் தர்மம் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதைப்பற்றிக்கூட உள்துறை அமைச்சர் அவர்கள் உள்ளாக உணர்ந்திருக்கிறார்கள். நேற்றைய தினம் பேசும்போது "சில தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன" என்று கூறினார். அவ்வளவு அனுபவம் வாய்ந்தவர் அந்த அளவுக்குத்தான் சொல்வார். என்னென்ன தவறுகள் என்று கேட்டால் கூடச் சொல்ல மாட்டார்கள். யார் தவறு செய்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் அவர்களுடன் போய்ப் பழக வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள், இன்னார் இன்னார் தவறு செய்கிறார்கள் என்று என்னைப் போல் எடுத்துச் சொல்ல முடியாது.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** நான் பல கூட்டங்களில் பகிரங்கமாக, இன்னின்னார் இன்னின்ன ஸ்தாபனங்களில் உள்ளவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லி வந்திருக்கிறேன்.

**SRI C. N. ANNADURAI :** அமைச்சர் அவர்களுடைய அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டுகிறேன். ஒருசமயம் விளைவை அறியாமல் பேசிவிட்டாரோ என்று பரிதாபப்படுகிறேன். பதவியில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் பொதுவாகத்தான் சொல்ல முடியுமே தவிர, எங்களைப் போல் எடுத்துச் சொல்ல முடியாது. நாங்கள் அவற்றை எடுத்துச் சொல்கிற நேரத்தில், எங்களுக்குப் பதில் சொல்லக்கூடிய வக்கீல்கள் என்று உங்களைப் பற்றி நீங்கள் கருதிக்கொள்ளாமல், நீங்கள் சொல்ல முடியாமல் தவிப்பதை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம் என்ற முறையில் நீங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல அரசியல் நிலைமைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படி யிருக்கும்போது இதை ஏன் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டும்? ஆலயங்களுக்குச் சொத்துகள் தேவைதானா என்று பேசுகிற பலர் அந்த

அற நிலையங்களுக்குச் சொத்துகள் எந்தக் காலத்தில் ஏற்பட்டன என்
பதைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். உள்துறை அமைச்சர்
அவர்கள் சொன்ன தர்மத்தைச் செய்வதற்கு நிலம் இருந்தால்தான்
முடியும் என்று பழம் தமிழர்கள் எண்ணவில்லை. இந்த
லோகத்தில் செய்துவிட்டதின் பலனை வேறு லோகத்தில் அனுபவிக்கலாம்
என்பது வியாபாரம் அல்ல, தமிழ் மரபு. இடைக்காலத்திலே புகுத்தப்
பட்ட தர்மம் என்பதற்கும் அறம் என்பதற்கும் அடிப்படையிலேயே பெரிய
வித்தியாசம் இருக்கிறது. இப்போதிருக்கும் தர்மஸ்தாபனங்கள், இங்கே சில
நன்மைகளைச் செய்தால் அங்கே பலன் கிடைக்கும் என்பதற்காக ஏற்படுத்தப்
பட்டது. ஆனால் தமிழ் மரபு கூறும் அறம் அம்மாதிரியல்ல என்பதைச்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட அறச்சாலைகளல்ல—இப்போது
அமைச்சர் அவர்களுடைய மேற்பார்வையில் இருப்பவை. மடாதிபதிகளுடைய
துறவு பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் இலக்கணங்களை அமைச்சர் அவர்கள்
படிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பசித்தால் புசித்து, வியர்த்தால்
குளித்து, நிழல் கண்ட இடத்தில் படுத்து சைவத் தொண்டு செய்ய வேண்டு
மென்று மடாதிபதிகளுக்கு விதி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது
அவர்கள் பசித்தால் புசிக்க வேண்டுமென்று சொல்கிறார்களா என்றால், பல
மடாலயங்களில் இருப்பவர்களுக்குப் பசியே எடுப்பதில்லை. அமைச்சர் செய்து
வருகின்ற பாவ காரியங்களினால், சாதாரண மக்களுக்கு எடுக்கக்கூடிய
பசி கூடத் தெரியாமல் அவர்களுடைய உடல் தழைத்திருக்கிறது. மடா
லயங்களுக்கும், அற நிலையங்களுக்கும் பெரியவர்கள் எந்தக் காரணத்தைக்
கொண்டு சொத்தை எழுதி வைத்தார்களோ அது இன்றைய தினம்
தவறான காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்போது உழவர் பெருங்
குடி மக்களைக் கசக்கிப் பிழிய பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தங்கள்
வீட்டில் அழகான ஒரு காளை வளர்த்தாலும் அவர்கள் அடி வயிற்றில்
நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எந்த நேரத்தில்
எந்தக் காளை மடாதிபதியின் கண்ணில்படுகிறதோ என்று அஞ்சிக்கொண்
டிருக்க வேண்டி யிருக்கிறது. காளை பற்றி மட்டுமல்ல ; அழகான கன்னி
யாக இருந்தாலும் எந்த நேரத்தில் அவளுடைய கற்பு சூறையாடப்படும்
என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி நிலையில் இருப்பவர்கள் உள்ள
அற நிலையங்களுக்கு ஏன் 200 ஏக்கர் தருகிறீர்கள் ? அது இல்லா
விட்டால் விபூதி மாடத்தில் விபூதி இருக்காதா ; அது இல்லாவிட்டால்
வில்வ மரம் வளராதா ; அது இல்லாவிட்டால் சைவ நெறி தழைக்காதா ?
எதற்காக, கோயில்களுக்கும், மடாலயங்களுக்கும் சொத்து இருக்க வேண்
டும் ? அவர்கள் வணங்குகின்ற சிவனே காவி கட்டிக்கொண்டு, புலித்
தோல் போர்த்து இருக்கிறார் என்று பாடுகிறார்கள். இரும்பு பெட்டியில்
8 லட்சம், கரும்புத் தோட்டத்தில் 10 லட்சம் என்று மனம் இல்லாமல்
வைத்துக் கொண்டிருக்கும்போது எதற்காக 200 ஏக்கர் ஒதுக்க வேண்டும் ?
நீங்கள் மதத்தை வெறுக்கக் கூடிய சர்க்கார் அல்ல, மத ஸ்தாபனங்கள்
வைத்திருக்கும் நிலங்கள் விஷயத்தில் அரசாங்கமே நேரடி மேற்பார்வை
பார்த்து கிடைக்கக்கூடிய வருவாயிலிருந்து தர்மம் என்பதற்காக ஒதுக்க
லாமே தவிர மறுபடியும் மடாதிபதிகள், குத்தகைதாரர்கள் கையில் இந்த
நிலங்களை விட்டுவிடும் வாய்ப்பு இந்த முற்போக்கான சட்டத்தில் இடம்
பெறக் கூடாது. ஆகையால் மடாலயங்கள், அற நிலையங்கள் ஆகியவை
களுக்கு ஒரு துளியும் நிலம் இருத்தல் ஆகாது என்பதை வலியுறுத்திச்
சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதா பேசப்படுகிற காலத்தில் மற்றொரு பொதுவான தத்து
வத்தையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.
பெரிய அளவில் நிலங்கள் இருக்க வேண்டுமா அல்லது சிறு அளவில்
நிலங்கள் இருக்க வேண்டுமா ? பெரிய பண்ணைகளாக வைத்துப் பயிரிட
லாமா அல்லது சிறு சிறு பண்ணைகளாக வைத்துப் பயிரிடலாமா இந்த
விஷயம் பற்றித் திட்டவட்டமான முடிவுக்கு ஆளும் கட்சியினர் வர
வேண்டும். ஒரு பக்கத்தில், நிலங்கள் துண்டு துண்டாகப் போய்விட்டால்
நல்ல முறையில் விவசாயம் செழித்து வளர முடியாது என்று பேசப்
படுகிறது. இன்னொரு பக்கத்தில், பெரிய நிலப் பரப்பாக இருந்தால்
அது நிலத்திலே முதலாளித்துவத்தை உண்டாக்கிவிடும் என்றும் அதன்





காரணமாக சிறு நிலச்சுவான்தார்கள் இருக்க வேண்டுமென்று சொல்லப்
படுகிறது. இந்த இரண்டில் எந்த வழியில் நிற்க விரும்புகிறார்கள் என்பது
திட்டவட்டமாக நாட்டுக்கு அறிவிக்கப்பட வேண்டும். இப்போது மிச்சம்
மீதியாகும் 2 லட்சம் ஏக்கர் நிலத்தில் 1 லட்சம், ஒன்றரை லட்சம்
வரை ஏற்கனவே குத்தகைதாரர்களுக்குப் போய்விட்டால் மிச்சம் எவ்வளவு
நிலம் இருக்கும் ? தென்னை மரத்திலே ஏறி தேங்காய் பறித்துக் கொண்டு
வந்து, மேலே இருக்கும் தோலை உறித்துவிட்டு, தேங்காயை உடைத்து
உள்ளே இருக்கும் தண்ணீருக்காகச் சிறுவர்கள் பாத்திரத்தை எடுத்தால்
அதிலே தேரை முகர்ந்திருந்தால் தண்ணீர் வராது, உள்ளேயும் ஒன்றும்
இருக்காது. நீங்கள் கொண்டு வந்திருக்கும் சட்டமும், தென்னை மரத்தி
லிருந்து தேங்காய் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஆசை காட்டப்
பட்டிருக்கிறதே தவிர, அந்தச் சட்டத்தின் உள்ளே பார்த்தால், தேரை 10.30
முகர்ந்த தேங்காயின் உள்ளே ஒன்றும் இல்லாதது போல்தான் இருக் a.m.
கிறது. நீங்கள் திட்டவட்டமாக இந்தச் சட்டத்தை அமல்படுத்தினால்,
இத்தனை ஏக்கர் நிலம் காத்தானுக்கு, இத்தனை ஏக்கர் நிலம் கருப்பனுக்கு,
இத்தனை ஏக்கர் நிலம் முருகனுக்கு என்று சொல்லியிருந்தால் நாங்கள்
அரசியல் கட்சி வேறுபாட்டையும் மறந்து முன்வந்து வாழ்த்தியிருப்பேன்.
ஆனால், உன்னுடைய வாழ்த்து எங்களுக்குத் தேவையில்லை என்று
ஆளும் கட்சியில் இருக்கும் அமைச்சர் அவர்கள் கருதலாம். ஆனால்,
என்னுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு நான் வாழ்த்தியிருப்பேன்.
ஆனால், கொண்டுவருகிற சட்டத்தின் மூலம் என்ன கிடைக்கும் என்று
சொல்வதற்கு உங்களுக்குத் தைரியம் இல்லை. கணக்கும் இல்லை. ஒரு
சமயம், கொடுக்கின்ற கணக்கு இங்கு பேசி முடிவதற்குள்ளேயே எங்கே
குறைந்துவிடுமோ என்ற நிலைமை இருக்கிறது. ஆகையால் தான், ஒரு
நல்ல புரட்சிகரமான திட்டம் என்று வெளியிலே எண்ணிக்கொண்டிருக்
கிறார்கள், தெம்ஸ் நதிக் கரையோரத்திலும், நைல் நதிக் கரையோரத்
திலும் பத்திரிகையைப் பார்த்தால், ' நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டு
கிறார்கள் சென்னை ராஜ்யத்தில் ; அப்பா ! என்ன முற்போக்கான சர்க்
கார் ! ' என்று பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உச்ச வரம்பு
கட்டப்போவது ஒரு அறுநூறு சொச்சம் மிராசுதார்களுக்கு. அதுவும்
' வரும், வரும் ' என்று சொல்லிவிட்டு—அதற்காகவே அமைச்சர்கள்
சுற்றுப் பிரயாணம் செய்கிறார்களோ என்னவோ, என்னால் தெரிந்து
கொள்ள முடியவில்லை—அதற்குப் பிறகு கொண்டுவருகிற சட்டத்தின்
மூலமாக, கிடைக்கும் நிலம், குத்தகைதாரர்களுக்குப் போக மிச்சம்,
நிலமில்லாதவர்களுக்கு, உழுகின்றவர்களுக்கு எவ்வளவு வரும் என்று
கணக்குக் காட்ட முடியவில்லை. ஒரு லட்சம் ஏக்கர் நிலமாகிலும் இதன்
மூலமாகப் பிரித்துக் கொடுக்க முடியாது என்றால், இந்தச் சட்டத்தைக்
கொண்டுவருவதால் என்ன பெருமை அடையப்போகிறார்கள் இந்தச் சர்க்
கார் என்று நான் கேட்கிறேன். இந்தச் சட்டம் வருவதால் நாட்டு மக்க
ளுக்குத்தான் என்ன மகிழ்ச்சி ஏற்பட முடியும் ?

கடையிலே, " அஸ்கா சர்க்கரை விலை 12 அணா " என்று பெரிய
எழுத்தில் எழுதிவிட்டு, அதன்கீழ் சின்ன எழுத்தில் " சர்க்கரை இல்லை "
என்று அட்டையில் எழுதுவார்கள். அதுபோல, " நிலத்திற்கு உச்ச
வரம்பு கட்டிவிட்டோம் " என்று கொட்டை எழுத்திலே எழுதிவிட்டு,
" உச்ச வரம்புக்கு நிலம் இல்லை, ஏனென்றால், அத்தனையும் பிரிந்து
விட்டது " என்று சின்ன எழுத்தில் எழுதி, அதற்கும் கீழே, " இருக்கும்
நிலமும் குத்தகைக்காரர்களுக்குப் போகும் " என்று எழுதி, " இந்த
மிச்சம் இருக்கும் நிலத்தைப்பற்றி ரெவினியூ அமைச்சரைக் கேட்டுத்
தெரிந்துகொள்க " என்று சொல்வார்களானால், இதற்குப் பெயர் முற்
போக்குச் சட்டமா ? இதற்காகத்தான் உங்களை வாழ்த்தி, வணங்கி, வழி
பட்டு, நீங்கள்தான் பொதுவுடைமையைத் தடுத்து, சம தருமத்தைக்
கொண்டுவருவீர்கள் என்று மக்கள் வரவேற்றார்களா ? நீங்கள் இப்படிப்
பட்ட முறையிலே, சாதாரணமாக அவர்கள் எண்ணிப் பார்ப்பதற்குக்கூட
முடியாத அளவுக்கு, ஆங்கிலத்தில் **"Caricature"** என்று சொல்வார்களே,
அதுபோல, இருக்கிற உருவத்தைத் தேய வைத்து, இதுதான் சட்டம்
என்று கொண்டுவருவார்களானால், இந்த அளவுக்குத் தேய வைத்த

உங்கள் சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன். காக்க வைத்து, காக்க வைத்து இதுதானா ஏற்பட வேண்டும்? சில விருந்தாளிகள் வீட்டுக்கு வந்துவிட்டால், தெருத் திண்ணையிலே உட்கார வைத்து, இரண்டு மணிக்குச் சாப்பாடு என்றால், 'ஆகிறது, ஆகிறது' என்று சொல்லி, அவனுக்குக் கடைசியில் பசி அடங்கிவிட்ட பிறகு, மூன்று மணிக்குக் கூப்பிட்டு, கொஞ்சம் சாதம் போட்டால், மூன்று மணிக்கு, பசி எடுக்க வேண்டிய நேரத்தில் எடுத்து தானாக அடங்கிவிட்ட நேரத்தில், போட்டாலும் சாப்பிட முடியாமல் வெளியே போகும் நிலைமையிலே, நீங்கள் பதினைந்து ஆண்டுகளாக மக்களைப் பட்டினி போட்டுப் போட்டு, 'உள்ளே வேகிறது, அரைக்கிறோம், தாளிக்கிறோம்' என்று சொல்லி, வெளியிலே உட்கார வைத்து, 'வாசனையெல்லாம் பாருங்கள்' என்று சொல்லி, கடைசியில் உள்ளே வரும்போது, 'தாளித்தது பக்கத்து வீட்டில், அரைத்தது அண்டை வீட்டில், மிச்சம் இருப்பது பழைய சோறு, சாப்பிடு' என்று சொல்கிறீர்கள். உடையான் சடையப்பன் என்ற வேளாண் பெருங்குடி மக்கள் குலத்தில் பிறந்திருக்கும் அமைச்சரும், படைகளை நடத்திச் செல்வதற்கு படையாட்சிகள் என்று சொல்லப்படுகிற குலத்தில் வந்த மற்றொரு அமைச்சரும் இருக்கும் நேரத்தில், சோறு போடுவதற்குக்கூட வக்கு இல்லாமல் நீங்கள் தமிழ் மரபையே ஏன் கெடுக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். இதைவிட நீங்கள் ஆறு திங்கள் சும்மா இருந்தால், இந்த அளவுக்குக் கூட தேவை இல்லாமல் நிலங்கள் பிரிந்து போயிருக்குமே.

கனம் உறுப்பினர் கருத்திருமன் அவர்கள் சொல்கிறார்கள். 'தைரியமாக யார் வேண்டுமானாலும் வாருங்கள், வந்து பாருங்கள்' என்று. அவர்கள் மட்டுமல்ல; நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களிடத்தில், 'நீங்கள் நிலத்தைப் பிரிக்கப் போகிறார்களா?' என்று கேட்டுப் பாருங்கள். ஒன்றும் இல்லை என்று சொல்வார். ஒன்றுமில்லை என்பது மட்டுமல்ல; ஐந்து ஏக்கர் கொடுத்தால் வாங்கிக்கொள்வார். அந்த அளவுக்குத்தான் வைத்துகொண்டிருக்கிறார். ஆகையால், நீங்கள் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டம் உண்மையிலேயே நீங்கள் எந்த நோக்கத்திற்காக ஆரம்பித்தீர்களோ அது பாழ்பட்டுப் போய், இன்றைய தினம் மக்களுக்கு அது பெரிய ஏமாற்றத்தைத் தருகிறது. அந்த ஏமாற்றத்திலிருந்து அவர்களுக்கு ஒரு துளியாகிலும் விலக்கு அளிக்க வேண்டுமென்று கருதினால், நீங்கள் உச்ச வரம்பு கட்டியான பிறகு கிடைக்கும் இரண்டு லட்சம் ஏக்கரையாகிலும், இப்பொழுது இருக்கும் குத்தகைக்காரர்களுக்குக் கொடுத்து புதிய முதலாளிகளை உண்டாக்காமல், உழைக்கின்றவர்களுக்கு அந்த நிலத்தை கொடுங்கள். உழைக்கின்றவர்களுக்குக் கொடுத்தால், உழுவதற்கு அவர்களிடம் உழவு மாடுகள் இருக்கின்றனவா, ஏர், கலப்பை இருக்கிறதா என்று கேட்பீர்களானால், எட்டு மந்திரிகள் எதற்காக இருக்கிறீர்கள்? அவர்களுக்கு ஏர், கலப்பை கொடுப்பதற்காகத்தான், அவர்களுக்கு உழவு மாடு கொடுப்பதற்காகத்தான், அவர்களுக்கு விதைப் பண்ணை கொடுப்பதற்காகத்தான், இத்தனை அமைச்சர்கள் இருக்கிறீர்களே தவிர, அவர்களிடத்தில் நிலத்தைக் கொடுத்துவிட்டு, ஏர், கலப்பை இருக்கிறதா என்று கேட்பதற்காக அல்ல. நான் வருகிறபோது, அமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். 'சிவகணங்கள் பயிரிட்டு விடுமா?' என்று. ஒரே ஒரு நந்தனார்தான் பிறந்தார், அவரையும் ஜோதியில் கலக்க வைத்து, கேட்காதே என்று சொல்லிவிட்டார்கள். சிவ கணங்கள் வந்து செய்ய வேண்டுமென்று நான் கருதவில்லை. மனித கணங்கள்—வோட்டுப் பிச்சை கேட்டிருக்கும் மனித கணங்கள்—தான் அதைச் செய்ய வேண்டும். அதற்கு யாரோ அமெரிக்க நாட்டிலிருந்தோ, ஆப்பிரிக்க நாட்டிலிருந்தோ ஆட்கள் வர முடியாது. ஏழை மக்களுக்கு நிலத்தைக் கொடுத்து, அதைப் பயிரிடுவதற்குக் கருவிகளையும்கூட நம்முடைய துரைத்தனத்தார்தான் தரவேண்டும். அப்படிச் செய்தால், இந்தச் சட்டத்தின் மூலம் இரண்டு லட்சம் ஏக்கர் இதுவரையிலும் நிலமில்லாத உழவர்களுக்குக் கிடைத்தது என்ற பெருமையாவது இருக்கும். இதிலே கலந்துகொண்ட நாமெல்லாம் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள், 'நாங்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்த நேரத்தில் நல்ல சட்டத்தைக் கொண்டுவந்தோம், நில



மில்லா ஏழைகளுக்கு நிலத்தைக் கொடுத்தோம், இரண்டு லட்சம் ஏக்கர் கொடுத்தோம்' என்று பெருமையாகப் பேசிக்கொள்ளலாம். இப்பொழுது யார் யாருக்கு நிலத்தைக் கொடுக்கப் போகிறார்கள்? அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், இப்படி அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கு ஒவ்வொரு நாயன்மாருக்கும் தனித்தனி பாகப் பிரிவினையைப்போல் கோயிலிலே பிரித்து எழுதிவிடுவார்களோ, அதுகூட எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்குத் தருவதற்குத்தான் சட்டம் என்றால், இதற்கு நீங்கள் 'உச்ச வரம்பு' என்று பெயர் வைப்பதற்குப் பதிலாக வேறு ஏதாகிலும் பெயர் வைத்து, 'மிச்ச வரம்பு' என்று சொல்லிக்கொள்ளுங்கள். 'பிரித்துக் கொண்டது போக மிச்சம் இருக்கும் நிலத்தை உழுதுகொண்டிருக்கிறார்களே அவர்களுக்கே கொடு, பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கே கொடு' என்று நீங்கள் ஏற்படுத்துவதை மிச்ச வரம்புச் சட்டம் என்று சொல்லலாமே தவிர, அது உச்ச வரம்புச் சட்டம் ஆகாது. ஆகையால், ஏழை மக்களுக்கு நல்ல, புது வாழ்வு தரக்கூடிய நிலைமை இந்த மசோதாவில் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு, இந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்காக நீங்கள் சில புதிய அமைப்புக்களை ஏற்படுத்துகிறீர்கள். லாண்டு கமிஷன் என்றும், லாண்டு ட்ரிப்யூனல்கள் என்றும் நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள். அதைப் பற்றிக்கூட இந்த மன்றத்தில் பேசியிருக்கும் காங்கிரஸ் உறுப்பினர், 'இது வக்கீல்களுக்கு வேட்டையே தவிர, விவசாயிக்கு விருந்து அல்ல' என்று பேசியிருக்கிறார். அந்த வகையிலே அதை ஆக்காமல், போடப்படும் விளக்கங்கள் பாமர மக்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய விளக்கங்களாக, வக்கீல்களுக்கு மட்டும் விருந்தாக இருக்கும் விளக்கங்களாக இல்லாமல், அதை எளிதாக்கவேண்டும். அதற்கு ஏழு, எட்டு விளக்கங்கள் இல்லாதபடி, 'ப்ளெய்ன்'-ஆக, நேரடியாகப் புரிந்துகொள்ளக் கூடிய அப்படிப்பட்ட விளக்கங்களைக் கொடுக்க வேண்டும், ஏழை மக்களை மறுபடியும் வழக்கு மன்றங்களின் படிக்கட்டுகள் ஏறி ஏறி இறங்கும் படியாக நீங்கள் வைத்துவிட்டாலுங்கூட, ஏழை எந்த எந்த படிக்கட்டுகள்தான் ஏறுவான்? மற்றொரு கனம் அங்கத்தினர் நேற்று சொன்னார்கள், படிப் படியாகத்தான் போக வேண்டுமென்று. அதற்காக ஒவ்வொரு தடவையும் படிக்கட்டு படிக்கட்டாக கோர்ட்டில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தால், அவன் எப்பொழுது நடப்பான்? 'சாண் ஏறி முழம் சறுக்கியது' என்ற பழமொழி உண்டு. சாண் ஏறும்போது, காங்கிரஸ் அங்கத்தினர் சொல்கிறார்கள், 'பார், பார், ஏறிவிட்டான்' என்று. பரவாயில்லை, ஏறியிருக்கிறான் போல் இருக்கிறதே என்று பார்த்துக்கொண்டிருக்கும்போது, கீழே இறங்குகிறான். இறங்கும்போது அவனுடைய தலை குனிந்தும், ஏறும்போது தலை நிமிர்ந்தும் இருக்கிறது. அது அரசியல் கட்சிக்கு இருக்கவேண்டிய இயல்பு; சுபாவம். குறை சொல்லவில்லை. அப்படிப்பட்ட வகையிலே இல்லாமல், அவர்கள் வழக்கு மன்றங்களில் சிக்காத தன்மையில், இந்த மசோதா எளிதாக்கப்பட வேண்டும். திட்டவட்டமாக விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும். ஒரு அங்கத்தினர் பேசியதை நான் படித்து கொஞ்சம் வருத்தம் கூட பட்டேன். 'நூறு க்ளாஸ்களுக்குமேல் போட்டு சட்டத்தைக் குழப்பிவிட்டிருக்கிறார்கள், இருபது, முப்பது க்ளாஸ்கள் போட்டு நல்லதாக்கியிருக்கலாம்' என்று ஒரு அங்கத்தினர் பேசியதாக நான் பார்த்தேன். நான் இரண்டு மூன்று நாட்களாக மன்றத்திற்கு வரவில்லை. திரும்பி வந்த பிறகு, அனைவர் பேசியதையும் அக்கறையோடு வாங்கிப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்ததிலே, அப்படி ஒரு அங்கத்தினர் பேசியதாக குறிப்பு இருந்ததைப் பார்த்தேன். அப்படிப்பட்ட வகையிலே இல்லாமல், திட்டவட்டமாக விளக்கங்கள் கொடுத்து இந்த மசோதா இருக்க வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

இந்த விதி விலக்கு அளிப்பதிலே, கரும்பு ஆலைகளுக்கும் மற்றவைகளுக்கும் விதிவிலக்கு அளித்து நிறுத்திவிடுவதைப்போல, இனி வாங்கக் கூடிய நிலங்களை உச்ச வரம்புக்கு மேல் வாங்க வேண்டாம் என்று தடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அந்த வழிவகையிலே, மேய்ச்சல்

நிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கிறீர்கள். ' என்னிடத்தில் இருக்கும் நிலம்
மேய்ச்சல் நிலமே தவிர, விளைச்சல் நிலம் அல்ல' என்று மிராசுதார்
சொன்னால், அது மேய்ச்சல் நிலமா, விளைச்சல் நிலமா என்று கண்டு
பிடித்து, லாண்டு ட்ரிப்யூனலுக்கோ லாண்டு கமிஷனுக்கோ போக யார்
முன்வருவார்கள் ? (கனம் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு : தீர்வையிலே
தெரிந்து கொள்ளலாம்.) தீர்வையிலேயிருந்து தெரிந்து கொள்ளலாம்
என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்
கிறேன். சவுக்குப் பயிரிடுவதும், முள் செடி பயிரிடுவதும், காட்டுச் செடி
பயிரிடுவதும் மேய்ச்சலுக்குப் பாதுகாப்பாகத்தான் என்று சொல்லக்கூடும்.
கோவை மாவட்டத்தில் வேல மரங்கள் பயிரிடுகிறார்கள். வேல மரத்தி
லிருந்து உதிரும் இலையைத் தண்ணீரில் போட்டு மாட்டுக்குக் காட்டுவதற்கு
மட்டுமல்லாமல், வேல மரத்தின் அடிக் கட்டையிலிருந்து விவசாயத்திற்குத்
தேவையான வேறு கருவிகளையும் செய்வார்கள். மேய்ச்சலுக்கு என்று
வேல மரம் போன்று விலை போகக்கூடிய மரங்களையும் பயிரிடுகிறார்கள்.
அதிலிருக்கும் வருவாய்க்குத் தீர்வை இருக்காது. மேய்ச்சல் நிலம்
என்று பொதுப்படையாக ஒதுக்கினால், அதை விளைச்சல் நிலமாக மாற்றிக்
கொள்ளுவதற்கு நிச்சயமாக அவர்களால் முடியும். இதிலே நீங்கள்
ஒன்றை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு முற்போக்
கான சட்டத்தைப் போட்டாலும், லாபத்தை தேடுபவர்கள் அதிலே சந்து
பொந்துகளை ஆராய்ந்து தேடி கண்டு பிடிப்பார்கள். ஆகையால், கூடுமான
வரையிலே அப்படிப்பட்ட சந்து பொந்துகள் சட்டத்தில் இல்லாமல் நாம்
பார்த்துக் கொள்ளவேண்டும். மேய்ச்சல் நிலம் சர்க்காருடைய உடைமை
யாக இருக்கலாம், பஞ்சாயத்து யூனியனுக்கு சொந்தமாக இருக்கலாம்,
பஞ்சாயத்திற்கு சொந்தமாக இருக்கலாம், ஊராருடைய மாடுகளை மேய்ப்ப
தற்காக வைக்கலாம். ஊரை மிரட்டுகின்றவர்களுடைய மாடுகள் மேயட்டும்,
யார் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். ஆனால், மேய்ச்சல் நிலம்
என்று ஒரு இடத்தில் ஒருவருக்கு விதிவிலக்கு கொடுத்தால், தன்னிடத்
தில் பணம் வசதியுள்ளவர்கள் அதைச் சுற்றி இரும்பு முள்வேலி போட்டு
காலை மாடுகளை மேய்ப்பார்கள். வெளியிலே மேய்ச்சலுக்கு நிலம் இல்லா
மல் திண்டாடுகிற ஏழை விவசாயிகள் அந்த நிலத்திற்குள்ளே தங்களுடைய
மாடுகளை கொண்டு செல்ல முடியாது. மேய்ச்சல் தரைக்கு விதிவிலக்கு
கொடுத்தால், அதை விளைச்சல் நிலமாக பிற்காலத்தில் மாற்றிக் கொள்ளு
வதற்கு வழி செய்யும். அப்படி மாற்றிகொள்ளுவதற்கு வழி செய்வது
மட்டுமல்லாமல், அது தேவையற்ற ஒரு விதிவிலக்காக கருதப்படும் என்ற
ஒரு காரணத்தினால் அப்படிப்பட்ட விதி விலக்கு கூடாது என்று நான்
வற்புறுத்தி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் துவக்கத்தில் சொல்
லியபடி, அதனால் உங்களுடைய அரசியல்—மன்னிக்கவேண்டும்—அரசிய
லில் இருக்க வேண்டிய ஒழுக்கத்திலிருந்து நீங்கள் தவறி விட்டீர்களோ
என்று பொது மக்களிடையே ஐயப்பாடு ஏற்படும். நல்லதற்கோ, கெட்ட
தற்காகவோ அப்படிப்பட்ட மேய்ச்சல் நிலத்தை பயன்படுத்திக் கொள்ளுபவர்
கள் இன்றையதினம் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள். குறிப்பிட்டுக்
காட்டக்கூடிய வேறு கட்சியிலுள்ளவர்கள் அதில் இல்லை. அதனால் அர
சியல் பண்பாட்டிலிருந்து நீங்கள் நழுவி விட்டீர்களோ என்று பொது
மக்கள் ஐயப்படுவதற்கு வழி ஏற்படும். ஆகையினாலே உங்களுடைய நல்ல
பெயரை காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவாவது இதற்கு விதி விலக்கு
அளிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய
ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தலையை அசைக்கிறார்கள். ' இந்த வய
திற்கு மேலா நான் நல்ல பெயர் எடுக்கவேண்டும் ? பரவாயில்லை என்று
கருதுகிறார்களோ என்னவோ ! இந்த வயதில்தான் நல்ல பெயர்
எடுக்கவேண்டும். பால்ய வயதில் கெட்ட பெயர் எடுத்தாலும், மறுபடியும்
அதை திருத்திக் கொள்ளலாம். ஆனால், வயோதிக பருவத்தில் கெட்ட
பெயர் ஏற்பட்டுவிட்டால், அதை பிறகு திருத்திக் கொள்ளுவதற்கு மார்க்கம்
கிடையாது. தள்ளாத வயது வந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தன்
னுடைய பரந்த அனுபவத்தை துணையாக வைத்து, நம்முடைய உள்துறை
அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு, இப்படிப்பட்ட கெட்ட
பெயர் ஜனநாயகத்திற்கு ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும் என்று நான்
பணிவன்போடு வேண்டி கேட்டுக்கொள்ளுகிறேன்.



மற்றப்படி இந்த மசோதாவை பரிசீலனை செய்வதுபற்றி ஆய்வுக் குழு
அமைத்திருக்கிறார்கள். அதிலே அமர்ந்து செய்யப்படுகின்ற திருத்தங்கள்
முற்போக்கு கருத்தோடு அமைய வேண்டும் என்பதை நான் எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும்பொழுது, மற்ற
வைகளுக்கு உச்ச வரம்பு கட்டுவதா வேண்டாமா என்ற பிரச்னை பேசப்
பட்டது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதிலே இருக்கிற ஒரே ஒரு லாபம்
நிலத்தில் உடனடியாக லாபத்தை அடைய முடியாது. மற்றவைகளுக்கும்
உச்ச வரம்பு கட்டப்போகிறோம். அப்பொழுது அதற்கு எதிர்ப்பு சொல்லு
கிறவர்களை, முன்பு நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டச் சொன்னீர்களே என்று
அப்பொழுது மகாலிங்கங்களை கேட்க முடியும். இந்த உச்ச வரம்பு வர
இருக்கின்ற உச்ச வரம்புகளுக்கு முன் அறிவிப்பு, அச்சாரம் என்று பொருள்.
நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதால் மட்டும் சம தர்மத்தை
யும் சமத்துவத்தையும் ஏற்படுத்திவிட முடியாது. ஓரளவுக்கு அந்தப்
பாதையில் நடந்து செல்லுகிறோம் என்று உலகம் நம்மை மதிப்பதற்கு
இது வழி வகை செய்யக்கூடியதாக அமையும். அந்த வகையிலே திருத்
தங்களைக் கொடுத்து ஆய்வுக்குழு முற்போக்கு உள்ளதாக இதை ஆக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த அளவுக்கு முற்போக்கான ஒரு
சட்டத்தை கொண்டு வரவேண்டுமென்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்
கிற மந்திரிகளைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறி,
என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
மசோதா , 6 வருஷ பரிசீலனைக்குப் பிறகு நம்முடைய அமைச்சர் அவை
யினாலே இந்த சட்டசபை முன்பு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இவ்வளவு
காலம் ஏன் ஆயிற்று என்பது ஒரு ஆச்சரியமாக இருந்தது. அந்த
ஆச்சரியத்தை இந்த மசோதா தெளிவாக்கிவிட்டது. 5, 6 வருஷங்களாக
ஆராய்ச்சி நடத்தியதெல்லாம் எதற்காக என்றால், இந்த மசோதா
கொண்டுவருவதற்காகவா அல்லது இந்த மசோதாவை கொண்டு வருகிற
பொழுது பிரித்துக் கொடுப்பதற்கு நிலம் இல்லாமல் போக வேண்டும்
என்பதற்காகவா என்பது இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. முன்
னொரு முறை இந்தச் சபையில் பேசக்கூடிய சமயத்திலே நம்முடைய
அமைச்சர் அவர்கள் ' புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லிக்
கொண்டிருக்கிறீர்கள், ஒரு நாளைக்கு புலி வந்தே விடும், என்று பய
முறுத்தினார்கள். அப்பொழுதே எதிர்க்கட்சியிலிருந்து கேட்டோம் ' உங்க
ளுடைய புலி வரட்டும், ஆனால் அந்தப் புலி யார் மேலே பாயும் ?' என்று
கேட்டோம். அப்பொழுது ' பாயக்கூடியவர்கள் மேல் பாயும் ' என்று
பட்டுக்கொள்ளாமல் பதில் சொன்னார்கள். இப்பொழுது அவர்கள் கட்ட
விழ்த்து விட்டிருக்கக்கூடிய புலியானது நிலம் உள்ளவர்கள் மேலே
பாயவில்லை, பாய முடியாமல் இருந்து விட்டால் வருத்தப்படமாட்டேன்,
நொண்டிப் புலி அல்லது காகிதப் புலியாக இருந்தால் தொலைந்து
போகிறது என்று விட்டுவிடலாம். ஆனால் அந்தப் புலி ஏழை எளியவர்கள்
மீது, நிலம் வைத்திருப்பவர்கள் ஏற்கெனவே விவசாயிகளாக இருப்பவர்
கள் மீது பாயப் போகிறது என்கின்ற அம்சம்தான் இதில் பிரதானமாக
இருக்கிறது. அதனால்தான் இந்த சட்டத்தைக் கொண்டுவருவதற்கு
இவ்வளவு காலதாமதம் ஆகியிருக்கிறது என்று நான் ஊகிக்கிறேன்.

இந்த மசோதாவை ஆராயக்கூடிய சமயத்தில், இதை நான் கம்யூ
னிஸ்டு கட்சியினுடைய கண்ணோட்டத்திலிருந்து பரிசீலனை செய்ய விரும்ப
வில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம் ரொம்ப தீவிரமானது என்று
கருதலாம். நான் அந்த அடிப்படையிலிருந்து இதை பரிசீலனை செய்ய
விரும்பவில்லை. ஆனால் நம்முடைய தேசீய இயக்கம் சில லட்சியங்களை
மக்கள் முன் வைத்திருக்கிறது, சுதந்திரம் அடைவதற்கு முன்னும்,
சுதந்திரம் அடைவதற்கு பின்பும், இந்த மசோதாவைக் கொண்டுவந்த
அமைச்சர் அவர்களுக்கு இதில் அதிகம் ஈடுபாடு இல்லாவிட்டாலும் கூட,
காங்கிரஸினுடைய லட்சியத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற, வெகு
திறமையாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிற, மற்ற மாநிலங்களைவிட இன்
னும் சிறப்பாக நிறைவேற்றிக்கொண்டு இருப்பதாகச் சொல்லக்கூடிய. ஒரு

[Sri M. Kalyanasundaram] [20th April 1960

மந்திரி சபை இந்த மாநிலத்தில் இருக்கிறது. காங்கிரஸ் லட்சியங்களை
எந்த அளவுக்கு நிறைவேற்றுவதற்கு முற்பட்டிருக்கிறார்கள் என்று நாம்
ஒரு புறத்தில் பார்க்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்ளு
கிறேன். அதுவும் நீண்ட நாட்களாக சுதந்திர இயக்கத்தில் ஈடுபாடுடைய
அமைச்சர்கள் இருக்கக்கூடிய மந்திரிசபை அப்படிப் பார்த்து இதில் பெருமை
கொள்ளுவதற்கு, கராச்சி தீர்மானத்தின் லட்சியங்களின் அடிப்ப
டையில், ஜெயிப்பூர் தீர்மானத்தின் லட்சியங்களின் அடிப்படையில் இந்த
அளவுக்கு நடந்திருக்கிறோம் என்று சொல்ல முன்வருவார்களானால்,
இதை எதிர்ப்பவர்கள்கூட எதிர்க்க முடியாமல் போய்விடக்கூடும். அப்படி
ஒரு பரிசீலனை இருக்கக்கூடும். அது ஒரு புறம் இருக்க, காங்கிரஸ் அதி
காரத்திற்கு வந்த பிறகு அமைச்சர்கள் சொல்லலாம் 'நாங்கள் அதிகாரத்
தில் இல்லாத காலத்தில் ஏதோ பலவிதமாக பேசியிருக்கலாம், அதிகாரத்
திற்கு வந்த பிறகு ரொம்ப நிதானமாக, இது நடைமுறையில் சாத்தியமா,
இது நடைமுறையில் சாத்தியம் இல்லையா என்பதை உணர்ந்து பொறுப்
போடு சட்டத்தைக் கொண்டு வருகிறோம்' என்று ஒரு வேளை சொல்லுவ
தற்கு வாய்ப்பு இருக்கலாம். அதிகாரத்திற்கு வந்த பிறகு என்ன செய்
திருக்கிறார்கள் என்பதை பரிசீலனை செய்து பார்த்தால், காங்கிரஸ் அதி
காரத்திற்கு வந்த பிறகு 1947-ம் வருஷத்தில் ஒரு கமிட்டி போடப்பட்டது.
அதை வேண்டுமானாலும் உத்தியோக சார்பற்ற கமிட்டி என்று சொல்ல
லாம். பிறகு பிளானிங் கமிஷன் நியமிக்கப்பட்டது. பிளானிங் கமிஷ
னின் முதல் திட்ட, இரண்டாவது திட்ட அறிக்கைகள் நம் முன்பு இருக்
கின்றன, தேசத்திற்கு முன்பு இருக்கின்றன. இரண்டாவது திட்டம் சம்
பந்தப்பட்ட மட்டில், அதனுடைய நகல் திட்டம் இதற்கு முந்திய சட்டசபை
யில் வைக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு இந்தச் சபை ஏற்றுக்கொண்டிருக்
கிறது. அந்த நகல் திட்டம் பார்லிமெண்டிலும் வைக்கப்பட்டு, பார்லி
மெண்டால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நகல் திட்டங்களுக்குப்
பிறகு உருவான திட்டங்களை எடுத்துப் பார்த்தாலும், அந்தத் திட்டங்களில்
சில வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிலச் சீர்திருத்தம் சம்பந்த
மாக, சில கோட்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கோட்பாடு
களின் அடிப்படையில் இந்த மசோதா இருக்கிறதா என்பதை ஆராய்வது
ரொம்ப அவசியம். கம்யூனிஸ்டு லட்சியத்தை அப்பொழுதே ஒதுக்கித்
தள்ளிவிட்டேன், அந்த அடிப்படையில் இந்த மசோதாவை ஆராயப்
போவதில்லை. தேசீய இயக்க காலத்தில் இருந்த காங்கிரஸ் இலட்சியங்
களையும் ஒரு பக்கம் ஒதுக்கிவைத்துவிடலாம். காங்கிரஸ் பதவிக்கு வந்த
பிறகு வெளியிட்டிருக்கக்கூடிய இரண்டு திட்ட அறிக்கைகளில் கொடுக்கப்
பட்டிருக்கக்கூடிய கோட்பாடுகளின் அடிப்படையில் அவசியம் இந்த மசோ
தாவை ஆராய்ந்து, அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற லட்சியங்கள் என்ன,
அந்த லட்சியங்களை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்று
இதிலே பார்ப்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்று சொன்னால், ஒரே ஒரு
கிளாஸ்தான் இருக்கிறது. அந்த கிளாஸ் என்ன வென்றால் : முதலிலே,
ஷார்ட் டைடில் அண்டு எக்ஸ்டெண்ட் என்கிற கிளாஸில், **This Act may be
called the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act,
1960,** என்கிற அந்த ஒரு பிரிவைத் தவிர, வேறே எந்தப் பிரிவிலும் அந்த
கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த சட்டம் அமையவில்லை என்று நான்
தரப்போகும் விளக்கத்திலிருந்து எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இரண்
டாவது திட்டத்தின், நகல் திட்டம் இந்த சபையிலே விவாதம் நடந்த
காலத்திலேயே இந்த அமைச்சர்கள் எல்லோரும்—மராமத்து இலாகா மந்திரி
ஸ்தல ஸ்தாபன மந்திரி, மின்சார இலாகா மந்திரி, இவர்களைத் தவிர,—
அந்த காலத்தில் அமைச்சராக இங்கே இருந்தார்கள் ; மற்றவர்கள்
இல்லாவிட்டாலும், அதே அமைச்சர்கள் அதிக பலத்தோடு இப்பொழுது
வந்திருக்கிறார்கள். ஆனால், அதே கட்சி மந்திரி சபைதான். அவர்களே
அந்த கோட்பாடுகளிலிருந்து பின் வாங்கியிருக்கிறார்கள்.

இது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்று சொல்ல
லாம் ; இன்னொன்று சொல்லலாம் ; உற்பத்தி பெருக வேண்டும் என்ற
காரணம் இருக்கலாம். வாஸ்தவம். நிலச் சீர்திருத்தத்தின் நோக்கமே
விவசாயப் பொருள்களின் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்பதுதான் ;



20th April 1960] [Sri M. Kalyanasundaram]

நிலத்தை ஏழைகளைப் பார்த்துத் தர்மம் செய்வதில்லை என்பதை எந்த
அரசியல் கட்சியும் சொல்லும், கம்யூனிஸ்ட் கட்சி உள்பட. ஒவ்வொரு
ஏழைக்கும் ஐந்தைந்து செண்டாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று
ஒரு கொள்கையை இந்த நாட்டில் எந்த அரசியல் கட்சியும் ஒத்துக்
கொள்ள வில்லை. விவசாய பொருள்களின் உற்பத்தியை பெருக்க வேண்
டும் ; பெரிய அளவில் பெருக்கியாக வேண்டும் ; பெரிய தொழில்கள்
பெருக வேண்டும் என்றால், அதற்கு வேண்டிய (ரா மெடீரியல்ஸ்) மூலப்
பொருள்களை விவசாயத்தின் மூலந்தான் பெற வேண்டும் ; மக்களின்
தேவைக்கு வேண்டிய பொருள்களையும், உணவுப் பொருள் விவசாயத்
திலிருந்துதான் பெற்றாக வேண்டும். ஆகையால்தான், விவசாயத்தில்
இருக்கக்கூடிய கோளாறுகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பது
அவசியமாகிறது. இனியும் மக்களின் உணவுப் பொருள்களுக்குக்கூட மேல்
நாடுகளை நம்பிக்கொண்டு இருக்கக்கூடாது. இரண்டாவது திட்ட காலத்
தில் ரூபாய் 1,000 கோடி அளவில், ரூபாய் அளவில், செலவு செய்திருந்
தாலும், இப்பொழுது பார்லிமெண்டில் அமைச்சர்கள் விடும் அறிக்கை
யைப் பார்த்தால், அமெரிக்காவிலிருந்து இன்னும் உணவுப் பண்டங்களை
இறக்குமதி செய்யும் நிலையில்தான் இருக்கிறோம். ஆகவே, இந்த நிலச்
சீர்திருத்தச் சட்டம், இதன் நோக்கம், விவசாயப் பொருள்களை உற்பத்தி
செய்வதைப் பெருக்க வேண்டும், அதற்கு இருக்கக்கூடிய கோளாறுகளை
தவிர்க்க இது முதல் படியாக ஏற்படக்கூடிய திட்டம் என்றுதான் சொல்ல
வேண்டும். மற்ற சொத்துக்களுக்கு ஏன் உச்ச வரம்பு கட்டவில்லையென்று
பலர் கேட்கிறார்கள். அது ஆலோசிக்க வேண்டிய விஷயம்தான். ஆனா
லும், அதை இந்தத் திட்டத்தோடு இணைக்க வேண்டிய அவசியம் இல்லை.
இந்த நிலச் சீர்திருத்தத்தோடு மற்ற சொத்துக்களுக்கும் வரம்பு கட்டுவது
என்பதை சேர்த்துச் செய்ய வேண்டும் என்பதில்லை. தொழில்கள் தனி
யார் துறையில் இருந்தாலும் சரி, பொதுத் துறையில் இருந்தாலும் சரி,
அதில் கிடைக்கும் லாபத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டியது மிக மிக
அவசியமே என்பதை எதிர்க்கட்சியில் நாங்கள் பல தடவைகளில் எடுத்துக்
காட்டியிருக்கிறோம். வரம்பு சொத்துக்கு என்று இல்லாவிட்டாலும்,
பஸ் முதலாளிகளுக்கும், மில் முதலாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்
கும் அதிகபட்ச லாபம் சமுதாயத்துக்குப் பயன்படுத்தப்படவேண்டும்
விவேகம் என்பதை தெரிந்தவர்கள் சொல்லுவார்கள்.

இந்த நில உடமைக்கு வரம்பு கட்டும் சட்டம் பல மட்டங்களிலும் பரி
சீலனை செய்து, தேசம் பூராவும் ஒப்புக்கொண்டு, அநேக நிபுணர்களும்,
பொருளாதார நிபுணர்களும் ஒப்புக்கொண்ட விஷயம். இதனால் விவசாய
உற்பத்தி பெருகும் என்பது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட விஷ
யம். ஆகவே, அந்த லட்சியம் கைகூட அரசியல் சட்டத்தில் இடம்
இருக்க வேண்டும். தேர்தலில் மக்களிடமிருந்து இதற்கென்று தனி ஓட்டு
பெறவேண்டும் என்றும் ஒரு சிலர் இந்த சட்டத்தைப்பற்றிச் சொல்கிறார்
கள். அவர்களுடைய வாதம் கொஞ்சம் வேடிக்கையாகவே இருக்கிறது.
புலிக்குப் பயந்தவர்கள் என்மேல் படுங்கள் என்பதாக இருக்கிறது. அர
சியல் சட்டத்தில் இடம் இல்லையென்றால், சட்டத்தைத் திருத்த வேண்டுமே
ஒழிய, திட்டத்தை கைவிட முடியாது. '**Confiscatory in nature**' என்று
சொல்கிறார்கள். யார், எங்கே, கான்பிஸ்கேட் பண்ணப் போகிறார்கள் ?
எவ்வளவு பேருக்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு அதிகமாக இருக்கப்
போகிறது ? எவ்வளவு பேர்களுக்கு அப்படி 30 ஏக்கர் இருக்கிறது என்று
ஒரு ஸ்டேட்மெண்ட் தயாரிக்கப் போகிறார்கள். அவ்வளவுதான். இந்த
சட்டம் அதற்குமேல் ஒன்றும் செய்யப் போவதில்லை. இதைப் போய்
'**Confiscatory**', சொத்தை அபகரிக்கும் தன்மை உடையது என்று
ஒரு பெரிய தலைவர் கூறுகிறார்கள். அதைப் பார்க்கும்போது
ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. அவர்களும், இவர்களும் ஏதாவது ஒப்பந்தத்
தின் பேரில்தான் இப்படிப் பேசுகிறார்களோ என்று. "நான் நோவாமல்
அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு" என்பதுபோல் இருக்கிறது. ஜனங்க
ளிடையே இப்படிச் சொல்லிக்கொண்டு வந்தால், இந்த சட்டமாவது நிலைக்
கட்டும் என்றுதான் அப்படி செய்கிறார்களோ, என்னவோ, அப்படித்தான்
நினைக்க வேண்டியிருக்கிறது. அவர்களே முதல் அமைச்சராக இருந்த

[Sri M. Kalyanasundaram] [20th April 1960

காலத்தில் எப்படிச் செய்தார்கள் ? அந்தக் காலத்தில் ஒரு சட்டம் அவர்
கள் நிறைவேற்றிஞர்கள். **1952**-ம் வருஷ தஞ்சாவூர் பண்ணையாள் பாது
காப்புச் சட்டத்தைப்பற்றி நான் குறிப்பிடவில்லை ; இந்த மாதிரியான
வாக்குறுதி **1955**-ல் மட்டுமல்ல, அதற்கும் முன்னுலேயே கொடுக்கப்பட்டது.
தஞ்சாவூர் சட்டம் முதல் படியாக அமைந்தது ; அப்பொழுதே படிப்படி
யாக நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரப் போகிறேம், யார் எதிர்த்தா
லும் சரி என்று சொல்லப்பட்டது. இன்று வெளியிலிருந்து சொல்லக்
கூடியவர்கள், அன்று இங்கே உள்ளேயிருந்து செய்தார்கள். அவர்கள்
முதல் அமைச்சராக இருந்த காலத்தில், அவசர சட்ட முறைப்படி, திருச்சி,
மதுரையில் இருக்கக்கூடியவர்களுக்கு, குடியிருப்பு பாதுகாப்புச் சட்டம்,
அவசரச் சட்டமாகக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அதை நான்,
பாராட்டி வரவேற்கிறேன். அதைவிட பயங்கரமானதல்ல இந்தச் சட்டம்.
ஆகவே, இந்த சட்டத்தின் லட்சியத்தை, தத்துவத்தை யாரும் ஒத்துக்
கொள்ள வேண்டும். அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறதா, இல்லையா
என்று பார்க்க வேண்டுமே தவிர, சிக்கல்களை ஏற்படுத்துவது நியாயம்
இல்லை ; அரசியல் சட்டத்தில் இடம் இல்லையென்ருல், அதை மாற்ற
வேண்டுமே ஒழிய, இந்த சட்டத்தின் லட்சியத்தை குறைகூறக் கூடாது
என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் மேண்டேட் வேண்டும் என்கிருர்கள். **1957**-
லேயே காங்கிரஸ் தேர்தலில் நின்ற காலத்தில் இரண்டாவது திட்டத்தில்
கொடுக்கப்பட்டிருக்கும் லட்சியங்கள் தேர்தல் அறிக்கைகளில் வெளியிடப்
பட்டு, அதன் பேரில் மக்கள் ஆதரவு பெற்றுத்தான், அதிகப்படியான
பலத்தோடு இங்கே வந்திருக்கிருர்கள். ஆகவே, அவர்கள் தேர்தல் வாக்
குறுதியை நிறைவேற்றியாக வேண்டும். அப்படி அவர்கள் நிறைவேற்று
கிருர்களா அல்லது தேர்தல் வாக்கை காற்றில் பறக்கவிட்டு அதை மீறி
சட்டம் செய்கிருர்களா என்று பார்த்தால், இந்த மசோதா தயாரித்
திருப்பது, ப்ளானிங் கமிஷன் கொடுத்திருக்கக்கூடிய கோட்பாடுகளை மீறி,
அவர்களும் **1957** பொதுத் தேர்தல் சமயத்தில் கொடுத்து இருக்கக்கூடிய
வாக்குகளை மீறிச் செய்கிருர்களே தவிர, அதை நிறைவேற்றும் முறையில்
நடக்கவில்லையென்றுதான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். திட்டத்
திலே கொடுத்திருக்கக்கூடிய லட்சியங்கள் என்ன ? முதலிலே ஸீலிங்கை
எடுத்துக் கொள்வோம். நில உடமைக்கு உச்ச வரம்பு, சொந்த நில
உடமைக்கு வரம்பு கட்டுகிறேமே தவிர, நில உடமைக்குத்தான் உச்ச
வரம்பு என்று சொல்கிறதே தவிர, வரம்பு கட்டிய பிறகு நிலத்தை சாகு
படியாளர்களுக்குக் கொடுக்கிறேம் என்று சொல்லவில்லை. எற்கெனவே
மிக அதிகமாக இருப்பவர்களுக்கு ஒரு ஸீலிங் கட்டுகிறேம் ; அதிகமாக
இருப்பதை குடியானவர்களுக்கு, சாகுபடியாளர்களுக்கு கொடுப்பது என்று
சொல்லவில்லை. அதிகமான நிலத்தை சாகுபடியாளர்களுக்கு சொந்த
மாக்க வேண்டும் என்பது அந்த திட்டத்தில் முக்கியமான லட்சியம்.
ஆனல், அது இந்த சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்த சட்டத்தில்
இருக்கக்கூடிய அம்சங்களைப் பார்த்தால், ஏதாவது சாகுபடி செய்யக்கூடிய
குடியானவர்களுக்குச் சொந்தமாக்குவார்களா என்ருல், அந்த லட்சியம்,
கோட்பாடு இங்கே காணப்படவில்லை. இன்றைக்கு நில உடமைக்கு வரம்பு
கட்டி, பின்னல் குடியானவர்களையும் வெளியேற்றி சர்க்கார் எடுத்துக்
கொள்ளும் பெயரில், அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கே, அவர்கள்
கையிலேயே கொடுத்துவிடத்தான் 30 எக்கர் என்று வைத்திருக்கிருர்கள்.

இப்பொழுது முப்பது ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைத்திருக்கிருர்கள்
அதன் வியாக்கியானத்தைப் பார்த்தால் சில இடங்களில் **120** எக்கர்
வரையிலும்கூட போகக்கூடியதாக இருக்கிறது. பத்து ரூபாய் தீர்வை
என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். எவ்வளவோ நிலங்களுக்கு இருபது இரு
பத்திரண்டு ரூபாய்கூட தீர்வை வசூலிக்கிருர்கள். **1,200** பவுண்டு விளை
யக்கூடிய நிலங்கள்கூட இருக்கின்றன. இப்பொழுதுள்ள வியாக்யானத்
தின்படி முப்பது ஸ்டாண்டர்டு எக்கர் என்ருல் அதில் ஏற்றத் தாழ்வு இருக்க
இடம் இருக்கிறது. வியாக்யானத்தைப் பார்த்தால் அதிகப்படியான
நிலத்தை வைத்துக் கொள்வதற்கு இடம் அளிக்கப்படுகிறது. இப்படி



20th April 1960] [Sri M. Kalyanasundaram]

முப்பது என்று அமைக்கும்போது ஏற்றத் தாழ்வை புகுத்தியிருக்கிருர்கள்.
காவேரி தாம்பிரபரணி பாசனத்தில் உள்ள நிலங்களிலும் முப்பது எக்கர்
தான் வைத்துக் கொள்ளலாம் என்று அர்த்தமாகிறது. இந்த முறையில்
பெரிய நிலப் பிரபுக்கள் அதிகப்படியான நிலத்தை வைத்துக் கொள்வ
தற்கு முயற்சிக்கப்படுகிறது. இதனுல் அவர்களுக்கு எந்த விதமான பாதக
மும் ஏற்படாது. ப்ளானிங் கமிஷனில் என்ன சொல்லி இருக்கிருர்கள்.
இண்டிவிடுவல் ஹோல்டிங் பாமிலி ஹோல்டிங் என்றுதான் சொல்லி
இருக்கிருர். பர்சனல் ஆர் பாமிலி கல்டிவேஷன் என்றுதான் சொல்லி
இருக்கிருர்கள். ஒரு குடும்பத்திலுள்ள பாமிலியைப்பற்றி வியாக்யானம்
செய்ய வேண்டும். ஜாயிண்ட் ஹிந்து பாமிலி, அன்டிவைடெட் என்று
வியாக்யானம் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ளபடி ஒரு குடும்பம்
பாகப் பிரிவினை ஆகாமல் இருந்தால் அந்தக் குடும்பமும் முப்பது எக்கர்
வைத்துக்கொள்ளலாம் என்றும் பாகப் பிரிவினை ஆனுல் தலைக்கு முப்பது
முப்பது எக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆகிறது. அந்த அளவில்
ஒரு குடும்பம் பாகப் பிரிவினை ஆகிவிட்டது என்று சொல்லி எவ்வளவு 11 a.m,
எக்கர் நிலம் வேண்டுமானுலும் வைத்துக் கொள்வதற்கு இடம் ஏற்படு
கிறது. ஒரு குழந்தையின் பேரால்கூட முப்பது எக்கர் வைத்துக்
கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சட்டத்தில் வசதி ஏற்படுத்திக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று சொல்லிக்
கொண்டு அதிகப்படியாக நிலம் வைத்துக் கொள்வதற்கு வசதி செய்து
கொடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் வருமான வரி, தொழில் வரி கட்டுகிறவர்களுக்கு இது வராது
என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது எனக்கு நன்ருக விளங்கவில்லை.
ஒரு குடும்பத்தில் ஒருவன்தான் வருமான வரி தொழில் வரி கட்ட
முடியும். அதனுல் ஆளுக்கு ஆள் சொத்து வைத்துக் கொள்வதற்கு
இடம் ஏற்படுகிறது. ஆகவே உச்ச வரம்பு முப்பது எக்கர் என்று வைத்
திருப்பது சரியல்ல. புத்திசாலித்தனமாக இருந்தால் இன்னும் ஐந்து
வருஷங்களில் ஒரு குடும்பத்தில் அதாவது பாகப் பிரிவினை ஆன குடும்ப
மாக இருந்தால் செட்டில்மெண்ட் செய்யாமல் ஒவ்வொருவரும் அதிகப்
படியான நிலம் வைத்துக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்
டிருக்கிறது. இப்பொழுது பாகப் பிரிவினை செய்து கொள்ளாமல் இருப்ப
பவர்களுக்குத்தான் இது சனியனுக வந்திருக்கிறது. புத்திசாலித்தன
மாக இல்லாமல் இருப்பவர்களை புத்திசாலிகளாக இருங்கள் என்றுசொல்
லக்கூடிய அளவில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. கொஞ்ச நாளைக்குப்
பிறகு ஒவ்வொருவரும் **150** அல்லது **200** எக்கர்கூட நிலம் வைத்துக்
கொள்ளலாம் என்ற நிலைமை இதனுல் ஏற்படுகிறது. ஆகவே முப்பது
ஸ்டாண்டர்ட் எக்கர் என்பதற்கு பதிலாக பதினைந்து ஸ்டாண்டர்ட் எக்கர்
என்று வைத்திருக்கலாம். ஸீலிங் முப்பது என்று வைத்திருப்பதால்
இன்னும் அதிகப்படியான நிலம் வைத்துக் கொள்வதற்கு முடியும்.

இந்த ஸீலிங்குக்கு உட்பட்டு அதிகமாக இருக்கக்கூடிய நிலத்தை சர்க்கார்
எடுத்துக் கொள்ளப் போகிருர்கள். அதற்குள் பட்டிருக்கும் நிலத்தில் ஐந்து
எக்கர் வீதம் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்
கிறது. அப்படி ஒவ்வொரு நபரும் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்
கிறது. அப்படி ஐந்து பேர்கள் இருந்தால் முப்பது எக்கர் ஸீலிங்கினுல்
**150** எக்கர் சொந்த சாகுபடிக்கு ஐந்து எக்கருக்கு என்ற அளவில் **25** எக்
கரும் எடுத்துக்கொள்வதற்கு வசதி இருக்கிறது. மற்றும் வருமான வரி
தொழில் வரிக் கட்டினுல் அந்த அளவுக்கு சலுகைகள் கிடையாது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. அது எட்டளவில்தான் இருக்குமே தவிர செய்கையில்
வருவதற்கு இடம் இல்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் வரு
மான வரி கட்டுவதாக இல்லை, தொழில் வரி கட்டுவதாக இல்லை. மற்றும்
மைனர்கள் இருந்தால் அவர்களும் தொழில் வரி கட்டுவதாக இல்லை,
வருமான வரி கட்டுவதாகவும் இல்லை. ஆகவே இப்படிப்பட்டவர்கள் ஐந்து
எக்கர் வீதம் எடுத்துக்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே அவர்களுக்கு சலுகைகள் இல்லாமல் போய் விடும். ஆகவே
ஒவ்வொருவரும் ஐந்து ஐந்து எக்கர் நிலம் எடுத்துக்கொள்வதற்கு
வாய்ப்பு இருக்கிறது.

இந்தச் சட்டமே வெகு தந்திரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நிலப் பிரபுக்களுக்கு புதிய முறையில் 150 எக்கர் வைத்துக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கலாம் என்பதற்கு இப்படிக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சொந்த சாகுபடி என்றால் என்ன என்பதற்கும் ப்ளானிங் கமிஷனால் அதற்கு வியாக்யானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பர்சனல் கல்டிவேஷனில் மூன்று எலிமெண்டுகள் இருக்கின்றன. சாகுபடியிலுள்ள ரிஸ்க் அதாவது அதில் வரக்கூடிய லாப நஷ்டம், அது அவனுடைய பொறுப்பு என்று இருக்க பொறுப்பாக இருக்க வேண்டும்.

**Personal cultivation may be said to have three elements, viz., risk of production, personal supervision and labour.** கல்டிவேஷனல் ரிஸ்க் இருக்க வேண்டும். பர்சனல் சூபர்விஷன் அண்டு லேபர் என்று இருக்க வேண்டும். "ஆர்" என்பதற்குப் பதிலாக "அண்ட்" என்று இருக்க வேண்டும். சொந்தக் குடும்பத்தில் உழைப்பு இருந்தால் அது பர்சனல் கல்டிவேஷன். டெனன்ட் சம்பந்தப்பட்ட மட்டில் இம்மாதிரி தான் போட்டிருக்கிறார்கள். ஆனால் நிலப் பிரபுக்கள் தங்கள் சொந்த சாகுபடிக்கு நிலத்தை மீட்டுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள். பர்சனல் கல்டிவேஷனோடு சூபர்விஷன், ரெசிடன்ஸ் எல்லாம் இருக்க வேண்டும். அப்படி இப்பொழுது இல்லை. எங்கே இருந்து கொண்டு வேண்டுமானாலும் சொந்த சாகுபடி செய்யமுடியும். அந்த அளவிற்கு நிலப் பிரபுக்களுக்கு தங்களுடைய நிலத்தை மீட்டுக்கொள்வதற்கு வசதி தாராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விதி விலக்கு இந்தச் சட்டத்தில் தாராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கரும்பாலைக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பற்றி எனக்கு முன் பேசிய நண்பர் அண்ணாதுரை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவைகளுக்கு எதற்காக விதி விலக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். தனிப்பட்டவர்களுடைய கரும்பாலை சொந்த நிலத்தில் வைத்திருக்கிறார்கள். நான் அறிந்த மட்டில் ஒன்றிரண்டு ஆலைகள் தான் அப்படித் தனிப்பட்டவர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று தஞ்சை ஜில்லாவிலுள்ள ஆரூரான் மில். அவர்கள் தங்களுடைய கரும்பாலைக்குச் சொந்த நிலங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னொரு சொந்தமான கரும்பாலை பெட்டைவாத்தலையிலுள்ள கரும்பாலை. அதற்குத் தங்களுடைய சொந்த நிலத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். பங்காக எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு எதற்காக விதி விலக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் தெரியவில்லை. அப்படித் தங்களுடைய சொந்த நிலங்களை எழுதி வைத்திருக்கும்போது அதற்கு விதி விலக்குக் கொடுக்காமல் இருந்தால் அதனால் சர்க்கரை உற்பத்தித் தடைபடுமா? உற்பத்திக்கு இடையூறு ஏதாவது வருமா? இப்படி விதி விலக்குக் கொடுத்தால் அவர்கள் இன்னும் அதிகப்படியான நிலத்தை வைத்துக் கொள்வதற்கு வசதி செய்து கொடுப்பதாக ஏற்படுகிறது. இதில் மற்றொரு விஷயம் இருக்கிறது. அவர்கள் அனேகமாகக் காங்கிரஸ்காரர்கள் தான். இந்தக் கரும்பாலைக்குப் பங்காக தங்களுடைய நிலத்தை விட்டிருப்பவர்கள் எல்லோரும் பெரும்பாலும் காங்கிரஸ்காரர்கள்தான். இன்றைக்கு ஒரு காங்கிரஸ் எம்.எல்.சி. ஆஸ்பத்திரிக்கு என்று 162 எக்கர் நிலத்தை எழுதி வைத்துவிட்டு அதை ஆரூரான் மில்லுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறார். அப்படிக் குத்தகைக்கு விட்டுவிட்டு அதையும் தானே உள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு சாகுபடி செய்கிறார். ஆஸ்பத்திரிக்கு எழுதி வைத்துவிட்டு ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறதா, மருந்துகள் வாங்கப்பட்டிருக்கிறதா, மற்ற சாமான்கள் வாங்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. அவையெல்லாம் ரகசியமாகத்தான் இருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு ட்ரஸ்டுதான் இருக்கிறது. உள் குத்தகைக்கு எடுத்து கரும்பு சாகுபடி செய்து சொந்த முறையில் லாபம் அடைந்து வருகிறார். மற்றும் புகளூர் சர்க்கரை ஆலை இருக்கிறது. அதற்கு ஆயிரக் கணக்கான எக்கர் நிலம் எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றில் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அதற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சிறு குடியானவன் அப்படி வைத்துக்கொண்டிருந்தால் அவனுக்கு





அந்தச் சலுகை இடையாது. நிலம் பிரிக்கப்பட்டால் குடியானவர்களுக்கு சலுகைகள் இல்லாமல் போய்விடுகிறது. கரும்பு சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று இரண்டு மூன்று எக்கர்களில் சிறிய குடியானவர்கள் சாகுபடி செய்துகொண்டு வந்தால் அவர்களை வெளியேற்றுவதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது. அந்த முறையில் இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கரும்பு உற்பத்தி செய்து ஆரூரான் ஆலைக்குக் கொடுக்க வேண்டும் என்றுதான் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, தன்னுடைய சொந்தத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு இல்லை. ஆகவே, இந்த முறையில் சிறிய குடியானவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கு வேண்டிய அளவில் இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அடுத்தது, மடாலயங்கள், அறநிலயங்கள், தேவாலயங்களுக்குக் கொடுத்து இருக்கக் கூடிய எழுதி வைக்கப்பட்டிருக்கும் தர்ம சொத்துக்களுக்கு உச்ச வரம்பு கட்டி விட்டோம் என்று ஒரு வேளை பிரச்சாரத்துக்குச் சொல்லலாம். ஏனென்றால் நாட்டில் அந்த அளவுக்கு இந்த அறநிலயங்களைப் பற்றி நினைக்கக்கூடிய மரியாதை. ஆகவேதான் நம்முடைய கனம் அமைச்சர் அவர்களுக்குத் தைரியம் வந்தது, நேற்று அவர்கள் பேசிய மாதிரி, உள் நாட்டு அமைச்சர் அவர்களே சொன்னார்கள், சாமியா சாப்பிடப் போகிறார் என்று. சாமி சாப்பிடுகிறதாக இருந்தால் கால் செண்ட் நிலம் கூட எழுதி வைக்கமாட்டார்கள். கடவுள் சாப்பிடமாட்டார் என்று தைரியம். ஆகவேதான் ஆலயங்களுக்கு நிலம் எழுதி வைக்கப்பட்டது. அறநிலயங்களுக்கு எழுதி வைக்கப்பட்டது நல்ல எண்ணத்தோடு எழுதி வைக்கப்பட்டது என்று சொல்லுகிறேன். அவற்றின் நோக்கம் என்ன, சமுதாயத்தில் நல்ல சேவைகள் ஏற்பட வேண்டும் என்பதற்காக எழுதி வைக்கப்பட்டவைகள். ஆனால் இன்றைக்கு அப்படி நடக்கின்றனவா? அதற்கு மாறாக சில மடாதிபதிகள் நடந்துகொள்வது, அவர்கள் செய்யக் கூடிய டாம்பீகச் செலவைப் பார்க்கும்பொழுது முன்பு இருந்த மகாராஜாக்கள் கூட அவ்வளவு ஆடம்பரமாகச் செலவு செய்ய முடியவில்லை. அவர்களை எல்லாம் ஒழித்துவிட்டோம். கடவுள் பெயரால் எழுந்த மகாராஜாக்களை விட்டு வைத்துக்கொண்டிருக்கிறோம். இதற்கு 200 எக்கர் வரைக்கும் உச்ச வரம்பு கட்டி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதன் பலன் என்ன ஆகும். நபர் ஒன்றுக்கு 30 ஸ்டாண்டார்ட் எக்கர், எப்படி ஒரு குடும்பத்தில் 150, 200 ஸ்டாண்டார்டு எக்கரைப் பிரிக்க வசதி செய்து இருக்கிறார்களோ, அதே போன்று தர்மம் ஒன்றுக்கு 200 எக்கர் என்று அர்த்தம். ஒரு கட்டளை, இந்த வேளை, அந்த வேளை, ராத்திரி கட்டளை, அபிஷேகம் என்று பிரித்து எழுதப்பட்டு, ஒவ்வொரு கோவிலிலும் அப்படி பிரிவினை செய்யப்பட்டு இருக்கக் கூடியது எல்லாம் தனித்தனி கட்டளை என்று சொல்லி ஒவ்வொன்றுக்கும் 200 எக்கர் விதி விலக்கு கோருவதற்குள்ள சந்தர்ப்பம் இதில் இருக்கிறது. அதாவது ஏதாவது ஒரு பாடசாலைக்கு எழுதி வைத்தால் போதும். விதி விலக்கு இல்லாமல் எத்தனை எக்கர் வேண்டுமானாலும் அனுபவிக்கலாம். சமஸ்கிருத பாடசாலை என்று ஒரு கோவிலில் இருக்கிறது. அதற்குக் காவேரியில் 400 எக்கர் நல்ல நஞ்சை நிலம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. ரொம்ப நாளைக்கு முன்பு எத்தனை பேர் சமஸ்கிருதம் படிக்கிறார்கள், எத்தனை மாணவர்கள், ஆசிரியர்கள் இருக்கிறார்கள், கல்விக்காக என்ன செலவு செய்யப்படுகிறது என்ற விஷயம் நம் யாருக்கும் தெரியாது. நானூறு எக்கரையும் குடும்ப சொத்து மாதிரி அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமா. அதன்படி பார்த்தால் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தர்ம சொத்து என்ற பெயரால் 400 எக்கர் அவர்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கலாம். சமஸ்கிருத அபிவிருத்தியோ, எந்தக் கல்வியோ, தர்மம் எழுதி வைத்தவர்கள் எந்த நோக்கத்தோடு எழுதி வைத்தார்களோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் எப்படியோ தர்மகர்த்தாக்களாக பியூக் காரில் போய்க்கொண்டு பங்களாவில் வசித்துக்கொண்டு உல்லாசமாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் இதைப் பறறிக் குறிப்பிடுவது அவர்களைப் பற்றிப் பொறாமை அல்ல. தேசத்தின் முன்னேற்றம் இதனால் எவ்வளவு தடைபடுகிறது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நிலவுடமைக்கு உச்ச வரம்பு

கட்டிவிட்டோம் என்று இந்த மசோதாவில் சொல்வதானது ஜனங்களை ஏமாற்றுவதற்காக. விவசாயிகளை ஏமாற்றுவதற்காக. அதன் பலன் என்ன ஆகும். சாகுபடி குடியானவர்களை 1962-ம் வருஷ தேர்தலுக்கு தயார் பண்ணுகிறது. இது ஒரு விளம்பரம். இந்த மசோதா குடியானவர்களுக்கு நன்மை அளிக்க வந்திருக்கிறதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதில் குடியானவர்கள் நிலை என்ன ? சாகுபடி செய்யக்கூடிய குடியானவர்கள், நிலம் இல்லாத ஏழைகள், இவர்களுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், ஏற்கனவே குத்தகைக்குச் சாகுபடி செய்கிறவர்களின் கதி என்ன ஆகும் ? முப்பது எக்கர் உச்ச வரம்புக்குட்பட்டவர்களை வெளியேற்றலாம். எப்போது, ஆயுசு காலத்தில் அவன் ஆயுசு முடிந்தவுடனே, ஐந்து எக்கர் வரை உடனே வெளியேற்றலாம். அதற்கு மேற்பட்ட விஸ்தீர்ணம் சாகுபடி செய்துகொண்டு இருப்பவன் அவன் ஆயுசு வரைக்கும் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முப்பது ஸ்டாண்டார்டு எக்கராவுக்கு அதிகமாக உள்ள நில குத்தகைக்காரர்களுக்கு என்ன ஆகும். சர்க்கார் நிலத்தை எடுத்துக்கொண்டு அவனை வெளியேற்றப் போகிறார்கள். உடனே அறிக்கை வெளியிட்ட பிறகுகூட சர்க்கார் என்ன திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்பது தயாராக இல்லை. அந்த நிலம் யார் கையில் இருக்கிறது. அவர்கள் கையில்தான் விட்டு வைக்கக்கூடிய நிர்ப்பந்தம் சர்க்காருக்கு ஏற்படும். ஸீலிங்குக்கு உட்பட்ட பிரதேசங்களில் குடியானவர்கள் நிலம் இழக்க வேண்டும். ஸீலிங் ஏரியாவுக்கு அதிகமாக இருக்கக் கூடிய சாகுபடி குடியானவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடிய நிலை ஏற்படும். லட்சியம் என்ன, சாகுபடி செய்யக்கூடிய குடியானவர்கள் இன்றைக்கு அவர்கள் சாகுபடி செய்கிற நிலத்தை சொந்தமாக்குவது, கிராம சமுதாயத்தின் அந்தஸ்தை உயர்த்துவது. நான் கற்பனை செய்யவில்லை. திட்டத்தின் குறிக்கோளில் இருக்கிறது. இது அந்தஸ்தை உயர்த்துமா அல்லது விவசாய உற்பத்தி பெருகுமா. இந்த இரண்டு விஷயங்களை யோசனை பண்ணிப் பாருங்கள். ஆயுசுவரைக்கும் குடியானவனுக்கு என்ன அக்கறை இருக்கும். நாளைக்குச் செத்துப்போனால் என்ன அபிவிருத்தி செய்ய முடியும். குடியானவனை உற்சாகப்படுத்த இதுதானா வழி. உற்பத்தி பெருக இதுதானா வழி. அதற்குப் பதிலாக கிராமப்புறத்தில் என்ன ஏற்படும். இந்த மசோதா அமுலுக்கு வந்தால் கிராமப்புறங்களில் 30 ஸ்டாண்டார்டு எக்கராவுக்கு அதிகமாக வைத்து இருக்கக்கூடிய 150, 200 எக்கர் வரைக்கும் வைத்து இருக்கக்கூடிய பல நிலப் பிரபுக்கள் கையில் நிலம் போகும். ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலம் இழப்பார்கள். விவசாயத் தொழிலாளர்களாக மாறுவார்கள். கூலிக்கு வேலை செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். அவர்களுக்கு நிலம் கொடுத்து இன்னும் அதிகமாக உற்சாகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கான நிலைமை ஏற்படாது. இன்னும் ஸீலிங் வைப்பதிலும், 100 பஸ் ஒரு முதலாளிக்கு ஓடினால், அதில் வரக்கூடிய வருமானம் இருக்கிறது. அதற்கு மேல் கன்னியாகுமரி ஜில்லாவில் 400 எக்கர் அல்லது 300 எக்கர், அதைத் தோட்டம் என்று சொல்லி சாகுபடி செய்ய முடியும். அப்படி இல்லாவிட்டாலும் குடும்பத்தில் இருக்கிற 5, 6 பேர்களைப் போட்டு, உச்சவரம்பிலிருந்து பாதுகாக்க முடியும். பஸ் முதலாளிகள், தோட்ட முதலாளிகள், மில் முதலாளிகள் இவர்களுக்கு ஏன் இதில் விதி விலக்கு கொடுக்க வேண்டும். இந்தச் சொத்து அல்லாது மற்றத் தொழில்களை வைத்துக் கொண்டு லாபம் சம்பாதிக்கும் இவர்கள் விஷயத்தில் இந்த நிலத்தைப் பிடுங்கி குடியானவர்களுக்குக் கொடுப்பதால் என்ன ஒரு ஆபத்து வந்துவிடும். அதற்குப் பதிலாகக் குடியானவர்கள் உற்சாகமாக வேலை செய்ய முடியும். கடைசியாக அகப்பட்டது யார், 30 எக்கருக்கு நிலம் வைத்து இருக்கக் கூடிய சில நிலச்சுவான்தார்கள் நல்ல சாமர்த்தியமாக எழுதி வைக்கத் தவறியதும், வேறு பிழைப்பு இல்லாதவர்கள், அப்பேர்ப்பட்டவர்களுக்கு இந்தப் பாதகம் ஏற்படும். ஆனால், தோட்ட முதலாளிகள், பஸ் முதலாளிகள், மில் முதலாளிகள், எத்தனை எக்கர் வேண்டுமென்றாலும் வைத்துக் கொண்டு சாமர்த்தியமாக நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அப்பேர்ப்பட்டவர்கள் காங்கிரசுக்கு தேர்தலின்போது அவசியம் அவர்களை நம்பியிருக்கிறது. எனவே, அவர்



களை மிரட்ட பயப்படுகிறார்கள் என்பது என் அபிப்பிராயம். இன்னும் இந்தக் கல்வி மானியம் சம்பந்தப்பட்ட முறையில், கல்விக்காக தர்ம சொத்துக்கள் எழுதி வைத்திருந்தால், அவைகள் எவ்வளவு எக்கரா வேண்டுமானாலும் இருக்கலாம். அந்த விதிவிலக்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை. நான் முன்னே சில உதாரணங்கள் சொன்னேன். எப்படிக் கல்விக்காக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்று, நம் சட்டத்தில் கல்வியின் வியாஞ்ஞானம் என்ன, வாசகசாலைக்கு எழுதி வைத்திருந்தால்கூட சமுதாயக் கல்வி, லைப்ரரிக்கு எழுதி வைத்தாலும் சமுதாயக் கல்வி ஆகிவிடுகிறது. இப்படி ஒரு படிப்பகம் திறந்து வைத்து, பாடசாலையை திறந்து வைத்துவிட்டு, சில மடாதிபதிகள் பல நூற்றுக்கணக்கான எக்கர்களைத் தங்கள் பெயரில் எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சில முதலாளிகளும், **trust** ஐந்து வருஷ காலத்தில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். தர்ம சொத்து என்று பாதுகாத்துக் கொள்ளலாம் என்று சொல்லிக் கல்வியின் பெயரால் சிலர் சுரண்டுவதை நாம் அனுமதிப்பது இல்லை. அனுமதிக்கக் கூடாது என்பது கொள்கை. ஆனால் கல்வியின் பெயரால் இவ்வளவு சொத்து, சமுதாயத்துக்குப் பொதுவான நிலத்தை வைத்துக்கொண்டு சுரண்டுவதற்கு இடம் அளிக்கக்கூடிய வகையில், ஏன் அனுமதிக்க வேண்டும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தர்ம சொத்துக்கு எப்படி எல்லை வைத்துக்கொண்டு அதற்கு மேல் உள்ள சொத்தை எடுத்துக்கொள்வது, அதற்கு ஈடாக சர்க்கார் பூஜைக்குச் செலவு கொடுப்பது என்பது திட்டம் இருக்கிறதோ, அதே போன்று கல்வி சம்பந்தமான எல்லாச் சொத்துக்களையும் அரசாங்கமே எடுத்துக்கொள்வது, விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பது. கல்விக்காக இன்ன, இப்படி என்று வரையறை செய்து, அந்தச் செலவுத் தொகையை அந்த ஸ்தாபனத்துக்குக் கொடுத்து விடுவது என்று சொன்னால்தான் ஏதாவது கொஞ்சமாவது கிராமப்புறத்தில் நிலம் கிடைக்கும். எந்த வகையில் பார்த்தாலும் ஸீலிங்குக்கு உட்படுத்துவது துர்லபம். கல்விக்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து கிடைப்பது துர்லபம். சாகுபடி செய்யக் கூடிய குடியானவர்களுக்கு நிலம் கொடுப்பதுதான் லட்சியம், திட்டம் என்று எழுத்து மூலம் சொல்லி, இந்தச் சபையின் முன்பு வாக்குறுதி கொடுத்து, தேர்தல் காலத்தில் மக்கள் முன் நேரில் வந்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார்களா என்று பார்த்தால் அந்த வாக்குறுதிகளைப் புறக்கணித்து விட்டு, விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றி அந்த நிலத்தை நிலச்சுவான்தார் கையில் கொடுப்பதற்காக உள்ள ஒரு திட்டம். இதனால் விவசாய உற்பத்தி பெருகாது. இந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களை ஊன்றிக் கவனித்தால், ஐந்து வருஷ காலமாக இந்தச் சட்டத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த விவசாயிகள் ஆத்திரம்தான் அடைவார்கள். இந்தச் சட்டத்தின் காரணமாக விவசாய உற்பத்தி பெருக கவனம் செலுத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் மக்கள் இந்த சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது வந்திருக்கிற முறையில் இது நிலச் சீர்திருத்தம் அல்ல, அதற்குப் பதிலாக நிலப் பிரபுக்களை பாதுகாக்கக் கூடிய ஒரு சட்டமாக இது அமைந்திருக்கிறது. ராணுவத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற அம்சத்தைப் பார்க்கலாம். அவர்கள் ராணுவத்திலிருந்து டிஸ்சார்ஜ் ஆன பிறகு 30 ஸ்டாண்டார்டு எக்கர் வரையில் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம். இது சின்ன ராணுவ அதிகாரிகளுக்கு மட்டும் இல்லை. பெரிய ராணுவ அதிகாரிகளும் ராணுவத்திலிருந்து திரும்பி வந்தாலும் அவர்களும்தான் லாபம் அடையப்போகிறார்கள். சாதாரண விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்களால் விவசாயத்தை சரிவர பார்த்துக்கொள்ள முடியும். ஐந்து அல்லது 10 எக்கரா வைத்திருக்கின்ற ஒரு குடியான குடும்பத்தைச் சேர்ந்தவர் ராணுவத்திற்குப் போய் இருந்தால் அப்படிப்பட்டவர்கள் திரும்பி வந்து, அதை எடுத்துக்கொள்ள பாதுகாப்பு இருப்பது அவசியம். தற்காலம் வரையறை இல்லாமல் இருக்கிறது. 1,000, 2,000 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய ராணுவ அதிகாரிகளுக்கு பென்ஷன் இருக்கும், மற்ற அந்தஸ்தும் இருக்கும். அவர்

களும் வந்து 30 ஸ்டாண்டார்டு ஏக்கராவை எடுத்துக்கொள்ளலாம் என்ற இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும், இந்தச் சட்டத்தினால் ஏதாவது அனுகூலம் கிடைக்கிறதா என்று பார்த்தாலும், இந்தச் சட்டத்திலுள்ள ஷரத்துக்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்தாலும், இந்த மசோதாவானது விவசாயிகளுடைய கையில் இருக்கின்ற நிலத்தைப் பிடுங்கி 30 ஸ்டாண்டார்டு ஏக்கராவுக்கு குறையாமல் நிலப் பிரபுக்கள் கையில் கொடுக்கவும் கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட நிலப்பிரபுக்களின் கூட்டத்தைப் பெருக்கவும் செய்யப்படும் ஒரு அரசியல் சூட்சியே தவிர இது ஒரு நிலச் சீர்திருத்தம் அல்ல என்று பச்சையாகப் பேசவேண்டியிருப்பதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதால் இது திட்டக் கமிஷனின் சிபார்சுக்கு முரணானது, மேலும் காங்கிரசின் கராச்சித் தீர்மானத்தின் நோக்கமும், இது அல்ல. இந்த லட்சியங்களை எல்லாம் காற்றில் விட்டுவிட்டு இந்த மசோதாவைத் தைரியமாக இந்தச் சபைமுன் சொல்லிவிட்டு என்ன சொல்கிறார் அமைச்சர் என்றால், நான் பெரிய புரட்சி செய்துவிட்டேன் என்று சொல்லுகிறார். ஆனால் அவர் புரட்சியுடன் சம்பந்தப்படாதவர், சாதாரணமாக எல்லோருடனும் சேர்ந்து சிரித்துக்கொண்டு காரியத்தை நடத்திக்கொண்டு போகக் கூடிய சாமர்த்தியசாலியான அவர் புரட்சியைப் பற்றிப் பேசுகிறார். அது ஒரு சிகப்புப் புரட்சி அல்ல, வெண்மையான புரட்சி என்று சொல்கிறார். இப்படிப் பேசி ஜனங்களை தம் பக்கம் ஆகர்ஷிக்கலாம் என்று பார்க்கிறார். புரட்சியில் இரண்டு வகை உண்டு. அவை இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல. பிரஞ்சுப் புரட்சிக் காலத்திலிருந்து White terror, Red terror என்று இருவகை உண்டு. முதலில் விவசாயிகள் ஒன்று சேர்ந்து நிலப் பிரபுக்களையும், அரசர்களையும் எதிர்த்து யுத்தமே நடத்தி இருக்கிறார்கள். இதை red terror என்று வர்ணித்து இருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் அவர்கள் தோல்வி அடைந்த பிறகு இந்த விவசாயிகளைப் பிடித்து நிலப் பிரபுக்கள் சித்திரவதை செய்து தண்டித்து இருக்கிறார்கள். இதற்கு white terror என்று பெயர். அதாவது நிலப் பிரபுக்களின் கொடுமைக்கு white terror என்று பெயர். சமீப காலத்தில் நடந்த புரட்சியைப் பார்க்கலாம். ரஷியாவிலும் புரட்சி நடந்தது. இதில் செம்படை வீரர்களுக்கும் வெண்மைப் படை வீரர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்று போராடியவர்களுக்கு செம்படை வீரர் அல்லது red guards என்று பெயர். வெண்மைப் படையினர் அல்லது white guards என்பவர்கள் நிலப்பிரபுக்களின் பக்கம் இருந்து போராடியவர்களின் பெயர். இது சரித்திரத்தில் இருக்கிறது. ஆகவே வெண்மைப் புரட்சி என்பது நிலப் பிரபுக்களின் புரட்சி. அப்படிப்பட்ட ஒரு புரட்சியை இங்கு செய்திருப்பதாக அமைச்சர் சொல்லுகிறார். விவசாயிகளிடம் இருக்கும் நிலத்தைப் பிடுங்கி நிலப் பிரபுக்களிடம் கொடுப்பது வெண்மைப் புரட்சி என்பதை உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாத அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இது, விவசாயிகளை ஒடுக்குவதற்கான சட்டம் இது. ஆகவே இது புரட்சி அல்ல புரட்டு என்று சொல்ல விரும்புகிறேன்.

**Sri N. MAHALINGAM**: On a point of order, Sir. புரட்டு என்றால், "lie" என்று பொருள். Is it parliamentary to say "lie" in this House?

**Sri M. KALYANASUNDRAM**: புரட்டப்படுவது புரட்டு.

**Mr. SPEAKER**: The word 'lie' has been uttered in this House in the past. Therefore there is nothing wrong.

**Sri M. KALYANASUNDARAM**: நான் சொல்லுகிற வார்த்தையைக் கண்டு அங்கத்தினர் அவர்கள் கோபப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இருக்கிற உண்மையைச் சொல்லுகிறேன். இதற்கு வெண்மைப் புரட்சி என்று எப்படிப் பேர் சூட்டினார்கள் என்பதை சரித்திர அடிப்படையில் எடுத்துக் காட்டி விளக்கினேன். ஆகவே இந்த மசோதா அமுலுக்கு வந்தால், இந்த மசோதாவின் மூலம் விவசாயிகளுக்கு நன்மை கிடையாது.



**Mr. SPEAKER**: The hon. Member will please finish his speech in five more minutes.

**Sri M. KALYANASUNDARAM**: ஆகவே, ceiling 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவுக்கு மேல் இருக்கக்கூடாது. சட்டத்தின் ஷரத்துக்கள் தெளிவாக இருக்க வேண்டும். நிலப் பிரபுக்களுக்கு ஒரு விளக்கமும், விவசாயிகளுக்கு ஒரு விளக்கமும் கொடுக்கும்படி இருக்கக் கூடாது. ராணுவத்தில் இருக்கின்றவர்களுக்கு விதி விலக்கு அளிக்கும் விஷயத்தில் 500 ரூபாய்க்கு உட்பட்டுச் சம்பளம் வாங்குவோருக்குத்தான் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டம் Select Committeeக்கு முன் போக இருக்கிறது. அங்கு இந்தச் சட்டம் சரிவரத் திருத்தப்பட வேண்டும். Select கமிட்டியில் எதிர்க் கட்சிகளில் இருந்து அதிகமான மெம்பர்களைப் போட வேண்டும். என்று விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியிலிருந்து இந்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசிய மெம்பர்களை இந்தக் கமிட்டியில் போடக் கூடாது. மற்றும் நிலச்சீர்திருத்தத்தில் நம்பிக்கை இருக்கின்றவர்களைத்தான் போட வேண்டும். என் கட்சி இதில் சேர்ந்து ஒத்துழைப்பதா இல்லையா என்று ஆலோசனை செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சேர்ந்து ஒத்துழைப்பது என்று நான் தீர்மானித்திருக்கிறேன். இந்த நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிட்டி செய்திருக்கின்ற சிபார்சுகள் எல்லாவற்றையும் இந்த ceiling சம்பந்தமாக கொடுக்கப்பட்டு இருக்கின்ற விவரங்களையும் தனியாக அச்சடித்து ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றப்படி மற்ற ராஜ்யங்களில் செய்யப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. Planning Commission-ஆல் செய்யப்பட்டிருக்கின்ற சிபார்சுகளையும் அச்சடித்து ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும். இந்த ராஜ்யத்தில் இருக்கும் 11-30 a.m. நிலத்தின் கணக்கு என்ன என்பதை எல்லா அங்கத்தினர்களுக்கும் கொடுக்க வேண்டும். இதைப் படித்துத்தான் இதிலே அடிப்படையான மாறுதல் செய்தாக வேண்டும். நண்பர் ஸ்ரீ நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசியபோது சிரசாசனம் செய்வது போல் இருக்கிறது என்று இந்த மசோதாவைக் குறித்துச் சொன்னார்கள். இது போல் இந்த மசோதாவில் முதல் பிரிவைத் தவிர, மற்ற எல்லாப் பிரிவுகளையும் மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்பொழுதுதான் இதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை வரும். அந்த முறையில் செலக்ட் கமிட்டி செய்வதானால் என் கட்சி சார்பாக நான் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER**: I think the Member himself should get all the records from the Government.

**Sri M. KALYANASUNDARAM**: இங்கு நாங்கள் சொன்னதின் நோக்கம் கவர்மெண்டில் இருந்து வரவேண்டியிருப்பது என்பதற்காகத்தான். அதையும் கேட்டுக்கொண்டிருப்பேன். "அப்படி ஒரு அங்கத்தினர் கேட்கிறார். ஆகையால் அவற்றை உடனே அனுப்பவேண்டும்", என்று சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு காரியாலயம் சம்பந்தமாக அனுப்பப்பட வேண்டும் என்பதற்காகத்தான் பகிரங்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER**: கனம் அங்கத்தினர் கமிட்டியிலே இருந்தால் கட்டாயமாக தலைவரைக் கேட்டுக்கொள்ளலாம்.

**Sri M. KALYANASUNDARAM**: எனக்கு மட்டும் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை, எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

***Sri V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் சபாநாயகர் அவர்களே, நிலவுடமைக்கு உச்சவரம்பு விதித்து கொண்டுவரப்படயிருக்கும் மசோதாவைப்பற்றி சுமார் நான்கு தினங்களாக அங்கத்தினர்களால் பேசப்பட்டு வந்தது. முதல் முதல் ஆரம்பத்திலே என் அபிப்பிராயத்தைச்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [20th April 1960

சொல்லவேண்டுமென்றால் இதை முழுமனதுடன் எதிர்க்கிறேன் என்றுதான் சொல்லவேண்டும். அதனுடைய காரணத்தை எல்லாம் பின்னால் வரிசையாக சொல்ல விரும்புகிறேன் என்று பணிவுடன் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக ஆளும் கட்சியில் இருப்பவர்களில் அனேகம் பேர் இதற்கு எதிராக பல வார்த்தைகள் சொன்னார்கள். முக்கியமாக என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால் இதற்கு சீக்ரட் ரகசிய பாலட் வைத்து இதை ஆதரிப்பவர்கள் யார், எதிர்ப்பவர்கள் யார் என்று பார்த்தால் அனேகமாக எதிர்ப்பவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏதோ கொரடாவுக்கு கட்டுப்பட்டு கட்சி சார்பாக கண்டிப்பாக ஓட்டுக்கொடுத்தாக வேண்டும் என்ற மனப்பான்மையுடன் அநேகம் பேர் ஓட்டுக் கொடுக்கலாம். இருந்தாலும் சிலர் இதில் உள்ள சில ஊழல்களை எல்லாம் எடுத்து எதிர்த்து பேசினார்கள், அவர்களை நான் பாராட்டுகிறேன்.

முக்கியமாக இந்தச் சபையில் 207 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 5, 6 பேர்கள் மட்டும் எதிர்த்து பேசுவதென்றால் பார்ப்பதற்கு ஒரு ஆச்சர்யத்தைத்தான் உண்டுபண்ணுகிறது. அதன் காரணங்கள் பின்னால் ஒவ்வொன்றாக சொல்லுகிறேன். எப்படி இந்த சட்டத்தினால் மக்களுக்கு நன்மை விளைவிக்கப்போகிறது, பொருளாதாரத் துறையில் மக்கள் எப்படி முன்னேறப்போகிறார்கள் என்று எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு நிலம் இல்லாதவர்களிடத்திலும், சிறிய விவசாயிகளிடத்திலும், ஏழை மக்களிடத்திலும் அன்பு எவ்வளவு இருக்கிறதோ அதைவிட 10 மடங்கு அன்பு எனக்கு உண்டு என்பதை நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. எனக்கும் அவர்களுடைய முன்னேற்றத்தில் ஆர்வம் உண்டு. நாங்கள் அவர்களுக்கு எவ்வளவோ செய்வதற்குத் தயாராய் இருக்கிறோம். இந்த மசோதாவை எதிர்த்து இதிலே சில குற்றம் குறைகள் சொல்லுவதன் காரணமாகத்தான் ஏதோ நிலச்சுவாந்தார்களுக்காகப் பரிந்து பேசுவதாகவோ அல்லது ஏழைகளுக்கு நிலம் கிடைக்கக்கூடாதென்று சொல்வதாகவோ யாரும் நினைக்கக் கூடாது. இம்மாதிரி மக்களிடையே பொய்ப்பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். எப்படியென்றால் நிலம் இல்லாதவரைப் பார்த்து எல்லோருக்கும் ஒரு ஆசை வார்த்தை சொல்லி லட்சக்கணக்கான நிலங்களை எல்லாம் எடுத்து விநியோகம் செய்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப்போவதாக பொய் பிரசாரம் செய்துவருகிறார்கள். இது தவறான காரியம் என்று முதலாக சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவினால் விவசாயிகளின் பொருளாதாரம் சீர்குலைந்து போகும் என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். தவிர அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை இதனால் கண்டிப்பாக பாதிக்கும். **The fundamental right to hold property should be r spected.** நம்முடைய அரசியல் சட்டத்திலே போட்டிருக்கிற அடிப்படை உரிமை பாதிக்கிறது என்றுதான் சொல்லுகிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்கள் நேற்று பேசும்போது அடிப்படை உரிமை பாதுகாக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இது எப்படி பாதிக்கப்படவில்லை என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஆனால் கனம் ரெவினியூ அமைச்சராவது அவர்களுடைய பதில் உரையிலே சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். **This goes against the letter and the spirit of the Constitution and is also discriminatory.** அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் விரோதம் ஆகும். தவிர பாகுபாடுள்ள மசோதாவும் ஆகும். லா ஆப் சக்ஸஷனைப் பார்க்கிறோம். அதாவது வம்சா வழியில் தலைமுறை வாரியாகத் தகப்பனுக்குப்பிறகு பிள்ளை என்று வருவதைப் பார்க்கிறோம். அப்படி ஒரு பிரிவினைக்குப் பிறகு ஒரு தலைமுறைக்குப் பிறகு பார்த்தால் நிலங்கள் துண்டு துண்டாக ஆக்கப்பட்டு பழைய நாளில் இருந்த மாதிரி இருக்காது. அனேகமாக நிலங்கள் துண்டு துண்டாகப் போய்க்கொண்டிருக்கும் என்பதைப்பற்றி நான் அதிகமாக சொல்லவேண்டியதில்லை.

தவிர இது பொது நன்மைக்கு உகந்ததா, இந்த விஷயத்தில் இது பொது நன்மைக்கு ஆதரவாய் இருக்கிறதா என்பதைப் பற்றியும் நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டும். ஏதோ யாரோ ஒருவரிடத்தில் இருந்து மற்றவர்



20th April 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

களிடத்தில் போகின்றது என்ற நிலைமையில் அவர்கள் முன்னேற்றம் அடையப் போகிறார்கள் என்று அவர்கள் பிரசாரம் செய்கிறார்களே தவிர வேறு எந்தவிதமான பொது நன்மை இதனால் ஏற்படப்போகிறது என்பதைப் பற்றி சர்க்கார் திட்டவட்டமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். **It is also confiscatory in nature.** கண்டிப்பாக இந்தச் சட்டத்தின் மூலமாக பறிமுதல் தான் ஏற்படுகிறது. ஆங்கிலத்திலே விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமானால் **'It is only to satisfy a doctri1 or dogma'** என்றுதான் சொல்ல வேண்டும். இது தேவையில்லாதது ஒன்று என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக கனம் ஸ்ரீ அண்ணாதுரை அவர்களும் பேசினார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் பேசினார். இவ்வாறு நிலத்தை எப்படிப் பங்கிட்டுக் கொடுப்பது யாருக்குக் கொடுப்பது என்பதைப் பற்றி எல்லாம் நாளது வரையில் சொல்லப்படவில்லை. இதைப்பற்றி ரொம்ப வருத்தப்படுகிறேன். ஆனால் இதை ஆதரித்துப் பேசியவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. எத்தனை லட்சக்கணக்கான ஏக்கர் உபரி நிலம் இந்த மசோதா கொண்டுவருவதன் காரணமாக கிடைக்கப்போகிறது, இதை எப்படி பிரித்துக்கொடுக்கப் போகிறோம் என்பதை திட்டவட்டமாக கனம் அமைச்சர் கண்டிப்பாகச் சொல்லியாகவேண்டும். எப்படி பிரித்துக்கொடுக்கப்போகிறோம், எவ்வளவு நிலம் உபரியாக இருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் இதுவரை ஒன்றுமே சொல்லவில்லை. இதைக் கண்டு நான் மிகவும் வருத்தப்படவேண்டியவனாக இருக்கிறேன்.

லாண்டு ரெவினியூ செட்டில்மெண்ட் பற்றிய அறிக்கை ஒன்று சர்க்கார் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார்கள். இந்தஅறிக்கைப்படி 1957–58 வருஷத்தில் உள்ள புள்ளி விவரத்தைப் பார்த்தால் 250 ரூபாய் கிஸ்தி செலுத்தும் நிலப் பட்டாதார்களின் எண்ணிக்கை 12,737 ஆகும். இதிலே புஞ்சை நிலம் 271,696, நஞ்சை நிலம் 230,682 ஏக்கர்கள் ஆகும். ஆக மொத்தம் 502,378 ஏக்கர்கள் ஆகும். ஒரு ஏக்கரை ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்தாலும், 30 ஏக்கர் என்று விநியோகித்தாலும் 382,110 தான் வரும் என்று தான் நான் உத்தேசிக்க வேண்டியிருக்கிறது. 1957–58 ரிப்போர்ட்டுக்கு அப்புறம் இரண்டு வருடங்களாகிவிட்டது. அதற்குப் பிறகு கிரய விநியோகங்கள், மாற்றி எழுதி வைப்பது இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. ஆக, இவ்வளவையும் எடுத்துப் பார்த்தால் எவ்வளவு மிச்சம் வரும் ? அதை எப்படிப் பங்கிடுவது என்பதைப் பற்றியெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும், அமைச்சர் அவர்களின் பதில் உரையில் இதைப்பற்றி விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் அபிப்பிராயம், பங்கிடுவதற்கு நிலம் கொஞ்சமும் இருக்காது என்பதுதான் என் அபிப்பிராயம். ரெண்டல் இன்கம் என்று சொல்லியிருக்கிறார்கள். ரெண்டல் இன்கம் என்றால் என்ன ? இன்கம் டாக்ஸ் அஸெஸீல் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், பிஸினஸ் எக்ஸைஸ் டாக்ஸ் கொடுப்பவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், இவைகளை எல்லாம் பார்க்க வேண்டும். முப்பது ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இதில் போடப்பட்டிருக்கிறது. நிலங்கள், ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசப்பட்டிருக்கின்றன. ஆகவே, 30 ஏக்கர் என்று சொல்லும்போது, ஜில்லா வாரியாகப் பிராந்தியத்திற்கு பிராந்தியம் அவைகளில் என்ன வருமானம் வரும் என்று சர்க்கார் ஏன் திட்டவட்டமாகச் சொல்லவில்லை என்று நான் கேட்கிறேன். ஆக, பிராந்தியத்திற்கு பிராந்தியம், ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருக்கும்போது, இப்படிப் பிரித்தும், அநேகம் பேர்கள் அதனால் பாதிக்கப்பட மாட்டார்களா ? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் ? அடுத்தபடியாக, **Economic holdings** அல்லது சிக்கனத்திற்கு உட்பட்ட நிலப்பரப்பு. அது எவ்வளவு ? **family of five** என்று வைத்தால் எவ்வளவு வரும் என்று சொல்லவேண்டும். ப்ளானிங் கமிஷனில் குடும்பத்திற்கு 5 பேர், இதைப்பற்றி திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அநேக வித சட்டங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள்.

"efficiently managed farms which consist of compact blocks on which heavy investment or permanent structural improvements have been made and whose break-up is likely to lead to a fall in production."

. . . capital formation will also suffer.

என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பச்சைப் புத்தகத்தில் 16-வது பக்கத்தில் நன்கு பரிபாலிக்கப்பட்டு வரும் பண்ணைகளுக்கு **(efficiently managed farms).** விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று ப்ளானிங் கமிஷன் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதன் காரணமாக இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள், உங்களுக்கு எது சௌகரியமோ அதற்கு ப்ளானிங் கமிஷனை ஆதாரமாகப் பேசுகிறீர்கள். எதெது உங்களுக்கு சௌகரியமாகயில்லையோ அதற்கு ப்ளானிங் கமிஷன் ரெக்கமெண்ட் செய்தாலும் எடுத்துக்கொள்வதேயில்லை. இது ஒரு பரிதாபகரமான நிலையாகும். இன்னொன்று, கம்பல்ஸரி அக்விஸிஷன் என்றும், கன்ஸாலிடேஷன் என்றும் சொல்வது ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. மற்ற ராஜ்யங்களை எடுத்துக்கொண்டால், ஆஸாமில் டெனெண்ட்ஸ் சர்ப்ளஸ் லாண்ட்ஸை வாங்குபவர்களிடம் காம்பன்சேஷன் ஐந்து இன்ஸ்டால்மெண்ட்களாக வாங்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறது. கேரளாவில் அதை 16 தவணைகளில் வாங்கலாம் என்று போட்டிருக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில், "**Lump sum of 20 instalments and 3 per cent interest**" என்று போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் இந்தப் பச்சை அறிக்கையில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. மிச்சமுள்ள நிலங்களை எடுப்பதாகயிருந்தால், காம்பன்சேஷன் கொடுப்பதில் அதை என் உடனடியாகக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். அப்படிக் கொடுத்தால்தான், அநேகம் பேர்கள் பலவித கமிட்மெண்ட்ஸ் உள்ளவர்களுக்கு நன்மைதரும். ஆகவே, உடனடியாக கொடுக்காவிட்டால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். அடமானப்பத்திரம் அண்டிமாண்ட் எழுதிக்கொடுப்பது போன்ற கமிட்மெண்ட்ஸ் இருக்கும். ஆகவே, அவர்கள் குறைகளை எப்படி நிவர்த்தி செய்யப் போகிறார்கள்? அதற்கு ஏதாவது ப்ரொவிஷன்ஸ் இருக்கிறதா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விவரமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். ஐந்து ஏக்கரை வைத்துக் கொண்டே நல்லவிதமான உணவு உற்பத்தியைச் செய்ய முடியுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிலர் சிலவிடங்களில் செய்ய முடியும். ஆனால் எந்த ஆதாரத்தின் பேரில் அமைச்சர் அவர்கள் இதைச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. காம்பன்சேஷன் கொடுக்கும் போது, எலெக்ட்ரிஸிட்டி அண்டர்டேக்கிங்ஸ், எல்.ஐ.ஸி. இவைகளில் மதராஸ் எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பொரேஷன் சில வருடங்களுக்கு முன்பு தேசீயமயமாக்கினார்கள். அப்பொழுது அதற்கு ஒரு கோடி 20 லட்சம் ரூபாய்க்கு விவசாய அமைச்சர் அவர்கள் மராமத்து இலாகா அமைச்சராக இருந்தபோது செக் கொடுத்தார்கள். ஒரேதினத்தில் அது பைசல் செய்யப்பட்டது. அப்படியிருக்க இப்பொழுது மட்டும் எடுக்கப்போகும் நிலங்களுக்கு என் உடனடியாக காம்பன்சேஷன் கொடுக்கக் கூடாது? சர்க்கரை உற்பத்தி பெருக வேண்டும், அதனால் சர்க்கரை ஆலைகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம் என்றெல்லாம் இதில் கூறப்பட்டிருக்கிறது. ஏதோ அரசியல் காரணமாகத்தான் இப்படிச் செய்யப் பட்டிருக்கிறது என்று அநேக அங்கத்தினர்கள் சொன்னார்கள். அப்படித்தான் இருக்குமென்று நானும் நினைக்கவேண்டியவனாயிருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால், அநேகம் பேர்கள் சிறிய விவசாயிகள் எல்லோரும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் 1, 2, 3, ஏக்கர்கள் என்று இப்படியாகப் பட்டாதார்கள் இருந்துகொண்டு அவர்கள் 4,000, 5,000 ஏக்கர் வரையில் சர்க்கரை ஆலைக்கு வேண்டிய கரும்புகளை கொடுக்கவில்லையா? ஆகவே, ஒரு சிலவிடங்களுக்கு மட்டும் என் இந்த விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்கிறேன். கான்ஸ்டிட்யூஷன்படி, ஜமீன் ஒழிப்பு மசோதா மாதிரித்தான் இதுவும் என்று சொல்லப்படுகிறது. ஜமீன் ஒழிப்பிற்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. அதில் இண்டர்மீடியரீஸ்தான் போனார்கள். ஆனால் இந்தச் சட்டப்படி, குடியானவர்கள்



ரொம்பக் கேவலமான ஸ்திதிக்கு, அதுவும் கூலியாட்களாகப் போகும் நிலையில்தான் இந்தச் சட்டம் இருக்கிறதே தவிர ஜமீன் ஒழிப்புச் சட்டத்திற்கும் இதற்கும் ஒருவித ஒற்றுமையும் இல்லை, நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது 30 ஏக்கர் என்றால் அடுத்த தலைமுறையில் இரண்டு தலைமுறைகளில் மூன்றல்லது நான்கு ஏக்கர்களாக அது மாறும். பல வருடங்களாக இதை நம்பி வாழ்ந்து வந்த மக்கள் அநேகம் பேர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. கடைசியில், கூட்டுப் பண்ணைகளில் இவையெல்லாம் போய்ச் சேர்ந்து விடும். அதைத்தான் ஆளும் கட்சியினர் விரும்புகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு எலெக்ஷன் மானிபஸ்டோவிலும் இதுபற்றி சொல்லியிருக்கிறோம் என்று சொல்லுவது தவறு. நிலச்சீர்திருத்தத்தைப்பற்றி சொல்லியிருக்கலாம். ஆனால் உச்ச வரம்பு கட்டப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்களா என்று கேட்கிறேன். அப்படிச் சொல்லவில்லை. அதை முன்பே சொல்லியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த தேர்தலிலாவது சொல்ல வேண்டும். அதுவரையில் இந்த மசோதாவைத் தள்ளிப்போட்டு வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது பின்னால் தோன்றிய யோசனை, இதை முன்பே ஆலோசித்திருக்க வேண்டும். கடன் நிவாரண மசோதா கொண்டு வரப்பட்டது என்று சொன்னால், அது கான்பிஸ்கேட்டரியாகக் கொண்டு வரப்பட்டது, கடன் வாங்கியதன் காரணமாக ஏற்பட்ட கஷ்டத்திற்கு நிவாரணம் ஏற்படுத்துவதற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டது. அதை ஒரு எக்ஸ்ப்ரோபிரியேட்டரி மெஷராக சொல்ல முடியாது. ஒருவர் கடன் பட்டிருக்கிறார் என்றால், அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற வட்டி அவர் வாங்கியிருந்த அசலைவிட அதிகமாயிருந்தால், அதற்கு எல்லாம் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் கொண்டு வரப்பட்டது; அதல்லாமல், பூரா கடனையும் விட்டு விடவேண்டும் என்று எப்போதும் அதில் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது சில பகுதிகளுக்கு காம்பன்ஸேஷன் இல்லாமல் எக்ஸ்ப்ரோப்ரியேட்டரி மெஷராக கொண்டு வரப்பட்டதுதான் அந்தச் சட்டங்கள் எல்லாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகவே இந்தச் சட்டம், நான் முன்னே சொன்னதுபோல் ஒரு அரசியல் நோக்கத்தோடு தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலால், கூட்டுறவு பண்ணையை பற்றி அமெரிக்காவில் எப்படியெல்லாம் இருக்கிறது என்பதைப்பற்றி நேற்று விவசாய அமைச்சர் அவர்கள் பேசினார்கள், அதற்கு இன்று ஏதோ திருத்தமும் கொடுத்தார்கள்.................

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் கூட்டுறவுப் பண்ணையைப்பற்றி குறிப்பிடவில்லை, கூட்டுறவு சாதனங்களைப்பற்றித்தான் பேசினேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: அது எப்படியிருந்தாலும் நானும் டென்மார்க்கு சென்றிருந்த போது பார்த்தேன், அங்கும் கூட்டுறவுப் பண்ணைகள் நடத்தப்படுகின்றன. ஒரு ஊரை எடுத்துக்கொண்டால், அந்த ஊரிலுள்ள ஐந்தாறு பேர்கள் அல்லது பத்துப் பதினைந்து பேர்கள் ஒன்று சேருவார்கள், அவர்கள் அந்த ஊரில் முக்கியமானவர்களாக இருப்பார்கள். இதில் முக்கியமாக ஒன்று சேர்வதைத் தவிர ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவுக்குக் கூடுதலாக எந்தவிதமான இடமும் இருப்பதில்லை. இவ்விதம் ஒன்று சேர்ந்திருக்கின்ற இவர்களில் ஒருவர் குறைந்த வட்டிக்குப் பணம் கடனாகக் கொடுப்பார், ஒருவர் பண்ணையை மேற்பார்வை பார்த்துக்கொள்வார், ஒருவர் கணக்குகளைப் பார்த்துக்கொள்வார், இம்மாதிரிதான் அங்கெல்லாம் கூட்டுறவுப் பண்ணை நடக்கின்றது. ஆனால் இங்கு நடப்பதைப் பார்த்தால், கூட்டுறவுப் பண்ணை அமைப்பதாக சொல்லிக் கொண்டு, அதில் பல உத்தியோகஸ்தர்களைப் போட்டு அமைச்சர்களும், சர்க்காரும் இதில் தங்களுக்கு வேண்டிய சாதனைகளையும், இதில் அரசியல் நோக்கத்தோடு நிறைவேற்றக்கூடிய அளவில் இங்கு கூட்டுறவு பண்ணை

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [20th April 1960

நடத்தப்படுகிறதே ஒழிய நல்ல நோக்கத்தோடு இங்கு கூட்டுறவு பண்ணை நடத்தப்பட்டு வருகிறது என்று சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை. சில பிராந்தியங்களில் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு சரிவர நடக்காமல் இருந்து வருகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் திட்டக்கமிஷனின் கொள்கையைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். நேற்று ஆளும் கட்சியிலுள்ள கனம் மகாலிங்கம் அவர்கள் சொன்னார்கள், அதாவது திட்டக்கமிஷன் மெம்பர்களே, 3,000 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு, இதற்கு மட்டும் குறைவாக வருமானத்தை போட்டிருக்கிறார்கள், இம்மாதிரிப்பட்டவர்கள் பொறுப்போடு கிராமத்திலுள்ளவர்களின் நிலையைப்பற்றி ஆலோசித்தார்களா ? விவசாயிகளின் நிலைமையைப்பற்றி யோசித்தார்களா என்று எல்லாம் சென்னார்கள். இது ரொம்பவும் உண்மையான சமாசாரம். திட்டக் கமிஷனிலுள்ளவர்கள் கிராமத்திலுள்ளவர்களின் நிலைமையைப் பார்த்து, எந்த முறையில் சட்டம் கொண்டு வந்தால் அவர்கள் நன்மையடைவார்கள் என்று பரிசீலனை செய்தவர்கள் அல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமும். தவிர இந்தச்சட்டத்தின் கீழ் அநேக விதமான ஊழல்கள் ஏற்படுவதற்கு வழியிருக்கிறது. இதைப்பற்றி பொறுக்குக் கமிட்டியில்தான் நன்றாக பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். முதலில் எங்களைப் பொறுத்தவரையில், இந்த மசோதாவை ஆட்சேபிப்பதால், பொறுக்கு கமிட்டியில் இருக்க வேண்டாம் என்றுதான் ஆலோசித்தோம். பின்னால் இதைப்பற்றி ஆலோசித்துப் பார்த்ததில் பொறுக்கு கமிட்டியில் இருந்தால்தான் உபயோககரமான சில திருத்தங்களைச் செய்யலாம் என்று நினைத்து நாங்களும் இந்தப் பொறுக்கு கமிட்டியில் இருக்கவேண்டும் என்று ஆலோசித்து இருக்கிறோம். மேலும் இதில் காம்பென்ஸெஷன் கொடுக்கும் விஷயத்தில், 9-லிருந்து 10 மடங்கு வரை **net annual income according to the size** என்ற முறையில் போடப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் எட்டிலிருந்து 12 சதமானம் வரை கட்டும் என்று சொல்லுகிறார்கள். நான் ஒரு விவசாயிதான். மூன்று சதமானத்திற்கு மேல் எங்குமே கட்டாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றியும் நன்றாக யோசிக்கவேண்டும். மேலும் நான் முன்னால் சொன்னதுபோல, நிலம் எடுக்கப்பட்டால் காம்பன்ஸேஷனும் உடனே கொடுக்க வேண்டும். மேலும் நியாயமான காம்பென்ஸேஷன் கொடுக்கவேண்டும். அதற்குக் கொடுக்கப்படும் பணத்தை பான்ட்டாகக் கொடுக்கக்கூடாது என்பதை மறுபடியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலங்கள் எல்லாம் பலர் மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் வாங்கியிருக்கிற நிலங்கள்தான். ஒரு சில இடங்கள்தான் பலருக்குச் சுலபமாக கிடைத்திருக்கும். ஆகவே இந்த நிலங்களை எல்லாம் எடுத்துவிடுவது என்பது சரியல்ல. தவிரவும், 57-வது 58-வது செக்ஷனைப் பார்த்தால், ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. இந்த செக்ஷனை அமுல் நடத்தும்போது பலவிதமான ஊழல்கள் ஏற்படுத்துவதற்கு வழி இருக்கிறது. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் நன்றாக யோசித்துப் பார்த்து திருத்தி அமைப்பதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

9-வது அத்தியாயத்தை எடுத்துக்கொண்டால் எந்தவிதமான உத்தரவு இருந்தாலும் எவிக்ஷன் செய்ய முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை கோர்ட் உத்தரவு இருந்தால் என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை. அப்போதும் பலவிதமான கோளாறுகள் ஏற்படுவதற்கு இதில் வழிகள் இருக்கின்ற என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி ஒவ்வொரு செக்ஷனைச் சொல்லிக்கொண்டே போனால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் குறுகிய காலத்திற்குள் இவைகளை எடுத்து சொல்லிவிட முடியாது. ஆகவே நான் அவைகளை எல்லாம் சொல்ல இப்போது தயாராகவில்லை. இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் முப்பது ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு இருக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சேர்ந்திருக்கிற ஒரு குடும்பத்தில் தகப்பனுக்குத் தனியாக இருக்கிற சொத்தை நாலைந்து வருடங்களுக்குப் பின்னால் பிரித்துக்கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நிலைமை என்னவாய் இருக்கும்? அல்லது இவ்விதம் உச்சவரம்பு கட்டின பிறகு,



20th April 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அந்தக் குடும்பத்திலுள்ள தகப்பன் இறந்து விட்டால் அந்தச் சொத்து யாருக்குப் போகும் என்று இதில் சொல்லப்படவில்லை. (கனம் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு : தகப்பன் சொத்து பிள்ளைக்குத்தான் சேரும்) அப்படியானால் அதைப்பற்றியும் இதில் தகப்பனது 30 ஏக்கர் எப்படி போகும் என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். இரண்டு பிள்ளைகளாக இருந்தால் எவ்விதமெல்லாம் போய்சேரும் என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாகச் சொல்லவேண்டும். அதோடு முக்கியமாக குடும்பத்திலுள்ள சொத்தை, ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய சொத்தை வைத்துக்கொள்ளலாம் என்றோ, அல்லது இவ்வளவுதான் ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ள வேண்டும் என்றோ திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். பெண்கள் சொத்தைப் பொறுத்தவரையில் ஏதாவது ஸ்திரீதன சொத்திற்குக்கூட சிறிதளவு விலக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, கிரயம் முதலிய பத்திரம் எழுதும் விஷயத்தில், இந்தச் சட்டம் இம்மாதம் 6-ந்தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது என்று வைத்துக்கொண்டால், ஐந்தாம் தேதி எழுதி வைத்து, பின்னால், இதில் சம்பந்தப்பட்ட ஒருவர் இறந்து போனார் என்றோ அல்லது வேறு ஏதாவது தவிர்க்க முடியாத காரணத்தினாலோ அன்று தானே ரெஜிஸ்டர் செய்யப்பட்டால் பின்னால் ரெஜிஸ்டர் செய்து கொள்வதற்கு வழியிருக்கிறது. இதற்காக நான்கு மாதம் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் பிரகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தால் இப்போது நாம் கொண்டு வந்திருக்கும் சட்டத்திற்கும் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டுக்கும் ஏதாவது முரண்பாடு ஏற்படாதா என்பதையும் நாம் ஆலோசித்துப்பார்க்கவேண்டும். முன்பே ஏற்பாடு செய்து வாலிட் கான்ட்ராக்ட் செய்து அதற்காக ரூபாயும் கொடுக்கப்பட்டு இருந்தால் என்ன செய்வது, இதைப்பற்றி நன்றாகப் பரிசிலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

தேவஸ்தானம் நிலங்களைப்பற்றியும் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். முக்கியமாக இதில் கோவில்களுக்கு 200 ஏக்கர்கள் இருக்கலாம் என்று விதிவிலக்கு செய்யப்பட்டிருக்கிறது. அறநிலையப் பாதுகாப்பு இலாகாவினர், இந்த நிலங்களையெல்லாம், அதாவது கோவில் சொத்துக்களையெல் 12 noon. லாம் பாதுகாத்து வருகிறார்கள். இங்கேயும் உபரியாகக் கிடைக்கும் நிலங்களை சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. கூட்டுப் பண்ணை வைக்கப்போகிறார்களா ? இப்போதுள்ள பண்ணைகள் சரியாக நடக்காததால் அந்தப் பண்ணைகளின் நிலங்களை விவசாயிகளுக்கு வினியோகித்தோ குத்தகைகாரர்களிடம் ஒப்படைத்தோ அவைகளை சாகுபடிக்குக் கொண்டுவரப் போவதாக கனம் விவசாய அமைச்சர் சொன்னார்கள். இப்போது இந்த தேவஸ்தான நிலங்கள் குத்தகைக்குத்தான் விடப்பட்டு வருகின்றன. அவைகள் ஏன் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைதாரர்கள் நல்ல முறையில் அவைகளில் சாகுபடி செய்து வந்தால் தடுக்கவேண்டும்? அந்த நிலங்களை சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள் என்பதையெல்லாம் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். தவிரவும். ஸ்பெஷிபிக் எண்டோமெண்ட்ஸ் இருக்கின்றன. குறிப்பாபிட்ட குறிக்கோளுடன் சிலர் நிலங்களை இந்த ஸ்தாபனங்களுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த மசோதாவிலுள்ள ஷரத்தினால் அந்த நிலங்கள் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். இந்த மசோதாவில் 'எஜுகேஷனல் ட்ரஸ்டு'க்கு எக்ஸெம்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் கண்டிப்பாக ஆட்சேபிக்கிறேன். இதன் காரணமாக அனேக பிரச்னைகள் எழுகின்றன. இவைகளில் எவ்வளவோ லாபம் கிடைக்கிறது. பஞ்சாயத்துக்களில் எஜுகேஷனல் ட்ரஸ்டுகள் எழுதப்பட்டு ட்ரஸ்டுகளுக்குப் போதுமான பணம் கிடைப்பதில்லை. ஒரு ட்ரஸ்டுக்கு சுமார் 50,000 ரூபாய் கிடைக்கும் என்றால் அதைப் பூராவையும் ட்ரஸ்டே உபயோகிப்பதில்லை. எழுதிவைத்தவர்களோ அவர்களைச் சேர்ந்தவர்களோ அவர்களுடைய சந்ததியார்களோ அங்கே இருந்துகொண்டு எவ்வளவோ பணத்தை வேறு விதமாக உபயோகிக்கிறார்கள். எனவே இதற்கென ஒரு கமிட்டி போட்டு சர்க்காரே இவைகளைப் பரிபாலித்து வர வேண்டும் என்பதுதான் என் தாழ்மையான அபிப்பிராயம். இவைகளுக்கு விதி விலக்குக் கொடுக்கவேண்டாம் என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [20th April 1960

இந்த மசோதாவில், ஸ்ரீதனம் நிலங்களைப் பொறுத்தவரையில், பெண்களுக்கு உரிமைகள் அளித்திருப்பதில், கல்யாணமான பெண்கள், கல்யாணமாகாத பெண்கள் இவர்களிடையே பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பாகுபாட்டை நீக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த மசோதாவில் ஸெக்ஷன் 4 (3)-ல் "**In calculating the extent of land held by an individual person or by a family, the shares of such person or of the members of the family, as the case may be, in the lands held by a company, co-operative society, firm or other body of individuals . . . shall be taken into account.**"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இந்தியன் பாங்குக்காரர்கள் அனேக பிராந்தியங்களில், அவர்களுக்குச் சேர வேண்டிய பாக்கிகளின் காரணமாக நிலங்களை ஏலத்தில் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கேஸ்களில், ஒவ்வொரு ஷேர்ஹோல்டருக்கும் நிலங்களில் ஒரு பங்கு கொடுக்கப்போகிறீர்களா ? நிலங்களை எப்படிப் பிரிக்கப் போகிறீர்கள் என்பதையெல்லாம் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதாவில், இன்டிவிஜுவல் ஏஜென்ஸி, அபிஷியல் ஏஜென்ஸி இந்த மாதிரி பலவிதமான அமைப்புகளுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஷுகர் பாக்டரி போர்டு, லாண்ட் போர்டு இவைகளை அமைப்பதற்கு இதில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த போர்டிலெல்லாம் கண்டிப்பாக பென்ஷனர்ஸ், ஸுபரான்யுவேடட் ஆபீசர்ஸ் ஆகியவர்கள் இடம் பெறுவார்கள் என்று நினைக்கிறேன். அவர்களை ஏன் அதில் போட வேண்டும் ? நான் பென்ஷன் வாங்குபவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. இம்மாதிரியான ஏற்பாடுகள் காரணமாக **interference, favouritism, litigation, use of power for political ends.** இவைகளெல்லாம் கண்டிப்பாக வரும். இம்மாதிரியான புதுப் புது ஏற்பாடுகள் காரணமாக நிறையப் பொருள் விரயமாகிறது. இவைகளால் சர்க்காருக்குச் செலவுகள்தான் அதிகமாகும். லஞ்ச ஊழல்கள் அதிகமாகும். லிடிகேஷன்கள் வரும். இவைகளையெல்லாம் தவிர்ப்பதன் பொருட்டு, இப்போதிருக்கும் வேலைகளை ரெவின்யூ போர்டுக்கும் கலெக்டர்களுக்குமே விட்டுவிட வேண்டும். தவிரவும், இந்த ட்ரிப்யூனல்கள் பார்க்கக்கூடிய வேலைகளையெல்லாம் கோர்ட்களே பார்க்க வேண்டுமென்பதுதான் என் அபிப்பிராயம். இந்த வேலைகளுக்காக தனி ட்ரிப்யூனல்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியமில்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

தேர்தலில் வோட்டு வாங்குவதற்காக சிலர் இந்த மசோதாவை எதிர்க்கிறார்கள் என்று பலர் பலவிதமாகச் சொல்லக்கூடும். ஏதோ சில பணக்காரர்கள்தான் இந்த மசோதாவை எதிர்க்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அது தவறான அபிப்பிராயம். நான் முன்பே சொன்னது போல, கிராமங்களில் உள்ளவர்கள் எல்லோரும் முன்னேறவேண்டுமென்ற அபிப்பிராயம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது. மதுரையில் தேனியில் நடந்த ஒரு மகாநாட்டில் பிரஜா ஸோஷலிஸ்ட் கட்சியினர் தீர்மானங்கள் போட்டார்கள். அவர்களும் தங்கள் தீரமானங்களில் நிலங்களை எப்படி விநியோகிக்கலாம் என்று சொல்லவில்லை. சர்க்காரே முதலாளித்துவத்தைப் பெற்று, சர்க்காரே எல்லாவற்றையும் மேற்பார்வை செய்து எல்லோருக்கும் சாப்பாடு போட வேண்டும் அவர்கள் சொன்னார்கள். சாப்பாட்டை மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்று மட்டில் அவர்கள் சொல்லவில்லை. அவர்களும் கொள்கைகளைத் திட்டவட்டமாகக் கூறவில்லை. எனவே எவ்வளவு நிலங்கள் கிடைக்கும், அவைகள் எவ்வாறு விநியோகிக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும். இதை கனம் அமைச்சர் கவனிப்பார் என்று நம்புகிறேன்.

கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், கால்நடைகளைப்பற்றிச் சொன்னார். மேய்க்கால் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கக்கூடாது என்று அவர் சொன்னார். என்னைப் பொறுத்த வரையில், அவை



20th April 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

வாயில்லா ஜீவன்கள், அவைகளுக்குப் போதிய மேய்ச்சல் நிலங்களுக்கு வகை செய்ய வேண்டும் என்று சொல்வேன். பல பிராந்தியங்களிலும் முக்கியமாக எங்கள் பிராந்தியத்தில் மேய்ச்சல் கால் இல்லாததால் கால் நடைகள் நாளுக்கு நாள் க்ஷீண தசை அடைந்து வருகின்றன. எங்கள் பிராந்தியத்தில் அநேகம் பேர், நிலங்கள் அதிகமாக இருந்ததால் சாகுபடியான பிறகு கால் நடைகளுக்கு வைக்கோல் முதலியவைகளைப் போட்டு வந்தார்கள். 30 ஏக்கர் நிலவுடமை உச்ச வரம்பு வந்துவிட்டால் அனேக இடங்களில் கால்நடைகள் போய்விடும். புல் வளர்த்து கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் மேய்ச்சல் நிலங்களுக்கு விதி விலக்கு கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் பறிமுதல் செய்தால் கண்டிப்பாக கால் நடைகள் பாதிக்கப்படும் என்பதைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. எனவே கால்நடைகள் நலத்தை முன்னிட்டு கண்டிப்பாக ஏதாவது விதி விலக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நில உடமை உச்ச வரம்பை ஆந்திர ராஜ்யத்தில் 45 ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இன்னும் சில ராஜ்யங்களில் இதை அதிகமாக நிர்ணயித்திருக்கிறார்கள். இம்மாதிரி ராஜ்யத்திற்கு ராஜ்யம் அதிக வித்தியாசங்கள் இருக்கின்றன. இப்போது பெரிய விவசாயப் பண்ணைகள் வைத்து நடத்தினால்கூட விவசாயத் தொழில் கட்டுப்படியாகாத நிலைமை இருக்கிறது. சர்க்கார் விவசாயிகளுக்கு எவ்வளவோ ஊக்கமளித்து வந்தபோதிலும் விவசாயத் தொழில் இப்படித்தான் இருக்கிறது. விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக, மழை இல்லை. இக்காரணங்களால், விவசாயிகள் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். மற்றப் பொருள்களின் விலைகள் உயர்ந்தாலும் விவசாயப் பொருள்களின் விலைகள் உயருவதில்லை. மூன்று, நான்கு வருடங்களில் தான் சில கட்டங்களில் சில விவசாயப் பொருள்களின் விலைகள் உயர்ந்தன என்பதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. நில உடமை உச்சவரம்பை 30 ஏக்கராவாக நிர்ணயித்தால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுவார்கள்.

கனம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஒன்று சொன்னார். அவருக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரையிலும், இந்த மசோதா சட்டமானால், எனக்குக் கொஞ்சமும் பாதகம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நில உடைமை, உச்ச வரம்புக்குக் கீழேயே இருக்கிறது. சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்பிருந்தே என் நில உடைமை அப்படித்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் என்னைப்பற்றி ஒன்று சொன்னதால் நான் இதைச் சொல்ல வேண்டிய பிரமேயம் ஏற்பட்டது. இந்த மசோதா சட்டமானால் இன வேற்றுமையைத்தான் அது அதிகரிக்குமே தவிர, வேறு நல்ல பலனை அது அளிக்காது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக, கடைசிக் கட்டத்தில் சொல்லப் போவது என்னவென்றால் இது ஒரு புரட்சிகரமான மசோதா. இதன் காரணமாக நாட்டிற்கு அநேக விதக்கேடுகள் விளையப் போகின்றனவே தவிர, நன்மை எதுவும் கிடைக்கப் போவதில்லை. மக்கள் அநேகம்பேர் பாதிக்கப்படப் போகிறார்கள். இதன் காரணமாக உற்பத்தி குறையப் போகிறது. உற்சாகம் குறையப் போகிறது. பல குடும்பங்கள் இதன் காரணமாகப் பாழடைந்துவிடும் என்று திட்ட வட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது முக்கியமாக அரசியல் கண்ணோட்டத்துடன் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா. இதன் காரணமாக வோட்டுக்கள் நிறைய வரும் என்றும் நினைப்பதற்கில்லை. ஆளும் கட்சியினர் கண்டிப்பாக இதில் ஏமாற்றம் அடையப்போகிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். அநேக விதிகளில் கோளாறு இருப்பதன் காரணமாக, **this should be circulated for eliciting public opinion.** மக்களுடைய அபிப்பிராயம் எவ்வாறு இருக்கிறது என்று பார்த்து செலக்ட் கமிட்டி நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அமலுக்குக் கொண்டு வருவதற்கு முன்பே எல்லாக் கோளாறுகளையும் நீக்க வேண்டும்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [20th April 1960

அமலுக்குக் கொண்டு வந்த பிறகு கஷ்டப்படுவதில் பிரயோஜனம் இல்லை. அப்படியில்லாமல் அவசரம் அவசரமாகக் கொண்டு வருவதில் பிரயோஜனம் இல்லை. விதி விலக்குகள் எவ்வளவு கொடுக்க வேண்டும், இதன் காரணமாக எந்த அளவுக்கு நன்மை ஏற்படப்போகிறது, எந்த முறையில் இந்தச் சட்டம் அமல் செய்யப்பட இருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். நான் முன்பே எடுத்துச் சொன்ன அநேக வித யோசனைகளுக்கெல்லாம் பதில் கொடுத்து, அதனுடைய முக்கியமான கோட்பாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் மேற்சொன்ன காரணங்களுக்காக எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

***THE HON. SRI M. A. MANICKAVELU**: கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு முக்கியமான மசோதா. வெகு நாளைய பிரச்னை கூட. அதனால்தான் இதை 5 நாட்களாக இந்த மன்றத்திலே விவாதித்தோம. ஐம்பத்தேழு அங்கத்தினர்கள் இதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி.

இப்போது காலம் வெகு வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. நடை, உடை, பாவனை எல்லாம் மாறுகிறது. பிரயாணம் பண்ணுவதெல்லாம் மாறுகிறது. காற்றிலே பறக்கிறோம். இந்த மாதிரி பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த முறையிலே சமுதாயத்திலும் மாறுதல்கள் நடப்பது சகஜம். அப்படி இல்லாவிட்டால் அந்த மாதிரிக் கட்டுப்பாடு இருக்கும் ஒரு பொருள் வெடிக்கும். அதாவது "**Concentration of power or substance**" பொருளானது ஒன்று சேர்ந்து கட்டியானாலும் சரி, அதிகாரம் ஒன்று சேர்ந்தாலும் சரி, வெடிக்கத்தான் செய்யும். அதனால்தான் இந்த புரட்சி எல்லாம் ஏற்படுகிறது. பிரஞ்சு ரெவல்யூஷன், மற்ற ரெவல்யூஷன் என்று சொல்வதெல்லாம் அதுதான். ஆகவே, ஒரே இடத்தில் அடங்கியிருப்பதைக் கொஞ்சம் பரவலாகச் செய்தால் வேகம் குறையும். அந்தத் தாத்பரியத்துடன்தான் இப்போது அரசாங்கம் இந்த சமுதாயத்தை சோஷலிச பாணியில் திருத்தி அமைக்கவேண்டுமென்ற கருத்தோடு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறது. சுதந்திரத்திற்குப் பிற்பாடு புது இந்தியாவை நாம் உருவாக்கிக் கொண்டு வருகிறோம். அப்படியென்றால் என்ன ? மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். மக்களுக்கு வேலை செய்வதற்குப் போதிய வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். "மீன்ஸ் ஆப் எம்ப்ளாய்மெண்ட்" கொடுக்க வேண்டும். உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். இவைகளெல்லாம் சோஷலிஸ்ட் பாட்டர்ன் என்ற பாணியில் செய்யவேண்டும். அந்த மாதிரி செய்து வருகிறோம். இப்படிச் செய்து வருவதை, அரசியல் நோக்கத்தோடு செய்கிறோம், அல்லது வோட்டுப் பிடிப்பதற்காகச் செய்கிறோம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. வோட்டு வந்த காலத்திற்கு முன்பாகவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். முப்பது வருஷங்களாக காங்கிரசுக்குப் பாதி வயதான பிறகு இருந்தே இந்தப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ வாதத்திற்காக இதையெல்லாம் சொல்லலாமே தவிர, நாங்கள் இதை "**set purpose**" ஆகத்தான் செய்கிறோம். அந்த நோக்கப் பிரகாரம் இப்போது செய்துகொண்டு வருகிறோம்.

இப்போது நான் சொன்னவற்றையெல்லாம் செய்யவேண்டுமென்றால் இரண்டு வகையிலே அதற்கு வேண்டியதைச் செய்யவேண்டும். ஒன்று, "அக்ரிகல்சுரல் டெவலப்மெண்ட்" இரண்டாவது, "இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட்". இந்த இரண்டும் செய்தால்தான் நாம் இதை நிறைவேற்ற முடியும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். விவசாய வருமானத்தை "பர் காபிடா" வை அதிகரிக்க முடியும். தொழில் அபிவிருத்தி பற்றி இங்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. தொழில் அபிவிருத்தியோடுகூட விவசாய அபிவிருத்தியும் ஏற்பட்டால்தான் பிரயோஜனம். ஆகவே, விவசாய அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால்



20th April 1960] [Sri M. A. Manickavelu]

சில மாறுதல்களைச் செய்தால்தான் அபிவிருத்தி அடையலாமே தவிர, ஏதோ வெகு காலத்திற்கு முன்னால் இருந்ததைப் போலவே விட்டு விட்டால் பிரயோஜனம் இல்லை. இந்த மாதிரியான கொள்கை, முற்போக்கான அபிப்பிராயம் இருக்கும் சமுதாயத்தில் சார்வரி 1960-ம் வருஷ பத்தாம் பசலி ஆசாமிகளின் கொள்கைக்கு இடமில்லை. அவர்கள் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால் பிரயோஜனம் எதுவும் இல்லை. எப்போதோ இருந்த கொள்கைகளை வைத்துக்கொண்டு இப்போது பேச முடியாது. தற்காலத்திற்குத் தகுந்தவாறு "அட்ஜஸ்ட்" பண்ணிக் கொள்ள வேண்டும். அட்ஜஸ்ட் பண்ணுவதில் நியாயமான முறையில், சரியாக, எந்த ஒரு சாராருக்கும் அதிக பாதகம் இல்லாமல் செய்ய வேண்டுமென்ற முறையில் ஜனநாயக ரீதியில் செய்கிறோம். இதற்கு முன்பும் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரி ஒரு பிரச்னையைக் கொண்டு வந்து மசோதாவாக்குவது தப்பு, சட்ட விரோதமானது என்று ஒரு வாதம். இன்னொன்று, இதை மக்கள் முன்னாலே வைத்து "மாண்டேட்" வாங்கி அனுப்பவேண்டுமென்பது. முதலிலே, இது சட்ட விரோதமானதா, இல்லையா என்பதை விளக்க விரும்புகிறேன். இதில் சட்ட விரோதம் இல்லவே இல்லை. 31-வது "ஆர்டிகிளில்" பண்டமெண்டல் ரைட்" படி சொல்லியிருந்தபோதிலும் 38–39-ல் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 38-வது பிரிவில் "**The State shall strive to promote the welfare of the people by securing aad protecting as effectively as it may a social order in which justice, social economic and political, shall inform all institutions of the national life.** "என்று சொல்லப்பட்டிருக்கிறது. 39-வது சொல்வது **39 (b) : " . . . that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good :**

**(c) " that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment."**

ஆகையால் இதிலே நன்றாக விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது உரிமையை பாதிக்காது என்று இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதோடு இல்லாமல் பொதுவாக "**The general principle of jurisprudence**" என்ன சொல்கிறது ? ஏதாவது தனிப்பட்ட உரிமையை எடுக்க வேண்டுமென்றால் சில சந்தர்ப்பங்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறது. என்ன சந்தர்ப்பம் ? "**Anything that is conducive to the greatest good of the greatest number.**" **(The general principle of jurisprudence.)** பெருவாரியான மக்களுக்கு நலன் அளிப்பதாக இருந்தால் அந்த அளவுக்கு நாம் சொதது உரிமையையோ, மனிதனுடைய தனி உரிமையையோ ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே சட்டதிட்டத்திற்கு விரோதமாக ஒன்றும் இல்லை. சுப்ரீம் கோர்ட்டுக்கும் போக வேண்டியதில்லை. இதையெல்லாம் பார்த்துத்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். மற்ற ராஜ்யங்களிலும் இந்த மாதிரி மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏதோ பயமுறுத்தலுக்காக இது போன்று சொல்லலாமே தவிர, இதில் உண்மையில் சரியான வாதம் ஒன்றும் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது, இம்மாதிரியான ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டுவரும்போது, அதை மக்கள் முன்னிலையில் வைத்து, அவர்களுடைய "மாண்டேட்டை" வாங்கித்தான் செய்ய வேண்டும். என்று சொல்லப்பட்டது. 1957–ம் வருஷத்திலே நடந்த தேர்தலுக்கு முன் மக்கள் முன்னிலையில் காங்கிரஸ் கட்சியானது தன்னுடைய எலெக்ஷன் மானிபெஸ்டோவிலே இதைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : அந்த மாண்டேட் படி நடக்கவில்லை) நடக்கிறதைப் பற்றி பின்னால் சொல்லுகிறேன். 33-வது பாராவிலே,

" On the land all intermediaries must be progressively removed so that land is owned by the cultivator himself. The principle of ceilings on land has been accepted and should be progressively introduced so as to bring about a better distribution of land. Mechanised agriculture may be useful in some areas but in view of the manpower available and often not fully used, it is desirable to encourage intensive methods of cultivation on a co-operative basis" என்று அம்மாதிரி "ஸீலிங்"கைப் பற்றியும், உழுபவனுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் திட்டவட்டமாக காங்கிரஸ் கட்சியின் எலெக்ஷன் மானிபெஸ்டோவிலேயே சொல்லியிருக்கிறது. ஆகையால், மறுபடியும் மக்களிடத்திலே எலெக்ஷன் சமயத்திலே வைக்கவேண்டுமென்றால், அது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், ஒரு காரணத்தோடு சொல்லியிருக்கலாம். முக்கியமாக இதைச் சொன்னவர் புதுக் கட்சியின் ஸ்தாபகர் தான். இப்பொழுது அந்தக் கட்சியினுடைய ஒரு முக்கியமான பலகை (ப்ளாங்க்) என்னவென்றால், நிலச் சீர்திருத்தம் வரக் கூடாது என்பது தான். அது தான் அவர்களுடைய வாதம். இந்த மசோதாவானது இங்கே விவாதிக்கப்பட்டு சட்டமாய் விட்டால், அப்பொழுது அந்த " ப்லாங்க் " விழுந்து போகிறது. அப்பொழுது அந்தக்கட்சி எங்கே நிற்கும் ? நிற்பதற்கு இடமே இல்லை. இப்பொழுது நாம் இந்த மசோதாவைக் கொண்டு வராமல், ஒத்திவைப்போமானால், அந்தக் கட்சி இரண்டு வருஷங்களுக்காவது ஓடிக் கொண்டிருக்கும். அதனால்தான் இந்த மசோதாவை நாம் கொண்டுவரக்கூடாது என்கிறார்கள் அவர்கள். சட்டம் வராதபடி தடுப்பது அவர்களுடைய கட்சி உயிரோடு இருப்பதற்குச் சாதகமாக இருக்கிறது. அந்தக் கட்சி உயிரோடு இருப்பதற்கு நான் ஏன் உதவி செய்யவேண்டும் ? அந்தக் கட்சி உயிரோடு இருந்து, அது வளருவதற்காக நான் ஏன் இரண்டு வருஷங்களுக்கு இந்த மசோதாவை ஒத்திவைக்கவேண்டும். அடுத்த தேர்தல் வரையில் காத்திருந்து, அப்பொழுது மக்கள் முன் வைத்து, அதன் பிறகு கொண்டுவரத் தேவையில்லை. ஏனென்றால், 1957-ம் ஆண்டிலேயே மக்கள் முன்னிலையில் சொல்லியாகி விட்டது. ஆகையால், இனிச் சொல்வதற்கு அவசியமே இல்லை.

மேலும் சொல்லப்பட்டது, சொத்து உரிமையிலே கை வைக்கக்கூடாது என்றெல்லாம். யாரும் இம்மாதிரி சொத்து உரிமையில் பிரவேசிக்கக் கூடாது என்று சொல்லுகிற அவர்களே, இந்த உரிமையிலே இதற்கு முன்பே பிரவேசித்து இருக்கிறார்கள். குறிப்பாக, விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் என்ற ஒன்று வந்தது. அதைக் கொண்டுவந்தது அவர் தான். நிலத்தில் கை வைக்காமற்போனாலும், பணத்தைப் பற்றியது அது. ஒருவருக்கு உரிய பணத்தை எடுக்கிறது மாதிரி தான். அப்பொழுது நிலச்சுவான்தார்கள் எல்லாம் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தவரைத் தூற்றினார்கள். அதனால், யார் அனுகூலம் பெற்றார்களோ அவர்கள் போற்றினார்கள். இப்பொழுது மேசை திருப்பப்பட்டு விட்டது. அந்தச் சட்டத்தை அப்பொழுது யார் தூற்றினார்களோ அவர்கள் இப்பொழுது போற்றுகிறார்கள். அப்போழுது. போற்றினவர்கள் இப்பொழுது தூற்றத்தான் செய்வார்கள். அந்த நிலைமையிலே வந்திருக்கிறது. அது தவிர, தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. இதெல்லாம் உரிமையைப் பறிக்கிறதுதான். அதுவும் உரிமையைப் பிடுங்குகிறதுதான். அப்படியெல்லாம் பிரவேசித்திருக்கும்போது, ஏன் இது மட்டும் செய்யக் கூடாது ? இதைச் செய்வதற்கு வேண்டிய ஆதாரம், சட்ட ஆதரவு எல்லாம் இருக்கும்போது, ஏன் நான் செய்யக்கூடாது ? இது எப்படி இருக்கிறதென்றால், சாதாரணமாகச் சொல்வார்கள். மாமியார் உடைத்தால் மண் குடம். மருமகள் உடைத்தால் பொன் குடம் என்று. அவர் மாமியாராக இருந்த காலத்தில், ஆதிக்கத்தில் இருக்கும்போது, இதெல்லாம் செய்தால் கவலையில்லை ; இப்பொழுது நாங்கள் அதிகாரத்தில் வந்து செய்தால் அது தப்பு என்று சொல்வது சரியாயில்லை. ஏதோ வாதத்திற்காகச் சொல்லலாம். வக்கீல்கள் எந்தத் தரப்புக்கும் வாதிக்கலாம். முதலில் "அக்யூஸ்டு" கேட்டால், அந்தப் பக்கம் வாதிப்பார்கள். முதலில் பிராது கொடுத்தவர் வந்து கேட்டால் அவர் பக்கமும் வாதிப்பார்கள். எந்தப்



பக்கத்திற்காக வேண்டுமானாலும் நல்ல சாமர்த்தியமாக வாதாடுவார்கள். அந்த வகையில் கேஸ் வாதிக்கிற முறையில் அது இருக்கிறதே தவிர, நியாயமாக எடுத்துச் சொல்லுவதாக எனக்குத் தோன்றவில்லை.

" இந்த மசோதாவின் மூலம் எதிர்பார்த்த நல்ல பலன் கிடைக்கவில்லையே, நிலம் இல்லாதவர்களுக்குக் கிடைக்காதே, கிடைத்தாலும் கொஞ்சம்தானே கிடைக்கும் " என்று சொல்லப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், " ஆயிரம் பேரைப் பாதிக்கக் கூடியது இது, ஏன் இதற்காக ஒரு சட்டம், ஏன் இதற்காக பிரமாதமான வேலை ? " என்றெல்லாம் சொன்னார்கள். ஆயிரம் பேர்கள் அல்ல ; பத்தாயிரம் பேர்கள். இதற்கு நான் என்ன சொல்கிறேன் என்றால் ஒரு கொள்கையை, ஒரு கோட்பாட்டை, ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். சோஷலிஸ்டிக் பாட்டர்ன், இன்க்ரீஸ்டு ப்ரொடெக்ஷன் அதன்படி நாம் கொண்டு வரவேண்டும். இது எப்படி என்றால் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பதற்கு " ப்ரின்ஸிபல் " இருக்கிறது. அதன்படி போட்டுப்பார்த்தால், கடைசியில் ஐந்து வரும், நான்கு வரும், இரண்டு வரும், பூஜ்யம் வந்தாலும் வரும். கணக்குப்படி வேலை செய்ய முடியுமே தவிர, என்ன முடிவு ஆகிறது என்பது என்னுடைய வேலை இல்லை. (சிரிப்பு).

**Sri C. N. ANNADURAI :** சில பேர்களை மட்டுமே பாதிக்கக்கூடியதற்குச் சட்டம் ஏன் கொண்டுவருகிறார்கள் என்று நான் கேட்கவில்லை. அவர்களைப் பாதுகாக்க ஒரு தனிக் கட்சி ஆரம்பிக்கிறார்களே, அது ஏன் என்று கேட்டேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** ஆகையால், என்ன திட்டம் போடுகிறோமோ அது நிறைவேற்றுவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போது, எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லையென்றால், அது நம்முடைய தப்பு அல்ல. யாருடைய தப்பும் அல்ல. போட்ட " பிரின்ஸிபில் " ஐ நிறைவேற்றுகிறோமா என்று அதைப் பார்க்கவேண்டும். முன்பெல்லாம் கணக்குப் போட்டால், " ஆன்ஸர் " " ரைட் "டாக இருந்தால்தான் மார்க் உண்டு. " ஆன்ஸர் " தப்பாக இருந்தால் வழிக்கு மார்க் கொடுப்பது கிடையாது. ஆனால், இப்பொழுது வழி, ப்ரின்ஸிபில் சரியாக இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். விடை சரியாக இல்லாது போனாலும், வழி சரியாக இருந்தாலும் ஏதோ ஞாபகம் சரியாக இல்லாமல் தவறாகப் போட்டுவிட்டான் என்று நினைத்து வழிக்கும் மார்க் கொடுக்கிறார்கள், இப்பொழுது. அந்த முறையிலேதான் இதையும் நாம் பார்க்கவேண்டும். நான் சொன்ன அம்மாதிரி திட்டம் இருக்கிறதே, அதற்காக நான் இதெல்லாம் செய்து வருகிறேன். அதிலே தப்பு இருக்கிறதா, என்ன ? மிச்சம் வருகிறது என்று அதைப் பற்றிக் கேட்பதைவிட, கொள்கைப் பிரகாரம், செய்கிறோமா என்று பார்க்கவேண்டும். கொள்கைப் பிரகாரம் செய்து கொள்ளுகிறோம். அதிலே என்ன என்ன கிடைக்குமோ அதைப் பொறுத்து நாம் எதிர்பார்க்க வேண்டும்.

பொது விஷயங்கள் இவ்வளவுதான். மற்றபடி, இந்த மசோதாவைப் பற்றி மூன்று விதமான அபிப்பிராயங்கள், எனக்குத் தெரிந்தவரை கூறப்பட்டன. ஒரு சாரார், இது ரொம்ப அதிகத் தீவிரமாக, பாட்டாளி மக்கள், விவசாய மக்களுக்கு அனுகூலமாக இருக்கிறது என்றார்கள். இன்னொரு சாரார், நிலச்சுவாந்தார்களுக்கு இது சாதகமாக இருக்கிறது என்றார்கள். இதற்கு மத்தியிலே சில பேர்கள், " பரவாயில்லை ", சுமாராக இருக்கிறது, நியாயமாக இருக்கிறது " என்று சொன்னார்கள். பாட்டாளி, விவசாய மக்களுக்குச் சாதகமாக இருக்கவேண்டுமென்று ஒரு சாராரும், நிலச்சுவாந்தார்களுக்குச் சாதகமாக இருக்கவேண்டும் என்று இன்னொரு சாராரும், இரண்டு " எக்ஸ்ட்ரீம் " நிலையிலே இருந்துகொண்டு சொல்கிறவர்களுடைய கருத்தை நாம் ஒத்துக்கொண்டு இதை நாம் நிறைவேற்றப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டால் இந்த மசோதா ஒன்றுக்குமே பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட " ப்ரொவிஷன்களை "

ஒரிஸாவில் 33 எக்கர். மத்திய பிரதேசத்தில் 32-லிருந்து 62 எக்கர் கொஞ்சம் குறைத்து ஏறக்குறைய இந்த அளவுக்கு வருகிறது. உத்திரப் பிரதேசத்தில் 40-லிருந்து 64 எக்கராக இருக்கிறது. டெல்லியில் 30-லிருந்து 60 எக்கர் என்று வைத்திருக்கிறார்கள். அஸ்ஸாமில் 50 எக்கர். ஆகையால் நாம் ஒன்றும் பிரமாதமாக ஜாஸ்தியாக வைத்துவிடவில்லை. (ஸ்ரீ என். கே. பழனிசுவாமி : பம்பாயில்). பம்பாயில் **holding giving a net income Rs. 3,600 per annnum** என்று வைத்திருக்கிறார்கள். **Extent** சொல்லவில்லை. ரூ. 3,600 வருமானம் கொடுக்கக் கூடிய அந்த அளவுக்கு வைத்திருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் 30 எக்கர்தான் கொடுத்திருக்கிறோம். மற்ற சில ராஜ்யங்களில் 30 எக்கருக்கு மேல் கொடுத்திருக்கிறார்கள். இது நியாமானது என்று கருதிதான் இந்த அளவிலேயும் நாம் ஸீலிங் வைத்திருக்கிறோம்.

விதிவிலக்கு பற்றி சொல்லப்பட்டது. ஏன் தோப்பு, பிளாண்டேஷன், மலைப் பிரதேசம், ஷுகர் பாக்டரி இதற்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதிலே முக்கியமான கருத்து என்னவென்றால், "**paddy**" மற்ற "வெட் கிராப்புகளெல்லாம்" ஒரு வருஷத்தில் பயிரிடப்படுகிறது. ஆனால் தோப்பு அப்படியில்லை. மாமரத்தை எடுத்துக்கொண்டால் அதிலிருந்து பலன் கிடைப்பதற்கு 10, 15 வருஷங்கள் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அதே மாதிரிதான் பாக்கு மரம், சவுக்கு மரம். ஆகவே தோப்புகளிலுள்ள மரங்களெல்லாம் ரொம்ப வருஷங்கள் வைத்து காப்பாற்றிய பிறகுதான் பலன் கொடுக்கும். ஆகவே, அதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்வது ? மேலும் அவைகளையெல்லாம் பிரித்து துண்டாக்கிவிட்டால் சரியான பலன் கிடைக்காது. கொஞ்சம் அதிகமான பரப்பு இருந்தால் தான் **it is worthwhile**, 2 எக்கர், $1\frac{1}{2}$ எக்கர் என்று பிரித்துக் கொடுக்க முடியாது. காம்பன்சேஷன் கொடுக்கும் விஷயத்திலும் அதிலே பல சிக்கல்கள் ஏற்படும், கஷ்டங்கள் ஏற்படும். ஒரு மரம் வைத்து 4 வருஷம் ஆனால், அதிலிருந்து மரமான பிறகு என்ன பலன் கிடைக்கும், எவ்வளவு வருமானம் வரும் என்று எப்படிக் கணக்கிடுவது ? எந்த அடிப்படையில் காம்பன்சேஷன் கொடுப்பது ? நான்கு வருஷம் அதை வைத்து காப்பாற்றியவருக்கு என்ன காம்பன்சேஷன் கொடுப்பது ? இம்மாதிரி தொந்தரவு எல்லாம் வரும் என்றுதான் பிளானிங் கமிஷன் அதற்கு விதி விலக்கு கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். டீ, காபி ரப்பர் ஆகியவைகளும், பெரிய நிலப்பரப்பில் பயிர் செய்தால்தான் பிரயோசனமாக இருக்கும். சில பேர்கள் செய்யலாம், 2, 3 எக்கர் வைத்துக் கொண்டு அதில் தேயிலை பயிர் செய்யலாம். ஆனால், அதில் நிலப்பரப்பு அதிகமாக இருந்தால் எவ்வளவு பயன் அடைய முடியுமோ அந்த அளவுக்குப் பயன் அடைய முடியாது. பெரிய நிலப் பரப்பில் டீ பயிரிடுபவர்கள் அனேகமாக பாக்டரி வைத்திருக்கிறார்கள். இதை சுலபமாக அந்த இடத்தில் கொண்டுபோய் பதம் செய்வதற்கு பெரிய அளவிலே பயிர் இருக்க வேண்டும். மேலும் அதை 5 வருஷத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டும். ஆகவே, டீ போன்ற பிளாண்டேஷனை சிறிய சிறிய நிலப்பரப்பில் செய்வது பிரயோசனமாக இருக்காது. அவைகளுக்கு விதி விலக்குக் கொடுத்தால், தான், பெரிய அளவிலே அவைகளை சாகுபடி செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். என்று கருதிதான் இதற்கெல்லாம் "எக்ஸெம்ப்ஷன்" கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ வெள்ளைக்காரர்களுக்காக "எக்சம்ப்ஷன்" கொடுப்பது என்றெல்லாம் சொன்னார்கள். வெள்ளைக்காரர்கள் ரொம்ப பேர்கள் போய்விட்டார்கள். அவர்கள்தான் நமக்கு டீ, காபி பிளான்டேஷன் செய்து வழி காட்டினார்கள். அதற்கு அவர்களுக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும். அதற்கு முன்னால் இவைகளை நமக்கு விவசாயம் செய்யத் தெரியாது. இப்பொழுது அநேகமாக இந்தத் தோட்டங்கள் இந்தியர்கள் கையில்தான் இருக்கிறது. இந்த மலைப் பிரதேசத்தில்கூட அப்படித்தான். அங்கே இன்டென்ஸிவ் கல்டிவேஷன் உள்ள பயிர்கள் இல்லை. அங்கேயெல்லாம் மலைப் பிரதேசத்தின் கிரேடியண்டைப் பொறுத்திருக்கிறது. அங்கே பங்கு போட முடியாது. அப்படிப்பட்ட பிரதேசமும் கொஞ்சம்தான். ஆகவே, உறில் ஏறி



யாக்களுக்கு எக்செம்ஷன் கொடுத்திருக்கிறது. (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி கரும்பு? ) ஆம் கரும்புக்கு ஏன் கொடுக்கப்பட்டது என்றால், அதுவும் பெரிய அளவில் பயிர் செய்தால்தான் முடியும். ஆலைக்குப் பிரயோஜனம். திட்டக் கமிஷன் கரும்பு ஆலைகளுக்கெல்லாம் விலக்குக் கொடுக்கலாம் என்கிறது. அப்படிச் செய்யும்போது அவர் அதைச் சேர்ந்தவர், இவர் இந்தக் கட்சியில் இருக்கிறார் அதனால்தான் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதெல்லாம் ஒன்றுமில்லை. அப்படி எல்லாம் இடம் வேண்டாம் என்றுதான் ஒரு போர்டை ஏற்படுத்தி ரெஸ்பான்சிபிலிடியை அவர்கள் தலைமேல் போட்டிருக்கிறோம். கம்ப்ளீட் எக்செம்ஷன்கூட திட்டக் கமிஷன் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், எந்த அளவுக்குச் செய்ய வேண்டும் என்று பார்த்து, அந்த போர்டே செய்யட்டும் என்று போட்டிருக்கிறோம். எந்த விதமான தகராறும் இருக்கக்கூடாது. மக்களுக்குத் தப்பு அபிப்பிராயம் ஏற்படக் கூடாது என்றுதான் அப்படிச் செய்திருக்கிறோம். ஒரு தனிப்பட்ட பாக்டரிக்கு எவ்வளவு வேண்டும் என்றெல்லாம் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். இப்பொழுது நம் நாட்டில் சர்க்கரைப் பற்றாக்குறை இருக்கிறது. அனேக ஆலைகள் வைக்கலாம். அவ்வளவு சர்க்கரையும் வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஏற்பாடு செய்வதால் தவறில்லை, நல்லது என்று தோன்றுகிறது.

**SRI A. GOVINDASAMY :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கரும்பு பயிரிட விஸ்தாரமான நிலம் வேண்டும் என்று சொன்னார்கள். ஒத்துக்கொள்கிறேன். அடிக்கடி மாற்றி மாற்றிச் செய்யும் போதுதான் உற்பத்தி அதிகமாக வசதி இருக்கிறது. ஆகவே கரும்பு ஆலைக்கு செபரேட் பிளாக்கு என்காமல், மீண்டும் மீண்டும் தனிப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுத்து, ரிஜிஸ்ட்ரேஷன் அவர்களுக்கே செய்தால், விளைச்சல் கூடுதல் ஆக முடியும். அது பற்றி அமைச்சரவர்கள் அபிப்பிராயம் என்ன என்று சொல்ல முடியுமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இதிலே கொஞ்சம் பாக்டரிக்கு, அட்மினிஸ்ட்ரேஷன் ரிச்ர்ச் இவற்றிற்கு வேண்டும். மற்றபடி குத்தகை முறையிலும் வைத்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட இந்த ஆலை எவ்வளவோ இடையூறுகளுக்கிடையே வேலை செய்கிறது. அங்கே தண்ணீர் ஜாஸ்தி, பம்பு பண்ண வேண்டியிருக்கிறது. ட்ரெயினேஜ் செய்யவேண்டி இருக்கிறது. இவ்வளவு செலவெல்லாம் பண்ணி, ஆலை உருவான பிறகு, அதற்குக் குந்தகம் ஏற்படும்படிச் செய்தால், அது சரியாகாது. நமக்கு ஆலைகள் வேண்டும், சர்க்கரை வேண்டும். எவ்வளவோ கஷ்டத்தில், செலவில், அவர்கள் வேலை செய்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் கூட ஒரு ஆலை வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அதற்கு நிறையப் பணம், ஒரு கோடி ரூபாய் வரை வேண்டும். கஷ்டப்பட்டு, ஓடி, ஆடி அலைந்து ஷேர்கள் வாங்கி நிறுவ வேண்டும். ஆகையால் உருவான ஆலையை, உருவில்லாமல் செய்வது அவ்வளவு நல்லதல்ல. ஆகவேதான் தக்க பந்தோபஸ்தோடு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். இதுவரை அனேக மாறுதல்கள் செய்து, மற்றவர்களுக்கு எழுதி வைத்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்தால், அதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சில பேர் இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக, இதை மீறி அப்படிச் செய்திருக்கலாம். ஆனால் வேறு பலர் சாதாரண முறையிலே ட்ரான்ஸ்பர் ஆக்கியிருக்கலாம். எது எப்படிச் செய்தது என்று கண்டுபிடித்தாக வேண்டும். அதற்கு இன்க்விஸிடோரியல் கமிட்டி (**Inquisitorial Committee**) ஒன்று வைக்க வேண்டும். (சிரிப்பு). அதுவும் 5, 6, 8 வருஷங்களுக்கு அப்பால் அனேக கை மாறிவிட்டிருக்கும். **The time and labour spent is not worthwhile** என்று கேள்வி நேரத்தில் பதில் சொல்லுகிற முறையிலே, இதற்கு அப்படி வைக்கவேண்டிய அவசியம் இல்லை. ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்டில் ரொம்பக் கஷ்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தினால் பிரித்துக் கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. பிரித்துக்கொண்டார்கள் என்றால் என்ன? கான்ஸெண்ட்ரேஷன் கூடாது என்றுதான். ஒருவர்கூட 400, 500, 1,000 எக்கர் என்று

வைத்துக்கொள்ளக் கூடாது. அவ்வளவுதான். ஒரு 20, 30, 40 எக்கர் என்றால் ரொம்ப நல்லதுதான். இரண்டு மூன்று எக்கர் என்பதைவிட அது ரொம்ப நல்லது. ஏனென்றால் இதற்குக் கொஞ்சம் மூளை சக்தி, பொருள் சக்தி எல்லாம் கிடைக்கும். நடுத்தரமான பண்ணைகளாக இருப்பது நல்லது. இதனால் சின்ன மிராசுதார்கள் இருக்கப்படாது என்று சொல்லவில்லை. தாத்பரியம், ஜாஸ்தி ஏற்றத்தாழ்வு இருக்கப்படாது. அவ்வளவுதான். இதே சட்டத்திலே இருக்கிற நிலத்தைப் பிடுங்கி தலைக்குக் கால் எக்கர் அரை எக்கர், அரைக்கால் எக்கர் என்று கொடுப்பது என்று போடுவது தப்பு. முக்கியமான கருத்து என்னவென்றால், உற்பத்தி பெருக வேண்டும். நிலம் இல்லாதவர்களுக்குச் சின்னச் சின்னதாகச் செய்து, பிராக்மெண்டேஷன் செய்து, கொடுப்பது பிரயோஜனமில்லை. கருத்து சோஷலிஸப் பாணி நிறைவேற வேண்டும். அப்படி நிறைவேறித்தானே இருக்கிறது. ஆகவே, அதற்கு ஆட்சேபணை வேண்டியதில்லை. என்றுதான் நான் நினைக்கிறேன். மிகுந்த நிலத்தை யாருக்குக் கொடுக்கிறார்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். சொல்லியிருக்கிறோம். மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது, ஸர்ப்ளஸ் லாண்டு டிஸ்போஸலில் சொல்லியிருக்கிறோம். 84-வது பிரிவில், 2-வது சப் கிளாசில், '84 (2) (a) In the disposal of the land acquired by the Government under this Act, the Government shall give preference to any person who is completely dispossessed of his holding, or whose extent of holding is reduced below the tenant's ceiling area by virtue of the provisions of this Act.' ஆகையினால், பர்ஸ்ட் பிரிபரன்ஸ், ஏற்கனவே உழுது வேலை செய்தவருக்கு என்று இருக்கிறது. இந்தச் சட்ட மூலமாக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர், ஏற்கனவே சாகுபடி செய்தவர் இவர்களுக்கு முதல் பிரபரன்ஸ் கொடுத்திருக்கிறோம். அது எதனால்? அவர்கள் இந்தத் தொழிலில் பழகி இருக்கிறார்கள்; உழைக்கும் எக்ஸ்பீரியன்ஸ் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பதால்தான். அவர்களை உரிமை உள்ளவர்களாகச் செய்ய சாதாரணமாகப் பார்க்கிறோம்; வாடகை வீட்டில் இருப்பவர்கள் எப்படி நடக்கிறார்கள், சொந்தமாக வீடு வைத்திருப்பவர்கள் எப்படி வைத்திருக்கிறார்கள் என்று. அவர்கள் அக்கறையோடு பார்த்துக்கொள்வார்கள். உடனே தென்னை வைக்கிறார்கள், செடி வைக்கிறார்கள், உற்பத்தி செய்கிறார்கள். அதனால்தான் உரிமை கொடுக்கிறோம். 'The magic of property is said to turn sand into gold'. சொத்து உரிமை இருந்தால் தான் ஒரு பரபரப்பு, ஆவேசம், உணர்ச்சி எல்லாம் இருக்கும். எல்லோருக்கும் கொடுங்கள் என்ற கருத்துக்கு, எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்குத்தான் கொடுக்க முடியுமே தவிர, வேறு விதமாகச் செய்ய முடியாது என்று சொல்கிறேன். கொடுப்பதெல்லாம் ஒரு முறைப்படிதான் கொடுக்க முடியும். ஒருவரைக் கசக்கி மற்றவருக்குக் கொடுப்பது என்பது சரியில்லை.

(Sri N. K. Palanisami rose.)

MR. SPEAKER: The Hon. Minister is not yielding. He has the right to answer. The hon. Member cannot cross-examine him.

THE HON. SRI M. A. MANICKAVELU: பிரிபரன்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதாவது உபரி நிலத்தை முதலில் ஏற்கனவே நிலத்தில் இருந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும், மற்றவர்களுக்குப் பிற்பாடு கொடுக்க வேண்டும் என்று, இங்கேயே ஏன், ஒன்று இரண்டு, மூன்று என்று போடவில்லை என்று கேட்டார்கள். இப்பொழுது நிலம் எவ்வளவு வருகிறது என்று தெரியாது. அதனால் ரூலில் செய்வதாகப் போட்டிருக்கிறது. அப்படி என்றால், எங்கள் இஷ்டப்படிச் செய்வது என்று இல்லை. அந்த ரூலை இந்த மன்றத்திலே வைத்து, சபையின் அங்கீகாரத்தைப் பெற்று, அதைச் செய்யப்போகிறோம். ஆகவேதான் அது இங்கே குறிப்பாகச் சொல்லவில்லை.

இப்பொழுது பர்சனல் கல்டிவேஷன் அதாவது தானே சொந்தமாக உழுபவனைப் பற்றிச் சொல்லப்பட்டது. இப்பொழுது ஸீலிங் முப்பது எக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஐந்து எக்கர் சொந்த





சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மிச்சம் 25 எக்கரை சாகுபடி செய்யக்கூடியவரை வெளியேற்றக் கூடாது. அவர்களும் வாழ வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் அப்படி இருபத்தைந்து எக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் ப்ரொடக்ஷன் வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி வைக்கப்பட்டிருக்கிறது. முப்பது எக்கரையும் சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளலாம் என்ற அபிப்பிராயமும் இருந்தது. அப்படி இருந்தால் எல்லா விவசாயிகளையும் வெளியேற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதற்காக, அவர்களுக்கு ப்ரொடக்ஷன் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஐந்து எக்கரை மட்டில் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிலிருந்தும் வெளியேற்றாமல் ஐந்து எக்கரில் மட்டும் வெளியேற்றினால் போதும் என்ற அளவில் இப்படி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டப் பிரகாரம் மிராசுதார் தன்னுடைய இஷ்டப்படி வெளியேற்ற முடியாது. அப்படி வெளியேற்றாமல் இருப்பதற்காகத்தான் இப்படி ஐந்து எக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தற்காப்பு வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி வைக்கப்பட்டிருக்கிறது. இருவருக்கும் அதாவது விவசாயிக்கும், மிராசுதாருக்கும் நியாயம் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இப்படி ஐந்து எக்கர் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று அமைக்கப்பட்டிருக்கிறது.

டெபனிஷனைப் பற்றி எல்லாம் சொன்னார்கள், அதாவது பிளானிங் கமிஷனில் ஒரு டெபனிஷன் இருக்கிறது என்றும், இங்கே ஒரு வித டெபனிஷன் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். பர்சனல் கல்டிவேஷன் என்றால் என்ன என்பதற்கு இரண்டாவது கிளாஸ் 28-வது உட்பிரிவில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது அதாவது,

'Personal cultivation' means cultivation on one's own land—

(i) by one's own labour, or

(ii) by the labour of any member of one's family, or

